


உடையார்
பாகம்-4
பாலகுமாரன்

இராஜராஜனின் மறைவு செய்தியைத் தடவித் தடவி கண் கலங்கிய காட்சியும் இன்னும் கண் முன்பே நிற்கிறது.

பஞ்சவன் மாதேவிக்கு ஒரு பள்ளிப்படை வீடு உள்ளது; அந்திசாயும் வேளையில் தான் அவள் தரிசிக்க விடுவாள் என்று பரிதவிப்போடு சென்று அங்கிருந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வளையல், மஞ்சள் குங்குமம் சார்த்தி அம்மா, உடையாரை நல்லபடியாக முடித்துக் கொடும்மா என்று வேண்டி நின்றபோது சோழ தேசத்தின் மீதுள்ள உங்கள் பக்தி புரிந்தது.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக சோழ சேனாதிபதி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் கட்டிய அமணக்குடி கோவிலில் நடந்த நிகழ்ச்சி இன்னும் புதிராகவே உள்ளது.

துர்க்கை அம்மனை வழிபட்டு கோவிலைச் சுற்றி வந்த சமயம் கோவிலின் மூலையில் இருளில் தொண்ணூறு வயதுடைய அந்தணர் ஒருவர் அமர்ந்திருந்தது போல் தெரிந்தது. இருளில் அவர் ஏன் அமர்ந்திருக்கிறார் என்று அறிந்துகொள்ள டார்ச் லைட் வீசி பார்த்த போது, அவர் அதை விரும்பாமல் கோயிலின் சுவர் நோக்கி சென்று மறைந்தார். திரும்ப பார்க்கும்போது அங்கு வெறும் லிங்கம் மட்டுமே இருந்தது. வெடவெடவென்று பயந்து நடுங்கிக் கொண்டு உங்களைப் பார்த்த போது உங்கள் முகமும் தீர்க்கமாக இருந்தது. இங்கு இப்படித்தான் என்று கூறிவிட்டு சென்றுவிட்டீர்கள்.

உங்கள் படைப்புகளில் மகுடமாகத் திகழும் உடையாரை நீங்கள் எழுதவில்லை. ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, நீங்களும் சோழர்களோடு வாழ்ந்திருக்கிறீர்கள்; அவர்களோடு இப்பொழும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது உண்மை.

இந்த பிரம்மாண்டமான வேலை செய்துவிட்டு நானா இதைச் செய்தேன் என்று குழந்தையைப் போன்று வியந்த எளிமை உங்களுக்கு உங்கள் குரு யோகி ராம்சுரத்குமார் தந்த ஆசீர்வாதம்.

உயிரோடு கலந்திருக்கும் உடையார் வேலைக்கு நடுவில் நீங்கள் செய்யும் சினிமா வேலையையோ "வாழையடி வாழை" போன்ற சமூக நாவல்களையோ செய்யும்போது, உடையாரைப் பற்றி சுத்தமாக மறந்துவிட்டு, செய்யும் வேலையிலேயே முழுமையாக ஈடுபடும் உங்கள் சிரத்தை நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

ஒரு உன்னத கலைஞனின் உயர்ந்த படைப்பைப் படைக்கும் விதத்தைப் பார்க்கும் வாய்ப்பைத் தந்த இறைவனுக்கு நன்றி.

என்றென்றும் அன்புடன்,
**சம்பத்லக்ஷ்மி**

# உடையார்

## (நான்காம் பாகம்)

## 141

அன்று இரவு வானத்தின் உச்சிக்குத் தங்கத் தகடாய் முழு நிலவு வர, குளிர்க்காற்று உடம்பைச் சிலிர்க்க வைத்தது.

வீசி வீசி நாலாபுறத்திலும் பஞ்சவன்மாதேவியின் உடம்பைத் தாக்கியது. குதிரைமீது அமர்ந்தபடி மேலே போர்வையை இழுத்துப் போர்த்தி வெகு நிதானமாய்த் தஞ்சையைச் சுற்றி உள்ள வயல்வெளிகளில் வேடிக்கை பார்த்தவாறு மனம் போன போக்கில் பஞ்சவன்மாதேவி போய்க் கொண்டிருந்தாள்.

பேசிக்கொண்டே அரசர் உறங்கிவிட அவருக்குப் போர்வை போர்த்தி, திரைச்சீலைகளை இழுத்து விட்டு, வாசல்களைத் திறந்து வைத்து காவலுக்குப் பெண்டிரையும், ஒரு வேளை அரசர் எழுந்தால் பேச்சுத்துணைக்கு அரசரின் மனைவியையும் அருகே வைத்து விட்டு, கீழிறங்கி குதிரையில் ஏறி திறந்த வெளிநோக்கி வந்துவிட்டாள். வெகு நேரம் யோசித்து பேசிக் கொண்டிருந்ததால், மனம் சற்று சூடேறி புழுக்கமாய் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. வெட்டவெளியில் நின்று நல்ல காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அவள் குதிரையேறி அரண்மனையைத் தாண்டி நகர்ந்ததும் கூட வருவதற்கு மெய்க்காவல் படை தயாராகியது. ஒருவரும் வரக் கூடாது என்று கடுமையாய்க் கட்டளையிட்டு விட்டு அவள் தஞ்சையின் வடஎல்லையில் உள்ள வயல்வெளிகளை நோக்கி குதிரையைச் செலுத்தினாள். ஏன் போகிறோம் என்ற எண்ணமில்லை. எங்கே போகிறோம் என்ற சிந்தனையுமில்லை.

ஏதோ ஒரு திசை, ஏதோ ஒரு இடம் என்று நகர்ந்து வயல்வெளி வந்ததும் குதிரையின் ஓட்டத்தை மிருதுவாக்கி நடைக்குக் கொண்டு வந்து மெல்ல வயல்களைப் பார்த்தபடி நடந்தாள். நிலவின் ஒளி நீர் நிறைந்த அந்த வயல்களில்பட்டுத் தெறித்தது.

நகரத்தைத் தாண்டி அந்த வயல்வெளிகளுக்கு வந்ததும் இன்னும் குளிர் அதிகமாக இருந்தது. போர்வையைத் தாண்டி உடம்பைக் குளிர்காற்று துளைத்தது. பௌர்ணமி என்பதால் காற்றில் குளுமை அதிகமாக இருந்தது. பஞ்சவன்மாதேவி உடம்பு சிலிர்த்தது. மறுபடியும் வயல்வெளியைப் பார்த்தாள். காவிரியில் நீர் பாய்ந்து, அப்படி பாய்ந்த நீர் கால்வாய்களில் திசை திருப்பப்பட, அந்தக் கால்வாய்களில் திரும்பிய நீர், மதகுகளில் வந்து மோதி அங்கு வேறு திசைக்குத் திருப்பி விடப்பட, வயல்களை நோக்கி வந்துவிட்டது. வயல்களில் மடைமாற்றி இடமும் வலமுமாய் நீரைப் பிரித்துவிட்டு இருட்டியதும் வேளாளர்கள் கரையேறிவிட்டார்கள். ஆளில்லாத அந்த நிலம் முழுவதும் நீர் பாய்ந்து பரவிக் கொண்டிருந்தது. காலின் கீழ் இருக்கின்ற சிறிய கால்வாயில் நீர் சலசலத்து வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

அவள் நகர நகர நிலவினுடைய நீண்ட ஒளி, வயலில் உள்ள நீரில் பட்டு அதுவும் நகர்ந்தது.

இந்த நிலவொளியில் காற்றும், இருட்டும், தனிமையும், மரங்களிலிருந்து சுவர்க்கோழிகள் செய்கிற ரீங்காரமும், தொலைதூரத்து நாரையின், ஒற்றைக் குரலும் அவளுடைய உள்மன ஏகாந்தத்தைக் கிளறி விட்டன.

அரண்மனைக்குள் சுற்றி ஆட்கள் இருந்த போதும் ஒரு வெறுமை தாங்காமல் வெளியே ஓடிவந்தாள். இந்தக் காற்றைச் சுவாசித்ததும் அந்த வெறுமை மெல்லக் கழன்று கீழே விழுந்தது. மனதில் இனம் புரியாத ஒரு குதூகலம் வந்து குடி கொண்டது. எந்தக் காரணமும் இல்லாமல் மனம் ஒரு சந்தோஷத்தை அனுபவித்தது.

உலகம் முழுவதும் இனியது. மனிதர் எல்லோரும் நல்லவர். உயிர்கள் அனைத்தும் உவப்பானது என்ற எண்ணம் பரவியது. எதிரிகள் என்று எவரும் இல்லை. வெறுப்பதற்கு ஏதும் இல்லை என்ற மனோநிலை உள்ளுக்குள் மெல்ல மெல்லக் குடியேறுவதைக் கவனமாய் உணர்ந்தாள். மனம் ஒரு அதிசயமான விஷயம். எல்லோருக்கும் இப்படித் தோன்றுமா அல்லது. தனக்கு மட்டும் இப்படி அதிசயமாய் தோன்றுகிறதா?



பஞ்சவன் மாதேவி யோசித்தாள்.

அரண்மனைக்குள் பல சேடிகளுக்கு நடுவே இருக்கிற போது மனம் தனிமையை நாடுகிறது. இப்படித் தனிமையில் இருக்கும்போது அரண்மனைப் பெண்டிரையும், மக்களையும், அரசரையும், மறவர்களையும், வணிகர்களையும் மற்ற எல்லா மனிதர்களையும் நேசிக்கின்ற ஒரு மனோபாவம் கிளறுகிறது.

இந்தத் தனிமை என்பது என்ன, என்று யோசித்தாள்.

இந்தத் தனிமையும், மரணமும் வெகு அருகே இருக்கிறது. தனிமை பலருக்குப் பிடிப்பதில்லை. ஏனெனில் அது மரணம் போல சற்று கொடுமையானது. தனிமையை அனுபவிக்க மரணத்தை எதிர்நோக்கும் திடம் வேண்டும். தனிமையை எவர் அனுபவிக்கிறாரோ அவரால் மரணத்தை எதிர்கொள்ள முடியும். வாழும்போது மரணம் பற்றிய நினைப்பு திடப்பட்டு விட்டால் தனிமை இனிக்கத் துவங்கிவிடும். தனிமை இனிக்கத் துவங்கி விட்டால் மனிதர்களுடைய குற்றம் குறைகள் பெரிதாகத் தோன்றாது. எல்லோரையும் காதலிக்கின்ற ஒரு சுபாவம் ஏற்பட்டு விடும்.

காதல் என்பதென்ன...

கொடுத்தல்... வாங்குதல்.

என்ன கொடுத்தல்... என்ன வாங்குதல்...

பஞ்சவன்மாதேவி தொடர்ந்து யோசித்தாள்.

மெல்ல குதிரையை மண் பாதைகளோடே நடத்திப் போனாள். பாதையின் இரண்டு பக்கமும் வயல்கள் நீண்டு கிடந்தன. நடுவே நின்றாள். குதிரையை மெல்லச் சுற்றினாள். முன்னும் பின்னும் அலைந்தாள். சேணத்தின் மீது கால் ஊன்றி, ஏறி நின்று தொலைதூரம் பார்த்தாள்.

உலகம் அசையாது இருந்தது. அவள் மட்டுமே அசைந்து கொண்டிருப்பதுபோல ஒரு தோற்றம் தெரிந்தது. உரக்கக்கூவ வேண்டும்போல் எண்ணம் வந்தது. ஆனால், அடக்கிக் கொண்டாள். அமைதியானாள். உறங்குகின்ற பட்சிகள் ஒருவேளை உறக்கம் கலைந்து சலசலத்து எழும். தாய்ப்பறவை எழுந்தால் குஞ்சுகள் பதறும். எதற்குக் கூவுவானேன் என்று அடக்கிக் கொண்டாள். தனக்குத் தோன்றிய அந்த நல்லெண்ணத்தைத் தானே வியந்து பாராட்டிக் கொண்டாள்.

இதுதான் கொடுப்பது... பிறருக்கு எந்தத் தீங்கும் இல்லாமல் அமைதியைக் கொடுப்பது. என்ன வாங்குவது. அந்த அமைதிக்குக் கிடைக்கின்ற அன்பை வாங்குவது. அமைதியைக் கொடுப்பது என்றால் என்ன. ஒருவர் மற்றவருக்கு அமைதியை எப்படி தரமுடியும்.

தன்னையே கொடுப்பதால்தான் தரமுடியும். தான் என்ற எண்ணத்தைத் தன்னிலிருந்து பிய்த்து எறிந்து தன்னைத் தூக்கி இந்தா... என்னை நீ வைத்துக் கொள் என்று தூக்கி எறிந்தால்தான் முடியும். தான், தனக்கு தன்னுடையது. தன்னுடைய பொருள் என்று இறுக்கிக் கொள்ள, இறுக்கிக் கொள்ள எதிரே இருப்பவர் வேண்டாதவராகப் போகிறார். அப்படி தன்னைத்தூக்கி மற்றவரிடம் கொடுத்தால் மற்றவரிடமிருந்து தனக்கு என்ன கிடைக்கும். அதுபோலவே, அவருடைய தான், தன்னிடம் வந்து சேரும். அவரிடமிருந்தும் தான் என்ற தன்னிலை மறந்து போகும்.

இது எங்கோ படித்திருக்கிறோமே. இதைப்பற்றி வேறு ஏதோ ஒன்றும் கேள்விப் பட்டிருக்கிறோமே. **நம்பியாண்டார் நம்பி** ஒரு பாடல் பாடுவாரே... ஆ... நினைவுக்கு வந்து விட்டது.

பஞ்சவன்மாதேவி குதிரையைக் கொஞ்சம் வேகமாகச் செலுத்தினாள். குதிரை ஒரு துள்ளல் நடையாகப் போயிற்று.

சட்டென்று நிறுத்தினாள்.

என்ன அந்தப் பாட்டு முதல் வரி என்ன என்று தவித்தாள். வந்துவிட்டது என்று திசை திரும்பினாள்.

**'தந்தது உன் தன்னை கொண்டதும் என் தன்னை**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்...'**

இதுதான் அந்த வரி.

ஆமாம்.

அவளுக்குள் மறுபடியும் சந்தோஷம் பொங்கியது.

குதிரையை வேகமாக விரட்டினாள். சட்டென்று நிறுத்தினாள்.

மறுபடியும் சொல் என்று மனதைத் தூண்டினாள்.

**'தந்தது உன் தன்னை கொண்டதும் என் தன்னை**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்...'**



யான் என்னைக் கொடுத்தேன். பதிலுக்கு நீ உன்னைக் கொடுத்தாய். சங்கரா யார் கெட்டிக்காரர். நம் இருவரில் எவர் கெட்டிக்காரர்.

அடுத்த வரி தான் இன்னும் அற்புதமாக இருக்கிறது.

அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்
'சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே..'

உன்னிடமிருந்து நான் அளப்பரிய ஆனந்தமடைந்தேன். ஆனால், என்ன கிடைத்தது உனக்கு. ஒன்று புரிந்து விட்டது. தன்னைக் கொடுப்பது என்பது எளிது. அது பெரிய மதிப்புடையதல்ல. ஆனால், மற்றவருடைய அன்பு விலை மதிக்க முடியாதது. அது கடவுளுடைய அன்பைப் போல. தான் ஒன்றுமில்லை எனத் தெரிந்து, தன்னைத் தூக்கி இறைவனிடம் கொடுத்துவிட்டு, இறைவனிடமிருந்து அவனுடைய கருணையை வாங்கிக் கொள்வது. எல்லா உயிர்களும் இறைவன் என்றால், எல்லா உயிர்களிலும் இறைவன் இருப்பானென்றால், தன்னை எல்லாரிடமும் கொடுப்பதைவிட சந்தோஷம் உலகத்தில் உண்டா. அப்படிக் கொடுத்தால் என்ன கிடைக்கும். உன்னிடமிருந்து அந்த ஆனந்தத்தை வாங்கிக் கொண்டேன். உனக்கு என்னிடமிருந்து என்ன கிடைத்தது. மற்றவருக்கு நான் என்ன பெரிய உதவி செய்துவிட முடியும். இறைவனுக்கு என்னால் என்ன லாபம்.

அடேய்.. தமிழ் எத்தனை அழகாக இருக்கிறது. எவ்வளவு சுகமாக இருக்கிறது. எத்தனை சூட்சுமமான விஷயத்தைச் சொல்கிறது. தனிமையில் இருக்கும் போது மற்றவர்களுடைய அன்புக்கு மனம் எப்படி ஏங்குகிறது. தனிமையில் இருக்கும்போது மற்றவருக்குத் தன்னைக் கொடுக்க வேண்டும் என்ற ஆவல் எவ்வளவு பெரிதாகக் கிளறுகிறது.

அந்தமொன்றில்லா ஆனந்தம் அடைந்தேன். மிகப்பெரிய ஆனந்தம் தன்னைக் கொடுப்பதுதான். யாது நீ பெற்றது ஒன்று என்பால் என்னிடமிருந்து உனக்கு என்ன கிடைத்தது. கடவுளே... கடவுளே... தமிழ் இப்படி அடிவயிற்றைக் கலக்கி நெஞ்சை நிரப்புகிறதே.

அவள் தடுமாறினாள். குதிரையும் அலைந்தது. மெல்ல குதிரையை வேறு திசை நோக்கி நிதானமாய் நடத்திப் போனாள்.

கொடு.. கொடு.. பஞ்சவன்மாதேவி. உன்னைக் கடவுளிடம் கொடு. கடவுள் என்பது வெறும் வெட்ட வெளியல்ல. எதுவுமற்ற உருவமல்ல. எதுவுமற்ற உருவமாகக் கடவுள் இருப்பினும் கடவுள் மனிதனாக, புழுவாக, பறவையாக, மானாக, வேங்கையாக, இதோ இந்தக் குதிரையாக, வயல்வெளியாக பூமிக்குக் கீழே இருக்கும் ஊர்வனவாகவும் இருக்கிறார். இவை எல்லாவற்றுக்கும் என்னைக் கொடுக்க வேண்டும். அதில் அவைகளுக்கு என்ன லாபம் என்று தெரியவில்லை. ஆனால், அப்படிக் கொடுக்க எனக்கு மிகப்பெரிய லாபம் வருகிறது. நான் யாருக்கு என்னைக் கொடுத்தல் வேண்டும். எல்லோருக்கும்.. எல்லோருக்கும் என்றால் யாருக்கு.

அரசருக்கு.. அரசராகிய உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருக்கு.. அவர் பட்டமகிஷிக்கு.. இராஜேந்திரன் தாயான வானதிக்கு.. இங்கு உள்ள அரசியர்களுக்கு.. அரசியரின் சேடியர் களுக்கு.. அரண்மனையிலுள்ள மற்ற பெண்டிருக்கு.. அரண் மனை காக்கும் காவல்காரர்களுக்கு.. சோழதேசத்தைக் காக்கும் மறவர்களுக்கு.. வணிகர்களுக்கு, சிற்பிகளுக்கு, நெசவாளர்களுக்கு குயவர்களுக்கு.. கருமார்களுக்கு உலகத்திலுள்ள அத்தனை உயிர் களுக்கும் தன்னைக் கொடுக்கின்ற ஒரு மனோபாவம் இருந்தது. இதுதான் கனிதலா.. இதுதான் முதிர்தலா.. இதுதான் மிகப்பெரிய விஷயமா.. இதுதான் ஞானமா.. தன்னை இழத்தல் என்பதுதான் முக்கியமா..

தன்னை இழத்தல் என்பது என்ன.

நான் என்னைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறேனா அல்லது இழந்து கொண்டிருக்கிறேனா. இழத்தல் எப்படி ஏற்படும். இழத்தல் எங்கிருந்து துவங்குகிறது. அப்போது யோசித் தோமே. உரக்கக் கத்த ஆசை இருந்தும், உரக்கக் கத்தினால் பறவை பயப்படும். பறவைகள் சலசலத்தால் குஞ்சுகள் பயப்படும். குஞ்சுகள் பயந்தால் இன்னும் காட்டிலுள்ள பல விஷயங்கள் பயப்படும். எனவே யாரையும் எந்தத் தொந்தரவும் செய்யாது நம்மை அடக்கிக் கொண்டு அமைதியானோமே.. அதுபோலத் தானே..

அதுபோலத்தான். இப்பொழுது சத்தம் போடாதது எப்படி ஒரு சந்தோஷமோ அதுபோல சத்தம் போடுவதும் ஒரு சந்தோஷம். உலகத்தில் மற்றவருக்கு என்ன என்ன சந்தோஷமோ



அதை இடையறாது செய்து கொண்டிருத்தலே நம்முடைய வேலை.

என்ன நடக்கிறது எனக்குள். ஏதோ ஒரு குதூகலம். ஆனால் ஒரு அமைதியான குதூகலம். ஏதோ ஒரு ஆனந்தம். ஏதோ ஒரு நிறைவான ஆனந்தம். ஏதோ ஒரு திருப்தி. எந்தத் தேவையுமற்ற ஒரு மனோநிலை. எனக்கு இப்பொழுது ஏற்படுகிறதே: இது என்ன நிலை. இது என்ன விதமான புத்தி. இது கலைந்து போகுமோ. மறுபடியும் அரண்மனைக்குப் போனால் மூச்சுத் திணறுமோ. இவள், அவள் என்று பிரித்துக் கொள்ளத் தோன்றுமோ இல்லை இது நிரந்தரமாக வேண்டும். இது என்னுள் படிந்து கிடக்க வேண்டும் என்னை விட்டு அகலாதிருக்க வேண்டும். நான் என்ன செய்ய.. நான் என்ன செய்ய.. இறையே.. இறையே.. நான் என்ன செய்ய..

அவள் குதிரையிலிருந்து தடுமாறினாள். சட்டென்று கீழே குதித்தாள். குதிரையின் முதுகைத் தட்டினாள். குதிரை விலகிப் போயிற்று.

அவள் மெல்ல புல்மீது அமர்ந்து கொண்டாள். ஏதேனும் பூச்சி வருமோ.

வரட்டும்.

பாம்புகள், பூரான் ஏதேனும் நகருமோ.

நகரட்டும்.

குள்ளநரிகள் திரியுமோ.

எதுவும் செய்யாது.

அவள் அமைதியாய் இருந்தாள்.

மேலே மெல்ல தலைதூக்கி நிலவைப் பார்த்தாள்.

நிலவு பெரிதாய் இருந்தது. எதேச்சையாய் இடப்பக்கம் திரும்பினாள்.

பகீர்... பகீர்... என்ற ஒரு பயம் ஏற்பட்டது. அங்கும் ஒரு பெரிய நிலவு மினிர்ந்து கொண்டிருந்தது. வலப்பக்கம் பார்த்தாள். மிகப்பெரிய நிலவு இருந்தது. இடப்பக்கம் நிலவு இருந்தது. கிழக்கே உதிக்கின்ற நிலவு. அதேபோல மேற்கே இருக்கின்ற நிலவு என்னாயிற்று. இரண்டு கண்களில் ஏதேனும் தகராறா பார்வை பிளவுபடுகிறதா. கண் மயங்குகிறதா. கண்களை மெல்லத்தடவி மறுபடியும் பார்த்தாள்.

இது ரெட்டையான விஷயம் அல்ல. வெவ்வேறான விஷயம். அதுவொரு கோடி. இதுவொரு கோடி. மரத்தில் அம்மாதிரி ஏற்படவில்லை. எதிரே இருக்கின்ற கொடியில், செடியில் தாவரத்தில் அப்படி ஏற்பட வில்லை. குதிரை ஒன்றாகத்தான் தெரிகிறது. ஆனால், நிலவு இரண்டாக இருக்கிறது. கிழக்கே ஒரு நிலவு மேற்கே ஒரு நிலவு.

அவள் அதிசயமாய்ப் பார்த்தாள்.

காதோரம் ஒரு குரல் கேட்டது.

"இம்மாதிரி ஏழு இருக்கிறது பஞ்சவன்மாதேவி. ஏழு நிலவு இருக்கிறது."

அவள் திகைத்தாள்.

"யாரது.." என்று எழுந்திருந்தாள். எழுந்திருக்கும் வேகத்தில் மூளையில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. சட்டென்று மூச்சு அடைத்துக் கொண்டது. மூச்சை இழுக்கவும் முடியவில்லை. விடவும் முடியவில்லை. மூக்குக்கு நடுவே வாய்க்கு மேலே உருண்டையாய் மூச்சு சுருண்டு அடைத்துக் கொண்டது. வாயிலும் மூச்சை இழுக்க முடியவில்லை. வாய் அந்தச் சக்தியை இழந்துவிட்டிருந்தது. நுரையீரல் மூச்சுவிட முடியாமல் தவித்தது. திணறிற்று. உடம்பு முறுக்கித் தவித்தது. நடுவில் மிக மோசமாக வலித்தது. இரண்டு மார்பகங்களுக்கிடையே ஒரு கத்தி குத்தியது போல ஒரு வலி ஏற்பட்டது. வயிறு குழைந்தது. பின் பக்கம் காற்று வெளியேறியது. கால்கள் துவண்டன. முழங்கால்கள் இறுகின. தொடைகள் நடுங்கின. முதுகு வலித்தது. அடிமுதுகிலிருந்து மிகப்பெரிய வேதனை ஒன்று கிளம்பியது. கழுத்து வலித்தது. உச்சி பிளந்து விடுவது போல் இருந்தது.

அவள் பயந்தாள். திணறினாள்.

தன்னையே கொடுப்பது. தன்னையே கொடுப்பது இதுதானா. தன்னையே கொடுப்பது என்பது மரணமா. தானற்றுப் போவதுதான் மரணமா. தான் இல்லாது இருப்பதுதான் மரணமா. இப்பொழுது நான் சாகப் போகிறேனா. மூச்சு நின்று விட்டதா. ஹிருதயம் இருக்கிறதா. போகட்டும் போ.. போ.. எங்கு வேண்டுமானாலும் போ. இது நன்மையெனில் செல். வெளியேறு.. வெளியேறு.. நகர்ந்துவிடு. நகர்ந்து விடு என்று அவள் தன்னை நகர்த்தினாள்.



உடம்பிலிருந்து ஏதோ ஒரு சக்தி நகர்ந்தது. உடம்பிலும் சொச்சமாய் ஒரு சக்தி இருந்தது அவள் நகர்வைப் பார்த்துக் கொண்டிருந்தது. உடம்பு மெல்ல கீழே உட்கார்ந்தது. சரிந்து படுத்தது. கைகால்கள் இரண்டு பக்கமும் விரித்து விழுந்தன. குதிரை அருகே வந்து முகர்ந்து பார்த்தது.

அவள் குதிரையை நேசித்தாள்.

அவள் வெளியே இருந்தாள். மெல்ல குதிரையை வெளியே இருந்தபடி அருகே போய் தடவிக் கொடுத்தாள்.

குதிரை துள்ளிப் பின்னால் நகர்ந்தது. பயந்தது. சற்று திரும்பி வேகமாய் நடந்து தொலைதூரம் போய் அவளைப் பார்த்தது.

வயல் பார்த்தாள். தரை பார்த்தாள். இப்பொழுது மேலே பார்க்க நிலவு தவிர வேறு ஏதோ நிறைய நட்சத்திரக் கூட்டங்கள் தெரிந்தன. அந்த நட்சத்திரங்கள் நகர்வதும் அவள் உணர்ந்தாள்.

என்ன செய்வது இப்போது. இதுதான் தன்னை இழத்தல் என்றால் இதற்குப் பிறகு என்ன.

எதுவுமில்லை.

ஏன் எதுவுமில்லை.

இந்த வாழ்க்கை மிகமிகச் சாதரணமானது. மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்படலாம். இது ஒரு கனவு மயக்கம். இந்த வாழ்க்கை ஒரு நடுவாந்தரம். இந்த வாழ்க்கை ஒரு மாற்றத்திற்கு இடையே ஏற்படுகின்ற நிகழ்ச்சி. ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு புள்ளிக்குப் போகும் பயணம். ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு மாட்டு வண்டியில் மூட்டை கட்டிக் கொண்டு போகிறார்களல்லவா. அதுபோல.. இது ஏதோவொரு மாட்டு வண்டியில், ஏதோவொரு கலாச்சாரத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன் நல்லது கெட்டதுகளைச் சுமந்து கொண்டு போகின்ற ஒரு நிலை. அவ்வளவே.. எங்கிருந்து எங்கு போகிறோம். அதுதான் முக்கியமே தவிர, இந்தப் பயணம் முக்கியமில்லை. இந்தப் பயணம் நகர்ந்து கொண்டேயிருப்பது. மாறிக் கொண்டேயிருப்பது. தன்னை விதம்விதமாக நகர்த்திக் கொண்டேயிருக்கிறது. இந்த நகர்வுதான் முதுமை நோக்கிப் போவது. இந்தத் தாவரங்கள், இந்தப் பூச்சிகள், இந்த மிருகம் எல்லாமுமே நகர்ந்து கொண்டிருக்கின்றன. நகராதது எது.

அவள் நினைவுக்கும், தன் சூட்சும சக்திக்கும் இடையேயுள்ள ஒரு பெரும் பரப்பைப் பார்த்தாள்.

அடேய்... இதுதான் நகராதது. இதுதான் எங்கும் போகாதது. இதுதான் எங்கும் இருப்பது. இந்த இடைவெளிதான், இந்த வெட்டவெளிதான் இந்தத் துகள்தான் இந்த அணுக்கூறுகள்தாம் எல்லா இடத்திலும் நிரம்பிய இந்தச் சக்திதான் அனாதியானது. முதன்மையானது எப்போதும் இருப்பது.

எந்த அழிவும் இல்லாதது. எந்த மாற்றமும் இல்லாதது. எனக்குப் புரிந்துவிட்டது. இதைத்தான் கடவுள் என்கிறார்கள். இதைத்தான் பொம்மையாக்குகிறார்கள் இதைத்தான் உள்ளிருக்கிறது என்கிறார்கள். இதைத்தான் வெளியில் இருக்கிறது என்கிறார்கள். இதைத்தான் பிரபஞ்சம் என்கிறார்கள். இதைத்தான் கோள்கள் என்கிறார்கள். இதைத்தான் பூமி என்கிறார்கள்.

சிவனே... என் சிவனே..

அவள் தவித்தாள், மெல்ல உடம்பைப் பார்த்தாள். தடவிக் கொடுத்தாள்.

சரி, என்ன செய்ய உன்னை, நான் வருகிறேன்.. உள்ளுக்குள் வருகிறேன். எனக்குப் போவதும் இருப்பதும் தெரிந்துவிட்டது. கடவுள் எங்கே என்று புரிந்துவிட்டது. அடேய்.. இதுதான்.. இதுதான் அற்புதம். நான் இங்கேயே கிடக்கிறேன். அவள் மறுபடியும் உள்ளுக்குள் போனாள். உடம்பு அவளை இழுத்துக் கொண்டது. அவள் உள்ளே கிடந்தாள். அசைத்தாள். எழுந்து நின்றாள். கைதட்டினாள். குதிரை அருகே வந்தது. தாவி ஏறிக் கொண்டாள், நடந்தாள்.

தொலைவே பல்லக்கு வரும் சத்தம் கேட்டது.

இப்போது பூமியில் இருக்கிறோம். பூமியோடு சம்பந்தப்பட்டிருக்கிறோம் என்பது புரிந்தது. அவள் சிரித்தாள். தனக்கு மட்டும் இது புரிந்துவிடவில்லை. என்னைப்போல் பலருக்கு என் முன்னோர்கள் பலருக்கு இது புரிந்திருக்கிறது. புரிந்துதான் அவர்கள் நல்ல விஷயங்களை நிறைய பேசியிருக்கிறார்கள். இது சாதாரண தேசமல்ல.

இயற்கையில் கடவுளைப் பார்க்கும் தேசம் இது. எல்லா இடத்திலும் கடவுளினுடைய ஆட்சி என்று வியக்க வைக்கும் தேசம் இது. எல்லா இடங்களிலும் பிரம்மாண்டமாய் பார்க்கின்ற கடவுளை இன்னும் நெருக்கமாகத் தனக்கருகே பார்க்க



வேண்டுமென்ற ஆசை இதனால் கடவுளுக்கு ரூபம் கொடுத்து சிலையாய் மாற்றி மடியில் வைத்துக் கொண்டு இந்தத் தமிழ்த் தேசத்து மனிதன் கொஞ்சுகிறான். தான் வியந்து பார்த்த அந்தப் பேருருவத்தைத் தனக்கு எதிரே சிறு குழந்தையாய் நிற்க வைத்து சின்ன சிவலிங்கமாய் அமர்த்தி வைத்து விஷ்ணுவாய், ராமனாய் சிலை வடித்து விதம்விதமாய் அபிஷேகங்களும், ஆராதனைகளும் செய்து கொண்டிருக்கிறான். அலங்காரம் செய்து கைகூப்புகிறான். அதுவும் கடவுள், இதுவும் கடவுள், எங்கும் நிறைந்த இறைவன் அவனே. எனக்கெதிரே சிறு உருவமாய் நிற்பவனும் அவனே அவன் இப்படியும் இருப்பவன், அப்படியும் இருப்பவன்.

மனிதர்களுக்கு மனிதர்கள் போதும், கடவுள் அவசியம் இல்லை. கடவுள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. மனிதர்களுக்கு மனிதர்களான வழிகாட்டிகள் போதும். அவர்களுக்குக் குரு என்று பெயர். அவர்களைத் தீர்த்தங்கரர் என்று நாங்கள் அழைக்கிறோம். இந்தக் குருமார்கள் எங்களுக்கு எல்லா விதங்களிலும் உதவுவார்கள். அந்தக் குருமார்களுக்கு நெருக்கமாய் இருக்கின்ற யட்சர்கள் எங்களைக் காப்பாற்றுவார்கள் என்று சமணத் துறவிகள் சொல்கிறார்கள்.

கடவுளைக் குரு என்று சொன்னால் என்ன. சிவன் என்று சொன்னால் என்ன. விஷ்ணு என்று சொன்னால் என்ன. தன்னிலும் பெரிதானசக்திக்கு ஏதோ ஒரு பெயர்.

ஏன் கடவுள் அவசியம். மரணம் பற்றிய பயமும் நாளை என்ன நடக்கிறது என்று தெரியாத திகைப்பும்தான் மனிதரைக் கடவுளைத் தேட வைக்கின்றது. நாளை என்ன நடக்குமென்று தெரிந்து விட்டால், மரணம் தள்ளிவைக்கப்பட்டால் கடவுள் நம்பிக்கை மெல்ல மெல்ல குறைந்து போகும் அப்படியொரு காலகட்டம் இந்தப் பூமியில் வருமோ.

வரும் என்று ஜோதிடர்கள் சொல்கிறார்கள் தஞ்சையிலிருந்து நாடிபிடித்து இந்தப் பரதகண்டத்தின் எதிர்காலம் எப்படியிருக்குமென்று ஒருவர் சொன்னார்.

யவனர்களாலும், மிலேச்சர்களாலும் பரதகண்டம் முழுவதும் அடிமைப்படுத்தப்படும் என்று சொன்னார். கோயில்களெல்லாம் சூறையாடப்படும் என்று சொன்னார். பரதகண்டத்திலிருந்து மஹாலட்சுமி இமயமலை யிலுள்ள கணவாய் வழியாக வெளியேறுவாள் என்று அந்த நாடிஜோசியம் கூறியது. இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இருண்டகாலம் வந்துவிடும் என்று அந்த நாடிஜோசியம் விளக்கம் சொல்லிற்று.

அரசர் அவசரமாக இந்து மதம் அழிந்துவிடுமா என்று கேட்டார். அழியாது என்று நாடிஜோசியம் தெளிவாகச் சொல்லியது.

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஜோசியம் பார்த்து வெளியே வந்ததும், கோயில்கள்தான் நம்முடைய மதத்தை, கலாச் சாரத்தை அழியாது காக்கும். எனவே எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் கோயில் எழுப்புவதுதான் என்னுடைய வேலை என்று பஞ்சவன்மாதேவியிடம் உரக்கச் சொன்னார். அப்படிச் சொல்லும்போது அந்தக் குரலில் ஒரு கோபமும், பிடிவாதமும், ஆவேசமும் இருந்தன.

இது நடந்து வெகுநாளாயிற்று.

இவ்வளவு உயரமான கோயில் ஒன்று கட்டப் போகிறோம் என்ற எண்ணமெல்லாம் அப்போது இல்லை. ஏதேதோ விஷயங்கள் உள்ளுக்குள் படிந்து பெரிதாகி இப்போது ஒரு மிகப்பெரிய கற்றளி கட்டும்படியாய் நேர்ந்துவிட்டது. கோயில் கட்டுவது தஞ்சை மக்களிடம் மிகப்பெரிய மாற்றம் ஏற்படுத்தும். அந்த மாற்றத்தால் சோழதேசம் முழுவதும் திசை மாறும், சோழ தேசம் திசைமாறினால் நடுநாடும், தொண்டை நாடும், பாண்டிய தேசமும், சேரதேசமும், கீழைச்சாளுக்கியமும் பின் தொடரும். வீடுகள் விரிவாகக் கட்டப்படும். காற்றோட்டமாக இருக்கும். இதனால் தஞ்சை போன்ற நகரங்கள் பெரிதாகும். விரைவான மாட்டு வண்டிகள், மேலும் விரைவான குதிரை வண்டிகள் என்று பலரும் பயணப்படக்கூடிய வண்டிகள் உருவாகும். வழி நெடுக உள்ள கிராமங்களுக்கு மக்கள் போவார்கள். தங்குவார்கள் பேசுவார்கள்.

ஆடலும், பாடலும், இறைவழிபாடும், இலக்கியமும், எல்லா இடத்திற்கும், பரிமாறப்படும். பெண்களுடைய வாழ்க்கை மேம் படும். சற்று கர்வியாக இருந்தாலும் சக்ரவர்த்தியாரின் தமக்கை யார் குந்தவையார் எல்லா ஊர்களிலும் ஆதுரச்சாலை வைக்க வேண்டுமென்றும், பெண்களுக்குப் பேறு காலத்தில் அந்த ஆதுரச் சாலையில் முதன்மையான உதவி வழங்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டு, நிவந்தங்கள் கொடுத்து, மூலிகை பயிர் செய்கிறவர்களுக்கும், காடுகளுக்கு ஊடேபோய் மூலிகைகள் பறித்து வருகிறவர்களுக்கும் மானியம் கொடுத்து, அந்த மானி யங்கள் ஒழுங்காக வழங்கப்படுகிறதா என்று அவ்வப்போது சோதனை செய்து பேருதவி செய்திருக்கிறார்கள்.



சோழதேசத்துப் பெண்களுக்குக் குந்தவை குலதெய்வம் போல. குந்தவையார் பிறந்த நாளின் போது சில ஆதுரச் சாலைகளில் நிறைய விளக்கேற்றி வைத்து சிவநாமம் சொல் கிறார்களாம்.

நாமும் ஆதூரச்சாலை கட்டலாமா? வேண்டாம் குந்தவை யார் செய்ததையே நாமும். செய்வதில் என்ன பலன் ஆதுரச் சாலை, வேதபாடசாலை இதெல்லாம் எல்லா மன்னர்களும் செய்வது. நாம் வேறு ஏதாவது செய்தாக வேண்டும்.

பஞ்சவன்மாதேவி மெல்ல குதிரையைச் செலுத்த ஒரு திருப்பத்தில் பல்லக்கு வரும் சப்தம் கேட்டது. பல்லக்குத் தூக்கி கள் மெல்லியதாய் ஒரு முனகல் குரல் கொடுத்துக் கொண்டே வருவார்கள். உள்ளுக்குள்ளே இருப்பவர் விழிக்காத வண்ணமும், அதேசமயம் தொடர்ந்து நடப்பதற்கு உத்வேகத்திற்கு ஒரு ஹுங்காரம் கொடுத்துக் கொண்டே வருவார்கள். இரண்டு தீவட் டிகள் முன்னே வர, ஒரு தீவட்டி பின்னே இருக்க, ஈட்டியும் உருவிய வாளும் ஏந்திய வண்ணம் நான்கு வீரர்கள் பல்லக்கின் பக்கவாட்டில் வர ஒற்றைப்பல்லக்கைத் தூக்கியவாறு நான்கு வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இடுப்பிலும் குறு வாட்கள் இருந்தன. எந்தச் சின்னமும் எந்தக் கொடியும் இல்லை.

யாரது என்று நிழலில் மறைந்தபடி பஞ்சவன்மாதேவி உற்றுப் பார்த்தாள்.

இருட்டில் கொடியினுடைய நிறம் தெரியவில்லை. ஆனால் கொடிபோல் ஏதோ ஒன்று பல்லக்கு உச்சியில் அசைந்தது. உற்றுப் பார்த்தபோது பல்லக்கில் ஓம் என்று எழுதப்பட்டிருந்தது. பல்லக்கில் அப்படி எழுதியிருப்பின் அது மடாதிபதிகளுக்கோ துறவிகளுக்கோ சொந்தமானது.

'யார் வருவது. சற்று இறங்கி நிற்கலாமா. இல்லை. அருகே வரட்டும்.'

அவள் குதிரையைச் செலுத்திக் கொண்டு முன்னே விரைந்தாள்.

குதிரை வரும் ஓசையைக் கேட்டுவிட்டு. அருகே வருவதைப் பார்த்துவிட்டு தீவட்டி வீரர்கள் தீப்பந்தங்களை உயரத் தூக்கி னார்கள். ஓ.. என்று எச்சரிக்கை குரல் கொடுத்தார்கள். எல்லா வீரர்களும் வாட்கள் உருவினார்கள். தலையைச் சுற்றிப் போட் டிருந்த முக்காட்டை நீக்கிவிட்டு இடுப்பிலிருந்த குத்து வாளை

இறுக்கப் பிடித்த வண்ணம் பஞ்சவன் மாதேவி பல்லக்கு நோக்கிப் போனாள்.

'தேவியாரல்லவா... தேவியாரல்லவா...' அடையாளம் கண்டு கொண்ட மக்கள் உரக்கக் கூவினார்கள். ஆம் என்று பஞ்சவன் மாதேவி தலையசைத்தாள்.

"மன்னிக்க வேண்டும்."

தீவட்டியோடு வீரன் அருகே வந்து அவளை உற்றுப் பார்த்தான். தீவட்டியின் வெப்பம் மெல்ல மேலே வீசியது. தீப்பந் தத்தை விலக்கிக் கொண்டான். மண்டியிட்டு வணங்கினான். மற்ற வீரர்களும் வணங்கினார்கள். பல்லக்குத் தூக்கிகள் மெல்ல பல்லக்கை இறக்கினார்கள்.

"யார்.." ஒற்றை வார்த்தையில் பஞ்சவன்மாதேவி வினவினாள்.

கட்டியம் கூற வாயெடுத்தவனை, உள்ளுக்குள்ளிருந்து வெள்ளை வெளேர் என்ற ஒரு கை தடுத்து நிறுத்தியது. அந்தக் கையில் சிறிய ருத்ராட்சமணி மாலைகள் இருந்தன.

அந்தப் பல்லக்கிலிருந்து வயது முதிர்ந்த பரங்கிப் பழம் போல் சிவந்த முன்தலை மழித்து மெல்லிய குடுமி வைத்திருந்த, கழுத்தில் ருத்ராட்சங்களும், ஸ்படிக மாலைகளும், வெள்ளியினால் செய்யப்பட்ட சிவலிங்கமும் அணிந்த பெரியவர் வெளியே வந்தார்.

இத்தனை நேரம் கால்மடக்கி உட்கார்ந்திருந்ததால் நடக்க சிரமப்பட்டார். சற்று தொலைவே வந்து கொண்டிருந்த அந்தண இளைஞர்கள் வேகமாக ஓடிவந்து அருகே நின்று கொண் டார்கள். வந்தவர்களின் தோளில் கை வைத்து முன்னே தள்ளாடி நான்கு அடிகள் வந்தார்.

பஞ்சவன்மாதேவியை உற்றுப் பார்த்தார்.

"என்னை அடையாளம் தெரியவில்லையா. ஆனால், சந்தித்து நாளாயிற்று." என்று சொல்ல பளிச்சென்று அந்த முகம் யாருடையதென்று பஞ்சவன்மாதேவிக்குப் புரிந்து போயிற்று.

"பண்டிதரல்லவா.. ஈசான சிவபண்டிதரல்லவா."

"ஆமாம் அம்மா. உங்களுடைய தேசத்து குரு. உங்கள் அரசரின் ஆலோசகர். ஆனால், உனக்கே அடையாளம் தெரிய வில்லை." என்று உரக்கச் சிரித்தார்.



பஞ்சவன்மாதேவி திசை பார்த்து அவரை வணங்கினாள்.

ஈசான சிவபண்டிதர் இடுப்புச் சுருக்குப் பையிலிருந்து விபூதி எடுத்து அவள் தலையில் தெளித்தார். கட்டை விரலில் எடுத்து சிவ மந்திரம் சொல்லி நெற்றியில் இட்டார்.

அவள் உள்ளங்கை குவித்து நீட்ட, பஸ்பத்தை அவள் கையில் கொடுத்து உண்ணுமாறு சைகை செய்தார்.

பஞ்சவன்மாதேவி பஸ்பத்தை வாயில் போட்டுக் கொண்டாள்.

"என்னய்யா இது. இந்த வேளையில்.'

பஞ்சவன்மாதேவி வியப்போடு சொல்ல. "நானும் அதே கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன். என்னம்மா இது. இந்த வேளையில்.."

"தூக்கம் வரவில்லை ஐயா. ஏதோ சிந்தனைகள். அதனால் உலாவப் புறப்பட்டேன்."

"ஒரு மெய்க்காவல் படைவீரனைக்கூட அருகே வைத்துக் கொள்ள மாட்டாயா? இறங்கி நிற்கிறாயே. ஒரு பூச்சிபொட்டு தாக்கியதென்றால் என்ன செய்வாய். குதிரை மிரண்டு எங்கே னும் முட்டினால் அடிபட்டு விழுந்தால் அது தேசத்திற்கு அவ மானம். பொதுமக்கள் மிரளுவார்கள். அதிகாரிகள் தேவை யில்லாமல் அதட்டப்படுவார்கள்."

"ஐயா... எல்லாம் புரிகிறது. ஆனாலும் ஒரு மெய்க்காவல் வீரன் அருகே இருந்தால்கூட என் சிந்தனைகள் சரியாக இயங்க மாட்டேன் என்கிறது. நான் தனியே இருந்தால்தான் அதிகம் யோசிக்கிறேன். தெளிவாக யோசிக்கிறேன். தொடர்ந்து யோசிக் கிறேன் மற்றவர் இருப்பு என் சிந்தனையைக் கலைக்கிறது. இதனால்தான் தனியே வந்தேன்."

"நன்றாகத் தனியாக இரு. எங்கேனும் அரண்மனை மேல்மாடத்தில், நந்தவனத்தில் இருக்கலாமல்லவா, இப்படி தஞ்சையின் எல்லையைத் தாண்டி அலைகிறாயே."

"இல்லை. ஒரு பாட்டு வரி மனதிற்குள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தது. அந்தப் பாட்டு வரியைப் பார்க்க வேண்டுமென்று வந்தேன்."

"என்னம்மா இது பாடல் வரியை இங்கு யோசிக்கிறாயா."

"ஆமாம் ஐயா."

"என்ன வரி."

"தந்தது உன் தன்னை கொண்டதும் என் தன்னை சங்கரா ஆர் கொலோ சதுரர்?

"அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே.."

"அடடே.. நன்றாக இருக்கிறதே. சிறிய பொருளினைக் கொடுத்துவிட்டு பெரும் விஷயத்தை வாங்கியதுபோல் இருக்கிறதே. ஒன்றுமில்லாத என்னைக் கொடுத்துவிட்டு மிகப்பெரிய விஷயமான கடவுளை நான் வாங்கி நிரப்பி விட்டேன் என்ற பேரானந்தம் இந்த வாக்கியங்களில் தெரிகிறது. அதுதான் அடுத்த வரியைப் பார். அந்தமொன்றில்லாத... முடிவே இல்லாத ஆனந்தமடைந்தேன் என்று குதூகலிக்கிறார். உடனே ஒரு சிறிய குற்ற உணர்ச்சியும் வருகிறது. யாது நீ பெற்றது என்பால்... நான் ஒன்றும் சரியாகக் கொடுக்கவில்லையே என்ற குமைதல் வருகிறது. எவ்வளவு உண்மையான மனது. எவ்வளவு சத்தியமான நடவடிக்கை. எவ்வளவு தூய்மையான எண்ணம். இந்தப் பாடல் வரியை இப்படித்தான் இங்கு தனியாகத்தான் யோசிக்க வேண்டும். நெடுநேரம் யோசித்தாயா மகளே."

"ஆமாம்."

"உன் கண்கள் பெரிதாகியிருக்கின்றன. மூக்கு விடைத்திருக்கிறது. நெற்றியில் வியர்வைத் துளிகள். காதோரம் சிவந்திருக்கிறது."

அவர் தீப்பந்த ஒளியில் உற்றுப் பார்த்தார்.

"உன்னிலிருந்து புதுமையான அதிர்வு வருகிறது. மயக்கமடைந்து விட்டாயா பெண்ணே."

"ஆமாம். மயக்கம் போலும் ஒரு உணர்வு."

"வெளியே புறப்பட்டு மீண்டு வருகின்ற மிகப்பெரிய நிகழ்ச்சி நடந்ததோ."

ஈசான சிவபண்டிதர் கவலையோடு கேட்டார்.



"ஆமாம் அப்படித்தான் ஏதோ நடந்தது."

"ஏதோ அல்ல. எது நடக்க வேண்டுமோ அது உனக்கு நடந்திருக்கிறது தாயே.. ஒருமுறை இதை ருசிக்கத் துவங்கிவிட்டால் மறுபடி மறுபடி இம்மாதிரியே கிளம்பிப் போகத் தோன்றும். சிலசமயம் திரும்பி வர மனமில்லாதும் போகத் தோன்றும். வேறு ஏதேனும் சூட்சும சக்திகள் அருகே வந்து "வா" போதும் போய் விடலாம் என்று அழைத்துக் கொண்டு போகவும் நேரிடும். மகளே உன்னுடைய அரவணைப்பில்தான் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் நிம்மதியாக இருக்கிறார் என்று ஊரும், அதிகாரிகளும் பேசிக் கொள்கிறார்கள். இந்த நேரத்தில் நீ இப்படி வித்தைகள் செய்து கொண்டிருந்தால் அது விபரீதமாய்ப் போகும். தாயே... இத்தோடு அமைதியாகிவிடு. இந்த வழி போக வேண்டிய வழி. இந்த வழிதான் திறந்து உன்னை வெளியே அனுப்பும் என்று தெரிந்துவிட்டது. தொப்புள் வழியாகவும் வெளியே போகலாம். நெஞ்சுக் குழி வழியாகவும் வெளியே போகலாம். தொண்டையிலிருந்தும் வெளியேறலாம். மூக்கு, வாய், கண் வழியாகவும் வெளியேறலாம். சிரஸின் வழியாகவும் ஒரு மனிதர் வெளியே போக முடியும். அபான வாயு வழியாக வெளியேறுவது அவ்வளவு நல்லதன்று. மார்பு வழியாக வெளியேறியிருக்கிறாய். மறுபடியும் மார்பு வழியாகவே வந்திருக்கிறாய் உன்னை உணரும்போது நீ போனதும், வந்ததும் தெரிகிறது. தாயே இதைச் சற்றுத் தள்ளிப்போடு. இதற்கான காலம் வரவில்லை. உன்னால் சோழதேசத்திற்குப் பலநூறு நன்மைகள் கிடைக்க வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம். இந்த விளையாட்டை அடிக்கடி விளையாடாதே. தனிமைப் படாதே. வெளியே எவர் துணையின்றியும் வராதே. இந்த நேரத்தில் உனக்கு நான் என்னுடைய அனுபவம் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். என் அனுபவம் உனக்கு இப்பொழுது புரியும்."

அவர் மெல்ல சுற்று முற்றும் பார்த்தார்.

அங்கே ஒரு சிறிய சுமை தாங்கிக் கல் இருக்கிறது என்று ஒரு வீரன் கை காட்டினான். தீப்பந்தம் அந்த இடம் நோக்கிப் போயிற்று. சுமைதாங்கிக் கல் பார்க்கப்பட்டது. அது முழங்கால் உயரத்தில் அமைக்கப்பட்ட ஒரு கற்பலகை. வழிப் போக்கர்கள் அமர்ந்து கொள்ள வேண்டுமென்று கிராமத்தார்கள் வெகுகாலம் முன்பு செய்திருக்க வேண்டும். தீப்பந்தத்தைச் சட்டென்று தாழ்த்தி அதன் முன்னும் பின்னும் வீசினார்கள். சில புற்கள் கருகின. பூச்சிப்பொட்டுகள் அந்த வெப்பத்தில் விலக வேண்டு

மென்று மறுபடியும் அவ்விதமே செய்தார்கள். பல்லக்கிலிருந்து மெத்தையும், தர்ப்பைப்பாயும் எடுத்து அந்தக் கற்பலகையின் மீது பரப்பினார்கள்.

ஈசான சிவபண்டிதர் அங்கு போய் அமர்ந்தார்.

தரையில் அமர பஞ்சவன்மாதேவி முயற்சி செய்த போது இல்லை என்று தடுத்து தனக்கு அடுத்த இடத்தைக் காண்பித்தார். சற்று விலகி கற்பலகையின் நுனியில் பஞ்சவன்மாதேவி அமர்ந்து கொண்டாள். மறுபடியும் தீப்பந்தம் சுற்றி வந்தது. பிறகு விலகிப் போயிற்று. தீப்பந்தத்தை வேல் சொருகி அதன் நுனியில் இணைத்து இறுகக் கட்டினார்கள்.

அந்த வெளிச்சத்தில் ஈசான சிவபண்டிதர் மறுபடியும் பஞ்சவன்மாதேவியைப் பார்த்தார்.

"ஆச்சரியமாக இருக்கிறதம்மா. சோழ தேசத்தின் அச்சாணியாக இருக்கின்ற பெண்மணி தனிமையில் நகரத்தின் எல்லையில் சுற்றிக் கொண்டிருக்கிறாள். இப்படிச் சுற்றினால் தான் தன்னால் சிந்திக்க முடியும் என்றும் சொல்கிறாள்.

தாயே.. நடனமாடியும், பாட்டுபாடியும், உண்டும், உறங்கியும் பல பெண்கள் உன்னைச் சார்ந்தவர்கள் இருக்க நீ இப்படி சுமையைத் தோளில் ஏற்றிக் கொண்டு தள்ளாடித் தனியே வந்து கொண்டிருக்கிறாயே இது எவ்வளவு பெரிய தியாகம். சோழதேசத்திற்காக நீ செய்த பல தியாகங்களை நான் அறிவேன். நான் போகத்திற்காகவே வந்தவள். எனக்குப் பிள்ளை வேண்டா மென்று நீ மறுத்தது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம். அப்படி வெளியே வந்த நீ வேறெதுவும் சிந்திக்காமல் **சங்கரா யார் கொலோ சதுரர்** என்று சிந்திக்கிறாயே இது இன்னும் பெரிய விஷயம்.

இப்பொழுது குரு ஹோரை. நீ இந்த விஷயத்தைப் பேச ஆரம்பித்துவிட்டதால் இதன் தொடராக நான் உனக்கொரு விஷயத்தை விளக்க விரும்புகிறேன் இறையருள் காக்க.

கொடுப்பது, வாங்குவது என்று பேசினோமல்லவா. அது முற்றிலும் சரியானதல்ல. இறை என்ற விஷயத்திற்கு எதுவும் இல்லை. அது எல்லாம் கடந்தது அது குளுமையோ, வெப்பமோ, நல்லதோ, கெட்டதோ, உயர்வோ, தாழ்வோ இல்லா முற்றிலும் வேறான ஒரு விஷயம். ஆனால், உனக்கு நான் சொல்லும்போது அல்லது எனக்கு நானே உணரும்போது இறை எப்படிப் பட்ட விஷயம் என்று நான் பேசிக் கொள்கிறபோது அதுபோல என்று



ஒரு உவமை தேவைப்படுகிறது. இறைவன் எப்படி இருப்பான் என்று நான் கேள்வி கேட்டுவிட்டால் ஒரு பதில் எனக்குச் சொல்ல வேண்டுமல்லவா. என் மனம் இப்படி இருப்பின். இதுபோல இருப்பின் என்று கற்பித்ததைக் கொண்டு வந்து சொல்கிறது. இந்த உடம்புக்கு எது ஏற்றதாக, சுகமாக இருக்கிறதோ அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதுபோல இறைவன் என்று சொல்கிறது.. இது உவமைக்கான விஷயம்.

இறைவன் எதுபோல? சந்திரனின் குளுமையான கிரணங்கள் இந்த வயல் முழுவதும் பரவியுள்ளது. இரவு நேரம் குளிர்ந்த காற்று. சந்திரன் ஒளியினுடைய குளுமையும் நீரில் பட்டு மேலே தெறிக்கின்ற காற்றினுடைய குளுமையும் ஒன்று சேர்ந்து மெல்ல நடுங்க வைத்து ஒரு போர்வைக்குள் புகுந்து கொள்ள வைத்து இந்த வெளிச்சச் சிதறலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கண்ணுக்கு இதமான, உடம்புக்கு இதமான, மூளைக்கு இதமான எல்லா விஷயங்களும் கண்ணுக்குள் புகாமல் சில ஒளிகள் மட்டுமே கண்ணுக்குள் புகுந்து கொண் டிருக்கிற ஒரு தன்மையை இறை என்று சொல்கிறோம். இப்படித் தான் சொல்லியாக வேண்டும். வேறு வழியில்லை. இறை என்ற உணர்வை வார்த்தையில் பகிர்ந்து கொள்ளவும் முடியாது. அது முற்றிலும் வேறான விஷயம். ஆனால் அதுபோல, இதுபோல என்று விதம் விதமாக சொல்லிக் கொண்டிருக்கலாம். நான் சொல்வது புரிகிறதா பஞ்சவன்மாதேவி."

"புரிகிறதய்யா."

"இப்போது உனக்கு ஏற்பட்ட அனுபவம் போல் நானும் ஒன்று உணர்ந்தேன். அது வயல்வெளியல்ல, மலை, இமயமலை, கைலாச பர்வதம். கங்கைக் கரையிலிருந்து வெகுதூரம் வடகிழக்கே நடந்து பல மலைகள் தாண்டி நரநாராயணர்களாக வீற்றிருக்கும் இரண்டு மலைகளுக்கு நடுவே வெள்ளை வெளேரென்று பனி போர்த்தி சிவலிங்கச் சொரூபமாகக் காணப் படும் மிகப்பெரிய தூய்மையான நெஞ்சை அள்ளுகின்ற அந்த வெள்ளி மலையைப் பார்ப்பதற்காகப் போனேன். அங்கேயே வசிக்கின்ற சாதுக்கள் நாம் அருகே போனதும் வரவேற்கிறார்கள். அந்த மலையைப் பற்றிச் சொல்கிறார்கள். கடுங்குளிர். பாதையே இல்லாது எல்லாப் பக்கமும் பாறைகளும், கூழாங் கற்களும் நிறைந்த பகுதி. எடுத்து வைக்கின்ற ஒரு அடி பிசகினாலும் தரையில் உருண்டு விழவேண்டியதுதான். குளிர்காற்று உடம்பை ஊடறுத்துப்போகும். இதோ இப்பொழுது வீசுகின்றதே இதுபோன்ற குளிர் காற்றல்ல. மூச்சை உறையவைக்கின்ற குளிர்

காற்று. நுரையீரலில் நீர் கோத்திருந்தால் அந்த நீர் கட்டியாகி விடும். உள்ளே ரத்தக்கட்டியாகி சொல்லொணாத வேதனையைத் தரும். மூச்சு திணறும். மயக்கம் வரும். தலையில் பாரம் வைத்தது போல உணர்வு ஏற்படும். அந்தச் சுவாசம் உடம்புக்குப் பழக இரண்டு நாட்களாகும்.

அங்குள்ள சாதுக்கள் ஆட்டுப்பாலைக் காய்ச்சி தேன் கலந்து குடிக்கத் தருகிறார்கள். மிகச் சுவையாக இருக்கும். நாமும் கையில் உணவு எடுத்துப்போக வேண்டும். வறுத்த மாவும், சோளப் பொரியும், இனிப்பும் கலந்து மலையடிவாரத்திலேயே கொடுத்து விடுகிறார்கள். அதிகம் பசிப்பதில்லை. அதனால் சிறிதளவு உணவு போதும். தேன் கலந்த வறுத்த மாவு. உலர்ந்த பழங்கள். வாதுமைப் பருப்புகள். இவைகளை வைத்துக் கொண்டே ஜீவிக்கலாம். பழங்கள் இருபது, முப்பது நாட்களுக்குக் கூட அழுகாமல் அன்று பறித்த பழங்களாக இருக்கின்றன.

மூன்று நாள் பயணத்திற்குப் பிறகு மிகப்பெரிய ஏரி ஒன்றைப் பார்த்தோம் பத்துகோல் ஆழத்திற்கு நீர் தெளிவாகத் தெரிகிறது. அன்னப்பட்சிகளாக வந்து அந்த ஏரியில் தேவதைகள் குளிப்பார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. நூற்றுக்கணக்கில் அன்னப் பட்சியைப் பார்த்தேன். ஏரியினுடைய நடு மையத்தில் ஒரு ஆள் உயரமிருக்கும் அன்னப்பட்சிகள் நீந்துகின்றன. தேவதைகளல்லவா? நீந்தி அருகில் போக வேண்டுமென்று ஆசை. நான் உடைகளைந்து நீரில் இறங்கும்போது, ஒரு சாது.. இறந்து விடுவாய். இந்தக் குளுமை உன் உடம்பு தாங்காது என்று சொன்னார். அந்த அன்னப்பட்சிகளை நான் பார்க்க வேண்டுமென்று சொன்னேன். கைகூப்பி வேண்டு, அந்த அன்னப் பட்சிகள் உன் பக்கம் வரலாம் என்று அந்தச் சாது சொன்னார். நான் கை கூப்பி அன்னபட்சிகளிடம் வேண்டினேன். ஒரேயொரு அன்னப்பட்சி வேகமாகத் திரும்பி என்னை நோக்கி வந்து சிறகு விரித்து ஆடி, முன்னும் பின்னும் அலைந்து என்னை ஆசீர்வாதம் செய்து விட்டுப்போனது. கைக்கு எட்டுகிற தூரத்தில் அன்னப்பட்சி. எனக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. தொலைவில் இருக்கிறபோது அருகே போக வேண்டுமென்று நினைத்தேன். அருகே வந்து நின்ற போது அந்த வெண்மையில், அந்த ஒயிலில், அந்த அசைவில் சொக்கிப் போனேன். என் எதிரே சிறகுகளைப் படபடவென்று அடிக்கும்போது என் மீது நீர்த்துளிகள் விழுந்தன. அப்பொழுது உடம்பிலும், நெஞ்சிலும் ஏற்பட்ட மாற்றங்கள் என்னால் விவரிக்கவே முடியாது. இது ஆசீர்வாதம்... இது ஆசீர்வாதம்... இது ஆசீர்வாதம் என்று மனம்



அலறிற்று. இனம் புரியாத ஒரு சோகத்தில் அழுதது. அது சோகமா இல்லை ஆனந்தமா இரண்டும்தான். இரண்டும் இல்லையும் தான். கிட்டத்தட்ட அதுவொரு பைத்தியக்கார நிலை. பூமியிலிருந்து கட்டறுத்த நிலை. அங்குள்ள உணர்வுகள் எதுவும் நம்மைப் பாதிக்காது. வேறு ஒரு உணர்வுக்கு நாம் தள்ளப்பட்டு விடுகிறோம்.

காலையில் அன்னப்பட்சிகளோடு உட்கார்ந்திருந்த நான். இரவு நேரம் வேறு எவரேனும் வருவார்கள் என்று கண் கொட்டாமல் காத்திருந்தேன். பசியில்லை, தூக்கமில்லை, வலியில்லை. வேதனையில்லை உடம்பின் இருப்பே தெரியவில்லை. மனம் சுழன்று வெளியே போய் உடம்பு இருப்பதையும் பார்த்து சுற்றுப்புற சூழ்நிலையையும் பார்க்கிறது. பஞ்சவன் மாதேவி நான் சொல்வது புரிகிறதா.

மறுபடியும் சொல்கிறேன். மனம் சுழன்று வெளியே போய் என்னையும் பார்த்து, என்னைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளையும் பார்க்க ஆரம்பிக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அற்புதமான அனுபவம் அது. இரவு நேரம் நட்சத்திரங்கள் கோடிக்கணக்கில் வானத்தில் இருந்தன. தஞ்சையிலும், குடந்தையிலும், எசாளத்திலும், பிரம்மதேசத்திலும் நட்சத்திரங்கள் தெரியும். நிலவற்ற அமாவாசையின்போது இன்னும் துல்லியமாகத் தெரியும். ஆனால், அங்கே லட்சக் கணக்கில் நட்சத்திரங்கள் தெரிந்தால் இங்கு கோடிக்கணக்கில் தெரிகிறது. அங்கொன்றும் இங்கொன்றும் சில இடங்களில் வாரி இறைத்தது போல் நட்சத்திரங்கள் தஞ்சையில் தெரியுமல்லவா அப்படியல்ல, மிக நெருக்கமாக வைரங்களை வாரி இறைத்ததுபோல் ஜொலிப்போடு எல்லா நட்சத்திரங்களும் ஒரு சிலிர்ப்போடு தெரிகின்றன.

சரக்கென்று ஒரு விண்மீன் வேகமாக நீருக்குள் மூழ்கி சிறிது நேரம் காணாமல் போய் பிறகு வேகமாக மேலெழுந்து போகிறது. அந்தச் சாது அதுவொரு ரிஷி அல்லது கந்தர்வர் என்று சொன்னார். சரியாகப் பார்க்காது போனோமே இன்னும் நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஒன்றல்ல... இரண்டல்ல.. பஞ்சவன் மாதேவி நூற்றுக்கணக்கான விண்மீன்கள் அந்த நீருக்குள் மூழ்கியதும் பிறகு வெளிவந்ததும் உச்சிக்குப் போய் மறைந்ததும் கண்குளிரப் பார்த்தேன். மூச்சு நின்று போயிற்று பஞ்சவன்மாதேவி. அடைத்துப் போயிற்று. மூச்சுவிட மறந்து போனேன். இழுத்து மூச்சுவிட மறந்து போனேன். இழுத்த மூச்சு உள்ளேயே தங்கி மெல்லிய நூலாக வெளியே வந்து உள்ளுக்குள் ஒன்றுமே இல்லாமல் போய், போதும், இந்த உடம்பு போதும்

இந்த வாழ்க்கை போதும், இங்கு கற்றது போதும், விண்மீன்களோடு விண்மீனாய்க் கிளம்பி விடுவோம் என்று உடம்பு உதிர்க்கத் தயாரானபோது, அந்தச் சாது தோளில் கை வைத்து வேண்டாம் போ என்று சொன்னார்.

எனக்கு அழுகை வந்தது. நான் அழுதேன். கதறினேன். புலம்பினேன். என்னை ஒரு சிறைக்குள் பூட்டி விட்டாயே. என்னைக் காராகிரகத்தில் அடைத்து விட்டாயே என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதேன். எனக்கு விடுதலையே கிடையாதா என்று அழுதேன்.

கயிலாயம் வாரும் விடுதலை ஏற்படும் என்று உள்ளுக்குள் ஒரு குரல் கேட்டது. அசரீரி அல்ல. சப்தமல்ல. சப்தமில்லாத சப்தம். வெறும் எண்ணமல்ல மிகத் தெளிவாக வேறு யாரோ இட்ட கட்டளை. அந்த நீர்ப்பரப்பை வலம் வந்து கயிலாயம் நோக்கி நான்கு நாங்கள் நடந்தோம். கயிலாயத்தை நெருக்கும்போது கடும் பனிப்புயல், பனிப்புயல் என்ற வார்த்தையே உனக்குப் புரியவில்லை அல்லவா. நீ புயலைப் பார்த்திருக்கிறாய், சிலசமயம் மார்கழியில், தை மாதத்தில் திவலை திவலையாக வானத்திலிருந்து பனி இறங்குவதைப் பார்த்திருப்பாய் அல்லவா. அது போன்று பத்து மடங்கு கனமான பனி. கம்பளியிலிருந்து வெளியே கை நீட்டினால் உள்ளங்கையில் சில நொடிகளில் தேங்காய்த் துருவல் போல பனி நிற்கும். ரத்த ஓட்டத்தை உறைய வைத்து விடும். அதேநேரம் சுழற்றிச் சுழற்றி காற்று வெகுவேகமாக வீசும். அந்தச் சாது, பனிப்புயல் வருவதைத் தெரிந்து கொண்டு என்னை ஒரு குகைக்கு அழைத்துப் போனார். உள்ளே கரடிகள் இருந்தன. கைதட்டி அவைகளை வெளியே துரத்தினார்.

கரடிகள் வேகமாகக் கீழிறங்கி அருகிலேயே வேறு குகையில் போய் அமர்ந்து கொண்டன. அவை வேறு குகையில் அமர்ந்து கொண்டது என்று தெரிந்ததும் சாது என்னைக் குகைக்குள் அழைத்துப் போனார். செடிகளைப் பிடுங்கி வந்து சுத்தம் செய்தார். மரத்துண்டைச் சிரமப்பட்டு எடுத்து வந்து சிதைத்து நெருப்பு மூட்டி அவற்றைப் பற்ற வைத்தார். அரணிக்கட்டையைப் பத்துமுறை சுழற்றினால் நெருப்புப் பற்றிக் கொள்கிறதல்லவா அங்கு அது இரண்டு நாழிகை வேலையாக இருக்கிறது. குகையின் வாசலிலிருந்து நன்றாக உள்ளே தள்ளி அமர்ந்து கொண்டோம். பனிக்காற்று உள்ளே வந்து தீயை அணைக்காமல் இருக்க, அங்குள்ள கற்களால் சுவர் கட்டினோம் குகையின் வாசலில் அரைவட்டமாகப் பாறைகளால் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. கடைசி கல் வைத்ததும் 'ஊ..' என்று ஒரு ஊளைச்சத்தம்.



நான் திடுக்கிட்டு வெளியே எட்டிப் பார்த்தேன். வேண்டாம் காற்று உள்ளே வரப்போகிறது வந்து விடுங்கள் என்று சொன்னார்.

ஆஹா... ஊழித்தாண்டவம் என்பதை நான் பார்த்தேன். சடசடவென்று சத்தம். தடேர் தடேர் என்று பேரொலி, என்ன என்று கேட்டேன். காற்று கற்களைப் புரட்டி போடுகிறது என்று சொன்னார். அந்த நேரம் வெளியே இருந்தால் வெகுநிச்சயமாய் கல் தாக்குதலில் அடிபட்டு மரணமடைந்திருப்போம் இறைவனின் நடனத்தை, பிரளய காலத்து ஆட்டத்தை ஒருநாள் முழுவதும் ரசித்துப் பார்த்தேன். சுழற்காற்று சுழன்று சுழன்று பெரும் கோபுரமாக எழுந்து நிற்கிறது. எல்லாவற்றையும் சுழற்றி அடித்து வீசி சிதறடித்து மெல்ல அடங்கிற்று. மறுநாள் இந்த இடத்திலா பனிக்காற்று வீசியது என்று சொல்லும்படியாய் ஒரு அமைதி. காற்று சிலுசிலுப்பாய் போய்க் கொண்டிருக்கிறது. வீசிய பனி வெயில் பட்டு உருகி மலையின் எல்லாப் பக்கங்களிலும் வெள்ளியாய் நீர் உருகி ஓடி ஒன்றாகி சங்கமித்து ஒரு பெரிய ஆறாகி எகிறிக் குதித்து ஓடுகிறது. ஒரு நாள் முழுக்க நடந்தோம்.

நிமிர்ந்து பாருங்கள் என்று சாது சொன்னார். கீழே தரையைப் பார்த்துக் கொண்டே வந்த நான் சடக்கென்று நிமிர்ந்து பார்த்தேன்.

ஒரு பக்கம் பழுப்பு மலை. இன்னொரு பக்கம் கறுப்பு மலை. நடுவே வெள்ளை வெளேரென்று சிவலிங்கச் சொரூபமாய்க் கைலாயம், இன்னும் அந்தக் காட்சி நெஞ்சில் நிற்கிறது. நெஞ்சில் உறைந்து போய்க் கிடக்கிறது. கண்களைச் சிமிட்ட முடியவில்லை. எடுக்கவே முடியவில்லை. இரண்டு கையை விரித்து 'அப்பா... அப்பா...' என்று கூறினேன். அருகே போக வேண்டுமென்று வேகமாக நடந்தேன். சாதுவும் பின் தொடர்ந்தார். எது அருகே, எது தூரம் போய்க்கொண்டே இருக்க வேண்டியது தான். அது அருகே வரவே போவதில்லை என்ற அளவுக்குக் கால்கள் கனத்தன. எவ்வளவு தூரம் போவீர்கள். அவ்வளவுதான். அதற்கு அருகில் போக முடியாது. இங்கிருந்தே தரிசனம் செய்யுங்கள். இங்கே இரவு தங்கலாம் என்று ஒரு வெட்ட வெளியில் என்னை உட்கார வைத்தார். கம்பளியைப் போர்த்திக் கொண்டு மலையையே பார்த்துக்கொண்டு **ருத்ரம்** சொன்னேன். மெல்ல மெல்ல எனக்குத் தெரிந்த அத்தனை விஷயங்களையும் அங்கே அவர் முன்பு சமர்ப்பித்தேன். ஒரு அஸ்வமேத யாகம் செய்திருந்தால்கூட அம்மாதிரி ஒரு சந்தோஷம் கிடைத்திருக்காது. அங்கு என்ன சொன்னாலும்

அது உள்ளுக்குள் அத்தனை நிறைவைக் கொடுக்கிறது. இறைவன் அந்த வாக்கியங்களை ஏற்றுக் கொள்கிறான். அவராகவே அதில் இருக்கிறான் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. அவன் கொடுத்த வேதத்தை அவனுக்கே சமர்ப்பணம் செய்கின்ற ஒரு குழந்தையைப் போல குதூகலம் நான் உணர்ந்தேன்.

இருட்டிற்று, இருட்டிலும் அந்தப் வெள்ளிப் பனிமலை தெரிந்தது. மேலே நிலவு, கீழே வெள்ளிப் பனிமலை இரண்டு பக்கமும் நரநாராயணர்களாகப் பழுப்புநிற, கறுப்புநிற மலைகள், சூரியன் உதிக்கும் போது தூங்கி விடாதீர்கள். ஒரு அற்புதக் காட்சியைக் காண உங்களை உற்சாக நிலையில் வைத்துக் கொள்ளுங்கள் என்று அந்தச் சாது சொன்னார். மெல்ல கிழக்குப்பக்கம் வெளிச்சம் ஏற்பட்டது. வானம் வெளுத்ததும், கதிரவனைக் காணோம். வெளிச்சம் மட்டும் இருந்தது. ஒரு பக்கம் நிலவு, ஒரு பக்கம் சூரிய வெளிச்சம் என்ற ஒரு நிலையில் நான் கயிலாயத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சட்டென்று சொடுக்கும் நேரம் கயிலாயம் முழுவதும் பொன் அள்ளிக் கொட்டியதுபோல பொன் குழம்பை யாரோ வார்த்ததுபோல ஒரு நிறமாற்றம். நான் வாய்விட்டு அலறினேன். என்ன என்று தெரியாத வினோதக் கூச்சலிட்டேன். கிட்டத்தட்ட ஐம்பது நொடிகள் ஒரு தங்கக்குழம்பு தகதகப்பு. கயிலாயம் மின்னியது. அந்த இடம் முழுவதும் பிரகாசமாயிற்று. சூரியனின் முதல் கதிர் பட்டதும் அந்த வெள்ளி நிறமலை தங்கமாக மாறி மறுபடியும் அந்தத் தங்கம் மெல்ல மெல்ல மெல்லக் குறைந்து மீண்டும் வெள்ளியாக அதாவது சூரியன் முற்றிலும் வெளியே வர பளிச்சென்று தோன்ற நல்ல வெள்ளியாகத் தகதகத்து நிற்பதைப் பார்த்தேன். அதுதான் தரிசனம். இந்த ஊன் உடம்பு காணும் அற்புத தரிசனம் அதுதான். மாமிசமான இந்த உடம்பில் இருக்கும் மாமிசமான கண்களால் நான் பார்க்க முடிந்த இறைதரிசனம் அதுதான். இறை என்பது இதைக்காட்டிலும் பன்மடங்கு உயர்வானது. அதனுடைய ஒரு மெல்லிய கீற்று கயிலாய தரிசனமாக நமக்குக் கிடைத்திருக்கிறது. எனக்குத் திரும்ப மனமில்லை. திரும்ப முடியாது என்று மறுத்தேன். இன்னும் சில நாட்கள் தங்க வேண்டுமென்று சொன்னேன். சாது, உணவில்லை ஐயா, நாம் இன்னும் ஐந்து நாட்கள் நடந்தால்தான் உணவு இருக்கின்ற இடத்திற்குப் போகமுடியும். இல்லையெனில் வழியில் செத்துப்போவோம் என்று சொன்னார்.

அவ்வளவுதானா, நான் பாபியா இதற்குமேல் இந்தக் காட்சியைக் காட்ட மாட்டாயா என்று உள்ளுக்குள் அழுதேன்.



அந்த மலையை நோக்கி இறைஞ்சினேன். நீ அங்கு இருப்பது உண்மையாயின், நான் இங்கு சில நாட்கள் இருக்க வேண்டுமே என்றேன்.

என்ன ஆச்சரியம், அன்று மாலை நாற்பதுக்கும் மேற்பட்ட சாதுக்கள் சில பிரபுக்களோடும், வேலையாட்களோடும், வீரர்களோடும் கயிலாய தரிசனத்திற்கு வந்திருந்தார்கள். உறுதியான கோவேறு கழுதைகள், நல்ல பளுதூக்கும் எருமைகள். அவர்கள் ஓட்டி வந்திருந்தார்கள். அவர்களிடம் வேண்டிய மட்டும் உணவிருந்தது.

அடடே.. இந்த இடத்தின் அமைதி கெட்டுப் போகுமோ என்று எண்ணினேன். ஆனால், எவரும் பேசவில்லை. எந்தச் சல்லாபமும் இல்லை. அவரவர் தனித்தனியே போய் ஒரு கம்பளியில் சுற்றிக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். ஒவ்வொரு நாள் விடியலிலும் அந்த நிறமாற்றத்தை அந்தத் தங்கக் குழம்பு தகதகப்பை இறை அமர்ந்து பூமியை ஆசீர்வதிப்பதை நான் அனுபவித்தேன். வங்கத்தைச் சேர்ந்த ஒரு பிரபு அந்தக்காட்சியைக் காணும்போதே சுருண்டு விழுந்து மரணமடைந்தார். அவரை வேறு இடத்திற்கு அழைத்துப்போய் அமர்ந்த நிலையிலேயே அவரைச்சுற்றி கற்கள் வைத்து சமாதி எழுப்பிவிட்டு மறுபடியும் சிவதரிசனம் செய்தோம். ஒருவர் மரணமடைந்தால் ஒரு துக்கம் ஏற்படுமல்லவா... ஒரு குழப்பம் ஏற்படுமல்லவா.. அவன் கொடுத்து வைத்தவன். அவன் வெற்றி பெற்றுவிட்டான் என்ற எண்ணம்தான் எல்லோருக்கும் தோன்றியது. யாரும் அழவில்லை. எந்தத் துக்கமும் இல்லை. இது இயல்பு. இது நடக்கத்தானே வேண்டும் என்று ஒரு அமைதிதான் இருந்தது. இறந்தவரின் மனக்கேதம் தீர்க்க விளக்கேற்ற வேண்டுமல்லவா. நான் விளக்கேற்ற விரும்பினேன். விளக்குக்காகப் பட்டைக் கற்களைப் பொறுக்கி வந்து அடுக்கி சிறிய பெட்டி போல் ஒரு அமைப்பு செய்தேன். என்னிடமிருந்த பித்தளைச் சட்டியைத் துடைத்து அதற்குள் வைத்தேன். என்னுடைய நோக்கம் புரிந்து கொண்டு அங்குள்ள பிரபு ஒரு ஜாடியிலிருந்து விளக்கெண்ணெய் கொடுத்தார். என்னுடைய வேட்டியைக் கிழித்து மெல்லப் பின்னி முறுக்காக்கி அந்த விளக்கெண்ணெயில் தோய்த்துத் தயார் நிலையில் வைத்தேன். ஆனால், நெருப்பில்லை என்ன செய்வது. அந்தக் காற்று வீசலில் நெருப்பு உண்டாக்க முடியாது. காற்று வேகமாக இருப்பதால் குளிரும் இருப்பதால் அரணிக்கட்டை எத்தனைச் சுற்றினாலும்,

எத்தனை அசைத்தாலும் நெருப்பு வராது. மேலும் உலர்ந்த செடிகளும் இல்லை. எல்லாமும் ஈரமாக இருந்தன.

சட்டென்று காற்று நின்றது. பளிச்சென்று சூரியன் உதயமானான். மேகங்களிலிருந்து வந்து மெல்ல வெப்பத்தைப் பரப்பினான். அரணிக்கட்டை கடைந்ததும் சட்டென்று பற்றிக் கொண்டது. அரணிக்கட்டை பற்றிக் கொண்டதும் என் ஆடையைப் பற்றவைத்தேன். அந்த ஆடையிலிருந்து தீபத்திற்கு நெருப்பை மாற்றினேன். இப்போது என்னிடம் கோமணம் மட்டுமே இருந்தது. இடுப்புத்துண்டு மொத்தமும் எரிந்து போயிற்று. சட்டென்று இடுப்புத்துண்டு மீது அவரவர்கள் கைநீட்டி சூடுபடுத்திக் கொண்டார்கள். அந்தச் சூட்டைக் கன்னங்களில் தேய்த்துக் கொண்டார்கள். விளக்கு நன்கு எரிந்ததும் எல்லோரும் சுற்றி உட்கார்ந்து சிவநாமம் சொன்னோம். வேதம் சொல்வதைவிட, ருத்ரம் சொல்வதைவிட, அப்படி எளிமையாய் பாமரனாய் அமர்ந்து வெறுமே சிவநாமம் சொல்லிக் கொண்டிருப்பது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அன்று காலை ஒருமுறை சிவதரிசனம் செய்துவிட்டு தங்கத்தகதகப்பைப் பார்த்து நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து வணங்கி விட்டு, எல்லோரும் கம்பளி, சுற்றியபடி கீழிறங்கினோம். ஏறுவதைவிட இறங்குவதில் விரைவு அதிகமிருந்தது. பிரபுக்கள் எல்லா சாதுக்களையும் மிக நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள்.

அவன் என் சகோதரன். அவனுக்கு விளக்கு போட வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. உங்களுக்குத் தோன்றியது. எனவே விளக்கு போட்டு வந்த கைக்கு இந்தாருங்கள் ஒரு மோதிரம் என்று ஒரு பிரபு கொடுத்தார். நீலக்கல்லில் சிவலிங்கம் போல் செதுக்கிய மோதிரம் அது. அந்த நீலக்கல் காம்போஜத்திலிருந்து வந்ததாம். இவருக்குப் பரிசளிக்கப்பட்டதாம். இதோ அந்த மோதிரம். இந்த மோதிரம் மாட்டியபின் நோயே வராது என்று அவர் சொன்னார். அவர் சொன்னது உண்மைதான். இதை விரலில் மாட்டிய பிறகு எனக்கு நோய் வரவேயில்லை. மறுபடியும் கீழிறங்கிக் கங்கைக் கரை அடைந்து அங்குள்ள மனிதர்களைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் ஏற்பட்டது. இது மாயை. இது வெறும் தோற்றம். இது வெறும் கனவு. இது வெறும் அர்த்தமற்ற செய்கை என்பது புரிந்தது. என்னை அழைத்துப் போன சாதுவிடம் விடை பெற்றேன். அவர் என்னை வலம் வந்து நமஸ்கரித்தார். எதற்கு



என்று கேட்டேன். உங்களுடைய பிடிவாதத்தால் எனக்குப் பல நாட்கள் தரிசனம் கிடைத்தது. உம்முடைய பாடலால் முன்னிலும் அதிகத் தெளிவும் கிடைத்தது என்றார். இனி என்ன செய்யப் போகிறீர்கள். என்னோடு இருங்களேன் என்று கேட்டபோது சிரித்தார். எவரோடும் இருப்பது என் வேலையல்ல. என் வேலை வேறு என்று சொன்னார்.

என்ன வேலை என்று கேட்டேன். மறுபடியும் தகுதியான ஒருவரைச் சந்தித்தால் அவரோடு கயிலாயம் போய்விடுவாராம். அப்படி எவரும் வரவில்லையெனில் தான் மட்டும் தனியாகப் போவாராம். திரும்பத் திரும்பக் கயிலாயம் போவதும், கீழிறங்குவதும், மறுபடி மலையேறுவதும் தான் வாழ்க்கையாம். மீண்டும் அவர கைபிடித்து அழுதேன். என்ன அற்புதமான வாழ்க்கை. வேறு எந்தச் செயலும் இல்லை. மறுபடி மறுபடி யாரையேனும் அழைத்துக் கொண்டு போய் கயிலாயம் காட்டுவது. திரும்பக் கீழிறங்கி வந்து ஜனங்களோடு சில நாட்கள் இருப்பது. மறுபடியும் கயிலாயம் போவது. அப்படி எவரும் வரவில்லை என்றாலும் தானே தரிசனம் செய்வதற்காகக் கயிலாயம் போவது. சிரிப்பில்லை, கோபமில்லை, ஆத்திரமில்லை, பேச்சில்லை ஒரு பூ மாதிரி அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் பஞ்சவன்மாதேவி. அவருக்குப் பெயரில்லை. அதுதான் மிகப்பெரிய விசித்திரம். உங்கள் பெயரென்ன என்று கேட்ட போது, தெரியாது என்று சொன்னார். நான் சற்று முறைப்பாக ஏன் கேலி செய்கிறீர்கள் என்று கேட்டேன். உண்மையிலேயே என் பெயர் எனக்கு மறந்துவிட்டது என்று சொன்னார். எனக்குப் புரிந்தது. வெறுமே கயிலாயத்தை தரிசித்துக் கொண்டிருப்பவருக்கு என்ன பெயர் வேண்டும். ஏன் பெயர் வேண்டும்."

பஞ்சவன்மாதேவி கண்கள் குளம் கட்டின. கண்ணீர் வழிந்தது.

அவள் விசும்பினாள். கைகூப்பி அவரைப் பார்த்து விக்கி விக்கி அழுதாள்.

ஈசான சிவபண்டிதரும் கண் கலங்கினார்.

"ஈசனுடைய திருவிளையாட்டைப் பார். நான் இந்த விஷயத்தை இராஜராஜனிடம் சொல்ல வேண்டும் என்று வந்தேன். ஆனால், இராஜராஜனைவிடத் தகுதியான ஒரு நபரிடம் நான் என் அனுபவத்தைச் சொல்லிவிட்டேன். இந்த அனுபவம் சொல்கின்ற நேரத்தைப் பார்த்தாயா. இதைப்

பகல்பொழுதில் சொல்ல முடியுமா. சொல்லியிருந்தால் கவனித்திருப்பாயா. இதை அரண்மனைக்குள் பேசியிருக்க முடியுமா. பேசியிருந்தால் செவிமடுத்திருப்பாயா. இல்லை இந்த விஷயம் சொல்ல இந்த நேரமும், இந்த இடமும்தான் சரி. இதை இறைவன் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான். பஞ்சவன்மாதேவி நீ மிகுந்த புண்ணியம் செய்தவளடி. நீ வாழ்வாங்கு வாழ்வாய். சரித்திரத்தில் அசையாத இடம் பெறுவாய். தாயே.. என் தாயே பராசக்தி. இந்தச் சோழ சாம்ராஜ்ஜியத்தை இராஜராஜன் ஆட்சி செய்து கொண்டிருந்தாலும் அந்த இராஜராஜனை நீ ஆட்சி செய்து கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். உன்னை இங்கு சந்திப்பேன் என்றோ, இப்படிச் சொல்வேன் என்றோ நான் நினைக்கவேயில்லை. மடைதிறந்த வெள்ளம்போல என் அனுபவங்களை உன் முன்னே கொட்டிவிட்டேன். இது இறைவன் கட்டளை.

பஞ்சவன்மாதேவி நான் ஏன் சொன்னேன் தெரியுமா. இந்த அனுபவம் இந்த இறை அனுபவம் தென் திசையில் உள்ளவருக்கும் வேண்டும். வங்கத்தில் உள்ளவர்கள் கும்பல் கும்பலாகக் கைலாய தரிசனத்திற்குப் போவார்கள். அயோத்தியில் உள்ளவர்களும், பாடலிபுரத்தில் உள்ளவர்களும் படைகளோடு மலை ஏறி தரிசிக்கிறார்கள். கும்பல் கும்பலாய் சாதுக்கள் வருகிறார்கள். ஆனால், தெற்கே இருக்கின்ற நல்லவர்களுக்கு இந்தத் தரிசனம், எளிதா?

இல்லை, மிகக்கடினம். அடர்ந்த காடுகளும், பெரிய மணல்வெளிகளும் உள்ள கீழைச்சாளுக்கியம் போவதே கடினம்.

இராஜராஜன் கோவில் விமானத்தை உயரமாகக் கட்டுகிறான் என்று கேள்விப்பட்டேன். உடனே எனக்குக் கைலாசபர்வதம் தான் ஞாபகம் வந்தது. ஏழு பனை உயரம் என்று கேள்விப்பட்டேன். வேறு எந்தக் கோபுரமும் கட்டாது திறந்த வெளியில் மிகப்பெரிய ஒரு விமானம் வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. வடக்கே இருக்கின்ற கயிலாயத்தில் அந்தச் சில நொடிகள் பிரகாசிக்கின்ற தன்மையை இந்த விமானத்தில் காட்ட வேண்டும். பஞ்சவன்மாதேவி இந்த விமானம் முழுவதும் இராஜராஜரைப் பொன் வேயச் சொல்ல வேண்டும். இந்த விமானம் முழுவதும் தங்கத்தால் இழைக்கப்பட வேண்டும். அங்கு சில நொடிகளே காண்பித்த அந்த இறை தரிசனம் இங்கு நிரந்தரமாய் வெயிலில் நிலவொளியில், இருளில், பகலில் தெரிய வேண்டும். அந்த ஏழுபனை உயரமுள்ள தங்க விமானம் இராஜராஜர் செய்ய வேண்டும். இராஜராஜரால் செய்ய முடியும்.



இராஜராஜரால் மட்டுமே செய்ய முடியும். இதைச் சொல்லத் தான் இதற்கு அவரை உற்சாகப்படுத்தத்தான் இங்கு வந்தேன். யாரை உற்சாகப்படுத்த வேண்டுமோ அவர் முன்னே நான் பேசிவிட்டேன்.

பஞ்சவன்மாதேவி நீ இயக்குகின்ற அரசர் இராஜராஜர். இப்போது உன்னிடம் சொன்னது உன் அடிமனதில் வைத்து இராஜராஜருக்கு இதைச் சொல்லி அவரை அந்த விமானம் முழுவதும் பொன் வேய்விக்கச் செய்ய வேண்டும். இறையருளால், உன்தூண்டுதலால் இது நடக்கும். இது தட்சிணமேரு என்று பெயர் பெற வேண்டும். இங்குள்ள அத்தனை பேருக்கும் இறை தரிசனத்தை இந்த விமானம் ஏற்படுத்த வேண்டும். அது என் விருப்பம், இதுதான் என் பயணத்தின் நோக்கம் அட. நான் எதற்குத் தஞ்சை வர வேண்டும். இப்படியே திரும்பி விடலாம். ஆனால் இராஜராஜரைப் பார்த்து அணைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது கிளம்பலாம் வா."

ஈசான சிவபண்டிதர் எழுந்து நின்றார். ஈசான சிவபண்டிதரைப் பஞ்சவன்மாதேவி வலம் வந்தாள். விழுந்து வணங்கினாள். மறுபடியும் அவள் நெற்றியில் திருநீறு இடப்பட்டது.

"இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டாயே. உனக்கென்று தருகிறேன்" என்று தன் சீடரைக் கூப்பிட்டார்.

அவன் வந்து நிற்க பாணலிங்கம் எங்கேயிருக்கிறது என்று கேட்டார்.

"உங்களுடைய பல்லக்கில்தான், உங்களுடைய முதுகுக்குப் பின்னால்தான்'' என்று சொல்ல பல்லக்கின் திண்டுகள் அகற்றப்பட்டு, அங்கு உருளையாக வைக்கப்பட்டிருந்த இரண்டு உள்ளங்கை நீள கருங்கல் ஒன்று அவருக்கு எடுத்துத் தரப்பட்டது. அவர் வாங்கி நெஞ்சில் வைத்துக் கொண்டார். பிறகு சிரசில் வைத்துக் கொண்டார்.

"அம்மா. இது கைலாய தரிசனம் முடித்துவிட்டுக் கிளம்பும்போது 'உமது அடையாளமாய் எமக்கு என்ன கொடுப்பீர்?' என்று கேட்கும் போது கீழே மெல்லியதாய் ஏதோ ஒன்று நகர்ந்தது. கீழே பார்க்க இந்தக்கல் மெல்ல உருண்டு என் காலில் ஒரு சின்ன அசைவாக வந்து நின்றது. அந்தக் கல்லை அடடே.. பாணலிங்கம் என்று சுற்றியுள்ளோர் கூவினார்கள். அப்பொழுதுதான் அதுபோன்ற கல் வேறெங்கிலும் இல்லை.

அது என் காலடியில் மட்டுமே கிடந்திருக்கிறது என்று தெரிய வந்தது. இதோ அந்த பாணலிங்கத்தை உனக்குத் தருகிறேன். வைத்து பூஜை செய். தினம், தினம் கயிலாயத்தில் இறைவனை தரிசனம் செய்த கல்லம்மா." என்று; கொடுத்தார்.

அவள் கைநீட்டி வாங்கிக் கொண்டாள்.

சில்லென்று கல் இருந்தது. நெஞ்சில் வைத்துக் கொண்டாள். உடம்பெல்லாம் அந்தக் குளுமை பரவியது. சிரசில் வைத்துக் கொண்டாள். நெற்றியிலிருந்த ஜுரவேகம் உடனே தணிந்தது. உள்ளுக்குள் ஏதோ இறங்குவது போல் இருந்தது. மெல்ல அணைத்துக் கொண்டாள். விரல் சொடுக்கினாள். குதிரை அருகே வந்தது. இடக்கையில் குழந்தைபோல அந்த பாணலிங்கத்தை ஏந்தியவாறு அவள் சுமை தாங்கியின் மீது ஏறி நின்றாள். குதிரை அருகேவர அதன்மீது தாவி ஏறினாள்.

"வருகிறேன் ஐயா. தஞ்சைக்குப் போய் உங்கள் வருகையைக் குறித்து ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னாள். மெல்ல குதிரையை ஓட்டினாள்.

அவள் கனத்த மார்பகத்தை ஒட்டியவாறு அந்தக்கல் அவள் கையில் குழந்தைபோல் கிடந்தது. மூப்பே இல்லாத வயதே தெரியாத இறைவன் குழந்தைபோல இங்கே இருக்கிறான் என்று தோன்றியது.

தஞ்சைக்குள் நுழைந்து ஈசான சிவபண்டிதர் வருகிறார் என்று விவரம் சொன்னாள். கோட்டை வாசலில் கூடுதல் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. தீப்பந்தத்தை ஏற்றிக் கொண்டு ஐந்து குதிரை வீரர்கள் ஈசான சிவபண்டிதர் இருக்கும் திசைநோக்கி குதிரைகளைச் செலுத்தினார்கள். கோட்டைக்குள் இருக்கின்ற அந்தணர்களுக்கும் சொல்லப்பட்டது.

தஞ்சை நகரத்து எல்லையில் அந்தணர்கள் ஒன்று கூடினார்கள். ஈசான சிவபண்டிதரைத் தங்களுடைய குடியிருப்புகளுக்கு அழைத்துப் போக வேண்டுமென்று கிசுகிசுப்பாய் பேசிக் கொண்டார்கள்.

ஈசான சிவபண்டிதர் கோட்டையின் அருகே வரும் போது அவரைச் சந்தித்து முகமன் கூறி உரத்த குரலில் அவரைக் கொண்டாடி வரவேற்றார்கள். கிசுகிசுப்பாய் தங்கள் இல்லங்களுக்கு வந்து தங்கிவிடுவது நல்லது என்று சொன்னார்கள். ஈசான சிவபண்டிதர் சரியென்று சொன்னார்.



அந்தச் சரியென்ற வார்த்தையில் சந்தோஷமுமில்லை. துக்கமும் இல்லை. ஏதோ நடப்பது நடக்கட்டும் என்கிற மாதிரி ஒரு அமைதி இருந்தது.

ஈசான சிவபண்டிதர் கோட்டைக்கு வெளியே இருக்கின்ற அந்தணக் குடியிருப்புகளுக்குப் போய் விட்டார் என்று பஞ்சவன்மாதேவிக்குச் சொல்லப் பட்டது. அவள் சரியென்று தலையசைத்தாள்.

தன்னுடைய பூஜையறையில் அந்த பாணலிங்கத்தை நிறுத்தி வைத்தாள். மெல்ல மெல்ல அதைத் தடவிக் கொடுத்தாள்.

இந்தக் கல்லுக்கும் தனக்கும் சம்பந்தம் இருக்கிறது. பஞ்சவன்மாதேவி யார் என்று கேட்டால் இந்தக் கல்லைக் காட்டுவார்கள் என்று நினைத்துக் கொண்டாள்.

ஈசான சிவபண்டிதர் உள்ளே நுழைந்த அந்த வேளை, பஞ்சவன்மாதேவி அந்த பாணலிங்கத்தைத் தன்னுடைய உருவம் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரம், நித்த வினோதப் பெருந்தச்சன் நான்கு விரல் அகலம் ஒரு பனை உயரம் என்ற கணக்கில் மெழுகால் ஒரு விமானம் பிசைந்து பிசைந்து செய்தான். இலத்திசடையன் தீப்பந்த வெளிச்சத்தில் அந்த மெழுகு இறுகி பொம்மையாவதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். மெழுகு இளகாதிருக்க பானையிலிருந்து தண்ணீர் மொண்டு அதன்மீது ஊற்றினான். உச்சியில் உருண்டைக்கல் வைக்கப் பட்டது. பிறகு கலசம் அதன்மீது வைக்கப்பட்டது. உருண்டைக் கல்லைச் சுற்றியுள்ள தளத்தில் அசையாது இருக்க நந்திகள் போல இரு பொம்மைகள் வைக்கப் பட்டன.

முன்பக்கம் வேதபாடசாலைக்கும் நிருத்திய பள்ளிக்கும் எவ்வளவு தூரம் இடம் ஒதுக்க வேண்டும் என்று மெல்லிய மூங்கில் குச்சியால் நித்தவினோதப் பெருந்தச்சன் அடையாளம் காட்டினான். இலத்தி புரிந்தது என்று சொன்னான். இருவரும் அதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெழுகு வைத்து விட்டோம். கருங்கல் அல்லவா செய்ய வேண்டும். சாரம் கட்டியா இந்த உருளைக்கல்லை ஏற்ற முடியும். மண்மேடு கட்டி உருட்டி ஏற்றினால் கல் போய்விடலாம், தவறினால் பலபேர் அல்லவா மரணமடைவார்கள். தவறாது என்று பெருந்தச்சர் சொல்லுகிறார்.

மண்மீது சவுக்குக் கட்டைகளைக் குறுக்கே போட்டு அந்தச் சவுக்குக் கட்டைகளின் மீது எண்ணெய் தடவி இந்தப் பாறைக் கற்களை உருட்டிக் கொண்டு போய் விடலாம் என்கிறார். ஒருவேளை ஏதேனும் சவுக்குக் கட்டை நசுங்கினால் அந்தக் கட்டையை நீக்கிவிட்டு வேறு கட்டை வைத்து விடலாம் என்கிறார். கட்டை அடிக்க மரத்தச்சர்களை வைக்க வேண்டுமென்கிறார். நெருக்கமாகக் கட்டைகளை வைத்துவிட்டால் ஒரு பொழுதும் எதுவும் சரியாது. ஆப்பு கொடுத்து சரியும் பாறையை நிறுத்திவிடலாம் என்கிறார். ஒரு அளவுவரை இருக்க முடியும். செங்குத்தாகி விட்டால் மிகுந்த வலுவாகிவிடும். யானை தள்ளுமா. யானை சரிந்து பின்னால் விழுந்தால் என்ன கதியாவது. மாடு ஏறுமா... பயப்படும். ஆக மனிதர்களால் மட்டுமே முட்டு கொடுத்து, முட்டு கொடுத்து எப்படி முடியும். எனக்கு, நீண்ட பாதைகட்டி அதில் பாறையை ஏற்றுகின்ற வித்தை சரியாக வரும் என்று தோன்றவில்லை. எனவே நான் வேறுவிதமாகச் சிந்திக்கிறேன். நான்கு ஐந்து நாட்களாக ஓடிக்கொண்டிருந்த எண்ணத்தை இப்பொழுது செயல்படுத்துகிறேன். நான் செய்வது சரியா என்று விலகி நின்றுபார். நடுவே எதுவும் பேசாதே என்று சொல்லி அருகிலுள்ள இளஞ்சிற்பிகளைக் களிமண் பிசையச் சொன்னான். அவர்கள் களிமண் பிசையும் வரை விமானத்தையே பார்த்து குச்சிகளை உடைத்து உடைத்து பல்வேறு அளவுகள் எடுத்துக் கொண்டான்.

❑ ❑ ❑

“உமையாள்..” குரல் கேட்டதும் அந்தப் பெண் திரும்பினாள். குளக்கரையின்மீது மீன்களுக்கு வெல்லம் உதிர்த்துப் போட்டுக் கொண்டிருந்தவள் எழுந்து நின்றாள்.

மீன்கள் துள்ளிக் குதித்தன. குளத்தின் நிறமே மாறுவது போல் கறுப்பாய் அடர்த்தியாய் அவள் நின்ற இடத்தைச் சூழ்ந்து கொண்டன. உதடுகளை வேகமாக அசைத்து இன்னும் இன்னும் என்பதுபோல தவித்தன. வாழைச் சருகில் வைத்திருந்த வெல்லம் மொத்தமும் கசக்கி, பொடி செய்து அவள் சற்று தொலைவே வெல்லத்தை வீசியெறிந்தாள்.

நெருங்கிய வட்டம் வினாடி நேரத்தில் சட்டென்று விலகியது. வெல்லம் விழுந்த இடத்தை நோக்கி மீன்கள் பாய்ந்தன. அவள் குனிந்து குளக்கரையில் கைகழுவிக் கொண்டாள். அவளை நோக்கியும் இரண்டு மீன்கள் வந்து மெல்ல அவள் விரல்களைத் தொட்டன. அவள் உதறி எழுந்தாள்.



'ஏய்.. என்ன கடிக்கிறாய்' என்று மீன்களோடு சண்டையிட்டாள். எழுந்து நின்றாள். மெல்லப் படியேறி நிதானமாகக் குளக்கரையின் மேற்பகுதிக்கு வந்து நின்றாள். அங்கு அம்மாவும், சித்தியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவள் வந்த மாட்டுவண்டி அங்கு சாய்த்து வைக்கப்பட்டு, எருதைப் புல்வெளியில் மேயவிட்டிருந்தார்கள். அதேபோல வேறு சில வண்டிகள் தரையிறக்கப்பட்டு மாடுகளுக்கு நீர் காட்டப் பட்டது.

நேற்று முன்தினம் திருவாரூரிலிருந்து கிளம்பி இன்னும் தஞ்சை வரவில்லை. அங்கங்கே பல ஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு, பல ஊர் மக்களைப் பார்த்துக் கொண்டு, வெகு நிதானமாக அவர்கள் தஞ்சையை நோக்கிப் பயணப்பட்டார்கள். நன்கு பெரிய குளக்கரை தென்பட்டால் இறங்கி இளைப்பாறினார்கள். மாட்டுவண்டி ஆடி ஆடி முதுகெல்லாம் வலித்தது. இந்த ஆட்டத்தினாலேயே இடைவிடாது ஒரு தூக்கம், சோர்வு இருந்தது. எத்தனை முறை முகம் கழுவினாலும், எவ்வளவு ஆழ்ந்து சுவாசித்தாலும், அந்தச் சோர்வு போகவில்லை.

உமையாள் ஒரு தேவரடியார். திருவாரூர் தியாகராஜப் பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டவள். அவருக்குப் பணி செய்யவே பொட்டுக் கட்டிக் கொண்டவள். ஒரு குங்குமப் பொட்டு அளவுக்கு தங்கக்குமிழ் ஒன்றைக் குழல் குண்டோடு சேர்த்து மஞ்சள் கயிற்றில் கோர்த்து கழுத்தில் கட்டிக் கொண்டு விட்டால் அவள் பதியிலார். இறைவனுக்கே பணி செய்கின்ற தேவரடியார். இறைவன் அனுமதியின்றி வேறு எங்கும் போகக்கூடாது என்ற நியதி உடையவள். ஆனால், இறைவனா வந்து அனுமதி தருவார். அந்தக் கிராமத்துச் சபையைக் கேட்க வேண்டும். அந்த கிராமத்துச் சபை நீ வெளியூருக்குப் போகலாம், போகக்கூடாது என்று சொல்லும் எங்கு நடனமாடலாம். நடனமாடக்கூடாது என்றும் கட்டளை போடும்.

சில பதியிலாரைச் சில கோவில் மூலபருடச் சபை சிறைபிடித்ததுபோல வைத்திருக்கும். அந்த மூலபருடச் சபை தான் ஒரு ஊரில் மிக்க பலம் வாய்ந்த சபை. அதிலிருக்கும் அங்கத்தினர்கள், பல்வேறு உரிமைகள் பெற்றவர்கள். கிட்டத் தட்ட ஒரு அரசரைப் போல அந்த ஊரை ஆட்சி செய்பவர்கள். கோவிலை மையமாகக் கொண்டு, கோவிலை இடமாகக் கொண்டு அந் மூலபருடச் சபை வாரத்திற்கு ஒருமுறை கூடும். கோவில் நிர்வாகம் பற்றியும் ஊர் நிர்வாகம் பற்றியும் பேசும்.

சிறுசிறு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் ஊரின் பாதுகாப்பு குறித்து கவலைப்படும். அறுவடை குறித்து விசாரிக்கும். ஊருக்குப் பொதுவான மரம் வெட்டப்பட்டால் அந்த மரத்தை ஏலம்போட்டு காசு வசூலிக்கும். கோயில் நிலங்களைப் பாதுகாக்கும். கோவிலுக்குப் புதிய நகைகள் செய்யும். பழைய நகைகளைச் சரி செய்யும். ஏழு எட்டு பேர் கூடிய அந்தச் சபை அரசருக்கு மட்டுமே கட்டுப்பட்டது. ஊர் அந்தச் சபைக்குக் கட்டுப்பட வேண்டும்.

திருவாரூர் மூலபருடச்சபை உமையாளை ஊரைவிட்டு அவர்கள் அனுமதியின்றி போகவே கூடாது என்று அவள் பொட்டு கட்டியதும் முதல் கட்டளையிட்டது. உமையாளின் அம்மா சுந்தரி சரியென்று தலையசைத்தாள். சரி என்பதைக்கூட உமையாள் சொல்லக்கூடாது. சொன்னால் என்னடி மதர்ப்பு என்று திட்டுவார்கள். உமையாள் நாணியபடியும், வெட்கப்பட்டபடியும், அச்சப்பட்டபடியும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஐயோ பாவம் அவளுக்கு என்ன தெரியும் என்று ஆதரவாகப் பேசுவார்கள். அவள் அம்மாவும் மிரண்டது போலவே நான்கு புறமும் பார்த்து என்ன.. என்ன.. என்று கேட்டுக் கொள்ள வேண்டும். திருவாரூர் மூலபருடச் சபையில் அந்தணர்கள் அதிகம் இருந்தார்கள். ஐந்து அந்தணர்கள் தவிர ஒரு நிலக்கிழாரும், ஒரு மறவரும், ஒரு வணிகரும் அங்கம் வகித்தார்கள். அந்த அந்தணர்கள் தங்களுக்குள் ரகசியம் பேசவேண்டியிருப்பின் அடிக்குரலில் சமஸ்கிருதத்தில் பேசினார்கள். அவர்கள் பேசுகின்ற வேகமான சமஸ்கிருதம் வேறு எவருக்கும் புரியாததால் வெறுமே விழித்துக் கொண்டிருப்பார்கள்.

வீட்டு விலக்கு நாட்கள் தவிர தினந்தோறும் கோவிலில் நடனமாட வேண்டுமென்றும், சபை கூடிய பிறகே நடனம் துவங்க வேண்டுமென்றும், மூலபருடச் சபை இரண்டாவது கட்டளை போட்டது. நான் வாழ்க்கைப்பட்டது சபைக்கா அல்லது சிவனுக்கா என்ற சந்தேகம் உமையாளுக்கு வந்தது.

எங்களுக்குச் சொந்த ஊர் குடந்தை. குடந்தையில் பொட்டு கட்டிக்கொண்டு, ஆட்டத்தில் நன்கு தேறி, **தலைக்கோலி** என்ற பட்டம் பெற்றால், நான் குலதெய்வத்திடம் வருவதாக வேண்டியிருக்கிறேன். எனவே ஒருமுறை குடந்தைபோக அனுமதிவேண்டும் என்று அம்மா கேட்டபோது சபை மறுத்துவிட்டது.



இதற்காகக் குடந்தை போக வேண்டாம். குடந்தை போகும்போது இந்த நேர்த்திக்கடனைப் பூர்த்தி செய்து கொள். உன் ஆயுளில் குடந்தைக்குப் போகாமலா இருந்துவிடப் போகிறாய் என்று சபை கூறிச் சிரித்தது. அதனை எதிர்த்து சுந்தரியால் ஒன்றும் பேசமுடியவில்லை. உமையாள் வந்தால் சுந்தரி ஆட்டத்தை நிறுத்திவிடக்கூடாது. தாயும், மகளும் சேர்ந்து ஆட வேண்டும். மகள் இல்லாத நேரத்தில் தாய் ஆட வேண்டும் என்று கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. கோவிலைச் சுத்தம் செய்து மெழுகிக் கோலமிட்டு பூக்கள் தொடுக்க வேண்டிய பணிகள் இருந்தாலும் சுந்தரியும், உமையாளும் இவைகளைச் செய்ய வேண்டாம். மற்ற தேவரடியார்கள் செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டது. விசேஷ நாட்களில் கூடுதலாக நடனம் ஆட வேண்டும் என்றும், கோவிலுக்குக் கூட்டம் கூடும் வண்ணம் சிருங்காரமாய் அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்றும் அடிக்குரலில் போதித்தார்கள். கோவிலுக்கு வருமானம் வரவேண்டுமே என்றார்கள்.

சதுரமான நடனக்கூடத்தில் வெளியூர் மக்களுக்கென்று ஒரு இடம் ஒதுக்கினார்கள். அந்த இடத்தில் எப்போதும் மக்கள் கூட்டம் இருந்தது. உமையாளைப் பார்க்க பக்கத்து கிராமங்களிலிருந்து வண்டி கட்டிக் கொண்டு ஆண்களும், பெண்களும் வந்து கொண்டேயிருந்தார்கள். இன்று உமையாள் நடனம் உண்டா என்று கேட்டார்கள். இல்லை மூன்று நாளாகும் என்று சொன்னால் காத்திருந்து பார்த்துவிட்டுப் போனார்கள். உமையாள் சித்திக்கு அருகே போய் அமர்ந்து அவள் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள். அம்மாவைவிட சித்தி மீது அவளுக்குப் பிரியம் அதிகம். சித்தியும் அவளும் ஒரு தோழியைப் போல நெருங்கிப் பழகினார்கள். சித்தி ஆதரவாக அவளை அணைத்துக் கொண்டாள். உச்சி மோந்தாள்.

“அடி சுந்தரி. உன்னுடைய அழகும் அந்தச் சேரதேசத்து நம்பூரிதியின் நிறமுமாய் இவள் பேரழகியாய்த் திகழ்கிறாள். நடனம் கற்றுக்கொள்கிற நறுவிசும் வந்துவிட்டது.”

“ஹா... நன்றாக வந்தது.”

சித்தியின் குரலுக்கு அம்மா எதிரொலித்தாள்.

“முழங்காலில் சுள்சுள்ளென்றல்லவா போட்டுச் சொல்லிக் கொடுத்தேன். இல்லையென்றால் வந்திருக்குமா. அம்மா அடித்து நிமிர்த்துகிறாளே என்று என்மீது பெரிய கோபம். ஆனால், அந்த அடியல்லவா இவளை ஆடவைத்தது, அந்த ஆட்டமல்லவா

இப்பொழுது பேரும் புகழும் கொடுக்க வைத்தது. தலை வாரிப் பூ வேலை செய்து கொள்ளவும், கை கால்கள் பிடித்துவிடவும் ஆள் வேண்டும் என்று சொல்லி அதற்குத் தனியாகக் கோவிலி லிருந்து காசு வாங்கிய முதல் தேவரடியார் இவளாகத்தான் இருக்கும். இவள் அழகில் சொக்கிப் போய் இருக்கிறார்கள் எல்லா வயது ஆண்களும் இவளைக் கண்டால் பித்துப் பிடித்தது போல் ஆகிவிடுகிறார்கள். ஆண்கள் மட்டும் தானா. பெண்களுக் கும் இவள் அழகு வியப்புதான். ஏன் எனக்கே கூட வியப்புதான். ஏதோ ஒரு தேவதை வழி தவறி பூமிக்கு வந்துவிட்டது. வழி தவறி இங்கே வளர்ந்து கொண்டிருக்கிறது என்றுதான் நினைக்கிறேனே தவிர, இவளைச் சாதாரணமானவளாக நான் நினைக்கவில்லை. நெஞ்சு விம்மி, இடுப்பு குழைய, பிருஷ்டம் அசைய அவள் அடியெடுத்து நகரும் பொழுது, சுற்று முற்றும் பார்த்து சிரிக்கும்போது, உலகமே சொக்கிப் போகிறது."

அதெல்லாம் சரிதான். சித்தி சோம்பல முறித்தாள்.

"இவள் எத்தனை நாள் ஆடுவாள். ஆட்டத்திற்குப் பிறகு என்ன ஆவாள் என்ற கவலை எனக்கு இருக்கிறது."

"இப்போது பதினாறு வயதுதானே. இன்னும் பதினாறு வருடங்கள் ஆடலாம். கவலையே இல்லை. பதினாறு வயதிலேயே தலைக்கோலி என்ற பட்டம் வாங்கி விட்டாள். தெளிவாகவும், குழைவாகவும் ஆட அவளுக்கு நன்கு தெரிந்து விட்டது. அபிநயங்கள் சிறப்பாக இருக்கின்றன. கண்களில் பாவங்கள் மாறிமாறி விளையாடுகின்றன. இவள் உதடு சுழித்தால் உயிரே பறித்துக் கொண்டு போவதுபோல இளைஞர்கள் துடித்துப் போகிறார்கள். இவள் வாய்விட்டுச் சிரித்தால் சுற்றியுள்ள அத்தனை ஜீவராசிகளும் சிரிக்கின்றன. இவள் பெண்ணா.. இல்லை சபிக்கப்பட்டு பூமிக்கு வந்த தேவதையா என்று திகைத்துப் போய் பல சமயம் உட்கார்ந்திருக்கிறேன்." சித்தியும், அம்மாவும் மாறிமாறிப் பேசினார்கள்.

அவள் கேட்டுக்கொண்டு வெறுமே உட்கார்ந்திருந்தாள். இம்மாதிரி பல புகழ்ச்சிகளை அவள் முகத்திற்கு நேரே கேட்டிருக்கிறாள். ஹா... என்று வாலிபர்கள் வியப்பதைப் பார்த்திருக்கிறாள். **என்ன விலை** என்று எடுத்தவுடனேயே பிரபுக்கள் அம்மாவிடம் பேசுவதையும் கவனித்திருக்கிறாள்.

ஆனால், திருவாரூர் மூலபருடச் சபை அவளுக்கு மிகப்பாதுகாப்பாக இருந்தது. எந்த ஊரிலிருந்து எந்தப் பிரபு வந்து அவளை விசாரித்தாலும், ஏன்.. எதற்கு விசாரிக்கிறீர்கள்



என்று மிரட்டியது. அவளை எவர் தொந்திரவு செய்தாலும், இந்த மூலபருடச் சபை நிறுத்தி விசாரிக்கும் என்று மிரட்டியது. அவளைச் சுற்றி நின்று கவசம் போல் காத்தது. ஆனால், அந்தக் கவசமே மூச்சுத் திணறவும் வைத்தது. இந்தக் கூத்து எல்லா வற்றிற்கும் முடிவு கட்டியது போல தஞ்சை அரண்மனையி லிருந்து ஓலை வந்தது. உடனடியாய்த் திருவாரூரில் இருக்கின்ற மிகச்சிறந்த தலைக்கோலியான, உமையாள் தஞ்சாவூர் கோயிலைச் சேர்ந்த தளிச்சேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், அங்கே கோயில் பணியில் தன்னை அவள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அந்த ஓலையில் சொல்லப் பட்டிருந்தது. திருவாரூரிலுள்ள எல்லாவிதமான பொறுப்பு களிலிருந்தும் அவள் விடுவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று மூலபருடச் சபைக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

"நாங்கள் திருவாரூர் தியாகேசருக்கு வாழ்க்கைப் பட்டவர்கள். எல்லை தாண்டலாமா."

அம்மா கேட்டாள்.

"சக்ரவர்த்தியினுடைய ஓலை வந்திருக்கிறது. இதென்ன கேள்வி. இந்தப் புவனம் முழுவதும் அவர் சொந்தம். அவர் எங்கே வரச்சொல்கிறாரோ அந்த இடத்திற்குப் போக வேண்டியது உங்கள் கடமை."

"அரசர் முக்கியமா, ஆண்டவன் முக்கியமா."

மறுபடியும் வேண்டுமென்றே சுந்தரி கேட்டாள்.

"அரசர் விஷ்ணு அம்சம். அரசர்தான் ஆண்டவன்." என்று மூலபருடச் சபை தெளிவாகக் கூறியது.

"அப்பொழுது மூலபருடச் சபை எதற்கு."

"சும்மா விளையாட்டிற்கு." என்று பின்வாங்கியது.

நல்ல நாள் பார்த்து ஒரு வண்டியில் வீட்டுச் சாமானும், இன்னொரு வண்டியில் குடும்பத்தின் பெண் அங்கத்தினர்களும், இன்னொரு வண்டியில் குடும்பத்தின் ஆண் அங்கத்தினர்களும், இன்னொரு வண்டியில் வேலைக்காரர்களுமாய் அவர்கள் பயணப் பட்டார்கள். வழியில் இரண்டு மூன்று கோயில்களில் அவள் நாட்டியமாடினாள். ஊர் அவளுக்குக் காசு கொடுத்தது.

திருவாரூரில் கொஞ்சிக் கொஞ்சிப் பேசியவர்கள், வீடு சுற்றி வந்தவர்கள் எல்லோரும் சக்ரவர்த்தியின் ஓலை வந்திருக்கிறது

என்றதும் காணாமல் போனார்கள். ஏதேனும் வம்பு வந்துவிடுமோ என்று விலகிப் போனார்கள். திருவாரூரை விட்டுக் கிளம்பியதும் அவள் மெல்லிய பயத்தை உணர்ந்தாள். திருவாரூரில் கிடைத்த பாதுகாப்பு எல்லா ஊரிலும் கிடைக்குமா அல்லது எவரேனும் வழியில் மடக்கி மானபங்கம் செய்வார்களா என்று அம்மாவும், சித்தியும் கூட பயந்தார்கள். வழியில் மெல்ல விசாரித்தார்கள். அப்படி விசாரிக்கவும் ஒரு ஊர்ப் பெரியவர் வாய்விட்டுச் சிரித்தார். உங்களை வழியில் எவரும் எதுவும் செய்ய மாட்டார்கள். சோழதேசம் மிகப் பாதுகாப்பானது. எந்தப் பெண்ணிற்கும், எந்த இடத்திலும், எந்த விதமான ஆபத்தும் வரவே வராது. எது குறித்தும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் கவலைப்பட வேண்டிய வேறொரு விஷயம் இருக்கிறது என்று பெரியவர் சொல்ல, என்ன என்று அம்மாவும், சித்தியும் விசாரித்தார்கள்.

“உன் மகளைப் பேரழகி என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறாய். திருவாரூர் முழுவதும் கலக்கியவள் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறாய். இவளைவிடப் பேரழகிகள் தஞ்சாவூரில் வந்து குவிந்து விட்டார்கள். இவளைக் காட்டிலும் மிகச்சிறந்த தலைக்கோலிகள் அங்கு உட்கார இடம் இல்லாமல், நிற்க இடமில்லாமல், இருக்க இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ போல இருந்த நீ, கற்கண்டு கட்டிகளுக்கு நடுவே உட்காரப்போகிறாய். உண்மையிலேயே நடனம் தெரிந்து திறமையைக் காட்டினாலொழிய உனக்கு அங்கே எந்த மதிப்பும் இருக்காது. அரசரின் பார்வையோ, அமைச்சரின் பார்வையோ, சேனாதிபதிகளின் கடைக்கண்ணோ கிடைத்தால் சிக்கெனப் பிடித்துக் கொள். திருவாரூரில் காட்டிய மெத்தனத்தையெல்லாம் தஞ்சையில் காட்டாதே. பணிவாக நடப்பது உங்களுக்கு இயல்பாக இருக்கட்டும். அதுவும் தவிர, திருவாரூரைவிடத் தஞ்சைப் பெண்கள் மிகுந்த கெட்டிக்காரர்கள். திருவையாறிலிருந்தும், குடந்தையிலிருந்தும் வந்துள்ள தாசிகள் எல்லாக் கலைகளிலும் கை தேர்ந்தவர்கள். அவர்களைப் பேசி ஜெயிக்க எவராலும் இயலாது. அரசரை வரவழைத்து ஒரு இரவு முழுவதும் அவர்களோடு தங்க வைத்துக் கொண்டார்கள். திருவையாறு தேவரடியார்கள் இல்லையெனில் இது நடந்திருக்காது என்றும் சொல்கிறார்கள். எனவே, உன்னைக் காட்டிலும் முக்கியமானவர்கள் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து நடந்து கொள்.”



அறிவுறுத்தி அனுப்பினார்.

அம்மாவும், சித்தியும் தொடர்ந்து அவர் பேசியதை ஒட்டியே பேசிக்கொண்டு வந்தார்கள்.

உண்மையில் என்னவாகப் போகிறோமோ என்று கவலைப்பட்டுக் கொண்டு வந்தார்கள்

தஞ்சையை நெருங்க நெருங்க மெல்ல அந்தக் கவலை, அதுவரை கவலைப்படாத உமையாளிடமும் ஒட்டிக் கொண்டது.

பெரிய ஏரிக்கரையைத் தாண்டி தஞ்சை நகருக்குள் அவளுடைய வண்டிகள் நுழைந்தன. புறம்படி அங்காடிப் பக்கம் நின்றன.

“தேவரடியாரா.. திருவாரூரா.. உங்களுக்குக் கோயிலுக்கு அருகே வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே போங்கள்” தென்மேற்குத் திசையைக் காண்பித்தார்கள்.

வண்டிகள் நகர்ந்தன.

சாவூர் பரஞ்ஜோதியின் வீட்டு முன்னே வண்டிகள் நின்றன.

பரஞ்ஜோதி குளித்துக் கொண்டிருப்பதாய்ச் செய்தி கிடைத்தது. அவர்கள் அலுப்போடு வாசற்பக்கத்து நடையில் அமர்ந்தார்கள். உள்ளிருந்து அகிற்புகை வாசனை வந்தது. பச்சைக் கற்பூரம் மணத்தது. சாவூர் பரஞ்ஜோதி உயரமாய், அகலமாய் விரித்த கூந்தலோடு, சந்தனம் மணக்கும் மார்போடு வெளியே வந்து நின்றான். மேலே ஒரு வெள்ளைத் துணியும், இடுப்பிலே வெள்ளை வேட்டியும், காலிலே பாதரட்சையும், வெள்ளை வேட்டிக்கு மேல் வெள்ளியில் பூவேலை செய்த அரைஞாணுமாய் வந்து நின்றான்.

அவன் உயரமும் உடற்கட்டும் பார்வையின் தீட்சண்யமும் அங்குள்ளோரை எழுந்திருக்க வைத்தது.

“இதில் யார் உமையாள்.”

அவன் ஓலையை வாங்கி நீவிப் படித்துவிட்டு நிமிர்ந்து கேட்டான்.

“நாங்கள்தான்.”

சுந்தரி பதில் சொன்னாள்.

“யார் உமையாள்.”

மறுபடியும் அதே கேள்வியைக் கேட்க, உமையாள் அவன் முன்னே வந்து கை கூப்பினாள்.

“என் பெயர் உமையாள். தலைக்கோலி. திருவாரூர் தியாகேசருக்கு வாழ்க்கைப்பட்டவள்.”

“இருக்கட்டும். உன்னோடு வந்திருப்பவர் யார்.”

“என் தாய். என் தாயினுடைய தங்கை. எனது நட்டுவனார். என்னுடைய குழுவில் மிருதங்கம் வாசிப்பவர். குழல் வாசிப்பவர் என்று பலரும் வந்திருக்கிறார்கள். என் வீட்டு வேலையாட்களும் வந்திருக்கிறார்கள்.”

“அத்தனை பேருக்கும் இங்கே இடமிருக்கிறது என்று உனக்கு யார் சொன்னார்கள்.”

“இதென்ன கேள்வி. இவளை மட்டும் தனியாக அனுப்ப முடியுமா.”

“இங்கு வந்தவர்கள் அத்தனை பேரும் தனியாகத் தான் வந்திருக்கிறார்கள். நாலு பாரவண்டிகளில் நாற்பது பேர் வந்து இறங்கி வீடு கொடு என்று கேட்டால் எப்படி முடியும். இருப்பினும் உங்களைத் தனியே கவனித்து நல்ல வீடு ஒதுக்கச் சொல்லி பெருந்தச்சர் குஞ்சரமல்லர் உத்தரவிட்டுள்ளார்.”

“குஞ்சரமல்லரை எங்களுக்குத் தெரியாதே.”

“உங்களைப்பற்றி குஞ்சரமல்லருக்குத் தெரியும். விசாரித்து அறிந்திருக்கிறார். வயதிலே இளமையும், நாட்டியத்தில் புலமையும் உள்ள பெண் யாரென்று பலபேர் விசாரித்ததில் உன் பெயர் எஞ்சியது.”

“எங்கு நாட்டியமாட வேண்டும்.”

“எங்கும் நாட்டியமாடத் தேவையில்லை.”

“பிறகு எதற்காக வரவழைத்தீர்கள்.”

“வேறு வேலை இருக்கிறது.”

“என்ன வேலை.”

“பிற்பாடு சொல்லப்படும்.”

“பாருங்கள் என் மகள் நாட்டியமாடத்தான் வந்தாளே தவிர, வேறு எதற்காகவும் இல்லை.”



சுந்தரி படபடப்பாகப் பேசினாள். வேகமாக அவளை நோக்கியும் சாவூர் பரஞ்ஜோதி திரும்பினான்.

“என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் பெண்ணைக் கூறு போட்டு விற்பதற்காக இந்த அரசாங்கம் ஓலை அனுப்பியிருக்கிறது என்று நினைக்கிறாயா? அரசாங்கத்திற்கு அதுதான் வேலை என்று நினைக்கிறாயா. இங்கு உன்னுடைய நாட்டியப் பணியைக் காட்டிலும் மிகப்பெரிய கோயில் வேலை ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கோயில் வேலையில் உன்னைக் கரைத்துக் கொண்டிரு. அதிகம் ஆடாதே. அதிகம் பேசாதே.”

“சரி. என்ன வேலை என்று சொன்னால் நன்றாக இருக்குமே.”

“பின்னால் சொல்லப்படும்.”

“உங்களுக்குத் தனிவீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிதாய் கட்டப்பட்ட புது மாதிரியான வீடு. அங்குபோய்த் தங்குங்கள். இளைப்பாறுங்கள். பிறகு உங்களிடம் வந்து உங்கள் வேலைபற்றி பேசப்படும்.”

அம்மாவும், சித்தியும் முகம் இருண்டு கிடக்க வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். ஆனால், சாவூர் பரஞ்ஜோதியைப் பார்த்ததும் மனதில் இருந்த அச்சம் உமையாளுக்கு விலகிவிட்டது. இம்மாதிரியான கம்பீரமான ஆட்கள் எந்தத் தவறும் செய்ய மாட்டார்கள். எந்த இழிநிலையும் ஏற்படுத்த மாட்டார்கள். நேரடியாய்க் கண்களைச் சந்தித்து நிதானமாய் பேசுகிற ஆண்கள் மிகக்குறைவு. குழைவாகவும், குள்ளநரித்தன மாகவும் கண்களைக் கீழ்வட்டாகவும் வைத்துப் பார்க்கின்ற ஆண்களுக்கு நடுவே நீ ஒன்றும் எனக்கு முக்கியமில்லை என்ற அலட்சியத்தோடு அந்தச் சாவூர் பரஞ்ஜோதி பார்க்கிறான். கதிர் அறுப்பவருக்குக் களம் ஒதுக்குவது போல. உனக்கு வீடு ஒதுங்கியிருக்கிறது போ என்று வெறுமே கைகாட்டுகிறான். அவன் உள்ளுக்குள் கூட தன்னுடைய அழகு அசைக்கவில்லை என்பது புரிந்து போயிற்று.

ஒருவேளை வழியிலே அந்தக் கிராமத்துப் பெரியவர் சொன்னதுபோல என்னையும்விட பேரழகிகளை இந்தச் சாவூர் பரஞ்ஜோதி பார்த்திருப்பானா, எவளையேனும் மனைவியாக, கூத்தியாக - வைத்திருப்பானோ என்ற எண்ணம் வந்தது. அவள் தெருக்களைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அழகிய

பெண்கள் முன்னும் பின்னும் நடந்தார்கள். அழகைவிட அவர்கள் அலங்காரங்கள் சிறப்பாக இருந்தன என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவர்கள் வீட்டுவாசலில் இறங்கி வாசலில் பொருத்தப்பட்ட பெரிய மரக்கதவை திறந்ததும் பின்னாலிருந்து வேறு ஒரு பெண்குரல் வருக.. வருக. என்று அழைத்தது.

அவர்கள் திரும்பினார்கள்.

சற்று தடிமனான மத்திம வயதை நெருங்கிக் கொண்டிருக்கிற ஒரு பெண்மணி எதிர்வீட்டிலிருந்து நடந்து வந்தாள்.

"என் பெயர் ராஜராஜி. காஞ்சிபுரத்திலிருந்து வருகிறேன். தலைக்கோலி. நீ உமையாள்தானே. ஒருமுறை திருவாரூர் வந்தபோது பார்த்திருக்கிறேன். நன்கு வளர்ந்து விட்டாய். சதைப்பிடிப்பாக இருக்கிறாய். நல்லது. உன்னை இங்கு வரவழைத்ததே நான்தான். உன்னைப்பற்றி பஞ்சவன் மாதேவியிடம் சொல்லி பஞ்சவன்மாதேவி பெருந்தச்சரிடம் சொல்ல, பெருந்தச்சர் பலரிடம் விசாரித்துவிட்டு உன்னை இங்கே வரவழைத்திருக்கிறார். பெருந்தச்சர் குஞ்சர மல்லரை நாளை காலை நீ போய் சந்தித்து உங்கள் வேலைக்காக வந்திருக்கிறேன் என்று சொல்ல வேண்டும்."

"என்ன வேலை அக்கா."

உமையாள் திரும்பி நெருங்கிக் கேட்டாள்.

அவளுக்கு ராஜராஜியைப் பிடித்திருந்தது. ராஜராஜிக்கு அந்தப் பெண் தன்னை அக்காள் என்று அழைத்ததும் சந்தோஷமாக இருந்தது. "அதை நான் சொல்வது நன்றாக இராது. அவரிடமே நீ கேட்டுத் தெரிந்து கொள்."

சட்டென்று உமையாள் கண்ணில் பயம் வந்தது.

"இதோ பார் எந்தத் தவறான கற்பனையையும் செய்து கொண்டு பயப்படாதே. தஞ்சையில் உன்னை விற்பதற்கு யாரும் முயலவில்லை. உன்னை இழிவுபடுத்த எவரும் எந்த நேரமும் சிறிய முயற்சி கூட செய்யமாட்டார்கள். உனக்கு இந்தக் கோயிலை ஒட்டிய சில பணிகள் இருக்குமென்று தோன்றுகிறது. சிற்பங்களுக்காக முன்மாதிரியாய் நிற்பது நம்மைப் போன்றவர் களுக்கு வழக்கம். மிக அழகுள்ள பெண்ணைத் தேர்ந்தெடுத்து கொடிப்பெண்ணாகவோ, துர்க்கையாகவோ, சிலை செய்வது



சிற்பிகளுக்கு இயல்புதானே. எனவே அம்மாதிரியான வேலைதான் இருக்குமென்று நினைக்கிறேன். இதற்கு ஏன் தலைக் கோலி என்று கேட்கிறாயா. அதுதான் எனக்கும் புரியவில்லை, குஞ்சரமல்லர், அதுபற்றி எவரிடமும் சொல்லவில்லை, மிக இளமையான, அழகான தலைக்கோலி வேண்டும் என்று அவர் சொல்ல இங்கே வந்து நீ நின்றிருக்கிறாய். ஒருவேளை நீ வேண்டாமென்று அவர் தள்ளினாலும் தள்ளக்கூடும். அதற்கும் தயாராக இரு. எதிர்த்துப் பேசிவிடாதே. இந்நாளில் சக்ரவர்த்தி யின் ஆதரவை மிக நெருக்கமாகப் பெற்றவர்கள் சிற்பிகள்தாம். அதிலும் பெருந்தச்சர் குஞ்சரமல்லன் என்ன சொன்னாலும் அது வேதவாக்காக இருக்கிறது. சக்ரவர்த்தியின் ஆணையாக இருக்கிறது. எனவே, மிக அமைதியாய் அவரை அணுகுவது நல்லது. உன்னைப்போன்று இங்கு நிறைய பேர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கும் நல்லது."

"எத்தனை தலைக்கோலிகள் இருப்பார்கள்."

"தலைக்கோலிகள் என்று பதினாறு பேர்கள் இருக்கிறார்கள். நடனப் பெண்கள் நிறையபேர்கள் இருக்கிறார்கள். மொத்தம் நானூறு பேர் வரவழைக்கப் போகிறார்களாம். நாம் இப்போதைக்கு இருநூற்று அறுபத்து மூன்று பேர் இருக்கிறோம்."

"வீடு சரியில்லை என்று சொன்னார்களே, எனக்கு இந்த வீடு கொடுத்திருக்கிறார்களே."

"அது நீ செய்த புண்ணியம். குஞ்சரமல்லர் கட்டளை. அதனால் பெரிதாய் கட்டப்பட்ட இந்த வீட்டை உனக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்."

"ஏன் மற்றவர்களின் வீடு சரியில்லையா."

"இருப்பதை வைத்துக் கொண்டு அனுசரித்துப் போகிறார்கள். இதேபோல வீடுகளை விரைவில் கட்டி முடித்துவிடுவார்கள். எல்லோருக்கும் வீடுகள் வழங்க மிகத் தெளிவாய் உத்தரவாகியிருக்கிறது. வேலை செய்ய ஆட்கள் இல்லையென்பதால் சற்று சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஆட்களும் வந்துவிட்டார்கள். இனிமேல் வேலை துவங்கினால் வேகமாக நடக்கும்."

"கோவில் வேலை எத்தனை மாதத்தில் முடியும்."

"எத்தனை மாதத்திலா.. கோவில் வேலை பல வருடங்கள்.. பல வருடங்கள இருக்கும். ஏழு பனை உயரத்திற்குக்

கருங்கற்களால் கோவில் கட்டுவதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. பெரிய பெரிய பாறைகற்கள் வந்து இறங்கியிருக்கிறது. சிற்பிகள் ஓயாது வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மாதங்கள் எல்லாம் இல்லாத கதை."

"ஏன்."

"திருவாரூருக்குப், போக வேண்டுமென்று ஆசைப்படுகிறாயா. திருவாரூர் நீ மறந்து விட வேண்டியதுதான். இங்கேயே.. இந்தக் கோயிலிலேயே நீ இறைபணி செய்து கொண்டிருக்க வேண்டியதுதான்." ராஜராஜி சொன்னதும் அந்த மூவருக்கும் முகம் மாறிப் போனது. மெல்ல தரையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"எப்படி திருவாரூரை மறக்க முடியும். அந்த ஊரை, அந்தத் தேரை, அந்தத் தியாகேசன் அழகை, கோவில் கோபுரத்தை, விமானத்தை எப்படி மறக்க முடியும். அது என்னுடைய ஊர் இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்."

சித்தியும், அம்மாவும் மாறி மாறிப் புலம்பினார்கள்.

"நடுநடுவே போய்வாருங்களேன். உங்களை யார் வேண்டாமென்று சொன்னது. ஆனால், தஞ்சைதான் இனி உங்கள் ஊராகப்போகிறது. தஞ்சையினுடைய இந்த அற்புதமான இடத்தைவிட்டு உங்களால் போக முடியாது. தஞ்சையில் நீங்கள் இருப்பதைப் பெருமையாக எண்ணும் காலமும் ஒருநாள் உண்டு."

"ஊரே செம்மண் புழுதியாக உள்ளதே."

"வேலை செய்கிற இடமல்லவா. புழுதி இருக்கத்தான் செய்யும். வண்டிகள் அதிகம் போகின்றதல்லவா. அதனால் சப்தமும் அதிகமாக இருக்கத்தான் செய்யும்.

திருவாரூரின் அமைதி, குளிர்சோலை, குயில்கூவல் இதெல்லாம் கிடைக்காது. ஆனாலும், இங்கு வந்து ஐக்கியமாகி விட்டால் இங்குள்ள வேலைகளில் புகுந்து புறப்பட்டு விட்டால் உனக்குத் திருவாரூரே மறந்து போகின்ற காலம் வந்தாலும் வரும். நான் அப்படித்தான் காஞ்சிபுரத்தை விட்டு எப்படிப் பிரிவேன் என்று நினைத்தேன். இங்கு உள்ளுக்குள் வந்ததும் என் மனமும் மாறிப்போயிற்று. பஞ்சவன்மாதேவியோடு பேசுவதும், அரசருக்கு அருகே உட்கார்ந்து கொண்டு அவரைப் பார்ப்பதும், சிற்பி களிடையே பேசுவதும் தினம் தினம் இவர்களைச் சந்திப்பதுமாய்



கோலாகலமாய் வாழ்க்கை போகிறது. இந்த வாழ்க்கைக்கு நீயும் பழக்கப் படுத்திக் கொள். இப்போது ஓய்வெடுத்துக் கொள். என்று சொல்லிவிட்டு புயல்போல வெளியே போனாள்.

அவள் வந்ததும், பேசியதும், நகர்ந்ததும் வினோதமாக உமையாளுக்கு இருந்தது.

வீட்டிற்குள் சுண்ணாம்பு நெடி அடித்தது. புது மரவாசனை வீசியது. அம்மா சுவரில் குடம் வரைந்து மேலே தேங்காய் வைத்து கும்பம் எழுதினாள். மஞ்சளாலும், குங்குமத்தாலும் அலங்கரித்தாள் அருகே விளக்கேற்றி வைத்தாள். ஈரத்துணியில் வீடு மொத்தமும் துடைத்தாள். அகிற்புகை போட்டாள். ஏதேனும் ஆடி பெண்ணே என அவளைப் பார்த்துச் சொல்ல, அவள் சலங்கை கட்டிக் கொண்டாள்.

விளக்கு முன்பு கைகூப்பி நின்றாள். மெல்ல நடனம் ஆடத்துவங்கினாள். தா.. தை.. என்று ஆரம்பப் பாடத்திலிருந்து ஆடத்துவங்கினாள். சித்தி கோலுடனும் கட்டையுடனும் உட்கார புடைவையை இறுக்கிக் கொண்டு தான் தயார் என்று சொன்னாள். சித்தி ஜதி சொல்ல, வேகமாக ஆடினாள். சுழன்று, நிமிர்ந்து நாலா பக்கமும் பரவினாள்.

தத்தோம்.. தத்தோம்.. தகிடதத்தோம்.. என்று மிருதங்கம் முழங்க குழல் வாசிப்பும் தொடங்க, இரண்டு மூன்று பெண்கள் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களும் நடனப்பெண்கள் என்று தெரிந்தது.

அம்மா தலையசைத்து வரவேற்றாள். குடிக்க நீர் கொடுத்தாள்.

ஜலக்கு.. ஜலக்கு.. ஜன என்று முக அசைவு மட்டும் காட்டும் ஜதிகளைச் சித்தி சொல்ல, அங்கு அமர்ந்திருந்தவர்களுக்கு விதம் விதமான அபிநயங்கள் செய்து காட்டினாள்.

"இதென்-ன.. தாமரைக்கு இரண்டு கையில் அபிநயம் காட்டாமல் ஒரு கையால் மட்டுமே அபிநயம் காட்டுகிறீர்கள்." என்று சொல்ல, "ஆமாம்.. இது தாமரை மலர். முற்றிலும் மலராத கொஞ்சம் மலர்ந்த மலர். இந்த வலக் கையை மட்டும் பார்க்கிறீர்களே. இடக் கையை பார்க்கவில்லையா. தாமரை மலர் சற்று மலர்ந்திருக்கிறது. மேலே ஐந்து விரலையும் விரித்து வைத்திருக்கிறேன். இடக்கையைப் பாருங்கள். இது என்ன என்று தெரியவில்லையா"

"ஹா.. சூரியன்."

"ஆமாம். தாமரையை மட்டும் காட்டாமல் நான் சூரியனையும் காட்டுகிறேன்."

"உட்கார்ந்து, எழுந்து, சுழன்று மறுபடியும் தாமரை மலரைச் சூரியனோடு காண்பிக்க, பெண்கள் வியந்தார்கள்.

"ரௌத்திரம் எப்படி காண்பிக்கிறீர்கள்."

"இடுப்பில் கை வைத்து விழித்துப் பார்ப்பது வழக்கமாக செய்வது. நான் வேறுவிதமாகச் செய்வேன்."

அவள் ஒற்றைக்காலை நிறுத்தி, இன்னொரு காலைத் தூக்கி கையில் வேல் பிடித்து தரையிலுள்ள அரக்கனைக் கொல்லுகின்ற மகிஷாசுரமர்த்தினியின் கோபமுகத்தைக் காண்பித்தாள். ஒரு குத்து. கீழே இருக்கிறவனைக் குத்தினால் என்பதுபோல ஒரு பலம் கையில் இருந்தது. முகத்தில் கோபம் இருந்தது. அந்த ஒற்றைக் காலால் வெகு நேரம் அவளால் நிற்க முடிந்தது.

"அடேயப்பா.. நன்றாக இருக்கிறது உங்கள் கற்பனை."

ஒரு பெண் வியந்தாள்.

ஜலக்கு.. ஜலக்கு.. ஜல என்று ஜதி மாற அவள் வேறு பக்கம் போய் நடந்து சந்தோஷம் என்று காண்பித்தாள்.

சந்தோஷம் என்பதை வெறும் சிரிப்பாகக் காட்டுவார்கள்.

இப்படி இரண்டு கையையும் விரித்து பரவச நிலையில் கண் செருகி மேலே பார்த்து நிற்க ஆஹா.. ஆஹா.. நன்றாக இருக்கிறது. புதிது புதிதாக இருக்கிறது என்று பெண்கள் கூவினார்கள்.

யாரோ வெளியே கைதட்டும் ஓசை கேட்டது.

உள்ளே ஆட்கள் வரும் ஓசை கேட்டது.

அவள் சட்டென்று நின்றாள்.

முகத்தில் வியர்வை பொங்கியது. பிடரியெல்லாம் நனைந்து முதுகில் வழிந்தது.

ஒரு இளைஞன் வந்து நின்றான்.

"அற்புதமான கற்பனை. இதைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். எல்லோரும் ஒரேவிதமாக, ஒரே பாடமாகச்



சொல்கிறார்கள். உள்ளிருந்து எடுத்து வெளியே கொட்ட மாட்டேன் என்கிறார்கள். நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?"

"ஐயா.. நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? சட்டென்று பெண்கள் இருக்கின்ற வீட்டிற்குள் நுழைந்து அவள் பெயர் கேட்டால் நல்லதா நாகரிகமா."

அம்மா அதட்டினாள்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். மெல்லப் பின்னடைந்தான். பெண்கள் துள்ளியெழுந்து சீராளன்.. சீராளன் என்று கூவினார்கள்.

"யார் சீராளன்."

அம்மா வினவினாள்.

"அம்மா என் பெயர் சீராளன். நான் ஒரு ஓவியன் குஞ்சரமல்லரிடம் ஓவியனாகப் பணி புரிந்து வருகிறேன் சிற்பத்தில் உருவங்கள் செதுக்குவதற்கு முன்பு சித்திரமாக அந்த உருவத்தை எழுதிப் பார்த்துக்கொள்வது நல்லது. எனவே, தலைக்கோலியை- இளமையானவளை- இங்கு வரவழைத்தால், அவளை வைத்து நான் சிற்ப வேலைகள் ஆரம்பிப்பேன் என்று சொல்லியிருந்தேன். சொல்லி ஒரு மாதமாகிறது. பலபேர் விசாரித்துத் திருவாரூர் உமையாள் என்பவளைத் தேர்ந்தெடுத் திருப்பதாகக் குஞ்சரமல்லர் சொன்னார். நீங்கள்தான் திருவாரூர் உமையாளா."

ஆம் என்று உமையாள் தலையசைத்தாள்.

"என்ன ஆம் என்று தலையசைக்கிறீர்கள். இதற்கு அபிநயம் ஒன்றும் இல்லையா. நீங்கள்தான் திருவாரூர் உமையாள் என்று அபிநயத்தில் எனக்குச் சொல்லக்கூடாதா."

சிரித்தபடியே சீராளன் கேட்டான்.

பெண்கள் விழி விரித்தார்கள். ஆவலாய்த் திரும்பி அவளைப் பார்த்தார்கள்.

ஜலுக்.. ஜலுக்.. ஜல..

உமையாள் தானே ஜதி சொன்னாள் சதங்கை குலுங்க ஆடினாள். சுற்றிவந்து நின்று திருவாரூர் தேர். அமர்ந்திருக்கும் தியாகேசர். அருகே பொற்கொடியாய் அவருக்குப் பக்கத்தில் நீலோத்பலத்தோடு நின்று கொண்டிருக்கிற உமையாள், அந்த

உமை நானே என்று அபிநயமும் செய்துகாட்ட, பெண்கள் வியப்போடு அவளைப் ரசித்துவிட்டுச் சீராளனைப் பார்த்தார்கள்.

சீராளன் அற்புதம் என்று சின்முத்திரை காட்டினான்.

சீராளன் மெல்ல நடந்து அருகே வந்தான். அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தான். சுற்றி வந்தான். முதுகு, பின்பக்கம், கழுத்துப் பகுதி, பின்னல், தொடை என்றெல்லாம் அவன் கண்கள் மேய்ந்தன மறுபடியும் முன்னே வந்து அவளுடைய முன் அழகை, மார்பகங்களை, வயிற்றுப் பகுதியை, தொடைச் சரிவை, பாதங்களை, நெற்றியை, மூக்கை முகவாயை உற்றுப் பார்த்தான். மெல்லப் பின்னடைந்தான்.

தம்பி என்று வாசலைப் பார்த்துக் கூவினான். அங்குள்ள ஒரு சிறிய பையன் ஓடிவந்து அவனிடம் சட்டமிடப்பட்ட திரைச்சீலையைக் காட்டினான். அந்தத் திரைச்சீலை சுண்ணம் அடித்து இறுக்க சட்டத்தில் மாட்டப்பட்டிருந்தது. இரண்டு முழங்கை நீளமுள்ள அந்த திரைச்சீலையை இடுப்பில் வைத்துக் கொண்டான். அவளை உற்றுப்பார்த்து மேல்சட்டை விளிம்பி லிருந்து கரிக்கட்டியை எடுத்தான். மெல்ல கரிக்கட்டியை உருட்டியபடியே அவளை உற்றுப் பார்த்தான். அவள் இடுப்பில் கைவைத்து மூச்சு வாங்க நின்றிருந்ததை மடமடவென்று வரைந்தான். இருபது, இருபத்தைந்து கோடுகளில் அவள் நிற்கின்ற அந்த நிலை அழகாக வந்துவிட்டது. திரைச்சீலையைத் தூணில் சாய்த்துவிட்டு இன்னும் அவளுக்கருகே போனான். தம்பி, வேறு திரைச்சீலையைக் கொடுக்க அதை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு அவள் முகத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந் தான். சட்டென்று முற்றத்திற்குப் போனான். அந்த திரைச்சீலை முழுவதும் அவன் நெற்றிச்சுட்டி, சந்திரப்பிரபை, சூரியப்பிரபை, மூக்குத்தி, புல்லாக்கு, உதட்டு வளைவு, முகவாய், கன்னத்தில் வழிந்த தலைமுடி. காது வளையம், நீண்ட கழுத்து, தோள்கள், தோளில் தொங்கியிருந்த துணி, கழுத்தில் போட்டிருந்த ஹாரம், கல்தோடு ஒட்டியிருந்த காரை என்று வரைந்தான். மறுபடியும் அருகே வந்து கண்களை உற்றுப் பார்த்துவிட்டு இரண்டு வட்டங்கள் விழிகளாக வரைந்தான். கரிப்பொடியை ஊதி நகர்த்தினான். ஒரு கரித்துண்டை எடுத்து லேசாகப் பொடியாக்கி அந்தப் பொடியை விரலில் தடவிக்கொண்டு அந்த முகத்தில் பல இடங்களில் வேகமாகத் தடவினான். மேடு பள்ளங்கள் உண்டாயின. கன்னத்தின் செழுமை தெரிந்தது. முகவாயின் குழிவு வெளியே வந்தது. மூக்கின் விடைப்பு புரிந்தது. கண்களின்



அசைவு, இமைகளின் படபடப்பு எழுதப்பட்டது. குழலில் பளபளப்பு காட்டப்பட்டது.

"இந்தா. இது என் பரிசு வைத்துக் கொள். நீட்டினான்."

மிக தத்ரூபமாக அந்தப் படத்தில் உமையாள் மெல்லிய சிரிப்போடு இருந்தாள்.

பெண்கள் 'ஆஹா.. ஆஹா.. என்று சொன்னார்கள்.

அம்மா திகைத்தாள்.

சித்தி வாங்கிப் பார்த்துவிட்டு என்ன அழகு, என்ன விரைவு என்று வியந்தாள்.

உமையாளுக்கு மூச்சு அடைத்தது.

"வருகிறேன். இனி உமையாளும், நானும் இணைந்து பல வேலைகள் செய்ய வேண்டியிருக்கும். என்ன வேலை என்பதை நான் சொல்வதைவிட பெருந்தச்சர் குஞ்சரமல்லர் சொல்வதே சரியாக இருக்கும். இப்போதைக்கு விடை பெறுகிறேன். உங்களை நாளை காலையில் குஞ்சரமல்லரிடம் அழைத்துப் போவார்கள். ஆயத்தமாக இருங்கள்" என்று சொன்னான்.

தம்பியை முன்னே தள்ளிக் கொண்டு நடந்து வெளியே போனான்.

பெண்கள் வாசலுக்குப் போய் உரக்கக்கூவி வேறு சில பெண்களையும் வரவழைத்தார்கள். எல்லாப் பெண்களும் சுற்றி நின்று அந்தப் படத்தை வியப்போடு பார்த்தார்கள். அவளையும் பார்த்தார்கள். சட்டென்று உமையாளுக்கு ஏனோ அலுப்பு வந்தது. உமையாள் உள்ளுக்குள் போய் போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

பெண்கள் எல்லோரும் போனதும் அந்த இரண்டு படங்களையும் அம்மா கொண்டு வந்து கட்டிலில் வைத்தாள். ஜன்னல் கதவுகள் திறக்கப்பட்டன. வெளிச்சம் உள்ளே வந்தது.

அவள் தன் படத்தையே கையில் எடுத்து ரசிக்கத் துவங்கினாள்.

"உலகத்தில் நீ மட்டும்தான் கெட்டிக்காரியா உமையாள் உன்னிலும் கெட்டிக்காரர்கள் உலகத்தில் உண்டு. அறுபது நொடிகளில் உன்னைப் பார்த்துவிட்டு தள்ளிப்போய் பட மெழுதினானே, அப்படியானால் அவன் எவ்வளவு அழகாக,

எத்தனை திடமாக உன்னைப் பார்த்திருக்க வேண்டும். அவன் சாதாரண மனிதனா. மயன் மயன் என்று சொல்கிறார்களே. அவன் மகனா. இப்படி விதம்விதமாய் உன்னை நிற்க வைத்து படம் வரையத்தான் அழைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது.”

அம்மா சொல்ல சித்தி ஆமோதித்தாள். அப்படியென்றால் வேலை எளிது. அந்தத் தம்பி இங்கேயே வந்துகூட வரைந்து கொள்ளலாம் என்று உரக்கச் சொன்னாள். ஆனால், வேறெங்கோ அழைத்துப் போவார்கள் என்றுதான் உமையாளுக் குத் தோன்றியது.

சீராளனைப் பற்றி உங்களுக்கு வேறென்ன தெரியும். என்று யாரையாவது கேட்க வேண்டும் என்று தோன்றியது. அவள் கட்டிலைவிட்டுக் கீழிறங்கினாள். வீட்டிற்கு வெளியே வந்தாள். படியிறங்கினாள். தெருவில் மெல்ல நடக்கத் துவங்கினாள். அவள் நடப்பதைப் பார்த்து நடனப் பெண்கள் வாசலுக்கு வந்து நின்றார்கள். ஸ்நேகமாகச் சிரித்தார்கள்.

அந்த ஸ்நேகத்தில் மெல்லியதாய்ப் பொறாமையும் இருந்தது.

## 142

ஈசான சிவபண்டிதர் சம்மணமிட்டு முதுகு நிமிர்த்தி அழுந்த உட்கார்ந்து கொண்டார்.

“நீங்கள் பேசுவது முட்டாள்தனம். முறையற்ற செயல். வேதம் படித்தால் மண்டூகமாகவே மாறிவிட வேண்டுமா. வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளைத் தெரிந்து கொள்ள வேண்டாமா. உலகத்து ஜனங்களோடு சுமுகமாகப் பழகாவிடில் உங்களுடைய படிப்பு உங்களை என்ன செய்யும். எப்படிக் காப்பாற்றும். அது படித்ததற்கான அர்த்தத்தைத் தருமா. அரசர் உதவி செய் என்று கேட்கிறார். மாட்டேன் என்று மறுக்க ஒரு குழு போயிருக்கிறதென்றால் இதைவிட நிர்மூடம் உலகத்தில் ஏதேனும் உண்டா.

எங்களுக்குக் கணக்கு எழுதிப் பழக்கமில்லை என்று சொல் லுங்கள். மற்ற வேலை செய்தால் எங்கள் வேலைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்று சொல்லுங்கள். எங்களில் சிலரைக் கணக்கு எழுத அனுப்புகிறோம் என்று பேசுங்கள். அப்படியல்லாது கணக்கு எழுதுதல் எங்கள் வேலையல்ல.. நாங்கள் செய்ய மாட்டோம் என்று சொன்னால் எவருக்கும் கோபம் வரத்தானே



செய்யும். அதுவும் குறிப்பாக இராஜேந்திரர் முன்னே இந்த வார்த்தையைச் சொல்லலாமா. இராஜேந்திரருடைய கோபம் எவ்வளவு கடுமையானது என்று எவரும் சொன்னதில்லையா. இரவு நேரம் தூங்கும்போது சோழப்படை வீரர்களைச் சேரதேசத்து அந்தணர்களுடன் சேர்ந்து, மேலைச்சாளுக்கியர்கள் தாக்கிக் கொன்று விட்டார்கள் என்று தெரிந்ததும் ஆண், பெண், குழந்தை, அந்தணர் என்று எவரும் பார்க்காது வெட்டிச் சாய்த்து வந்தவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதே இல்லையா.

அரசர்கள் உக்கிரம் மிகுந்தவர்கள். அவர் உக்கிரம் மிகுந்த வராகத்தான் இருக்க வேண்டும். நாம் அந்தணர்கள். அமைதி யாகத்தான் பேசவேண்டும். மாட்டேன் என்று க்ஷத்திரியன்போல் நெஞ்சு நிமிர்த்திப் பேசுவது பேதைமை சிறுபிள்ளைத்தனம்.

அந்தணர்கள் எங்கே, எப்போது போனார்கள். அவர்களை இங்கே மீண்டும் வரவழைக்க முடியாதா. வருகிறேன் என்று சொன்னேனே, அதுவரை பொறுமை இல்லையா. நான் வரமாட்டேன் என்று உங்களுக்கு யார் சொன்னது. உங்கள் பேச்சும், போக்கும் அலுப்பாக இருக்கிறதய்யா. மிக ஆயாசமாக இருக்கிறது. சரி, நான் ஐநூறு அந்தண இளைஞர்களைத் திருமுனைப்பாடி நாட்டிலிருந்தும், தொண்டை நாட்டிலிருந்தும் அனுப்பினேனே. அவர்கள் என்ன ஆனார்கள். யார் வீட்டில் தங்கி இருக்கிறார்கள். அவர்களின் தலைவனை இப்போது நான் பார்க்க முடியுமா.”

ஆவலாகக் கேட்டார். தஞ்சை அந்தணர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“என்ன ஆயிற்று” ஈசான சிவபண்டிதர் சூட்சுமமாய் அவர்கள் பாவனைகளைப் புரிந்துகொண்டு விசாரித்தார்.

“அவர்களுடைய வருகை ஒன்றும் இங்கே தேவைப் படவில்லை.”

ஒரு அந்தணர் சொல்ல ஈசான சிவபண்டிதருக்குக் கடும் கோபம் வந்தது. கண்களை மூடிக்கொண்டார். உள்ளுக்குள் ஜபம் செய்யத் துவங்கினார்.

இது முட்டாள்கூட்டம். தன்னைத்தானே கொள்ளிக் கட்டை எடுத்துச் சொறிந்து கொள்கிற கூட்டம் என்று கவலையானார்.

"மறுபடியும் கேட்கிறேன். அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள்." இம்முறை நிதானமாக அழுத்தம் திருத்தமாகத் தஞ்சை அந்தணர்களை வினவினார்.

"எங்கேயும் தங்கவில்லை. எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறார்கள்."

"எல்லா இடங்களிலும் என்றால்."

"பலபேர் வீட்டுத் திண்ணைகளில்.."

"என்ன... அந்த அந்தணர்களைத் தெருவிலா தங்க வைத்தீர்கள். ஒரு கோவிலில் தங்க வைக்கக்கூட இயலாதா."

"கோவிலில் நகைகள் இருக்கின்றன."

"இருந்தால் என்னய்யா. அந்த நகைகளுக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்."

"இளைஞர்களை இங்கு தங்க வைப்பது ஆபத்து."

"என்ன ஆபத்து."

"கோவிலில் நகைகள் இருக்கின்றன."

"முட்டாள்தனமாகப் பேசாதீர்கள். கோயிலில் நகைகளைக் களவாட அவர்கள் முயல்வார்கள் என்று நினைக்கிறீர்களா. என்ன கேவலமான புத்தி. உங்கள் இனம்பற்றி உங்களுக்கே நம்பிக்கை இல்லையா. என்ன ஆபாசமான பேச்சு."

"தங்க வைப்பதற்கு வசதியான வேறு இடம் இல்லையே."

"யார் சொன்னது."

"ஒரு நபருக்கு ஐந்து அந்தணர்களாக இங்குள்ள நூறு அந்தணர்கள் அந்த இளைஞர்களைத் தத்தெடுத்துக் கொள்ளக்கூடாதா. என்ன விளையாடுகிறீர்கள். நான் அனுப்பிய அந்தணர்களை நீங்கள் தெருவிலே படுக்க வைத்தீர்களென்றால் இதைவிடக் கேவலம் என்ன உண்டு. என் முகத்தில் சேறு அப்பியதுபோலல்லவா ஆகிறது. நீங்கள் யாருக்கும் கட்டுப்பட மாட்டீர்கள். உங்களால் ஒற்றுமையாக, ஒரே குழுவாக இருப்பது என்பது இயலாத காரியம். எனக்குத் தெரியாது. அரசன் சீறினால். நீங்கள் அனுபவியுங்கள். நீங்கள் வெளியே போகலாம்."

அந்தணர்கள் சுவரோரம் ஒதுங்கி கைகட்டி அசையாமல் நின்றார்கள்.



"வெளியே போங்களய்யா. போய் அந்த இளைஞரை, அந்த ஐநூறு பேர் தலைவரை என்னிடம் அழைத்து வாருங்கள். இது என் ஆக்ஞை."

அவர் கிட்டத்தட்ட உரத்த குரலில் முழங்க அவர்கள் வெளியேறினார்கள். கால்நாழிகையில் அந்த அந்தண இளைஞன் அவர் இருக்கும் வீட்டிற்குள் நுழைந்தான். விழுந்து வணங்கினான்.

"சத்குரு. நீர் எப்பேர்பட்ட விஷயம் உள்ளவர். உம்மை நான் வணங்குகிறேன். கண்களில் இருக்கும் அழுக்கைக் குச்சியில் எடுப்பதுபோல என் மனத்திமிரை நீங்கள் நீக்குகிறீர்கள். சத்குரு உங்களை நான் வணங்குகிறேன். நீங்களே பிரம்மா. நீங்களே விஷ்ணு. நீங்களே சிவன். நீங்களே எல்லாம். கடவுள் கோபித்துக் கொண்டால் குரு காப்பாற்றுவார். குரு கோபித்துக் கொண்டால் கடவுளும் காப்பாற்ற மாட்டார்." என்று ஸ்லோகம் சொல்லி விழுந்து வணங்கினான். எதிரே கைகட்டிநின்றான்.

"எப்படி இருக்கிறீர்களய்யா."

மிருதுவாய் ஈசான சிவபண்டிதர் கேட்டார்.

"உங்களுடைய ஆசியால் மிக நன்றாக சுபிட்சமாக இருக்கிறோம் இந்தத் தேசம் சுபிட்சமாக இருக்கிறது. மக்கள் பிரியமாக இருக்கிறார்கள். நாங்களெல்லாம் மதிக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகிறோம்." என்று பதில் சொன்னான். ஈசான சிவபண்டிதர் சிரித்தார்.

"இது சம்பிரதாயமான வார்த்தை. உண்மையைச் சொல். நமது அந்தண இளைஞர்கள் எப்படி இருக்கிறார்கள்."

"ஒருவேளை உணவு நிச்சயம் கிடைக்கிறது."

"என்ன... ஒரு வேளை உணவுதானா."

"இல்லை. அதற்கு எந்தக் குறையும் இல்லை போதும்."

"சரியாகப் பேசு. தஞ்சை வைதீகர்கள் யாரும் எந்த உபசாரமும் செய்யவில்லையா"

"வந்ததும் நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள்."

"இன்று என்ன செய்தார்கள்."

"அவர்களுக்குப் பல வேலைகள் இருக்கின்றன."

"அப்படியா. உங்களிடம் சொன்னார்களா உங்களைப் புறக்கணித்தார்களா."

அந்த இளைஞன் மௌனமாக நின்றான்.

"ஏன் பேசமறுக்கிறாய்... உண்மையைச் சொல் உனக்கு என்ன தயக்கம்."

"ஐயா, அந்தணன் யாசகம் கேட்கலாம் தவறில்லை. ஆனால், கெஞ்சி அழலாமா? யாசகம் கேட்பது என்பது ஒரு கம்பீரமான பணி. நான் வேதம் படித்தவன். கடவுளை நினைப்பவன். எனக்குக் கடவுளின் பெயரால் உணவு கொடு என்று சொல்லி பவதி பிக்ஷாந்தேஹி என்று கேட்கலாம். சோறு போட்டுத்தான் ஆகவேண்டும் மென்று கைகூப்பி அழமுடியுமோ. அழுதால் மரியாதையோ, வேதத்தை நானே இழிவு செய்தால் வேறு யார் போற்றுவார்கள். எனவே, கிடைத்ததைக் கொண்டு நாங்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்."

அவன் சொல்லிவிட்டுத் தலை குனிந்து கொண்டான்.

ஈசான சிவபண்டிதர் கண்கள் மூடிக் கொண்டார். அவர் கண்ணிலிருந்து மெல்லக் கண்ணீர் இறங்கியது. துணியால் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

"சரி.. நீங்கள் எங்கு படுக்கிறீர்களோ அங்கு நானும் கிடக்கிறேன்." தோளில் சால்வையைப் போர்த்திக் கொண்டு தெருவில் இறங்கினார். அந்த இளைஞன் தோளில் கை வைத்துக் கொண்டு மெல்ல நடந்தார்.

தஞ்சை அக்ரஹாரத்து அந்தணர்கள் வேகமாகக் கூடினார்கள். நாளை காலையில் சகலமும் சரிசெய்து விடுகிறோம்.

"தவறு நிகழ்ந்து விட்டது. மனதார மன்னிப்பு கேட்கிறோம்." என்று சொன்னார்கள்.

"என்னிடம் கேட்டுப் புண்ணியமில்லை இந்த இளைஞனிடம் கேட்க வேண்டும்." என்று சொல்ல, ஒரு அந்தணர் அவர் காலைத்தொட முற்பட அவன் பதறிப்போய் பின்னடைந்தான்.

"வேண்டாம். தயவுசெய்து அப்படிச் செய்யாதீர்கள்." என்று கெஞ்சினான்



அந்தணர்கள் வாய்பொத்தி ஈசான சிவபண்டிதரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்கள் மன்னிப்பை ஏற்றுக் கொள்கிறேன். ஆயினும் உங்களோடு தங்க விருப்பமில்லை. இவனோடு தங்கிக் கொள்கிறேன்."

அவன் தோளில் கைவைத்து மெல்ல அக்ரஹாரம் விட்டு வெளியேறினார்.

'குருதேவா... குருதேவா.. நமோ.. நமஹ.. நமோ.. நமஹ.. ' பல இளைஞர்கள் கூடினார்கள். வெவ்வேறு திக்கிலிருந்தும் ஓடிவந்தார்கள். அழுக்கடைந்து மெல்லியதாய்க் கண்களில் சோர்வும் வயிற்றில் பசியுமாய் இருக்கின்ற அவர்களைப் பார்த்து ஈசான சிவபண்டிதர் மனம் நொந்தார்.

'சிவனே.. என் சிவனே.. என் குழந்தைகளை ஏன் இப்படி விட்டுவிட்டீர்.' என்று உள்ளுக்குள் கதறினார்.

"ஐந்நூறு பேர்கள் தங்கக்கூடிய இடம் தஞ்சையில் இல்லையா."

"இருக்கிறதய்யா."

"எங்கே."

"கோவில் கட்டுவதில் உதவி செய்ய வரும் மறவர்களுக்காகப் பெரும் கூரைபோட்டு இடம் செய்திருக்கிறார்கள். அந்த இடம் முழுவதும் நிரம்பவில்லை. வீரர்கள் குறைந்த அளவிலேயே இருக்கிறார்கள். பலபேர் பல பகுதிகளில் பிரிந்து தங்கியிருக்கிறார்கள். மேலும் வீரர்கள் வரக்கூடும் என்பதால் அந்தக் கூரையை அப்படியே வைத்திருக்கிறார்கள்."

"எங்கிருக்கிறது."

"கோவில் கட்டுகிறாரே அந்த இடத்திற்கு மிக அருகில் இருக்கிறது."

"அப்படியா.. வாருங்கள் அங்கு போவோம். அங்கே நீர் நிலை இருக்கிறதா?"

"இருக்கிறதய்யா.. ஒரு பெரிய குளம் இருக்கிறது. தஞ்சை தளிக்குளம் என்று பெயர்."

"அட.. கோவில் குளமா! என்ன கோவில் இருக்கிறது?

"கோவில் இல்லை ஐயா. அந்தக் கோவில் பழுதுபட்டு விட்டதால் அதற்குப் பதிலாகத்தான் அந்த இடத்தில்தான்

பெரிய கோவிலை இராஜராஜர் எழுப்புகிறார். குளம் மட்டும் இருக்கிறது. நல்ல தூய்மையான நீரும் இருக்கிறது. அங்கே போய் விடுவோம். ஆனால், அது தஞ்சையின் எல்லையில் இருக்கிறது. அது சற்று விலகியிருக்கிறது."

"இருக்கட்டுமே."

"இல்லை. உங்களுக்கு உணவு வகைகள் வருவதற்குத் தாமதாகலாம்."

"அதுபற்றிக் கவலைப்படாதே. எனக்கு உணவுவகை வர அரசர் ஏற்பாடு செய்வார். நாம் அங்கு போய் விடுவோம்."

அவர் விரைவாக நடக்க அந்த அந்தண இளைஞர்கள் சட்டென்று வரிசையானார்கள்.

"அதேநேரம் ருத்ரம் சொல்லிக் கொண்டு வரலாமா."

"எப்பொழுது வேண்டுமானாலும் ருத்ரம் சொல்லலாம். ஆனால், இப்போது புதிய இடத்திற்குப் போகவேண்டும் அல்லவா. துர்காஷ்டகம் சொல்லிக் கொண்டே வாருங்கள். நம்மைச்சுற்றி துர்கையின் பரிவார தேவதைகள் காவல் காக்கட்டும்." என்று சொல்ல அவர்கள் துர்கையைப் புகழ்ந்து பாட ஆரம்பித்தார்கள்.

தஞ்சை விழித்துக் கொண்டு முனகியது. யார் என்று எட்டிப் பார்த்தது. என்ன என்று புரியாமல் தவித்தது. அதற்குள் ஈசான சிவபண்டிதர் அந்தண இளைஞர்களோடு அந்தப் பெரும் கொட்டகைக்குள் நுழைந்தார். மறவர்கள் எழுந்து நின்று தூக்கக் கலக்கத்தில் வரவேற்றார்கள். சிலர் மெல்லிய போதையில் இருந்தார்கள். ஈசான சிவபண்டிதரைப் பார்த்ததும் வாய் பொத்திக் கொண்டார்கள். பின்னடைந்தார்கள்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் உறக்கத்தைக் கெடுத்துவிட்டோம். சிறிது நேரத்தில் அமைதியாகி விடுவோம். மறுபடியும் நீங்கள் உறங்கப் போகலாம்." ஈசான சிவபண்டிதர் இனிமையாகப் பேசினார்.

ஐந்நூறு இளைஞர்களும் அவரைத் தாண்டிப்போய் நெருக்கமாய் அமர்ந்து கொண்டார்கள். அவருக்குக் கற்பலகை புரட்டிப்போடப்பட்டது. அதன் மீது மான் தோல் விரிக்கப்பட்டது. அதில் அமர்ந்து கொண்டார்.

மெல்ல அந்தணர்களை உற்றுப் பார்த்தார்.



"நமது சக்ரவர்த்தி மிகப்பெரிய கோயில் கட்டுகிறார். உங்களுக்குத் தெரியுமல்லவா."

"தெரியும். எவ்வளவு பெரிய கோவில் என்று சொல்லப்பட்டதா."

"இங்குள்ள ஒரு நண்பர் அந்தக் கோவிலினுடைய உயரத்தைப்பற்றி சிலருக்கு விவரித்தார்.

அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஏழுபனைக்கும் அதிகமான உயரம் என்றும் சொன்னார்கள். இது சுத்தமான கோயிலாம். முழுவதும் கருங்கல்லால் செய்யப்படப் போகிறதாம். எந்த ஒரு கோவில் முழுவதும் செங்கல்லாலோ, முழுவதும் மரத்தாலோ செய்யப்பட்டால் அதற்குச் சுத்தமான கோயில் என்று பெயர். இது சுத்தமான கோவில் என்று சொன்னார்கள்.

ஆமாம். இந்தப் பணியில் நாமும் சக்ரவர்த்திக்கு உதவியாக ஏதும் செய்தாக வேண்டும். நிச்சயம் செய்ய வேண்டும்." என்று முன்வரிசையிலிருந்த இளைஞர்கள் ஆமோதித்தார்கள்.

"ஈஸ்வரனுடைய கிருபையிருந்தால் இந்தக் கோவில் ஐந்து வருடத்தில் செய்து விட்முடியுமென்று எனக்குத் தோன்றுகிறது. சற்று தாமதமானால் ஆறு வருடமாகலாம். அதற்கு மேலும் தாமதமானால் ஏழு வருடம் ஆகலாம். ஏழு வருடத்திற்கு மேல் செலவிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை. எனவே, இந்த ஏழு வருடமும் இந்தக் கோவில் கட்டுவதில் நம்முடைய உழைப்பை அவர்களுக்குத் தரவேண்டும்."

"எந்த மாதிரி உழைப்பு."

"கல் தூக்குதல் அல்ல. பயந்து விடாதீர்கள். கயிறு முறுக்குதலும் அல்ல. இங்குள்ள மறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கூலி கொடுப்பது பற்றி நாம் குறிப்பெடுத்து வைக்க வேண்டும். கற்கள் போனது பற்றியும், வந்தது பற்றியும் குறிப்பெடுத்து வைக்க வேண்டும். எத்தனை மாடுகள் வந்தன, எத்தனை மாடுகள் போயின என்று கணக்கெடுத்து வைக்க வேண்டும். இன்ன தேதியில், இன்ன நிலவரம் என்று சொல்ல வேண்டும். இது செய்வது ஒன்றும் கடினமல்ல இதைச் செய்துவிட்டே நம்முடைய வேதபாடத்தையும் நாம் படித்தாக வேண்டும். சொற்ப வருடகாலம் அரசனது பணியில் ஈடுபடுத்திக் கொண்டால் அரசன் மனம் மகிழ்ந்து தொடர்ந்து நம்மை ஆதரிப்பான் எனவே, நீங்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து

போய் விதம்விதமான கணக்குகள் எழுதவேண்டிய நேரம் வந்துவிட்டது."

"நாம் ஊருக்குத் திரும்புவது என்பது இயலாத விஷயமா."

"யார் சொன்னது. இந்த ஏழு வருடங்களுக்குப் பிறகு நல்ல சன்மானங்களோடு நீங்கள் ஊருக்குத் திரும்பலாம். ஊருக்குப்போய் திருமணமும் செய்து கொள்ளலாம்." என்று ஈசான சிவபண்டிதர் சொல்ல, சபை வாய்விட்டுச் சிரித்தது.

"அரசருக்கு உதவி செய்ய நீங்கள் முன்வர வேண்டும். இது வேண்டாமென்று இங்கு யாரேனும் நினைக்கிறார்களா."

யாரும் கைதூக்கவில்லை. மௌனமாக இருந்தார்கள்.

"ஏதேனும் கேள்விகள் இருக்கிறதா."

அவர் மறுபடியும் கேட்க, "இருக்கிறதய்யா." என்று ஒரு இளைஞன் எழுந்து நின்றான்.

"என்ன கேள்வி."

"அந்தணனுடைய வேலை கணக்கு எழுதுதல் அல்ல என்று தஞ்சையிலுள்ளவர்கள் சொல்கிறார்களே. அது சரியா, வேளாளர்கள் போர்க்காலங்களில் வாள் எடுத்துப் போகவில்லையா. வைசியர்கள் கோட்டைச் சுற்றி முற்றுகையிட்டால் கோட்டைக்குள் நின்று ஈட்டி எறிதலையும், வாள் வீசுதலையும் செய்யவில்லையா. அந்தணரெல்லாம்கூட போரில் ஈடுபடுவதுண்டே. அப்படியிருக்க, ஒரு மிகப்பெரிய அரசாங்கப் பணியில் நாம் ஈடுபடக்கூடாது என்று தற்போது சொல்வது பேதமையல்லவா. அதனால் வேதம் ஓதுதல் கெட்டுப் போய்விடுமா. தர்ப்பைப்புல் அறுத்துக் கொண்டு வரும்படி நாம் வேளாளரைக் கேட்கிறோம். வேளாளர்கள் இல்லாத ஊரில் அரிவாள் எடுத்துக் கொண்டு தர்ப்பைப்புல் அறுக்க அந்தணர்களே போவது வழக்கம். என் வேலை அரிவாள் பிடிப்பது அல்ல என்று எந்த அந்தணரும் சொல்வதில்லை. வேலை ஆக வேண்டும். அதுதான் முக்கியம்."

ஆனால், கணக்கு வைத்தலில் பிழை வந்து விட்டால் கையைக் கொதிக்கின்ற எண்ணெயில் முக்கச் சொல்வார்களாமே."

"இந்தக் காட்டுமிராண்டித்தனமெல்லாம் சோழ தேசத்தில் இல்லை. கணக்கில் ஏற்பட்ட பிசகிற்கெல்லாம் தண்டிக்க மாட்டார்கள். பொய்க் கணக்கு எழுதினால், கையூட்டு பெற்றால் அப்பொழுதுதான் தண்டனை கிடைக்கும். தமையனைக் குத்திக் கொலை செய்தவனையே இராஜராஜர் வெளியே போ என்று தேசப்பிரஷ்டம்தான் செய்தார். வெறுத்து ஒதுக்கினார். எனவே, இது குறித்து பயம் வேண்டியதில்லை."



"இல்லையே, சேரதேசத்திற்குப்போய் காந்தளூர்ச் சாலையை அடித்து நொறுக்கி அந்தணர்களைக் கொன்றதாகச் செய்திகள் உண்டே."

"ஆமாம், இடுப்பில் வாளும், தோளில் வில்லும் தாங்கி, விஷ அம்புகளை முதுகில் தாங்கி, பாண்டியர்களைக் கூட்டு சேர்த்துக் கொண்டு எல்லைப்புறத்து ஜனங்களை அடித்துத் துன்புறுத்தினால், குடிநீர் குளத்தில் விஷநீர் கலந்தால் விடுவார்களா. அப்பொழுது அடித்து நொறுக்கப்படத்தானே வேண்டும். அதைத்தான் சக்ரவர்த்தி செய்திருக்கிறார். எனவே, இம்மாதிரி விவாதங்களில் ஈடுபடாமல் மிகுந்த நம்பிக்கையோடு இறை உணர்வோடு நீங்கள் அரசருக்கு உதவி செய்தல் நல்லது."

"நீங்கள் உத்தரவிட்டு விட்டீர்கள் அல்லவா. சரியென்று சொல்லிவிட்டீர்களல்லவா. எனவே, இதை முழுமனதாகச் செய்கிறோம்."

"ஆனால்."

ஒரு இளைஞன் கைகட்டி உரக்கப் பேசினான்.

"என்ன ஆனால்.."

"நாங்கள் கணக்கு எழுதப்போனால் அதைக் கேலி செய்ய தஞ்சை அந்தணர்கள் தயங்க மாட்டார்கள். ஏதோ நாங்கள் இழிவான செயலுக்குப் போனதுபோல..." உரத்த குரலில் பேசி கேலி செய்வார்கள்."

"அவர்களைப்பற்றி மறந்து விடுங்கள் அவர்களுக்கு நேரம் சரியாக இல்லை. வேதம் கொடுக்க வேண்டிய அன்பும், அமைதியும் அவர்களுக்கு வரவில்லை. மாறாக வெறும் வெற்றுக்கர்வம் வந்திருக்கிறது. உலகத்திலேயே தாங்கள்தான் உன்னதமானவர்கள் என்ற திமிர் ஏற்பட்டிருக்கிறது. அதை இறைவனாகப் பார்த்துத் தண்டித்து தரையிறக்குவார். கவலைப்பட வேண்டாம். இப்போதைக்கு நாம் உறங்கப் போவோம் என்று ஒரு மரப்பலகையில் சாய்ந்து கொள்ள இரண்டு இளைஞர்கள் அவருக்கு மெல்லியதாய் விசிறினார்கள்.

இளைஞர்கள் அங்கங்கே சுருண்டு தூங்கினார்கள் மெல்ல காற்று வீசி அவர்களைத் தாலாட்டியது. விடியல் நேரம் ஒரு இளைஞன் வெளியே போய் சுக்கிரன் தெரிகிறதா என்று பார்த்தான். சுக்கிரன் ஒளியோடு மேலே வந்ததும் மெல்ல கொட்டகைக்குள் நுழைந்தான். மெல்ல ருத்ரம் சொல்லத் துவங்கினான். அந்த ஓசைகேட்டு இளைஞர்கள் எழுந்தார்கள். சோம்பல் முறித்தார்கள். எழுந்து நின்றார்கள். அவர்களும் ருத்ரம் சொல்லத் துவங்கினார்கள். வரிசையானார்கள். தளிக்குளம் நோக்கி மெல்ல நடந்தார்கள். மெல்ல புலரும் வேளையில் அந்த அந்தண இளைஞர்கள் சகலரும் குளத்தில் இறங்கி வாய்க் கொப்பளித்து, முகம் கழுவிக்கொண்டு குளத்தில் மூழ்கி எழுந்தார்கள். வேட்டியைப் பிழிந்து உலர்த்தினார்கள். வெயில் சுள்ளென்று அடிக்கும் வேளையில் இடுப்பு வேட்டியைக் கட்டிக் கொண்டு ஈசான சிவபண்டிதர் முன்பு வந்து நின்றார்கள். ஈசான சிவபண்டிதர் வந்திருக்கிறார் என்று அரண்மனைக்குச் செய்தி போயிற்று.

அந்த இளைஞர்கள் ஈசான சிவபண்டிதர் முன்பு குழு, குழுவாகப் பிரிந்து வேதபாடம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

பஞ்சவன்மாதேவி பெரிய பெரிய பாத்திரங்களில் பால் நிரப்பி அதை வண்டியில் ஆடாமல் வைத்து ஈசான சிவபண்டிதர் இருக்குமிடத்திற்கு அனுப்பினாள். வேறொரு வண்டியில் கூடைகூடையாய் அரிசியும், காய்கறிகளும் நகர்ந்தன. தனியே பசும்பால் காய்ச்சப் பட்டது. கழுவிய மண்சட்டிகளில் சூடான பால் தரப் பட்டது. சில அந்தண இளைஞர்கள் அடுப்பு மூட்டி அரிசியைக் களைந்து கொதிக்கின்ற உலையில் போட்டார்கள். காய்கறிகளை வேதம் சொல்லியபடியே நறுக்கினார்கள். கட்டுக்கட்டாய் வாழையிலைகள் வந்து இறங்கின.

ஐநூறு பேரில் இருபது பேர் சமையல் வேலை கவனித்துக் கொள்ள மீதியுள்ளோர் மெல்ல வரிசையாகக் கோவில் கட்டும் இடம் நோக்கி யஜுர் வேதம் சொல்லியபடியே வலம் வந்தார்கள். யானை விழுந்த இடத்தைச் சுட்டிக்காட்டினார்கள். ஈசான சிவபண்டிதர் விவரம் கேட்டுவிட்டு உச்சிஷ்டகணபதியை இங்கே சொல் என்று பத்து இளைஞர்களை நிற்க வைத்தார். உச்சிஷ்ட கணபதியின் ஸ்தோத்திரத்தையும், மூல மந்திரத்தையும் அங்கு நின்று அந்த இளைஞர்கள் ஜபித்தார்கள். இந்த இடத்தில் நில். இங்கே வராஹியைச் சொல் என்று ஈசான சிவபண்டிதர் சொல்ல, அங்கு பத்து இளைஞர்கள் நின்று வராஹியின் மந்திரத்தைச் சொன்னார்கள். வேறொரு இடத்தில் இந்திரனைப்



புகழ்ந்து பாடினார்கள். இன்னொரு இடத்தில் குபேரனைப் புகழ்ந்து சொன்னார்கள். இன்னொரு இடத்தில் ஈசான்ய தேவதை பற்றி உரக்கப் பாடினார்கள். ராஜஸ்யாமளாவைச் சொன்னார்கள். ப்ரத்யங்கராவின் மந்திரத்தை ஒரு மூலையில் உரக்கச் சொன்னார்கள். காலபைரவரை ஒரு இடத்தில் சூலமாகப் படமெழுதி வரித்து அந்த இடத்தில் ‘சத்ருநாசம் செய்கின்ற காலபைரவரே! உனக்கு வணக்கம்’ என்று போற்றினார்கள்.

அஸ்திவாரம் தோண்டுகின்ற மறவர்களும், அவர்களுக்குத் துணையாக இருந்த சிற்பிகளும் இந்த அந்தண இளைஞர்கள் வேதம் சொல்லுவதைப் பார்த்துவிட்டுக் கைகூப்பினார்கள். தங்கள் வேலையில் ஈடுபட்டார்கள். இப்படியொரு விஷயம் நடந்து கொண்டிருக்கிறது என்ற செய்தி பஞ்சவன்மாதேவியை நோக்கிப் போயிற்று. பஞ்சவன்மாதேவி சிரித்துத் தலையாட்டினாள்.

ஈசான சிவபண்டிதர் வந்துவிட்டாரல்லவா.. இனி கவலையில்லை என்று சொன்னாள். அந்தச் செய்தியைச் சொல்ல அரசரை நோக்கி நகர்ந்தாள்.

அரண்மனையைச் சுற்றியுள்ள தஞ்சை அந்தணர்கள் ஈசான சிவபண்டிதர் வந்திருப்பது தெரியாது கோட்டைக்குள் நுழைந்து, அரண்மனை வாசலில் காத்திருந்தார்கள். அரசரை வாழ்த்திப் பாடினார்கள். இராஜேந்திரசோழர் முகம் கழுவிக் கொண்டு பால் அருந்திவிட்டு தந்தையைப் பார்க்கத் தரையிறங்கினார்.

அந்தணர் ஒருவர் முன்வந்து, “அரசருக்கு வணக்கம். அரசருக்கு வாழ்த்துக்கள். அரசர் நீடூழி வாழ வேண்டும். உங்களுக்கு ஒரு விண்ணப்பம். வேதம் படிப்பதைத் தவிர்த்து வேறெந்தத் தொழிலும் அந்தணர்களாகிய நாங்கள் செய்ய முடியாது. எனவே, எங்களுக்குக் கணக்கு எழுதும் வேலையோ அல்லது வேறு கட்டிட வேலையோ கொடுக்காது இருக்கும்படி நாங்கள் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறோம் எங்கள் வேலை வேதம் படிப்பது மட்டுமே. வேதம் படிப்பது மட்டுமே.” என்று சொல்ல, இராஜேந்திரர் ஓரமாய் ஒரு மர ஆசனத்தை எட்டி உதைத்தார். அது பெருத்த சப்தத்துடன் தரையில் விழுந்தது. போய் சக்ரவர்த்திக்கு அருகே உட்கார்ந்து கொண்டார்.

“தந்தையே! இவர்களை என்னிடம் விட்டு விடுங்களேன்.” என்று அடிக்குரலில் கெஞ்சினார்.

"வேண்டாம்." என்று சக்ரவர்த்தி தலையசைத்தார்.

ஆனால், அவரும் கோபமாக இருந்தார்.

"நல்லது. உங்களுடைய நிலையை நான் புரிந்து கொண்டேன். ஆயினும், கோவில்பணி உங்கள் உதவி இல்லாமல் தொடர்ந்து நடக்கும். நீங்கள் போய் வரலாம்." கைகூப்பினார்.

அரசரிடம் எத்தனை பேர் வந்தாலும் எவ்வளவு முறை வந்தாலும் அரண்மனைக்குள் நுழைந்தவர்கள் வெறும் கையோடு திரும்பமாட்டார்கள். ஆனால், அன்று வந்திருந்த இருபது அந்தணர்களும் வெறுங்கையோடு திரும்பினார்கள்.

அரசர் கோபமாக இருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஆனால், மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை.

குதிரையில் வந்திறங்கிய சேனாதிபதி கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரைச் சந்தித்து வணக்கம் சொல்லி அரசரிடம் தாங்கள் பேசியதைத் தெரிவித்தார்கள்.

"பூனை கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடுமா. நீங்கள் வரவில்லையென்றால் எதுவும் நின்றுவிடுமா. வேதம் சொல்லிக் கொண்டிருங்கள். வேதத்தையாவது ஒழுங்காகச் சொல்லிக் கொண்டிருங்கள். நீங்கள் போகலாம்." அவரும் கோபமாகச் சொல்லிவிட்டுப் போனார். எல்லா அந்தணர்கள் முகமும் பொலிவிழந்து, தெளிவிழந்து காணப்பட்டது.

பஞ்சவன்மாதேவி அந்தணர்கள் கோவில் கட்டுமிடத்தைச் சுற்றி வலம் வருகிறார்கள். விதம் விதமான மந்திர உச்சாடனங்கள், குழுக்குழுவாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல அரசர் முகம் சுருக்கினார்.

"இல்லை தாயே.. அப்படியல்ல.. நாங்கள் கோவில் பணிக்கு வரமாட்டோம் என்று இப்பொழுதுதான் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்."

"யார்."

"தஞ்சை அந்தணர்கள்."

"இல்லை. நான் சொல்வது வேறு. நடுநாட்டிலிருந்து, திருமுனைப்பாடியிலிருந்தும், தொண்டை நாட்டிலிருந்தும் வந்த இளைஞர்கள் ஈசான சிவபண்டிதரின் தலைமையின் கீழ் உட்கார்ந்திருக்கிறார்கள். பண்டிதர் வந்துவிட்டார். நேற்று இரவ அவரைச் சந்தித்துப் பார்த்துப் பேசினேன். உங்களிடம் மிக முக்கியமான விஷயம் சொல்வதற்காக வந்திருக்கிறேன் என்று சொன்னார்.



அந்த அந்தண இளைஞர்கள் கணக்கெழுத வேண்டும். கோவில் பணியில் உதவவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டாராம். அந்த அந்தண இளைஞர்கள் கேள்விகள் கேட்டுவிட்டு சரியென்று ஒப்புக் கொண்டார்களாம். கணக்கு எழுதுவதற்கு அவர்களே சில திட்டங்களும் தயாரித்து வைத்திருக்கிறார்களாம். அதைப்பற்றியும் அவர்களிடம் பேசினார்களாம்."

சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜராஜத்தேவர் முகம் மலர்ந்தார். திரும்பி இராஜேந்திரரைப் பார்த்தார்.

"நல்லது. அவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுத்து விடலாம். இப்படி வந்து உதவி செய்கிறேன் என்று நின்ற அந்த அந்தணர்களைத் தனிக்குழுக்களாகத் தனி அடையாளத்துடன் வைத்து விடுவோம். அந்த இளைஞர்களுக்கு என்ன தருவது. என்ன அடையாளம் தருவது." என்று வினவினார்.

"வெள்ளிக்கம்பியில் ருத்ராட்சம் போட்டு கழுத்தில் மாட்டிக் கொள்ளச் சொல். எல்லோருக்கும் எடுத்தவுடன் ஒரு பொற்காசு கொடு. இடுப்புத்துணியும், மேல் துணியும் கொடு. அவர்களை அரண்மனைக்கு அழைத்து வந்து இரவு தங்கவை. இரவு உணவு கொடுத்து மறுநாள் காலையில் நாம் சந்திக்கும்படி ஏற்பாடு செய்.

பஞ்சவன்மாதேவி இது உன் பொறுப்பு.

நான் ஈசான சிவபண்டிதரை நாளையே சந்திக்கிறேன். இப்போது குஞ்சரமல்லரோடு உட்கார வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. குஞ்சரமல்லர் இன்று காலையில் சந்திக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். புதிய முறை ஒன்று கோயில் கட்டுவதுபற்றி கண்டுபிடித்திருக்கிறார்களாம். அதை விவாதிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்.

இந்த விஷயத்தைத் தள்ளிப்போட முடியாது என்று ஈசான சிவபண்டிதரிடம் சொல். இராஜேந்திரா வந்தியத்தேவருக்கு ஆள் அனுப்பு. முடிந்தால் குந்தவையையும் வரச் சொல். பழுவேட்டரையரும் நம்மோடு வரட்டும் மூவேந்த வேளாருக்கும் ஆள் அனுப்பு."

"பெருந்தச்சர் இங்கு வருகிறாரா."

"இல்லை. நாம் பெருந்தச்சரை நோக்கிப் போகிறோம். ஏனெனில் அங்குதான் மெழுகினால் ஏதோவொரு உருவம் செய்து. அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எனவே, நாம் அனைவரும் அங்கே போகிறோம்."

"வேறு யார் வந்தால் நன்றாக இருக்கும்."

"கருவூர்த்தேவர் வந்தால் நன்றாக இருக்கும். அவர் எங்கிருக்கிறார்? பிரம்மராயரே உமது மகன் அருண்மொழி பட்டன் எங்கே. நீங்களும் உங்கள் மகனும் கருவூர்த் தேவரோடு குஞ்சரமல்லப் பெருந்தச்சரோடு வந்துவிட முடியுமா."

"கருவூர்த்தேவர் நிசும்பசூதனி கோவிலில் படுத்துக் கொண்டிருக்கிறார். அங்கு அவருக்குப் பணிவிடை செய்ய ஊர்மக்கள் தயாராக இருக்கிறார்கள். அருண் மொழி பட்டன் எழுந்து யோகாசனங்கள் செய்து கொண்டிருக்கிறான். அவனையும் நான் வரவழைத்து விடுகிறேன்."

அரண்மனை பரபரத்தது. தஞ்சை அந்தணர்கள் கோட்டை வாசலிலேயே நிற்க, தேர்கள் காற்றைக் கிழித்தபடி அவர்களைத் தாண்டி தென்திசையிலுள்ள குஞ்சரமல்லர் வீடு நோக்கி விரைந்தன.

"புதிதாகக் கட்டப்பட்ட வீட்டில் புதிதாக ஒரு பெண் திருவாரூரிலிருந்து வந்திருக்கிறாள். உமையாள் என்று பெயர். தாயின் பெயர் சுந்தரி. அந்தப் பெண்களை ஒரு நல்ல வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் பெருந்தச்சரிடம் அறிமுகப்படுத்திவிட்டு வா. பெருந்தச்சருக்கு ஒருகால் மறந்திருக்கும். ஆனால் சீராளன் ஓவியம் வரைவதற்கு உண்டான பெண் என்று சொல்லிவிடு. அப்போது புரிந்து கொள்வார். நீ போகலாம்.

சீராளன் அவனுக்கு உத்தரவு கொடுத்து அந்த உமையாள் உருவத்தை மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்தினான்.

அவள் வெட்கப்பட்டால் எப்படியிருக்கும்? வரைந்தான். வாய்விட்டுச் சிரித்தால் எப்படியிருக்கும்? வரைந்தான். அலட்சியமாகப் பார்த்தால் எப்படியிருக்கும்? வரைந்தான். கோபமாகப் பார்வையிருப்பின் எப்படியிருக்கும்? வரைந்தான். முகத்தின் வெளிவடிவம் அவன் நெஞ்சில் அழகாகப் பதிந்திருந்தது. கன்ன மேடுகளும், முகவாய்க்குழியும் பெரிய விழிகளும்தான் உமையாளுடைய அழகுக்கு அழகு சேர்க்கிற விஷயம். இன்னும்



நல்ல உணவுகள் கொடுத்து அவளைச் சற்று பருக்கச் செய்தோமென்றால் அவள் அங்கங்களும், பிருஷ்டங்களும் நன்கு வளர்ந்து வரைவதற்குத் தோதாக அமையும். முதுகெலும்பு எப்படியிருக்கிற தென்று பார்க்க வேண்டும் பிருஷ்டத்திற்குக் கீழேயுள்ள தொடைச் சரிவு, கவனமாக வரைய வேண்டும். அவள் குள்ளம்தான். கால் அளவு தவறாக வரைந்துவிட்டால் இன்னும் குள்ளமாகக் காட்சியளித்து விடுவாள். பருமனாகிவிட்டால் இடுப்பு வளையுமோ. அந்தப் பிரச்சினை வேறு இருக்கிறது. இடுப்பும் வளைய வேண்டும். சற்று சதைப்பற்றாகவும் இருக்க வேண்டும்.

அந்தப் பெண்ணைப் பற்றி சித்திர ரூபமாகவே சீராளன் சிந்தித்து வந்தான். அவனுள் வேறு எந்த அசைவும் வரவேயில்லை.

உமையாளுக்கு இரவு முழுவதும் சீராளன் நினைப்பாகவே இருந்தது. சுற்றியுள்ள பெண்கள் சீராளனின் புகழ் பாடினார்கள்.

"அடடே.. சீராளன் வரைவதற்காக வந்திருக்கிறாயா! அம்ஸமாக ஓவியமாகத்தான் இருக்கிறாய். நிம்மதியான வாழ்க்கை. எங்களைப்போல் நடுத்தெருவில் உடை நெகிழ ஆட வேண்டாம். எல்லார் பார்வையும் படவேண்டாம். இனிமேல் சீராளனோடு பேசிச் சிரித்து நின்றால் போதும். நிழலான வேலை. நிம்மதியான வேலை. அதுவும் தவிர சீராளனுக்கு இருக்கிற செல்வாக்கு இந்தச் சோழதேசத்தில் வேறு எவருக்கும் இல்லை.

குணசீலன் என்றொரு இளைஞன் பாண்டிய தேசத்தவன். கோயில் கட்டுவதற்குப் பல்வேறு விதங்களில் உதவி செய்கிறான். அடிமை வீரனாக இருந்தாலும் மிகப்புத்தி கூர்மையுடையவன். அவனுக்கு இணையாக புத்திக்கூர்மையுடைய ஆள் இங்கு சீராளன்தான் என்று சொல்லப்படுவதால் சோழ தேசத்து அரசாங்கம் அவனை உள்ளங்கையில் வைத்திருக்கிறது.

பெருந்தச்சர் சீராளனைச் சொந்தப் பிள்ளையாய்ப் பாவித்து வருகிறார். பெருந்தச்சர் வந்து நின்றால் சோழதேசமே எழுந்து நிற்கிறது. சக்ரவர்த்தியே மிகுந்த மரியாதை கொடுத்து வணக்கம் சொல்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளேன். நீ அழகி மட்டுமல்ல அதிர்ஷ்டக்காரியும் கூட. ஒரு வேளை எங்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருந்தால் உன் மூலமாகச் சொல்லி வைக்கிறோம். நீ கொஞ்சம் பார்த்துச் சீராளனிடம் பேசு." என்றெல்லாம் சொல்ல, உமையாளுக்கு மனம் குதூகலித்தது.

திருவாரூரில் ஏற்பட்ட பயம் மெல்ல நீங்கியது போல் இருந்தது. ஒரு நம்பிக்கை வந்தது. தியாகேசர் கைவிடவில்லை. நல்ல இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார் என்று மனம் குவிந்து தியாகேசரை வணங்கியது.

அம்மா ஒரு தைய்யானிடம் பேசிக் கொண்டிருந்தாள். சித்தி பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். பாலில் தேன்விட்டு கஞ்சியில் கலந்து நன்கு ஆற்றி அவள் முன்பு வைத்தாள். இரண்டு வாழைப்பழங்கள் உரித்து வெல்லத்தூளில் புரட்டி இலையில் வைத்தாள். வாழைப்பழத்தோடு கஞ்சி குடித்ததும் உடலில் புத்துணர்ச்சி பரவியது. சதங்கையை இறுக்கக்கட்டி ஒரு ஆட்டம் போட வேண்டுமென்று தோன்றியது. ஆனால், அதற்குள் வாசலில் சத்தம் கேட்கவே அவள் போய் கதவைத் திறந்தாள். "உடனடியாக உங்களைப் பெருந்தச்சரிடம் அழைத்துப் போகும் படி சீராளன் உத்தரவிட்டிருக்கிறார். பெருந்தச்சர் உங்களுக்காகக் காத்திருக்கிறார். எனவே தாமதம் செய்யாமல் கிளம்புங்கள்" என்று சற்று அதட்டும் குரலில் அந்த குதிரைச் சேவகன் சொன்னான். சுந்தரி பரபரத்தாள்.

சித்தி சீராக உடுத்திக் கொண்டாள்.

அவர்கள் விரைவாக வண்டி ஏறினார்கள். அந்தத் தெருவிலுள்ள அத்தனை பேரும் வீட்டு வாசலுக்கு வந்து அவர்கள் வண்டி ஏறுதலை வேடிக்கை பார்த்தார்கள்.

"இப்போது எங்கே போக வேண்டும்?" வண்டி யோட்டி கேட்டான்.

"எனக்குத் தெரியாதே."

"எங்கே போக வேண்டும் என்று சொல்கிறீர்களோ அங்கே போகலாம்."

"அந்தக் குதிரை வீரன் எங்கே."

"அவர் என்னைக் கொண்டு வந்து விட்டுப் போய் விட்டாரே."

"உங்களிடம் சொல்லவில்லையா எங்கே போக வேண்டுமென்று.." வண்டியோட்டி கேட்டான்.

"பெருந்தச்சரிடம் போகவேண்டுமென்று சொன்னார்."

"பெருந்தச்சர் எங்கே இருக்கிறார்."



வண்டியோட்டி கேட்டான்.

"என்னப்பா கேட்கிறாய். நாங்கள் இந்த ஊருக்கு நேற்றுதான் வந்தோம். பெருந்தச்சர் எங்கே இருக்கிறார் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்? நீ இந்த ஊர்தானே."

"நான் இந்த ஊர்தான். பெருந்தச்சர் பல இடங்களில் இருப்பார். எந்த இடத்திற்குப் போக வேண்டுமென்று சொன்னால்தானே போகமுடியும்."

"இது என்னடி.. போதாத காலம். எங்கே போக வேண்டுமென்று அழைத்துப் போகாமல் தனியே விட்டுப் போனால் என்ன செய்வது."

"அம்மா... நாம் நேராகச் சீராளன் வீட்டிற்குப் போகலாம்."

உமையாள் அம்மாவிடம் சொல்ல, அம்மா வண்டியோட்டி யிடம் சொல்ல, வண்டி சீராளன் வீட்டு வாசலுக்குப் போய்த் தயங்கித் தயங்கி நின்றது.

அவன் வீட்டைக் கடந்து இரண்டு வீடு தாண்டி நின்றது.

வண்டியிலிருந்து அம்மாவும், சித்தியும் இறங்கினார்கள். உமையாளையும் இறங்கச் சொன்னார்கள். மூன்று பேரும் சுவரோரம் பதுங்கி அந்தக் குடிசை வீட்டிற்குள் நுழைய வாசலில் நான்கு குதிரை வீரர்கள் வந்தார்கள். கீழிறங்கினார்கள். தடதடவென்று உள்ளே ஓடினார்கள்.

ஒரு இரண்டு சக்கரத் தேரும் வந்து நின்றது.

"கூட்டம் ஆரம்பித்துவிட்டது. அரசரும், இளவரசரும் உங்களை உடனே வரச்சொல்கிறார்கள்."

"நான் எதற்கப்பா. எனக்கு இங்கு வேலைகள் அதிகம் இருக்கின்றன."

"எங்களுக்குத் தெரியாது ஓவியரே. நீங்கள் வேண்டாமென்று தான் பெருந்தச்சர் சொன்னார். ஆனால், அரசரும், இளவரசரும் நீங்கள் வந்தே ஆக வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். குணசீலனும் உங்கள் வருகையை வற்புறுத்தினார். நீங்கள் வந்தால் நன்றாக இருக்கும். ஏன் முன்கூட்டியே சொல்லவில்லை என்று எங்கள் இருவரையும் கோபித்துக் கொண்டார்." ஒரு வீரன் பதட்டமாய்ச் சொல்ல மற்றவர்கள் பரிதாபமாக அவனைப் பார்த்தார்கள்.

"என்னய்யா இது. காலையில் செய்த சில கரிக்கோட்டு ஓவியங்களை நான் முழுதாகச் செய்துவிட்டு அரசரிடம் எடுத்து வரலாம் என்று இருந்தேன். சட்டென்று வரச்சொன்னால் நான் என்ன செய்வேன். சற்று இரு." என்று சொல்லி உமையாளின் படத்தை மடியில் வைத்துக் கொண்டு மடமடவென்று அதன் மீது கரிப்பொடி தீட்டி, அதற்குப் புடைப்பு உருவம் கொடுத்தான். கோடுகளைச் சீராக்கினான். வாயால் ஊதினான்.

ஒரு பலகையின்மீது படத்தை வைத்துவிட்டு அந்தப் படத்தின் மீது ஈரத்துணியைத் தடவி விட, கரிப்பொடிகள் எங்கும் பரவாமல் அதிலேயே அழுந்தி நின்று கொண்டன. "இதைக் கொண்டுபோய். வெய்யிலில் வை. நான் கைகழுவிக் கொண்டு வருகிறேன்" என்று சொன்னான்.

அந்த வீரன் அந்தப் படத்தை வாங்கி வெயிலில் நீட்டினான்.

அந்தப் படத்திற்கருகே உமையாள் நின்றிருந்தாள்.

'இவ்வளவு அழகா நான்' என்று வியந்தாள். 'அம்மா..' என்று பரவசப்பட்டாள். அம்மாவை அழைத்தாள். அம்மாவும் எட்டிப்பார்த்தாள்.

"அடியே.. நீதானடி.. நீயேதான். என்ன அழகாக வரைந்திருக்கிறார்."

சித்தியும், அம்மாவும் பரவசப்பட்டார்கள்.

அந்தப் படத்தை இன்னும் தாழ்த்திக் காட்டச் சொல்ல, அவன் தாழ்த்திக் காட்டினான்.

"நம்மிடம் கொடுத்ததை விட இந்தப்படம் இன்னும் நன்றாக இருக்கிறது. அந்தக் கைகள் என்ன விரைவாக வேலை செய்கின்றன."

சித்தி பரவசத்தோடு புகழ்ந்தாள்.

அவள் கேட்கின்ற நேரம் சீராளன் வெளியே வந்தான்.

"அட.. என்ன இங்கு நிற்கிறீர்கள்." என்று உமையாளைப் பார்த்து வியந்தான்.

"பெருந்தச்சரிடம் போகவேண்டுமென்று சொன்னீர்களாம். பெருந்தச்சர் எங்கேயிருக்கிறார் என்று மாட்டு வண்டிக் காரருக்குத் தெரியவில்லை. எனவேதான் பெருந்தச்சரை விசாரிக்க உங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம்."



சித்தி விரைவாகப் பதில் சொன்னாள்.

சீராளனையே உமையாள் கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அடடே... இன்னும் பெருந்தச்சரையே பார்க்க வில்லையா. யார் உங்களுக்குத் தகவல் சொன்னது. தகவல் சொன்னவன் ஏன் விரைந்து திரும்பினான். முட்டாள் பெருந்தச்சரின் பெரிய வீட்டிற்கு வண்டிக்காரனை வரச் சொல்லுங்கள்."

அவன் வேகமாகப் படியிறங்கினான். அவன் தேரில் ஏறிக்கொள்ள நான்கு வீரர்களும், நான்கு புறத்தில் வேல் பிடித்து நின்றார்கள். ஒரு இளவரசன்போல கம்பீரமாய்த் தேர்மீது நின்று கொண்டு சாரதியை உம்.. என்று சொல்ல வண்டி திரும்பியது.

சட்டென்று சாரதியின் தோளில் கைவைத்து வண்டி எடுக்கச் சொன்னான்.

உமையாளை அழைத்தான். உமையாள் அவனிடம் ஓடினாள். 'தேரில் ஏறிக்கொள்' என்று கட்டளையிட்டான். சட்டென்று எந்தத் தயக்கமும் காட்டாது தேரில் கால்வைத்து தேரின் வளைந்த பிடியைப் பிடித்துக் கொண்டாள். அவள் தாயையும், சித்தியையும் பெரிய வீட்டிற்குக் கொண்டு வா என்று வண்டிக்காரனைக் கட்டளையிட்டான்.

அந்தப்படம் எங்கே என்று குதிரை வீரனிடம் கேட்டான். குதிரைவீரன் அந்தப் படத்தைக் கொண்டு வந்து கொடுக்க படத்தை வண்டியின் முன்பக்கம் வைத்துக் கொண்டான். தேரோட்டி குத்திட்டு அமர்ந்து கொள்ள உமையாளும், சீராளனும் வண்டியின் வளைவைப் பிடித்துக் கொண்டு நின்று கொள்ள படத்தை வண்டியின் முன்பக்கம் ஆடாது செருகி வைத்தான். அந்தச் சிறிய தேர் சிலிர்த்துக் கொண்டு கிளம்பியது. பெண்கள் இப்போதும் வீட்டிலிருந்து இறங்கி வந்து வேடிக்கை பார்த்தார்கள்.

தேர் தஞ்சையின் புறம்படியைத் தாண்டியது. புறம் படியிலுள்ள அங்காடிக்குள் நுழைந்தது. அங்காடியிலுள்ளவர்கள் எழுந்து நின்று வணக்கம் சொன்னார்கள். படத்தையும், படத்திற்கு பின்னே நிற்கின்ற உமையாளையும் பார்த்துவிட்டு அதோ.. அதோ என்று கைகாட்டி வியந்தார்கள். அழகு... அழகு... என்று யாரோ சொல்கின்ற குரல் உமையாளுக்குக் கேட்டது. உமையாள் பல்வேறு விதமான உணர்ச்சிகளுக்கு ஆளாகினாள்.

உள்ளாலையில் மெல்லப் போய்க் கொண்டிருந்த தேர் சற்று விரைவு கண்டது. விரைவு கண்டதும் தேர் வேகமாக ஆடியது. தேருக்குள் இருந்த உமையாள் பழக்கமின்மை காரணமாக முன்னும் பின்னும் அலைந்தாள்.

என்ன. பயமாக இருக்கிறதா என்று சொல்லி சீராளன் அவள் தோளை அழுந்தப் பற்றிக் கொண்டான்.

தேர் ஒரு கல்மீது ஏறி ஆடியது. அவன்மீது மொத்தமாக அவள் சாய்ந்தாள். அவன் அவள் இடுப்பை இறுக்கப் பிடித்துக் கொண்டான். கட்டையைப் பிடித்துக் கொண்டு உறுதியாக நில் என்று சொன்னாள்.

அவள் இரண்டு கையாலும் தேரின் வளைவுகளைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

வண்டி இப்பொழுது மிகுந்த சீரான பாதையில் ஓடத் துவங்கியது. அங்கேயுள்ள மக்கள் திரும்பிப் பார்த்தார்கள். குதிரை வீரர்கள் நேராக நின்றார்கள். சிற்பிகள் கையசைத் தார்கள். அவருடைய மேல்துணி காற்றில் பறந்தது. பெரிய தோட்டத்திற்குள் நுழைந்தது. இரண்டுபுறமும் மாமரங்களும், வேப்ப மரங்களும் அடர்ந்த சாலைக்குள் ஓடிற்று.

மெய்க்காவல் படை வீரர்கள் குதிரையை அருகே கொண்டு வந்து தேரை நிறுத்தினார்கள்.

"சீராளன் அவர்களா... வணக்கம். இது யார்" என்று அவளைச் சுட்டிக்காட்டினார்கள்.

படத்தைப் பார்த்து அட.. என்று வியந்தார்கள்.

"இது உமையாள். திருவாரூரிலிருந்து வந்திருக்கின்ற தேவரடியார்."

"இவர் எதற்கு இங்கு வந்திருக்கிறார்."

மடக்கி நிறுத்தினார்கள்.

"பெருந்த்ச்சரைப் பார்க்க வேண்டும்."

"பெருந்தச்சர் மட்டுமில்லையே... சக்ரவர்த்தியும், இளவரசரும், வந்தியத்தேவரும் இருக்கிறார்கள். அவர்களை இந்தப் பெண் பார்க்க வேண்டியது அவசியமா."

"இல்லை."



"அப்படியெனில் அனுமதிக்க முடியாது. இவள் வருவதாகவும் எங்களுக்கு எந்தத் தகவலும் இல்லை. எனவே, நீங்கள் மட்டும் போய் வாருங்கள். இந்தப் பெண்ணை இறக்கி விட்டு விடுங்கள். ஏய்.. இறங்கு."

அவன் அதட்டினான்.

சீராளனுக்கு மெல்லிய கோபம் வந்தது.

"மெய்க்காவல் வீரரே! இந்தப் பெண்ணை நான் என் பாதுகாப்பில் அழைத்துப் போகிறேன். இவளை வரச்சொல்லி உத்தரவில்லையெனினும் இவளைக் காட்டச் சொல்லி எனக்கொரு கடமை இருக்கிறது. இவளைக் கொண்டு போய் சக்ரவர்த்தியிடம் அறிமுகப்படுத்தி பெருந்தச்சரிடம் பேசி நான் என்ன வேலை செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல இந்தப் பெண் அவசியமாகிறது. எனவே இவளை அனுமதித்தாக வேண்டும்."

"இல்லை. அனுமதிக்க முடியாது. அனுமதிக்க வேண்டுமானால் தயவு செய்து நீங்கள் போய் அனுமதி வாங்கி வாருங்கள்."

"சொல்வதைக்கேள் இளைஞனே. இந்தப் பெண் எனக்குத் தேவை. இவளுடைய வேலை அங்கு சில வினாடிகள். இவளைச் சக்ரவர்த்தி பார்த்ததும் ஓரிரு வார்த்தைகள் பேசித் திருப்பி அனுப்பி விடுவேன்."

"இல்லை ஐயா, இவளை அனுமதிக்கச் சொல்லி எனக்கு உத்தரவே இல்லை. உத்தரவில்லாத எவரையும் அரசரும், இளவரசரும், வந்தியத்தேவரும் இருக்கின்ற இடத்திற்கு அனுப்பவே முடியாது."

"ஒரு பெண்ணால் என்ன ஆபத்து வந்துவிடும்."

"அதுபற்றி எனக்கு அக்கறையில்லை. எவராயினும் எனக்குத் தடுத்து நிறுத்த உத்தரவு உண்டு."

"முட்டாள்தனமாய் பேசுகிறாய்."

"இருக்கலாம். அதுபற்றி உங்களுடைய அபிப்ராயத்தைக் கேட்கவில்லை. நான் அனுமதிக்க முடியாது."

"அடேய்.. இறங்கு."

சீராளன் வண்டி ஓட்டியை அதட்டினான். குத்திட்டு உட்கார்ந்திருந்த வண்டியோட்டி சட்டென்று இறங்கினான்.

அவன் கையிலிருந்த சேணத்தை சீராளன் பறித்துக் கொண்டான். சடேரென்று சொடுக்கினான். குதிரை மிரண்டு எகிறியது. வலக்கையில் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு குதிரையை வேகமாக ஓட்ட குதிரை வேகமாக ஓடிற்று.

மெய்க்காவல் படைவீரன் பின்னால் துரத்திக் கொண்டு வர துரத்துவதைப் பார்த்து மற்ற மெய்க்காவல் படைவீரர்கள் குதிரையைத் திருப்பி தேரைத் துரத்த, குதிரையை மடக்குவதற்காக ஒரு குதிரைவீரன் முன்னே வர, அவனை இடித்துத் தள்ளிக் கொண்டு தேர் ஓட அங்கு ஒரு பெருங்கூச்சல் எழுந்தது. குழப்பம் மிகுந்தது.

பக்கத்திலுள்ள மெய்க்காவல் வீரர்கள் வாள் உருவி நின்றார்கள்.

தேரில் வருவது சீராளன் என்று தெரிந்ததும் தயங்கி நின்றார்கள். தொலைவில் சப்தம் கேட்டதும் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயர் கண் உயர்த்தினார்.

அருண்மொழிப்பட்டன் சட்டென்று இடக் கையில் வாளை வைத்துக் கொண்டு கூடம்விட்டு வெளியே வந்தான்.

சீராளனைச் சுற்றி வீரர்கள் நெருங்குவதைப் பார்த்து 'ஏய்..' என்று ஒரு உரத்த குரலில் அதட்டினான்.

வீரர்கள் தயங்கி நின்றார்கள்.

"என்ன இது. ஓவியரை என்ன செய்கிறீர்கள்."

"ஓவியர் நிற்காமல் தேரைச் செலுத்துகிறார். கூட வந்த பெண் யாரென்று கேட்டால் சரியான பதில் இல்லை. எனவே தடுத்து நிறுத்தினோம். அனுமதிக்க மறுத்தோம்." மூச்சிரைக்க ஒரு மெய்க்காவல் வீரன் சொல்ல, "சீராளரே.. இது முக்கியமான சபை. அரசரும், இளவரசரும் இருக்கின்ற இடம். இந்த இடத்திற்கு எவரையும் அழைத்து வருவது நல்லதல்ல."

"காரணமின்றி நான் எதையும் செய்யவில்லை அருண் மொழிப்பட்டரே. இந்தப் பெண்ணை பெருந்தச்சருக்கும், சக்ரவர்த்திக்கும் அறிமுகப்படுத்த வேண்டும். என்னுடைய திட்டத்தை இந்தப் பெண்ணை முன் மாதிரியாக வைத்து விளக்க வேண்டும்."

"எது வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு முறையோடு செய்ய வேண்டும்."



"எதுமுறை.. என்ன முறை. நீங்கள் எனக்குச் சொல்லித்தந்து புரிந்து கொள்ள வேண்டிய நிலையில் நான் இல்லை."

சீராளன் வேகமாகப் பதில் சொன்னான்.

அருண்மொழிப்பட்டருக்குக் கோபம் தலைக் கேறியது.

"உங்களுக்குத் தெரிந்த முறையை நீங்கள் பின்பற்றுங்கள். எனக்குத் தெரிந்த முறையை நான் பின்பற்றுகிறேன். இந்த ஓவியரை உள்ளே அனுமதிக்க வேண்டாம்."

சொல்லிவிட்டு அருண்மொழிப்பட்டன் திரும்பினான். திரும்பிய வேகத்தில் கிருஷ்ணன்ராமனான பிரம்மராயர் மேல் முட்டிக் கொண்டான்.

"என்ன அருண்மொழி. என்ன ஆயிற்று உனக்கு. அவன் இளைஞன். அறியாச் சிறுவன். அவனிடம் போய் முட்டுகிறாயே. உன்னுடைய ஒரு பிடிக்குக் காணுவானா. விவரம் புரியாமல் அவன்தான் முறைத்துப் பேசுகிறான் என்றால் நீயும் ஏன் அவ்விதம் நடந்து கொள்கிறாய். கண்டிப்பாகப் பேசு. ஆனால், கனிவாகப் பேசு. ஓவியரே.."

அருண்மொழிப்பட்டனைத் தள்ளிவிட்டு சீராளனை நோக்கி நடந்தார்.

"ஓவியரே.. ஏன் படபடப்பாகப் பேசுகிறீர். இந்தப் பெண்ணை உள்ளே அழைத்துப் போகவேண்டும் அவ்வளவு தானே. முன் அனுமதி பெற்றிருந்தால் மிக எளிதான காரியம் இது. அனுமதி பெறவில்லையென்றால் நீங்கள் அவளை இறக்கி விட்டு உள்ளே வந்து அனுமதி பெற்று பிறகு அழைத்துப் போகலாம் தாயே.. சற்று கீழே இறங்கம்மா."

"யார் இவர்." என்று உமையாள் தடுமாறினாள்.

"இவர்தான் பிரம்மராயர்."

ஒற்றைவரியில் சீராளன் அறிமுகப்படுத்தினான்.

அவள் மேல்துணியை இறுக்கிக் கொண்டாள். பிரம்மராயரை நோக்கி நடந்தாள்.

கீழே விழுந்து நிலம்பட வணங்கினாள். இரண்டு பாதங்களையும் தடவி தலையில் வைத்துக் கொண்டாள்.

"சோழதேசத்தின் காவலருக்கு வணக்கம். தஞ்சை சேனாதிபதிக்கு வணக்கம். நான் திருவாரூரைச் சேர்ந்தவள். என்

பெயர் உமையாள். தலைக்கோலி தலைக்கோலி ராஜராஜி பஞ்சவன்மாதேவியிடம் என்னைப்பற்றிச் சொல்ல பஞ்சவன் மாதேவியின் உத்தரவின் பேரிலும், பெருந்தச்சரின் அழைப்பின் பேரிலும் நான் குடிபெயர்ந்து தஞ்சைக்கு வந்திருக்கிறேன். திருவாரூரில் உங்களைப்பற்றி அந்தண இளைஞர்களும், போர் வீரர்களும் மிக விரிவாகப் பேசுவார்கள். மிக உயர்வாகப் பேசுவார்கள். உங்களை நேரில் சந்திப்பேன் என்றே நினைக்க வில்லை. நான் இங்கு காத்திருக்கிறேன். ஓவியர் போய் அனுமதி பெற்று வரட்டும்." அவள் மறுபடியும் அவரை வணங்கி விலகி நின்றாள்.

சீராளன் சற்று கோபமாக அவளைப் பார்த்தான். இறங்கி பிரம்மராயரைத் தாண்டி உள்ளுக்குப் போனான்.

சக்ரவர்த்திக்கும், இளவரசருக்கும் வணக்கம் சொன்னான்.

பெருந்தச்சரிடம் போய், "ஒரு நிமிடம் என்னோடு வரவேண்டும்." என்று விளித்தான்.

பெருந்தச்சர் சட்டென்று எழுந்து அவன் பின்னே நடந்தார்.

இருவரும் கூடத்தைக் கடந்து வெளிநடைக்கு வந்தார்கள். அங்கு நின்றிருந்த கிருஷ்ணன் ராமனைத் தாண்டினார்கள்.

சீராளன் உமையாளைச் சுட்டிக் காட்டினான்.

"நீங்கள் வரச்சொன்ன பெண் இவள்தான். அற்புதமான அழகி. தலைக்கோலி. நடனம் பற்றிய தெளிவு அவளிடம் இருக்கிறது. இவளை வைத்துக் கொண்டுதான் நான் ஓவியம் வரையப்போகிறேன். நீங்கள் சொன்னது போல கோவிலின் உள் பிரகாரத்தில் இரண்டாம் நிலையில் புடைப்புச் சிற்பங்களாக நடன கரணங்கள் வரும். அந்தக் கரணங்களை இவளை வைத்துக் கொண்டு வரையப் போகிறேன் அந்த ஓவியத்தை வைத்து சிற்பிகள் புடைப்புச் சிற்பங்கள் செய்து விடுவார்கள். அதுவும் தவிர உள்ளே இருக்கின்ற மனோன்மணிச் சிற்பமும், கொடிப் பெண்கள் சிற்பமும் இவளை வைத்துக் கொண்டுதான் செய்வதாக இருக்கிறேன். இவள் அங்க லட்சணம் சரிதானா என்று ஒருமுறை நீங்கள் பார்த்துச் சொல்ல வேண்டும். சொல்லிவிட்டால் இவளைத் திருப்பி அனுப்பி விடலாம். இதே கூடத்தில் அந்த நடனக் கரணங்கள் பற்றியும் சக்ரவர்த்தியிடம் நாம் தெரிவித்து விடலாம். அதற்குண்டான மாதிரிப் படங்கள் சிலதை நான் உடனடியாக வரைந்துவிடுவேன். இந்தப் பெண் படங்களுக்கு, சிற்பங்களுக்கு மாதிரியாக நிற்கச் சரியானவளா



என்று ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள். இதே கூட்டத்தில் நாம் வேறு சில விஷயங்களையும் பேசி முடித்துவிடுவோம்."

"எனக்குப் புரிகிறது சீராளா. ஆனால், சக்ரவர்த்தியை உள்ளே வைத்துக் கொண்டு இங்கே நாம் ஒரு பெண்ணைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே இவளையும் உள்ளே அழைத்து வா."

"ஏய்.. உமையாள் நீ எங்கும் காத்திருக்கத் தேவையில்லை. உள்ளே வா." சீராளன் உள்ளே அழைத்தான்.

மெல்ல கிருஷ்ணன்ராமனுக்கு முகம் மாறியது. பின்னே இருந்த அருண்மொழிப்பட்டன் பல் கடித்தான்.

"இது அதிகப்பிரசங்கித்தனம். என்ன செய்கிறோம் என்று தெரியாமல் நடந்து கொள்கின்ற அலட்சியம். இது கண்டிக்கப்பட வேண்டும்."

அந்தப் பெண்ணைத் தடுக்கலாம் என்று எழுந்த போது கிருஷ்ணன்ராமன் அவனைத் தடுத்து உட்கார வைத்தார். பெருந்தச்சர் போக அவர்களுக்குப்பின்னே உமையாள் போனாள்.

கிருஷ்ணன்ராமனைத் தாண்டி அருண்மொழிப்பட்டனைப் பார்த்தாள்.

"உங்கள் மகனா..." என்று கிருஷ்ணன்ராமனைக் கேட்டாள்.

'ஆமாம்' என்று தலையசைக்க, 'அருண்மொழிப் பட்டர்" சரியா என்று வினவினாள். சரி என்று கிருஷ்ணன் ராமன் தலையசைக்க "வணக்கம்" என்று ஒயிலாக அருண் மொழிப்பட்டனுக்கு வணக்கம் சொன்னாள்.

அருண்மொழிப்பட்டன் மெல்ல சிரித்தான். உள்ளே போ என்று கைகாட்டினான்.

அவள் சீராளன் நோக்கி ஓடினாள். முதல் கூடம் தாண்டி, சபை இரண்டாம் கூடத்தில் குறைவற உட்கார்ந்திருந்தது.

"என்னப்பா இது. ஓவியர்களும், சிற்பிகளும் நடந்து கொள்வது சரியாக இல்லையே. இது ஒரு அரசவைக் கூட்டம் .மிக முக்கியமான கூட்டம். சக்ரவர்த்தி இருக்கின்ற இடம். இந்த இடத்தில் யார் வேண்டுமானாலும் வரலாம். எவரை வேண்டு மானாலும் அழைத்து வரலாம் என்று ஓவியர்கள் நினைக்கிறார் களா. சக்ரவர்த்தியின் முக்கியத்துவம் பற்றி இவர்களுக்குச்

சொல்வதற்கு யாருமே இல்லையா. மெய்க்காவல் படை வீரர்களெல்லாம் முட்டாளாகிக் கொண்டிருக்கிறார்களே இது சரிதானா. ஏன் நீங்கள் இதைத் தடுக்கிறீர்கள் கண்டிக்கப்பட வேண்டிய விஷயத்தை ஏன் கண்டும் காணாமல் போகிறீர்கள்." அடிக்குரலில் சீறினான்.

"இது நேரமல்ல. உள்ளே முக்கியமான வேலை இருக்கிறது. அதைக் கெடுத்துவிடாதே." மெய்க்காவல் வீரனைக் கைதட்டி அழைத்தார்.

"எவரையும், எதுகுறித்தும் உள்ளே வர விட வேண்டாம். இது ஆணை" என்று உரக்கச் சொன்னார்.

அவர்கள் சரியென்று தலையசைத்தார்கள். தங்களுக்குள் கட்டளைகள் பிறப்பித்து வாசலையும் பின்பக்கத்தையும் இடவல பக்கத்துக் கதவுகளையும் அடைத்துக் கொண்டு நின்றார்கள்.

அடுத்த கதவு பக்கம் நின்ற பொதுமக்கள் சீராளனோடு உமையாள் உள்ளே போவதையும் பிறகு காவல் பலப்படுவதையும் கவனித்தார்கள்.

"அடேயப்பா... குட்டி உள்ளே போய்விட்டாளா." என்று ஒரு வேளாளர் தொடை தட்டிப் பேச மற்றவர்களும் என்ன என்று விசாரித்தார்கள். வேளாளர் விவரிக்க அந்தச் செய்தி தளிச்சேரி வரை விரைவாகப் பரவியது.

ஒரு மனிதரின் ஜாதகத்துக் கிரகநிலைகள் சரியாக இருப்பின் அவர் எந்தச் சபை ஏறினாலும், எந்த நேரம் ஏறினாலும், அந்தச் சபையில் அவர் பரிமளிக்க வாய்ப்புண்டு. உமையாளின் ஜாதகம் நன்றாக இருந்தது. எனவே அவள் உள்ளே நுழைந்ததும் ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

"யார் இந்தப் பெண்."

சக்ரவர்த்தி சற்று உற்சாகமான மனநிலையில் இருந்ததால் சற்று உரக்கக் கேட்டார்.

"அவள் உமையாள்."

பஞ்சவன்மாதேவி பார்த்ததும் புரிந்து கொண்டு சொன்னாள்.

"உமையாள், எந்த உமையாள்."

அரசர் மறுபடியும் வினவினார்.



"திருவாரூர் தலைக்கோலி தேவரடியார் உமையாள்."

"சிறிய பெண்ணாக இருக்கிறாள். இவளா தலைக்கோலி."

"அழகும், அறிவும் மிகுந்த தலைக்கோலி ஒருத்தி வேண்டுமென்று சொன்னபோது, மற்ற தலைக்கோலிகள் தேர்ந்தெடுத்துக் கொடுத்த பெண் இவள்."

"அப்படியா, ஏய் இங்கு வா."

அவர் அழைக்க அழைப்பது யார் என்று தெரியாமல் சற்று மந்தமான புத்தியோடு வேகமாய் நடந்து உமையாள் அரசர் முன் நின்றாள். உற்று அரசர் அவளைப் பார்க்க அவளும் அரசரை உற்றுப் பார்த்தாள்.

சட்டென்று உள்ளுக்குள் ஒரு மின்னல் கீற்று ஏற்பட்டு இவர் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்று புரிந்தது. உள்ளே பயம் திடீரென்று கவ்விக் கொண்டது. கண்கள் மிரளத் துவங்கின. கால்கள் ஆடின. இடுப்புக் குழையத் துவங்கியது. செத்து விடுவோமோ என்ற பயம் ஏற்பட்டது. ஆனால், பயம் ஏற்பட்ட விதமாகவே உள்ளுக்குள் வேகமாக முயன்று தைரியத்தையும் கொண்டு வந்தாள்.

என்ன.. எல்லோரும் மனிதர்கள்தானே. மிக பயங்கரமானவர் என்று சொல்லப்படும் சேனாதிபதியையே நேருக்கு நேர் பார்த்து இவர்தான் உங்கள் மகனா என்று விசாரித்து விட்டோமே. சக்ரவர்த்தி கருணை மிக்கவர். அன்பானவர் என்று கேள்விப் பட்டிருக்கிறேனே. அவரிடம் எதற்குப் பயப்பட வேண்டும். சக்ரவர்த்தி உற்றுப் பார்த்து பஞ்சவன்மாதேவியிடம் திரும்பி அற்புதம் என்று சைகையில் சொன்னதும் உமையாள் கைகூப்பினாள்.

"திருவாரூர் தலைக்கோலி, தேவரடியார் சுந்தரியின் மகள் உமையாள். வணங்குகிறேன்." என்று சொல்லி விழுந்து வணங்கினாள்.

சற்று நகர்ந்து சக்ரவர்த்தியின் முழங்கால்பட நின்று சக்ரவர்த்தியின் பின்னே நின்றிருக்கும் பஞ்சவன் மாதேவியின் பாதம் தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

"இளவரசர் இராஜேந்திரர்தானே. நான் பார்த்ததில்லை. ஆனால், இளவரசர் அப்படியே இருக்கிறார்.' என்று சொல்லி அவரையும் விழுந்து வணங்கினாள்.

அவள் பேச்சு சபையில் சிரிப்பை உண்டு பண்ணிற்று.

"இளவரசர் அப்படியே இருக்கின்றார் என்றால்..'

"எங்கள் ஊரில் பகல் வேஷக்காரன் ஒருவன் இருப்பான். அவன் சக்ரவர்த்தியைப் போலவும், இளவரசரைப் போலவும் வேடமிட்டுத் திரிவான். சக்ரவர்த்தியைப் போல நடிப்பதைவிட, இளவரசர் போல நடிப்பதை அபாரமாகச் செய்வான். எல்லோரும் இளவரசராக நடித்துக்காட்டு என்றுதான் வேண்டுவார்கள். இளவரசர் அச்சு அசலாய் பகல் வேஷக்காரன் போலவே இருக்கிறார்." என்று சொல்ல, மீண்டும் சபை வாய்விட்டுச் சிரித்தது

பிரம்மராயருக்கும், பெருந்தச்சருக்கும் பெரிய குரல். அவர்கள் சிரிப்பு அடக்கமாட்டாமல் வாய்விட்டுச் சிரித்தார்கள். சக்ரவர்த்தி முழு மனதாக முகம் மலரச் சிரித்தார் இராஜேந்திரருக்கு ஒரு கணம் இந்தப் பேச்சு அபத்தம் என்று புரிந்தாலும் மறுகணம் அவள் சிறுபெண்தானே என்று நினைத்து மெல்லியதாய்ச் வாய்விட்டுச் சிரித்தார். பிறகு மீண்டும் மனம் விட்டுச் சிரித்தார்.

வாடி குட்டி என்று அவள் கைகளைப் பற்றி அருகே இழுத்து முகம் நிமிர்த்திப் பார்த்தார்.

"அற்புதமான அழகு. எழுதி வைத்ததுபோல முகம். மிகத்திருத்தமான மூக்கு. தகப்பன் யார் என்று தெரியவில்லை' என்று பேச பஞ்சவன்மாதேவி "வேண்டாம்.. அதையெல்லாம் விசாரிக்க வேண்டாம்." என்று அடிக்குரலில் தடுத்தாள்.

சீராளன் அருகே வந்தான். அவள் காதோரம், இளவரசரிடம் மன்னிப்புக் கேள்." என்றான்.

எதற்கு என்பதுபோல் உமையாள் திரும்பிப் பார்த்தாள்.

"இளவரசரைப் பகல் வேஷக்காரர் என்று சொன்னாயே. முட்டாள்தனம்தானே இது. பேசத்தெரிய வேண்டாமோ." என்று மெல்லக் கடிந்து கொண்டான்.

சட்டென்று உமையாளுக்குத் தான் சொன்ன வாக்கியத்தின் தவறு புரிந்தது.

"மன்னித்துக் கொள்ளுங்கள் இளவரசரே."

அவள் மனமாரக் கைகூப்பினாள். குனிந்து வணங்கினாள்.



"நான் சொல்ல வந்தது உங்களைப் போலவே பகல் வேஷக்காரன் நடித்தான் என்பதுதான். ஆனால், வாய்ப் பிசகாய்..." என்று சொல்லி தடுமாறி நிறுத்த, வலக் கையை உயர்த்தி பரவாயில்லை என்பதுபோல் ஆதரவாகப் பார்த்தார்.

"நீ சொன்னது உண்மைதான் உமையாள்."

சக்ரவர்த்தி குனிந்து மிக மும்முரமாய் அவளுடன் பேசினார்.

உமையாள் என்ன என்று பார்த்தாள்.

"இவன் பகல் வேஷக்காரன்தான்." என்று இராஜேந்திர சோழனைச் சுட்டிக் காட்டினார்.

"ஒருமுறை என்னைச் சரி என்று சொல்கிறான். இன்னொரு முறை தவறு என்று சொல்கிறான். இவன் எப்பொழுது சரி என்று சொல்கிறான். எப்பொழுது தவறு என்று சொல்கிறான் என்று எனக்குப் புரியவே இல்லை. ஒரு பகல் வேஷக்காரன் போலவே இளவரசன் நடந்து கொள்கிறான்." என்று சொல்ல மறுபடி அந்தச்சபை சிரித்தது.

இந்த முறை உமையாளும் சிரித்தாள். அவள் சிரிப்பு அழகாக இருந்தது.

"சரி, இவளை எதற்கு இங்கு அழைத்து வந்திருக்கிறீர்கள்."

வந்தியத்தேவர் மார்புக்குக் குறுக்கே கைகட்டிக் கொண்டே கேட்டார்.

"அடிசக்கை. இதுதான் வந்தியத்தேவர் இங்கே இருக்க வேண்டுமென்பது, நாம் எல்லோரும் வேறெங்கோ திசைமாறிப் போகும்போது இழுத்து சரியான திசைக்கு விடுவதற்கு ஒரு ஆள் வேண்டுமல்லவா. வந்தியத்தேவரே சரியான கேள்வி. இவள் எதற்கு இங்கே."

சக்ரவர்த்தி வந்தியத்தேவரோடு ஒத்துப் பேசினார்.

சீராளன் பெருந்தச்சரையே ஆழ்ந்து பார்த்தான்.

"நான்தான் வரவழைத்தேன். சீராளன், பஞ்சவன் மாதேவியின் உதவியுடன் இந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தேன். அங்கலட்சணங்கள் சரியாக இருக்கிறதா என்று பார்க்க என்னை விசாரித்தான். இவள் திருத்தமான அங்கலட்சணங்கள் உடையவள். அளவான மார்பகங்கள் அழகான பிருஷ்டங்கள்.

தெளிவான முகம். திடமான தோள்கள். வழிந்தோடும் கைகள். தொடைகள். மிக லட்சணமாக இருக்கிறாள். இவளை ஓவியம் வரைவதற்கு மாதிரியாக வைத்துக் கொள்ள சீராளன் அனுமதி கேட்கிறான். அது மட்டுமல்ல இவளை நூற்றியெட்டு கரணங்கள் ஆடச் சொல்லி அபிநயக்கச் சொல்லி அந்த அபிநயத்தை அப்படியே சித்திரத்தில் வரைந்து சிற்பிகளிடம் கொடுக்க இந்த விமானத்தின் இரண்டாம் நிலைப் பகுதியில் அதாவது இந்த இடத்தில்..” என்று சித்திரத்தைப் பெருந்தச்சர் காட்டினார்.

சபை திரும்பி சித்திரத்தைப் பார்த்தது.

“இது முதல் நிலை. இது இரண்டாம் நிலை. இங்கே கருவறை. இதற்கு மேல் ஒரு நிலை இருக்கிறது. அதற்கு மேலும் ஒரு நிலை இருக்கிறது. இந்தக் கருவறைக்கு மேலே உள்ள நிலையில் கரணச் சிற்பங்கள் இருக்கும். அதற்கு மேலே உள்ள நிலையில் ஓவியங்கள் இருக்கும். ஏன் இங்கு கரணச் சிற்பங்கள் வைக்க வேண்டும். சிவன் என்று சொன்னால் அவனுடைய நடனம்தான் முதலில் நமக்கு ஞாபகம் வரும். வெறும் நடனம் என்பது நாமெல்லாம் பொழுதுபோக்கப் பார்க்கின்ற நடனம் போல் அல்லாது இந்த உலகத்தின் இயக்கத்தை வெளிப்படுத்துவது. சிவன் சலனமடைய சக்தி சகல இடங்களிலும் சலனமாகிறது. இந்தப் பூமியில் சலனம் இருப்பதற்கு இறைவனுடைய முதல் சலனம் காரணம். இறைவன் சலனத்தால் பிரபஞ்சம் உண்டாயிற்று. இந்தப் பிரபஞ்சத்தின் அசைவுதான் சிவனின் நடனம். அதுவொரு கணக்கு. அதுவொரு அழகு. அதுவொருலயம். ஒரு தனித்தன்மை. சிவதாண்டவம் ஆடும்போது இந்த லயம் பிசகி இந்தப் பிரபஞ்சம் ஒன்றோடு ஒன்று மோதிப் பேரழிவு ஏற்படும். பிறகு மிகப்பெரிய அமைதி ஏற்படும். மறுபடியும் மெல்லிய சலனம் துவங்கும். இம்மாதிரி பலமுறை சிவன் அமைதியாகி மறுபடியும் ஆடத் துவங்கியிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. பலப் பிரபஞ்சங்கள் உருவாகியிருக்கின்றன என்று சொல்லப்படு கிறது. இந்த இலக்கணமான நடனத்தை, இந்த ஒழுங்கு முறையை ஒன்றோடு ஒன்று மோதாதலயத்தை ஒரு சீரான அசைவை நாம் நடனம் என்கிறோம். சைவ ஆகம விதிப்படி பரமாத்மாவின் ஒரு தெறிப்பு ஜீவாத்மா. இறைவனின் அம்சம் நமக்குள்ளும் இருக்கிறது. எனவே, இறைவனின் அசைவை வெளியிடத் துடிக்கிறோம்.

ஒரு ஆண் குழந்தை தன் தந்தையைப் போல தோளில் துண்டும், தலையில் துணியும், இடுப்பில் வேட்டியும் கட்டி, கையில் வாள் ஏந்தி வாசலில் நின்று காவல் காப்பதைப் போன்ற



வேடிக்கையானது. பெண் குழந்தை தன் தாயைப்போல சேலையை உடுத்தி நெஞ்சை மூடி கையில் அகப்பையோடு ஒன்றுமில்லாத உருளியில் குழம்பு ஆக்குவதுபோல நடிக்கிறதே அதுபோன்ற சுவாரசியமானது. இறைவனுடைய நடனம் உண்மையானது. பிரபஞ்ச அசைவானது இறைவன் நடனத்தை ஒத்திருப்பது. அதுபோல அதுமாதிரி என்ற நிலையை உடையது. இந்த நடனத்தின் பல அசைவுகள் இறைத்தன்மையைக் காண்பிக்கின்றன. பரதமுனி கண்டுபிடித்த இந்த நடனமானது பிரபஞ்சத்தின் அசைவைச் சொல்லுவதாக வேத விற்பன்னர்கள் சொல்கிறார்கள். நாட்டிய அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள். எனவே, சக்ரவர்த்தியார் எழுப்புகின்ற இந்த மிகப்பெரிய சிவன் கோவிலில் இறைவன் அசைவை அதாவது மானுடர்களின் நடனத்தை நான் சிற்பமாக்க விரும்புகிறேன். நூற்றியெட்டு கரணங்களும் உள்ளே புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப் பட்டிருக்கும்.”

“ஓவியங்களில் என்ன வரும்.”

“சிவனின் பல்வேறு திருக்கோலங்களை, சம்பவங்களை ஓவியங்களில் வரைய எண்ணம் வைத்திருக்கிறோம். இதுபற்றிச் சீராளன் பேசுவான்.”

பெருந்தச்சர் அமர்ந்து கொண்டார். மறுபடியும் எழுந்தார்.

“சீராளனை அரசருக்குத் தெரியுமல்லவா.”

அரசர் மெல்லியதாய்ச் சிரித்தார்.

“இளவரசருக்கு அறிமுகமில்லாது போயிருக்கலாம். வந்தியத்தேவருக்கும், அருண்மொழிப்பட்டருக்கும், நம்முடைய சேனாபதி பிரம்மராயருக்கும் இவர் யாரென்று தெரியாதிருக்க லாம். சீராளன் என் வளர்ப்பு மகன் போன்றவன். மிக அற்புதமாக ஓவியங்கள் வரைவான். எங்கே அந்த ஓவியம்.”

சீராளன் காலையில் உமையாளை வரைந்த ஓவியத்தைக் கேட்டார்.

வாசற்பக்கத்திலிருந்து சீராளன் அந்த ஓவியத்தை எடுத்து வந்தான். அரசரிடம் அந்த ஓவியம் கொடுக்கப் பட்டது. இளவரசரும், பஞ்சவன்மாதேவியும் எட்டிப் பார்த்தார்கள். வந்தியத்தேவர் எழுந்திருந்து வந்து பார்த்தார்.

பிரம்மராயர் சுற்றிக்கொண்டு வந்து இளவரசர் அருகே வந்து நின்றார். எல்லோரும் அந்த ஓவியத்தைப் பார்த்தார்கள்.

"அட... உமையாள்." என்று இராஜேந்திரர் வாய்விட்டுச் சொன்னார்.

உமையாள் எல்லோரையும் பெருமையாகப் பார்த்தாள். திடீரென்று அவளுக்குத் தான் நிற்கின்ற இடம் எப்பேர்ப்பட்ட இடம் என்பது புரிந்தது.

சக்ரவர்த்தியார், இளவரசர், சக்ரவர்த்தியின் மாப்பிள்ளை, வந்தியத்தேவர், பழுவேட்டரையர் என்று சோழதேசத்தின் முக்கிய அதிகாரிகள் உயிர்நாடிகள் இணைந்திருக்கின்ற இடத்தில் தான் சர்வசாதாரணமாக நின்று கொண்டிருக்கிறோம். அம்மா நான் எங்கிருக்கிறேன் தெரியுமா. சித்தி நான் யாரைப் பார்த்தேன் தெரியுமா என்றெல்லாம் வியந்து அவர்களையே உற்று உற்றுப் பார்த்தாள். அவர்கள் நகர்ந்து சித்திரம் பார்த்து விட்டு உமையாளைப் பார்த்தார்கள்.

'ஏய்.. குட்டி சற்று விலகிநில். உன்னை நன்றாகப் பார்க்க வேண்டும்.' சற்று விலகி முற்றத்து வெளிச்சம் முகத்தில்பட நிற்க வைத்தான்.

சீராளன்... பெருந்தச்சர் வீட்டிலுள்ள ஒரு மரச் சட்டத்தை எடுத்து வந்து, அவளுக்கு அருகே போய் நின்று அந்த மரச்சட்டத்தில் அவள் முகம் மட்டும் தெரியும் வண்ணம் பிடித்தான். இப்பொழுது ஓவியமும், நிஜ உருவமும் ஒரே மாதிரியான சட்டத்திற்குள் சிக்கிக் கொண்டன.

"அற்புதமாக வரைந்திருக்கிறாய். எத்தனை நேரமாயிற்று இதை வரைய."

"அறுபது நொடிப்பொழுதுதான்."

சீராளன் பதில் சொன்னான்.

"தம்பி, என்ன விளையாடுகிறாய்."

"ஆமாம் ஐயா. இதை வரையும்போது அவள் இல்லை. நேற்று பிற்பகல் அவளை உற்றுப் பார்த்து பல கோணங்களில் முகத்தைப் பதிவு செய்துகொண்டு இன்று காலை அவள் சிரித்தால் எப்படியிருக்கும், அழுதால் எப்படியிருக்கும், கோபப்பட்டால் எப்படியிருக்குமென்று பல்வேறு விதங்களில் வரைந்து பார்த்தேன். அதில் ஒன்றுதான் இது."

"மறுபடி சொல். அறுபது வினாடிகளா."

"ஆமாம்."



"அறுபது வினாடிகளில் என்னை வரையமுடியுமா."

"இன்னும் குறைவான வினாடிகள் போதும்."

அவன் பெருந்தச்சரின் வீட்டிற்குள் போய் திரைச்சீலையை எடுத்து வந்து அவர் முன் வைத்திருந்த சட்டத்தில் மாட்டினான். மூலைகளை இறுக்கினான். திரைச்சீலையை இழுத்துப் பிடித்துக் கொண்டு ஒரு முறை உற்று இராஜேந்திரரைப் பார்த்து விட்டு பிறகு அவருக்கு முதுகுகாட்டி உட்கார்ந்து கொண்டு கிடுகிடு வென்று வரைந்தான். நாற்பது வினாடிகள் இராஜேந்திரரின் முகம் மெல்லிய சிரிப்போடு கூடிய முகம் அந்தத் திரைச்சீலையில் வரையப்பட்டது. எல்லோரும் வாய்விட்டு ஆஹா... என்று ஆனந்தத்தில் அரற்றினார்கள்.

"அடேயப்பா.. என்ன விரைவு.. என்ன கணக்கு உன்னுடைய கைகளில்..."

ஓடிவந்து வந்தியத்தேவர் அவன் முதுகைத் தடவினார். தோளைப்பற்றி உலுக்கினார்.

"இது எனக்கு. இது எனக்கு."

பஞ்சவன்மாதேவி அதை வாங்கிக் கொண்டாள்.

"எதற்கு நீங்கள் வாங்கிக் கொள்கிறீர்கள் அம்மா." என்று இராஜேந்திரர் கேட்டார்.

"எனக்கு வேண்டும் இராஜேந்திரா. நீ சும்மாயிரு."

"அந்தத் திரைச்சீலையை என்னிடம் கொடுங்கள். நான் வேறு சில வேலைகள் செய்துவிட்டு உங்களுக்கு அனுப்புகிறேன். சட்டமிட்டு மிகச்சரியான விதத்தில் உங்களிடம் தருகிறேன். இன்று மாலைக்குள் இந்தச் சித்திரம் நன்றாக வரையப்பட்டு உங்களிடம் வந்து சேரும்."

"சரி, இங்கு சபை கூடியதன் நோக்கம் வரைவதன்று."

சக்ரவர்த்தி உரக்கச் சொன்னார்.

"எதற்காக வரவழைத்தீர்கள் எங்களை... சொல்லுங்கள் பெருந்தச்சரே."

மறுபடியும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

வெற்றிலையும், நொறுக்கிய களிப்பாக்கும், வாசனை கலந்த சுண்ணாம்பும் கொண்டு வரப்பட்டன.

சக்கரம் வைத்த ஒரு பீடத்தை இலத்தி தள்ளிக் கொண்டு வர நித்த வினோதப் பெருந்தச்சன் பின்னே வந்தான். அந்தப் பீடத்தில் ஒரு சிலை செய்து பட்டுத் துணியில் போர்த்தப் பட்டிருந்தது. சுமார் இரண்டு முழங்கை உயரத்திற்கு அந்த உருவம் இருந்தது. எல்லோரும் ஆவலாகப் பார்த்துக் கொண்டிருக்க பெருந்தச்சர் எழுந்து நின்றார்.

"இம்மாதிரி என்ற விஷயத்தை நான் மறுபடியும் சொல்லும்படி நேர்கிறது. இறைவனுடைய அசைவை பிரபஞ்ச அசைவாக, அந்தப் பிரபஞ்ச அசைவை நமது நடனமாக நாம் செய்ய முயன்று கொண்டிருப்பது போல, இறைவனுடைய வடிவை மேரு என்கிற உருவாக்கி, அந்த மேருவை விமானமாக்கி, அதற்கு ஒரு மாதிரி செய்து இங்கு வந்திருக்கிறேன். சக்ரவர்த்தியார் அந்த மாதிரி எனக்குச் சொல்லி பல வருடங்களாயின. அந்த மாதிரியை வைத்துக் கொண்டுதான் நாம் உண்மையான ஒரு கற்கோயிலை எழுப்பப் போகிறோம். இதுவும் இறைவன் மாதிரியான ஒரு விஷயம்தான். அந்த மாதிரிக்கு ஒரு மாதிரியான இதோ, இந்த மெழுகு வடிவத்தை உங்கள் முன்பு சமர்ப்பிக்கிறேன்.

பட்டுத்துணியை மெல்ல உருவியெடுக்க, வெள்ளி நிறத்தில் தகதகவென்று விமானமும், முன்கூடமும் நேர்த்தியாகச் செய்யப்பட்டிருந்தன. யானையும், குதிரையும், மனிதரும் உண்டான உருவச் சிலைகள் கீழே வைக்கப்பட்டிருந்தன. விமானத்தின் பிரம்மாண்டத்தை அவை எளிதாகக் காட்டிக் கொடுத்தன.

இளவரசர் ஆசனம் விட்டு நகர்ந்து அந்தப் பீடத்திற்கு அருகே குத்திட்டு உட்கார்ந்து கொண்டார்.

"இது எதனால் செய்யப்பட்டிருக்கிறது."

"மெழுகால் செய்யப்பட்டு மூடி வைக்கப்பட்டு உஷ்ணம் தாக்காத வண்ணம் குளிரூட்டப்பட்டு உறைய வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு உயரமான ஒரு விமானம்தான் எழுப்ப வேண்டுமென்று சக்ரவர்த்தியார் கட்டளையிட்டிருக்கிறார்."

"இவ்வளவு உயரம் எழுப்ப வேண்டிய அவசியம் என்ன. ஏதேனும் காரணம் இருக்குமல்லவா."

இளவரசர் திரும்பி சக்ரவர்த்தியைப் பார்த்துக் கேட்டார்.



"என் மனதுக்குள் தோன்றியது இராஜேந்திரா. ஒரு கூடத்திற்குள் நுழைந்தவுடன் மிக பிரம்மாண்டமான ஒரு விஷயத்தை மனிதன் பார்க்க வேண்டும். இறைக்கு முன்பு தான் ஒன்றுமேயில்லை என்று உணரவேண்டும். மகாலிங்கம் என்று உத்தமசோழன் சொன்னதைப் பார்த்துவிட்டு நான் ஏமாந்து போனேன். ஆனால், இலங்கையில் ஒரு புத்தர் சிலையைப் பார்க்கும்போது, எனக்கு இத்தகைய ஒரு அனுபவம் கிடைத்தது. புத்தருக்கு முன்னால் நான் தூசு என்று உணர்ந்தேன். அப்படிப்பட்ட ஒரு நிலையை அந்தச் சிற்பி ஏற்படுத்தினான். அப்படியென்றால் சிவனுக்கு முன்னால் நான் எம்மாத்திரம். இதைவிட உயரமாக என்று உள்ளுக்குள் ஒன்று தோன்றியது. இறைவனுக்கு உருவம் உண்டா. அதேசமயத்தில் அருவத்தை வணங்க முடியுமா. எனவே, ரூப அரூபத்தைக் கண்முன்னே காட்ட வேண்டும் என்று விரும்பினேன். ரூப அரூபமாக இருப்பது மேரு உருவமல்லவா. நமது உடம்பைக் குறுக்கு வெட்டாக வெட்டினால் இருப்பது மேரு அல்லவா. எனவே, அந்த மேருவை இறைவன் என்று தீர்மானித்தேன். இதையே பெருந்தச்சரிடம் சொன்னேன். பெருந்தச்சர் கற்பனை என்னை விடவும் பெரிதாக வளர்ந்திருக்கிறது. இன்னும் அற்புதமாகக் கெட்டிப் பட்டிருக்கிறது. உச்சியில் தட்டைக்கல்லும் சுற்றி நந்தியும் அதன்மீது உருண்டைக்கல்லும், அதன்மீது கலசமும் என்று பெரும் கோவிலாக, மேருவையே கோவிலாக மாற்றிவிட்டார்."

"இந்த மாதிரியைத்தான் படம் வரைந்து காட்டினீர்களே. பிறகு எதற்கு மெழுகு பொம்மை."

பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

"தாயே நீ கெட்டிக்காரி. எந்தக் கேள்வியையும் சூட்சுமமாகக் கேட்கிறீர்கள். படம் வரைந்து பார்ப்பது ஓர் சுகம். அதையே மாதிரியாக வடிவமைத்துக் கொடுப்பது இன்னொரு சுகம். இதனுடைய நாலா பக்கமும் உங்களுக்குத் தெரியும். இதை எப்படிக் கட்டப் போகிறோம் என்று யோசித்த போது, சக்ரவர்த்தியார் சொன்ன யோசனை இம்மாதிரியானது. ஒரு திரைச்சீலையைப் பிரித்துப் போட்டார். நீண்ட நெடிய சாரம்கட்டி அதன்மீது கற்களை நகர்த்திக் கொண்டு போய் மெல்ல மெல்ல கட்டிடம் எழுப்ப வேண்டும். ஆனால், அது இயலாத காரியம். இவ்வளவு உயரம் சாரம் எழுப்பினால் அந்த சாரத்தைக் கம்புகள் தாங்குமா என்பது மிகப்பெரிய சந்தேகம். உடைந்தால் மிகப்பெரிய உயிர்ச்சேதமும், அச்சான்யமும்,

அவநம்பிக்கையும் ஏற்படும். எனவே, சக்ரவர்த்தியார் சொன்னது போல கழிகளாலும், மரத்தாலும் சாரம் ஏற்படுத்துவதைவிட, வெகு தொலைவிலிருந்து சாரம் கொண்டு வருவதை விட, கோவிலைச் சுற்றிச்சுற்றியே சாரம் அமைத்தால் நன்றாக இருக்காதா என்று தீர்மானித்து, அது வெறும் மூங்கில் கழி சாரமாக, சவுக்குக் கட்டை சாரமாக, மரச்சாரமாக இல்லாமல், மண்சாரமாகச் செய்தால் என்ன என்று தீர்மானித்து, எங்களுடைய முதன்மைச் சிற்பி நித்த வினோதப்பெருந்தச்சன் ஒரு அற்புதமான யோசனையைச் சொல்லியிருக்கிறார். இதோ நித்த வினோதப் பெருந்தச்சன் தன்னுடைய யோசனையை உங்கள் முன்பு வெளியிடுவான்."

"சக்ரவர்த்தியார் சொன்ன சாரம் உருண்டைக் கல்லைக் கொண்டு உருட்டி வருவதற்கு ஏற்றதே தவிர படிப்படியாக வளரும்போது சாரத்தினுடைய நிலை என்ன என்பது விளக்கப் படவில்லை. சாரத்தை உயரமாக்கி அங்கிருந்து கல்லைக் கீழே அனுப்புவது என்பது அவ்வளவு நல்ல விஷயம் அல்ல. கயிறோ, கல்லோ உடைந்து விழுந்தால் கீழே இருப்பவர்கள் கதி மிக மோசமாக இருக்கும். அது மட்டுமல்லாது உள்ளுக்குள்ளே பல இடர்பாடுகளை, உள்ளுக்குள்ளே இதுவரை கட்டியவைகளை அந்த உடைந்த கல் சிதைத்துவிட நேரிடலாம். எனவே, சாரம் எழுப்புகிற போது கோவிலை எழுப்பிவிட வேண்டும். அதாவது கோயில் எழும்புகிற போது சாரமும் உயரமாகும். இந்த விதமாக மெழுகை நான் தனித்தனியாகப் பிரித்து வைத்திருக்கிறேன். இப்பொழுது இந்த மெழுகை நான் படிப்படியாகக் கலைப்பதைப் பாருங்கள்."

"அவன் ஒரு அசைப்பு அசைத்து எடுக்க, ஒரு கை உயரத்திற்கான உச்சி தனியே கையில் வந்தது. இன்னொன்று அசைத்து எடுக்க மற்றதும் வந்தது. மீண்டும் அசைத்து எடுக்க கடைசியும் வந்தது. அடுத்தது எடுக்க பெரிய இடமும் வந்தது. எடுத்து எடுத்து அருகேயுள்ள சிற்பிகளிடம் கொடுக்க, அவர்கள் கையில் ஏந்திக் கொண்டு நின்றார்கள்.

"அடேய்.. செய்யும்போதே அடுக்கடுக்காய் செய்து விட்டாயா." வந்தியத்தேவர் வியந்தார். அற்புதமடா அற்புதம் என்று சொல்லி மிகப்பரவசத்தோடு இராஜேந்திரர் தோளைப் பற்றிக் கொண்டார். இராஜேந்திரர் மிகக் கூர்மையாக அந்தக் கட்டிடத்தைப் பார்த்து வந்தார். அந்த இடம் அமைதியாக இருந் தது.



உமையாள் எல்லோர் முகத்தையும் உற்றுப் பார்த்து விட்டு, அந்தக் கட்டிடத்தைத் தானும் ஆவலாக முழங்கையில் கை வைத்து உற்றுப் பார்க்கலானாள்.

முக்கியமான சபையில் முக்கியமான நேரத்தில் இருக்கிறோம் என்று அவளுக்கு நன்கு தெரிந்தது. மறுபடியும் அம்மாவின் முகமும், சித்தியின் முகமும் நினைவுக்கு வந்தது.

அவர்கள் என்னவெல்லாம் பேசினார்கள் தெரியுமா என்று அவர்களிடம் சொல்ல வேண்டும். சொல்வதற்கு ஏற்ற வண்ணமாய் சகலத்தையும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தன் புத்தியைக் கூர்மைப்படுத்திக் கொண்டாள்.

"இப்பொழுது இது கீழ் தளம். கீழ்த்தளம் கட்டும் முன்பே நாம் பரமசுவாமியை உள்ளே வைத்து விடுகிறோம். சக்ரவர்த்தி கூறியதுபோல அது மகாலிங்கமாக பிரம்மாண்டமாக இருக்கின்ற இந்த விஷயத்தை உள்ளுக்குள் முதலில் வைத்துவிட்டு, சுற்றி சுவர் எழுப்பி அதற்கப்பால் இடைவெளி விட்டு மீண்டும் சுவர் எழுப்பி முடித்து விடுகிறோம். தரையிலிருந்து ஒரு பனைக்கும் மேலான உயரத்தில் பரமசுவாமி அமர்ந்திருப்பார். இரண்டாவது இந்த இடம் முழுவதும் கெட்டிப்படுத்தப் பட்டிருக்கும். இப்படி கெட்டிப்படுத்தப்பட்டிருக்கும் இடத்தில் தான் கற்கோயில் மேலெழும்ப இந்தக் கீழான இடத்தை கெட்டிப்படுத்த வேண்டியிருக்கிறது. பதினைந்து படிக்கட்டுகள் ஏறி, பிறகு முதல் மாடத்தை அடைந்து இடது பக்கம் திரும்பினால் இது கருவறை. எனவே, அடித்தளம் எழுப்பி, அடிச்சுவர் எழுப்பி உள்சுவர் எழுப்புவதற்கு முன்பு ஆவுடையாரும் பாணமும் பதினைந்து படிகள் உயரத்திற்கு எடுத்துப் போகப்பட்டு, கருவறையில் போடப்பட்ட கருங்கல தளத்தில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். பிறகு உட்புறச் சுவர் எழுப் பப்பட வேண்டும். அதற்குப் பிறகு முதல் தளம் எழுப்பப்பட வேண்டும். முதல் தளத்திலிருந்தும், இரண்டாம் தளத்திலிருந்து எட்டிப்பார்த்தால் கீழிருக்கின்ற பரமசுவாமி தெரிய வேண்டும். அதற்குப் பிறகு உள்ளே வட்டமாகவும், வெளியே சதுரமாகவும் இருக்கின்ற கருங்கல்தளம் எழுப்பப்பட வேண்டும். உள்ளுக்குள் கூம்பாகக் கடைசி பிந்து வரும்வரையில் கற்கள் அடுக்கிக் கொண்டு போகப்பட வேண்டும்."

"கற்களை எப்படி அடுக்கிக் கொண்டு போகவேண்டும். சாரம் கட்டியா."

"இல்லை. அது சாத்தியமில்லை. எனவே, கற்களை இழுத்துக் கொண்டு போவதற்கு இந்த விமானத்தைச் சுற்றிச் சுற்றி பாதை போடப்படும். பாதை விமானத்தை வளைத்து சுற்றிக் கொண்டு போகும். முதலில் பாதை மிக அகலமாக இருக்கும். பிறகு அதில் இரண்டுகோல் அளவு குறையும். பிறகு நான்கு கோல் அளவு குறையும். பிறகு ஆறு கோல் அளவு குறையும். பிறகு எட்டுகோல் அளவு குறையும். அதாவது சுற்றியிருக்கிற பாதை எட்டுகோல் அகலம். அதற்கு அடுத்த பாதை ஆறு கோல் அகலம். அதற்கு அடுத்த பாதை நாலு கோல் அகலம். அதற்கு அடுத்த பாதை இரண்டுகோல் அகலம். இந்த இரண்டுகோல் அகலப் பாதை வருகிறபோது நாம் உச்சியைத் தொட்டுவிட முடியும் என்று நினைக்கிறேன்."

"அந்தப்பாதை எப்படிப் போகிறது."

"மண் எடுத்துவரவேண்டும். கெட்டிப்படுத்த வேண்டும். அதாவது ஒரு சுருள்போல இந்தப்பாதை இருக்கும். இந்தச் சுருள் பாதை மீது யானை போகும்படி கெட்டியாய்ச் செய்ய வேண்டும்."

"இத்தனை உயரம் மண் அடுக்கிவிட்டு கோபுரத்தை உள்ளே செய்துவிட்டு, பிறகு மண்ணை என்ன செய்வது. கோபுரத்தை எப்போது பார்ப்பது."

"அத்தனை மண்ணையும் மெல்ல மெல்ல எடுத்து விட வேண்டும். விமானத்தின் நான்கு புறங்களிலும் மண்ணைக் கொண்டு போய் கொட்டிவிட வேண்டும்."

"சிவனே.. என் சிவனே.. இது சாத்தியமான வேலையா. அந்தச் சாரம் முடியாது என்று சொல்கிறாய். இந்தச் சாரம் மட்டும் முடியுமா."

"வேறு வழியே இல்லை. முடிந்தாக வேண்டும்." நித்தவினோதப் பெருந்தச்சன் அழுத்தம் திருத்தமாய் அடித்துச் சொன்னாள்.

சபை திகைத்துப் போய் விமானத்தையே பார்த்துக் கொண்டிருந்தது.

"உங்களுக்கு இன்னும் புரியவில்லை எனில் இப்போதே ஒரு செயல்முறைத் திட்டம் காட்டுகிறேன்."

அவன் கைதட்ட வெள்ளை மணலை, காவிரியிலிருந்து கொண்டு வந்து சலித்த வெள்ளை மணலைக் கூடை கூடையாக



அருகே இறக்கினார்கள். ஒரு கூடையிலிருந்து மண் வாரி அந்த விமானத்தின் மண்டபம் சுற்றிப்போட்டான். மண் நன்றாக உயர்ந்தது.

"இப்போது மண்டபம் மறைந்து விட்டது. முதல் அடுக்கில் ஏறுவதற்கு இங்கு படிகள் செய்து, இந்த இடத்தில் பாறைகள் ஏற்றி, இந்த மண்வழியாக யானைகள் வைத்து இழுத்துக் கொண்டுவந்து மெல்ல மெல்ல அடுக்குகிறோம்."

"எத்தனை."

"இதோ ஒரு அடுக்கு அடுக்கியாகி விட்டது." பிரித்த மெழுகை மறுபடியும் வைத்தான். மறுபடியும் மண் கொட்டினான். அவன் வைத்த அடுக்கு மறைந்தது.

இப்பொழுது அந்த இடத்தில் யானை போகின்ற பாதையாக அழுத்தி அழுத்தம் திருத்தமாகச் செய்வோம். மறுபடியும் இன்னொரு அடுக்கு வைத்தான். மண் கொட்டினான். மீண்டும் மண் கொட்டினான். மீண்டும் இன்னொரு அடுக்கு வைத்தான். மண் கொட்டினான். இப்பொழுது சுருள் வடிவமான ஒரு பாதை விமானத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. பதினாறு கூடை மண் இப்போது கொட்டப்பட்டது. உண்மையில் ஒரு கோடியே அறுபது லட்சம் கூடை மண் கொட்டப்பட வேண்டும்.

'ஹா...' வந்தியத்தேவர் தலையில் கை வைத்துக் கொண்டார்.

பஞ்சவன்மாதேவி மிரண்டாள்.

சீராளன் அமைதியாக அதையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். இராஜேந்திரர் எழுந்து நின்று இடுப்பில் கை வைத்து ஆழமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சக்ரவர்த்தி மெல்ல பெருந்தச்சரை நோக்கி புன்முறுவல் செய்தார்.

"வேறு வழியில்லை செய்துதான் ஆகவேண்டும். நான் செய்த சாரத்தைவிட இது எளிதாக வெகு உறுதியாக இருக்கிறது. யானை நடக்கின்ற பாதையாக இருக்கிறது. மூங்கில் கழியைக் கட்டி அதன்மீது பாதை போட்டு யானை ஏற வேண்டுமென்றால் முடிகின்ற காரியமா. அது முறிந்து போனால் என்ன கதியாகுமென்ற பயம் எனக்கும் உண்டு. ஆனால், நித்த விநோதப் பெருந்தச்சன் தீர்மானமாக கீழிருந்து மேல் வரை மண் கொட்டி ஈரமாக்கி அடுக்கிச் செய்து விட்டான்."

"அதுமட்டுமில்லை சக்ரவர்த்தி... பாறை இழுத்துப் போகின்ற பாதையெங்கும் சவுக்குக் கட்டைகளை வைத்துவிடலாம். சவுக்குக் கட்டைகளின் மீது மசக்கு எண்ணெய் தடவி விடலாம். எனவே, பாறை போவது எளிதாக இருக்கும்."

"ஆட்கள் வழுக்கி விழமாட்டார்களா."

"இல்லை. சவுக்குக் கட்டைகள் வழுக்காது யானைகள் கூட உறுதியாக நடக்கும்."

"சவுக்குக் கட்டைகள் முறிந்து போனால்."

"முறிந்த சவுக்கை வீசி எறிந்துவிட்டு, இன்னொரு சவுக்கை வைத்துவிட வேண்டியதுதான். சவுக்கு அடுக்குவதற்கென்றே தனி ஆட்கள் நியமிக்கப்பட வேண்டியதுதான்."

"புரிகிறது.. புரிகிறது.. புரிகிறது. ஆனால் இவ்வளவு மண் எங்கிருந்து எடுப்பீர்கள்."

இளவரசர் மறுபடியும் உலவியபடியே கேட்டார்.

"எனக்கு அதற்கும் ஒரு திட்டம் இருக்கிறது."

"என்ன."

"தஞ்சை தளிக்குளத்தை ஆழப்படுத்தினால் குளமும் ஆழப்படுத்தியதுபோல் ஆகும். மிருதுவான மண்ணும், ஈரமான மண்ணும் நமக்குப் பாதைபோடக் கிடைக்கும். கோவில் வேலைக்காக கொண்டு வரப்படும் பாறைகளின் சிதறல்களை எடுத்து மண்ணோடு அவ்வப்போது கலந்து விட்டோமென்றால் பாதை இன்னும் கெட்டியாக இருக்கும். பாதையின் மேல் பரப்பில் முன்பு சொன்னது போலவே நாம் சவுக்குக் கட்டைகளைச் சீவி, தோலுரித்து, மழமழப்பாக்கி, அதன் மீது எண்ணெய் தடவி அடுக்கி வைத்துவிட்டோமென்றால் யானையும் எளிதாக ஏறும். நாமும் சறுக்காமல் நிற்போம். யானைகளும் காலூன்றி நிற்க முடியும்."

"என்ன கோணத்திலே பாதை அமைப்பாய்."

வந்தியத்தேவர் கேட்டார்.

"ஒரு முழத்திற்கு நாலு விரற்கடை உயரம் தூக்கும் வண்ணமாகப் பாதை அமைக்கப்படும்."

"அப்போது ஒரு கோலுக்குக் கிட்டத்தட்ட இரண்டு முழமல்லவா வரும்."



"ஆமாம், அதில் இழுத்துப் போவதொன்றும் கடினம் இல்லையே."

"நான் இழுப்பது பற்றி யோசிக்கவில்லை. ஒரு வேளை பாறை பின்னோக்கி சரிந்தால், அந்தச் சரிவின் வேகம் அதிகமாகவல்லவா இருக்கும்."

வந்தியத்தேவர் பதில் சொன்னார்.

"ஏன், சரிவதைப் பற்றியே பேசுகிறீர்கள்."

இளவரசர் வந்தியத்தேவரை முறைத்தார்.

"ஏன் பேசக்கூடாது."

வந்தியத்தேவர் பதிலுக்குக் கேள்வி கேட்டார்.

"அதற்கில்லை."

இராஜேந்திரர் பதில் சொல்ல வந்தபோது வந்தியத்தேவர் கையமர்த்தினார்.

"நான் மறுபடி மறுபடி சொல்கிறேன் இராஜேந்திரா இங்கு பெரிய வேலை செய்வது ஒன்றும் அற்புதமல்ல. ஆனால், அந்த வேலை எந்தக் குறையுமில்லாமல் உயிர்ப் பலி இல்லாமல் நடைபெற வேண்டுமென்பது தான் என் ஆசை. ஐயோ என்று நூற்றுக்கணக்கான பேர் அலறினால் அந்த இடத்தில் சுபிட்சம் கெடும்."

"இவ்வளவு பெரிய விஷயம் பேசிக் கொண்டிருக்கிறோம். கருவூர்த் தேவர் வரவில்லையே."

சக்ரவர்த்தி திடீரென்று நினைவு வந்தவராகக் கேட்டார்.

"மூன்று முறை ஆள் அனுப்பிவிட்டேன். நிசும்ப சூதனி கோயில வளாகத்தில் தான் உட்கார்ந்து பெண்களோடும், குழந்தைகளோடும் பேசிக் கொண்டிருக்கிறார். இதோ வருகிறேன். இதோ என்று சொல்கிறாரே தவிர வருவதாகக் காணோம்."

"ஒரு வேளை வருவதற்கு விருப்பமில்லையோ."

கவலையோடு சக்ரவர்த்தி கேட்டார்.

"தெரியவில்லை. வேறு எதற்கோ தயக்கம் காட்டுவதாகத் தெரிகிறது."

"என்ன தயக்கம். ஈசான சிவபண்டிதர் வந்துவிட்டார் என்ற தயக்கமா."

பஞ்சவன் மாதேவி குரல் கொடுத்தாள்.

"ஆமாம். அப்படித்தான் இருக்குமென்று நினைக்கிறேன்."

கிருஷ்ணன்ராமன் பதில் சொன்னார்.

"அதனால்தான் அருண்மொழியை அனுப்பியிருக்கிறேன்."

"இதை முதலிலேயே செய்திருக்கலாம்."

இராஜேந்திரர் கிருஷ்ணன்ராமனைச் சற்று குறை சொல்வது போல் சொல்ல, இராஜேந்திரரை ஒரு கணம் கிருஷ்ணன்ராமன் உற்றுப் பார்த்துவிட்டு, "ஆமாம். இதை முன்னமே செய்திருக்கலாம்." என்று ஒப்புக் கொண்டார்.

அவர் ஒப்புக் கொண்டாலும் அந்தக் குற்றச்சாட்டு அவருக்கு வலித்தது என்பது சபையிலுள்ள அனைவருக்கும் தெரிந்தது.

"இராஜேந்திரன் இன்னும் சூடாகவே இருக்கிறான். தேவையற்ற அதிகாரம் மிகப்பெரிய தொல்லைகளைக் கொடுக்கும் என்று தெரியாதவனாகவே இருக்கிறான்."

அரசர் கவலைப்பட்டார்.

"எதற்காகக் கருவூர்த் தேவர் வேண்டுமென்று நீங்கள் பிரியப்படுகிறீர்கள்."

வந்தியத்தேவர் சக்ரவர்த்தியை நோக்கித் திரும்பினார்.

"இது சரியா என்று சொல்ல எனக்கோ, இராஜேந்திரனுக்கோ, உங்களுக்கோ அல்லது சேனாதிபதி கிருஷ்ணன் ராமருக்கோ, பழுவேட்டரையருக்கோ, பஞ்சவன்மாதேவிக்கோ அனுபவமில்லாததால், இதைத் தெளிவாகக் கண்டுபிடிக்க ஈசான சிவபண்டிதரோ, கருவூர்த்தேவரோ வருவதுதான் நல்லது."

"அப்படி நீங்கள் விரும்பினீர்கள் என்றால் இருவரில் ஒருவர்தான் வருவார். இரண்டு பேரும் வரமாட்டார்கள்."

"அவர்கள் இரண்டுபேரும் வந்தால் பொருத்தமாக இராதா."

பஞ்சவன்மாதேவி கேட்டாள்.

"ஆஹா... பொருத்தம்தானே... அவர்கள் இருவருக்கும்தானே... எனக்கும், இராஜேந்திரனுக்கும் உண்டான பொருத்தம்போல அற்புதமான பொருத்தம்."



கிருஷ்ணன்ராமன் இதுதான் வாய்ப்பு என்று மெல்லத் தன் குமுறலைக் கொட்டினார்.

இராஜேந்திரர் மெல்ல நிமிர்ந்து கிருஷ்ணன் ராமனை உற்றுப் பார்த்தார்.

"இந்த அந்தணக்கிழவனும் பொறுமையில்லாதவன் தான். அவன் இளைஞன். இளவரசன். வெற்றி பல பெற்றவன். அதனால் மமதையோடு, இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளாது, அவனை மறுத்துப் பேசவே இவர் ஆசைப்படுகிறார். இது சோழ தேசத்திற்கு நல்லதல்ல என்று இவர்கள் இருவருக்கும் யார் சொல்வார்கள். இவர்கள் இப்படிப் பிரிந்து பேசுவதைப் பார்த்தால் இங்குள்ள உபசேனாதிபதிகள் இரண்டாகப் பிரியமாட்டார்களா. உபசேனாதிபதிகள் இரண்டாகப் பிரிந்தால் ஊர் பிரியாதா. எப்பேர்ப்பட்ட முட்டாள்கள் இவர்கள்."

சக்ரவர்த்திக்குக் கோபம் வந்தது. நிமிர்ந்து பஞ்சவன் மாதேவியைப் பார்த்தார்.

பஞ்சவன்மாதேவிக்குச் சகலமும் புரிந்தது. சக்ரவர்த்தியின் தோளில் கைவைத்து அமைதி என்பதாய் அழுத்தினாள்.

சபை மௌனமாய் மண் கொட்டிய அந்த மெழுகு விமானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

வாசலில் குதிரைச் சத்தம் கேட்டது.

அருண்மொழி குதிரையிலிருந்து நடையில் தாவி இறங்கி உள்ளுக்குள் விரைவாக வந்தான்.

"கருவூர்த் தேவர் வருகிறார். நேராக இங்கு வராமல் ஈசான சிவபண்டிதர் இருக்கின்ற கொட்டகைக்குப் போய் அவரை நமஸ்கரித்து, அவரையும் அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார். என்னை முன்கூட்டிப் போய் நின்று ஈசான சிவபண்டிதரைத் தக்க முறையில் வரவேற்க ஏற்பாடுகள் செய்யச் சொன்னார்."

சட்டென்று சக்ரவர்த்தி முகம் மலர்ந்தது.

பெரிய மனிதர் பெரிய மனிதர்தான். கருவூர்த்தேவர் கருவூர்த்தேவர்தான். ஞானி ஞானிதான். எல்லாம் துறந்தது என்பதற்கு அடையாளம் இதுதான். சோழ தேசத்துக் குலகுரு ஈசான சிவபண்டிதர். அவரைக் காட்டிலும் வல்லவராய் ஊர் முழுக்கத் தெரிந்தவராய் இருப்பினும், இங்கே யார் முதன்மை

பெறவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார். தான் போய் அழைத்து வர முயல்கிறார். எனவே, நாமும் இங்கே வெறுமே உட்கார்ந்திருக்கக்கூடாது. இராஜேந்திரரை அனுப்பலாம்.

"இராஜேந்திரா எழுந்திரு. போய் ஈசான சிவபண்டிதரை நமஸ்கரித்து அழைத்து வா. பெருந்தச்சரே.. ஈசான சிவபண்டிதரை வரவேற்பதற்குண்டான எல்லா வேலைகளையும் செய்யுங்கள். வாசலில் நீர் தெளித்துக் கோலமிடச் செய்யுங்கள். மாவிலைத் தோரணங்கள் கட்டுங்கள். பூரணகும்பம் ஏந்தி அந்தணர்கள் இரண்டு பேர் வரட்டும், தளிச்சேரிப் பெண்டுகள் நடனமாடி வரட்டும்."

"தளிச்சேரிப் பெண்டுகள் இடம் சற்றுத் தொலைவில் இருக்கிறதே."

"ஏன், நான் இருக்கிறேனே. நான் நடனமாடி வருகிறேன்."

உமையாள் தன்னை மீறி உற்சாகமாகச் சொல்ல சபை திரும்பி அவளைப் பார்த்தது.

"சரி.. ஆடு" என்று சக்ரவர்த்தி ஒரு வார்த்தையில் சொன்னார்.

சீராளனுக்கு உமையாளின் வேகமான பேச்சு சற்று பயத்தைக் கொடுத்தது.

'இது என்ன.. சபையில் யாரிடம் பேசுகிறோம் என்று தெரியாமல் இவள் சற்று வேகமாக இருக்கிறாளோ, வெகுளியாக இருக்கிறாளோ' என்று கவலைப்பட்டான். பேசாதே என்று எச்சரிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

பஞ்சவன்மாதேவி நெருங்கிவந்து உமையாள் முதுகில் தட்டிக்கொடுத்தாள்.

"வரவேற்று, அடிநயந்து ஆடுவது உனக்குத் தெரியுமா."

"தெரியும். பூக்கள் இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்."

"உதிரிப்பூக்களை நானே கொண்டு வரச் சொல்கிறேன்."

பெருந்தச்சரின் இரண்டாவது மனைவி எங்கிருக்கிறார் என்று கேட்க, பெருந்தச்சரின் இளைய மனைவி ஓடிவந்து கைகூப்பினாள். அவளிடம் விஷயங்கள் சொல்ல அந்த வீடு பரபரத்தது.



சக்ரவர்த்தி அந்த மெழுகு விமானத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"தம்பி இலத்தி மெல்ல இந்த மணலை அப்புறப் படுத்து."

இலத்தி கைகாட்ட மூன்று சிற்பிகள் வந்தார்கள். மணலை அள்ளி அள்ளி மிக வேகமாகக் கூடைகளில் கொட்டி அப்புறப்படுத்தினார்கள்.

விமானத்தினுடைய மணல் மொத்தமும் அப்புறப்படுத்தப் பட்டு கீழ்மண்டபமும், கருவறையும், உள்ளுக்குள் இருக்கின்ற சிவலிங்கமும், விமானமும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன. துணியில் மெல்ல அந்த மெழுகைத் துடைக்க ஆரம்பித்தார்கள். குச்சியில் துணுக்குகளை எல்லாம் நீக்கினார்கள்.

அந்த இடத்தைப் பெருக்கினார்கள். அந்தப் பீடத்தைச் சுத்தம் செய்தார்கள். வந்தியத்தேவரும் சுத்தம் செய்வதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

பஞ்சவன்மாதேவி, தட்டில் பழவகைகளை அடுக்கி வைத்தாள். "அவர் மோர் குடிப்பாரா.. தாக சாந்தி செய்து கொள்வாரா." என்று பஞ்சவன்மாதேவி இழுக்க..

"இங்கே ஒரு பனத்தி இருக்கிறார். அந்தணரின் மனைவி, அவரைக் கொண்டுவரச் சொல்லட்டுமா."

"உடனே சொல்." என்று சொல்ல, நீர்மோர்ச் சொம்புடன் ஒரு பார்ப்பன மத்தியத்தரப் பெண் வந்து நின்றாள். பஞ்சவன்மாதேவிக்கு வணக்கம் சொன்னாள்.

"இது போதுமா" என்று சொம்பு நிறைய இருக்கின்ற மோரைக் காட்டிக் கேட்டாள்.

"போதும்.. இதற்கு மேலா ஒருவர் குடித்து விடுவார்." என்று பஞ்சவன்மாதேவி வினவ, அவள் புன்னகை செய்தாள்.

வெளியே சிறுமுரசு கேட்டது. எக்காளம் கேட்டது.

அரசர் எழுந்தார். சால்வையைச் சுற்றி தோளில் போட்டுக்கொண்டார். குறுவாளைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டார். உடைவாளை நெஞ்சில் அணைத்துக் கொண்டு வழிநடைக்கு வந்து படியிறங்கினார்.

நீண்ட அந்தத் தோட்டச்சாலையில் நடந்தார். தோட்டத்து வாயிற்கதவை அடைந்தார். அவர் தோட்டத்து வாயிற்கதவை

அடைய வெளியிலுள்ள ஜனங்கள் ஜெயகோஷம் போட்டார்கள்.

'ஐயா, என் அப்பா, என் அரசே' என்று அவரைப் பார்த்து அரற்றினார்கள். தலைப்பாகையை மேலே பிரித்துப் போட்டார்கள். பலபேர் தலைப்பாகையைக் கக்கத்தில் இறுக்கி வணக்கம் சொன்னார்கள். பெண்கள் விழுந்து வணங்கினார்கள். குழந்தைகள் தொலைவிலிருந்த படியே கைகூப்பின. விழுந்து வணங்கின.

சக்ரவர்த்தி எல்லோரையும் பார்த்துக் கையசைத்தார். கவலையோடு மறுபடியும் ஜனங்களைப் பார்த்தார். என்னுடைய ஆசைக்காக, என்னுடைய இந்தப் பேராசைக்காக நான் இவர்களையெல்லாம் சிரமப் படுத்துகிறேனோ.. வழக்கமாய் வயல்வேலை செய்து கொண்டும். ஆடிக்கொண்டும், பாடிக் கொண்டும் இருக்க வேண்டிய இந்த ஜனங்கள், இப்படி என்னால் கல்தூக்கி, மண்தூக்கி வேதனைப்படுவார்களோ என்று நினைத்துக் கூட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

தொலைவில் வேதகோஷங்கள் கேட்டன. ஈசான சிவபண்டிதர் மட்டுமல்லாது. ஐந்நூறு அந்தண இளைஞர்களும் அரசரைப் பார்க்க வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

"யார் அந்த ஐந்நூறு இளைஞர்கள்." சக்ரவர்த்தி கேட்டார். சக்ரவர்த்தியிடம் அந்த ஐந்நூறு இளைஞர்கள் பற்றி விவரிக்கப்பட்டது.

"அந்தணர்களையா தடுத்து நிறுத்தப் போகிறீர்கள்."

மெய்க்காவல் படையைப் பார்த்துக் கேட்டார்.

"அருண்மொழி எங்கே" லேசாய்ப் பரபரத்தார்.

"என்ன விஷயம் சக்ரவர்த்தி."

கிருஷ்ணன்ராமன் அருகே வந்து பணிவாக நின்றார்.

அரசர் மெல்ல பதட்டமடைவது பார்த்து, அந்தச் சபையும் மெல்ல பதட்டமடைந்தது."

"ஈசானசிவபண்டிதர் தஞ்சைக்கு வந்திருக்கின்ற ஐந்நூறு அந்தண இளைஞர்களையும் திரட்டிக்கொண்டு வருகிறார். அந்த இளைஞர்களுக்குச் சரியான உணவும், உறைவிடமும் நமது அரசு தரவில்லை என்று வருத்தப்படுகிறார்."



"கருவூர்த்தேவர்... கருவூர்த்தேவர்."

"அவர் என்ன ஆனார்."

"பரவச நிலையில் இருக்கிறாரப்பா. ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் வருகிறார். ஈசான சிவபண்டிதர் எதிரே நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார். மற்ற எல்லா அந்தண இளைஞர்களையும் தொட்டுத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார். பசுபதி... பசுபதி... என்று இடையறாது சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஈசான சிவபண்டிதரும், அவரும் ஒருவரையொருவர் உற்றுப்பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்குள் ஏதோ பரிமாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன.

"கூப்பிடுகிறார்கள் வரக்கூடாதா.." என்று கருவூர்த் தேவர் கேட்டதும், சட்டென்று எழுந்து சால்வையைப் போட்டுக் கொண்டு ஈசான சிவபண்டிதர் கிளம்பி விட்டார்.

"அவர்களுக்குள் அபிப்ராய பேதமில்லையே."

"இல்லை. மிக நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள் போலிருக்கிறது. ஒருவரைப் பார்த்து ஒருவர் ஆதரவாகச் சிரிக்கிறார்கள். கருவூர்த்தேவருக்கு ஜலம் கொடுத்து, விபூதி கொடுத்து, உள்ளங்கை அகல வட்டக்கல் ஒன்றும் ஈசான சிவபண்டிதர் வழங்கினார். கருவூர்த்தேவர் அதை நெஞ்சில் வைத்துக்கொண்டு கூத்தாடினார். பெரிய கூத்தாகவே அது இருந்தது."

"சரி அவர்கள் என்ன சொல்கிறார்கள். என்ன செய்கிறார்கள் என்று நமக்கு எப்படித் தெரியும்."

"எல்லா இளைஞர்களும் உள்ளே வரவேண்டும் என்கிறாரா ஈசான சிவபண்டிதர்."

"அவர்கள் எல்லாரும் சக்ரவர்த்தியை நாங்கள் பார்க்க வேண்டும் என்று சொன்னதால், அதனாலென்ன.. நாம் சக்ரவர்த்தியைப் பார்க்கலாம் என்று அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அழைத்து வருகிறார். எனவே ஒருக்காலும் அந்தண இளைஞர்களைத் தடுத்து விட முடியாது என்று சொல்லத்தான் நான் ஓடோடி வந்தேன். என்ன .செய்வது."

"நீங்கள் எல்லோரும் வாசலில் நில்லுங்கள். சக்ரவர்த்தி ஈசான சிவபண்டிதரைத் தோட்டத்து வாசலில் வரவேற்கட்டும்.

ஈசான சிவபண்டிதரோடும், அந்தணர்களோடும் மாளிகை நோக்கி நடக்கட்டும். ஐநூறு அந்தணர்கள் இங்கிருந்து போனதும் கதவு சார்த்திவிட, நான் ஏற்பாடு செய்கிறேன். நான் வாசற்பக்கம் நின்று கொள்கிறேன்."

"ஐநூறு இளைஞர்களை எப்படியப்பா அரசருக்கருகே அனுமதிப்பாய்."

"வேறு வழியில்லை. இந்த இடத்தில் மறுத்துப் பிடிவாதம் பிடிக்க வேண்டாம்."

"அவரா.. நன்றாக இருக்கிறது. கருவூர்த்தேவர் வந்தாலும், பஞ்சவன்மாதேவி வந்தாலும் வாளைப் பிடுங்கி வை என்று உத்தரவு. இப்போது ஐந்நூறு இளைஞர்களுக்கு அனுமதி."

பஞ்சவன்மாதேவி உரத்த குரலில் கேலி செய்தார்கள்.

"ராஜேந்திரன் எங்கே."

சக்ரவர்த்தி கேட்டார்.

"ஈசான சிவபண்டிதரோடு நடந்து வருகிறார்."

அருண்மொழி பதில் சொன்னான்.

"ஈசான சிவபண்டிதரை வணங்கினானா."

"விழுந்து வணங்கினார். கருவூர்த்தேவரையும் வணக்கம் செய்தார். அந்தணர்களையும் விழுந்து வணங்கினார்."

"நல்லதாய்ப்போயிற்று. இவனை அனுப்பிவிட்டு உள்ளுக்குள் கொஞ்சம் பயந்து கொண்டிருந்தேன். சரி, அந்த ஐந்நூறு இளைஞர்களுக்கு என்ன வேண்டும்."

"சக்ரவர்த்தி நீங்கள் அமைதியாக இருங்கள். நாம் கணக்கு எழுதுவதற்குக் கேட்டுக் கொண்டிருந்த இளைஞர்கள் இவர்கள்தான். தஞ்சை அந்தணர்கள் முடியாதென்று மறுத்துவிட்டுப் போய்விட்டார்களல்லவா. இந்த இளைஞர்கள் கணக்கு எழுத ஆவலாக இருக்கிறார்கள்."

"காரணம் வறுமையா... அவர்கள் அங்கு அனாதரவாக விடப்பட்டதாலா."

"இல்லை. தஞ்சை செழிப்பான ஊர். நாம் அங்கு போய்ப் பிழைத்துக் கொள்ளலாம் என்றுதான் இவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். வேதம் சொல்லிப் பிழைத்துக் கொள்ளலாம் என்று வந்திருக்கிறார்கள்."



"கணக்கு எழுதச் சொன்னால் அவர்களை இழிவுபடுத்துவதாகாதா."

"இல்லை. அவர்கள் இதில் விருப்பம் தெரிவிக்கிறார்கள்."

"எப்படி சொல்கிறீர்கள்."

"இன்று காலை குணசீலன் என்னைச் சந்தித்தான். இந்த விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொன்னான். விரிவாகப் பிற்பாடு பேசு என்று சொல்லிக் கிளம்பி வந்துவிட்டேன்."

"சரி. குணசீலன் எங்கே. அவரையும் இங்கே அழைத்து வந்திருக்கலாமே."

"ஆமாம். கூப்பிடவேண்டுமென்று மனத்துக்குள் நினைத்து. சரி பாண்டிய வீரனாயிற்றே.. பிற்பாடு விவரித்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டு விட்டேன். நீங்கள் அனுமதித்தால் அழைத்து வருகிறேன்."

"குணசீலனை இந்தச் சபையில் அனுமதிப்பதா.. இளவரசர் இராஜேந்திரரை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்வது நல்லது." வந்தியத்தேவர் சொன்னார்.

"அப்பாடா... எது சொன்னாலும் இடைஞ்சலா.. என்னாயிற்று இவனுக்கு வந்தியத்தேவரே. அக்கன் குந்தவை எங்கே.. அவளை அழைத்துவரச் சொன்னேனே."

"நீங்கள் எல்லோரும் பேசி முடிவுசெய்து. அது என்ன விஷயமென்று எனக்குச் சொல்லுங்கள். பிற்பாடு அதை யோசித்து என் அபிப்ராயத்தைச் சொல்கிறேன். நான் அந்தச் சபையில் கூச்சலோடு கூச்சலாகக் கரைந்துவிடவிரும்பவில்லை." என்று சொன்னாள்.

"அவள் சொன்னது சரிதான். இங்கு கூச்சல்தான் அதிகம் இருக்கிறது. இந்நேரம் பல்வேறு விஷயங்களை நாம் தாண்டி வந்திருப்போம். ஈசான சிவபண்டிதர் எங்கே என்று கேட்டீர்கள். இதோ பாருங்கள் மொத்தமும் திசை திரும்பிவிட்டது." வந்தியத்தேவர் மறுபடியும் குறை சொன்னார்.

"இவ்வளவு பெரிய விஷயத்தை அவருடைய துணையில் லாமல், அனுமதியில்லாமல் செய்வது என்பது நியாயம்தானா... அப்படி யோசிக்கவே மாட்டீர்களா."

சக்ரவர்த்தி அலுப்பாகப் பேசினார்.

"என்னுடைய அச்சமெல்லாம் பரவசமாக வருகின்ற கருவூர்த்தேவர். எதற்குக் குப்பை என்று இந்த மொத்த பீடத்தையும் கவிழ்த்து விடுவாரோ என்ற பயமும் எனக்கு இருக்கிறது."

"இல்லை கருவூர்த்தேவர் ஈசான சிவபண்டிதரைச் சமாதானம் செய்து வருகிறார். இதுதான் என் கருத்து."

வந்தியத்தேவர் சொல்ல, எல்லோரும் அவரைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"கருவூர்த்தேவரைப் போல உங்கள் மீது அன்பு கொண்டவர் எவருமில்லை. அது மிகப்பெரிய கருணை. கருணையில் ஊறவைத்த கருணை, உங்களுடைய ஒவ்வொரு செயலுக்கும் தான் ஆதரவாக இருக்க வேண்டுமென்றும் உங்களைச் சரியான வழியில் திசை திருப்ப வேண்டுமென்ற எண்ணத்திலும் உள்ளவர் ஈசான சிவபண்டிதரை நீங்கள் சரியாக வரவேற்க வில்லையோ, அல்லது இம்மாதிரி ஐநூறு அந்தண இளைஞர்களை அனாதை யாக விட்டுவிட்டதால் ஈசான சிவபண்டிதர் கோபித்துக் கொள்வாரோ என்று நினைத்து, அவர் காலில் விழுந்து பணிந்து, குளுமையாக்கி, இங்கு கூட்டிக் கொண்டு வருகிறார் என்று நினைக்கிறேன். அவர் கணக்கு தப்பாது, பிற்பாடு இதை நீங்கள் என்னிடம் சொல்லிச் சந்தோஷப் படுவீர்கள்."

வந்தியத்தேவர் உறுதியாகச் சொல்ல, சக்ரவர்த்தி தன்னுடைய இடக்கையை எடுத்து அவர் இடக்கையில் வைத்து வேகமாகப் பேசியதற்கு மன்னித்துக் கொள் என்பது போல் பார்த்தார்.

அந்தப் பார்வை வந்தியத்தேவரை நெகிழ்த்தி விட்டது. சட்டென்று உட்கார்ந்து கொண்ட சக்ரவர்த்திக்கு அருகே போய், அவர் தோளை அணைத்துக் கொண்டார்.

"சக்ரவர்த்தி அவர்களே... நேற்று நானும் குந்தவையும் மேல் மாடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். வேறு எந்த நேரத்தையும்விட இந்த நேரத்தில்தான் சக்ரவர்த்திக்கு உங்களுடைய துணை தேவை. எனவே வேறு எங்கேயும் போவதைப்பற்றி மறந்து விட்டு எப்பொழுதும் சக்ரவர்த்திக்கு அருகேயே இருக்க முயற்சி செய்யுங்கள். நான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நீங்கள் இருப்பின் அது



அவருக்கு மிகப்பெரிய பலம் என்று உங்கள் அக்காள் குந்தவையார் சொன்னார்கள்.

என்னால் என்ன பெரிய உதவி செய்து விட முடியும். ராஜேந்திரரையும், கிருஷ்ணன்ராமனான பிரம்மராயரையும், துடிதுடிப்பான அருண்மொழிப்பட்டனையும் விட்டு சற்று தளர்ந்த நிலையில் இருக்கின்ற எனக்கு என்ன பலம் இருக்கும் என்று கேட்டேன். எங்கு சக்ரவர்த்தியிடம் குற்றம் காண்பினும் இதைத் தவறாது உடனடியாகச் சொல்வதையும், எங்கு நல்லவிஷயம் தோன்றினாலும் அதையும் உடனடியாகப் பாராட்டுவதையும் செய்யுங்கள். இந்த உதவி போதும் என்று சொன்னாள். உங்கள் அக்காள் சொன்ன சொல்லைத்தான் நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன். மற்றபடிக்கு உங்கள் மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை. எந்தப் பிணக்கும் இல்லை. அன்று போலவே நாம் இன்றும் நண்பர்கள். நல்ல நண்பர்கள். மனம் ஒத்த நண்பர்கள்."

இரண்டு கைகளாலும் சக்ரவர்த்தியின் தோளை அழுத்திப் பிடித்து உலுக்கி அவர் உச்சந்தலையில் முத்தமிட்டார்.

சக்ரவர்த்திக்குச் சந்தோஷமாக இருந்தது. அக்காளை நினைத்து உள்ளுக்குள் கணநேரம் நெகிழ்ந்தார்.

தம்பிக்குத் துணையாக இரு என்று புருஷனுக்குக் கட்டளையிடும் அக்காள் சாதாரணமா.. எல்லாக் குடும்பங்களிலும் நடக்கக் கூடியதா.. இந்தப் பிரியத்திற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்.

உள்ளுக்குள் நினைத்து நெகிழ ஈசான சிவபண்டிதர் அருகே வருவதற்கான முரசொலியும், எக்காளமும் கேட்டன. சக்ரவர்த்தி எழுந்து நின்றார். அவருக்காகப் போடப்பட்ட மரஆசனம் அவர் அனுமதியின் பேரில் விலக்கிக்கொள்ளப்பட்டது.

அந்தணர்கள் அரசருக்கு முன் நின்றார்கள். அரசர் நேர் பின்னால் நின்றார். வலப்பக்கம் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரும், இடப்பக்கம் வந்தியத்தேவரும், சற்றுத்தள்ளி பழுவேட்டரையரும், இந்தப் பக்கம் மூவேந்த வேளாரும், அரசருக்கு நேர்பின்னால் பஞ்சவன்மாதேவியும், கதவுக்கருகே அருண்மொழிப் பட்டரும் நிற்க, ஈசான சிவபண்டிதர் முன் நடக்க, அவருக்கருகே ஆடிப்பாடியபடியே கருவூர்த்தேவர் வர, 'ஓம் நமச்சிவாயா... ஓம் நமச்சிவாயா..' என்று அந்தணர்க் கூட்டம் ராகத்தோடு கைதட்டி பாடிக் கொண்டு வந்தது.

ஈசான சிவபண்டிதருக்கு நெருக்கமாகப் போய் அந்தணர்கள் வரவேற்பு சொல்லக்கூடிய மந்திரங்களைச் சொல்லி, நீர்நிறைந்த, தேங்காயும், மாவிலையும் வைத்த குடத்தை நீட்டினார்கள். இரண்டு கைகளையும் ஏந்தி அதை ஏற்றுக் கொண்டவராய் ஈசான சிவபண்டிதர் செல்ல அந்தணர்கள் இரண்டு புறமும் விலகிக் கொண்டார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் தன் குலகுருவான ஈசான சிவபண்டிதரை நோக்கிக் கைகூப்பினார். இரண்டடி முன்னே நடந்து விழுந்து வணங்கினார்.

கூட்டம் 'சோழம்.. சோழம்..' என்று கத்தியது. எழுந்து நின்ற சக்ரவர்த்தியின் கையில் ஈசான சிவபண்டிதர் தன் வலக்கையை எடுத்து உச்சந்தலையில் வைத்து, 'நீடுழி வாழ்வாயாக... நிலைத்த புகழ் பெறுவாயாக... இந்த சோழதேசம் முன் எப்போதும் இருந்ததைக் காட்டிலும் மிக உச்ச நிலையில் வந்து சேருமாக..' என்று உரத்த குரலில் சொல்ல மறுபடியும் 'சோழம்..சோழம்..' என்று கூட்டம் பிளிறிற்று.

சக்ரவர்த்தியோடு, பஞ்சவன்மாதேவியும் விழுந்து பண்டிதரை வணங்கினாள். பஞ்சவன்மாதேவிக்குத் திருநீறு இட்டார். அரசரின் தலையில் தெளித்தார். நெற்றியிலிட்டு மார்பு முழுவதும் திருநீறு தடவினார்.

கிருஷ்ணன்ராமன் விழுந்து வணங்க, வந்தியத்தேவரும் விழுந்து வணங்க, பழுவேட்டரையரும், மூவேந்தவேளாரும் வந்து நிலம் தொட, அருண்மொழிப்பட்டன் குனிந்து வணங்கி 'அபிவாதயே வைஸ்வாமித்ர' என்று சொல்லி காலில் விழுந்து வணங்கினான்.

ஈசான சிவபண்டிதர் எல்லோருக்கும் திருநீறு கொடுத்தார். உள்ளே போகலாமா என்று சக்ரவர்த்தி கையைக் காட்ட, திரும்ப அந்த அந்தணத் தலைவரைப் பார்த்து ஏதோவொரு வார்த்தை சொன்னார். அந்தணத் தலைவர் உரக்கக் கையை உயர்த்தி சில சைகைகள் செய்ய வராஹி தேவியைக் குறித்த பீஜாட்சர மந்திரமும், அவளுடைய நாமாவளியும் உரக்கச் சொல்லப் பட்டன. பீஜாட்சரம் முடிந்ததும், ஈசான சிவபண்டிதர் மெல்ல நகர, நாமாவளியைச் சொல்லிக்கொண்டு அந்தணர்கள் பின்னால் வந்தார்கள்.

மாளிகையின் படியை அடைவதற்கும் நாமாவளி முடிவதற்கும் சரியாக இருந்தது.



அந்தண இளைஞர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"இராஜராஜா... நலம்தானே."

சக்ரவர்த்தியை ஈசான சிவபண்டிதர் நலம் விசாரித்தார்.

பஞ்சவன் மாதேவியைப் பார்த்து புன்னகை செய்தார்.

"பெருந்தச்சர் குஞ்சரமல்லரோ..." என்று குஞ்சரமல்லரை நோக்கி வணங்கினார்.

குஞ்சரமல்லர் அவர் கழுத்தில் மாலை அணிவித்தார். இரண்டு மனைவிகளோடு விழுந்து வணங்கினார். எதிரே மிகப்பெரிய பித்தளைத் தாம்பாளம் வைத்தார். அதில் நிற்கச் சொன்னார். அவர் வந்து நின்றதும், அவர் நிற்பதற்கு ஏற்ற வண்ணம் அருண்மொழி பிடித்துக் கொண்டான். பெருந்தச்சரும் அவர் இரண்டு மனைவிகளும் ஈசான சிவபண்டிதரின் கால்களைக் கழுவினார்கள். அந்த நீரைத் தலையில் தெளித்துக் கொண்டார்கள்.

"அடியேனுடைய சிறு குடிசைக்கு எழுந்தருள வேண்டும்." என்று அடிக்குரலில் பவ்யமாகப் பெருந்தச்சர் சொல்ல சிரித்தபடி." இது சிறிய குடிசை கோட்டை போன்றிருக்கின்ற குடிசை." என்று சொல்லிச் சிரித்தார். கூட இருந்த அந்தண இளைஞர்களும் சிரித்தார்கள். சக்ரவர்த்தியும், மற்றவர்களும் சிரிக்க, தாம்பாளத்தை விட்டு மெல்ல நடந்து, ஈசான சிவபண்டிதர் உள்ளே நுழைந்தார்.

முன் நடையில் நின்று திரும்பினார்.

"இராஜராஜா... உன்னிடம் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகின்றேன்."

"நிறைவேற்றித் தருகிறேனய்யா."

"கருவூர்த்தேவர் எங்கே."

"யாருக்குத் தெரியும். மாளிகைக்கு அருகே இருக்கும் போது என்னை ஒருமுறை சுற்றிவந்தார். விடை பெறுகிறார் என்று புரிந்தது சரி... என்று சொன்னேன். காணாமல் போய்விட்டார்."

"ஐயா வேண்டுகோள் என்ன."

"இந்த அந்தண இளைஞர்களை நான்தான் சோழ தேசத்திற்கு அனுப்பினேன். அவர்கள் பிழைப்பதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறார்கள். ஆனால், தஞ்சை அந்தணர்கள் இவர்களைச்

சரியாக வரவேற்கவில்லை. உன்னிடமும் இதுபற்றிச் சரியாகத் தகவல் சொல்லவில்லை. இந்த அந்தண இளைஞர்களுக்கும் உன்னை எப்படி அணுகுவது என்று தெரியவில்லை. கடந்த ஆறு நாட்களாக இவர்கள் உணவிற்கும் உறைவிடத்திற்கும் தவித்துவிட்டார்கள். நல்லவேளையாக நான் வந்துவிட்டேன். ஒருநாளும் இவர்கள் பட்டினிகிடக்காமல் இங்குள்ள வைசியர்களும், மற்ற பொதுமக்களும் இவர்களைக் கவனித்துக் கொண்டார்கள். எனவே, சோழதேசத்திற்கு எந்தச் சாபமும் இல்லாமல் போயிற்று. இனிமேல் இது நடக்கக்கூடாது. இன்றிலிருந்து இவர்களுக்கு நல்ல உணவும், உடையும் அளிக்கப்பட வேண்டும். வரும் வழியில் இராஜேந்திரன் பேசிக் கொண்டு வந்தான். நானே சில அந்தண இளைஞர்களோடு தனியே போய்ப் பேசும்படி பணித்திருக்கிறேன். அந்தண இளைஞர்கள் கணக்கெழுதச் சம்மதித்திருக்கிறார்கள். நம்முடைய கோயில் பணியில் தாங்களும் ஈடுபடுவதாக வாக்களித்திருக் கிறார்கள். அப்படிப்பட்ட வாக்கை அவர்கள் நிறைவேற்றும் போது, நீ அவர்கள் வயிறு வாடாமலும், மனம் கோணாமலும் நடந்து கொள்ள வேண்டும். உன்னுடைய பணியில் ஈடுபட மாட்டேன். வேதம்படிப்பதே வேலை என்று சொன்ன தஞ்சை அந்தணர்களை நான் கடுமையாகக் கண்டித்திருக்கிறேன்.

அவர்கள் வராதுபோனால் என்ன.. அற்புதமான இந்த இளைஞர்கள் உன்னுடைய கோயில் பணிக்குத் துணையிருப் பார்கள். நான் ஏதோ காரணத்திற்காக அனுப்ப இறைவன் இவர் களை வேறு ஒரு காரணத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறான். ஒருவேளை நான் அனுப்பியதே இந்தப் பணிக்குத்தானோ என்ற மயக்கம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, சோழதேசத்துச் சக்ரவர்த்தியான உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் இந்த ஐநூறு இளைஞர்களையும் ஒப்படைக்கிறேன். இங்கே வா."

முன்னே நின்றிருந்த இளைஞனைக் கூப்பிட்டார்.

"அரசருடைய கோயில் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளச் சம்மதமா."

"முழுச் சம்மதம். என்னால் முடிந்த அத்தனை உதவிகளையும் இந்தக் கோயில் பணியில் செய்வேன்."

"அடேய்... இங்கு வா."

தொலைவில் இருந்த ஒரு அந்தண இளைஞனைச் சுட்டிக்காட்டி கூப்பிட்டார்.



அவன் ஓடிவந்தான்.

"அரசருடைய கோயில் பணியில் ஈடுபடச் சம்மதமா."

"அதற்காகத்தானே வந்திருக்கிறோம். இங்கு நல்ல வேலை கிடைக்கும். நல்ல சன்மானம் கிடைக்கும். சுகமாக வாழலாம் என்றுதான் வந்திருக்கிறோம். அரசர் கட்டளையிட்டால் சந்தோஷமாகச் செய்வோம் எங்கு வேண்டுமானாலும் செல்வோம். கடினமான வேலையைத் தவிர, மென்மையான வேலைகளை எங்களால் திறமையாகச் செய்ய முடியும்."

"இவர்களுக்கு உணவு ஏற்பாடாகிவிட்டதா."

"பஞ்சவன்மாதேவி அதற்கான ஏற்பாட்டை இன்று காலை செய்துவிட்டார்."

"மாலையில் பாலுக்கும், நாளை காலை உணவுக்கும், குறிப்பாக உடைக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்."

"உடனடியாகச் செய்கிறேன்."

அவர் மூவேந்த வேளாரைப் பார்த்தார்.

"நான் கவனித்துக் கொள்கிறேன், எந்தக் கவலையும் வேண்டாம். ஆனால், அந்த ஐந்நூறு இளைஞர்களும் இங்கு இருக்க வேண்டுமா அல்லது வேறெங்கேனும் இருக்கலாமா."

"ஒரு கால் அரைக்கால் நாழிகை இங்கு அவர்கள் நின்று இந்த மாளிகை வாசலில் யஜுர், சாமவேதங்கள் சொல்வார்கள். வேதசப்தம் இங்கு ஒலிக்கட்டும்" என்று சொல்ல அவர் கை உயர்த்தினார்.

அவர்கள் வேகமாக நெருக்கமான வரிசையானார்கள். அவருடைய தலைவன் ஆரம்பிக்க, அவர்கள் ரிக் வேதம் சொல்லத் துவங்கினார்கள். அரசரும், மற்றவரும் அசையாமல் கவனித்தார்கள்.

பஞ்சவன்மாதேவி, ஒரு தட்டு நிறைய பொற்காசுடன் வர, ஒரு சிறிய மர ஆசனத்தை அரசரின் முன்னே, பெருந்தச்சரின் மனைவி வைக்க பஞ்சவன்மாதேவி அந்தத் தட்டை அதன் மீது வைத்தார்.

"ஐந்நூற்றியோரு பொற்காசுகள் இருக்கின்றன." என்று அரசரிடம் முணுமுணுப்பாய்ச் சொன்னாள்.

பாராட்டாய் சக்ரவர்த்தி, பஞ்சவன்மாதேவியைப் பார்த்தார்.

இராஜேந்திரர் மூன்று இளைஞர்களோடு உள்ளே வந்து அரசருக்கருகே நின்று கொண்டார். அந்த இளைஞர்கள் அவர்களோடு சபையோடு கலந்து கொண்டார்கள்.

இராஜேந்திரர் முகம் மலர்ச்சியாக இருந்தது. அடுத்து யஜுர் வேதம் ஆரம்பித்தது. பிறகு சாமவேதம் தொடர்ந்தது. அரசரை நீடுழி வாழ்வாயாக என்று சொல்லி பட்டமகிஷியரின் பெயர் சொல்லி, பஞ்சவன் மாதேவியின் பெயர் சொல்லி. இராஜேந்திரரின் பெயர் சொல்லி, வந்தியத்தேவர் பெயர் சொல்லி, குந்தவை பெயர் சொல்லி, பிறகு பெருந்தச்சரின் பெயர் சொல்லி, அவர் இரு மனைவியரின் பெயர் சொல்லி, கிருஷ்ணன் ராமனின் பெயர் சொல்லி, அருண்மொழிப் பட்டன் பெயர் சொல்லி, மூவேந்த வேளார், பழுவேட்டரையர் பெயர் சொல்லி அவர்கள் வாழ்த்தினார்கள்.

அரச சபை வணங்க, அந்தணச் சபை கை உயர்த்தி, தீர்காயுஷ்மான் பவ உங்களுடைய எல்லா மனோரதங்களும் ஈடேறட்டும்.' என்று உரத்த குரலில் கட்டளைபோல் சொல்லியது.

அரசர் பொற்காசுகள் குவிந்த தட்டை மெல்ல எடுத்தார்.

ஈசான சிவபண்டிதரைப் பார்த்து சால்வையைக் கொடுத்துப் பிடியுங்கள் என்று சொன்னார். ஈசான சிவ பண்டிதர் மெல்ல சிரித்து அருகிலுள்ள இளைஞனைப் பார்க்க, அவன் சால்வையின் ஒரு முனையைப் பிடித்துக் கொள்ள, மறுமுனையை ஈசான சிவபண்டிதர் பிடித்துக் கொள்ள, ஈசான சிவபண்டிதரின் பின்பக்கமுள்ள சால்வையை இன்னொருவன் இறுக்கிக் கொள்ள, அரசர் நிதானமாய் அந்தச் சால்வையில் பொற்காசுகளைக் கொட்டினார்.

"சோழதேசம் வாழட்டும். விளைச்சல் பெருகட்டும். பசுவின் பால் பெருகட்டும். குளிர்ந்த காற்று வீசட்டும். மக்கள் நோய்நொடியில்லாமல் நன்கு வாழட்டும்." என்று அந்தணர்கள் தொடர்ந்து வாழ்த்தினார்கள். மற்ற அந்தணர்கள் ததாஸ்து அப்படியே ஆகட்டும் என்று ஆமோதித்தார்கள்.

அந்தப் பொற்காசு மூட்டையைச் சுற்றிக்கொண்டு, அந்தண இளைஞன் ஒருவன் தலையில் வைத்துக் கொண்டு பின்னடைந்தான்.



"நீ பேசு..." என்று இளவரசர் இராஜேந்திரரிடம் சக்ரவர்த்தி கட்டளையிட, இராஜேந்திரர் முன்னே வந்தார்.

பலமாகவும், நல்ல ஆகிருதியாகவும், முரட்டு சுபாவமாகவும், கையில் நீண்ட வாள் உள்ளவனாகவும், தோள்களில் வைரங்கள் பதித்த கேயூரங்கள் அணிந்தவனாகவும் உள்ள இராஜேந்திரரை அந்த அந்தணர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

"இளைஞர்களே. உங்களுக்குத் தஞ்சையில் ஏற்பட்ட வசதிக் குறைவிற்காக நான் மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி ஒருபொழுதும் அப்படி நடக்காது. உங்களோடு நானும், அருண்மொழிப் பட்டனும் சில நாட்கள் பொறுத்து பேசுவோம். உங்களுக்கு நல்ல வேலையும், தகுந்த சன்மானங்களும், உரிய மரியாதையும் நிச்சயம் இந்தத் தஞ்சையில் கிடைக்குமென்று உறுதி சொல்கிறேன். சக்ரவர்த்தியார் ஈடுபட்டிருக்கின்ற ஒரு மகத்தான பணியில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள். அது நம் எல்லோரையும் உயர்த்தும் என்பது திண்ணம். உங்களுடைய வேத அறிவும், மற்ற புலமைகளும் எங்களுக்கு உதவ வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். எங்களை வாழ்த்துங்கள்." என்று கைகூப்பினார்.

அந்தணர்கள் மறுபடியும், 'மன்னர் வாழ்க. இளவரசர் வாழ்க, பஞ்சவன்மாதேவி வாழ்க.' என்று வாழ்த்தினார்கள்.

ஈசான சிவபண்டிதரைக் குறித்து தனியாக ஸ்லோகம் சொல்லி வணங்கினார்கள்.

"பிற்பாடு பார்ப்போம்." என்று ஈசான சிவபண்டிதர் சொல்ல, அப்படியே திரும்பினார்கள்.

தோட்டத்துப் பாதையில் நடந்து, தோட்டத்துக் கதவைத் தாண்டி கொட்டகைக்குப் போனார்கள்.

சட்டென்று ஒரு அமைதியும், நிம்மதியும் அந்த அரச சபையில் பரவியது. ஈசான சிவபண்டிதர் திரும்பி நடக்க பெருந்தச்சர் வழிகாட்டிக் கொண்டு போனார்.

உள்ளே கருவூர்த்தேவர் குத்திட்டு உட்கார்ந்து அந்த மெழுகு விமானத்தையே முகவாயை உள்ளங்கையில் தாங்கி பார்த்துக் கொண்டிருந்தார்.

'அடேய்... இங்கிருக்கிறாரே.' என்று எல்லோரும் வியந்தார்கள்.

சக்ரவர்த்தியார் ஆவலோடு பசுவைத் தேடும் கன்று போல ஓடினார். கருவூர்த்தேவர் எழுந்து சட்டென்று இராஜராஜரை அணைத்துக் கொண்டார். இறுக்கினார்.

"மகத்தான பணி.. மகத்தான பணி. நெல் முனையளவும் கவலை வேண்டாம். இது நிறைவேறும். சந்திர சூரியர்கள் உள்ளவரை, இந்தக் கலைப்பணி நிச்சயம் பூவுலகில் நிலைத்து நிற்கும். எப்படி உலகத்தின் மையமாக அந்த மேரு மலை இருக்கிறதோ. அதேபோல இந்தப் பெருங்கோயிலும் தட்சிணத்தின் மையமாக இருக்கும். தமிழ் நாகரீகத்தின் உணர்வைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். நிச்சயம் நடக்கும்.. நிச்சயம் நடக்கும்.." என்று சொல்ல சக்ரவர்த்தியார் கைகூப்பினார்.

அவர் கண்கள் பனித்தன.

"எப்படி வந்தீர்கள்."

இளவரசர் இராஜேந்திரர் கேட்க.

"சுவர் எகிறிக் குதித்து வந்தேன்."

"ஏன் அப்படி வரவேண்டும்."

மறுபடியும் ராஜேந்திரர் கேட்க "காற்று எப்படி வேண்டுமானாலும் வருமடா... மனிதர்களுக்குத்தான் முன்வாசல் பின்வாசல்.. காற்றுக்கு வாசலே இல்லை. காற்றுக்குப் பாதையே இல்லை. பாதையில்லாப் பாதையில் பயணப்படுகின்ற ஒரே விஷயம் காற்றுதானடா."

இளவரசர் அருகேபோய்ப் பணிய, அவரையும் இறுக்கமாகக் கருவூர்த்தேவர் அணைத்துக் கொண்டார்.

"உன் தகப்பனைப் பார்த்தாயா. எப்பேர்ப்பட்ட அற்புதமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறான். ஆனால், நீயுமென்ன சாமானியமா, புலிக்குப் பிறந்த புலி." கன்னங்களை அழுந்தத் திருகினார். முதுகில் அறைந்தார்.

"சாப்பிடலாமே."

பஞ்சவன்மாதேவி குரல் கொடுக்க, அவரோ.. "இந்தக் கைகாரியும் இங்கு இருக்கிறாளே.." என்று உரக்கக் கேட்டார்.

"நானென்ன பாவம் செய்தேன். என்னை எதற்கு இப்படிப் பேசுகிறீர்கள்." என்று சிணுங்கலாய்ப் பஞ்சவன் மாதேவி கேட்டாள்.



"கையில் ஒரு தட்டு பழங்கள் எடுத்துக் கொண்டு வந்தாய். இந்தக்கையில் ஒரு தட்டு பொற்காசுகள் எடுத்து வந்தாய். இன்னொரு கையில் ஒரு சொம்பு தண்ணீர் எடுத்து வந்தாய். உன் கை அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டுமோ செய்து கொண்டிருக்கிறது. அதனால்தான் உன்னைக் கைகாரி என்று சொன்னேன். நீ இங்கு காய்களை நகர்த்தாவிட்டால், இந்த இடம் விழி பிதுங்கி நின்றிருக்கும். நீ பெரிய கைகாரி."

பஞ்சவன்மாதேவியைப் பாராட்டாய்ச் சொல்ல அந்தச் சபை சிரித்தது.

அவள் விழுந்து வணங்க, அவள் நெற்றியைத் தடவி உச்சி முகர்ந்தார். திரும்ப வைத்து முதுகில் 'பட்-பட்' டென்று அடித்தார்.

'சூடு.. சூடு.. புத்தி முழுவதும் சூடு. உடம்பு முழுவதும் சூடு. வெள்ளரிக்காயை விதைகள் நீக்கிவிட்டு சாப்பிடு. வெந்தயம் மென்று தண்ணீர் குடி.. பெருந்தச்சரே ஈசான சிவபண்டிதருக்கு உன்னுடைய இரண்டு சீடப்பிள்ளைகளையும் அறிமுகம் செய்து வை. உளியைக் கொடுத்து வாங்கிக் கொள்ளச் சொல்."

நித்தவினோதப் பெருந்தச்சரும், இலத்திச் சடையனும், ஈசான சிவபண்டிதருக்கு அருகே அழைத்துப் போகப் பட்டார்கள்.

"இவன் பெயர் குணவன்.. எனது மருமகன். என் தமக்கையின் மூத்த புதல்வன். என் மூத்த புதல்வியை இவனுக்குக் கொடுத்திருக்கிறேன். இது இலத்தி சடையன். என்னுடைய கடைசி மைத்துனன். இந்த இரண்டுபேரும் எனது இட, வலக் கரங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் புதுப்புது கண்டுபிடிப்பாகச் செய்து கொண்டிருப்பதால் அவனுக்கு நித்த வினோதப் பெருந்தச்சன் என்று திருவையாறு மூலபருடையார் சபை பட்டமளித்துக் கௌரவித்தது. சக்ரவர்த்தியும் அந்தப் பட்டத்தை உறுதி செய்திருக்கிறார்."

பையிலிருந்த பொன் உளியை ஈசான சிவபண்டிதரிடம் கொடுக்க, கனமான அந்த தங்கத் துண்டை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். சிரஸில் வைத்துக் கொண்டார். நெஞ்சில் வைத்துக் கொண்டார்.

"பலநூறு சிற்பங்கள் இந்த உளி செதுக்கும். இராஜராஜருக்கு அவர் பெருந்தச்சர். இராஜராஜப் பெருந்தச்சர். நீ இராஜேந் திரருக்குப் பெருந்தச்சர். ராஜேந்திரப் பெருந்தச்சன்.

"ஆஹா... ஆஹா..." ஈசான சிவபண்டிதருடைய வாக்கியத்திற்குக் குழந்தைபோல கருவூர்த்தேவர் கைகொட்டினார்.

தலைமேல் கைவைத்து 'சிவோஹம்... சிவோஹம்..' என்று சொன்னார்.

நித்த வினோதப் பெருந்தச்சனும், இலத்தி சடையனும் விழுந்து வணங்கினார்கள்.

"இலத்தி சடையர் கடல்கடந்து போவார். என்ன கருவூர்த்தேவரே."

"ஆமாம். அங்கு ஒரு சிவாலயம் எழுப்ப வேண்டாமா. நமது கருங்கல்பணி அங்கும் பரவவேண்டாமா."

"அப்படியானால் ராஜேந்திரனும் கடல்கடந்து போவானோ."

சக்ரவர்த்தி வியப்பாக கேட்டார்.

"அதுதான் சொன்னேனே. அது புலிக்குப்பிறந்த புலி. தந்தை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும். சோழ சாம்ராஜ்ஜியம் இன்னும் உயர்ந்த நிலையில் இராஜேந்திர சோழன் காலத்தில் இருக்கும்."

"அப்பா.. எவ்வளவு இனிமையான வார்த்தைகள். என் மகன் என் பின்னே நிற்பான். என்னைவிடவும் உயர்ந்து நிற்பான் என்பது எவ்வளவு குளுமையான ஒரு செய்தி. இந்த வாழ்த்து போதும். என் வாழ்க்கை அர்த்தமாயிற்று."

மனம் நெகிழ்ந்து சக்ரவர்த்தி பேச தந்தைக்கு அருகில் முதுகுகாட்டி இளவரசர் நின்றார்.

மெல்ல தந்தையின் இடுப்பை அணைத்துக் கொண்டார்.

"குரு தேவருக்கு என் வணக்கங்கள்."

வந்தியத்தேவர் இடைமறித்தார்.

"இங்கு இந்த விமானம் குறித்து பேசுவதற்காகக் குழுமினோம் இலத்தி சடையரும், நித்த வினோதப் பெருந்தச்சரும், இது எப்படி எழுப்பப்பட வேண்டும் என்று எங்களுக்கு மாதிரி காட்டிக் கொண்டிருந்தார்கள். ஒருமுறை அதைச் செய்து காட்டிவிட்டார்கள். அதே விதமாக உங்களிடமும் செய்துகாட்ட விரும்புகிறார்கள், நீங்கள் அனுமதிக்க வேண்டும்."



"ஆமாம் வந்த வேலையைக் கவனிப்போம்."

ஈசான சிவபண்டிதர் சரியாக உட்கார்ந்துகொள்ள அவருக்குக் குடிப்பதற்கு மோர் தரப்பட்டது.

"சிவனேசனின் மனைவியல்லவா நீ.. எசாளத்துப் பெண்தானே."

ஆமாம் என்று தலையசைக்க, "மிகவும் சந்தோஷம். நலமாக இருக்கிறாயா."

"பரமசௌக்கியமாக இருக்கிறேன்." என்று அவள் பதில் சொல்ல, ஈசான சிவபண்டிதர் முகம் மலர்ந்தது.

மோர் குடித்துவிட்டுத் திரும்பி விமான வடிவத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

"நாங்கள் வேலை துவங்கலாமா." என்று கேட்க சரியென்று தலையசைத்தார்.

இலத்தி சடையரும், வினோதப் பெருந்தச்சரும் மாறிமாறி அந்த விமானத்தைக் கழற்றியும், மறுபடியும் பூட்டியும் காட்டினார்கள். பட்டைபட்டைக் கற்களாக எப்படி ஏற்றப்படும் என்பதைத் தெரிவித்தார்கள். பிறகு பாதை போடுவது பற்றி விவரித்தார்கள். சுருள் பாதையைப் பற்றிச் சொன்னார்கள். உச்சி வரையில் யானையால் இழுத்துப் போகப்படுவதை பொம்மைகள் வைத்துக் காட்டினார்கள். வலுவுள்ள ஆட்கள் மூன்று பேர் சேர்ந்து ஒரு கல் தூக்கிக் கொண்டு போய்விடலாம். என்று சொன்னார்கள்.

சுவர் எழுப்பக்கூடிய கற்களில் குண்டும் குழியும் செய்து அழுந்தப் பொருந்துமாறு வைத்திருப்பதையும் சொன்னார்கள்.

"அற்புதம்.. அற்புதம்.. நீ வினோதப் பெருந்தச்சன்தான். எனக்கு அதில் சந்தேகமில்லை."

எழுந்து நின்று ஈசான சிவபண்டிதர் சொல்ல, சபையும் எழுந்து நின்றது.

"நான், நீள நெடுக ஒரு சாரம், என் மனதில் இதைப் பார்த்து நினைத்துக் கொண்டிருந்தேன். அதைத் தூள் தூளாக உடைத்து, இதைச் சுழல்வடிவப் பாதையாகச் செய்து விட்டாய். இந்தப் பாதைதான் சரி. ஆனால் ஒரு விஷயம். இதற்கு மனிதர்கள் அதிகம் தேவைப்படுவார்கள். காலமும் அதிகமெடுக்கும். ஆனால், பத்திரமானது, இதனால் உயிர்ச்சேதமோ,

பொருட்சேதமோ ஏற்படாது. தடங்கல் வராது. இப்பொழுது எத்தனை வீரர்கள் உன்னிடம் இருக்கிறார்கள்.

"பத்தாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள்."

"போதாது. ஒரு பக்கம் மட்டும் மண் எடுத்து வந்தால் போதாது. நான்கு பக்க மூலைகளிலிருந்தும் மண் எடுத்து வரவேண்டும். ஒரே பக்கத்தில் மட்டும் கூட்டம் இருப்பின் அது உனக்குப் பிரச்சனையைக் கொண்டு வந்து கொடுக்கும். நான்கு மூலைகளிலிருந்தும் மண் கொண்டுவந்து கொடு. நான்கு மூலைகளிலிருந்தும் மண் எடுத்துப் போ."

ஈசான சிவபண்டிதர் எழுந்து கைவீசிச் சொல்ல கருவூர்த்தேவர் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"எப்படிச் செய்வது என்று பார்க்கிறாயா. மண்ணை மிருதுவாக்க வேண்டும். ஒரு மழை வேண்டியிருக்கலாம். ஒரு கால்வாயிலிருந்து நீர் பிரித்து எடுத்துக் கொண்டு போய் மண்ணை ஈரமாக்கி கொண்டு வரலாம். இராஜராஜா நன்கு மழை வரும். மண் இதமாகும். எளிதாக வெட்டப்படும். அப்படியிருக்கின்ற மழைக்காலத்தில் நீங்கள் மடமடவென்று குளம்வெட்டி கோவிலுக்கருகே மண் குவித்து விடுங்கள். கோவிலின் வடக்கே குளம், மேற்கே செம்மண்தேரி, கிழக்கே ஊரின் எல்லை, வடக்கேயும் செம்மண் தேரி."

"ஐயா உங்கள் யோசனை நன்றாக இருக்கிறது. வெறும் மண் மட்டும் இல்லாது. சரளைக் கற்களும் சேர்ந்திருந்தால் பாதை கெட்டிப் படும் என்பதும் உண்மைதான். நான் மேற்குப்பக்கத்திலிருந்து சரளைக் கற்கள் கொண்டுவந்து விடுகிறேன். கிழக்குப் பக்கத்திலிருந்து சிலைகள் செதுக்கிய கற்கள் குவிக்க வைக்கப்பட்டிருக்கும். வடக்கிலும், மேற்கிலுமிருந்து மண் வந்து சேரும். இப்பொழுது இந்த மூன்றையும் ஒன்றாகக் கலந்து பாதையைக் கெட்டியாகச் சமைக்கலாம். சுவர் எழுப்பிய பிறகு கட்டைகளைப் போட்டு விடலாம்."

"நீ சொல்வதும் நன்றாக இருக்கிறது குணவன். விதவிதமான கலவைகளில் மண் இன்னும் கெட்டிப் பட்டுவிடும்."

"அடேயப்பா... சுருள் பாதை என்ன அற்புதமான கற்பனை. இரண்டு யானை ஏற, இரண்டு யானை இறங்க. ஆயிரம் ஆயிரம் ஆட்கள் மேலே நிற்க முடிந்த பாதை."

"குணவன் நீ வாழ்க. எப்படி இது தோன்றியது."



"சாரம் கட்டுவது முடியாது என்று தோன்றியதுமே, வேறு வழி இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. இடையறாது இதையே பார்த்துக் கொண்டிருந்த போது எனக்குள் இப்படிச் செய்தால் என்ன என்று பொறி தட்டியது. பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் இடையறாது அந்தப் பிரச்சினையையே தியானித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்ராயம்."

"நீ சொல்வது சரி. கடவுள் என்ன என்று கண்டு பிடிக்க வேண்டுமென்றால், கடவுள் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான், கடவுளைப்பற்றி தெரிந்து கொள்ள முடியும். எப்போதாவது கடவுளைப் பற்றி சிந்தித்தால் ஒருகாலும் கடவுளைப் புரிந்துகொள்ள முடியாது."

ஈசான சிவபண்டிதர் சொல்ல சக்ரவர்த்தி அவரையே உற்றுப் பார்த்தார்.

அவர் வாக்கியங்கள் அவருக்குள் ஆழப்பதிந்தன.

"நான் ஒரு விஷயம் சொல்கிறேன். வெறும் விமானமாக, கல்லில் அலங்காரமாக நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் நான் மேரு மலையைப் பற்றி பஞ்சவன்மாதேவியிடம் நேற்று இரவு உட்கார்ந்து பேசினேன். அந்தத் தகதகப்பு. காலை சூரியன் பட்டதும் முற்றிலும் மாறுகின்ற அந்தத் தகதகப்பு. என்னைப் பரவசப்படுத்தியது. அந்த ஒளியினுடைய சிதறல்தான் இறை என்பது புரிந்தது. வெகுசில வினாடிகளே அவை நிற்கின்றன. அதை இந்த தட்சிண மேருவில் முழுவதுமாக செய்தால் என்ன என்று கேட்டேன். அதாவது இந்த விமானம் முழுவதும் பொன் வேய்வது என்று எனக்குத் தேன்றியது. இது இராஜராஜரின் விருப்பம். எந்நேரமும், எந்தக் கோணத்திலும் தகதகத்து இருக்கின்ற விமானத்தைப் பார்ப்பதற்குச் சாரை சாரையாக மக்கள் வருவார்கள். அது மட்டுமில்லை இப்போது இந்த விமானம் பார்க்கும் பொழுது எனக்கு மேருவினுடைய வேறொரு அம்சம் ஞாபகம் வருகிறது.

மேருவைச் சுற்றி அதாவது இமயமலையிலுள்ள அந்தக் கயிலாயத்தைச் சுற்றி பல ஏரிகள் இருக்கின்றன. கயிலாய பர்வதத்தின் மீது படிந்திருக்கின்ற அந்தப் பனி உருகி, அந்த ஏரிகளில் நிரம்பி, பிறகு கங்கையிலிருந்து வழிகிறது. கயிலாய பர்வதத்திலிருந்து வருகின்ற அந்தப் புனிதமான நீரை அந்த ஏரிகள் தாங்குகின்றன. அதற்கு த்ரோணிகள் என்று பெயர் த்ரோணி என்றால் நீர் நிறைக்கும் கும்பம் என்று பொருள்

கொள்ளலாம். ஆகாச கங்கை அதாவது வானம் பொழிந்து மேருவின் மீது வழிந்து பிறகு அந்த ஏரிகளான த்ரோணிகள் நிரம்பி, அந்தத் த்ரோணிகளிலிருந்து பொங்கி வழிந்த நீரே கங்கையாக பரத கண்டத்தினுள் நுழைகின்றது. இதையும் தட்சிண மேரு என்று வாய் திறந்து நமது கருவூர்த்தேவர் சொல்கிறார். இவ்வளவு உயரமான மலைபோன்ற ஒரு கட்டிடத்தில் மழை பெய்யும் போது, கலசத்தில் பெய்த அந்த மழை மெல்ல வழிந்து, விமானம் முழுவதும் தழுவி, தரையிறங்கி ஒன்றாகக் கலந்து, வேறு எங்கோ ஒரு குளத்தில் இறங்கினால் எப்படி எனவே த்ரோணிகள் அமைக்க முடியுமா.. நான் சொல்வது புரிகிறதா."

"ஐயா, ஒரு ஆகமவிதியில் கும்ப பஞ்சரம் வைத்து கட்டப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது முன்னோர்கள் இதற்கான விதிகளைச் சொல்லியிருக்கிறார்கள். விமானத்தில் படுகின்ற நீர் மெல்ல வழிந்து நாலு பக்கத்திலும் ஒரே இடமாக இறங்கி கீழே வரும்போது பெருத்த ஜலதாரை யாகத் தரை தொட்டு வருவது என்பது சொல்லப்பட்டிருக்கிறது. இதே விமானத்தில் நாம் கும்பப் பஞ்சரம் செய்துவிட முடியும்."

பெருந்தச்சர் உவகையோடு கூறினார்.

இளவரசரும் சக்ரவர்த்தியும் அவர்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அதுமட்டும் போதுமா.. இவை ஒன்றாகக் கலந்து ஒரே இடத்தில் இறங்க வேண்டுமென்று சொல்கிறாரே ஈசான சிவபண்டிதர்" என்று சக்ரவர்த்தி சொல்ல..

"அப்படியும் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். தரையில் தளம் எழுப்பி, அந்தத் தளத்திலிருந்து கால்வாய்கள் கிளம்பி, அந்தக் கால்வாய்கள், எங்கு மண் எடுத்தோமோ அந்தக் குளத்திலயே மறுபடியும் போய்ச் சேர்ந்து விட வேண்டும். தஞ்சைத் தளி குளத்திலே இவைபோய் கலந்துவிட வேண்டும்."

"எனக்குக் கும்பப் பஞ்சரம் வரைந்து காட்டு."

"சீராளா..."

அவர் திரும்பினார்.

சீராளன் அருகே வந்து நின்றான்.

"இவன் சீராளன்... என் வளர்ப்பு மகன் ஓவியன்."



சீராளன் குனிந்து அவர் பாதம் தொட்டு வணங்கினான்.

"தீர்க்காயுஷ்மான் பவ, நிறைந்த வாழ்க்கை நீ வாழ்வாய்."

ஈசான சிவபண்டிதர் வாழ்த்தினார்.

"நானா... நான் செயற்கரிய செயல் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன் ஐயா."

சீராளன் கேட்டான்.

"தம்பி... நிறைந்த வாழ்க்கையைப் போல செயற்கரிய விஷயம் வேறு என்ன உண்டு. நிம்மதி இல்லாமல்தான் பல உயிர்கள் இறக்கின்றன. நிறைவாய்... அப்பா எனக்குப் போதும். நான் விடை பெறுகிறேன் என்று சொல்வதற்கு வெகு சிலராலேயே முடியும். உனக்கு அப்படிப்பட்ட வாழ்க்கை நிச்சயம் வாய்க்கும். வாழ்க நீ."

சீராளன் மறுபடியும் விழுந்து வணங்கினான்.

உதவியாளர்கள் துணியால் மறைத்த சட்டத்தை நீட்ட, துணியை விலக்கி ஒரு சட்டத்தை அவரிடம் காட்டினான்.

ஈசான சிவபண்டிதருடைய முகம் அங்கு வரையப் பட்டிருந்தது.

"அட... அட... எப்போது வரைந்தாய். தத்ரூபமாக இருக்கிறதே." பேசிக் கொண்டிருந்த நேரத்தில் வரைந்து விட்டாயா, அட. தொலைவில் யார் இளவரசர் இராஜேந்திரனா. நன்றாக இருக்கிறதய்யா உன் கைவேலை."

தொட்டுத்தடவி "இராஜேந்திரா இதை நீ வைத்துக் கொள்" என்று ஓவியத்தை அவரிடம் நீட்டினார்.

இராஜேந்திரர் வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

இன்னொரு ஓவியத்தைத் துணிமூடி சீராளன் கொடுத்தான். அதைக் கருவூர்த்தேவரிடம் நீட்டி காலில் விழுந்து பணிந்தான்.

கருவூர்த்தேவர் கன்னத்தில் கைவைத்துக் கொண்டு விமானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். முன்னே விமானம், பின்னே கருவூர்த்தேவருடைய கலைந்த தாடி, கலைந்த சிகை, நெற்றி நிறைய குங்குமம், மிகக் கூர்மையான பார்வை விமானத்தைத் துளைத்துக் கொண்டிருந்தது. முகவாயை முன் கை தாங்கிக் கொண்டிருந்தது. அவரின் தோள்களும், வளைந்த முதுகும் வரையப்பட்டிருந்தன.

"அடேயப்பா... அட்டகாசம் செய்கிறானே இந்த இளைஞன். இராஜராஜா உன்னைச் சுற்றி மிக உத்தமமான மனிதர்கள் வந்துவிட்டார்கள். அதுதான் இந்தப் பளபளப்பு. அதுதான் உன்னுடைய மிகப்பெரிய சிறப்பு. அதுதான் நீ செய்த தவம். உன் மகன் மட்டும் உன் புகழைப் பாடப்போவதில்லை. இதோ இந்த இளைஞர்களெல்லாம் உன்னை உச்சாணிக்குக் கொண்டு போகப் போகிறார்கள். சைவ சமயத்திற்குக் கொடிதூக்கிப் பெரும் முழக்கம் செய்யப் போகிறார்கள். அற்புதம்... அற்புதம்... இளைஞனே நீடூழி வாழ்க. ஈசான சிவபண்டிதர் சொல்வது போல, எது செய்தாலும் நிறைவாகச் செய்வாய். நிறைவாக வாழ்வாய். நிறைவாக இறைவன் பாதம் அடைவாய். வாழ்க சீராளன்."

அந்தப் படத்தை நெஞ்சில் வைத்து, "இராஜராஜா, இது உனக்கு, உன் படுக்கையறையில் இந்தப் பைத்தியக்காரனின் படத்தை மாட்டு. நீ கவலையுறும் நேரங்களில் இதைப் பார். நான் பேசுவேன்."

ஈசான சிவபண்டிதர் ஆமாம், ஆமாம் என்று தலையசைத்தார்.

"கும்ப பஞ்சரம் பற்றி எனக்கு விளங்கவில்லை."

வந்தியத்தேவர் சொல்ல எல்லோரும் திரும்பி அவரைப் பார்த்தார்கள்.

"அது எளிதான விஷயமல்ல. நான் மறுபடியும் இன்னொரு மாதிரி செய்து காண்பிக்கிறேன். விமானத்தின் மீது பட்ட நீர் மொத்தமும் ஒரு இடத்தில் வழிந்து தரைதொட்டு தரையிலிருந்து மொத்தமும் ஒரு இடத்தில் கலந்து குளத்திற்குப் போய்ச் சேரும். இந்த விமானம் மொத்தமுமே சிவலிங்க சொரூபம் என்பதால், நமத ஈசான சிவபண்டிதர் அவ்விதம் செய்யச் சொல்கிறார் என்று எனக்குப் புரிகிறது. நான் நிச்சயம் அப்படிச் செய்வேன். விமானத்தின் மேல்பகுதி மட்டுமல்ல பெருந்தச்சரே, விமானத்திற்கு உள்ளும் ஒரு அரூபமான சிவலிங்கம் வந்துவிடும். இராஜராஜா இதைப்பார்... இது கருவறை. கருவறைக்குள் சிவலிங்கம். சிவலிங்கத்திற்கு மேலே உயர்ந்து ஒரு வட்ட பிந்து அடைகிறது. அது மொத்தமும் கூம்பான கண்ணுக்குத் தெரியாத அரூபமான சிவலிங்கம். இந்த வெளியும் ஒரு சிவலிங்கம். இந்த வெளியைச் சுற்றியிருக்கிற ஒரு கட்டிடமும் சிவலிங்கம். பெருத்த பரவெளியில் ஒரு சிவலிங்கம். உள்ளுக்குள் ஒரு சிவலிங்கம். கீழே கருவறையில் ஒரு சிவலிங்கம் என்று வைக்கப்பட்டிருக்கிறது.



அதுதான் தாணுமாலயன் என்று சொல்லப்படுகிறது. அயன் என்றால் பிரம்மா. இது கல்லால் செய்யப்பட்டது. தாணு என்றால் வெளிப்புறத்தில் இருக்கின்ற அந்த அழகிய வடிவம். நடுவே இருக்கின்ற வெட்டவெளி திருமால். விமான வடிவம். மூன்றும் கலந்தது.

இன்னும் ஆழமாகச் சொல்வதென்றால் உலகம் பிரம்மா. இந்த உலகத்தைச் சுற்றியிருக்கின்ற பிரபஞ்சம் திருமால். இந்த இடைவெளிகள், இங்கே கிரகங்களுக்குள்ளே இருக்கின்ற இடைவெளிதான் சிவன். எங்கும் பரந்த அந்த இடைவெளி இல்லையெனில் இங்கு எதுவும் இருக்காது. சிதம்பரத்தில் சொல்கின்ற ரகசியமும் இதுவே. இதுவே வெளி... வெளி இல்லையெனில் இரண்டு உருவங்கள் பார்த்துக்கொள்ள முடியாது. அங்கொரு உருவம், இங்கொரு உருவம் இருக்கிறதெனில் அதற்குண்டான இடைவெளிதான் அதைப் பார்ப்பதற்கு முக்கியம். அந்த இடைவெளிதான் அதையும் இயக்கி, இதையும் இயக்குகிறது. உன்னில் சிவன் இருக்கிறது. என்னில் சிவன் இருக்கிறது. நம் இரண்டு பேருக்கு இடையிலும், அந்த இடைவெளியிலும் சிவன் இருக்கிறது. எங்கும் நிறைந்த சிவம் என்று இதைத்தான் சொல்கிறோம்."

"ஆஹா... புதிது புதிதாக அர்த்தம் சொல்கிறீர்களே நான் சாதாரண விமானம் தானே சொன்னேன்."

சக்ரவர்த்தியார் கைக்கூப்பிச் சொல்ல, "அப்படி நேருகிறது. நீ செய்வதாகவோ, பெருந்தச்சர் செய்வதாகவோ, இந்த ஓவியன் செய்வதாகவோ அல்லது நான் செய்வதாகவோ அல்லது இந்த மக்கள் செய்வதாகவோ, ஒருபொழுதும் ஒருவன் நினைக்க வேண்டாம். இறை உன்னை முன்னே நிறுத்தி தன்னைப்பற்றி விளம்பரப்படுத்திக் கொள்கிறான். தன்னை ஒரு தோற்றமாக்கி இங்கு இருக்க நினைக்கிறான். அவன் வேலை துவங்கி விட்டான். எனவே, இந்த விமானப் பணி மிக அற்புதமாக நிகழும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமுமில்லை. நீ செய்வதாகவோ, நான் செய்வதாகவோ இருந்தால் குறைகள் இருக்கும். இல்லை, இது இறைவன் தனக்காகத் தானே செய்து கொள்கின்ற ஒரு பணி. எனவே, எந்தவிதமான தவறும் இல்லாமல் இந்தப் பணியில் ஈடுபடு. அதற்குண்டான எல்லா வசதிகளையும் கொண்டு வருவதற்குப் பாடுபடு. நடுவே சிக்கல்கள் ஏற்படும். மனிதர்கள் முரண்பாடு கொள்வார்கள். அவர்களுக்குள்ளே அபிப்ராய பேதம் வரும். தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சிலர்

முயற்சி செய்வார்கள். ஆனால், அதையெல்லாம் தாண்டி இந்தப்பணி தெளிவாக நடக்கும்.

நெஞ்சு நிமிர்த்தியவர்கள் தாமே அடங்கிப் போவார்கள். இந்த அரச சபையில் உள்ளவர்கள் நெஞ்சு நிமிர்த்த வேண்டாம் என்பது என் வேண்டுகோள். இது இறைப்பணி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்பது என்னுடைய அறிவுரை. இராஜராஜா... காலம்கடந்து வாழப்போகிறாயடா. சந்திர சூரியர் உள்ளவரை உன் பெயரும், உன் அக்காள் பெயரும், உன் மகன் பெயரும், உன் மனைவியின் பெயரும், உன்னுடைய மாப்பிள்ளை பெயரும் இங்கு இருக்கும். கிருஷ்ணன்ராமனும், அருண்மொழிப் பட்டனும், பழுவேட்டரையரும், மூவேந்த வேளாரும் இன்னும் பலரும் இங்கு காலாகாலத்திற்குச் சாஸ்வதமாக நிற்பார்கள். தலைமுறை, தலைமுறையாகப் பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு உங்கள் பெயர் மக்களுடைய நாவிலே ஒலித்துக் கொண்டிருக்கும். அப்பேர்ப்பட்ட வாழ்க்கை எல்லோருக்கும் கிடைக்குமா... எத்தனை மன்னர்கள் ஆண்டார்கள்... எத்தனை ஞானிகள் தோன்றினார்கள்... என்னைப்போல எத்தனை குருமார்கள் இங்கு உண்டு... எல்லார் பெயருமேவா மக்களுக்குத் தெரிந்திருக்கிறது. இதற்கு உதவி செய்தவர் அத்தனை பெயரையும், நீ மரியாதை செய்து இங்கே கல்லிலே பொறித்துவிடு. இதற்கு யாரெல்லாம் உதவினார்களோ, அத்தனை பெயரையும் வாழ்த்தி விடு.

உன்னால் மட்டும் நடைபெறுவதல்ல இராஜராஜா... உன்னுடைய பொருளால் உன் வலிவால் நடைபெறுவதல்ல. உன்னை முன்னிட்டு இறை தன் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். இதற்கும் பல நெஞ்சங்கள் உதவுகின்றன. அத்தனை பேரையும் நீ மரியாதை செய். இந்த ஆடுகின்ற பெண், எனக்கு முன்னே ஆடி வந்து பூப்போட்ட பெண், அவள் பெயரென்ன."

"உமையாள்."

"ஆமாம். இந்த உமையாள் பெயரும் இந்தக் கல்லிலே பொறிக்கப்படட்டும். சந்திரசூரியர் உள்ள வரை இவள் பெயரும் திகழட்டும்."

அந்தச் சபை அமைதியாக மெழுகு விமானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

வந்தியத்தேவர் மெல்ல எழுந்து சக்ரவர்த்தியை வணங்கி, ஈசான சிவபண்டிதரை வணங்கி கருவூர்த்தேவரின் கைகளைப்



பற்றிக்கொண்டு வெளியே வந்தார். தாழ்வாரத்தில் நின்று நீண்ட மூச்சு இழுத்து விட்டார்.

அருண்மொழிப்பட்டன் அருகில் வந்து நின்றான்.

"என்ன. கவலையாகி விட்டீரா."

"ஆமாம்."

"என்ன கவலை."

"எனக்கு வயதாகிவிட்டதடா... இந்த விமானம் கட்டிமுடியும் வரை நான் உயிரோடு இருப்பேனா... அந்தக் கவலை வந்து விட்டது. அதற்கு முன்பு இறக்கக் கூடாது. ஈசான சிவபண்டிதரிடம் போய்க் கேட்டால், இல்லை அடுத்த வருடம் போய்ச் சேரு என்று சொல்லி விட்டால் என்ன செய்வது... பயமாக இருக்கிறது. அதனால் ஒரு கவலையோடு இங்கு வந்துவிட்டேன். இது உயர்ந்து கும்பாபிஷேகமாகி இதிலிருந்து பொங்கும் நீரை, நான் கையேந்தி குடிக்கும் வரை உயிரோடு இருக்க வேண்டுமென்று ஈசனை வேண்டிக் கொள்வதற்காக இங்கு வந்து விட்டேன்."

"என்ன இது, திடமாகத்தானே இருக்கிறீர்கள்."

"அடேய்... நாமெல்லாம் போர்வீரர்கள். மரணம் எப்போது வேண்டுமானாலும் நமக்கு நேரலாம்."

"வந்தியத்தேவா.. அத்தனை விரைவாய் நீ செத்துப்போய்விட முடியுமா."

பின்னே குரல் கேட்டது.

கருவூர்த்தேவர் இடுப்பில் கைவைத்து நின்றுகொண்டிருந்தார்.

வந்தியத்தேவர் கைகூப்பினார்.

"ஒரு மன்னன் தலை வணங்குகின்ற தமக்கையைக் கரம் பிடித்து, அவளைக் கண்கலங்காமல் பார்த்து, இந்த மன்னனுக்கு மிகப்பெரிய மன அமைதியை நீ கொடுத்திருக்கிறாய். அந்தப் புண்ணியம் உன்னை நெடுநாள் வாழவைக்கும். வந்தியத்தேவா.. உனக்கு ஆயுள் இன்னும் பல ஆண்டுகள் இருக்கின்றன. இந்த மன்னனைக் கரைசேர்த்து, மன்னனைக் கொண்டாடிய தமக்கையைக் கரைசேர்த்து, பிறகுதான் நீ மரணமடைவாய்."

"ஐயா நான்."

அருண்மொழிப்பட்டன் கைகூப்பிக் கேட்டான்.

"உனக்கு மரணம் வரும். ஆனால் இவ்வளவு நீண்ட நெடிய ஆயுள் இல்லை அருண்மொழி. நீ அன்னிய தேசத்தில் மரண மடைவாய். மேற்கொண்டு கேட்க வேண்டாம். இது மரணம் பற்றிப் பேசும் வேளையல்ல. வாழ்தல் பற்றிப் பேசும் வேள்ளை. அருண்மொழி அந்தணர்களுக்கு உண்டான மரியாதை கிடைத்து விட்டது. மற்றவர்களுக்கு உண்டான மரியாதை கிடைத்து விட்டதா என்று பார். பஞ்சமர்களுக்கு உண்டான மரியாதை கிடைக்கிறதா என்று பார். எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு போனால் தான் இங்கு சிக்கல் இல்லாமல் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்."

"இங்கு சிக்கல் அதிகமிருக்கிறது குருநாதா. நானே போட்ட ஒரு உத்தரவை நானே மீறினேன். இளவரசரையும், அரசரையும் சுற்றி எவரும் வரக்கூடாது என்று மெய்க்காவல் வீரருக்குக் கட்டளையிட்டேன். ஆனால், ஐந்நூறு அந்தண இளைஞர்கள் உள்ளே போய் விட்டார்கள். அந்தண இளைஞர்கள் நெருங்கிப் போகலாம்... நாங்கள் பேசக்கூடாதா என்று பொதுமக்கள் கேட்டால், எங்களிடம் பதில் இல்லை. மெய்க்காவல் வீரர்கள் முகம் தூக்கி நிற்கிறார்கள். எப்படிச் சமாதானப் படுத்துவேன் என்று தெரியவில்லை."

"அரசருக்கோ, இளவரசருக்கோ எந்த ஆபத்தும் நேராது. உள் வட்டத்தைக் கெட்டிப்படுத்துவதைவிட கோட்டைக்குள் நுழையும்போது, கடும் சோதனைக்கு உள்ளாக்குங்கள். விசாரிக் காமல் உள்ளே விட வேண்டாம் என்று உத்தரவிட்டு விடு. அருண்மொழி.. எல்லைகளுக்கு நீயும், உன் தகப்பனாரும் ஒரு முறை போய் வருவது நல்லது. அங்கே சுறுசுறுப்பு அதிகரிக்கும். குறிப்பாய் வடமேற்கு எல்லை. மேல்பாடியிலும், திருவொற்றியூ ரிலும் நம்முடைய எல்லை பலப்படுத்தப்பட வேண்டும். அங்கு சரியான சேனாதிபதிகள் இருக்க வேண்டும்."

"ஈராயிரத்துப் பல்லவர் எங்கிருக்கிறார்."

"மேல்பாடியில் இருக்கிறார்."

"அங்கு போய் உற்சாகப்படுத்து. பெண்டுகள் அதிகம் வந்துவிட்டார்கள். இவர்களால் பிரச்சனைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது."



"சாவூர் பரஞ்ஜோதியிடம் விழிப்பாக இருக்கச் சொல். உன் தகப்பனாரின் சீடன் ஒல்லியாய் இருப்பானே ஒரு அந்தணன். அவன் எங்கே.."

"வைணவதாசனா. எங்கேனும் வெளியூருக்குப் பயணப்பட் டிருக்கலாம். தந்தை எங்கேனும் அனுப்பியிருக்கலாம்."

"சரி. கிருஷ்ணன்ராமன் விழிப்பாகத்தான் இருக்கிறான். அடிக்கடி ஒற்றர்கள் அனுப்பி அந்தந்த இடத்தில் என்னென்ன விசேஷங்கள் என்று பார், விளைச்சல்கள் எப்படியிருக்கிறது என்று கவனி. பாண்டிய தேசத்தில் விளைந்தால் சோழன் தானே வாரிக்கொண்டு போவான் எதற்கு விளைவிக்க வேண்டுமென் றும் எண்ணுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களை எப்படிச் சமாதானப்படுத்தப் போகிறோம் என்று அரசவை கூட்டி யோசனை செய்யப்பட வேண்டும். கண்காணிக்க வேண்டும். கடைசியாக, வந்தியத்தேவரே.. உமக்கொரு வார்த்தை. மாதேவடிகள் இந்தத் தஞ்சையில் வந்து தங்கியிருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். மாதேவடிகள் நோக்கம் நன்றாக இருக்கலாம். தந்தையைப் பார்த்து மன்னிப்பு கேட்டு மறுபடியும் குடும்பத்தில் சேருவதாக இருக்கலாம். அரச குடும்பத்தில் மாதேவடிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம். புத்த சமயத்திற்குப் போய் மறுபடியும் சைவத்திற்குத் திரும்புவது என்பது மக்களிடையே ஒரு பழக்கமாக ஏற்பட்டுவிட வாய்ப்பிருக்கிறது. மதம் மாறுவது கேவலம் என்று சொல்லப்பட வேண்டும். மதம் மாறியவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டும். மாதேவடிகளை மதம் மாற்றிய ஈழத்தவர்களையும் நாம் கண்காணிக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் அரசரும், பஞ்சவன்மாதேவியும், பெருந் தச்சரும், மூவேந்த வேளாரும் கோவில் பணிகளைக் கவனித்துக் கொள்ளட்டும். நீயும், வந்தியத்தேவரும், ஈரயிரத்துப் பல்லவரை யரும், பழுவேட்டரையரும், விமலாதித்தனும் எல்லைகளைப் பலப்படுத்த வேண்டும். ஏன் விமலாதித்தர் வரவில்லை."

"விமலாதித்தனுடைய தாய் வீட்டிலிருந்து தூதுவர்கள் வந்திருக்கிறார்கள். அவசரச் செய்தி என்று சொன்னார்கள். அதனால் அவர் அவர்களோடு தங்கிவிட்டார்."

"ஈழைச்சாளுக்கியர் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டி யிருக்கிறது. ஈழைச்சாளுக்கியர்களைத் தன் பக்கம் இழுக்க மேலைச்சாளுக்கியர்கள் முயற்சி செய்கிறார்கள். எனவே, விமலாதித்தருக்கு அந்த இடத்தில் தொந்தரவுகள் அதிகமாக இருக்கும். வீட்டு மாப்பிள்ளைக்குத் தொந்தரவுகள் அதிகம்

இருப்பின், இராஜராஜருடைய மருமகனுக்கு வேதனைகள் இருப்பின் இந்தப்பணி பாதிக்கும். எனவே உன் தகப்பனார் இங்கிருந்து அம்மாதிரியான சமாதான வேலைகளைக் கவனிக் கட்டும். ஈசான சிவபண்டிதர் சிலகாலம் இங்கு உங்களோடு இருப்பார். எனக்கு வேலை முடிந்து விட்டது அருண்மொழி. நான் மறுபடியும் என் ஊருக்குப் போகிறேன். உடையாளூரில் போய் உட்கார்ந்து கொள்கிறேன். ஏதேனும் தேவையெனில் கூப்பிடு. எந்தத் தேவையும் இருக்காது."

"என்ன இது.. புறக்கணித்துவிட்டுப் போவது போல் போகிறீர்கள்."

"இல்லை. மறுபடி வருவேன். வரச் சொல்வார்கள்."

"ஐயா, நீர் முக்காலமும் அறிந்தவர். நீர் எங்கும் இருப்பவர். நீர் சிவன் என்று என் கண்ணுக்குத் தெரிகிறீர். உம்மை நான் வணங்குகிறேன். உம்மைக் கட்டுப்படுத்த என்னால் ஆகுமா. நீரே சொன்னதுபோல நீர் காற்று... உமக்குப் பாதையில்லை. வழியும் இல்லை. முன்னும் இல்லை. பின்னும் இல்லை. எல்லா இடங்களி லும் நீக்கமற நிறைந்திருக்கிறீர். குருதேவா.. இங்குள்ள அத்தனை பேரையும் விட்டுவிட்டு என்னிடம் பேசிவிட்டுப் போகிறீர்களே இது ஒன்று போதாதா. இன்னும் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்."

"அருண்மொழி.. உன் மனைவி எப்படி இருக்கிறாள்."

"மகப்பேறுக்காகத் தன் தாய்வீடு போயிருக்கிறாள்."

"அவருடைய தாய்வீடு எது."

"மருவூர் என்கிற கிராமம்."

"எங்கிருக்கிறது."

"திருவையாற்றிலிருந்து கல்லணை போகும் வழியில் ஒரு மாரியம்மன் கோவில் தாண்டி ஒரு சிறிய கிராமம். நல்ல நெல் வயல்கள். நீர்ப்பாசனம்."

"சரி. அவள் அங்கேயே இருக்கட்டும். அவள் உடம்பு நலிவாக இருப்பதால் அவளை இங்கு அழைத்து வந்து தொந்தரவு செய்ய வேண்டாம். உனக்கும் இங்கு பணிகள் இருப்பதால் சுகமாக அங்கேயே இருக்கட்டுமே."

"சரி, குருதேவா.."



"காதலித்தா அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டாய்."

"இல்லை. தாய் ஏற்பாடு செய்தாள். தகப்பனார் சம்மதம் தெரிவித்தார்."

"ஓ... நீ இன்னும் யாரையும் காதலிக்கவேயில்லை."

"அதற்கு அவசியமில்லை."

"வந்துவிட்டது."

"என்ன ஐயா."

"காதலிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது."

"நானா... யாரை..."

"உன்னைக் காதலிப்பவர்களை நீ காதலித்துத் தானே தீர வேண்டும்."

"என்னைப் போய் யார் காதலிப்பார்கள்."

"என்ன குறைவு உனக்கு. அழகன். அறிவாளி. நல்ல பதவியில் இருக்கிறாய். அரசருக்கு நெருக்கமாக இருக்கிறாய். அதிகார முடையவன் உன்னைச் சுற்றி எத்தனை பெண்கள் ஏங்கிக் கொண்டு இருப்பார்கள். அதில் திறமையுள்ளவர்கள் உனக்கருகே வந்தால் வேண்டாமென்றா மறுத்துவிடுவாய்."

"இருதாரம்... பலதாரம் எனக்கு விருப்பமில்லை."

"ஹா... உன் தகப்பனும் இதே வாக்கியத்தை என்னிடம் சொல்லியிருக்கிறான். அப்பனுக்குப் பிள்ளை தப்பாது நீயும் சொல்கிறாய்."

"என்ன சொல்கிறீர்கள் ஐயா. இன்னொரு திருமணம் உண்டென்றா."

"அதைத் திருமணம் என்று நீ சொல்லமாட்டாய் ஊரும் சொல்லாது. உன்னைக் குறித்து ஒரு பெண் ஏங்கிக் கொண் டிருக்கிறாள். உன்னை நோக்கி வருவாள். உன்னை உயர்த்துவாள். ஆசுவாசப்படுத்துவாள். உனக்குப் பணிகள் அதிகம் அருண்மொழி. அவள் உனக்குத் தேவைப்படுவாள். உன்னைவிட அவளுக்கு நீ தேவைப்படுவாய்."

"ஐயன்.. தெளிவாக இருந்தேன். குழம்ப வைத்து விட்டீர்."

"வாழ்க்கை என்பதே தெளிவும், குழப்பமும் மாறி மாறி வரும். இருளும், வெளிச்சமும் மாறி மாறி வருவது. நல்லதும், கெட்டதும் மாறி மாறி வருவது. ஒரேவிதமாக இருந்தால் அலுப்பு தட்டிவிடும். ஹா... எப்பேர்ப்பட்ட காலம். எப்பேர்ப்பட்ட காலம். எல்லா தேவர்களும் ஒன்றுகூடிய காலம்."

"என்ன சொல்கிறீர்கள் குருநாதா."

"இந்தப் பெண்ணும், உன்னைத் தேடி வருகின்ற பெண்ணும் சரித்திரத்தில் இடம்பெறப் போகின்றனர். சாகா வரம்பெறப் போகின்றனர். என்ன காலம்... எவ்வளவு அற்புதமான காலம்."

"குருநாதா. எல்லோரையும் சொல்கிறீர்களே. உங்களைக் கொண்டாடமாட்டார்களா."

"ஹா... என்னையும் கொண்டாடுவார்களடா. இந்தப் பைத்தியக்காரனையும், சில இளிச்சவாயர்கள் கொண்டாடு வார்கள். என்னைப் பற்றி எழுதுவார்கள். கோயில் கட்டுவார்கள். நானும் அவர்களோடு சுற்றிக் கொண்டிருப்பேன்."

"குருதேவா... என்ன எதிர்ப்பு வரும். எந்த இடத்தில் நான் கவனம் செலுத்த வேண்டும்."

"உனக்கு எல்லைதான் வேலை என்று சொல்லி விட்டேன். உன் தகப்பனாரிடம் சிற்பிகளைக் குறித்து யோசனை செய்யச் சொல். நித்த வினோதப்பெருந்தச்சன் முகத்தில் உள்ள கர்வத் தைப் பார்த்தாயா. இலத்தி சடையன் நீங்கள் இருவரும் வெளியே வந்த பிறகு புழக்கடைப் பக்கம் போய், அங்குள்ள இளைஞர் களைத் தழுவிக் கொண்டு குடித்துக் கும்மாளமடிக்கிறான். என்ன, அவர்கள் சொன்ன திட்டங்கள் அரசரால் ஏற்கப்பட்டு விட்டன. அவர்களுக்கு மரியாதை கிடைத்துவிட்டது. எனவே, தாங்களே சக்ரவர்த்தி போல நடந்து கொள்ள அவர்கள் தயங்க மாட்டார்கள்."

"எனக்குப் புரிகிறது. இதை எப்படித் தடுப்பது."

"அது உன் வேலையல்ல. கிருஷ்ணன் ராமனுக்குத் தெரியும்."

"அப்பாவிடம் நீங்களே சொல்லுங்களேன்."

"நான் சொன்னால் உன் தகப்பன் கேட்பானா, எனக்கும், உன் தகப்பனுக்கும்தான் எட்டாம் பொருத்த மாயிற்றே. எல்லாம் தனக்குத் தெரியுமென்று நினைப்பவனாயிற்றே. அதனால்தான் உன்னிடம் மட்டும் சொல்லாமல், வந்தியத்தவர் இருக்கும்போது



சொல்கிறேன். நான் சொல்வதைக் கேட்காவிட்டாலும்கூட வந்தியத்தேவர் சொல்வதைக் காது கொடுத்து உன் தகப்பன் கேட்பான். அருண்மொழி உன் மரணம் குறித்துக் கேட்டாய் அல்லவா. பிற்பாடு ஒருநாள் நீ எப்படி மரணமடைவாய் என்று உனக்குச் சொல்வேன். எவனொவன் தன் மரணத்தைக் கண்டு அஞ்சாமல் வரவேற்கிறானோ... அவனே தன்னையறிந்தவன். அவனால் மரணத்தைத் தள்ளி வைக்கவும் கூடும்."

"குருதேவா.. நான் போர்வீரன். பலமுறை என்னை நோக்கி ஈட்டியும், அம்புகளும் வந்திருக்கின்றன. நான் மரணத்தை வினாடி வினாடியாகச் சந்தித்திருக்கிறேன். மரணம் குறித்து எனக்கு எந்தக் கவலையும் இல்லை. கடைசி வரையும் உங்கள் அரவணைப்பு இருந்தால் போதும்."

"அருண்மொழி மேல்பாடி நோக்கி விரைவில் பயணப்படு. அதுதான் சோழதேசத்திற்கு நல்லது. வந்தியத்தேவரே வருகிறேன். உமது மனைவி குந்தவையாரிடம் என்னுடைய பணிவான வணக்கங்களைச் சொல்லுங்கள்."

"என்ன குருதேவர் ஏதோ கேலி செய்கிறார்."

"உன் மனைவியாலும் சில குழப்பங்கள் வரும். அதனால் பணிவாகச் சொல்கிறேன்."

"நீங்கள் சொன்னது போல நல்லது வரும். கெட்டது வரும். கெட்டது வந்தால்தான் நல்லதினுடைய மகிமை தெரியும். குழப்பங்கள் வரட்டுமே." வந்தியத்தேவர் சொல்ல வாய்விட்டு கருவூர்த்தேவர் சிரித்தார். வேகமாகத் தோட்டக்கதவு நோக்கிப் போனார். அங்குள்ள ஜனங்கள் 'சிவோஹம்.. சிவோஹம்..' என்று வரவேற்றார்கள். கூட்டத்தில் அவர் கலந்தார். அவரைப் பின்பற்றி அந்தப் பெருங்கூட்டம் போயிற்று.

## 143

"என்ன... குணவருக்குப் பெரிய மரியாதையா.. இலத்தி சடையனையும் கொண்டாடினாரா.. இத்தனை நேரம் சக்ரவர்த்தியோடு இருந்தாரா.. அற்புதமான யோசனைகள் சொன்னாரா.. அடேயப்பா.. இதுவே காது நிறைந்து விட்டதா."

சிற்பியரில் கிழவர் ஒருவர் எழுந்து நின்று சொன்னார். மூத்த சிற்பிகள் எழுந்து நின்று பரவசத்தோடு அவனைப் பார்த்தார்கள்.

“மறவர்கள் வந்தால் எழுந்து நிற்க வேண்டும். உபசேனாதிபதி வந்தால் கைகட்ட வேண்டும். சேனாதிபதிகளெல்லாம் வந்தால் தரையில் விழுந்து வணங்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்களல்லவா. இப்பொழுது அதையெல்லாம் அவர்கள் நமக்குச் செய்ய வேண்டும். நாம் வந்தால் எல்லோரும் எழுந்து நிற்க வேண்டும் என்று சொல்லிவிடு.”

“எழுந்திருக்க மாட்டோமென்றால்.”

ஒரு இளைஞன் கேட்க, அந்தக் கிழவன் அவனை உற்றுப்பார்த்தான்.

“ஆமாம்.. நிற்க மாட்டோமென்றால் சவுக்கால் அடிக்க முடியுமா.”

“முடியாது. சிடுசிடுக்கலாம். இந்த மறவன் என் முகத்தில் தாம்பூலத்தை துப்பிவிட்டான் என்று சொல்லி விடலாம்.”

“அது பொய்யல்லவா.”

“சொல்லேன். என்ன குறைந்து போயிற்று. அவர்களைக் கீழே உட்கார வைத்தால்தான் எனக்கு நிம்மதி. எத்தனை ஆட்டமாடினார்களடா. யானைக்கு ஒரு காலமென்றால் பூனைக்கு ஒரு காலம். நமக்குக் காலம் வந்துவிட்டது. துணி போர்த்திக் கொள்ளவும், சங்கு ஊதிக்கொள்ளவும், பூணூல் போட்டுக் கொள்ளவும் நமக்கு அதிகாரம் நிச்சயமாய் கிடைக்கும். எனக்குச் சந்தேகம் இல்லை. நாம்தான் தோளில் துணி போட்டுக் கொள்கிறோம். யாரும் தடுப்பதில்லையே.”

“அந்தணருக்கு முன்பு இறுக்கக் கட்டிக் கொள்ள வேண்டுமாம்.”

“இனிமேல் இறுக்கக் கட்டாதே.”

“எந்த அந்தணருக்கு முன்பு.”

“இன்னொரு வகை அந்தண இளைஞர்கள், நம்முடைய கொட்டகையைச் சுற்றிதான் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் யாரும் நம்மிடம் எந்த மரியாதையும் எதிர்பார்ப்பதில்லை. ஸ்நேகமாக இருக்கிறார்கள்.”

“அவர்கள் நொந்துபோன திருமுனைப்பாடி அந்தணர்கள். அவர்களை நோகடிக்கவும் வேண்டாம் நின்று மரியாதை செய்யவும் வேண்டாம். தஞ்சை அந்தணர்களை நாம் சும்மாவிடக் கூடாது. ஏதேனும் அவமரியாதை செய்துதான் ஆகவேண்டும்.”



“எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்.”

“என் வயது அறுபத்தேழாகிறது. நாற்பது வயது அந்தணன் கைதட்டி ‘அடேய்.. இங்கு வாடா.” என்று தான் என்னை அழைக்கிறான். நான் கருவறைச் சிற்பி. என்னால் புடைப்புச் சிற்பங்கள் செய்ய முடியும். உளிச் சிற்பங்கள் செய்ய முடியும். அந்தணரால் என்ன முடியும்.”

“அதனால் என்ன செய்வதென்று தீர்மானித்திருக்கிறீர்கள்.”

“அந்தணனை ‘அடேய்.. இங்கு வாடா.’ என்று அழைத்தால் என்ன என்று தோன்றுகிறது.”

“செய்ய வேண்டும். அவர்கள் அதிகம் ஆடினார்கள். இன்னும் ஆடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.”

மாற்றி மாற்றிக் குரல்கள் எழுந்தன.

“ஒன்று செய்வோமா. கல் தேடிப் போவதுபோல அந்தணர் குடியிருப்பு வழியாகப் போவோமே. மரம் தேடுவது போல மங்கலங்களுக்கு நகருவோமே. இந்த மரங்களை வெட்டி எடுத்துக் கொண்டு போகப் போகிறோம் என்று சொல்வோமா.”

“நமக்கு மரங்கள் எதற்கு.”

“அந்த மரங்கள்தான் கருங்கற்களைச் சாய்த்து வைக்கத் தேவைப்படுகின்றன. கட்டிடம் கட்ட உபயோகப்படும்.”

“அப்படியா நன்றாக மரம் அறுத்து விடலாம். நல்ல மரங்கள் எங்கு கிடைக்கும்.”

“எங்கே அக்ரஹாரங்கள் இருக்கின்றனவோ அங்கு கிடைக்கும்.” என்று உரத்துச் சொல்ல எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

பத்து இளைஞர்கள் தோளில் சால்வையோடும் கையில் அளவுகோலுடனும், கயிறுகளோடும் நடந்தார்கள்.

“ஏன் நடந்து போகிறீர்கள். குதிரையில் போகலாமே.”

புறம்படி அங்காடிகளில் குதிரைகளை வாடகைக்கு வாங்கிக் கொண்டார்கள். குதிரை ஏறினார்கள். பன்னிரெண்டு குதிரைகள் அக்ரஹாரத்திற்குள் நுழைவதும், ஒவ்வொரு வீடாய் உற்றுப் பார்ப்பதும், மரங்களைப் பார்ப்பதுமான செய்கை அந்தணர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

யார் என்று அதட்டலாகக் கேட்டார்கள்.

சிற்பிகள் என்று ஒற்றை வார்த்தையாய் பதில் வந்தது.

"அவர்களுக்கு இங்கு என்ன வேலை." என்று கேட்க, "எங்கள் வேலை எங்களுக்குத் தெரியும் வாயை மூடிக்கொண்டிரும்." என்று ஒரு இளைஞன் சொன்னான்.

"என்னடா அதிகம் பேசுகிறாய்." "யாரைப் பார்த்து வாயை மூடு என்கிறாய்."

"உன்னைப் பார்த்துத்தானடா."

அவன் விரலை நீட்டி அவரைப் பார்த்துச் சொன்னான்.

"அட.. அடா... என்று சொல்கிறாயா." என்று அவர் எழுந்து கை ஓங்க, அவன் குதிரையைத் திருப்பி வேகமாக அவர்மேல் ஓட்டினான். குதிரையின் முகம் அவர் முகத்தில் பட்டு அவரைத் தூக்கிப் போட்டது.

மனைவி ஓலமிட்டாள்.

அந்த ஓலம் கேட்டு அந்தணர்கள் வெளியே வந்தார்கள்.

சிற்பிகளுக்கு லேசாய் பயம் வந்தது.

"என்னடி அலறுகிறாய்." என்று ஒரு சிற்பி பயத்தால் உரக்கக் கத்தினான்.

அந்த வார்த்தைகள் பலபேருக்குக் கேட்டன.

அந்தணர்கள் சீற்றமானார்கள்.

குதிரையின் கயிற்றைப் பிடித்து ஒருவர் இழுக்க, அந்தக் குதிரையை இடுப்பில் இடித்து அந்தச் சிற்பி விலக்க, அந்தக் குதிரை முன்னங்காலால் அந்த அந்தணர் முகத்தில் இடித்து நெஞ்சை மிதித்தது. அந்தணர் சுருண்டு கீழே விழுந்தார். அவரைத் தூக்கினார்கள்.

தலை துவண்டது. அவரைத் தூக்கி வந்து திண்ணையில் போட்டார்கள். வாயில் ரத்தம் வந்தது.

'வைத்தியரைக் கூப்பிடு.. வைத்தியரைக் கூப்பிடு..' என்று அலறினார்கள்.

ஈரத்துணியை எடுத்து வாயிலுள்ள ரத்தத்தைத் துடைக்கும் போது அவர் எழுந்து நின்றார்.



'ஹ.. ஹ.. ஹ..' என்று கத்தினார்.

அவருடைய மனைவி தலையைத் தாங்கிக் கொள்ள இரண்டு கைகளையும் இல்லை என்பது போல விரித்துக் காட்டினார். மெல்ல மனைவியின் தோளில் கை வைத்தார். பெரிய விக்கல் ஒன்று ஏற்பட்டது.

அந்த அந்தணரின் உயிர் பிரிந்தது.

சிற்பிகள் குதிரையைச் செலுத்திக் கொண்டு அக்ரஹாரம் விட்டு வெளியே போனார்கள்.

மிகப் பெரிய அலறல் அந்த அக்ரஹாரத்தில் எதிரொலித்தது.

## 144

"அந்தணன் தானே நீ! உன் குலத்தை அவமானப் படுத்தியிருக்கிறார்களே... உனக்குக் கோபம் வரவில்லை. ஒரு மறவனை இழிவு செய்தால் நூறு மறவர்கள் வாள் உருவிக் கொண்டு வருகிறார்கள். ஒரு வணிகனைக் கேலி செய்தால் ஆயிரம் வணிகர்கள் ஒன்று திரளுவார்கள். ஒரு வேளாளனைப் பழித்துப் பார். மொத்த வேலைகளும் ஸ்தம்பிக்கும், ஆனால், நாம் மட்டும் ஏன் இப்படி பிரிந்திருக்கிறோம். அந்தணர்கள் அனுசரித்துப் போக வேண்டாமா என்று நாக்கு மீது பல்போட்டு என்னை ஏன் குற்றம் சொல்கிறீர்கள். நான் மறுபடியும் கேட்கிறேன். நீ அந்தணன்தானே! உப்பு போட்டுத்தானே சோறு தின்கிறாய். குலம், கோத்திரம் சொல்லித்தானே என்னைப் போன்ற வயதானவனை நமஸ்கரிக்கிறாய். இப்போது எல்லாவற்றையும் விட்டுவிட்டாயா... அரசர் கணக்கு வேலை கொடுத்தால் நான் அந்தணன் இல்லையென்று சொல்லி விடுவாயா. நீ வேறு ஜாதியா. என்ன அயோக்கியத்தனம் இது"

ஒரு சிறிய அந்தணர் கூட்டம் அந்த ஐந்நூறு தொண்டை நாட்டு இளைஞர்களிடையே நின்று உரத்த குரலில் பேசியது. தொண்டை நாட்டு அந்தண இளைஞர்கள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தார்கள். எல்லாப் பிரச்சனையும் முடிந்துவிட்டது. இனி, நல்ல உணவும், நல்ல உடைகளும், நல்ல மரியாதையும் கிடைக்குமென்ற நேரத்தில் இப்படியொரு பூகம்பம் கிளம்பியிருக்கிறது. தொண்டை நாட்டிலிருந்து வந்தவர்களை அந்தணனே இல்லையென்று தஞ்சாவூர் வைதீகர்கள் உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சிற்பிகளில் யாரோ குதிரையைச் செலுத்தி ஒரு அந்தணன் மீது ஏற்றிக் கொன்று விட்டானாம். எனவே ஒட்டு மொத்தமாய் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுமாம். கோயில்கள் திறக்கப்படக் கூடாதாம். பூஜைகள் நடைபெறக்கூடாதாம். ஒரு இழவு வீட்டில் இழவு காரியம் தவிர வேறு எதுவும் நடக்காது. எனவே, செத்துப் போன அந்தணனை உங்களுடைய சகோதரனாக நினைத்து, உங்கள் வீட்டை இழவு வீடாகக் கருதி, எவரும் எந்தத் தொழிலுக்கும் போகாமல் இருக்க வேண்டியது என்று அந்தணச் சபை உரத்துச் சொல்லியது. அந்தத் தொண்டை நாட்டு இளைஞர்கள் கணக்கு வேலைக்கு ஒத்துக் கொண்டார்கள் என்று தெரியவர, முதலில் அவர்களைப் போய் மடக்கு என்று அந்த வயசாளி அந்தணர் கட்டளையிட, மத்திம வயது அந்தணர்கள் அங்கு போய் அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக உரத்த குரலில் பேசினார்கள்.

"சற்று நேரம் அமைதியாக இருங்கள். என்ன செய்வது என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டாமா."

"எதற்கடா சிந்திக்கிறீர்கள். நீங்கள் போகக்கூடாது. போனால் உங்களை ஜாதிப்பிரஷ்டம் செய்வோம்."

உடம்பு துடிக்க ஒரு அந்தணர் கத்தினார்.

"எவ்வளவு பெரிய வார்த்தை சொல்கிறீர்கள். எங்களை ஜாதிப் பிரஷ்டம் செய்ய நீங்கள் யார். உங்களுக்கு என்ன அதிகாரம். பதிலுக்கு உங்களை நாங்கள் செய்ய மாட்டோமா, ஏன் பதட்டமாகவே பேசுகிறீர்கள். ஏன் அதிகாரமாகவே குரல் கொடுக்கிறீர்கள். உங்கள் அதிகாரத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்களல்ல. உங்களைப்போலவே எல்லாவிதமான யோக்கியதைகளும் எங்களுக்கு உண்டு. இது எங்களுக்குப் புதிய ஊர் என்பதால் நாங்கள் மௌனமாக இருக்கிறோம். அரசருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமே என்று யோசிக்கிறோம். உங்கள் சொல்படிதான் நடக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பது தவறு. எது தர்மமோ அதைத்தான் நாங்கள் செய்வோம்."

"தர்மமா, நாய்க்குப் பிறந்தவனே. என் எதிரில் வந்து தர்மம் பற்றியா பேசுகிறாய்"

அந்த அந்தணர் முன்னேறி அந்த ஐந்நூறு பேரின் தலைவனின் கன்னத்தில் பளீரென்று அறைந்தார்.

அவன் கன்னத்தைப் பொத்திக் கொண்டான்.



இரண்டு மூன்று இளைஞர்கள் வேகமாக எழுந்தார்கள்.

"என்னடா... எதற்கு வேகமாக எழுந்திருக்கிறாய். எகிறி அடிப்பாயா. என் ஒற்றைப்பிடிக்குக் காண்பாயா..."

அவர் எகிறிப்போய் வேகமாக எழுந்தவன் நெஞ்சில் கை வைத்துத் தள்ளினார்.

அவன் சவுக்குக் கட்டையில் மோதி குப்புற விழுந்தான். உதடு கிழிந்து ரத்தம் வந்தது.

அங்குள்ள இளைஞர்கள் எழுந்து நின்றார்கள். மேல்துணியால் ரத்தம் வந்தவன் முகத்தை அழுத்திப் பொத்தினார்கள்.

ஒருவன் குவளை ஜலம் கொண்டு வந்து அவன் முகத்தில் ஊற்ற, துணி ஈரமாகி ரத்தம் வடிதலை நிறுத்தியது.

"இது கடைசி எச்சரிக்கை. எங்களை மீறி எந்த அந்தணராவது இந்தச் சோழதேசத்தில் செயல்பட்டால் அவர்களுக்கு மரணம்தான் முடிவு, அவர்கள் உயிரோடு இருக்க மாட்டார்கள். இருக்க விடமாட்டோம்." மேல் துண்டு பறக்க, கழுத்தில் போட்டுள்ள தங்கச்சங்கிலி நாலாபுறமும் அசைய, வாயிலிருந்து எச்சில் ஒழுக, உரக்கக் கத்தினார். வெறிபிடித்தவர்போல் காணப்பட்டார்.

"உங்களுடைய இந்த வன்முறையை நான் நேரிடையாய்ப் போய் அரசரிடம் சொல்வேன். பிரம்மராயரிடம் பேசுவேன். அருண்மொழிப் பட்டரை இங்கு அழைத்து வருவேன். ஈசான சிவபண்டிதரிடம் போய் முறையிடுவேன். வாருங்கள் ஒரு அந்தணர் வன்முறையாக நடக்கிறார் என்று அரசரிடம் சொல்வோம்."

அவன் சொல்ல ஐந்நூறு பேரும் எழுந்து கொண்டார்கள்

அடித்தவருக்குச் சட்டென்று ஒரு பயம் பற்றிக் கொண்டது. அடித்தவருக்கு அடுத்தவர் அந்த நிலைமையின் மோசத்தைப் புரிந்து கொண்டார்.

"அமைதி... அமைதி... அமைதி அவர் சற்று உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொண்டார். நீங்களும் அவ்விதமாகவே நடந்து கொள்ளலாமா" என்று சமாதானம் பேசினார்.

"அவர் அடித்து ஆளைப் புரட்டும் வரை அமைதியாக இருந்துவிட்டு, எங்களில் ஒருவர் தாக்கப்பட்டு ரத்தம் வடியும் வரை மௌனமாக இருந்துவிட்டு, இப்பொழுது நாங்கள்

அரசரிடம் போகிறோம் என்றதும், அவர் உணர்ச்சிவசப்படுவதாகச் சொல்கிறீரா. எங்களையும் உணர்ச்சி வசப்பட்டதாகச் சொல்கிறீரா. நாங்கள் உணர்ச்சி வசப்படவேயில்லை. உணர்ச்சி வசப்படுபவர் அந்தணரல்ல. வன்முறையின் மீது நம்பிக்கை வைப்பவருக்கு வேதியர் என்ற பட்டம் எதற்கு. வேதம் எதற்கு. குடித்துவிட்டு ஆடுகின்ற இழிமகன்போல் நடந்து கொண்டு விட்டு, இப்பொழுது தர்ம நியாயம் என்ன பேசுகிறீர்."

முற்றி முதிர்ந்த வாலிபமான ஒரு பையன் உரத்த குரலில் பேசினான்.

அவன் கண்களில் கோபம் தெறித்தது. மற்ற இளைஞர்கள் அவன் தோளில் கை வைத்து 'அமைதி' என்று சொன்னார்கள்.

"நான் அமைதியாகத்தான் இருக்கிறேன் இவர்களைக் கேட்க வேண்டிய நேரத்தில் கேட்கா விட்டால், நமக்கு எதுவும் தெரியாது என்று நினைத்துக் கொள்வார்கள்."

"ஆமாம். நீ சொல்வது சரி. இவர்களைவிட எந்த விதத்தில் நாம் குறைவு. உண்மையாகச் சொன்னால் இவர்களுக்குச் சில முக்கியமான பாடங்கள் மனனம் ஆகவில்லை. தெரிந்தது போல் நடிக்கிறார்களே தவிர, இவர்கள் அறிந்தது மிகவும் குறைவு. காவிய விஷயங்களும் இவர்கள் சரிவரக் கற்று உணரவில்லை. வெறுமே வைதீகத்திற்குண்டான விஷயங்களை எந்த உணர்வுகளும் இல்லாமல் சொல்கிறார்கள். பக்தியில்லாமல் ஹோமங்கள் செய்கிறார்கள். இவர்களோடு எந்தச் சம்பந்தமும் இல்லாமல் விலகுகிறோம் என்று சந்தோஷப்பட்டேன். இப்பொழுது வந்து இப்படிக் கைவிரித்து மறிக்கிறார்கள். இதைப்பற்றி அரசரிடம் முறையிடுவது தான் சரி."

"அடேய். தம்பி. கோபித்துக் கொள்ளாதே."

"நான் ஒரு அந்தணன். அடேய் என்று கூப்பிட எவருக்கும் உரிமையில்லை."

"எப்படிக் கூப்பிட வேண்டும்"

"சுவாமி என்று கூப்பிடு இல்லை, ஐயன் என்று சொல்."

"முகம் பிய்ந்து போகும்."

தோளில் எகிறி அடித்தவர் அப்படிச் சொன்னவன் தொண்டையைப் பிடித்து உலுக்கினார்.



அவன் முகத்தில் அடித்தார். அவனும் அடிபட்டு சுருண்டு தரையில் விழுந்தான்.

"பிச்சை எடுத்து உண்ணும் நாய்களை ஐயன் என்றும், சுவாமி என்றும் அழைப்பார்களா.. எழுந்திரடா.'

அவனை எட்டி உதைத்தார்.

"நீ என்ன மனிதனா, மிருகமா. உன்னைப் போய் அந்தணன் என்று சொல்லிக் கொள்கிறாயே. வெட்கமாய் இல்லை."

இன்னொரு இளைஞன் உரக்கக் கத்தினான்.

"வேதத்தைக் காப்பாற்றுபவன் சாதுவாக இருக்க வேண்டுமென்பது சட்டமல்லவா. எட்டி உதைக்கிறவர் எந்த ஜாதியில் சேர்த்தி. ஆத்திரமும், அசூயையும் கோபமும் உங்கள் கல்யாண குணங்களாக இருக்கிறதே. உங்களை அந்தணர்கள் என்று எவ்விதம் சொல்லிக் கொள்கிறீர்கள். அந்தணருக்குண்டான ஒரு குணம்கூட உங்களிடம் இல்லையே. நீங்கள் அந்தணருக்குப் பிறந்த அந்தணரா இல்லை, அறம் உணர்ந்த அந்தணரா."

இன்னொரு இளைஞன் உரத்த குரலில் சற்றுத் தொலைவிலிருந்து கேட்க, பின்னாலிருந்த அந்தணர்களும் கோபமானார்கள். பாய்ந்து ஓடி அந்த இளைஞனைப்பற்றி மாறி மாறி குத்தினார்கள். அடித்து வீழ்த்தினார்கள்.

அங்கு பெரிய அலறல் சத்தம் கேட்டது. பயந்து போன சிறுவர்கள் இளைஞர்கள் வாய்விட்டு அலறினார்கள். முகத்தைப் பொத்திக் கொண்டு கொட்டகையை விட்டு ஓடினார்கள் அந்தணரைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலோடு குதிரையை மெல்லச் செலுத்திக் கொண்டு கொட்டகையை நோக்கிப் போன அருண்மொழிப்பட்டன் உள்ளிருந்து வேகமாய் அந்தணர்கள் வெளிவருவதைப் பார்த்து பாம்போ, விஷப்பூச்சியோ மாடோ உள்ளே புகுந்து விட்டது என்றுநினைத்து குதிரையை வேகமாகச் செலுத்தினான்.

எட்டு வயது அந்தணப் பிள்ளை ஒன்று தட்டுத் தடுமாறி ஓடி வருவதைப் பார்த்து சட்டென்று குதிரையிலிருந்து அந்த அந்தணக் குழந்தையை வாரி எடுத்து குதிரையில் வைத்துக் கொண்டான்.

அந்தணச் சிறுவன் இன்னும் பயத்தில் அழ, அவன் முதுகு தட்டி சமாதானப்படுத்தினான்.

"சொல். ஏன் அழுகிறாய். ஏன் ஓடி வருகிறாய்."

"அடிக்கிறார்கள்... அடிக்கிறார்கள்.." என்று மட்டும்தான் அந்த அந்தணச் சிறுவனால் சொல்ல முடிந்தது.

அருண்மொழி அவனைக் கீழே இறக்கினான். மெல்ல குதிரையை வாசல் நோக்கிச் செலுத்தி, சட்டென்று முடிவை மாற்றிக் கொண்டு கொட்டகையின் பின்பக்கமாகப் போனான். கீழே இறங்கினான். நிறைய இளைஞர்கள் நின்று கொண்டிருந் தார்கள். அப்படி இருப்பினும் அவனுடைய உயரம் அவனை எங்கிருந்தாலும் காட்டிக் கொடுத்துவிடும் என்று தோன்றியது. சட்டென்று குத்திட்டு உட்கார்ந்தான். குத்திட்டபடியே வேகமாக நடந்து ஓலைக்குடிசை ஓரமாகப் போய் கொட்டகையின் நடுமத்தியில் நின்று கொண்டான்.

அந்த அந்தணச் சிறுவர்களின் இடுப்பு இடுக்கு வழியாக நேர் எதிரே நிற்கின்ற தஞ்சை வேதியர்களின் முகங்கள் தெரிந்தன.

"நீங்கள் உயிரோடு ஊர் திரும்ப வேண்டுமென்றால், ஒழுங்கான கை காலோடு திரும்பவும் தொண்டை தேசம் போக வேண்டுமென்றால், நாங்கள் என்ன சொல்கிறோமோ அதற்குக் கட்டுப்படுங்கள். சிற்பி ஒருவன் குதிரையை விட்டு ஒரு அந்தணனைச் சாகடித்தான். அக்ரஹாரத்திற்கு வந்து பெண்களின் தலைமுடியை இழுத்து அட்டகாசம் செய்தான். நாளைக்கு உங்களை மறவர்களும், சிற்பிகளும் சவுக்கால் அடிக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம். கணக்கு எழுதப் போகிறீர்களா அல்லது சிற்பிகளுக்குக் கால்கை பிடித்து விடப் போகிறீர்களா அல்லது அவன் எவளோடாவது படுத்துக் கொண்டிருக்க விளக்கு பிடிக்கப் போகிறீர்களா. அந்தணக் குலத்திற்கு அவமானம் தராதீர்கள். அந்தணர்கள் எப்படி வசிக்க வேண்டுமென்றும், யாரோடு வசிக்க வேண்டுமென்றும், யாரோடு வசிக்கலாகாது என்றும் சட்டங்கள் உண்டு. அதை மதித்து நடந்து கொள்ளுங்கள்.

ஆறும், குளமுமற்ற பாறைப் பிரதேசங்களில் நாம் வசிக்கக் கூடாது. அதுவும் தவிர கோவில் கட்டுவது என்பது முக்கியமான விஷயமே அல்ல. கோவில் என்பது தேவையே இல்லை. கோவிலில்லாமல் வேதங்களின் வாக்கியப்படி எங்கும் பரந்த இறைவனை நம்மால் தரிசிக்க முடியும். நாம் மட்டுமே தரிசிக்க முடியும். வேறு எந்த ஜாதியினரும் இறைவனைப்பற்றி நினைப்பதற்கும், பேசுவதற்கும் தகுதி உடையவரல்ல. நாமே மற்ற ஜாதியினருக்கு அதிகாரியாக இருந்து இறைவழிபாட்டைச்



சொல்லித் தருகிறோம். வழி காட்டுகிறோம். எனவே, அதை விடுத்து கோயில் கட்ட, கல் கணக்கு எழுதுதல் என்பது அபத்தம். அசிங்கம். ஆபாசம்.

கோவில் என்ற விஷயத்தில் நாங்கள் ஈடுபடலாகாது. எங்களுடைய வேலை வேதம் சொல்வது என்று ஓதுங்கிவிடுங்கள். கணக்கு எழுதுதலை மறுத்து விடுங்கள். உங்களுக்கு நல்ல உணவும், உடையும் கொடுத்து தொண்டை நாட்டிற்குத் திருப்பி அனுப்ப நாங்கள் எல்லா உதவியும் செய்கிறோம்."

வேறொரு அந்தணர் உற்சாகமானார்.

மிருதுவான குரலில் சமாதானம் பேசினார்.

"எங்கும் உள்ளவனை இறைவன் என்றுதானே சொல் கிறீர்கள்."

"ஆமாம். அப்படித்தான்."

"அப்படியானால் அவர் கோவிலிலும் இருப்பாரல்லவா. அங்கு ஒன்றுமில்லை என்று சொல்ல உங்களால் எப்படி முடிகிறது."

"அடேய். விதண்டாவாதம் செய்யாதே..."

கேள்வி கேட்ட இளைஞனை வேகமாக ஒருவர் முறைத்தார்.

"சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தரின் பெயர் சொல்லி, அவருடைய தேவார திருவாசகங்களைப் படித்துக் காட்டுகிறார்கள். அது வேதம் போலும் இருக்கிறது. வேதத்தின் விஷயங்கள் 'அதில் இருக்கின்றன. அவர்கள் ஊர் ஊராகப் போய், கோவில் கோவிலாகப் போய் நின்று பாடியிருக்கிறார் களே, ஒவ்வொரு கோயிலையும் பதிகம்பாடிச் சிறப்பித்திருக் கிறார்களே, அப்போது கோயில் முக்கியமென்றுதானே அர்த்தம். அவர்கள் எல்லோரும் அந்தணர்கள்தாமே."

"அடேய்... முட்டாள். அவர்களையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாதே. அவர்கள் ஒன்றும் நமது மரபின் முடிவான முடிவல்ல."

"அப்பொழுது முடிவான முடிவு என்பது நீங்களா. திருஞானசம்பந்தரைவிட, திருநாவுக்கரசைரை விட, சுந்தரரை விட நீங்கள் உயர்வாகி விட்டீர்களா."

"அவர்கள் காசுக்காக ஏதாவது செய்திருப்பார்கள். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது."

"என்ன அபத்தமான பேச்சு, என்ன அகங்காரமான பேச்சு. யாரை என்ன சொல்கிறோம் என்று புரியாமலேயே பேசுகிறீர்களே. இந்தச் சோழ சாம்ராஜ்யம் யாரைக் கொண்டாடுகிறதோ, இந்த தேசத்து மன்னர் எவரை உயர்வாக நினைக்கிறாரோ, அதை இழிவாகச் சொல்லக்கூடிய திமிர் உமக்கு எங்கிருந்து வந்தது."

ஒரு இளைஞன் உரத்து கேட்க, அந்த அந்தணர் சற்று மிரண்டார். பின் வாங்கினார்.

"எங்களுக்கெல்லாம் வேதம்தான் சாட்சி. வேதம்தான் முதல் ரிக், யஜுர், சாம வேதம் என்ன சொல்லுகிறதோ, அதைத்தான் நாங்கள் பின்பற்றுவோம். மற்ற எதுவும் எங்களுக்குப் பொருட்டல்ல."

"அரசர் கொண்டாடுவதை அவமானப்படுத்துவீரா"

"எங்களுக்கு அரசரும் முக்கியமல்ல. இந்தச் சோழ தேசமும் முக்கியமல்ல. வேதம் மட்டுமே முக்கியம். வேதம் தான் உயிர். வேதம்தான் இறைவன். அதுவே சத்தியம்.

சத்தியத்திற்குப் பல ரூபங்கள். வேதம் மட்டுமே அல்ல, வேதமும் ஒன்று. கற்புள்ள பெண்டிரின் பாதக்கொலுசிலும், ஞானியரின் நெஞ்சிலும், குழந்தைகளின் சிரிப்பிலும், தருமம் செய்பவர் கண்களிலும், நடனமாடும் பெண்ணின் ஜதிகளோடு உள்ள அங்க அசைவுகளிலும், வீணையின் நாதத்திலும், பசுவின் எல்லா பாகத்திலும் இறைவன் இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. உலகத்தில் வேதம் தவிர வேறு விஷயமே இல்லையென்று சொல்வது அஞ்ஞானம்."

"அடேய்... என்னை வாதத்திற்கு அழைக்கிறாயா."

"அழைத்திருக்க வேண்டும். அழைக்காதது எங்கள் பிசகு. அழைத்திருந்தால் உங்களுக்கு எதுவும் தெரியாது என்பது தெளிவாகியிருக்கும்."

"உனக்கு என்னடா தெரியும்."

"உனக்குத் தெரிந்ததைவிட அதிகம் தெரியும்."

"ஏகவசனமா பேசுகிறாய்."

"இந்த மிருகத்தை ஸ்ரீமான் என்றோ, கனபாடிகள் என்றோ அடைமொழியும், உயர் பதவியும் கொடுத்து அழைப்பார்களா."



ஒரு இளைஞன் பேச்சுக்குக் கூட்டம் சிரித்தது.

"இந்தத் தொண்டைநாட்டு கறுப்பர்களிடம் ஏன் பேசிக் கொண்டிருக்கிறாய்."

"அடியாத மாடு படியாது."

அடித்த அந்தணர் உரத்துக் கத்தினார்.

"நீ அடித்தால் வெறுமே பார்த்துக் கொண்டிருப்போமா. உடனடியாக அரசரிடம் போய் சொல்வோம். இந்த அரசர் தருமம் மிக்கவர். தெளிவு மிக்கவர். அந்தணர்களைப் பார்த்து கையெடுத்துக் கும்பிடுபவர். மிகச்சிறந்த சிவபக்தர். கோயில் பணிக்கு இடையூறாய் எவர் இருப்பினும் சற்றும் தயங்காது விலக்கி வெளியே அனுப்புபவர். உடையார் குடியிலிருந்து சேர தேசத்து அந்தணர்கள் துரத்திவிடப்பட்டது போல நீங்களும் ஒருநாள் துரத்தப்படப் போகிறீர்கள்."

"அடேய்.. இந்த தேசத்தில் நடந்த மிகப்பெரிய அநியாயமடா அது. பெண்டு பிள்ளைகளோடு அந்தணர்களைத் துரத்திய சாபம் இந்த அரசரைச் சும்மா விடாது. அவர்கள் மட்டும் இங்கு இன்று இருந்திருந்தால் இந்த நிலைமை ஆகியிருக்குமா. கொண்டாட்டமான நாட்களடா அவை. ஐந்து வயது அந்தணச் சிறுவன் தெருவில் நடந்து வந்தாலும், அத்தனை வீரர்களும் திரண்டு கைகூப்பி நிற்பார்கள். அந்தணரின் பொற்காலமடா அது. மறுபடியும் அப்படியொரு நாள் வருமா. சேரதேசத்து அந்தணர்கள் பெரும்படையோடு திரும்பிச் சோழதேசத்தை ஆக்ரமித்துக் கொள்ள மாட்டார்களா. எது கேட்டாலும் கிடைக்கும். எப்பொழுது கேட்டாலும் கிடைக்கும். யாரிடம் கேட்டாலும் கிடைக்கும். குதூகலத்தை அனுபவித்த நாட்களடா அவை. அறிவும், தெளிவும், வீரமும் உள்ள கூட்டமடா அது. சோழ தேசத்து மறவர்கள் வெறும் அடியாட்கள். கிழட்டுப் புலிகள். அந்தணர்கள் சந்திக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு அரசன் அலறி ஓடிவரவேண்டாமா. அலட்சியப் படுத்துகிறாரே இராஜராஜர். இது அவருக்கு நல்லதல்ல. கேடு வரும் நாள் அவருக்கு அருகே வந்து விட்டது என்று அர்த்தம்."

"யாருக்குக் கேடு வரும் நாள்."

பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

"இராஜராஜருக்குத்தான்..."

அந்த அந்தணர் உரக்கச் சொல்ல. சட்டென்று அருண்மொழி எழுந்து நின்றான்.

"மறுபடியும் சொல்லும், சோழதேசத்து அரசருக்குக் கேடு வந்துவிட்டது என்று சொல்லும்."

அந்தணர் திகைத்தார்.

மற்றவர்கள் மிரண்டார்கள்.

இரண்டு மூன்று பேர் சட்டென்று வெளியே ஓடினார்கள்.

அருண்மொழி கைதட்டினான்.

அவர்கள் நின்றார்கள். அருகே வரும்படி சைகை செய்தான்.

"எத்தனை பேர் நீங்கள். பதினோரு பேரா. உங்கள் அத்தனை பேரையும் நான் சோழச் சக்ரவர்த்தியின் பெயரால் கைது செய்கிறேன்."

"அருண்மொழி... அருண்மொழி..." என்று அந்தணர்கள் உரிமை எடுத்துக் கொண்டு அருகில் வந்தார்கள்.

அருண்மொழி சட்டென்று வாளை உருவி வீசினான்.

அவர்கள் விலகி குனிந்து ஓடினார்கள். வாளை மறுபடியும் உறையிலிட்டுக் கொண்டான். கையிலுள்ள கங்கணத்தை முழங்கை மீது அழுந்த ஏற்றிவிட்டுக் கொண்டான். அதிகம் பேசிய அந்தணச் சிறுவர்களை அடித்த அந்த மத்திய வயது அந்தணரிடம் நெருங்கினான்.

"என்ன சொன்னாய். அந்தச் சேரதேசத்து அந்தணர்களின் காலம் அற்புதமான காலமா. மறுபடியும் அவர்கள் இங்கு வரவேண்டுமா. சோழதேசத்தை ஆளவேண்டுமா. துரோகி.."

முழுவேகத்தில் முகவாயில் குத்தினான். குத்திய வேகத்தோடு முழங்கையை உயர்த்தி இழுக்க, அந்தக் கங்கணம் அவர் கன்னத்தைப் பெரிதாகக் கிழித்தது. அவர் தடுமாறி அலைய, முன்னேறி இரண்டு கைகளாலும் அவர் நெஞ்சில் கை வைத்து முழுபலத்தோடு தள்ளினான்.

அவர் வெகுதூரம் எகிறிப்போய் கொட்டகையில் உள்ள மண்ணில் பொத்தென்று விழுந்து உருண்டு, ஒரு நடுக்கம்பத்தின் மீது முட்டிக் கொண்டு நின்றார். பயத்தில் அலறினார்.

"வாடகைக்குக் குதிரை எடுத்து வந்து அந்தக் குதிரையை அக்ரஹாரத்தில் செலுத்திக் கொண்டு வரும்போது ஏன் இந்த இடத்தில் குதிரை ஓட்டிக் கொண்டு வருகிறாய் என்று சேணத்தைப் பிடித்து நிறுத்த உங்களுக்கு உரிமை இருக்கிறது. அவன் சேணத்தை உதற குதிரை எகிறி ஒரு அந்தணன் நெஞ்சில் உதைத்து விட்டது. அதற்காக இத்தனை பேசுவீர்களா? சேர அந்தணர் காலத்தைப் பொற்காலம் என்று சொல்வீர்களா. சோழதேசத்தை வேறொருவன் ஆட்சி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவீர்களா நீங்கள் என்ன பேசினாலும் உங்களைத் தண்டிக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா அப்படி ஒருவன் பேசுகிறான். அதைத் தடுத்து நிறுத்த மற்ற அந்தணர்களுக்கு அறிவில்லையெனில் உங்களுக்குப் பூணூல் எதற்கு. ருத்திராட்சம் எதற்கு." பக்கத்திலுள்ள அந்தணன் பூணூலையும், ருத்ராட்சத்தையும் கொத்தாகப் பிடித்தான். பளிச்சென்று அறுத்தெறிந்தான். அவர் முகத்திலும் ஓங்கி அறைந்தான். அவரும் முகத்தைப் பற்றிக்கொண்டு அலறினார்.

"ஏதுமறியாச் சிறுவர்கள் உங்களை நம்பி இந்த தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். என்ன அலைக்கழிக்கிறீர்களடா.. பாவிகளா."

ஒருவர் முன்புறம் தன் காலை அழுத்தி வைத்துக் கொண்டு பளிச்சென்று தள்ள அவருடைய கணுக்கால் அவன் அழுத்தமும், தள்ளலும் தாங்காமல் பளிச்சென்று உடைந்து போயிற்று. கீழே விழுந்து புரண்டு வலியில் துடித்தார்.

அவன் துடித்தவருக்கு அருகே போனான்.

"சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவருக்குத் தமையனைக் கொன்றபோது என்ன ஆத்திரம் இருந்திருக்கும். எப்படியெல்லாம் உங்களைப் பழிவாங்கத் துடித்திருப்பார் என்பது எனக்கு இப்போது புரிகிறது. ஏன் அலறுகிறாய். நீ அந்தணன்தானே பொறுத்துக் கொள் நாயே."

அவன் கால்களால் அவர் முகத்தை ஓங்கி உதைத்தான்.

அவர் வாயைப் பொத்திக் கொண்டு அலறல் வெளிவராதபடி நிறுத்தினார். அவர் முகமெல்லாம் ரத்த விளாறாயிற்று.

தொண்டை தேசத்து அந்தணர்கள் அருண் மொழிக்கருகே ஓடி வந்தார்கள். மெல்ல அவன் முன் கை பற்றிக் கொண்டார்கள். வேண்டாம் என்று சொன்னார்கள்.

"சாந்தி.. சாந்தி.. சாந்தி.. நீங்கள் மிகச்சிறந்த போர் வீரர். இவர்கள் உங்களைத் தாங்கவே மாட்டார்கள். தயவுசெய்து விட்டுவிடுங்கள்." கைகூப்பினார்கள்; கெஞ்சினார்கள்.

"திருமகள் போல பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி" என்று உரத்த குரலில் சக்ரவர்த்தியின் புகழ் சொன்னார்கள்.

மெல்ல அருண்மொழியின் புஜம், பிடித்து அணைத்து வந்தார்கள்.

அருண்மொழி விலகியவுடன் மற்ற அந்தணர்கள் சட் டென்று அடிபட்டவர்களைத் தூக்கிக் கொண்டார்கள். விரைந்து கொட்டகையிலிருந்து வெளியேறினார்கள்.

"இங்கிருந்தால் அடிபட்டுச் செத்து விடுவோம். வா... வா.." என்று நொண்டி நொண்டி நடந்த அந்த அந்தணனைத் தோள் பிடித்து அழைத்துப் போனார்கள்.

அடுத்த மூன்று நாழிகையில் திருவையாற்றுக்கு அடுத்த ஒரு அக்ரஹாரத்தில் அந்தணர்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட இன்னொரு பிரம்ம தேசத்தில் சோழக் கைக்கோளப்படைகள் உள்ளே புகுந்தார்கள். சிறு முரசு அடித்து அத்தனை அந்தணர் களையும் வெளியே வரச்சொன்னார்கள்.

யாரெல்லாம் வந்து தாக்கினார்கள் என்று ஒரு திருமுனைப் பாடி அந்தண இளைஞன் அடையாளம் காட்ட. அவர்களை யெல்லாம் தனித்து வரச்சொன்னார்கள்.

முகமெல்லாம் அடிபட்டிருக்கிறதய்யா. சற்று கோபமில்லா மல் இருங்கள் என்று மூத்த அந்தணர் சொல்ல, கையிலிருக்கிற கழியை ஊன்றிக்கொண்டு முன்னே வந்து கைகூப்ப, அந்த கைக்கோளப்படை உபசேனாதிபதி அவனுடைய கைக்கோலை வாங்கிக் கொண்டார். முழங்கையில் வைத்து பளீரென்று இரண்டாக உடைத்துக் கீழே எறிந்தார்.

"வயதானவர் என்பதாலும், எந்த வம்பிலும் சிக்கவில்லை என்பதாலும் விடுகிறேன். இல்லையெனில் இப்படிப்பட்ட நடவடிக்கைதான் உன்மீது எடுக்கப்படும்." என்று உரக்கச் சொன்னான்.

அந்த அந்தணர் பின்வாங்கினார்.

பெண்கள் திண்ணையின் பக்கமிருக்கின்ற தூணைக் கட்டிக் கொண்டு அழுதார்கள். சிறு குழந்தைகள் அலறின.



ஒரு சிறுமுரசு வேகமாக அடிக்கப்பட்டது. எக்காளம் ஊதப்பட்டது. சக்ரவர்த்தியினுடைய மெய்க்கீர்த்தி உரக்கச் சொல்லப்பட்டது. எல்லா அந்தணர்களும் கைகூப்பி நின்றார்கள்.

"இந்த பிரம்மதேசம் முழுவதும் வேளாண்வகை நிலமாகச் சக்ரவர்த்தியார் இந்தக் கணத்திலிருந்து மாற்றுகிறார். இதில் வரும் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு அரசருக்குக் கொடுக்கப் பட வேண்டும். அந்தணர்களுக்கு மானியமாய் வழங்கப்பட்ட இந்தக் கிராமம் இனி அந்தணர்களுக்கு இல்லை. அவர்கள் இருக்கின்ற வீட்டிற்கும் வரி உண்டு. இந்தத் தெருவுக்கும் வரி உண்டு. குளிக்கின்ற ஆற்றுக்கும் வரி உண்டு. எனவே, வரிகட்ட முடியாதவர்கள் இந்த இடத்தைவிட்டு உடனே அகன்று விடலாம் என்று கட்டளையிடப் படுகிறது. இப்பொழுது எந்த வேளாளர் உங்கள் நிலத்தை உழுது கொண்டிருக்கிறாரோ அவருக்கே அந்த நிலம் சொந்தமாகும். இது சக்ரவர்த்தியின் கட்டளை."

"ஐயா, நாங்கள் பிழைப்புக்கு என்ன செய்வது."

ஒரு அந்தணர் அலறினார்.

"சேரதேசம் போங்கள்."

ஓலையை உரக்கப்படித்தவன் பதில் சொன்னான்.

அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

"அடப்பாவி வாய்கொடுத்துவிட்டு என்னுடைய வாழ்க்கை யைப் பாழடித்துவிட்டாயே, ஐயா, நான் சோழதேசத்திற்குத் துரோகம் செய்பவன் அல்ல. சக்ரவர்த்திக்கு எதிரானவன் அல்ல. ஏதோ சில சண்டாளர்கள் இப்படிப் பேச எங்களுக்கும் அதே தண்டனை கிடைக்கிறதே. இது நியாயமா."

"சக்ரவர்த்தியிடம் போய் முறையிடுங்கள். ஒருவேளை உங்களுக்கு அவர் வேறு எங்கேனும், வேறு ஏதேனும் வேலை தரக்கூடும். அந்த வேலையில் உங்களுக்கு இப்போதைய வேலையைவிட அதிக வருமானம் கிடைக்கவும் கூடும். அது கணக்கு எழுதும் வேலையாகவும் இருக்கலாம். கல் உடைக்கும் வேலையாகவும் இருக்கலாம். நீங்கள் எதற்கும் தயாராக இருப்பது உங்களுக்கு நல்லது. தயாராக இல்லாதவர்களைச் சேரதேசம் வரவேற்கிறது."

"ஐயோ... மோசம் போனோம். மோசம் போனோம். நான் மறுபடி மறுபடி சொன்னேன் தொண்டை நாட்டு அந்தண

இளைஞர்களைக் கரித்துக் கொட்டாதே என்று. இப்போது பார் திருமுனைப்பாடி இளைஞர்கள் உயர்ந்துவிட்டார்கள். நீ உன்னையே தாழ்த்திக் கொண்டுவிட்டாய். போதுமா, உன்னால் வந்த வினை. உன்னை யார் போகச் சொன்னது. இந்த சபை உத்தரவிட்டதா. இந்தச் சபையிடம் அனுமதி பெற்றாயா. பெண்டு பிள்ளைகளை அடித்துத் துவைக்கின்ற அந்தத் திமிரில்தானே போனாய். இப்போது பல்லை உடைத்திருக்கிறார்களே. காலை முறித்திருக்கிறார்களே என்ன செய்வாய்? அந்தணனுக்குக் கோபம் ஆகாது. வன்முறை கூடாது என்று எத்தனை முறை சொல்லியும் கேட்காமல் பஞ்சமர்களை விரட்டுவதும், கோலால் அடிப்பதும் என்று எத்தனை கொடுமைகள் செய்திருக்கிறாய். அடப்பாவி... நமது குலமே பாழாகி விட்டதடா. இந்த அவமானத்தை எப்படி துடைப்பதடா. அரசரின் காலில் விழுவதைத் தவிர வேறு வழியில்லை. ஐயா.. உபசேனாதிபதி.. சக்ரவர்த்தி எங்கிருக்கிறார்."

"தெரியாது."

"நாங்கள் அவரைப் பார்க்க வேண்டும். ஏற்பாடு செய்யக்கூடாதா."

"முடியாது."

"ஏன்.. ஏன்.. நாங்கள் என்ன பாவம் செய்தோம்."

"துரோகிகளுக்குத் துணை போயிருக்கிறீர்கள். சேரதேசத்து அந்தணர்கள் ஆட்சியில் சிறப்பாக வாழ்ந்தோம் என்று சொன்ன இந்த நாய்களுக்குத் துணையாக இருந்திருக்கிறீர்கள். இந்தச் செய்தி தஞ்சை முழுவதும் பரவிவிட்டது. நீங்கள் நடந்து போனால் உங்கள் மீது எச்சில் உமிழ்வார்கள். தாம்பூலத்தை மென்று முகத்தில் துப்புவார்கள். எனவே.."

"ஐயா, எனவே என்ன சொல்லுங்கள்."

"சேரதேசம் போங்கள். அதுதான் சிறப்பு. இரவோடு இரவாக இடம் பெயர்ந்து விடுங்கள். அதுதான் நல்லது. நீங்கள் மட்டுமல்ல, உங்கள் பெண்டு, பிள்ளைகள், கன்று அனைவரோடும் நீங்கள் நகர்ந்து போகலாம். இந்த வீடுகள் வேளாளர்களுக்கே சொந்தமாகட்டும்."

உபசேனாதிபதி குதிரையில் தாவி ஏறினார். அந்தக் கைக்கோளப்படை அந்தப் பதினோரு அந்தணர்களையும் நடத்திக் கொண்டு போயிற்று.



"இவர்களை எங்கே அழைத்துப் போகிறீர்கள்."

ஒரு அந்தணப் பெண்மணி உரக்கக் கேட்டார்.

"சிறைச்சாலைக்கு."

"அந்தணர்களையா சிறையில் அடைக்கப் போகிறீர்கள்."

"துரோகிகளைச் சிறையில் வைக்கப் போகிறோம்."

அந்தக் காவலர் தலைவன் மிடுக்காக பதில் சொன்னான்.

கோலைக் குறுக்காக மறித்து அந்தணர்களை நெட்டித் தள்ளினான்.

வேதம் படித்த முதிர்ந்த அந்தணர்கள் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதார்கள். பெண்கள் தலையிலும், நெஞ்சிலும் அடித்துக் கொண்டு அலறினார்கள். குழந்தைகள் வீறிட்டு அழுதன. பசுக்கள் மிரண்டன.

அந்தணர்கள் நடத்திப்போகப்பட, பின்னே ஒரு கூட்டம் போயிற்று. தொடர்ந்து வந்தால் அடிபடுவீர்கள் என்று எச்சரிக்க, ஊரின் எல்லையில் நின்று அழுதது.

அந்தணர்கள் தலைகுனிந்து கொண்டு அழுதார்கள்.

வயலில் வேலை செய்த குடியானவர்கள் கைக்கருவிகளைப் போட்டுவிட்டு ஓடிவந்தார்கள். உறவினர் பெண்கள் பின் தொடர்ந்தார்கள்.

நாய்கள் குரைத்தன.

"ஐயன்மார்களை எதற்கு... எதற்கு.." வேளாளர்கள் திணறினார்கள். உதட்டில் விரல் வைத்து உபசேனாதிபதி எச்சரிக்க, மெல்ல கைகூப்பியபடி பின்வாங்கினார்கள். அவர்கள் கண்களிலும் நீர் கோர்த்துக் கொண்டது.

இது நல்லதல்லவே என்ற எண்ணம் ஏற்பட்டது. ஏன் இப்படி என்ற பதட்டம் இருந்தது. சில வேளாளர்கள் அன்பின் மிகுதியால் பின் தொடர்ந்தார்கள்.

"ஐயா, இவர்கள் பேச்சுதான் கடுமையாக இருக்கும். மற்றபடி எந்தத் தவறும் செய்யமாட்டார்கள்." என்று உணர்ச்சிவசப்பட்டு வேளாளர் ஒருவர் பேச உபசேனாதிபதி திரும்பினார்.

"உன்னை அபிப்ராயம் கேட்கிறபோது வந்து சொல். இப்போது விஷயம் என்னவென்று புரியாமல் எதுவும் சொல்லி

விடாதே. அது உனக்கும் நல்லதல்ல. உன் குடும்பத்திற்கும் நல்ல தல்ல. அமைதியாய் இரு..” அடிக்குரலில் மிருதுவாய் எச்சரித்தார்.

வேளாளன் பின்தங்கினான்.

அந்தக்கூட்டம் முன்னேறிற்று. அந்த வேளாளர்கள் அக்ரஹாரம் நோக்கி ஓடினார்கள். அழுதுகொண்டிருந்த அந்தணர்களைப் பார்த்து அவர்களுக்கும் அழுகை வந்தது.

“ஏன் இப்படி.. ஏன் இப்படி..” என்று போய் அருகே கைகூப்பி நின்றார்கள்.

“போங்களடா போங்கள். விலகிப் போங்கள். உங்களால் தானடா ஆயிற்று.” என்று ஒரு அந்தணன் உரக்கக் கத்த வேளாளர் மிரண்டு போனார்.

“நான் எதுவும் செய்யவில்லையே. நான் எதுவும் சொல்ல வில்லையே.” என்று மறுபடியும் பேசினார்.

“இந்த நிலம் மொத்தமும் உங்களுக்காம். இந்த வீடுகளெல் லாம் உங்களுக்காம். நாங்கள் வேறெங்காவது போகவேண்டுமாம். என்ன அநியாயமடா.”

ஒரேயொரு அந்தணன் சுதாரித்துக் கொண்டான். மற்றவர்களை முதுகுதட்டி அமைதிப்படுத்தினான்.

யாரும் எதுவும் பேசக்கூடாது என்று கட்டளையிட்டான். மெல்ல தன் கூட்டத்தைத் திருப்பிக் கொண்டு தங்களுடைய இடம் நோக்கி அவர்களை நடத்திப்போனான்.

“வேறு ஏதோ நடக்கிறது. நாம் தலையிட வேண்டாம். அவர்களை இந்த இடத்தைவிட்டு போகச் சொல்லும் படியான தண்டனை கிடைத்திருக்கிறது. தண்டனை ஏதோ கடுமையெனில் இவர்கள் செய்திருப்பதும் கடுமையாக இருக்கும். ஏதோ இவர்கள் அதிகப்படியாய் பேசியிருக்கிறார்கள். அந்தணர் வீட்டில் வேலை செய்யும் நம் பெண்மணிகளைக் குழந்தைகளை விட்டு அழைத்து வா. அவர்களுக்குத் தெரியாமல் போகலாம்.” என்று ஒரு வேளாளர் உரக்கச் சொன்னார். இரண்டு மூன்று பெண்மணிகள் அவர்கள் குடியிருப்பு நோக்கி ஓடிவந்தார்கள்.

“போச்சு... போச்சு... அந்தணக் குடும்பங்கள் மொத்தமும் போச்சு. ஊரைவிட்டுத் துரத்தி விடுவார்கள் போலிருக்கிறது.” என்று உரக்கக் கத்திக் கொண்டு மத்திம வயதுப் பெண்மணி ஓடிவந்தாள். அவளை ஆசுவாசப்படுத்தினார்கள். விஷயம் வாங் கினார்கள்.



ஒரு வீட்டின் கொல்லைப்புறத்தில் சட்டென்று வட்டமாய்க் கூடி உட்கார்ந்து கொண்டார்கள். இந்தப்பாடுபட்ட நிலம் முழுவதும் நமக்கா. என்ன செய்வது. உண்மையில் நடக்குமா. இல்லை வெறும் பேச்சாக்கிவிட்டு ஏமாற்றி விடுவார்களா என்று உரத்த குரலில் யோசித்தார்கள்.

“எப்படியப்பா... ஆண்டாண்டு காலமாய் ஆண்டு வந்த நிலத்தை ஒரு அந்தணன் விட்டுவிட்டுப் போய் விடுவான்.”

“அரசனுடைய ஆணை என்றால்.. விட்டுவிட்டுத் தான் போக வேண்டும் நிர்ப்பந்தித்தால்.. போங்களடா என்று சவுக்கால் அடித்து துரத்தினால் போக வேண்டியதுதான்.”

ஒரு வேளாளன் சற்று குதூகலமாகச் சொன்னான்.

“அப்படியானால்.. இந்த விளை நிலமெல்லாம் நம்முடையதாகி விடுமல்லவா.”

“ஆகலாம். அந்தணர்கள் வயிறெரிந்து கொடுத்த நிலம் நமக்கு நல்லபடியாய் வருமா.”

“இதோ பார். இந்த நிலம் யாருக்கும் சொந்தமன்று. இந்த பூமி காலாகாலத்திற்கும் இருந்து வருகிறது. நடுவே இந்த அந்தணன் தன்னுடைய சொந்தம் என்று சொன்னான். மூன்று தலைமுறைகளாகத்தான் இவர்கள் ஆளுகிறார்கள். இதோ முடிந்து போயிற்று. இனி இவை நமக்குச் சொந்தம்.”

“எனக்குச் சந்தோஷமாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது. போகிறபோக்கில் இந்த அந்தணர்கள் நம்மை ஏதாவது செய்து விடுவார்களோ என்ற அச்சம் வயிற்றைக் கலக்குகிறது.”

“யார் என்ன செய்துவிட முடியும். நம்மாலா இது நடந்தது.”

“ஆனாலும், அந்த அந்தணன் என்னைச் சீறினானே”

“அவன் வயிற்றெரிச்சல்காரன். அவன் சொத்தை நாம் அனுபவிக்கப் போகிறோம் என்று தெரிந்து விட்டது. அதனால் நம்மீது எரிகிறான்.”

“இப்பொழுது நாம் என்ன செய்வது...”

“அந்தணர் குடியிருப்புப் பக்கம் போகாமல் இருப்பதுதான் உத்தமம்.”

“அவர்கள் போய்விடுவார்களா..”

"தெரியவில்லை.."

"நிலம் நமக்கு என்று வந்து விடுமா."

"வந்து விடும் என்றுதான் தோன்றுகிறது."

"யாரிடம் போய் இதைக் கேட்க வேண்டும்."

"மௌனமாய் நமது வேலையைச் செய்து கொண்டிருப் போம். வேண்டும் என்ற ஆசையையும், வேண்டாம் என்ற எண்ணத்தையும் விட்டு விலகி விடுவோம்."

"அப்படி நிலம் நமக்கு என்று வழங்கப்பட்டால் நாம் எப்படிப் பிரித்துக் கொள்வது."

ஒரு இளைஞன் எழுந்து நின்று கேட்டான்.

"இதுதான் தவறு. அதிகப்பிரசிங்கித்தனம். அந்தணர்களைக் கைது செய்து நடத்திப் போனார்கள். இவ்வளவே நடந்திருக்கிறது. கோட்டைக்கருகே போய் எச்சரித்து விட்டுவிடுவார்கள். மறுபடி யும் அந்தணர்கள் இங்கு வந்து அடேய் வேளாளப் பதர்களே என்று நம்மை அழைத்தாலும் அழைக்கலாம். எனவே ஆத்திரப் படாமல் ஆவலாதி காட்டாமல் அமைதியாய் இருப்போம். உள்ளே ஏதோ ஒரு குருவி சொல்கிறது."

"என்ன சொல்கிறது."

"நமக்கு நல்லது நடக்கும்."

"நமக்கு நல்லது நடக்க நாம் என்ன செய்ய வேண்டும். அரசர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார். அரசாங்கத்தில் என்ன நிகழ்கிறது என்று சொல்ல நமக்குச் சரியான தலைவர் இல்லையே. அது ஏன். அந்தணர்களுக்கு வழிகாட்ட பலபேர் இருக்கிறார்கள். நமக்கு வழிகாட்ட எவரும் இல்லையே. அது ஏன்.'

"இது நல்ல கேள்வி."

கேள்வி கேட்ட இளைஞனை ஒரு முதியவர் தட்டிக் கொடுத்தார்.

"மூவேந்த வேளார், வேளாளராக இருந்தும் நம்மை மதித்து அணுகிப் பேசுவதில்லை."

"அட சும்மாயிருங்களய்யா. மூவேந்த வேளாரிடம் நீங்கள் போயிருக்கிறீர்கள். எந்த வேளாளனாவது, ஏதாவது ஒரு



அரசாங்க அதிகாரியை அனுசரித்து நடந்திருக்கிறானா? எந் நேரமும் வேலை வேலை என்று மாடும், கன்றும் உழுகலப்பையு மாய் அலைகிறீர்களே தவிர, ஒரு கூட்டமாய்ப் போய் மூவேந்த வேளாரையோ, பஞ்சவன் மாதேவியையோ, சக்ரவர்த்தியையோ சந்தித்திருக்கிறீர்களா."

"நாளையே சந்தித்தால் என்ன."

"அட... அந்தணர்கள் சீறுவதற்கா."

"ஏன், அதற்கு இதற்கும் என்ன சம்பந்தம்."

"நீ இப்போது என்ன செய்தாலும் அவருக்கு எதிராகச் செய்வதாகத்தான் முடியும்."

"வேறு என்ன செய்யலாம்."

"நம்மில் மூன்று பேர் மெல்ல தஞ்சைக்குக் கிளம்பி அங்கு ரகசியமாய் என்ன நடக்கிறது என்பதை விசாரிக்க வேண்டும்."

"யாரிடம் போய் விசாரிப்பது."

"ஆமாம். விலாசம் கொடுப்பார்கள். போய் வீட்டுக் கதவைத் தட்டி விசாரிப்பாய். அடேய். பேசிப்பழகி, முக்கிய அதிகாரி களோடு நெருங்கி சல்லாபித்து விவரம் கேட்க வேண்டும்."

"எந்த அதிகாரிகளை நமக்குத் தெரியும். அந்தச் சாமர்த்திய மெல்லாம் நமக்கு உண்டா. இதுதான் நம் பிரச்சனை நேற்று முன்தினம் ஒன்று நடந்தது. வைணவதாசன் என்பவர் பிரம்மராயரின் உதவியாளர் இங்கு வந்து இந்த அந்தணர்களை ஏதோ எச்சரித்து விட்டுப் போனார், என்ன என்பது புரிய வில்லை. அவர்கள் இவரை ஏளனமாகப் பேசியதும் அவர் எச்சரித்து விட்டுப் போனது மட்டுமே புரிந்தது. அவர்கள் விரை வாகவும், வடமொழியிலும் பேசுவதால் பல்வேறு விஷயங்கள் பாதிப்பாதியாகத்தான் புரிகின்றன. அந்த வைணவ தாசனை அணுகினால் என்ன. அவர் ஊர் பழமர் நேரிதானே."

"மறுபடியும் நாம் அந்தணரிடமே நிற்கிறோம். நம்மில் எவரும் இல்லை. மூவேந்த வேளாரை எப்படி அணுகுவது என்று நமக்குத் தெரியவில்லை."

"அதைக்கூட வைணவதாசனிடம் கேட்கலாம். வைணவ தாசன் அந்தணர் என்றாலும் நடுநிலையில் உள்ளவர் என்பது என்னுடைய அபிப்ராயம்."

"அப்படியானால் அவர் ஒற்றர். விவரங்கள் சேகரிப்பவர். அக்ரஹாரத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள அவருக்கு நம்முடைய உதவி இப்பொழுது தேவைப்படும். எனவே, நாம் அவரை அணுகினால் அவர் நமக்கு நல்லது செய்யக்கூடும்."

"இந்த யோசனை நன்றாக இருக்கிறது."

"போய் வைணவதாசனைப் பார்த்துவிட்டு வரலாம். என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். ஆனால், அரசருக்கு எதிராக தயவுசெய்து எதுவும் பேசி விடாதீர்கள்."

"நாங்கள் ஏன் அசரருக்கெதிராக பேசப் போகிறோம். நம்மில் யார் பேசப் போகிறார்கள். சோழதேசம் சக்ரவர்த்தி. இராஜராஜசோழர் இல்லாமல் வேறு எப்படிச் சிறக்கும். இராஜேந்திரர் தானே நமக்கு விடிமோட்சம். நாளை காலை போனால் என்ன வைணவதாசனிடம் இப்போதே பேசவேண்டுமா."

"முட்டாள்களே... நிதானம்... நிதானம் என்று எல்லாவற்றையும் கோட்டை விடுகிறீர்களே. உடனடியாக செய்ய வேண்டிய காரியம் இது.

மூன்று பேர் வைணவதாசனிடம் போய்க் காத்திருந்து, அவரோடு.. வந்த விஷயத்தை வெளிப்படையாகப் பேசி உதவி செய்யுமாறு கைகூப்பிக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் பேசுகிறபோது, வேறு எவரும் அருகில் இல்லாத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். இதுவே முக்கியம். நம்மில் யார் சாமர்த்தியசாலி? யார் அந்த மூன்று பேர்."

அவர்கள் விவாதித்து அந்த மூன்று பேரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

"எப்படிப் போவது குதிரையிலா."

"வேளாளர் குதிரையில் போனால் சந்தேகம் வரும். இங்கிருக்கிற பழமர் நேரிக்கு குதிரை எதற்கு. ஆற்றில் இறங்கி எதிர்க் கரையைத் தாண்டிப் போய்விட வேண்டியது தான்."

"வெறுங்கையோடா போவது."

"இதுவும் நல்ல கேள்வி. ஒரு கூடை சன்ன அரிசி. ஒருகூடை வெல்லம். ஒரு கூடை காய்கறிகள் என்று கொண்டு போகலாம்."

"பழமர்நேரியில் விளையாத அரிசியா. நாம் தரப் போகிறோம்."



"அப்படியல்ல. நம் அன்பு வைணவதாசனுக்குக் காண்பிக்கப் பட வேண்டும்."

அந்த மூன்று பேரும் நல்ல சகுனம் பார்த்து தலைச்சுமையோடு ஊர்விட்டு அகன்றார்கள். வடக்கே போவதாய்ப் போக்கு காட்டிவிட்டு, பிறகு மேற்கே திரும்பி, பிறகு மறுபடியும் தெற்கே திரும்பி, பிறகு ஆறு கடந்து பழமர்நேரி போகும் பாதையில் ஏறினார்கள்.

வைணவதாசன் வீட்டுத் திண்ணையில் கூடையை இறக்கிவிட்டு வியர்வையைத் துடைத்துக் கொண்டார்கள். பெருங்கதவு திறந்தது. அவர் மனைவி வெளியே வந்தார்.

"வரச் சொன்னாரா... நீங்களாக வந்தீர்களா.. அவர் எங்கிருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லையே. இன்று வருவார் என்று சற்றுமுன் செய்தி வந்தது. மற்றபடிக்கு நீங்கள் எவரும் வருவதாகவும் சொல்லவில்லையே. இதெல்லாம் என்ன அவருக்கா.. என்ன இப்படித் தையல் இலைகளோடு வந்திருக்கிறீர்கள். என்ன காரணம்.

திண்ணையில் உட்கார்ந்து பேசவேண்டாம். உள்ளே வாருங்கள்."

வேளாளர்கள் நடை தாண்டி கூடத்திற்குப் போய் முற்றத்தில் கால் அலம்பி கூடத்தில் அமர்ந்தார்கள்.

அவர்களுக்குக் குடிக்க முதலில் தண்ணீரும், பிறகு நீர் மோரும் கொண்டு வந்து கொடுத்தாள்.

"நீங்கள் எங்களை உள்ளே அழைத்ததே ஆச்சரியமாக இருக்கிறது. பல அந்தணர்கள் உள்ளே விடமாட்டார்கள்."

"இது ஒரு அரசாங்க அதிகாரியின் வீடு. அப்படியெல்லாம் ஆசாரம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மூவேந்த வேளார் வந்தால் இங்கே கட்டிலில்தான் படுத்து உறங்குவார். இந்தக் கூடத்தில்தான் சாப்பிடுவார். அவர் வரும்போது நீங்கள் வந்தால் என்ன... என்ன விஷயம் சொல்லுங்கள்."

வேளாளர்கள் தயங்கினார்கள்.

"அவரிடம்தான் சொல்ல வேண்டுமா. என்னிடம் சொன்னால் ஆகாதா."

மெல்ல ஒரு இளைஞன் அவரிடம் விவரம் சொன்னான்.

“அப்பா.. இப்பொழுதுதான் விழித்துக் கொண்டீர்களா. இப்பொழுதுதான் இந்தப் புத்தியே வந்ததா உங்களுக்கு. வந்ததுபற்றி சந்தோஷம். ஒரேயொரு விஷயம் சொல்கிறேன். நீங்கள் மிகச்சரியான நபரிடம் வந்து வீட்டீர்கள்.”

வைணவதாசனின் மனைவி ஒரு முறை கைதட்டி விட்டு முகவாயில் கைவைத்துக் கொண்டார்.

அவர்கள் முகம் மலர்ந்தார்கள்.

“வைணவதாசனுக்கு வேளாளர் என்றால் உயிர். வேளாளர்களைப் பின் பற்றித்தான் சோழதேசம் மலர்ச்சியாக இருக்கிறது என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்வார். வேளாளரை மதிக்காத தேசம் விளங்காது என்று சொல்வார். நீங்கள் வந்திருப்பது அவருக்கு மிகப்பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும். எனக்கும் அரசாங்கம் பற்றியும், அரசியல் பற்றியும் தெரியும் நான் உங்களிடம் சில சொல்கிறேன்.

நீங்கள் கேட்பது சரி. மூவேந்த வேளார் உங்களுக்கு நெருக்கமாக இருக்க வேண்டிய தர்மமுள்ளவர். ஆனால் அப்படியில்லை. எதனாலேயோ பெரிய க்ஷத்திரியர் போல விலகி நிற்கிறார். நான் சொல்லட்டுமா. நீங்கள் உங்களுக்கு வழிகாட்டியாக அருண்மொழிப்பட்டனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அருண்மொழிப்பட்டன் அந்தணன் என்று நினைக்காதீர்கள். அவருக்கு அந்தணரைப் பிடிக்காது. உங்களுக்கு ஒன்று தெரியுமா. இந்த அந்தணர்கள் அருண்மொழிப்பட்டனால் தான் தண்டிக்கப்பட்டார்கள். அருண்மொழிப்பட்டன் இருக்கும்போதே இப்படிப் பேசினார்கள். அருண்மொழிப்பட்டன் இராஜேந்திரரிடம் சொல்ல இந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டது. இன்னொன்று தெரியுமா. இந்த அந்தணர்கள் அரசர் கட்டுகின்ற கோவில் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள மறுத்தார்கள். எங்கள் வேலை அதுவல்ல என்று புறக்கணித்தார்கள். இது சக்ரவர்த்திக்கு வருத்தத்தை உண்டு பண்ணியது. இது மற்ற எல்லா ஜாதியினருக்கும் செய்யப்பட்ட எச்சரிக்கை. ஒருமகத்தான பணி நடக்கும்போது எனக்குத் தெரியாது என்று எவரேனும் நகர்ந்து கொள்வார்களா? நீங்கள் மூவேந்த வேளாரை அணுகுவதை விட அருண்மொழிப் பட்டனைப் போய் பாருங்கள். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேளுங்கள் அல்லது சக்ரவர்த்தியை வழியில் பார்த்தால் உங்களுக்கு எங்களாலான உதவியைச் செய்கிறோம் என்று நீங்களே முன்வந்து பேசுங்கள். இதைத்தான்



வெகுநிச்சயமாய் என் புருஷனும் உங்களுக்குச் சொல்லப் போகிறார்.”

“அந்தணர்கள் துரத்தப்படுவார்களா. நிலங்கள் என்ன ஆகும் என்று யாரைக் கேட்பது.”

“இப்படிக் கேட்பது பிசகு. இந்த எண்ணமும் தவறு. அது பற்றிய எந்த அக்கறையும் நீங்கள் காட்ட வேண்டாம். நீங்கள் என்ன நடந்தது என்பதைச் சொல்லும்பொழுது சற்று யோசித்துப் பார்த்தால் என்ன நடக்கும் என்பதை என்னால் யூகிக்க முடிகிறது.”

“என்ன நடக்கும் அம்மா.”

அவர்கள் பணிவாகக் கேட்டார்கள்.

“அந்தணர்கள் பலர் குடிபெயர்வார்கள்.”

“எங்கு அம்மா.”

“சேரதேசம் நோக்கிப் போவார்கள். இரவோடு இரவாக பாண்டிய தேசத்திற்குப் போகிறோம் என்று சொல்லிவிட்டு சேரதேசம் போய்விடுவார்கள். இருவர் இருவராகப் பிரிந்து பிறகு எங்கேனும் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாகச் சேரதேசம் நோக்கிப் பயணப் படுவார்கள்.”

“அப்படியானால் அந்த நிலங்கள்..”

மறுபடியும் ஒரு வேளாளர் வாய்பிளக்கக் கேட்டார்.

“அமைதி. இந்த ஆவல் காட்டாதீர்கள். சரி என்று சாதாரணமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.”

“ஆமாம்... ஆமாம். அப்படித்தான் செய்ய வேண்டும் ஆனால், மூன்று போகங்கள் விளைகின்ற நிலத்தை விட்டு அந்தணர்கள் போக முடியுமா.”

“உயிர் வாழ்தல் அதைவிடப் பெரிது. இங்கிருந்தால் மானம் மரியாதை போய் விடும் என்று அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் இங்கிருந்து நகர்வதையே விரும்புவார்கள்.”

“ஒரு தேசத்தைவிட்டு அந்தணர்கள் போவது அந்த தேசத்திற்கு நல்லதா, கெடுதலா.”

“இதுவும் நல்ல கேள்வி. யார் ஒரு தேசத்தைவிட்டு புறக்கணித்து நகர்ந்தாலும் அது கெடுதல்தான். இதனால் தேசத்தின்

கட்டுப்பாட்டைக் குலைக்கக் கூடிய காரியத்தைச் செய்கிறவர்கள் விலகியிருப்பதே நல்லது."

"அம்மா. இப்பொழுது நாங்கள் என்ன செய்வது."

"வியர்வை அடங்க ஆற்றில் குளித்துவிட்டு வாருங்கள். சிறிது நாழிகையில் நான் சோறும், குழம்பும் சமைத்து விடுகிறேன். நல்ல வெயிலில் நடந்து வந்திருக்கிறீர்கள். எங்கள் வீட்டில் உண வருந்தி விட்டுப் போகலாம்."

"அம்மா இங்கு வேளாளர்கள் வீட்டில் பார்த்துக் கொள்கிறோமே."

"எங்கள் வீட்டில் இப்படிப் பிரிவினை எல்லாம் இல்லை. இவ்வளவு கொண்டு வந்திருக்கிறீர்களே. உங்களுக்குச் சோறு போடலாகாதா. அதுதானே முறை. அதுதானே மரியாதை. போய்க் குளித்துவிட்டு வாருங்கள். இந்தாருங்கள்... வெறும் வயிற்றோடு குளிக்கப் போகவேண்டாம்."

அவள் கத்தியை எடுத்து தாரிலிருந்து ஒரு சீப்புப்பழம் எடுத்து இரண்டு கைகளாலும் நீட்டினாள். ஒரு வேளாளர் துணியேந்த அந்தத் துணியில் வாழைப்பழச் சீப்பைப் போட்டாள். வேளாளர்கள் சந்தோஷமானார்கள்.

அவர்கள் திரும்பி வரும்போது வைணவதாசன் வீட்டுக்கூடத்தில் உட்கார்ந்திருந்தார்.

அவர்கள் விரைவாக உள்ளே நுழைந்து நெடுஞ் சாண் கிடையாய் நமஸ்கரிக்கும் போது தடுத்தார்.

"வாருங்கள் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன். ஒன்றாகச் சாப்பிடுவோம். அம்மாடி இலை போடு." என்று சொல்ல, அந்த வேளாளர்கள் திகைத்தார்கள்.

அனைவருக்கும் இலை போட்டுப் பரிமாற, கூச்சமாகவும், கவனமாகவும், அதிகம் சப்தம் செய்யாமலும் உணவெடுத்துக் கொண்டார்கள்.

"உப்பு, உறைப்பு சரியாக இருக்கிறதா."

"உங்கள் திட்டப்படி நன்றாக இருக்கிறதம்மா."

"என்ன சொல்கிறீர்."

"எங்களுக்கு இன்னும் உறைப்பு வேண்டும்."

"சரி, மிளகு அரைத்து எடுத்து வரட்டுமா."



"வேண்டாம்."

வைணவதாசன் தடுத்தார்.

"நம் பக்கத்து உணவு எடுத்துக் கொள்ளட்டும். உப்பு உறைப்பில்லாத சாத்வீக உணவு எடுத்துக் கொள்ளட்டும்."

"ஏன் சாத்வீகமான உணவை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள் ஐயா."

வந்திருப்பதில் இளைஞனான ஒரு வேளாளன் பணிவாகக் கேட்டான்.

"இதோ இப்பொழுது உன் கண்களிலிருந்தும், செப்கையி லிருந்தும், குரலிலிருந்தும் வெளியாகின்ற பணிவு சாத்வீக உணவு நிச்சயம் தரும். யார் பணிவோடு இருக்கிறார்களோ அவர்கள் இந்தப் பூவுலகில் நிம்மதியாகவும், நீண்ட நாளும் உயிர் வாழ் வார்கள்."

"அதனால்தான் அந்தணர்கள் இம்மாதிரி உணவை உண்கிறார்களா.'

"ஆமாம். சாத்வீகமான உணவுதான். அந்தணர்களுடைய அடிப்படையான விஷயமாக இருந்தது. இவை எங்கு மறுக்கப் பட்டதோ, இவை எங்கே திசைமாறியதோ அங்கு குழப்பமும், மரணத்திற்கொப்பான வேதனைகளும், அந்தணக் குடும்பங் களுக்கு வந்தன."

"புரியவில்லை ஐயா, இப்போது அந்த அக்ரஹாரத்து அந்தணர்கள் இவ்வளவு பெரிய பேரவஸ்தைப் படுவதற்கு என்ன காரணம்."

"அவர்கள் ஆத்திரமும், கோபமுமே காரணம். அந்த ஆத்திரமும், கோபமும் எங்கிருந்து வந்தன. அவர்கள் உண்ணும் உணவிலிருந்து வந்தன. உப்பும் உறைப்புமாய் நக்கி நக்கித் தின்கின்ற புத்தி எப்போது வந்துவிட்டதோ, எப்போது ருசிக்கு அடிபணிந்து விட்டார்களோ, எப்போது **பிராமணாள் போஜனப் பிரியான்** என்று தங்கள் குறையையே நிறையாக மார்தட்டிக் கொள்ள ஆரம்பித்தார்களோ அப்போது அவர் களுக்குப் பீடை பிடித்தது. உணவிலிருந்து மனம் விலகியிருப்ப வனுக்குத்தான் வாழ்வின் உன்னதம் புரியும். போகத்திற்குத் தூண்டுகின்ற அரசனது உணவை, வைசியனது உணவை இவர்கள் உண்ண ஆரம்பித்தார்கள். குழம்பிற்கு உப்பு, ரசத்திற்கு உப்பு, காய்க்கு உப்பு என்று நக்கியும் வறுத்தும் தின்ன

ஆரம்பித்தார்கள். எண்ணெயில் பொரித்துப் பொரித்து உள்ளே தள்ளினார்கள். பெரும் பிருஷ்டமும், சிறிய மூளையுமாய் மாறிப் போனார்கள்."

வைணவதாசன் சொல்லிவிட்டுத் தலைகுனிந்தார்.

"போதும் எதற்குக் கெட்டவார்த்தைகள்."

வைணவதாசன் மனைவி அதட்டினாள்.

"இல்லை. ஒரு ஆற்றாமைதான். பொது ஜனங்களுக்கு என்ன வேண்டும். என்ன வேண்டும் என்று யோசித்துப் பார்க்கின்ற புத்தி அறவே போய், எவனுக்கும் எந்த உதவியும் செய்ய முடியாது என்று திமிராகக் கொக்கரிக்கின்ற ஒரு நிலைமை வந்து இப்போது அதன் விளைவாய் சாக்கடையில் இறக்கிவிடப்பட்டிருக் கிறார்கள்.

சிற்பிகளுக்கு எதிராக அரசர் ஏதேனும் செய்வாரா. செய்தால் சரிவருமா. மிகப்பெரிய தவறு. பிரம்மதேசமாக உள்ள நிலத்தை இப்போது வேளாண் வகை நிலமாக மாற்றி விட்டார்கள். இது எவ்வளவு பெரிய அவமானம். அக்ரஹாரம் நிராகரிக்கப் பட்டுள்ளது. உங்களுடைய வேதமோ, ஒழுக்கமோ எங்களுக்கு முக்கியமில்லை. வெளியேறு என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். இதை எனக்கு நேர்ந்த அவமானமாகவே நான் நினைக்கிறேன். உள்ளுக்குள் ஒரு கவலை எழுகிறது. தெய்வமே... தெய்வமே என்ன செய்ய நினைத்திருக்கிறாய் என் ஜாதியை என்ற புலம்பல் வருகிறது. ஆனால், முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும் விநாசகாலே விபரீதபுத்தி. அதேநேரம் அந்தணர்களில் வேறு குழு உருவாகிறது. அந்தக் குழு மிக வேகமாக அரியணைக்கு நெருக்கமாக வந்து அமரப் போகிறது."

"யாரைச் சொல்கிறீர்கள்."

வைணவதாசனின் மனைவி ஆவலாகக் கேட்டாள்.

"திருமுனைப்பாடி, தொண்டைநாட்டு, நடுநாட்டு அந்தண இளைஞர்கள் நிர்வாகத்திற்காக உள்ளே வந்துவிட்டார்கள். அவர்கள் நிர்வாகம் செய்வதற்காக வரவில்லை. வேறு வழியின்றி அப்படிச் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று வந்துவிட் டார்கள். சோழதேசத்தின் எந்தப் பகுதிக்கும் செல்ல ஆயத்தமாகி விட்டார்கள். வேதம் படித்துத் தெளிந்த புத்தியை மந்திரங்கள் ஜபித்து ஏற்பட்ட கெட்டிக்காரத்தனைத்தை நிர்வாகத்திற்குப் பயன்படுத்தப் போகிறார்கள். இதனால் வேதப்படிப்பும், மந்திர



ஜபமும் மெல்லமெல்ல பல தலைமுறைகளுக்குப் பிறகு அவர்கள் கை விட்டுப் போகும். ஆனாலும் இன்னும் ஒரு அறுபது, எழுபது தலைமுறை மிக நிச்சயமாய் மிகச் சந்தோஷமாய், மிகக் கம்பீரமாய் வாழும். இந்தத் தஞ்சை அந்தணர்களை, வைதீகர்கள் என்று புறந்தள்ளிவிட்டு வாழ்வார்கள். இதனால் புறக்கணிக்கப் படுவது வெறும் மனிதக் கூட்டமல்ல. பரதகண்டம் பரம்பரை பரம்பரையாக வளர்த்த வேத விஷயங்கள். முனிவர்களும், ரிஷிகளும் கண்டு பிடித்த அற்புதமான விஷயங்கள் கைவிட்டு நகரப் போகின்றன. தொலை தூரத்தில் இமயமலைச் சாரல்களில் யவனர்கள் வந்து குடியேறுவதாகவும் அங்கு ஆட்சியைப் பிடிக்க முயற்சி செய்வதாகவும் அறிகிறேன். அது பலப்பட்டால், அது பரவினால் குமரிமுனை வரை யவனர்களுடைய கத்தி பாயும். அப்போது இம்மாதிரியான விஷயங்களெல்லாம். நசுக்கப்படும். வேதம் என்பது வெறும் இறைவன் துதியிலா இல்லையே. அதில் வைத்தியம் இருக்கிறது. வானசாஸ்திரம் இருக்கிறது. ஜோதிடம் இருக்கிறது. சமூக ஒழுக்கம் இருக்கிறது. இவையெல்லாமே வேத விஷயங்களிலிருந்து விலகி விடும். நன்றாக வாழ வேண்டிய ஒரு அந்தணக்கூட்டம், பரத கண்டத்தைத் தூக்கி நிலை நிறுத்த வேண்டிய ஒரு உன்னதமான குழு சிதறிப் போகிறதே.. உணவு ருசியில் அரச போகத்தில் ஈடுபட்டு தன்னை அழித்துக் கொள் கிறதே என்ற வேதனை வருகிறதே.. எப்பேர்பட்ட ஒரு கால மாற்றத்தில் இருக்கிறோம் என்று பயமும், வேதனையும் வருகின்றன. இதைத் தடுக்க முடியவில்லையே என்கிற கவலை ஏற்படுகிறது."

"எப்படித் தடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்."

மனைவி கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

வேளாளர்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

"மன்னர்களால்தான் அந்தணர்களை வாழ்விக்க முடியும். அரசர்களை அனுசரித்துப் போனால்தான் அந்தணர்கள் சிறக்க முடியும். வேளாளர்களைப் பாராட்டினால்தான் எல்லா ஜாதி யினரும் சிறக்க முடியும். வைசியர்களை ஊக்குவித்தால்தான் இந்த விஷயம் வலிவு பெறும். நான்காவது வர்ணத்தினரின் சுக துக்கங்களைப் புரிந்து கொண்டு அவர்களைக் கொண்டாடினால் தான் இது சிறப்பாக அமையும். ஐந்தாவது வர்ணத்தினரை ஆதரித்து, போற்றி 'நீ இல்லையெனில் நான் இல்லை' என்று சொல்லி அவர்களை இழிவுபடுத்தாது, புறக்கணிக்காது பெருங்

குடி மக்கள் என்று போற்றி வாழ்ந்தால்தான் எல்லா ஜாதியும் நிறைவு பெறும். நான் மட்டுமே உயர்ந்த ஜாதி, மற்றவரெல்லாம் என் காலுக்குக் கீழ் என்று எவர் நினைப்பினும் அழிவர். எனவே, இந்த ஜாதிப்பிரிவுகளை இறுக்கமாக இணைத்து நமக்குள் பேதமில்லை என்கிற விஷயத்தை உறுதிப்படுத்த வேண்டும்.”

“யார் செய்வது? யாருடைய வேலை இது?”

மடங்களுடைய வேலை, மடாதிபதிகளுடைய வேலை. ஞானிகள் வேலை. அறிவாளிகள் வேலை. ஏன் அரசருடைய வேலையும் இதுவே.”

“ஞானிகள் என்றால் யாரைச் சொல்கிறீர்கள்.”

“கருவூர்த்தேவரைச் சொல்கிறேன். ஈசான சிவபண்டிதர் போன்ற ஆச்சார்யாரைச் சொல்கிறேன். நமது அரசர் காதுகளில் இம்மாதிரியான விஷயங்கள் பேசப்பட வேண்டும். அவரை யோசிக்க வைக்க வேண்டும் என்று சொல்கிறேன்.”

“ஹா… நீங்கள் சொல்வது மிக நன்றாக இருக்கிறது. மிக அற்புதமான புத்திசாலியை நான் புருஷனாகக் கொண்டிருக்கிறேன் என்று எனக்குச் சந்தோஷம் ஏற்படுகிறது. ஆனால், இது தனி மனிதருடைய காரியமன்றே. ஒரேயொரு மனிதர் மட்டும்.. நீங்கள் மட்டும் இதைச் செய்துவிட முடியாது. இறைவன் கருணை இந்தப் பக்கம் இருப்பின், அரசர் காதில் இது விழுந்து, ஈசான சிவபண்டிதரோடு பேசி, கருவூர்த்தேவர் முன்னால் சொல்லப்பட்டு, இதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்று நினைக்கிறேன். இதற்காக நான் தினமும் மந்திரஜபம் செய்யப் போகிறேன். கிருஷ்ணரை நமஸ்கரிக்கப் போகிறேன். ‘ஓ… கிருஷ்ணா இடைக்குலத்தில் பிறந்த நீ. இந்து மதத்தைச் தழைக்கச் செய்யவில்லையா. அதேபோல நாங்கள் எல்லோரும் வாழ்வதற்கு உதவி செய். எங்கள் கண்களைத் திற. எங்களை அன்பாக்கு’ என்று வேண்டிக் கொள்ளப் போகிறேன்.”

உணர்ச்சிவசப்பட்டு வைணவதாசனின் மனைவி சொல்ல, வைணவதாசன் அவளைப் பார்த்து கை கூப்பினான்.

வேளாளர்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“என்ன சாப்பிடவில்லையா.”

வைணவதாசன் திடுக்கென்று கேட்டான்.



“நிறைந்துவிட்டதய்யா.”

“என்னது..”

“வயிறு, மனம், புத்தி எல்லாம் நிறைந்துவிட்டன எவ்வளவு அற்புதமாகப் பேசுகிறீர்கள். எங்கள் பெண்களை எப்படி நடத்த வேண்டுமென்று நான் தெரிந்து கொண்டேனய்யா. இதைப் போய் நிச்சயம் எங்கள் ஊரில் உள்ளவரிடம் சொல்வேன். எங்கள் வேளாளக் குடும்பங்களில் பெண்களைப் பேச விடுவதில்லை. பெண்களோடு நாங்கள் விவாதிப்பதில்லை. அவர்களை போகத்திற்காகவும், கூடமாட வேலை செய்வதற்காகவும்தான் வைத்துக் கொள்கிறோமே தவிர அவர்களோடு ஆலோசனை செய்வதேயில்லை. அவர்களை அடக்கி வைத்திருக்கிறோம். இப்போது நீங்கள் பேசும்போது எங்கள் பெண்டுகளை எப்படிக் கொண்டாட வேண்டுமென்று எங்களுக்குத் தெரிகிறது. என்ன நான் சொல்வது.” என்று நண்பர்களைப் பார்க்க, அவர்கள் தலையை ஆட்டினார்கள். வேகமாய்ச் சாப்பிடத் துவங்கினார்கள்.

கூழாங்கல் ஒன்று புரண்டு வேறுதிசை நோக்கி நகர. சோழதேசத்தின் தலையெழுத்தும் மெல்ல மாறுகின்ற காலம் வந்துவிட்டது என்று வைணவதாசன் நினைத்தான்.

அவர்கள் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டார்கள். வாழைத்தாருக்கும், காய்கறிகளுக்கும் பொற்காசு கொடுக்க வைணவதாசன் முனைந்தபோது வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள்.

“இப்போது என்னுடைய அபிப்ராயப்படி நீங்கள் எதிலும் ஈடுபடாமல் மௌனமாக இருப்பதே நல்லது. மூவேந்த வேளார் உங்களுடைய பிரதிநிதி அல்லர். கருமார்கள் இராஜேந்திரரை நேரடியாக அணுகியது போல நீங்கள் இராஜேந்திரரை நேரடியாக அணுகலாம். அவரிடம் மனம்விட்டுப் பேசலாம். அரசரிடம் கூட உரையாடலாம். பஞ்சவன்மாதேவியோடு உங்கள் அபிப்ராயங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். அவர்கள் யாருமே பேசுவதற்கும், பழகுவதற்கும் எளியவர்கள். அரசரைக் கண்டு ஒரு நாளும் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. என்னுடைய அபிப்ராயப் படி அந்த ஊர் வேளாண் வகை நிலமாக மாற்றப்பட்டு அந்த நிலங்கள் உங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். பகிர்ந்தளிப்பதை வேறு எவரிடமும் விடாமல் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். ஒற்றுமையாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்.”

"அந்தணர் சாபத்திற்கு ஆளாவது நல்லதா."

"ஒரு சாபமும் இல்லை. இப்பொழுது சாபம் அந்தணர்களுக்குத்தான் இருக்கிறது. உங்களுக்கில்லை. எனவே தைரியமாக அந்த நிலங்களை ஆக்ரமித்துக் கொள்ளுங்கள்."

"பதிலுக்கு அரசருக்கு ஏதாவது செய்ய வேண்டாமா. அற்புதமான விளை நிலங்களைக் கொடுக்கிறாரே. அவருக்கு வேறு ஏதும் செய்ய வேண்டாமா."

"அப்படிக் கொடுத்தபிறகு இந்த நிலங்கள் உங்களுக்குச் சொந்தமானவை என்று சொன்ன பிறகு, அரசே உங்களுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும், எதையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று அரசரைப் பார்த்துச் சொல்லுங்கள். அரசர் நெகிழ்ந்து விடுவார். நமது சக்ரவர்த்தியைப் போல எளிமையானவர், இனிமையானவர் யாரும் இல்லை. யார் சொன்னாலும் அதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டு, எல்லோருடனும் சிரித்துப் பழகிக் கொண்டிருப்பார். ஆனால், உள்ளுக்குள் அவருக்கு என்ன வேண்டும் என்று நினைக்கிறாரோ அதை நிறைவேற்றுவார். அரசருடைய அரசவை முகம் வேறு. அந்தப்புரத்து முகம் வேறு. நண்பர்களோடு முகம் வேறு. யுத்த களத்தில் அவர் முகம் வேறு. மிகுந்த ஆக்ரோஷமாய், வெறி பிடித்தவராய் யுத்த களத்தில் புகுந்து எதிரிகளை அடித்துத் துவைத்து முன்னேறிப் போகின்ற வேகத்தைப் பலமுறை பார்த்திருக்கிறேன். எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது. அப்போது நான் இளைஞன், திருமணமாகாதவன். சுமார் பதினைந்து வயதிருக்கும். காந்தளூர்ச்சாலைக்கு எங்கள் குருநாதர் ஐயன் கிருஷ்ணன் ராமனோடு போயிருந்தேன். பிரம்மராயர் அவர்களுக்கு ஆயுதம் எடுத்துக் கொடுப்பதற்காக ஒரு தனி வண்டி அமர்த்தி, அந்தத் தனிவண்டியில் விதம்விதமாக ஆயுதங்கள் ஏற்றி, அந்த வண்டியை நான் ஓட்டிக் கொண்டு போனேன். பிரம்மராயருக்கு அருகே இருந்ததால் அரசருடைய நடவடிக்கைகளை என்னால் கவனிக்க முடிந்தது. காந்தளூர்ச்சாலை கடிகையை அவர் வெறிபிடித்துத் தாக்கியவிதம் சக்ரவர்த்தி யார் என்று காட்டியது. இந்தச் சோழதேசம் மிகச்சிறப்பான இடத்திற்கு வரப்போகிறது என்கிற நம்பிக்கையை அந்தப் போர் கொடுத்தது.

போர் மட்டுமே இவருக்கு விருப்பமான வாழ்க்கையாக இருக்குமென்று நினைத்திருந்தேன். ஆனால் அமைதியான காலத்தில் அவர் செய்கின்ற வேடிக்கைகளும், சல்லாபமும், விசாரிப்புகளும் என்னைக் கிறங்கடித்துவிட்டன. நமது சக்ரவர்த்தி



உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் எல்லாம் அறிந்தவர். சகலமும் தெரிந்தவர். அவருடைய ஒற்றர் படை மிகப்பெரியது. யார் அவருடைய ஒற்றர் என்று யாருக்கும் தெரியாது. என்னைப் பற்றி ஊரிலுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் தெரியும். அப்புறம் நான் என்ன ஒற்றன்."

வேளாளர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"உங்கள் வழிகாட்டலுக்கு நன்றி. இந்த உதவியை மறக்கவே மாட்டோம். நீங்கள் சொல்லுவதுபோல இந்த காலகட்டத்தில் எந்த அதிகப்பிரசிங்கித்தனமான பேச்சும் இல்லாமல் அமைதியாய் இருக்கவேண்டும் என்பதை நன்றாய்ப் புரிந்து கொண்டோம். நிலம் எடுத்துக் கொண்டா வந்தோம். நிலம் எடுத்துக் கொண்டு போவதற்கு.. அந்தணர் நிலம் எங்களுக்குக் கிடைத்தால், இன்னும் ஆழ உழுது, நிறைய பயிர் செய்து, எல்லார் பசியையும் போக்க முடியும். காவிரித்தாயின் கருணை, வருணபகவானின் அன்பு இருக்கையில் நிலம் இன்னும் நன்கு விளையும்."

அவர்கள் விடை பெற்றுப் போனார்கள்.

வைணவதாசன் ஓலை நறுக்கு எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, 'வேளாளர்கள் நிலம் பெற விருப்பமாய் இருக்கிறார்கள். அரசருக்கு உதவி எவ்விதம் செய்ய என்று கேட்கிறார்கள். அந்த பிரம்மதேசத்தை வேளாண் வகையாக மாற்றுவது சிறப்பு."

எழுதி குழலில் வைத்து குழலை இறுக்கக்கட்டி அதன் மீது முருங்கைப்பிசின் கலந்த களிமண் பதித்துத் தன்முத்திரையை வைத்தார்.

பழமர்நேரி கிராமத்து மறவர் இளைஞனை அழைத்து இதைக் கொண்டு போய் பிரம்மராயரிடம் கொடு என்று சொன்னார்.

"ஊரில் எல்லோரோடும் பேசுகிறேன். உன்னோடு பேசி எத்தனை நாளாயிற்று. வா! உட்கார். நம்மைப் பற்றி பேசுவோம்." என்று சொன்னான்.

"மருவூரிலிருந்து குழந்தைகள் நாளை வருகிறார்கள். வேத அத்யயனம் முடித்து விட்டார்கள். மேற்கொண்டு என்ன செய்வது என்று என் தந்தை கேட்கிறார். உங்கள் மூத்த மகன் ஒற்றனாக வேண்டுமென்று ஆசைப்படுகிறானாம். இன்னொருவனுக்குச் சிற்பியாக வேண்டுமென்று எண்ணம் இருக்கிறதாம்.

இப்பொழுதே களிமண் பொம்மைகளையெல்லாம் செய்கிறானாம். நித்த வினோதப் பெருந்தச்சன் என்றொருவர் இருக்கிறாராம். அவரிடம் போய் வித்தைகள் கற்றுக்கொள்ள வேண்டுமாம்."

"அடேயப்பா... நித்த வினோதப் பெருந்தச்சன் பற்றி அவ்வளவு தூரத்திற்குப் போய்விட்டதா. அந்தணர்கள் ஓலை ஏந்தி கணக்கெழுதும்போது சிற்பம் செய்தால் என்ன. தவறாகவா போகும் பொம்மைகள் செய்ய ஆசைப்படும் இரண்டாவது மகனை அதர்வண வேதமும் படிக்கச் சொல்."

"ஏன். எதற்கு அவனை அதர்வண வேதத்தில் விடுகிறீர்கள்."

"இதற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. பெண்களைக் கவரவும் பெண்களால் ஏற்பட்ட எதிரிகளைத் தொலைக்கவும், பொருள் அதிகம் கிடைக்கவும், அதர்வண வேதத்தைப் பயன்படுத்தி உதவி செய் என்று அந்தணர்களை மற்றவர்கள் கேட்கப் போகிறார்கள். அப்படிச் செய்யும் அந்தணர்களுக்கு மதிப்பும், மரியாதையும், கௌரவமும், பொருளும் வெகு நிச்சயம் கிடைக்கும்."

"மூத்தவனை என்ன செய்யப் போகிறீர்கள்."

"அவன்தான் ஆசைப்படுகிறானே ஒற்றனாக வேண்டுமென்று."

"போதும். உங்களோடு அந்த வாழ்க்கை போதும்."

"இல்லை இது தொடரும். இராஜேந்திர சோழருக்குத் திறமை மிக்க அந்தணருடைய புத்திக் கூர்மையோடு கூடிய ஒரு ஒற்றன் தேவைப்படுகிறது. அவனை நான் அருண்மொழிப் பட்டனிடம் அனுப்பப்போகிறேன். அருண்மொழிப்பட்டன் மிகக் கெட்டிக்காரன். இப்போது இருக்கின்ற பிரம்மராயரான என் குரு கிருஷ்ணன்ராமனையும் விடக் கூர்மையானவன். அருண்மொழியின் துணையில் சோழதேசம் இன்னும் உச்சாணிக்கிளைக்கு வரும். இராஜேந்திர சோழருடைய வலிவு பரத கண்டம் முழுக்கவும் தெரியவரும். கங்கைக்குப் போக வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு இருக்கிறது. அப்படியானால் என் மகனும் போவானல்லவா. இப்பொழுது இல்லையாயினும் இன்னும் பதினைந்து இருபது வருடம் கழித்து அவன் கங்கைக் கரைக்குப்போய் என் தாய் தந்தையருக்கு ஸ்ரார்த்தம் செய்வானல்லவா. அப்பேர்பட்ட பாக்கியத்தை அவனுக்குக் கொடுக்க நான் விரும்புகிறேன். அவன் அரசியலில் பிரவேசிப்பது நல்லது. ஒற்றனாக இருப்பது உத்தமம்."



"கங்கைக்கரைக்குச் சாதுக்கள்கூட போய் வருகிறார்களே."

"அல்ல. இனி சாதுக்கள் போக முடியாது என்று தோன்றுகிறது. வாள் முனையில்தான் கங்கைக் கரைக்குப் போக முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. யவனர்கள் மெல்ல மெல்லக் கணவாய்களின் வழியாக ஐந்து நதிகள் கொண்ட பிரதேசத்தைத் தாண்டி உள்ளுக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் சாதுக்களை அனுமதிக்க மாட்டார்கள். எனவே நமது வம்சத்தில் கங்கைக் கரைக்குப் போகின்ற பாக்கியத்தை அவன் அடையட்டும். அவன் படித்த வேதம் அங்கே மிகுந்த மரியாதைக்கு உள்ளாகும். போகின்ற வசதியை நமது இளவரசர் இராஜேந்திரர் செய்து தருவார். துணைக்கு அருண்மொழிப்பட்டன் இருக்கிறார். ஒருவேளை நான் இறந்தாலும் என் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு என்னை நினைத்துக் கங்கையில் தலை மூழ்குவான் அல்லவா."

வைணவதாசன் அடிக்குரலில் சொல்ல, அவன் மனைவி நிமிர்ந்து பார்த்தாள். அவனையே உறுத்துப் பார்த்தாள்.

"ஏன் உங்களுக்கு மட்டும் கங்கை ஜலம். எனக்கு ஆகாதா. நீங்கள் இறந்த அடுத்த அரை நாழிகையில் நானும் இறப்பேன் என்று உங்களுக்குத் தெரியாதா. எனவே அவன் கங்கைக் கரைக்குப் போவது பற்றி எந்த ஆட்சேபணையும் இல்லை. எனக்கும் சேர்த்தும் அவன் நீர் வார்க்கட்டும்" என்று சொன்னாள்.

"என்ன சொன்னாய்? நீயும் இறந்து விடுவாயா. அப்பொழுது குழந்தைகள் என்ன ஆவார்கள். எவ்வளவு கல் நெஞ்சுக்காரியடி நீ."

"ஆமாம். ஒற்றனின் மனைவியான பிறகு ஓவென்று அழுதால் நான் பைத்தியம் பிடித்தல்லவா சாவேன். உங்களைப் போலவே நானும் மனத்தைக் கல்லாக்கிக் கொள்ளவும், ஏன் இரும்பாக்கிக் கொள்ளவும் பழகி விட்டேன். நீங்களன்றி இவ்வுலகத்தில் எனக்கு எதுவுமில்லை. உங்களுக்குச் சோழதேசம் முக்கியமல்லவா. எனக்கும் சோழதேசம் முக்கியம். உங்களுக்குச் சக்ரவர்த்தி முக்கியமா, எனக்கும் சக்ரவர்த்தி முக்கியம். உங்களுக்குக் குழந்தைகள் முக்கியமா, எனக்கும் குழந்தைகள் முக்கியம். உங்களைத்தவிர, வேறு எது பற்றியும் நான் சிந்திப்பதில்லை. வீட்டை விட்டு நகராமல் பல அந்தணர்கள் சத்திரத்தி

லேயும், திண்ணையிலேயும் பொழுதைக் கழித்திருக்க, என் புருஷன் காடு மலையெல்லாம் வெயிலில் சுற்றிக் கொண்டிருக்கிறாரே என்ற வேதனை மட்டும் அடி நெஞ்சில் உண்டு. ஆனாலும், உங்களுடைய சிறப்புக்காக நீங்கள் இதைச் செய்கிறீர்கள். உங்களை இதற்காக ஊரும் அரசும் கொண்டாடுகிறது என்பதால் அது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது.

"புருஷனுக்கு எண்ணெய் தேய்த்துவிட்டுக் கையே தேய்ந்து போய்விட்டது என்று இந்த அக்ரஹாரத்தில் ஒரு பெண்மணி அலட்டிக் கொள்கிறாள். தினமும் வாசலைப் பிடித்துப் பிடித்தே என் கைகள் தேய்ந்து போயிற்று என்றுநான் நினைத்துக் கொள்கிறேன். இந்த மாதத்தில் இதோ இது மூன்றாவது முறை நீங்கள் வீட்டில் உணவு எடுத்துக் கொள்கிறீர்கள். நாளை புது மாதம் பிறக்கப் போகிறது. அடுத்த மாதம் நீங்கள் எத்தனை முறை அகத்தில் உணவு உண்பீர்கள்? யாருக்குத் தெரியும்?

"இது பற்றியும் எனக்குக் குறையில்லை. ஏனெனில் உங்களுக்கு விருப்பமானதை நீங்கள் செய்கிறீர்கள். உங்களுக்கு என்ன விருப்பமோ அதுதான் எனக்கு விருப்பம். இதில் இன்னொரு விஷயம் இருக்கிறது. இவ்வளவு கொண்டாடுவதற்குண்டான தகுதி உங்களுக்கு உண்டு. இந்த ஊரும் உலகமும் சிறப்படைய ஓயாது உழைக்கின்ற என் புருஷனுக்காக நான் தவமிருப்பேன்."

அவள் மேற்கொண்டு ஏதோ சொல்லப் போக வைணவதாசன் மனைவியின் வாயை மெல்ல விரல் வைத்து அடக்கினான்.

"இதைக்கூட நீ சொல்ல வேண்டாம். இதுதான் நீ என்று எனக்குத் தெரியும். உலகத்தில் எல்லோரும் தினமும் எண்ணெய் தேய்த்துக் குளித்து நீராடிக் கொண்டிருக்க முடியாது. பலபேருக்காக ஒரு சிலர் ஓயாது ஓடத்தான் வேண்டும். ஒரு குதிரை வண்டியின் எல்லா பாகங்களும் பூமியில் தேய்ந்தால் வண்டி ஓடாது. இரண்டு சக்கரங்கள் மட்டுமே பூமியில் படுவதுதான் அழகு. அப்போதுதான் ஓட்டம். நகர்தல் நடக்கும்."

எங்கோ பார்த்தபடி வைணவதாசன் சொல்ல, அவன் மனைவி மெல்ல வந்து அவன் தலையைக் கோதிவிட்டாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

"நீங்கள் சக்கரம். நான் யார்.."

காதோரம் கேட்டாள்.



"நீ அச்சாணி. நான் இடம்விட்டு நகராது இருக்கப் பிடித்திருக்கின்ற ஆதாரம் நீ."

வாசலில் நிழல் தெரிந்தது. யாரோ படியேறும் ஓசை கேட்டது.

அவர்கள் சட்டென்று விலகிக் கொண்டார்கள்.

"வேளாளர்கள் மறுபடியும் வருகிறார்கள்.." கேட்டபடியே வைணவதாசன் எழுந்தான். உள்ளே ஆஜானுபாகுவாய் கருவூர்த்தேவர் நுழைந்தார்.

"ஜெய் விஜயீபவ நலமா வைணவதாசா. அன்னை பராசக்தி உன்னைக் காக்கட்டும். தென்னாடுடைய சிவன் உன்னைக் காக்கட்டும். இந்த வீட்டில் எல்லா வளமும் பெருகட்டும் தாயே எப்படியிருக்கிறாய்."

எந்த வரவேற்பும் இல்லாது உள்ளே நுழைந்தார்.

அவர்கள் வாயடைத்துக் கிடந்தார்கள்.

வைணவதாசனின் மனைவிக்கு உடம்பு மெல்ல ஆடிற்று.

"நீங்கள் எப்படி இங்கே திடீரென்று? ஊருக்குள் நுழைவதை யாரும் பார்க்கவில்லையா? யாரும் பார்ப்பதற்கு முன்னரே நுழைந்துவிட்டாரா. எவ்வளவு பெரிய மனிதர். எந்த வரவேற்பும் இல்லாமல் சாதாரணமாக வீட்டுக்குள் நுழைகிறாரே."

வியப்போடு பார்த்தாள்.

"தாயே... நான் பித்தன். பிச்சைக்காரன். எனக்கு எந்த மரியாதையும் தேவையில்லை. ஊர்வர முரசறைந்து எக்காளம் ஊதி என்னைக் கூப்பிட வேண்டுமென்று அவசியமில்லை. நான் சாதாரணன் தாயே. அப்படி இருக்கவே விரும்புகிறேன். அப்பொழுதுதான் இந்த உலகத்தின் எந்த மூலைக்கும் நான் போய்வர முடியும்."

வைணவதாசனின் மனைவி சுதாரித்துக் கொண்டாள்.

இவர் சித்த புருஷர். வானத்தில் நடப்பவர். காற்றில் காணாமல் போய், பிறகு வேறு ஒரு இடத்தில் தோன்றுபவர். இவரால் எல்லாம் இயலும். நம்மைப் போல இவரை ஒரு மனிதராக நினைத்துக்கொண்டு சாதாரண ஜீவியாக நினைத்தது தவறு. இவர் ஒரு காரணமாக இங்கு வந்திருக்கிறார். ஏதோ முக்கிய காரியமாக வந்திருக்கிறார் என்று புரிந்து கொண்டாள்; சிரித்தாள்.

'வருக... வருக..." என்று கைகூப்பித் தலை வணங்கி வரவேற்றாள். வீட்டிற்குள் ஓடிப்போய் மிகப்பெரிய தாம்பாளத்தைக் கொண்டு வந்து கோலமிட்டு, அதற்கெதிரே மர ஆசனம் வைத்து, அவரின் கால் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டு, கைபிடித்துக் கொண்டு வந்து ஆசனத்தில் அமர வைத்தாள். இரண்டு கால்களையும் தாம்பாளத்தில் பதிய வைத்தாள்.

"உங்கள் கால்களைக் கழுவி பூஜை செய்ய விரும்புகின்றேன். அனுமதிக்க வேண்டும்." கை கூப்பிக் கேட்டுக் கொண்டாள்.

"வைணவ சம்பிரதாயம் உடையவர்கள் இதைப் போல பித்தனை, பிச்சைக்காரனையெல்லாம் வழிபட மாட்டார்கள். எங்கும் நிறைந்த பரம்பொருளை நாராயணா என்று அழைப்பார்கள். அவரை மட்டுமே வணங்குவார்கள்."

"எப்போதும் நீங்கள் எனக்கு நாராயணர்தான். ஸ்ரீ கிருஷ்ணன்தான். கிருஷ்ணா.. உன் பாதபூஜைக்கு அனுமதி கொடு." என்று வேண்டினாள்.

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

"நல்லது. நடக்கட்டும்.."

அவள் சொம்பிலிருந்து நீர் எடுக்க, வைணவதாசன் கால் கழுவினான். வலக்காலில் சந்தனமிட்டான். குங்குமம் வைத்தான். மலர் தூவினான். கைகளால் அவர் தலையில் பூக்களைச் சொரிந்தான்.

சூடான பசும்பாலை ஆற்றி நுரைபொங்க அவரிடம் நீட்டினான். அவர் வாங்கிக் கொண்டார்.

"வைணவதாசா... எங்கோ உறங்கிக் கொண்டிருந்த எனக்குள் உன் குரல் கேட்டது. உன் கவலை தொட்டது. அதனால் இங்கு வந்துவிட்டேன்." என்று பூடகமாகப் பேசினார்.

"சொல்லுங்களய்யா... நான் என்ன பேசிக் கொண்டிருந்தேன்."

"உனது சமுதாயம் இன்னும் கட்டுப்பாடாய் உறுதியாய் இருக்க வேண்டும் என்று கவலைப் பட்டாயே.. அது என்னை அசைத்துவிட்டது. உன்னைப் பார்க்க ஓடோடி வந்துவிட்டேன். இந்த தேசத்தில் சரியாகச் சிந்திக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று மிகுந்த சந்தோஷத்தில் வந்துவிட்டேன். வைணவ தாசா வெகு காலத்திற்கு முன்பு தொழில் முறையில் பிரிக்கப்பட்ட



இந்த மனிதர்கள். இப்போது தேவையில்லாமல் உயர்வு, தாழ்வு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். வெறும் கர்வத்தால் கலகம் செய்கிறார்கள். இந்தக் கலகம் ஆரம்பித்தது இரண்டு மூன்று புத்தியில், கிரகங்களின் கோளாறான நேரத்தில் பிறந்த அந்த மனிதர்கள், ஒரு சமுதாயத்தையே ஆட்டிப்படைக்க நினைக்கிறார்கள்."

"நீங்கள் சொல்வது உண்மை. அந்தணர்களின் போக்கு விசித்திரமாகத்தான் மாறிவிட்டது."

"ஏன் அந்தணர்களை மட்டுமே குறை சொல்கிறாய். க்ஷத்திரியர்கள் என்ன சளைத்தவர்களா. அவர்களிலும் கோளாறான நேரத்தில் பிறந்தவர்கள் உண்டு. என்றைக்கு ஆதித்த கரிகாலன், படுத்திருக்கின்ற வீரபாண்டியனின் தலையைக் கொய்து, தஞ்சாவூர்க் கோட்டை வாசலில் நட்டானோ... அன்றைக்கே க்ஷத்திரியர்களுடைய அவமானமான காலம் துவங்கி விட்டது. அந்த வீரபாண்டியன் செய்ததும் தவறு. அந்த மதுரைக்காரன் நின்று சண்டையிட்டிருக்கலாம். போரில் வீர மரணம் எய்தியிருக்கலாம் அல்லது சிறைப்பட்டிருக்கலாம் அல்லது சோழதேசத்தின் எல்லைக் கிராமங்களைச் சூறையாட மாட்டேன் என்று ஒப்பந்தம் பேசியிருக்கலாம். எல்லாம் விட்டு விட்டு ஏதோ ஒரு காலத்தில் நான் சோழதேசத்தை முழுவதும் கை பிடிப்பேன் என்ற எண்ணத்தில் அடிபட்டு வலி தாங்காமல் காட்டுக்குள் போய் ஒளிந்து கொண்டான். அவன் ஆபத்துதவிகள் சேரதேசத்து நம்பூதிரிகள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் உங்களை நம்பிப் புண்ணியமில்லை என்று சொல்லி உதறிவிட்டு ஓடி விட்டான். போரில் வெற்றியும், தோல்வியும் சகஜம் என்பது அவனுக்குப் புரியவில்லை. தன்னை நம்பாமல் சேரதேசத்து நம்பூதிரிகளை நம்பியது பிசகு என்ற எண்ணத்தில் சேரதேசத்து நம்பூதிரிகள் கவிழ்த்து விட்டார்கள் என்ற ஆத்திரத்தில் அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென்ற கோபத்தில் ஓடிப் போய் ஒளிந்து கொண்டான். வெட்டுப்பட்ட காயம் சீழ்பிடித்து ஜுரம் வந்து அனத்திக் கிடந்தான். அவன் இருக்கும் இடத்தைக் காட்டுவாசி காட்டிக் கொடுத்தான். நான் அப்போது திருவாரூரில் இருந்தேன். என்னால் உண்ண முடியவில்லை. உறங்க முடியவில்லை. வீர பாண்டியனை ஆதித்த கரிகாலன் தேடிக்கண்டு பிடித்து விடக் கூடாது என்று நினைத்தேன். அந்தக் காட்டுவாசிக்கு வழி மறந்து போகும்படி என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்தேன். ஆனால் விதி வலிது. என்னிலும் வலிது. கடவுள் எம்பெருமான் என் சிவன் என்னைச் சும்மாயிரு என்று

அடக்கிவிட்டார். அந்தக் காட்டுவாசி ஏமாற்றுகிறான் என்று சொல்லி அவரைச் சோழவீரர்கள் சவுக்கால் அடித்தார்கள். விதி திசை திரும்பி ஆதித்த கரிகாலனை வீரபாண்டியனிடம் அழைத்துப் போய் விட்டது. ஆதித்தகரிகாலன் வீரபாண்டியனைப் படுக்கையிலேயே கொன்றான். கோழைத்தனமாய் போர்விட்டு ஓடிய வீரபாண்டியனுக்குக் கோழைத்தனமான முடிவு கிடைத்தது. கையில் வாளின்றி ஜுரத்தில் அனத்தி வருபவனைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் தடுமாறும் ஒருவனைப் பாய்ந்து ஒரு கோழை வெட்டிக் கொன்றான். வைணவதாசா பரதகண்டத்தின் விதி இங்கே மாறிற்றடா. இதுபோல் பல இடங்களில் தவறுகள் நிகழ்ந்து விட்டன. இதன் தொடர்பாக நடந்தவைகளை வரிசைப்படுத்திப் பார். விதியின் கோர விளையாட்டு உனக்கும் புரியும். அப்படிக் கொன்ற வீரபாண்டியனைச் சேரதேசத்து நம்பூதிரிகள் அதாவது பாண்டியனின் ஆபத்துதவிகள் எப்படியாவது கொல்வோம் என்று சபதம் செய்தார்கள். சோழ தேசத்திற்குள் ஊடுருவினார்கள். தங்கள் வாழ்க்கை முழுவதும் ஆதித்த கரிகாலனைக் கொல்வதற்காகவே என்று உணர்வு கொண்டு அதற்கான திட்டங்கள் வகுத்து ஆதித்தகரிகாலனைத் தொடர்ந்து போய் அவனை விதம்விதமாய் அடித்துக் கொன்றார்கள். எவ்வளவு மோசமான மரணம். எவ்வளவு கேவலமான முடிவு. நான் துடித்துப் போனேன்.

இதனுடைய முடிவு என்ன. அருண்மொழி கோபம் கொண்டான். அவனும் திட்டமிட்டான். அவனும் காய்கள் நகர்த்தினான். அவனும் யார் என்று பதினாறு வருடங்கள் சோழ தேசம் முழுவதும் தேடினான். இவர்கள்தான் என்று தெரிந்து கொண்டும் வளர விட்டான். சேரதேசத்து நம்பூதிரிகள் கூட்டம் உள்ளே நுழைந்தது. சிதம்பரத்தை வலுவாகப் பிடித்துக் கொண்டது. ஏற்கனவே, சிதம்பரத்து தீட்சிதர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு வாழ்கிறவர்கள். அந்தத் தனிமைப் படுத்திக் கொண்ட தீட்சிதர்களுக்கு நடுவே இவர்கள் போய் அமர்ந்து கொண்டார்கள். சட்டதிட்டங்களை இன்னும் கடுமையாக்கினார்கள். அந்தணர்களே உயர்வு என்று கொண்டாடினார்கள். அந்தணர்கள் ஆயுதம் ஏந்த வேண்டுமென்று பயிற்சி கொடுத்தார்கள். அமைதியாக இருக்க வேண்டிய அந்தணன் ஆயுதம் ஏந்தினான்.

சேரதேசத்தில் ஜனத்தொகை குறைவு. ஊருக்குள் ஒற்றுமை குறைவு. ஒவ்வொரு சேரனும் தன்னை மகாமந்திரியாக, சக்ரவர்த்



தியாக நினைத்துக் கொண்டு நெஞ்சு நிமிர்த்திக் கிடப்பான். அதனால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய வகைக்கு அவன் தள்ளப்பட்டான். அவன் ஆயுதம் ஏந்தினான். அடுத்த வீட்டுக்காரனோடு அடித்துக் கொண்டான். ஆனால், நாம் அவ்விதமில்லை. நாம் குழுக்களாகப் பிரிந்தவர்கள். தனித்தனி மனிதனாகப் பிரிவதேயில்லை. ஒருவர் சீறினாலும் மற்றவர் அவனை அடக்கி நிதானத்திற்குக் கொண்டு வர, இந்தக் குழுதான் மிகச்சரியான யுக்தி. ஊருக்குள் கலப்பு ஏற்படக்கூடாது என்று மிகத்தெளிவாக யோசனை செய்து தள்ளி தள்ளி வாழ்க்கையை ஏற்படுத்தியிருக்கிறோம். இவருக்குப் பிடித்த நிறம். இவருக்குப் பிடித்த உணவு. அவருக்குப் பிடித்த நிறம். அவருக்குப் பிடித்த உணவு என்று தனித்தனி கலாச்சாரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதையெல்லாம் ஒன்று சேர்த்து மதமாக முடிச்சு போட்டு இறைவழிபாட்டை ஒன்றாக்கியிருக்கிறார்கள். இதில் எந்த உயர்வு தாழ்வும் இல்லை.

அந்தணப் பெண்ணும், குயவன் மகனும் மணந்து கொண்டால் அவனுடைய மகன் என்ன தொழில் செய்வான். அந்தணனாக இருப்பானா... குயவனாக மலர்வானா என்ற பெரும் கேள்வி எழுந்தபோது இந்தக் கலப்பு வேண்டா என்று விதித்தார்களே தவிர, இவர் அவரைவிட இழிவானவர், அவரைவிட இவர் இழிவானவர் என்று சொல்லவேயில்லை. ஐந்தாவது வர்ணத்தினரை நாம் இன்னும் நெருங்கி அமர்ந்து அவர்கள் துக்கங்களைக் கேட்டு, அவர்களுடைய சௌகரியங்களை அதிகப்படுத்தித் தரவேண்டும் தோல் அறுப்பதும், இறைச்சி விற்பதும் அவன் வேலை. தோலில்லாது முடியுமா.. இறைச்சி நல்ல உணவு இல்லையா... அதற்காக அவர்களைப் புறக்கணிப்பதா.. அவர்கள் நொந்து கொள்ள ஆரம்பித்தால் அது அரசனுக்குக் கேடு. படையெடுப்பில் அவர்களுடைய பங்கு மிக முக்கியமானது. அவர்கள் வண்டிகளைப் பராமரிக்காவிட்டால், வண்டி மாடுகளைப் பராமரிக்காவிட்டால் எந்தப் படையெடுப்பும் நடைபெறாது.

நமது சமூகம் எவ்வளவு அழகாகப் பின்னப்பட்டிருக்கிறது. ஒட்டி உறவாடாமல், வெட்டி விலகாமல் அவரவர் அவரவர் இடத்திலிருந்து எல்லோருக்கும் பணி செய்து தன்னையும் தற்காத்து அழுத்தமான வலையாய் இறுக்கப் பின்னப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு பக்கம் இழுபட்டாலும் மொத்த வலையும் அறுபடும்."

"அப்படி ஒரு பக்கம் இழுபடுவதற்கு என்ன காரணம் ஐயா."

வைணவதாசன் ஆவலோடு வினவினான்.

"விதி. கிரகக்கோளாறு. அப்படித்தான் சொல்ல முடியும். பரதகண்டத்திற்கு என்று ஒரு ஜாதகம் இருக்கிறதல்லவா.. கிரகங்கள் நகரும்போது பரதகண்டத்தில் மாற்றங்கள் ஏற்படும். மாற்றங்களை எவராலும் தடுக்க முடியாது. ஆனால், எத்தனை மாற்றங்கள் நடந்தாலும், என்ன படையெடுப்பு இந்த தேசத்தின் மீது நடந்தாலும், யவனர்களோ, மிலேச்சர்களோ இந்த தேசத் திற்குள் நுழைந்து சூறையாடினாலும், இந்த தேசத்தின் ஆணிவேர் அழியாமல் இருக்க சில விஷயங்களைச் செய்தாக வேண்டும்."

"என்ன விஷயங்கள்."

வைணவதாசனின் மனைவி கேட்டாள்.

"தாயே இன்றைக்கு இங்கு சக்ரவர்த்தியாக இருக்கின்ற உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்கிற என் அன்பு அருண் மொழி செய்கின்ற மகத்தான காரியம், நம் தேசத்தை உய்விக்கும். அவன் கடவுளின் அவதாரம். விஷ்ணுவின் சொரூபம். அழகனாய், கம்பீரனாய் இருப்பதை வைத்துச் சொல்லவில்லை. ஆற்றல் மிகுந்திருக்கிறான் என்பதை வைத்தும் சொல்லவில்லை. அவன் எண்ணங்களே மிகப் பெரியனவாக இருக்கின்றன."

"கோயில் கட்டுவதைச் சொல்கிறீர்களா."

"கோயில் கட்டுவது என்பதைக் கட்டிடம் கட்டுவது என்பது போல் சாதாரணமாகச் சொல்கிறாய். சேர தேசத்தில் நான்கு பனந்துண்டங்களை அடுக்கி அதன்மீது கூரைபோட்டு அதை ஒரு கோவில் என்று சொல்வார்கள். உள்ளே வெறும் நடுகல்தான் இருக்கும்.

தீபம் ஏற்றிவைத்த இடம் அவனுக்குத் திருக்கோயில். கோவில் கட்டும் பணியை அவர்கள் மேற்கொள்வதேயில்லை. பாண்டிய நாட்டில் அங்கொன்றும், இங்கொன்றுமாய்க் கோயில்கள் கட்டப்படுகின்றன. மிகப்பரந்த அதேசமயம் நீர் வறட்சியுள்ள இடம் என்பதால் மக்களுக்குக் கோவில் கட்டும் உற்சாகமில்லை. சோழதேசத்தில் தான் கோயில்கள் அதிகம். காரணம் மக்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். அருண்மொழி சாதாரணக் கோவிலாகக் கட்டாமல் கற்றளியாய் மிக உயர்ந்த கோவிலாய்க் கட்டுகிறான். இது சிற்பசாஸ்திரத்தின் உன்னதம். இப்படிக் கோவில் கட்டுவதால் விதம்விதமான விஷயங்கள் கண்டு பிடிக்கப்படும். போருக்காக விதம்விதமான கருவிகளை இந்தக் கருமார்கள் கண்டு பிடித்தார்களல்லவா... எறியீட்டிகள்



என்றும், இறகு வைத்த அம்புகள் என்றும் விதம்விதமான ஆயுதங்கள் செய்தார்களல்லவா... இப்போது ஆயுதங்கள் செய்யாமல் மக்களுக்கு உபயோகமான விஷயங்கள் செய்யப் போகிறார்கள். கெட்டிக்கார இளைஞர்களுக்கு மரியாதை அதிக மாகும். மரியாதை அதிகமானால் அவர்கள் கெட்டிக்காரத்தனம் அதிகமாகும். வில் வண்டிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள் வைணவதாசா! குலுக்கலே இல்லாமல் சாலையில் மெல்லிய அதிர்வுடன் போகின்ற மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும் கண்டுபிடித்துவிட்டார்கள். திண்ணை, இடைக்கழி, முற்றம் என்றிருக்கின்ற வீட்டை வேறுவிதமாக வடிவமைத்திருக் கிறார்கள். நடுக்கூடத்தில் உயரத்தூக்கி, ஓட்டுக்கூரை எழுப்பி, அந்த ஓட்டுக்கூரையில் சாளரம் வைத்து, சாளரத்திற்கு மேலே மழைச்சாரல் உள்ளே வராமல் தடுப்பு எழுப்பி விட்டார்கள். வீட்டிற்குள் வெளிச்சமும் காற்றும் வருகின்றன. அதாவது பிரம்ம ஸ்தானத்தை வீட்டிற்குள்ளேயே வைக்கிறார்கள். யாகத்திற்காகக் கூரைபோடும் போது கூரையின் மையத்தில் உயரத்தூக்கி இடைவெளிவிட்டு இன்னொரு கூரை போடுவார்களே அம்மாதிரி கல் கட்டடத்தை உயரத்தூக்கினார்கள். வீடுகளின் தன்மை மாறிவிட்டது. உள்ளுக்குள் ஒரு சொட்டு நீர்கூட இறங்காத வண்ணம் ஓடுகள் இறுக்கமாக வேயப்படுகின்றன. வேளாளர்கள் வந்து என்ன செய்யட்டும் என்கிறார்கள். இடை யறாது தறி சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. துணி அறுத்து அறுத்து மாளவில்லை என்கிறார்கள். இந்தப் பிரம்மதேசம் வேளாண் வகை நிலமாக மாறினால் வேளாளர்களுக்கு மிகப் பெரிய உற்சாகம் ஏற்படும். நல்ல மழை பெய்து பாசன வசதியும் அதிகப்படுத்தினால் வேளாளர்கள் வித்தை காட்டுவார்கள்.

அதுமட்டுமில்லை வெளியூரிலிருந்து பாறைகள் வருகின்றன வாம். அதற்காகச் சாலைகள் போடப் படுகின்றனவாம். பள்ளங்கள் மண்ணிட்டு, பாறைகளிட்டு நிரப்பப்படுகின்றனவாம். நானும் இன்னும் நார்த்தாமலை போய்ப் பார்க்கவில்லை. அந்தப் பதினாறு சக்கர வண்டிகளைப் பார்த்தாயா. முப்பது அடி தூணை யானை கட்டி இழுத்து வந்திருக்கிறார்கள். அதுபோல திருமுனைப்பாடி நாட்டிலிருந்தும், நடு நாட்டிலிருந்தும், தொண்டை நாட்டிலிருந்தும், கடற்கரை ஓரமாகவும் பாதைகள் சரியாகி விட்டால் சோழ தேசத்தின் பாதுகாப்பிற்கு இவை மிக உதவியாக இருக்கும். மனிதர்களுக்கு மிகக் கொண்டாட்ட மாக இருக்கும். தெற்கே இராமேஸ்வரம் ஏன் கன்னியாகுமரி வரையிலும் எந்தப் பயமுமின்றி மக்கள் பயணிக்கலாம்.

இன்னொன்று சொல்கிறேன். நன்றாகப் புரிந்து கொள் வைணவதாசா. சேரதேசத்தில் அந்தணர்கள் தான் உயர்வு என்ற ஒரு நிலை வந்தது. அதனால்தான் சேரதேசம் அழிவுபட்டது. ஆயுதம் ஏந்தியும், தந்திரம் செய்தும் ஒரு கூட்டம் மேலேயிருந்து வந்தால் அந்தக் கூட்டம் உடனே அழிவைத்தான் சந்திக்கும். க்ஷத்ரியன் தான் ஆயுதம் ஏந்த வேண்டும். அவனுக்குத்தான் ஆட்சி செய்யும் அதிகாரம் தரப்பட வேண்டும். உயிர் துறக்கும் பயத்தோடு போர் செய்கிறவன் தந்திரமான முறையில்தான் போரைத் துவங்குவான். போரை முடிப்பான். க்ஷத்ரியாகள் உயிர் பற்றிய பயத்தோடு போர் துவக்குவதில்லை. நீ என்னைக் கொன்றாலும் பரவாயில்லை. நான் வீரசொர்க்கம் அடைவேன் என்ற நியதியை அவன் தெளிவாகப் புரிந்து கொண்டு போருக்கு வருவதால், அவன் போரில் தர்மமுறை கலந்திருக்கும். காந்தளூர்ச்சாலை கடிகையில் ஆபத்துதவிகள் என்ற பெயரில் தந்திரமான போர் முறையும் இரவு நேரம் தாக்குவதும், அம்புகளில் விஷம் கலந்து அடிப்பதும் என்று கேவலமான யுத்தம் செய்கிறார்கள். அந்தணர்கள் ஆயுதம் தாங்கவே கூடாது. கூட்டமாகப் போருக்கு வரக்கூடாது. கிருஷ்ணன் ராமனைப் போல, உன்னைப் போல, ஆதிகேசவனைப் போல அந்தணர்கள் அரசாங்கத்தில் இருக்கலாம். கிருஷ்ணன்ராமன் வாள் ஏந்திப் போரிடுவதை விட போர் பற்றிய முறைகளில் அதிகம் கவனம் செலுத்துகிறார். படைகளை நகர்த்தி எதிரியை நோக்கிச் செலுத்துவதில் புத்தியைக் காட்டுகிறார். நீங்கள் எல்லோரும் ஒற்றர் பிரிவில் இருக்கிறீர்கள். இதுதான் சரி, இந்த அளவோடு நிறுத்திக் கொள்வது தான் சரி. எனவே, சேரதேசத்து அந்தணர்கள் இங்கே வந்து சிலகாலம் கொடி பிடித்ததால் அந்தத் திமிரில் தஞ்சை அந்தணர்களும் நாங்கள் சிறப்பு, நாங்கள் உயர்வு, எங்களுக்குப் பிறகுதான் உலகம் என்று அரற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கிள்ளியெறிய வேண்டும். தஞ்சை அந்தணர்களிடமும், குடந்தை அந்தணர்களிடமும் இது குறித்து நீ விரிவாய்ப் பேச வேண்டும். அந்த ஊர் அக்ரஹாரத்துத் தலைவர்களைத் தனியே அழைத்து ஒரு கூட்டம் கூட்டி இனிமேல் இந்த வம்புதும்புகளில் சிக்காதீர்கள் என்று சொல்லவேண்டும்."

"கோவில் பணிகளில் ஈடுபட மாட்டேன் என்று சொன்னது அரசருக்கு வருத்தமாமே... மறுபடியும் கோவில் பணிகளில் ஈடுபடச் சொல்லலாமா.."

"வேண்டாம். அந்த விஷயத்தைத் தொடாதே. கூரை போட்டு கோவில் பணி நடக்கும் இடங்களில் வேதம் ஓதச்சொல்.



கட்டிடத்தின் ஒவ்வொரு பாகமும் எழும் முன் யாகம் வளர்க்கச் சொல். அதர்வண வேதம் உரக்கச் சொல்ல வேண்டும் என்று சொல். இன்னொரு விஷயம் செய்ய வேண்டும். வைணவதாசா சிற்பிகளிடையே பேசுவதற்குச் சரியான ஆள் யார் என்று நீ கண்டுபிடிக்க வேண்டும். யார் சொன்னால் சிற்பிகள் கேட்பார்கள் என்று ஆராய வேண்டும். பிரம்மராயர் சொன்னால் கேட்பார்கள் என்பது என்னுடைய எண்ணம். ஆனால் பிரம்மராயர் சரியாகச் செய்வாரா அந்த வேலையை என்பது எனக்குக் கேள்வியாக இருக்கிறது. வந்தியத்தேவர் செய்வாரா என்ற எண்ணமும் வருகிறது. ஆனால், வந்தியத்தேவர் எதிலும் பட்டுக் கொள்ளாமல் மெல்ல மெல்ல வாழ்வின் நியதிகளிலிருந்து விலகி வருகிறார். வயதாகிவிட்டது. இறை அனுபவம் அதிகமாகிவிட்டது என்று நினைக்கிறேன். ஒரு உண்மையை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் எனக்கு உண்டு. அதீதமான அமைதி அவர் முகத்தில் இருக்கிறது. அவர் பேச்சும் நடவடிக்கையும் மிகக் கம்பீரமாக இருக்கின்றன. அதனாலேயே அவர் பேசலாமே என்று தோன்றுகிறது.

சிற்பிகள் அரசருக்கு நெருக்கமாக இருப்பதால் அதிகமான மமதையோடு திரிகிறார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டு. நித்த வினோதப் பெருந்தச்சனும், அவன் உதவியாளனும் மிகக் கூர்மையாக இருக்கிறார்கள். அவருடைய முகத்தில் பராசக்தி நடனமாடுகிறாள். அவன் சிந்தனையில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறாள். அந்த ரெண்டு இளைஞர்களும் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களுக்குச் சமானம். அதனாலும் இந்தச் சிற்பிகள் அகங்காரமடைய வாய்ப்பிருக்கிறது. அதேபோல பாண்டிய தேசத்திலிருந்து ஒரு அடிமை வீரன் வந்திருக்கிறான். அவனையும் நான் தொலைவிலிருந்து பார்த்தேன். அவனைச்சுற்றி திகழ்ச்சக்கரம் ஒன்று ஆடிக்கொண்டேயிருக்கிறது. இவனுடைய வம்சத்தாரால் வெகுகாலம் கழித்துச் சோழதேசம் பாழ்படும் என்று தோன்றுகிறது. மிகப்பெரிய ஒரு சமூகத்தைத் தன் வாழ்நாளில் நிறுவிவிட்டு மறைவான் என்று தோன்றுகிறது. பாண்டிய தேசத்தின் வளத்திற்கு அவன் வித்திடுவான். அவன் சரித்திரம் வெளியே தெரியாமல் போகும். "ஆனாலும் அவன் மறுபடி மறுபடி பாண்டிய தேசத்திலே பிறந்து மீன் கொடியை உயர்த்திக் கொண்டிருப்பான் என்று தோன்றுகிறது.

குழந்தை மாதிரி முகத்தோடு ஒரு ஓவியன் இருக்கிறான். மக்கள் அவன் மீது பித்தாவார்கள். அழகு பற்றியும், அலங்காரம் பற்றியும் கர்வப்படுவார்கள். இந்தப் பெண்களின் அலங்காரங்கள்

ஆண்களைக் கிளர்ச்சியுறச் செய்யும். இதனால் ஆண்களுக் கிடையே போட்டி பொறாமைகள் ஏற்படும். ஒழுக்கக் கேடுகள் அதிகமாகும். இதுவும் சமூகத்தைப் பாதிக்கும். எந்த ஒரு வினையும் நல்லதும் செய்யும், கெட்டதும் செய்யும். கோவில் காரியம் என்பது ஒரு பக்கம் சமூகத்தை உயர்த்தினாலும், இன்னொரு பக்கம் தாழ்த்துவதற்கும் வாய்ப்புகள் அதிகம்.

கோவில் கட்டுவதைக் கேள்விப்பட்டு விட்டு சாளுக்கியர் களும், சேரர்களும், பாண்டியர்களும், ஏன் நமக்கு உறவினரான கீழைச்சாளுக்கியரும் கூட கோபமடைவார்கள். ஆத்திரமா வார்கள். போருக்கு ஆயத்தமாவார்கள். போர் அருகில்தான் இருக்கிறது வைணவதாசா! கோவில் முடிவதற்கு முன்பு போரா. கோவில் முடிந்த பிறகு போரா என்பதுதான் கேள்வி."

"எல்லாம் அறிந்த உங்களுக்குத் தெரியாதா. போர் எப்போது நடக்குமென்று.."

"இல்லை... நான் அதை விசாரிப்பதில்லை. விசாரிக்காமல் எதுவும் தெரியாது. எதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேனோ, அதை நோக்கி விசாரித்து நான் நடப்பேன். எதைத் தெரிந்து கொள்ள வேண்டா மென்று சொல்வேனோ, அதைச் சாதாரண மனிதனைப் போல நான் வரவேற்பேன்."

"எனக்காக ஒன்று விசாரித்து சொல்லுங்களேன்."

"என்ன வேண்டும்."

"இந்தக் கோயில் நல்லபடி முடியுமா."

"மிக அற்புதமான முறையில் முடியும். சந்திர சூரியர் உள்ளவரை நிலைத்து நிற்கும்."

"நம்மைச்சுற்றி பல நாடுகள் பயமுறுத்திக் கொண்டிருக் கின்றனவே. நம் சோழதேசம் எவ்வளவு காலம் சிறப்புற நிற்கும்."

"இன்னும் இருநூறு வருடங்களுக்கு சோழ தேசத்தின் வளமைக்கு எந்தக் குறையும் இல்லை. இராஜேந்திரன் காலத்தில் பட்டொளி வீசிப் பறக்கும்."

"அப்படியானால் என் மூத்த மகனை ஒற்றனாக்கலாமா."

"தாராளமாகச் செய். என்ன படித்திருக்கிறான்."

"நான்கு வேதங்களும் முறையாகக் கற்று முடித்துவிட்டான். நாளை என்னுடைய மாமனார் அகத்திலிருந்து இங்கே வருகிறான்."



"நல்லது. உனக்கு இரண்டு பையன்களல்லவா."

"ஆமாம்."

"இரண்டாம் மகனை என்ன செய்யப் போகிறாய்."

"அவனுக்குச் சிற்பங்கள் செய்வதில் ஆசை இருக்கிறது. இப்பொழுது நீங்கள் பேசியபிறகு அந்தணனைச் சிற்பம் செய்ய அனுப்புவதா என்று கேள்வி வருகிறது."

"ஹா.. நல்ல காரியம் செய்தாய். அவனைச் சிற்பம் செய்ய அனுப்பு. சிற்ப சாஸ்சாஸ்திரத்தைப் படித்து வேத விஷயத்தைச் சிற்ப சாஸ்திரத்தில் ஏற்றுவது எப்படி என்று விளக்கச் சொல்."

"நீங்கள் சொல்வது புரியவில்லை."

"வேதம் கடவுளைப் பற்றி என்ன சொல்கிறது. எப்படி விவரிக்கிறது என்பதை அந்தச் சிறுவன் சொல்லட்டுமே."

"யாருக்கு."

"சிற்பிகளுக்கு.. அவன் சிற்பிகளோடு பழகினால் என்ன.. பழகவிடேன்.."

"வருமானத்திற்கு என்ன செய்வான்."

"சிற்பிகளுக்கு இல்லாத வருமானமா. சிற்பிகளுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு இதுதான் சிவபெருமானின் உருவம் என்று அவன் விளக்கிச் சொன்னால், சிற்பிகள் அவன் காலடியில் காசைக் கொட்டுவார்கள். சோழ தேசத்தில் இனி எவனுக்கும் வருமானத்திற்கு எந்தக் குறையும் இல்லை."

வைணவதாசனின் மனைவி மெல்ல தொண்டையைச் செருமினாள்.

"சொல் தாயே.. என்ன கேட்க விரும்புகிறாய்."

சட்டென்று கருவூர்த்தேவர் திரும்பி அவளைப் பார்த்துக் கேட்டார்.

"நீங்கள் யார்.. சித்த புருஷர் என்றால் என்ன. நீங்கள் மரணத்தை வென்றவரா. ஆமெனில் அது எவ்விதம்."

"எதற்குக் கேட்கிறாய் பெண்ணே. இது வெறும் அறியும் ஆவலா. ஆழ அமிழும் ஆவலா."

"அறிந்த பிறகுதானே அமிழ முடியும்."

"இல்லை.. அமிழ்ந்தவரெல்லாம் அறிந்தவரல்ல. அறிந்தவுடன் அமிழ்ந்துவிட முடியாது. அதுவே தன்னைக் காட்டினாலொழிய அதைப் புரிந்து கொள்ள முடியாது. உன்னுடைய முயற்சியினால், உன்னுடைய திறமையினால், உன் தந்திரத்தினால், உன்னுடைய அகடவிகட சாமர்த்தியத்தினால் மரணம் பற்றியும், வாழ்வு பற்றியும் தெரிந்து கொள்ள முடியாது. நீ உள்ளே இழுக்கப்பட வேண்டும். இதுவே முக்கியம்."

"புரிகிறது ஸ்வாமி. கடவுளுடைய விருப்பம் இல்லாமல் கடவுளைப்பற்றி தெரிந்து கொள்ள முடியாது என்று சொல்கிறீர்கள். நன்றாகப் புரிகிறது. ஆனாலும் வார்த்தைகளாக நீங்கள் சொல்லும்போது அதனுடைய பெருமையை, என்னுடைய திறமையை நான் உணர்ந்து கொள்ளலாம் அல்லவா. என் கர்வங்கள் களையப்படுமல்லவா. அதற்காகக் கேட்கிறேன்."

"இது சாமர்த்தியம் மிகுந்த பேச்சு. உன் சிறுமையைத் தெரிந்து கொள்ள ஒரு பெருமையைப்பற்றிக் கேள்வி கேட்கிறாய். அந்த அழகிய வாக்கியத்திற்காக உனக்குப் பதில் சொல்கிறேன். யானையை அடக்குவதற்காகத் தான் அங்குசம் இருக்கிறது. யானை என்பதைப் புலன் நுகர்ச்சி விளைகின்ற உடம்பு என்று கொள்ளலாம். அங்குசம் என்பது மனம். மனம் என்பதைப் புத்தி என்ற வார்த்தையையும் உபயோகித்து புரிந்துகொள்ளலாம். புலன் நுகர்ச்சிகள் நாலாபக்கமும் அலைந்து மதம் கொண்டு ஆடுவதைத் தடுக்க மனம் என்ற அங்குசம் பயன்படுகிறது. மனத்தால் புத்தியிலுள்ள ஞாபகத்தைக் கிரகித்து பக்குவமாக எடுத்து, ஆராய்ந்து பார்த்து, எப்படி இருக்க வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொள்ள முடியும். அதற்காகத் தான் அந்த அங்குசம் ஏற்பட்டது. ஆனால் இந்த உடம்பு என்ற யானை என்ன பண்ணியது தெரியுமா. அங்குசத்தைப் பிடுங்கி விட்டது. அங்குசத்தைத் துதிக்கையில் சுருட்டி வைத்துக் கொண்டு நாலாபுறமும் வீசத் துவங்குகிறது. யானையின் தாக்குதலே மிகக் கடினமானது. அது கையில் கூரிய அங்குசத்தை வேறு வைத்துக் கொண்டு விட்டால் என்ன செய்ய.. யானை கட்டவிழ்ந்து போவது மட்டுமல்லாமல் அந்த மனம் என்ற கருவியை வைத்துக் கொண்டே, சுற்றுச் சூழ்நிலைகளைத் தன் புலன் நுகர்ச்சிக்காகப் போர் செய்யத் துவங்குகிறது. ஆனால் யானையின் மீது அங்குசம் மட்டுமில்லை... யானைப்பாகனும் இருக்கிறான். யானை தானாக நடக்காது. பாகன் நகர்த்த வேண்டும். அங்குசம் தானாகச் செயல்படாது. பாகன் செயல்படுத்த வேண்டும். அந்தப் பாகன் யானையல்ல. அங்குசம் அல்ல. ஆனால், அந்த அங்குசத்



தையும் யானையையும் பயன்படுத்தி எங்கோ நடத்துகிறவன். ஏதோ செய்கிறவன். பிறப்பெடுத்த ஜீவாத்மா. அடுத்த கட்டத்திற்குப் போவதற்காகத் தன் மனத்தைச் சீராக வைத்துத் தன் புலன்களை அமைதியாக்கி ஒரு வழியில் நடக்கத் துவங்குகிறது. அப்போது அடுத்த கட்டத்திற்கு அந்த யானைப்பாகன் போய்ச் சேருகிறான். தொடர்ந்து தன் பயணத்தை நடத்துகிறான்.

ஜீவாத்மா பல கட்டங்கள் தாண்ட வேண்டும். பல பிறவிகள் எடுக்க வேண்டும். பல அனுபவங்களைப் பெறவேண்டும். மனைவியாகப் பிறந்துவிட்டாயா. ஒரு சமயம் கணவனாகப் பார். கணவனாகச் சாதாரணமாக வாழ்கிறாயா.. பிறகு அரசனாக இரு என்று பல்வேறு அனுபவங்களை அனுபவிக்கப் போகிறாய். இந்தப் பெரிய பயணத்தில் போன ஜென்மத்தில் சந்தித்த வரையே இந்த ஜென்மத்திலும் சந்திக்கக்கூடும். இந்த ஜென்மத்தில் சந்தித்தவரை அடுத்த ஜென்மத்தில் பார்க்கக்கூடும். உனக்குத்தாயாக இருந்தவள் தமக்கையாக வருவாள். உனக்குத் தங்கையாக இருந்தவள், உனக்குக் குழந்தையாக இருப்பாள். உனக்குக் குழந்தையாக இருந்தவள் உனக்குத் தாயாக மாறலாம். உன் தகப்பன் உனக்கு மகனாகப் பிறக்கலாம். உன் ஸ்நேகிதன் உனக்குக் கணவனாக வரலாம். எப்படி என்பது இன்னொரு சூட்சுமமான வித்தை. அது இப்போது சொல்ல வேண்டிய அவசியமில்லை. மனம் ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு விதமாக ஈடுபட, உன் அடுத்த பிறவியில் அவ்விதமாகவே அனுபவம் ஏற்படும். உருவம் பெறப் பெற ஜீவாத்மா நிறைவில் ததும்பும். பயணப்படப் பயணப்பட அந்த யானைப்பாகன் தன் யானையோடு மிகச்சரியான ஒரு ஒழுங்கு முறையை வைத்துக் கொள்வான். இந்த ஜென்மத்தில் ஒரு ஒழுங்குமுறையை நீ வைத்துக் கொண்டால் அடுத்த முறையில் அந்த ஒழுங்குமுறை இன்னும் பலப்படும். அடுத்த ஜென்மத்தில் அந்த ஒழுங்குமுறை நன்கு பலப்பட்டால் அதற்குப்பின் ஜென்மத்தில் மிக உச்சாணிக் கிளைக்கு வரும். மிக உச்சாணிக் கிளைக்கு ஒரு ஒழுங்குமுறை நகர்ந்து வந்தால் ஒரு உன்னதமான இடத்திற்கு நீ வந்து சேருவாய். உன் பயணம் முடிவுறும். இந்த ஜீவாத்மா ததும்பி நிறைய வேண்டும். அந்த யானைப்பாகன் செவ்வனே அந்த யானையைத் தான்நினைக்கின்ற இடத்திற்கு மெல்ல நடத்திப் போக வேண்டும். மனம் என்ற அங்குசம், உடம்பு என்ற யானை ஒரு நீண்ட நெடிய பயணம். அதற்கு மேல் உட்கார்ந்திருக்கின்ற யானைப் பாகன். இதுதான் வாழ்க்கை."

"நாம் போன ஜென்மத்தில் சந்தித்திருக்கிறோமா."

வைணவதாசன் ஆவலோடு கேட்டான்.

"இருக்கலாம்."

"என்னவாக இருந்தோம்."

"அது எதற்காக.. அதை அறிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய். அதுவா கேள்வி. தொடர்பு இல்லாமலா இந்தக் கருவூர்த்தேவன் உன் வீடு தேடி வருவான். தொடர்பு இல்லாமலா இந்தக் கருவூர்த் தேவன் உன் மனைவிக்கு இந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருப்பான். தொடர்பு இல்லாமலா நீயும் நானும் இந்த மக்களின் நலம் பற்றி யோசித்துக் கொண்டிருப்போம். கேள்வி எவ்வளவு அபத்தமான தென்று புரியவில்லையா வைணவதாசா."

"புரிகிறது சித்தரே... புரிகிறது. ஜென்ம ஜென்மாந்திரத் தொடர்பு. இன்னொரு கேள்வி முட்டாள்தனமாக இருந்தாலும் மன்னித்து விடுங்கள். நாம் மறுபடியும் சந்திப்போமா."

"வெகுநிச்சயமாய்.. அதற்குள் நிறைந்து விடுமா உன் ஜீவாத்மா."

"எங்கே பிறப்போம்.."

"ஹா... இந்த சோழதேசத்தைவிட்டு நீயும், நானும் எங்கே. போய்விட முடியும் வைணவதாசா. சீரும், சிறப்புமான இந்த மண்ணைவிட்டு நாம் எங்கே போய் ஒளிந்து கொள்வோம் வைணவதாசா. இந்தக் காவிரிக் கரை படுகையையும், வண்டல் மண்ணையும், வாழைத்தோப்பையும், தென்னஞ்சோலைகளையும் வயல் வெளிகளையும், சைவத்தையும், வைஷ்ணவத்தையும் விட்டு விட்டு நாம் எங்கே போவோம். தென்னாடுடைய சிவனே போற்றி என்று ஒவ்வொரு ஜென்மத்திலும் அரற்றிக் கொண்டிருக்கத் தானே மறுபடி மறுபடி பிறக்கிறோம்."

"ஐயா நான் வைஷ்ணவன்."

"அதனால் என்ன. சிவன் அன்னியமா. ஸ்ரீராமர் இராமேஸ்வரத்தில் சிவபூஜை செய்யவில்லையா. சிவனும், விஷ்ணுவும் வெவ்வேறா. சைவமும், வைஷ்ணவமும் எதிரும், புதிருமானவையா. எங்கும் பரவி விஸ்வரூபமாய் இருப்பதே என்னுள் சிறிய அகல் விளக்காக இருக்கிறது என்று சைவம் சொல்கிறது என்னுள் சிறிய அகல் விளக்காக இருப்பதே பெரிய விஸ்வரூபமாக வெளியே இருக்கிறதென்று வைஷ்ணவம் சொல்கிறது. அங்கிருந்து



இங்கு பார்த்தால் என்ன. இங்கிருந்து அங்கு பார்த்தால் என்ன. பார்ப்பதும், பார்க்கப்படுவதும் தான் முக்கியம்.

"என் ஐயனே எவ்வளவு அற்புதமாகப் பேசுகிறீர்கள் ஐயா. இந்தக் குப்பையைத் தேடி வந்த குணக்குன்றே இதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். குருவே உம்மை நமஸ்கரிக்கிறேன். என்னை உம்மிடம் ஒப்படைக்கிறேன். ஏற்றுகொள்ளுங்கள்."

வைணவதாசன் எழுந்து இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டான். அவன் மனைவியும் படபடத்து எழுந்தாள். இருவரும் நமஸ்கரித்தார்கள். வைணவதாசன் தரையில் விழுந்து கிடந்ததில் மிகப்பெரிய சரணாகதி தெரிந்தது.

"வைணவதாசா வேளாளர்களை வழிப்படுத்தியது போல சிற்பிகளை நெறிப்படுத்தவும் நீ முயற்சி செய். பிரம்மராயரின் இன்னொரு ஒற்றனான ஆதிகேசவன் மேல்பாடி போயிருக்கிறான் என்று அறிகிறேன். அவன் எப்போது வருவான். எதற்காகப் போயிருக்கிறான். இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சாளுக்கிய தேசத்தில் ஊடுருவி மக்கள் நிலைமையையும் அரசாங்கத்தின் நிலைமையையும் படைபலத்தின் நிலைமையையும் கண்டு கொண்டு வருவான். வைணவதாசா இனி இம்மாதிரி ஒற்றர்கள் இடம்விட்டு இடம் பெயர்வதென்றால் அன்னியதேசம் போவதென்றால் என்னைச் சந்தித்துவிட்டு போகச்சொல். உங்களுக்கும் நல்லது. சோழதேசத்திற்கும் நல்லது."

"நிச்சயமாகச் செய்கிறேன்."

"வைணவதாசா சிற்பிகளை மிருதுவாக இருக்கவைக்க நானும் ஒரு யோசனை சொல்கிறேன். குஞ்சர மல்லனுக்குப் பிறகு நித்த வினோதப் பெருந்தச்சன். இலத்தி என்ற இரண்டு இளைஞர்கள் கிளைவிட்டு எழுந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களிலும் மூத்த சிற்பிகள் தனியாகக் கோயில் செய்யக்கூடிய வல்லமை பெற்றவர்கள் அதிகம் பேசப்படாமல் இருக்கிறார்கள். அந்தமூன்று பெரிய சிற்பிகளுக்கு மிகுந்த மரியாதை கொடுத்து, அவர்களைச் சிற்பிகளிடம் பேச வைக்க வேண்டும். இலத்தியும், நித்தவினோதப் பெருந்தச்சனும் கர்வத்தில் இருப்பவர்கள். அவர்களுக்குப் பேசவும் தெரியாது. பேச்சைப் புரிந்து கொள்ளவும் தெரியாது. எனவே அவர்களைப் பிரித்து தனியாக வேறு இடத்திற்கு அனுப்பி இந்தப் பெருஞ்சிற்பிகளை நாம் மற்ற சிற்பிகளுக்கு நடுவே பேசவும், பழகவும் விட்டு ஆணைகள் பிறப்பிக்கின்ற யோக்கியதைகள் கொடுத்து கௌரவப்படுத்த

வேண்டும். இப்படியொரு நிலைமை அந்த இடத்தில் வருவதற்குண்டான வேலையை வைணவதாசா! நீ செய்ய வேண்டும். இதைப் பிரம்மராயர் செய்வார் என்றோ, சக்ரவர்த்தியே நேரில் வந்து நடத்துவாரென்றோ நீ எதிர்பார்க்காதே. அவர்கள் கட்டுக்கோப்பான வம்சத்தினர். தங்களுக்கு இணையாக உள்ள கருமார்களையும் அவர்களால் புறக்கணிக்க முடிகிறது. எனவே கட்டுக்கோப்பைச் சரியான திசையில் திருப்பத் திறமை உள்ளவர்கள் தான் தலைமையாக இருக்க வேண்டும். இதை ஆணைகளால் ஏற்படுத்த முடியாது. தந்திரத்தால்தான் நடத்த வேண்டும்."

"மறவர்களைப் பற்றி உங்களுக்கு எந்தப்பயமும் இல்லையா."

"இல்லை. மறவர்கள் மரணம் தெரிந்தவர்கள். மரணம் தெரிந்ததாலேயே வாழ்வு பற்றி அவர்களுக்கொரு தெளிவு இருக்கும். வாழ்க்கையின்மீது ஒரு நல்ல பிடிப்பு இருக்கும். மேலும் மறவர்கள் தவறு செய்தால் அதை நேரடியாய் தண்டிக்க சக்ரவர்த்தியும், இளவரசரும், குறிப்பாய் வந்தியத்தேவரும் இருக்கிறார்கள். அவரையும் பேசச் சொல்லலாம். வைணவதாசா.. கிருஷ்ணன்ராமனிடம் போகாமல், அருண்மொழியிடம் போகாமல், உன்னிடம் ஏன் வந்தேன் தெரியுமா. இந்த ஊர் நடப்பு இந்தக் கருவூர்த்தேவனுக்கும் தெரிந்தாக வேண்டும். நான் கேட்கின்ற சில தகவல்களை எனக்குச் சொல்லித்தான் ஆகவேண்டும். நான் சோழதேசத்திற்கு துரோகி அல்ல. சோழ மக்களின் நலன் காப்பவன். சோழ அரசுக்கு எதிராக ஒருசிறு அசைவு கூட நான் செய்ய மாட்டேன். எனவே, நான் கேட்கின்ற தகவல்களை எனக்கு ஒளிவு மறைவு இல்லாது நீ தரவேண்டும்."

"அடுத்த ஜென்மம் பற்றி அழுத்தம் திருத்தமாகப் பேசுகின்ற கருவூர்த்தேவர் அடுத்த தேசம்பற்றி அறியமாட்டாரா?"

"அறிவேன். உன்னைவிட அதிகம் அறிவேன். நான் உன்னை இப்படிக் கேட்பதற்குக் காரணமிருக்கிறது. நீ சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறது. என்ன ஏன் என்று விசாரிக்க வேண்டிய அவசியமில்லை. வேண்டுமென்றால் என்னுடைய திறனில் உனக்குச் சந்தேகம் இருக்குமென்றால் உங்களுக்கொன்று சொல்லிக் கொள்ளட்டுமா. இந்த நேரம் ஆதிகேசவன் சாளுக்கியர் பிடியில் சிக்கிக் கொண்டான். உனக்குப் பத்துநாள் கழித்து தகவல் வரும். அப்போது வந்து என்னைப் பார்."

"ஐயா... நான் விளையாட்டுக்காகப் பேசினேன்."



"கருவூர்த்தேவனிடம் விளையாடாதே.. அது உங்களுக்குக் கெடுதலாக முடியும்."

"சோழமக்களுக்கு ஆதரவாக இருப்பதாய்ச் சொல்லிவிட்டு எனக்கெதிராக நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்?"

"என்னை சோதனை செய்ய உனக்குத் திமிர் வந்ததே அப்போது உனக்கெதிராய் நான் பேசினால் என்ன ஆகுமென்று நீ தெரிந்து கொள்ள வேண்டாமா."

"ஐயனே.. மன்னிக்க வேண்டும்.. மன்னிக்க வேண்டும்."

"வைணவதாசா.. ஒரே நிலையில் இரு. வைணவதாசா உன் சம்பிரதாயம் என் சைவ சமயத்தைச் சோதித்துப் பார்க்கத் தோன்றிற்று. இந்த அகங்காரங்கள் தான் நம்மை அழித்துப் பிரித்துப் போடப் போகின்றன. எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் இனம் என்று என்றைக்கு வருமோ அன்றுதான் நாம் உன்னத நிலைக்கு வருவோம். அதுவரை மேலும் கீழும் அலைந்து கொண்டிருப்போம்."

"தயவுசெய்து அவர் துடுக்குத்தனத்தை மன்னித்து விடுங்கள்."

வைணவதாசன் மனைவி கைகூப்பினாள்.

"உன் பெயர் என்ன தாயே.."

"யசோதரை."

"உனக்குக் கிருஷ்ணரும், பலராமரும் உண்டல்லவா."

"ஆமாம். எனக்கு இரண்டு குழந்தைகள்."

"பலராமனுக்குக் காலில் அடிபட்டிருக்கும். கிருஷ்ணன் அதிகம் உண்டு வயிறு மந்தித்து முகம் வாட்டமாக இருப்பான். நாளை இரண்டு குழந்தைகளும் வரும்போது அம்மா, பிரம்மராட்சஸ் என்றால் என்ன என்று தான் முதல் கேள்வி கேட்பார்கள்."

"ஐயனே.. ஏன் கோபத்திலிருந்து கீழே இறங்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். உம்மோடு நட்பாக இருப்பதால்தான் நான் அதிகம் பேசினேன்."

"கருவூர்த்தேவன் யார் என்று உனக்குத் தெரிய வேண்டுமல்லவா. அதற்காக உனக்கு இன்னொன்றும் சொல்கிறேன்."

"கடவுளே.. என்னை மன்னிக்கக் கூடாதா."

"வைணவதாசா நீ என் நண்பனடா. ஆனாலும் கருவூர்த் தேவன் யார் என்று உனக்குக் காட்டித்தான் ஆக வேண்டும். உன் வீட்டுக் கொல்லைப்புறத்தில் பூனை ஒன்று எலியைக் குறி பார்த்துக் கொண்டிருக்கிறது.. எலி பூனை தன்னைக் குறிபார்க்கிறது என்று தெரிந்துகொண்டு நகர்வதற்குத் தடம் பார்த்துக் கொண்டிருக்கிறது. எலி நகர, பூனை பாயும். எலி எப்படி நகர்வது என்று திட்டமிட்டு விட்டது. எலி நகர்வைப் பூனை சரியாகக் கணக்கிடவில்லை. எனவே, பூனை கிணற்றுக்குள் பிசகி விழப் போகிறது."

"இது தண்டனை."

"உனக்கா, பூனைக்கா."

"எனக்குத்தான். பூனையை நான் மீட்டு விடுவேன். என்னை யார் மீட்பது."

"அது உன் குற்றமல்ல வைணவதாசா! உனக்கு மட்டுமல்ல. உனக்குத் தலைமையேற்கின்ற கிருஷ்ணன்ராமனான பிரம்ம ராயருக்கும், அவரது மகன் அருண்மொழிப்பட்டனுக்கும் கூட "என்னால் முடியும். என்னால்தான் இதைச் செய்ய முடியும்" என்கிற கர்வம் இருக்கிறது. கருவூர்த்தேவரை பகைத்துக் கொள்ள வேண்டாம் என்ற எண்ணம்தான் உனக்கும், உன் தலைமைக்கும் இருக்கிறதே தவிர, கருவூர்த்தேவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்கின்ற பக்குவம் வரவில்லை. போ.. போய் பூனையை மீட்கப் போ."

"விழவில்லையே."

"இதோ விழுந்துவிட்டது."

"தொபீரென்று சத்தம் அவர் வாக்கியம் முடிக்கும் முன்பு கேட்டது.

கன்னத்தில் கைவைத்து வைணவதாசனின் மனைவி யசோதரை உறைந்து கிடந்தாள்.

வைணவதாசன் குனிந்து அவரை வணங்கிவிட்டு கொல்லைப் புறம் நோக்கி ஓடினான்.

அதையும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"யசோதரை இது ஒன்றும் பெரிய வித்தையில்லை. இது உன்னாலும் முடியும். யார் உள்ளுக்குள்ளே போய் அமைதியாய் அமர்கிறார்களோ அவருடைய ஆன்மசக்தி நாலாபக்கமும் விரிவடையும். விரிவடைந்த ஆன்மசக்தியின் மூலம் காலம் கடந்து நிற்கலாம். நடந்ததும், நடக்கப் போவதும். நடந்து கொண்டிருப்பதும் என்னவென்றறியலாம். நடப்பது முக்கியமே இல்லை யசோதரை. நடப்பதைத் திசைமாற்றுகின்ற வலிவு முக்கியம்."



"சித்தரே ஒரு கேள்வி. கடவுள் முக்கியமா. குரு முக்கியமா."

"கடவுள் குரு வடிவானவர். பேதப்படுத்தாதே. குரு என்பவரின் அடிப்படை உணர்ச்சி என்ன. அன்பு மயமாக இருத்தல் மக்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் அவர் எப்படி உதவுவார். முப்பது நாள் குழந்தைக்கும் முப்பது வயது தாயாருக்கும் என்ன உறவோ அந்த உறவுதான். கொஞ்சுவதைத் தவிர, கொஞ்சி சீராட்டுதலைத் தவிர, வேளாவேளைக்கு உணவு கொடுத்து போஷாக்காய் வளர்ப்பது தவிர அந்தத் தாய்க்கு வேறு என்ன வேலை. இப்போதானே துடைச்சேன். மறுபடியும் சிறுநீரா என்று தாய் அலுத்துக் கொள்ளவில்லையா. அதுபோல.. இந்த மருந்தைக்குடி என்று சங்கால் அழுத்தி வாயில் புகட்டவில்லையா. அதுபோல.. அழுது கதறியவுடன் முலை கொடுத்து நெஞ்சில் இறுக்கிக் கொள்ள வில்லையா. அதுபோல.. அது தூங்கும் பொழுதிலும் அதன் நெஞ்சு தடவி, தலை தடவி, உச்சி மோந்து "என் செல்லமே" என்று அருகில் அதனையே பார்த்துக் கொண்டிருப்பதில்லையா. அதுபோல.. குரு இடையறாது தன் சீடனை முப்பது நாள் குழந்தைபோல கவனித்துக் கொள்வார்."

"சித்தரே எனக்கு இப்போதே செத்துப் போய்விடலாம் என்று தோன்றுகிறது."

"இதுதான் நல்ல புத்தி. இதற்குப் பெயர்தான் நிறைவு. இந்நிலை ஏற்படுகிறபோது உடம்பும், மனசும் மாறும். யசோதரை தனித்திரு.. தனித்திருக்க விழித்திரு.. விழித்திருக்க பசித்திரு.. கும்பலோடு கும்பலாக ஓடுகிறவர்களெல்லாம் ஒரு தூக்கத்தில் இருப்பவர்கள். அவர்களால் தனித்திருக்க முடியாது. தனித்திருக்க வேண்டுமென்றால் மனம் விழிப்படைய வேண்டும். விழிப்படைந்து நாலாபுறமும் என்ன என்ன என்று பார்க்கின்ற மனம் எல்லோருக்கும் வராது. அரைத் தூக்கத்தில், முக்கால் தூக்கத்தில், முழுத்தூக்கத்தில் மனிதர்கள் இருப்பார்கள். நீ தனியாக இருக்கும் போது மனம் விழித்திருக்க வேண்டுமென்றால் என்ன வேண்டும் யசோதரை. உடம்பு பசித்திருக்க வேண்டும். வயிறு நிறையத் தின்பவனுக்கு ருசித்து ருசித்து சாப்பிடுபவனுக்கு விழித்திருக்க முடியாது. உண்டவுடன் தூக்கம், தூங்கியவுடன் கனவு என்று வாழ்க்கை ஒரு சகதிக் குட்டையாய்ப் போய்விடும். மறுபடி

சொல்கிறேன். தனித்திரு.. தனித்திருக்க விழித்திரு... விழித்திருக்கப் பசித்திரு..’

“எவ்வளவு எளிதாகச் சொல்லித் தருகிறீர்கள். இந்த யசோதரை மீது எவ்வளவு கருணை வைத்திருக்கிறீர்கள். உங்களை நமஸ்கரிக்கிறேன்.”

யசோதரை வலம் வந்து நமஸ்கரித்தாள்.

“நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்.”

“ஹா.. சொன்னால் செய்வாயா.”

“நிச்சயம் செய்வேன்.”

“உன் கணவனை வேவு பார்த்து எனக்கு விஷயம் சொல். அவன் எங்கே போகிறான். எப்பொழுது வருகிறான். என்ன மனோநிலையில் இருக்கிறான் என்பதை எனக்குத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிரு. அவனை இங்கு சந்திக்கிறவர்கள் யார் யார் என்பதையும் எனக்கு நீ அவ்வப்போது சொல்ல வேண்டும்.”

“கடவுளே.. இது நான் அவருக்குச் செய்யும் துரோகமல்லவா.”

“தனித்திரு என்று சொல்லிவிட்டேன். ஏன் சார்ந்திருக் கிறாய்.”

திகைத்துப் போய் அவரையே பார்த்தாள். யோசித்தாள். ‘சரி’ என்றாள்.

கருவூர்த்தேவர் கீழிறங்கி வெளியே நடந்தார்.

பூனையை மரத்தொட்டியில் ஏற்றி மெல்ல வைணவதாசன் இழுக்கத் துவங்கினான்.

உலகம் வலுவுள்ளவர்களாலோ, கெட்டிக்காரர்களாலோ இயக்கப்படவில்லை. சூட்சும சக்தி மிகுந்தவரால்தான் இயக்கப் படுகிறது. வலிவு என்பது இங்கு சூட்சுமசக்தியோடு இருத்தல் கெட்டிக்காரத்தனம் என்பது சூட்சும சக்தியை அடைதல் மற்றவ ரெல்லாம் இம்மாதிரி சூட்சும சக்தி அடைந்தவரின் கைப்பா வைகள்தாம் என்ற எண்ணம் அவனுக்குள் எழுந்தது.



# 145

“**நா**ன் அதிகம் பேசும் விருப்பமுடையவன் அல்ல. பேச்சு என்னை பலவீனமாக்குகிறது. ஓவியனோ, சிற்பியோ, கவிஞனோ அதிகம் பேசக்கூடாது. இடையறாது பேசிக் கொண்டிருப்பதில் மனம் ஈடுபட்டுவிட்டால் செயல்திறன் குறைந்து போகும். ஆடுகிறவரும், பாடுகிறவரும் ஓயாது பேசலாம். தேவரடியார் களுக்குப் பேச்சும் அபிநயமும் வரப்பிரசாதமாக அமைய வேண்டும். பேசப்பேசத்தான் வார்த்தைகள் ஒரு வடிவைப் பெறும். உச்சரிப்பு ஸ்பஷ்டமாகும். ஆனால், சிற்பி பேசக்கூடாது.”

உமாபதி ஆச்சாரி பாறையில் உட்கார்ந்து கொண்டு கொட்டைப் பாக்கை இடித்துக் கொண்டிருந்தார்.

வெற்றிலையைச் சுருட்டி வெண்கலப் பாத்திரத்தில் கிள்ளிப் போட்டு மீண்டும் இடிக்கத் துவங்கினார். இடிப்பதை நிறுத்தினார். நிமிர்ந்து பார்த்தார்.

“ஏன் ஆடுகிறீர்கள். உங்களுக்கு என்ன வந்து விட்டது என்று எகிறிக் குதிக்கிறீர்கள். சொடுக்கிக் கூப்பிட்டால் வணிகர்களிட மும், அரசர்களிடமும், அந்தணர்களிடமும் ஓடிப்போய் நிற்கிறவர்கள் தானே. இன்று என்ன வந்துவிட்டது உங்களுக்கு.. நீங்கள் தொடையிடுக்கில் வைத்துக் கொண்டு செய்த கடவுள் சிலையை உள்ளே எடுத்துக் கொண்டு போய் குளிப்பாட்டி கண் திறக்க வைத்துவிட்டு பிறகு மலர்மாலை சார்த்தி உங்களை வெளியே போ என்று அனுப்புவார்கள். பிறகு என்றேனும் அந்தச் சிலையை நீங்கள் தொட்டதுண்டா. உங்களுக்கு அந்தச் சிலையைத் தொட யோக்கியதை இல்லை என்று சொன்ன பிறகு, நீங்கள் அதை மீறியதுண்டா. வெய்யிலிலும், மழையிலும் நனைந்து கல்தூக்கி வந்து கருங்கல் தூசியில் படுத்துக் கிடந்த வர்கள் தானே நீங்கள். இன்று என்ன ராஜபோகம் வந்துவிட்டது. அந்தணர்களுடைய குடியிருப்புக்குப் போய் அட்டகாசம் செய்து விட்டு வருகிறீர்களே இது நியாயம்தானா.. குதிரை இல்லாமல் நீங்கள் போக மாட்டீர்களோ.. அந்தணக் குடியிருப்புக்கு ஏன் போனீர்கள். என்ன தேவை. அவர்களை ஏன் நீங்கள் எதிர்க்க வேண்டும். அவர்களோடு என்ன உங்களுக்கு.. என்ன முரண். நீங்கள் எது கேட்டாலும் கொடுப்பதற்குச் சக்ரவர்த்தி தயாராக இருக்கிறார் என்பதனால் சக்ரவர்த்தியின் மணிமுடியும், செங்கோலும் கேட்பீர்களா. சோழதேசத்தை இனி நாங்கள் ஆண்டு கொள்வோம் என்று சொல்வீர்களா. ஆள முடியுமா..

அதற்கொரு யோக்கியதை வேண்டாமா. ஏன் அளவுக்கு மீறி ஆட்டம் போடுகிறீர்கள். உங்களால் செங்கோலும், கிரீடமும் கேட்க முடியாது. ஏனெனில் ஒரு அரசரின் வலிவு, கத்தி முனையாய் உங்கள் கழுத்தின் மீது நின்று கொண்டு உங்களைக் கேள்வி கேட்கும். அப்படி அந்தணரின் வலிவு நேரடியாய் உங்களுக்கு முன்பு ஈட்டியாகவோ, கத்தியாகவோ உயிர் பறிக்கிற விஷயமாகவோ வரவில்லை. அதனால் ஆடுகிறீர்கள். நீங்கள் மிகப் பெரிய தவறு செய்கிறீர்கள் என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களைப் பகைத்துக் கொள்ளுதல் நல்லதல்ல. அவர்களைச் சீண்டிப் பார்ப்பது தவறு. அரசரது கோபம் காலை இருக்கும், மாலை மறையும். அந்தணர் கோபம் அப்படியல்ல. அது கருநாகம்."

இதற்கு முன்பு ஆட்சி செய்த உத்தமசோழர் காலத்தில் அந்தணரைக் கண்டால் ஓடி ஒளிந்தீர்கள். நிலம்பட விழுந்து வணங்கினீர்கள். இப்போது அவர்கள் பலவீனப்பட்டிருக்கிறார்கள் என்பதால் எகிறி அடிக்கலாம் என்று பார்க்கிறீர்களா. மறுபடியும் இன்னொரு உத்தமசோழனுடைய ஆட்சி வராது என்பதற்கு என்ன நிச்சயம்? ஏன் அரசரே அந்தணருக்கு ஆதரவாகப் பேச ஆரம்பித்துவிட்டால் உங்கள் முகம் எங்கே போகும். தங்களை அரசனுக்குப் பிரியமானவராய் மாற்ற அந்தணருக்குத் தெரியாதா. அந்தக் கூட்டத்தில் சிலர் செய்கிற முட்டாள்தனத்தால் அந்தக் குலம் சற்று இழிவுபட்டு இருக்கிறது. மற்றபடிக்கு அவர்கள் மிகுந்த வலிவு பெற்றவர்கள் என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். அவர்களுடைய தந்திரத்தின் எல்லையை உங்களால் யூகிக்கக்கூட முடியாது. இன்றைய சோறு. இன்றைய வாழ்வு என்று மட்டும் நினைத்துக் கொண்டு பேசாதீர்கள் உம்முடைய தலைமுறைகள் நன்கு வளரவேண்டும் அல்லவா. அதை யோசனை செய்யுங்கள். உங்கள் மகனுக்கு மகன் சிற்பத் தொழிலில் கொடி கட்டிப் பறக்கவேண்டுமல்லவா. உங்கள் புகழைப் பரப்ப வேண்டுமல்லவா. அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களில் பலபேருக்குத் தெரியாது. இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரவிதாஸன், பரமேஸ்வரன் என்ற இரண்டு பிரம்மராயர்கள் தலைமையில்தான் சோழதேசம் இயங்கி வந்தது. சுற்றிலும் வெள்ளை வேட்டி, வெள்ளைத் தலைப்பாகை அந்தணர்கள் புடைசூழ முதுகில் அம்பறாத் தூணியும் இடுப்பில் வாளும், கையில் குத்தீட்டியுமாய் அவர்கள் குதிரையில் வந்த காட்சி இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்போது



இருக்கிற கைக்கோளப்படை மெய்க்காவல்படையெல்லாம் அப்போது இல்லை. அந்தணர்களே பாதுகாத்தார்கள். அந்தணர்களே மெய்க்காவல் படையாக இருந்தார்கள். அந்த பிரம்மராயர்களுக்கு **ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட** என்று கட்டியும் கூறினார்கள். பிராமண குலபதி பிராம்மண சத்ரு நாசனம் என்றெல்லாம் அடைமொழி வைத்தார்கள். ஐந்து வயது அந்தணக் குழந்தை சாலையில் மண் கட்டி விளையாடிக் கொண்டிருந்ததென்றால் ஒரு தேரும், ஒரு குதிரையும் போக முடியாது. ஊரைச் சுற்றித்தான் போக வேண்டும். அந்தணர்கள் கோவிலுக்குள் நுழைந்துவிட்டால் அவர்கள் வெளியேறும் வரை மற்றவர்கள் காத்திருக்கத் தான் வேண்டும். இப்படி அளவுக்கு மீறி அவர்கள் ஆடியதால்தான் இன்று பலவீனப்பட்டார்கள். நீங்களும் பலவீனப்பட வேண்டுமா.. சரித்திரம் பார்த்து உண்மை கற்றுக் கொள்ளக்கூடாதா.

உங்களுக்கு இன்று சிறப்பு வந்திருக்கிறது. அரசருக்கு உங்களால் காரியம் ஆக வேண்டியிருக்கிறது. தன்னை நிலை நிறுத்திக் கொள்ள சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மிகப்பெரிய கற்றளியை எழுப்புகிறார். எழுப்புவது நீங்கள் என்றாலும் அதைக் கட்டியது உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்றுதான் பொறிக்கப்படும். நித்த வினோதப் பெருந்தச்சன் என்று எவரும் கோவிலுக்குக் கீழே படியில் எழுதிவிடமாட்டார்கள். எனவே நீ என்ன வினோதம் செய்தாலும், தினம் தினம் எப்படி வினோதம் செய்தாலும், உன் வாழ்வும் ஒரு நாள் முடியும் என்பதை ஞாபகம் வைத்துக் கொண்டு அமைதியாய்க் காரியம் செய். உன்னுடைய செயல்தான் இங்கு உயர்ந்து நிற்கவேண்டும். அதுதான் காலம் கடந்து உன்னை யார் என்று காட்ட வேண்டும் நீ. உன் உடம்பு முக்கியமில்லை. சண்டை வேண்டா. எவரோடும் வலுச்சண்டைக்குப் போக வேண்டாம். இதை எனக்குச் சொல்ல விருப்பமே இல்லை. ஆனால் சொல்ல வைத்து விட்டார்கள். இங்குள்ள இளைஞர்களுக்குப் புத்தி போதவில்லை. தங்களிடம் ஒரு நித்த வினோதப் பெருந்தச்சனும், இலத்திச்சடையனும் இருப்பதால் மற்றவர்களெல்லாம் உங்களை வினோதப் பெருந்தச்சன் என்றும், இலத்தி என்றும் நினைத்துக் கொண்டு நிற்கின்ற தோரணை அபத்தமாக இருக்கிறது.

பட்டுச் சால்வையை மேலே போட்டுக் கொண்டு அலைகிறீர்களாமே. நீங்களாகக் காசு கொடுத்து வாங்கி விட்டு உடையார் கொடுத்தது என்று சொல்லிக் கொள்கிறீர்களாமே. சிரிக்கிறார்களய்யா கடைத் தெருவில் போதும் நிறுத்திக்

கொள்ளுங்கள். இன்னொரு ஆபத்தும் இருக்கிறது. நம் இளைஞர்கள் பல பேர் தேவரடியார்களோடு பேசிப்பழகி வருகிறீர்கள். கேட்டால் சிற்ப ஆராய்ச்சி என்று சொல்கிறீர்கள். நீங்கள் என்ன ஆராய்ச்சி செய்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா. நானும் அந்தப்பருவம் கடந்து வந்தவன் தான்.

தேவரடியார்கள் ஆபத்தானவர்கள். அதிகம் பேசுகிறவர்கள். நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் அதைப் பத்து வார்த்தையாக வெளியே போய்ச் சொல்லக் கூடியவர்கள். அவர்கள் சொல்வதை ஊர் நம்பும். அரசு நம்பும். அதிகாரிகள் நம்புவார்கள். எனவே, தேவரடியார்களோடு அதிகம் பேசாமல் இருப்பது நல்லது. ஆனால், இந்தக் கிழவனை மதிப்பதற்கு உங்களில் பல பேருக்கு மனமில்லை.

நானும் கொடிப் பெண்களிலிருந்து துவாரபாலகரிலிருந்து. ஈசன் சிலையிலிருந்து பலதும் செய்திருக்கிறேன். இளமை வயதில் தேவரடியார்கள் என்னைச் சுற்றிக் கொண்டு பாராட்டியிருக்கிறார்கள். மதி மயங்கி விடக் கூடாதய்யா. அந்த வீட்டிற்குப் போக வேண்டாமென்றோ, விட்டு விலகுங்கள் என்றோ சொல்ல வில்லை. கல்லில் வேலை செய்கிற சூடு கிளர்ச்சியுறவைக்கும். அதைப் பேசித் தீர்த்துக் கொள்ளாதீர்கள். பொற்காசுகளைக் கீழே வைத்துவிட்டு வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள். எந்த பெண் எடுத்துக் கொள்கிறாளோ அவள் பின்னால் போங்கள், அவர்கள் பேசுவதில் என்ன இருக்கிறது அரசர் பற்றியும், இளவரசர் பற்றியும், மற்றவர் பற்றியும் அபிப்ராயம் சொல்ல என்ன இருக்கிறது. கோவிலின் மாதிரியை இரவோடு இரவாக தேவரடியார்களை அழைத்துக் கொண்டு போய் திறந்து காட்டினீர்களாம், என்ன அபத்தம்.

யாரோ ஒரு தேவரடியார் பெண் அரசவைக் கூட்டத்தில் அமர்ந்து நாம் பேசுவது கேட்டு நம்முடைய மாதிரிகளைப் பார்த்து திரைச்சீலைகளைக் கண்டு வியந்து அங்கு போய் சொல்ல, அந்த தேவரடியார் பெண்களெல்லாம் தாங்களும் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட, உங்களோடு பேசிச் சிரித்து மயக்க நீங்கள் இதுவரை ஆறு பெண்களை அங்கே அழைத்துப் போய்க் காட்டியிருக்கிறீர்கள். அவர்கள் பீற்றிக் கொள்ள மற்றவர்களும் எகிறுகிறார்கள். வயசாளிப் பெண்கள் வந்து அந்த மாதிரியைப் பார்க்க வேண்டும் என்று கேட்கிறார்கள். என்ன ஆயிற்று உங்களுக்கு.. நம் தொழிலின் மீது இருக்கின்ற மரியாதையை ஏன் தரையில் போட்டு மிதிக்கிறீர்கள்.



தேவரடியார் பெண்கள் இம்மாதிரிச் சிற்பங்களையும், மாதிரிகளையும் பார்வையிட்டார்கள் என்று அரசருக்குத் தெரிந்தால் என்ன ஆகும். சாதாரணமாகவும் எடுத்துக் கொள்ளலாம். அறிவிருக்கிறதா என்று சீறவும் சீறலாம். இதற்கு ஏன் இடம் கொடுக்கிறீர்கள். பிரம்மராயர் வந்தால் காட்டமாட்டேன். காட்டக் கூடாது என்று பெருந்தச்சர் உத்தரவிட்டிருக்கிறார். அவருக்குத் தெரிந்தால் என்ன நடக்கும். ஒருமுறை அப்படி அவரிடம் காதுபடச் சொல்லிவிட்டு இப்போது ஆடுகிற பெண்களுக்கு நீங்கள் துணி விலக்கி மாதிரிகளைக் காண்பித்தால், நிலத்தைக் காவல் காக்கிற மறவர்கள் போய் பிரம்மராயரிடம் சொல்ல மாட்டார்களா. இரவோடு இரவாகப் பெண்கள் வருகிறார்கள். மாதிரிகளைப் பார்த்துவிட்டு கூச்சலிடுகிறார்கள் என்று சொன்னால் பிரம்மராயர் விசாரிக்க மாட்டாரா. ஒரு குலத்தையே ஏனய்யா கேவலம் செய்கிறீர்கள். இந்தக் கேள்வி யாருக்கு வரும். தலைவர் பெருந்தச்சருக்கு.. குஞ்சரமல்லருக்கு.. குஞ்சரமல்லர் எந்த திசையில் எப்படித் திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. அவர் உளியை எடுத்தால் யாரையும் அடிப்பார். அடிவாங்கிச் சாவதுதான் உங்கள் தலையெழுத்தென்றால் என்னால் தடுக்க முடியாது. அவர் வரை செய்தி போக வேண்டாம். அதற்குமுன்பு அணை கட்டலாம் என்று நான் முயல்கிறேன். இவ்வளவு தான் சொல்வேன். இதுவே அதிகம். இதற்கு மேல் பேச என்னால் ஆகாது. இனி உங்கள் விதிப்படி ஆகட்டும்."

உமாபதி ஆச்சாரி இடித்த வெற்றிலை பாக்கை உருட்டி வாயில் போட்டுக் கொண்டார்.

அவருடைய பற்கள் மோசமாக இருந்தன. கடித்ததும் வலித்தன.

உமாபதி ஆச்சாரியின் இந்தப் பேச்சு சிற்பிகளுக்குள் சலசலப்பை ஏற்படுத்தியது. சிற்பிகள் சரி, தவறு என்று இரண்டாகப் பிரிந்தார்கள்.

"அக்ரஹாரத்தில் என்ன நடந்தது என்று இந்த உமாபதி கிழவனுக்குத் தெரியுமா. நாமென்ன அடிக்கப் போனோமா. யாரையாவது மடக்கப் போனோமா, நாம் பாட்டுக்கு போகும் போது ஏன் இங்கு வருகிறாய் என்று ஒரு அந்தணன் கேட்கிறான். குதிரையின் சேணத்தைப் பிடிக்கிறான். சேணத்தை அவன் கையிலிருந்து உதற குதிரை எகிறி அவன் நெஞ்சில் மிதித்தது. இது கொலையா. விபத்து. குதிரையிலிருந்த சிற்பிக்கும் அந்த அந்தணனுக்கும் என்ன பகை. இதற்கு முன் அவர்கள் பார்த்ததே

யில்லை. மலையிலிருந்து கல் உருண்டு விழுந்தால் அதற்குச் சிற்பி காரணம். குதிரை மிரண்டுபோய் இடித்தால் அதற்குச் சிற்பி காரணம் என்று சொல்லிக் கொண்டே போனால் இதற்கு ஒரு முடிவுவேண்டாமா. அக்ரஹாரத்திற்கெல்லாம் நாம் போகக் கூடாது என்றால் என்னநாம் தீண்டத்தகாதவர்களா. தேவரடியார்கள் காட்டிக் கொடுக்க வேண்டாம். நம் கூட்டத்திலுள்ள இந்த மாதிரிக் கிழவர்கள் நம்மைக் காட்டிக் கொடுப்பார்கள். எப்போது தேவரடியார்களை அழைத்துக் கொண்டு போனோம். பிரம்மராயரும் மற்றவர்களும் அந்த மாதிரிகளைப் பார்த்து கண்டுகளித்துவிட்டு என்ன என்பதைப் புரிந்து கொண்ட பிறகு, அங்கேயிருந்த ஒரு பெண் நீங்கள் அனுமதித்த பெண், தேவரடியார் கூட்டத்திற்குப் போய் சொன்னதால் ஏற்பட்ட விளைவு. நீங்கள் அந்தப் பெண்ணை உள்ளே உட்காரவைத்து, அவள் கையில் மோரும், பானகமும் வாங்கிக் குடித்து விட்டு, இப்பொழுது எங்களை ஏன் குறை சொல்லுகிறீர்கள்.

குஞ்சரமல்லப் பெருந்தச்சர் அந்தப் பெண்ணை வெளியே போ என்று சொல்லியிருக்கலாமே. இந்த கூட்டத்தில் தேவரடியார்களுக்கு இடமில்லை என்று சொல்லியிருக்கலாமே. நீங்கள் செய்தால் உத்தமம் நாங்கள் செய்தால் அதர்மம். அப்படியா. வெற்றிலைப் பாக்கை இடித்துக்கொண்டு எங்களைக் குறை சொல்லுகிற அந்தக் கிழவன் குஞ்சரமல்லப் பெருந்தச்சரைக் குறை சொல்வானா. நித்தவினோதப் பெருந்தச்சனைக் கொண்டாடுவது உமாபதியாருக்குப் பிடிக்கவில்லை அவ்வளவே அதுதான் அடிப்படையான விஷயம். தினம் தினம் என்ன வினோதம் ஒருவன் செய்துவிட முடியும் என்ற வெறுப்பு, காழ்ப்பு, இத்தனை நாள் கருங்கல்லில் முட்டிக்கொண்ட பிறகும் நம்மைப் பெருந்தச்சர் என்று யாரும் கூப்பிடவில்லையே என்று பொறாமை. உமாபதி ஆச்சாரியாரை இன்று கல்லுடைப்பவராகவே இன்னும் இந்தக் குலம் கருதிக் கொண்டிருக்கிறதே என்கிற கடுப்பு காரணம். உமாபதியின் பெயர் இந்தக் கோயிலில் வருமா... வராதா... என்பது தெரியவில்லை. ஆனால், நித்தவினோதப் பெருந்தச்சனின் பெயரும், இலத்திச் சடையனுடைய பெயரும் இந்தக் கோவிலில் பொறிக்கப்படும் என்பது சத்தியம். உண்மை. என்ன செய்யப் போகிறார் உமாபதி. என் பெயரையும் பொறியுங்கள் என்று கெஞ்சினால் ஒருவேளை பொறிக்கலாம். வயதானால் அறிவு மந்தித்து விடுகிறது. உடம்பு சுருண்டு விடுகிறது. அந்தணர்களுக்கு நீங்கள் பயந்தது உங்கள் காலம். பயப்படாதது எங்கள் காலம். அந்தணர்கள் அத்தனை பேரும்



கெட்டவர்கள் என்று நாங்கள் சொல்லவேயில்லை. நல்லவர்களும், கெட்டவர்களும் எல்லா வகுப்பிலும் உண்டு. எல்லா இனத்திலும் உண்டு. நடந்து போகின்ற குதிரையின் சேணத்தில் கை வைத்தவன் நல்லவனா, கெட்டவனா, என்று எப்படி தெரியும். முட்டாளுக்கு எப்படி சேணத்தைப் பிடித்து நிறுத்துவது என்று தெரியவில்லை. உதை வாங்கினான்; செத்தான். குதிரை எழும்பி நின்று கீழிறங்கும்போது என்ன செய்ய வேண்டும். குதிரைமேலே முன்னங்கால் தூக்கி மூன்று வினாடிகள் நிற்கும். அந்த நேரத்தில் உதறி காததூரம் ஓடலாம்.

கால் தூக்கி நிற்கின்ற குதிரையின் விரைத்த குறிபார்த்து நினைத்து விட்டு அடிவாங்கிச் சுருண்டு போனான். அதற்கு நாங்களா பொறுப்பு என்ன பயமுறுத்துகிறார் உமாபதி ஆச்சாரி. அந்தணர்கள் கருநாகம். அப்படியானால் நான் கீரி. கருடன், கிழித்துக் குதறிப்போட்டு விடுவேன். சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மிகப்பெரிய கற்றளி கட்டுகிறார். சோழ தேசத்துச் சரித்திரத்தில் இப்படியொரு கோயில் கட்டியதில்லை. இனி கட்டவும் முடியாது என்ற அளவிலே மிகப் பிரமாண்டமான ஒரு கோவிலை எழுப்புகிறார். அதற்கு நாம் துணை செய்கிறோம். எனவே நம்மைக் கொண்டாடுகிறார். இது சிற்பிகள் காலம். இந்தக் காலத்தை நாம் பயன்படுத்திக் கொண்டால் என்ன தவறு. இதுவே அந்தணர் குலத்திற்கு இப்படியொரு சிறப்ட கிடைத்தால் அவர்கள் முழுக்க முழுக்க அதைப் பயன்படுத்திக் கொள்ளமாட்டார்களா. இந்த உமாபதிக் கிழவன் அறிவு கெட்டத்தனமாகப் பேசுகிறான். வாய்ப்பு கொடுக்கும் நேரத்தில் நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வதா? இதுதான் நம் தலையெழுத்தாகப் பரம்பரை பரம்பரையாக இருக்கிறது. நமக்கு ஆளுமை கொடுத்தபோது அதைச் செயல்படுத்துகின்ற ஒரு புத்தி திறன் நமக்கு வரவேயில்லை. அதனால்தான் நாம் மேலெழ முடியாத படி அழுத்தி வைக்கப்பட்டிருக்கிறோம். கருமார்கள் சில சிறப்புகளைக் கேட்டதில் என்ன தவறு. அதைப் பெருந்தச்சர் எதிர்க்க வேண்டிய அவசியம் என்ன. நம்முடைய குலத்தைச் சார்ந்த கருமார்கள் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதை ஆதரிக்காது போனாலும் பரவாயில்லை. எதிர்காது இருக்க வேண்டுமல்லவா! பூணூல் அணிந்து கொள்ளக் கேட்பது தேவையா என்று கேட்கிறார். அதுவொரு பெருமை, அது ஒரு மரபு. ஒரு சின்னம். பெருந்தச்சர் என்று பேர் வைத்துக் கொள்ள வேண்டுமா என்று நான் பதிலுக்குக் கேட்டால், எங்கே போய் முகத்தை வைத்துக் கொள்ளுவார். நீங்கள் பெருந்தச்சர் என்று

பெயர் வைத்துக் கொண்டாலும், குறுந்தச்சர் என்று பெயர் வைத்துக் கொண்டாலும் நடப்பதுதான் நடக்கும். அரசர் சொல்லித்தானே கல் அடிக்க வேண்டும். இதில் கர்வம் என்ன பெருமை என்ன. இதையெல்லாம் பேசக் கூடாது. கேட்கக்கூடாது என்றுதான் நானும் அமைதியாக இருந்தேன். என்ன இருந்தாலும் வயதிலே பெரியவர். வேலையில் சிறந்தவர் என்று மௌனம் காத்தேன். எனக்கு வேலை சொல்லிக் கொடுத்த குருநாதர் என்ப தால் எதிர்ப்பு காட்டாது இருந்தேன் கூப்பிட்டு வைத்து முகத்தில் துப்பினால் நானும் பதிலுக்கு இரையத்தான் வேண்டும். யார் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நித்த வினோதப் பெருந்தச்சரை எவராவது எதிர்த்துப் பேசினால் நடப்பதே வேறு. அவர் எனது குலமாயினும் வேறு எவர் குலமாயினும் நான் சும்மா விடமாட்டேன்.

நித்த வினோதப் பெருந்தச்சன் வாராதுபோல் வந்த மாமணி. இலத்திச் சடையன் நித்த வினோதப் பெருதச்சனின் உயிர் மூச்சு. அவர்கள் இரண்டு பேரும் யோசித்து ஆயிரம் விஷயங்களை இங்கு செய்து கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கை முழுவதும் கல்லில் கோடு மட்டுமே அடித்துக் கொண்டிருந்த உமாபதி ஆச்சாரி அவர்களைப்பற்றிச் சொல்வதற்கு யோக்கியதை இல்லா தவர். பட்டைக்கல்லில் புடைப்புச் சிற்பமாக மீன்செய்யவும், பாம்பு செய்யவும் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால், நித்த வினோதப் பெருந்தச்சன் சோழதேசத்தின் தலை விதியையே மாற்றிக் கொண்டிருக்கிறான்.

சரி, அவரை விடு. பாண்டிய தேசத்தினுடைய ஒற்றர் படை ஆள் குணசீலன் நூறு உமாபதி ஆச்சாரிக்குச் சமமானவன். அவனை இழிவுபடுத்திப் பாருங்களேன் என்ன கதி ஆகிறீர்கள் என்று.. அந்த இளைஞன் குணசீலன் நித்த வினோதப் பெருந் தச்சன் போகிற மண்ணை எடுத்து நெற்றியில் இட்டுக் கொள் கிறான். பரம்பரை பரம்பரையான அந்தப் பகையாளி நித்த வினோதப் பெருந்தச்சன் மனிதனில் மேம்பட்டவன் என்கிறான். நீங்கள் பொறாமைப் படுகிறீர்கள். உமாபதி ஆச்சாரி என்கிற பிண்டம் பொங்கி எரிகிறது.

ஒரு இளைஞனான சிற்பி எழுந்து நின்று ஆவேசமாய் கை நீட்டிப் பேச, கிழவர்கள் வெகுண்டு எழுந்தார்கள். மற்றவர்கள் சீறினார்கள்.

அங்கே உரத்தகுரலில் மிகப் பெரிய சண்டை உருவாயிற்று. பெண்கள் ஓடிவந்து சமாதானம் செய்தார்கள்.



அந்தச் சண்டை சிற்பிகளில் பலபேரைத் தலைகுனிய வைத்தது.

ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு முறை நல்ல காலம் வரும். க்ஷத்திரியர் ஆட்சியும், பார்ப்பனர் ஆட்சியும், வைசியர் ஆட்சியும், ஏன் பஞ்சமர் ஆட்சியும் வரக்கூடும். அதேநேரம் அந்தக் குலம் சிறக்கத் தொடர்ந்து வலிவாக அந்தக் குலத்தார் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். மாறாய் நம்மை நாமே இங்கு இழிவு படுத்திக் கொண்டிருக்கிறோம். பிரிந்து அடித்துக் கொண்டிருக்கிறோம்.

"வேறு எந்தக் குலத்திலும் நடக்காதய்யா. விஸ்வகர்மாக்கள் என்கிற இந்த ஆச்சாரிகள் குலத்தில் தான் இந்த ஒற்றுமை யின்மை இருக்கும். அது நம் தலையெழுத்து." சில பெரியவர்கள் நொந்து கொண்டார்கள். கண்ணீர்விட்டு அழுதார்கள்.

கோயில் முடிக்கும் வரை குடித்தனம் செய்ய மாட்டோம் என்று கங்கணம் கட்டிக் கொண்ட உமாபதியோடு, சபதம் எடுத்துக்கொண்ட தாணுமாலய ஆச்சாரியும், விஸ்வநாத ஆச்சாரியும் எழுந்து நின்றார்கள்.

"நம் குலத்திற்கு ஒரு மதிப்பு வரும்போது அந்தச் சிறப்பு களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது சரி. ஆனால் இதற்காக அடுத்தவரை மறுப்பதும், அடுத்தவரை மறிப்பதும், அடுத்தவரைப் போய் வம்புக்கு இழுப்பதும் தவறு. அக்ரஹாரத் தில் நுழைந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அக்ரஹாரத்தில் கற்பாறையோ, கல் உடைக்கும் கருவிகளோ இல்லை. எனவே, ஏன் வந்தாய் என்ற கேள்விக்குச் சரியான பதில் தரவே முடியாது. அக்ரஹாரம் சுற்றிக்கொண்டு போயிருக்கலாம். வம்புக்குத்தான் போனார்கள் என்பதை விசாரித்தால் நீங்களே ஒப்புக் கொள்ளத் தான் நேரும். அதே நேரம் அது கொலையல்ல.. விபத்து அந்த முட்டாள் அந்தணன் குதிரையைப் பிடிக்கத் தெரியாமல் பிடித்து இறந்து போனான். அவன் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு ஏதேனும் செய்துவிட்டு வரவேண்டும் அந்தணர்களைப் புறக்கணிக்கக்கூடாது. அவர்கள் கேட்டது சரியா, தவறா என்று நாம் விமர்சிக்கக் கூடாது. ஒருவேளை கருமார்களுக்கு அந்தத் தகுதிகளெல்லாம் கிடைத்தால் நாம் அதை எப்படி மறுக்க முடியும். நல்லது கெட்டதிற்குச் சங்கு ஊதிக் கொள்ளவும், வீட் டிற்கு இரண்டு வாசல் வைத்துக் கொள்ளவும், சுண்ணம் அடித்துக் கொள்ளவும், திண்ணை கட்டிக் கொள்ளவும், பல்லக்கில் போகவும், கால் செருப்பு போட்டுக் கொண்டு நடந்து போகவும்,

கடைசியாகப் பூணூல் அணிந்து கொள்ளவும் உரிமை கேட்டு அது கொடுக்கப்பட்டால், எங்களுக்கும் வேண்டாமென்று நாம் சொன்னால் நாம் விஸ்வகர்மா குழுவிலிருந்து பிரிவுபட்டவரா வோம். இது மகாபாபம். எனவே கருமார்களுக்குக் கிடைத்த அந்த மரியாதையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் பட்ட பட்சத்தில் கருமார்கள் கேட்பதை எதிர்த்தலும் தவறு. குஞ்சரமல்லப் பெருந்தச்சர் நம்மிடையே பேசுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமே தவிர இது குறித்து வேறு எவரிடமும் கருமார்களுக்கு எதிராகப் பேசிவிடக்கூடாது.

நித்த வினோதப் பெருந்தச்சன் வாராதுபோல் வந்த மாமணி. கொண்டாடப்பட வேண்டியவன். அவனையும் இலத்திச்சடை யனையும் நாம் நிச்சயமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். வயதிலே இளைஞன் என்பதால் அவனை வாய்க்கு வந்தபடி பேசுவது தவறு. பெரியவர்கள் அந்த இடத்தில் நிதானமாக இருக்க வேண்டும். அதே நேரம் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க இங்குள்ள இளைஞர்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் உளி பிடிக்கக் கற்றதும், சுத்தியல் அடிக்கக் கற்றதும், கல்லில் உட்காரக் கற்றதும் அந்தப் பெரியவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். நீங்கள் அவர்கள் வித்து. உங்களுக்கு முன்பு அவர்கள் பல வித்தைகள் செய்து காட்டியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இப்போதுதான் கற்றளி எழும்புகிறதா? இப்பொழுதுதான் கல் வேலை செய்கிறோமா கல் வேலைகள் ஆரம்பித்து அறுநூறு வருடங்கள் ஆரம்பித்துவிட்டதடா. இன்று அலட்டுகிற அந்த இளைஞர்கள் திருக்கடல்மல்லை போய் பார்க்கட்டும். உங்கள் தாத்தாவுக்குத் தாத்தா, தாத்தாவுக்கு தாத்தா மகிஷாசுரமர்த்தினி செய்திருக்கிறார். அவர் கால் தூசிக்கு யாரும் ஈடாக முடியாது. அங்கு துவங்கியது சிற்பிகளின் சாதனை. இது இன்று நேற்று முளைத்ததல்ல. நித்த வினோதப் பெருந்தச்சன் உயர்வானவன் தான். ஆனால் அந்த உயர்வுக்கு முன்னால் அறுநூறு வருட உழைப்பு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பெரியவர் உமாபதி ஆச்சாரியார் சொன்னதுபோல பேச்சைக் குறையுங்கள். சித்திரக்காரனும், சிற்பியும், புலவனும் அதிகம் பேசக்கூடாது.

இன்னொரு முக்கியமான செய்தி. ஊரில் பெண்டுகள் அதிகரித்து விட்டார்கள். பரத்தையர்கள் பெருத்துவிட்டார்கள். ஜாக்கிரதையாக இருங்களய்யா குலத்திற்கு அவமானம் தேடித்தராதீர்கள். இந்தச் சிற்பிகளே இப்படித்தான் என்று பேச்சுவரும்படி வைத்துவிடாதீர்கள். தலைப்பாகை, கடுக்கன்,



பட்டுச்சால்வை, தங்கச்சங்கிலி, வெள்ளிக்கழல் என்று திரியா தீர்கள். வைசியர்களெல்லாம் எளிமையாய் இருக்க சிற்பிகளுக் கென்ன சிங்காரம்" தாணுமாலய ஆச்சாரி உரத்த குரலில் சொல்லியதும் இளைஞர்கள் முணுமுணுத்தார்கள். விஸ்வநாத ஆச்சாரியார் எழுந்து நின்று அமைதிப்படுத்தினார்.

"தவறு நல்லது கெட்டதை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். மறுபடியும் சொல்கிறேன். இது சிற்பிகளின் காலம். கெடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் அமைதியாக இருந்தாலே கிடைக்க வேண்டியது நிச்சயம் கிடைக்கும். சத்தம் போட்டால் கொடுக்கப் படுவதும் அவமானத்தோடு தான் கலந்து கொடுக்கப் படும். மிக மிகக் கவனமாக இருங்கள்."

குஞ்சரமல்லப் பெருந்தச்சன் மனைவி வரை இந்தச் செய்தி போயிற்று.

குஞ்சரமல்லரிடம் இதை எடுத்துச் சொல்வார் யாருமில்லை. அவர் வேறு மனோநிலையில் இருந்தார். தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தார். குளிக்கும் போது எங்கோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்தார். உணவு உண்ணும்போது ஏதோ சிந்தனையில் இருந்தார். திரும்பத் திரும்ப கோவில் கட்டு கின்ற புல்வெளிக்குப் போய் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந் தார். அவரோடு ஆறு ஆட்கள் இருந்தார்கள். அதில் இரண்டு பேர் சிற்பிகள். இரண்டு பேர் காவலர்கள். இரண்டு பேர் ஊழி யர்கள். சிற்பிகளுக்கு அவர் சொன்ன விஷயங்களை வேகமாகக் குறிப்பெடுத்துக் கொள்ளத் தெரியவில்லை. அவர்கள் மறந்தபோது அடி வாங்கினார்கள்.

குஞ்சரமல்லருக்குக் கோபம் வந்தால் கண்மண் தெரியாமல் அடிக்க ஆரம்பித்து விடுவார். அவர் கோபத்தை அவர் மனைவிதான் சமாதானப்படுத்தக் கூடும். இதனால் அவரிடம் வேலை செய்யவும், அருகே போய்ப் பேசவும் பயந்தார்கள். ஆனால், அவர் மனைவி நடந்த விஷயங்களைச் சொல்லுவதற்கு ஆரம்பித்தாள்.

சிற்பிகளுக்குள் அபிப்ராயபேதம் வந்துவிட்டது. இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து கொண்டு பேசுகிறார்கள் என்று விஷயம் சொல்ல, வெட்டிக் கொன்று போடுவேன் என்றார். ஒரு வார்த்தை எவன் பேசினாலும் அடிப்பேன் என்று சீறிச் சொன்னார். எதற்கு என்று கேட்க எவருக்கும் தெரியவில்லை. மறுபடியும் வேறு ஏதோ ஒரு சிந்தனையில் மூழ்கிப் போனார்.

இவரிடம் பேசி எதுவும் சரியாகாது என்ற நினைப்பில் குஞ்சரமல்லரின் மனைவி அந்த இடம்விட்டு அகன்றாள். அவரிடம் எதுவும் பேசமுடியவில்லை என்று சொன்னாள். மற்ற சிற்பிகள் கவலைப்பட்டார்கள். நித்த வினோதப் பெருந்தச்சரிடம் போய் நீ அவரிடம் பேசேன் என்றார்கள்.

எதற்குப் பேசவேண்டும். அப்படிப் பேசும்படி என்ன நடந்துவிட்டது. அவருக்குத் தெரிய வேண்டிய அவசியமென்ன. இதையெல்லாம் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். அவர் ஒரு பெருந்தவத்தில் இருக்கிறார். அதை நான் கலைக்க மாட்டேன். அது எவ்வளவு பெரிய வேதனை என்பது எனக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியவில்லை. அவருக்கு இடுப்பு வேட்டியும், உண்ணும் உணவின் அளவும் தெரியவில்லை. ஒரு யோகீஸ்வரரைப் போல் அவர் வாழ்கிறார். அவருடைய சிந்தனைகளில் இந்த விஷயங்களை தயவு செய்து கலக்க விடாதீர்கள். ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்வேனே தவிர, அவர் தவத்தைக் கலைப்பதற்குச் சக்ரவர்த்தி உட்பட எவருக்கும் உரிமையில்லை. சில சமயங்களில் சக்ரவர்த்திகூட அவர் திகைத்துப் போய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விலகிப் போகிறார். நீங்கள் என்னை ஏன் கலைக்கச் சொல்கிறீர்கள்." என குணவன் என்கிற நித்த வினோதப் பெருந்தச்சன் சீறினான்.

பெரிய சிற்பிகள் வாயைப் பொத்திக் கொண்டு விலகினார்கள்.

இந்தப் பையன் அவருக்கு மேல் நம்மை ஆட்டுவிப்பான் போலிருக்கிறதய்யா என்று ஒரு மூத்த சிற்பி சொல்ல அவரையும் அடக்கினார்கள்.

பெருந்தச்சர் குஞ்சரமல்லன் கோயில் எழும் இடத்தைச் சுற்றி வந்தார்.

"குணவன் நித்தவினோதப் பெருந்தச்சன் சுழல்பாதை போடும்படி சொல்கிறான். இவ்வளவு பெரிய விமானம் கட்ட சுழல் பாதை எங்கே ஆரம்பிக்க வேண்டும். எப்படி கெட்டிப் படுத்தப் பட வேண்டும். எதனால் உயர்த்தப்பட வேண்டும். அடுத்த சுழல் எங்கே ஆரம்பிக்கும். அதற்கு அடுத்த சுழல் எங்கே ஆரம்பிக்கும். அதற்கு அடுத்த சுழல் எங்கே ஆரம்பிக்கும். ஆக மொத்தம் ஐந்து சுழல்பாதை உச்சிக்குப் போகும்வரை இருக்குமெனில் ஒரு பாதையின் அகலம் என்ன."



"இரண்டு யானைகள் போகும் அளவுக்கு ஒருபாதை அகலம். கிட்டத்தட்ட பன்னிரெண்டு முழ அகலம் போதுமா."

"போதாது. ஐந்தாவது உயரச் சுற்றிலிருந்து யானை தவறி விழுந்தால், கல் தவறி விழுந்தால் என்ன ஆகும். யானையின் மீது இருக்கிறவனுக்குத் தலை சுற்றாதா."

"பதினைந்து முழம் என்று வைத்துக் கொள்வோமா."

"பதினாறு முழம் என்று வைத்துக் கொள்வோம். அதாவது உச்சியில் கலசத்திற்கு அருகே போகும் பாதை பதினாறு முழம். அம்மாதிரி ஐந்து பாதைகள். பதினாறு முழ ஐந்து பாதைகள். எண்பது முழம். நடுநடுவே ஒரு முழச்சுவர் அகலமும் சேர்த்து கொண்டால் எண்பத்தாறு முழம். கோயில் விமானத்து வெளிச் சுற்றிலிருந்து எண்பத்தாறு முழம் வெளியே முதல் பாதை ஆரம்பிக்க வேண்டும். அப்படிப்பட்ட பாதை தெளிவாகப் போடப்பட வேண்டும். ஏற்றம்.. ஏற்றம்.. ஏற்றம்.. என்று நடக்க வேண்டும். முதல் இரண்டு தப்படிக்கு பத்து பெட்டி மண் தேவைப்பட்டால் அடுத்த மூன்றாவது நான்காவது தப்படிக்கு இருபது பெட்டி மண் தேவைப்படும். ஐந்தாவது ஆறாவது தப்படிக்கு நாற்பது பெட்டி மண் தேவைப் படும். கடவுளே.. கடவுளே.. என் சிவனே. இவ்வளவு மண்ணை எங்கிருந்து கொடுப்பது. அப்போது ஐம்பதடி தப்படி தொலைவில் எத்தனை மண் தேவைப்படும். மூன்று ஆள் உயரத்திற்கு மண் தேவைப்படும். அந்த மண் மழை பெய்தால் என்ன ஆகும். கரையாதா.. கரையாது இருக்க என்ன வழி? எது கொடுத்து அந்தப் பாதையை உயரத்தூக்குவது. அண்டக் கொடுப்பதற்கு என்ன வழி. கோயில் உச்சிக்குச் சாரம் கட்டினால் சரியாக வராது என்கிறான். இது சரியாக வருமா? இத்தனை மண்ணைக் கொண்டு வந்து கொடுத்து, இத்தனை மண்ணை வெளியே சேர்க்க வேண்டும். எங்கிருந்து எடுத்து வருவது. மறுபடியும் எங்கே போடுவது. எடுத்த இடத்தைக் குளமாக்கலாம். குளத்தை மறுபடியும் தூர்ப்பதா. என்ன கொடுமை இது.

"மண் எடுக்கிற இடம் ஒரு இடம். மண்ணைக் கொண்டு போய் கொட்டுகிற இடம் இன்னொரு இடம்."

"கோவிலைச்சுற்றிக் கொட்டலாமா."

"இல்லை. இன்னும் தொலைவாக நல்ல தொலைவாகக் கொட்ட வேண்டும். சரளைக்கல் மண் உறுதியாக இருக்கும். கனம் தாங்கும் என்கிறான். இதே சரளைக்கல் மண்ணை

அப்புறப்படுத்தும் போது எந்த இடத்தில் கொண்டு போய்க் கொட்ட வேண்டும். கோயிலிலிருந்து நேர்மேற்காக ஒரு வெட்ட வெளி இருக்கிறது. அந்த வெட்ட வெளியில் கொண்டு போய் மண்ணைக் குவித்து விடுதல்தான் சிறப்பு. தெற்கே திரிசிரபுரத்தி லிருந்து வரும் பாதை. வடக்கே தஞ்சையிலிருந்து வரும் பாதை. கிழக்கே திருவாரூர் நாகப்பட்டிணத்துப் பாதை. எனவே மேற்கே கொட்டுதல்தான் நல்லது. அந்த இடம் முழுவதும் செம்மண் ணாக மாறும். நீர் முழுவதும் செம்மண்ணாக மாறும். எல்லார் உடைகளும் செம்மண்ணாக மாறும். ஏன், இந்தக் கோவில் பாறைகள் கூட செம்மண்ணாக மாறும். நார்த்தாமலையிலிருந்து வருகின்ற இந்த நீளத்தூண்களெல்லாம் கூட செம்மண்ணாக மாறும்.

கோவிலின் நிறமே செம்மண்ணாக மாறிவிடுமோ. அது அழகோ.. இல்லை அவலமோ.."

அவர் சிந்தித்தார்.

முன்னும் பின்னும் அலைந்தார். நடந்து போய் ஒரு பாறையில் உட்கார்ந்தார். அவரது ஊழியன் மெல்ல கிண்ணம் எடுத்து வந்து அவரிடம் நீட்டினான்.

என்ன என்பதுபோல் பார்த்தார்.

"குழம்பும், சோறும் பிசைந்து வைத்திருக்கிறார்கள். மதனியார், ஒருவாய் எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள். விடிந்ததிலிருந்து எதுவுமே சாப்பிட வில்லையே."

"ஆமாம் அய்யா.. மறந்து போய் விடுகிறது."

அவர் அன்பொழுக அவனைப் பார்த்தார்.

"மிக்க நன்றி." என்று சிரித்தார்.

பாத்திரத்தைத் திறந்து உள்ளே விரல் வைத்து குழம்பு சோற்றை உருட்டி வாயில் போட்டுக் கொண்டார்.

சூரியன் விலகி சுள்ளென்று அடிக்க வர்ணக்குடையை விரித்துப் பிடித்தார்கள். அவருக்கு நிழல் காட்டினார்கள்.

அவர் குடிக்க நீர் கேட்டார். கொடுத்ததும் ஒரு சொம்பு நீரைக் குடித்தார். எழுந்து நின்று சோம்பல் முறித்தார்.

"என்னமோ சிந்தனை. எதுவும் சரியாக வரவில்லை. ஒரு செங்கல்லைத் தலைக்கு வை." என்று சொல்லி அந்தக் கல்லில் மெல்லத் துணி விரித்துச் சாய்ந்து கொண்டார். குடை



யைப் பெரிதாக்கினார்கள். நிழலை அதிகமாக்கினார்கள். அவர் சாய்ந்து கொள்ள விசிறினார்கள். அவருடைய உதவியாளச் சிற்பிகள் ஓரம் போய் அமர்ந்து கொண்டார்கள்.

குஞ்சரமல்லப் பெருந்தச்சன் ஏதோ கணக்குகளோடு தூங்கினார். தூங்குகிற நேரத்திலும் கணக்குகள் போட்டார்.

அருண்மொழிப்பட்டரும், பிரம்மராயரின் மெய்க்காவல் படையைச் சேர்ந்தவனும் குதிரையில் ஏறி அந்தப்புல் மேட்டிற்கு வந்தார்கள்.

குஞ்சரமல்லர் எங்கிருக்கிறார் என்று விசாரித்து அந்தப் பக்கம் குதிரையைத் திருப்பினார்கள். அவர் படுத்துக் கிடக்கிறார் என்றதும் குதிரையைத் தொலைதூரமே நிறுத்தினார்கள். இறங்கி நடந்து வந்தார்கள். அருண்மொழி அவருக்கருகே போய் உற்றுப் பார்த்தான். ஆழந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

என்ன இது என்று உதவிச் சிற்பிகளைக் கேட்டார்.

"நேற்று முழுவதும் தூங்கவில்லை. இரவும் தூங்கவில்லை. இப்போது சிறிது குழம்பு சாதம் சாப்பிட்டார். தூங்குகிறார்."

"சரி இவரை எழுப்ப எனக்கு மனம் இல்லை. இவருக்கு உதவியாக நான்கு அந்தண இளைஞர்களை அனுப்புகிறேன். மகுடகாந்தன் என்று ஒரு இருபத்தைந்து வயது வாலிபன் மூன்று இளைஞர்களோடு வருவான். அந்த மகுடகாந்தன் மிகத் திறமை சாலி. கணக்கில் வல்லவன். மகுடகாந்தனுக்கும் மற்ற மூன்று இளைஞர்களுக்கும் சோழதேசத்து அரசாங்கம் கூலி கொடுக்கும். வேட்டியும், நெல்லும் அனுப்பும். வேலை வாங்கிக் கொள்ளுதல் மட்டுமே குஞ்சரமல்லரின் பொறுப்பு. அவருக்கு அருகிலேயே அவர்களுக்குத் தங்குமிடம் ஏற்பாடு செய்து தருவது உங்கள் பொறுப்பு. அதை நான் சொன்னதாகச் சொல்லுங்கள். அவர்கள் நல்ல நேரம் பார்த்து இவரிடம் வருவார்கள்." சொல்லிவிட்டு அருண்மொழி விலகிப் போனான்.

"அப்பா... கணக்கு வைக்கிற வேலை நம்மிடமிருந்து போனால் போதும். நான் போய் மறுபடியும் மீனும், பாம்பும் செதுக்க ஆரம்பித்து விடுவேன்."

ஒரு சிற்பி பதில் சொன்னான்.

குஞ்சரமல்லப் பெருந்தச்சர் உறக்கம் கலைந்து எழுந்தார்.

"ஹா.. என்ன தூக்கம், சுகமான தூக்கம். தூக்கத்தில் கோவில் கட்டி முடித்துவிட்டேன் தெரியுமா." என்று பொதுவாகப் பேசி

உரக்கச் சிரித்தார். மற்றவர்களும் சிரித்தார்கள். விஷயம் சொன்னார்கள்.

"அப்படியா.. யார் அந்த இளைஞர்கள்? ஏன் இதுவரை வரவில்லை" என்று பரபரப்பாக எழுந்தார்.

தொலைவில் நான்கு அந்தண இளைஞர்கள் ருக்வேதம் சொல்லியபடி அந்தப் புல்வெளியை வலமாகச் சுற்றிக்கொண்டு வந்தார்கள்.

அவர்கள் கைகூப்பி மரியாதையோடு அந்தப் புல்வெளியை வலம் சுற்றி வேதம் சொல்லி வருவது குஞ்சரமல்லப் பெருந் தச்சருக்குப் பிடித்தது; பெருமையாக இருந்தது.

"மகுடகாந்தனா உன் பெயர். அழகாக இருக்கிறது. நீயாக வைத்துக் கொண்டாயா. பெற்றோர் வைத்தார்களா."

"என் தாய் பிரியமாக வைத்த பெயர்."

"ஐயா, உன் தாய் நல்ல குணவதி போலும். ரசனை மிக்கவள் போலும்."

மகுடகாந்தனுக்குக் கேட்பதற்கே மிகவும் சந்தோஷமாக இருந்தது.

"மகுடகாந்தன் உனக்கு என்ன தெரியும்."

"ஐயா. உங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கட்டளை. எப்படிப்பட்ட உதவி என்று எனக்குத் தெரியவில்லை. கணக்கு வழக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். உங்களுக்கு எம்மாதிரியான கணக்குகள் வேண்டும் என்று நீங்கள் சொன்னால் நானும் என் நண்பர்களும் சிந்தித்து அந்தக் கணக்குகளை வைத்துக் கொள்வதற்கு ஏதேனும் ஒரு வழி கண்டு பிடிப்போம். உங்கள் வேலை என்ன என்று தெரியாததால், என் வேலை என்ன என்பதும் எனக்குப் புரியவில்லை."

"ஹா.. அற்புதமாய் பேசுகிறீர். இப்படித் தெளிவாக அடிப்படை விஷயத்தையே கிழித்துப் போட்டுப் பேசுகிறவரைத் தான் எனக்குப் பிடிக்கும். எனக்கு எல்லாம் தெரியும் என்று சொன்னால்தான் பிரச்சனை. என்ன செய்வது என்று தெரிய வில்லை என்று சொன்னீரே. நாம் யோசித்து முடிவுக்கு வந்துவிட லாம். இப்போது என் மனதுக்குள் கோயிலின் அஸ்திவாரத் திற்கான கணக்குகளிலிருந்து உச்சி கலசத்திற்கான கணக்குகள் வரை இருக்கின்றன. அவ்வப்போது திரும்பத் திரும்ப விதம்வித



மான கணக்குகளை உங்களுக்குச் சொல்வேன். நீங்கள் தலைப்பிட்டு தனித்தனி ஓலைகளாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த ஓலைகள் வைத்துக் கொள்ளப் புதுப்பெட்டிகள் தயார் செய்து கொள்ளுங்கள்."

"மரப்பெட்டிகள் வேண்டாம் பெருந்தச்சரே."

"பிறகு."

"நான் புறாக்கூண்டுகள் போல ஒரு அமைப்பு செய்து அதை அகரவரிசைப்படுத்தி வைத்து விடுவேன்."

"அகரவரிசைப்படுத்தி என்றால்.."

"க-கலசம். அஸ்திவாரம் ஒன்று. இரண்டு, மூன்று, அஸ்திவாரம். உள்பக்கம். அ-உ. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, வாயில்படி முதல், வாயில்படி இரண்டு, வாயில்படி மூன்று, உட்புறச்சுவர், வெளிப்புறச்சுவர். உள்புறச் சுவர் கிழக்கு, கீழ்த் தளம் முதல், மேல்தளம் இரண்டு, மேல் தளம் மூன்று என்று சொல்லப்படும். கோபுரங்களுக்குத் தனிக்கூண்டு இருக்கும்."

"நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்வது. இம்மாதிரியான அறைகள் எங்கு செய்யப்பட வேண்டும்."

"இம்மாதிரி வீட்டில் ஓலைக்கூரை இருக்கக்கூடாது. ஒரு வேளை கூரை பற்றினால் மொத்தமும் பாழாகுமல்லவா."

"ஆமாம். தளம்போட்ட இடம் எங்கிருக்கிறது. ஒன்று செய். என்னுடைய வீட்டின் மேல்பகுதிக்கு வந்துவிடு."

"அங்கு உங்கள் மனிதர்கள் இருக்கிறார்களே.."

"அவர்களை வெளியேறச் சொல்லி விடுகிறேன். அந்த இடத்தின் கூடத்தில் இம்மாதிரியான கூண்டுகள் செய்ய வைத்து, மற்ற அறைகளிலும் இம்மாதிரியான கூண்டுகள் செய்ய வைத்து நீங்கள் நால்வரும் அங்கேயே தங்கிக் குறிப்பெடுத்து எழுதி வைத்துக் கொள்ளுங்கள். மெல்ல மெல்ல வேலைப்பளு அதிக மாகும் என்று எனக்குத் தெரியும். மகுடகாந்தா நீ என் கூடவே இரு."

அடுத்த மூன்று நாட்களில் குஞ்சரமல்லப் பெருந்தச்சரின் வீட்டு பெண்களும் மற்றோரும் மிகப்பெரிதுமான, அழகுடன் கூடியதுமான அந்த வீட்டை விட்டு நகர்ந்து தஞ்சாவூரின் உட்புறம் போனார்கள்.

கோயிலுக்கான வரைபடங்களைத் தனியாக ஒரு வீட்டில் வைத்த குஞ்சரமல்லர், சிறு ஓலைகளில் அந்த அந்தணர்களின் உதவியோடு பல குறிப்புகள் எடுத்து வைத்துக் கொண்டார். அந்தக் குறிப்புகளை எடுத்துப் படிக்கும்போது அவருக்கு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணமும், என்ன யோசித்து இந்த குறிப்புகளைக் கொடுத்தோம் என்ற எண்ணமும் பளிச்சென்று வரத்துவங்கின..

"மகுடாகாந்தா! என் வேலை எளிதாகி விட்டது. உன்னுடைய வருகை கடவுளுடைய வரப்பிரசாதம்." என்று குதூகலிக்கத் துவங்கினார். பாறைகள் தொடர்ந்து இறங்கிக் கொண்டிருந்தன. சிற்பிகள் பாறைகளைச் சமன் செய்து கொண்டிருந்தார்கள். அஸ்திவாரத்தின் எல்லாப் பகுதிகளிலும் கற்கள் இறக்கப் பட்டன. உயரமாய்ச் சுவர் எழுப்பட்டது.

தைமாதம் மிகப்பெரும் மழை வரும் என்று கணிக்கப் பட்டது. ஜோசியர்கள் மேகத்திரளைச் சுட்டிக் காட்டிக் கவன மாக இருக்க வேண்டுமென்று எச்சரித்தார்கள்.

தளிச்சேரிப் பெண்டுகளுக்காகவும், மறவர்களுக்காகவும் செங்கல் வீடுகள் கட்டப்பட்டன. கூலிகளுக்காக இன்னும் அழுத்த மான கூரையோடு உயரமான மேட்டோடு கட்டப்பட்டது. மரப் பலகை களைப் படுப்பதற்காகக் கொடுத்து பல கொட்டகைகள் எழுப்பினார்கள். மண் அள்ளிக் கொண்டு வருவதற்காகச் சிறுசிறு மாட்டு வண்டிகளைச் செய்தார்கள். அம்மாடுகளைப் பாதுகாக்க இடையர்கள் அதிகம் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். பாரவண் டிகள் தஞ்சையை நோக்கி இடையறாது வந்து கொண்டிருந்தன. அவைகளில் நெல்லும், இரும்புச் சாமான்களும் வந்து கொண் டிருந்தன.

கடற்கரையோரமாகத் தொண்டை நாட்டுப் பாத்திரங்கள் வந்து சேர்ந்தன. மழை கனத்துப் பெய்தது. எல்லா வேலைகளும் நின்றன. போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன. காவேரி சுழன்று பெருக்கெடுத்து நாலாபுறமும் பரவியது. ஊருக்குள் பெய்த மழை ஜலம் வெளியே போக முடியாமல் காவேரியிலும் கலக்க முடியா மல் எதிர்த்து மறுபடியும் பின்னடைந்தது. ஊரிலுள்ள எல்லாச் சாலைகளிலும் முழங்கால் அளவு ஜலம் அறுத்துக் கொண்டு ஓடியது. பள்ளமான பகுதிகளில் உள்ளவர்கள் அலறித் துடித்த படி மேடான பகுதிக்கு வந்து நின்றார்கள். அந்தண இளைஞர் களுடைய கடமை இப்போது பொதுமக்களைக் காப்பதாகப் போயிற்று.



சிற்பிகள் எல்லோரும் குடிசைக்குள் போர்த்திக் கொண்டு உட்கார்ந்து மீனும், மாமிசமும் சாப்பிட்டு பெண்டுகளைச் சீண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குழந்தைகளுக்குச் சுண் ணாம்புக் கட்டியால் தரையில் படம்போட்டு ஒரு சிற்பத்தில் கற்களை நீக்குவது எப்படி என்று பாடம் நடத்திக் கொண் டிருந்தார்கள்.

குளிர்க்காற்று ஊரைத்தாக்கிற்று. பலபேருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. நார்த்தா மலையில் ஒரு கல்கூட புரட்ட முடிய வில்லை என்றும் செய்திகள் வந்தன. வழியில் இரண்டு இடத்தில் காட்டாறு அறுத்துப் பாதையை நாசம் செய்துவிட்டதாகவும் அந்தப்பாதை செப்பனிடப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன. மழை நின்றாலொழிய வேலை துவங்க முடியாது என்றும் சொல்லப்பட்டது.

மழை மீண்டும் மீண்டும் வலுத்துப் பெய்தது. எல்லாவற்றை யும் விட கவலை அளிக்கக்கூடிய விஷயமாய் காவேரி வெள்ளம் கரைபுரண்டு கால்வாய்களில் இறங்கி வயல்வெளிகளைத் தாக்கிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. ஆதுரச் சாலைகளுக்கு மக்கள் கும்பல் கும்பலாக வந்தார்கள். நிறைய வைத்தியர்கள் வேண்டுமென்று அப்போதுதான் தெரிந்தது.

வயிற்றுப் போக்கும், வாந்தியும் ஏற்பட்டன. கடும் ஜுரம் வந்தது. ஒரு நாளைக்கு முப்பது நாற்பது பேருக்கு மருந்து தயாரிக்கலாம். நூறு இருநூறு பேருக்கு மருந்து தயாரிப்ப தென்றால் எங்கே போவது. வைத்தியர்களைப் பத்து நாட்களில் தயார் செய்ய முடியாது. பல வருடங்களாகப் படித்தால்தான் வைத்தியர்களாக உருவாக முடியும். வைத்தியம் படிக்க கெட்டிக்கார இளைஞர்கள் வருவதேயில்லை.

ஒரு ஆதுரச்சாலைக்கு இரண்டு பார்ப்பன இளைஞர்களாக ஆறு ஆதுரச்சாலைக்கு பன்னிரெண்டு பார்ப்பன இளைஞர்கள் அனுப்பப்பட்டார்கள். மருத்துவம் படித்தலும், மருத்துவம் பற்றிய செலவுகளைக் குறித்துக் கொண்டு ஆதுரச்சாலைகளை நிர்வகித்த லும் அவர்கள் வேலைகளாயின.

"இவன் பதினோரு வயதுக் குழந்தை இவனால் ஆதுரச் சாலையை என்ன நிர்வாகம் செய்துவிட முடியும்."

"இதுதான் வயது. இந்த வயதில் ஆரம்பித்தால் "இன்னும் ஐந்து வருடங்களில் அவன் என்ன விஷயம் என்பதைப் புரிந்து கொள்வான். பத்து வருடங்களில் ஆதுரச்சாலையை அற்புதமாக

நிர்வகித்துக் காட்டுவான். நம்முடைய தஞ்சாவூர் மோழை சிறிய மாடுதான். ஆனால் என்ன ஓட்டம் ஓடுகிறது. அதுதானே எல்லா மண் வண்டிகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது. அதே போல் பார்க்கச் சிறியவனாக, வயதில் இளையவனாக இருந்தாலும் துடிப்பானவன்."

கொண்டு வந்து சேர்த்த அரசாங்க அதிகாரி மருத்துவரிடம் சொன்னார். மருத்துவரும் அரைமனதாக எடுத்துக் கொண்டார். ஆனால், மறுவாரமே அந்த மோழை மாடு- மெல்லிய சிறிய பார்ப்பன இளைஞன்- எவ்வளவு வேகமானவன் என்பதைப் புரிந்து கொண்டார்.

"முதல் வேலை மருந்து அரைக்கறது."

"அரைப்போம்."

"அடுத்தபடியான வேலை மருந்துகளைச் சேகரிப்பது."

"சேகரிப்போம்."

மூன்று நாட்கள் மருந்து அரைத்தான். அரைத்ததைச் சேகரித்து வைத்தான். மழை இடைவெளிவிட்ட பிறகு அவன் போய் மரப்பட்டைகளை உரித்து எடுத்து வந்தான். கூறுகளாக்கி அடித்து நசுக்கி வஸ்திரகாயம் செய்து பொடியை வெல்லப் பாகில் காய்ச்சி, புடைத்து மறுபடியும் கலவை தயாரித்தான். பதினோரு நாட்கள் பெய்தமழை மெல்லக் குறைந்தது. ஊரிலுள்ள வெள்ளம் வடிந்தது. வயிற்றுப் போக்குக்கும் ஜுரத்துக்கும் மருந்துகள் வீடு தேடி கொண்டு போய் கொடுக்கப்பட்டன. லேசான வயிற்றுப் போக்கு இருந்தாலும் உடனடியாக மருந்து எடுத்துக் கொள்ளும்படி முரசறைந்து சொல்லப்பட்டது.

ஒருவர்கூட பலியாகவில்லை. வழக்கமாய் பத்துப் பன்னிரெண்டு உயிர்கள் சாகும் என்று சொல்லப் பட்டது.

அதிகாரிகள் சந்தோஷமானார்கள். கிருஷ்ணன் ராமனிடம் தெரிவித்தார்கள். கிருஷ்ணன்ராமன் இராஜேந்திரரிடம், சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரிடம் தெரிவித்தார்.

பஞ்சவன்மாதேவி குந்தவைக்குத் தெரிவித்தாள். குந்தவை யானையின் மீது ஏறிப்போய் ஆதுரச் சாலைகளில் தங்கியிருந்தவர்களை விசாரித்தாள்.

அந்த அந்தண இளைஞர்களையும், மருத்துவர்களையும் ஒன்று கூட்டி என்ன வேண்டும் என்று கேட்டாள்.



கட்டிடங்கள் வேண்டும் என்று சொன்னபோது அவை நித்த வினோதப் பெருந்தச்சரிடம் சொல்லப் பட்டது. நித்த வினோதப் பெருந்தச்சன் அந்தப் பொறுப்பை குணசீலனிடம் தெரிவித்தான்.

"என்னால் கோவில் பணியை விட்டு வரமுடியாது. கிழக்கு மேற்காக நீண்ட அறைகளைக் கட்டிவிடு. அந்த அறையில் இடப் பக்கம் முப்பது பேரும், வலப்பக்கம் முப்பது பேரும் தனித்தனி கட்டிலில் படுக்க வேண்டும். இரண்டு வாசல் வைத்துவிடு. ஒவ்வொரு கட்டிலுக்கும் நேரேசாளரம் இருக்கட்டும். இடப்புறம் ஒரு சாளரமும், வலப்புறம் ஒரு சாளரமும் கட்டி அதற்கு மறைப்பு கொடு. காற்றும், வெளிச்சமும் உள்ளே வரட்டும். கூரையை நன்கு உயரத்தூக்கிக் கட்டு, சற்று சரிவான கல் மேடைகளைத் தயார் செய்.

இம்மாதிரியான அமைப்புகளோடு மருத்துவமனை இருக்கட்டும். கிழக்கும் மேற்குமாக நீள் சதுரமாக மருத்துவமனை இருப்பதால் தெற்கு வடக்காகச் சாளரங்கள் இருப்பதால் உள்ளுக்குள் காற்றோட்டம் மிக நன்றாக இருக்கும். மேற்குப்பக்கம் சுவருக்கு அப்பால் இடைவெளி விட்டு நல்ல உயரமாக இன்னொரு மதில் சுவர் எழுப்பு. புறாக்கூண்டுகள் போல ஓலைகள் வைப்பதற்கு ஒரு அந்தணன் வடிவமைத்துக் கொடுத்திருக்கிறான்.

இங்கே மருந்துகள் வைப்பதற்கு அம்மாதிரியான அமைப்புகள் கருங்கல்லில் தயார் செய்துவிடு. ஆதுரச்சாலைகளுக்கு வெளியே புல்வெளிகளில் கல் ஆசனங்கள் செய்து வை. மருத்துவமனைக்கு அருகே மருந்துகள் கிளறுவதற்குத் தனி சமையல் அறைகள் கட்டு. இருங்கள் என்ன செலவாகும் என்று சொல்கிறேன்."

குணசீலன் பொருட்கள் சொல்ல அவன் குறித்துக் கொண்டான். பொருட்களின் விலையை விசாரித்து அந்த அந்தண இளைஞன் அறிந்து கொண்டான். ஓலையில் எதிர்பாராச் செலவு என்று ஒரு தொகை எழுதினான்.

ஒரு உபசேனாதிபதி மூலமாக ஒரு சேனாதிபதியை அடைந்து, அந்தச் சேனாதிபதி மூலமாகக் குந்தவையிடம் போயிற்று. குந்தவை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரிடம் பேசினார்.

"நீ கொடு குந்தவை.. அல்லது நான் தருகிறேன். யாரங்கே.." என்று இராஜராஜத்தேவர் திரும்ப குந்தவை எழுந்து நின்றாள்.

உள்ளே நுழைந்தவனை வேண்டாம் என்று திருப்பி அனுப்பி. "ஆதுரச்சாலை செலவு மொத்தமும் என்னுடைய செலவாகவும், என் கணவர் செலவாகவும் இருக்கட்டும். நார்த்தா மலையிலும், நாகையிலும், திருவாரூரிலும், திருத்துறைப்பூண்டியிலும் இன்னும் பல ஊர்களிலும் பெரும் ஆதுரச்சாலைகள் நிறுவப்பட வேண்டும். இதற்கான அனுமதியை மட்டும் உன்னிடம் பெறுகிறேன். நீ சம்மதம் என்று சொன்னதாய் எடுத்துக் கொண்டு என் உத்தரவாக அவ்வூர்களுக்கு ஓலை அனுப்புகிறேன்."

"ஓலை அனுப்பினால் மட்டும் போதாது குந்தவை. தஞ்சையில் அந்தப் பன்னிரெண்டு அந்தணர்களும் ஒன்று சேர்ந்து ஆறு ஆதுரச்சாலைகளை எவ்வாறு திறம்பட நடத்துகிறார்களோ.. அதேபோல மற்ற ஊர்களிலும் அந்தண இளைஞர்களை அனுப்பினால் என்ன."

"நல்ல யோசனை. அதேசமயம் இருங்கள் அவசரப் பட வேண்டாம். இருப்பது ஐந்நூறு அந்தணர்கள். அவர்களை நீங்கள் கோயில் வேலைக்குப் பயன் படுத்தாது இப்படி வெவ்வேறு திசையில் திருப்பி விட்டால் சரியாக வருமா. எல்லா ஊர்களிலும் மழை. எல்லா ஊர்களிலும் காய்ச்சல். எல்லா ஊர்களிலும் உடம்பு சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சையில் மட்டும் ஆதுரச்சாலைகள் இருப்பின் அது மற்றவர்களுக்கு வருத்தமளிக்காதா. அங்கெல்லாம் மனிதர்கள் இல்லையா என்று கேள்வி கேட்டால் பதிலுண்டா."

"ஆமாம். குந்தவை. நீ கேட்பது நியாயம். ஆதுரச்சாலைகள் எல்லா ஊரிலும் திறக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை. அதேநேரம் வெறும் ஆதுரச்சாலைகள் எப்படி போதும். சரியாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதுதானே இராஜேந்திரனுடைய எண்ணமாக இருக்கிறது."

"அதற்கு அந்தணர்களை அனுப்பினால் என்ன."

"நீ செய். யார் தடுத்தது. முதற்கட்டமாக சோழ தேசத்தில் முக்கியமாக பதினாறு ஊர்களைத் தேர்ந்தெடுத்து அந்தப் பதினாறு ஊர்களுக்கும் இரண்டு இரண்டு அந்தணர்களாக ஆதுரச்சாலை நிர்வாகிகளாக அனுப்பு. அந்த மகுடகாந்தன் என்ற இளைஞன்தான் தலைவனாக வந்திருக்கிறான். அவனிடம் சொல்.."



"ஆமாம். அந்த மகுடகாந்தனும், குஞ்சரமல்லரும் ஒரே இடத்தில் சாப்பிடுகிறார்கள். ஒரே இடத்தில் படுத்துத் தூங்குகிறார்கள். இடையறாது மகுட காந்தனோடே, அவர் இருக்கிறார். தன் குடும்பத்தையும் அப்புறப்படுத்தி விட்டார்."

"அவர் அப்படிப்பட்டவர்தான். அவருக்கு வேலை என்று வந்துவிட்டால் எதுவும் ஓடாது. இறைவன் அருளால் மகுடகாந்தனும், அந்த மூன்று இளைஞர்களும் அவரோடு ஐக்கியமாகி விட்டார்கள்."

"அதற்காகப் பெண்டுகளை வீட்டைவிட்டு வெளியே அனுப்பியிருக்க வேண்டாம்."

பஞ்சவன்மாதேவி இடையில் புகுந்து பேசினாள்.

"அப்படித்தான் பஞ்சவன்மாதேவி. வீட்டுப் பெண்கள் இதை அனுசரித்துத்தான் போகவேண்டும். அவர்கள் எங்கே குடியமர்ததப்பட்டிருக்கிறார்கள்."

சக்ரவர்த்தி கவலையோடு கேட்டார்.

"வெண்ணாற்றங்கரையில் நாம் நீராடுவோமே.. ஒரு பெரிய நீராழி மண்டபத்தோடு கட்டிய மாளிகை. அங்கே குடியமர்ததப்பட்டிருக்கிறார்கள்."

"வெள்ளக்காலத்தில் அது பத்திரமாக இருக்குமா."

"சற்று வாசற்படி வரை நீர்த்தளும்பி வரும்."

"வெள்ளத்தில் நீராழி மண்டபம் மூழ்கி இருக்குமோ."

"இல்லை. முழங்கால் உயர ஜலம் போகிறதாம். குஞ்சரமல்லர் வீட்டுப் பெண்கள் தடுப்புகளில் சாய்ந்து கொண்டு வெகுநேரம் குளிக்கிறார்கள்."

"சந்தோஷம் தானே?"

"மிகப் பெரிய குதூகலம்."

"குணவன் நித்தவினோதப் பெருந்தச்சனுக்கு அந்தணர்கள் தேவையில்லையா."

"அனுப்பினோம். வேண்டாம் என்று மறுத்து விட்டான்."

சற்று தள்ளி கைகட்டியிருந்த அருண்மொழி விரைவாகப் பதில் சொன்னான்.

"அருண்மொழி கருவூர்த்தேவர் எங்கே அவரைச் சமீபமாகக் காணவில்லையே."

"நேற்றைக்கு வைணவதாசன் வீட்டிற்குப் போனதாக எனது ஒற்றன் ஒருவன் தகவல் சொன்னான்."

"என்னய்யா இது... கருவூர்த்தேவருக்கும் ஒற்றர் படை ஆளை அனுப்புகிறீர்களா."

"இல்லை. அவரே வழியில் அவனைச் சந்தித்து நலம் விசாரித்தாராம்."

இதைக் கேட்டதும் சக்ரவர்த்தி வாய்விட்டுச் சிரித்தார்.

"அந்தச் செய்தி இந்த இடத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லியிருப்பார்."

"அவரை ஒற்றறியக்கூடாது.. அதிலிருந்து அவருக்கு விலக்கு உண்டு என்று ஏதாவது இருக்கிறதா தந்தையே."

இளவரசர் இராஜேந்திரர் கேட்டார்.

"அப்படி எதுவுமில்லை."

"அவரை ஒற்றறியலாமல்லவா."

"செய்து பார்."

சக்ரவர்த்தி சாதாரணமாகச் சொன்னார்.

இராஜேந்திரர் வினோதமான பார்வையோடு சக்ரவர்த்தியை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

"புயல் காற்றை ஒற்றறிய யாரை அனுப்புவாய். அது அன்புக்குக் கட்டுப்படும் பிறவி. எந்த விதமான ஆட்டமும் அதனிடம் பலிக்காது. நீ நினைப்பது போலவே கிருஷ்ணன்ராமனும் நினைத்துவிட்டு அவரை மடக்கலாம் என்று ஆயத்தங்கள் செய்ய, அவமானப்பட்டு திரும்பியிருக்கிறார். உனக்கும் அவமானம் தேவையெனில் செய்..."

"சோழச் சக்ரவர்த்திக்கும் மேலே ஒரு மனிதன் சோழ தேசத்தில் உலவிக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறீர்களா."

"ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து கடைசியில் என்னைக் கடிக்கிறாயா. என்னைத் தூண்டிவிட்டு நான் உரக்கக் கத்துவேன். சோழச்சக்ரவர்த்திதான் உலகத்தின் முதல் நாயகன் என்று வாள் உருவி அலறுவேன் என்று நினைத்தாயா. என்



யோக்கியதைகள் எனக்குத் தெரியும். தன்னை அறிந்தவன்தான் பராக்கிரமசாலி. தன்னை அறிவதுதான் மிகப்பெரிய கடினமான சாதிக்க முடியாத விஷயம். தன்னை அறிவதனுடைய ஆரம்பம் என் யோக்கியதைகள் என்ன. என்னால் எது செய்ய முடியும். எது செய்ய முடியாது என்கிற விஷயங்களைத் தெளிவாக எனக்குள்ளே தக்க வைத்துக் கொள்ளுதல். ஒரு லட்சம் பேர் கொண்ட சோழப்படையைக் கண்ணெதிரே பார்த்ததும் சாளுக்கியன் ஒழிந்தான் என்று நான் நினைத்துக் கொண்டால் அது முட்டாள்தனம். பத்தாயிரத்திற்கும் குறைவான படையோடு ஒரு லட்சம் படையை சிதறடித்துவிடலாம். ஒரு படை நகர்வது அதன் தளபதிகள் கையில் இருக்கிறது. அந்தத் தளபதியின் செயல் அரசனின் கையில் இருக்கிறது."

"இதனால் மட்டுமே வெற்றி தோல்விகளைச் சொல்லிவிட முடியுமா."

"இல்லை. பருவ நிலைமாற்றம். பூமியின் சீதோஷ்ணம். பல்வேறு விஷயங்கள் படை நடத்துவதில் இருக்கின்றன. முன்னே போகின்ற பத்து பேர் திரும்பிச் சிதறிவிட்டால் பின்னே இருக்கிற படை பெரிதாய் கலகலத்துப் போகும். இதற்குப் பல்லவர்கள் உதாரணம். சோழர்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தார்கள். எப்படியெல்லாம் தாக்கினார்கள் என்று எனக்குக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. நூறு வருடத்திற்கு முன்பு நடந்த அந்தப் படையெடுப்பில் இதேபோல வீரம் கொண்ட ஏன், இதைவிட வீரம் கொண்ட சோழதேசத்து வீரர்கள் சின்னாபின்னப் பட்டுப் போனார்கள். பல்லவர்களிடம் அப்போது என்ன இருந்தது. மத ஒற்றுமை. மொழி ஒற்றுமை. இதைத்தவிர அந்த அரசன் எல்லாக் கலைகளிலும் வல்லவன். யோகப்பயிற்சி உள்ளவன். சாதுக்களோடும், சன்னியாசிகளோடும் நெருக்கமான உறவுகள் வைத்துக் கொண்டிருப்பவன். அவருடைய ஆன்மபலம் தான் சோழ தேசத்தை எளிதில் வெற்றி கொள்ளச் செய்தது. ஒரு அரசனுக்கு ஆன்மபலம் சாதுக்களாலும், இதுபோன்ற சித்தர்களாலும் தான் வரும். நீ அவரை விட்டு விலகி விலகி இருக்கிறாயே தவிர, நெருங்கி இல்லை. அவரிடம் நெருங்கிப்பேசி பழகிப்பார். வேறு ஒரு உலகம் உனக்குக் காட்டுவார்."

"சரி தந்தையே.."

இளவரசர் கைகூப்பினார்.

ஆனால், அவர் உள்ளுக்குள் ஒருபெரிய மறுதலிப்பு படர்ந்து எழுந்தது.

"ஈசான சிவபண்டிதரிடம் போய்ப் பேச வேண்டும். கருவூர் சித்தர் பெரிய ஆளா என்று கேட்க வேண்டும். இல்லையென்று தான் ஈசான சிவபண்டிதர் சொல்லுவார். ஏன் இல்லையென்று கேட்டு அதற்கான காரணங்களைத் தெரிந்து கொண்டு வந்து அரசர் முன்னே சொல்ல வேண்டும்."

தேவையில்லாமல் இராஜேந்திரருக்குள் ஒரு மெல்லிய கசப்பு கருவூர்த்தேவர் பற்றி எழுந்தது.

மூவேந்த வேளார் வருகிறார் என்று உரக்கச் சொல்லப் பட்டது. சக்ரவர்த்தி மூவேந்த வேளார் வந்தவுடன் எழுந்திருக்க முயற்சி செய்ய, அவர் ஓடி வந்து சக்ரவர்த்தியின் தோள் பிடித்து அழுத்தி அவர் கைகளைத் தடவி கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"வெகு நாளாயிற்று பார்த்து.. குஞ்சரமல்லர் வீட்டில் சந்தித்த பிறகு இப்பொழுதுதான் சந்திக்கிறோம். நல்ல மழை. எங்கும் வெள்ளக்காடு."

"பாண்டிய தேசத்திலும் மழை உண்டா."

சக்ரவர்த்தி பிரியத்தோடு கேட்டார்.

"இருக்கிறது. அதிசயமாய் இருக்கிறது. வெறும் வரட்டுச் சீமையான பாண்டிய நாட்டு தென் பகுதிகளெல்லாம் கூட நல்ல மழை பெய்து பூமி குளிர்ந்திருக்கிறது. அதிகம் பாதிக்கப்பட்டது திருமுனைப்பாடி நாடு. வீரநாராயணபுரம் ஏரியினுடைய எல்லா மதகுகளையும் திறந்துவிட்டார்கள். நாள் முழுவதும், ஊர் முழுவதும் வெள்ளக்காடாக இருந்து பெரும் பயம் வந்துவிட்டது. ஆனால் வெள்ளம் துவங்கியது போலவே வடிந்தும் விட்டது. ஊர்முழுவதும் சேறாக இருக்கிறது. காய இன்னும் பத்துப்பதினைந்து நாட்களாகும்."

பயிர்த்தொழில் பாதிக்கப்பட்டதா."

"இல்லை. வெள்ளமும் மழையும் தேவையாக இருந்தன. ஒரு சில இடங்களில் மரங்கள் விழுந்தது தவிர, பெருநஷ்டம் எதுவுமி ல்லை. நாம் அங்கங்கே கால்வாய்கள் வெட்டி விளை நிலங்களைப் பெருக்கியது தான் முக்கியகாரணம்."

"இன்னமும்கூட கால்வாய்களை அகலப்படுத்த முடியுமா."

"செய்யமுடியும். ஆனால், வெள்ளக் காலங்களில் தான் இந்தக் கால்வாய்கள் உதவுமே தவிர, மற்ற எல்லாக் காலங் களிலும் இந்தக் கால்வாய்களால் பயனில்லை. இப்படியொரு



குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் இருக்கின்ற உதவுகின்ற கால்வாய்களைக் கட்டத் தேவையா என்பதும் யோசிக்க வேண்டிய விஷயம்."

"விவசாயிகளைக் கலந்து ஆலோசியுங்கள். இருக்கின்ற கால்வாய்களிலிருந்து இன்னும் கிளைக்கால்வாய்களை எடுங்கள். உடனடியாய் வயல்களுக்கு நீர்போய்ச் சேரும்படியான வசதியை ஏற்படுத்திக் கொடுங்கள். அடைமழை கடலுக்குப் போவதற்கு முன்பு நீர் நிலங்களுக்குள் பிரியட்டுமே. வெய்யில் காலத்தில் வறண்டிருக்கும் அவ்வளவுதானே. இருந்து விட்டுப் போகட்டும். சிறுவர்கள் விளையாடுவார்கள். போர்ப்பயிற்சி பெறும் மணற் குவியல்களாக அவை பயன்படட்டும். கால்வாய்களை அதிகப் படுத்துங்கள். இதற்கு என்ன வேண்டும் உங்களுக்கு."

"ஆட்கள்தான். ஆட்கள் மட்டுமல்ல. இப்போது இந்த வேலை களைப் படைவீரர்களை வைத்து உபசேனாதிபதிகளை வைத்துச் செய்யாமல் அந்தணர்களை வைத்துச் செய்யலாம் என்றிருக் கிறேன். அந்தணர்கள் பெரும் உதவி செய்கிறார்களாமே எனக்கு ஒரு இருபது அந்தணர்கள் தரக்கூடாதா."

"கேட்கவில்லையே என்றுதான் காத்திருந்தோம். கேட்டால் கிடைக்காதது உண்டா. தாராளமாக இருபது அந்தணர்களை அழைத்துக் கொள்ளுங்கள். தேவையானால் நேரே போய் நின்று யார் கெட்டிக்காரர் என்ற தோன்றுகிறதோ அவரைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள். வேளாண்மை சாதாரண மான விஷயமல்ல. வேளாண்மை பற்றி யாருக்குத் தெரியும் என்று கேட்டு, யாருக்கு விருப்பம் என்று கேட்டு, அப்பேர்ப் பட்ட அந்தணர்களை எடுத்துக்கொள்ளுங்கள்."

"ஒரு வழக்கு ஒன்று பாக்கியிருக்கிறது."

"என்ன."

"அந்த அக்ரஹாரத்தை வேளாண்வகை நிலமாய் மாற்றுவ தாய்ச் சொல்லிவிட்டீர்கள். அந்த வேளாளர்கள் தங்களுக்கு எப் பொழுது நிலம் கிடைக்கும் என்று பரிதவிக்க ஆரம்பித்துவிட் டார்கள். இந்த அந்தணர்களோ நிலங்களைப் போய் எட்டிப் பார்த்து எந்த வேலையையும் செய்யாமல் முடங்கிக் கிடக் கிறார்கள். அது இப்பொழுது பிரம்மதேயமா, வேளாண்வகை நிலமா, நாம் எழுத்தின் மூலம் தீர்மானித்து சாஸனம் செய்ய வேண்டும்."

சக்ரவர்த்தி மௌனமாக இருந்தார்.

எல்லோரும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சக்ரவர்த்தி எழுந்து நின்றார். மெல்ல முன்னும் பின்னும் நடந்தார்.

"இனி அந்த நிலம் வேளாண் வகை நிலம். பிரம்மதேயத்திலிருந்து அதை வேளாளர்களுக்கு எழுதிக் கொடுங்கள். அதற்கு வரி வசூலிப்பதும் இன்ன பிறவும் குறைவாக வையுங்கள். அந்த ஊர்க் கோவிலுக்கு வேண்டிய உதவியை அந்த வேளாளரே செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். அங்கே அந்தணர்கள் குடியிருக்கலாம். ஆனால், அவர்களுக்கு நிலத்தின் மீது எந்த உரிமையும் இல்லை. ஒருவேளை அந்த அக்ரஹாரத்தை விட்டு அவர்கள் அகலவேண்டும் என்று தீர்மானித்தாலும் எனக்கு அதுபற்றிய ஆட்சேபனை இல்லை. அவர்கள் அகற்றப்பட மாட்டார்கள்."

"ஐயா, இது ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் உங்கள் உடையார் குடி தீர்ப்பு போல் இருக்கிறது. அந்த அந்தணர்கள் அப்புறப்படுத்தப்பட போகிறார்கள்.

"அவர்களுக்கு உரிமை இல்லை என்பதுதான் முக்கியம். எந்த பிரம்மதேயம் எனக்குக் கட்டுப்படாமல் முரட்டுத்தனமாக இருக்கிறதோ அதனுடைய உரிமைகளைப் பறிக்க எனக்கு அதிகாரம் உண்டு. அதன்மீது என்னுடைய கசப்பும் கோபமும் அடங்கவில்லை. அவர்கள் பேசிய அந்த அதிகாரத்வனி எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுடைய விருப்பம் போல் அவர்கள் இருந்து கொள்ளலாம். அந்த நிலங்கள் இனி வேளாளர்களுக்குச் சொந்தம்."

"சாஸனம் எழுதிவிடட்டுமா."

"எழுதி விடுங்கள்."

"எப்படிப் பிரித்துக் கொள்வது."

"அதை அவர்களே தீர்மானம் செய்து கொள்ளட்டும் அல்லது நீங்கள் தீர்மானம் செய்யுங்கள். அது வேளாண்வகை நிலம். இதுவே என் உத்தரவு."

"சரி, நான் அதைச் செயலாற்ற இன்றைக்கே போகிறேன். இன்னொரு விஷயமும் இருக்கிறது."

"என்ன."



"சிற்பிகள் ஒரு அக்ரஹாரத்திற்குள் புகுந்து ஒரு அந்தணரைக் கொன்றுவிட்டார்கள்."

"இல்லை. அது விபத்து. ஓடுகின்ற குதிரையின் சேணத்தைப் பிடித்து இழுக்க உங்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரியுமா. யார் அந்த முட்டாள் அந்தணன்? எதற்காக அந்தச் சேணத்தைப் பிடித்து நிறுத்தினான். மற்ற அந்தணர்கள் ஏன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது கொலை என்று சொல்ல எவருக்குத் துணிச்சல் இருந்தது. நீங்கள் ஏன் அதைக் கொலை என்று சொல்கிறீர்கள்."

சக்ரவர்த்தி சீற்றத்தோடு பேசினார்.

மூவேந்த வேளார் மௌனமாக நின்றிருந்தார்.

"எனக்குச் சொல்லப்பட்டதை.." என்று மூவேந்த வேளார் இழுத்தார்.

"உங்களுக்குச் சொல்லப்பட்டதையெல்லாம் இங்கு வந்து சொல்ல வேண்டிய அவசியமில்லை. உங்களுக்குச் சொல்லப்பட்டதைத் தீர ஆராயாமல் இங்கு வருவது என்பது தவறு."

"அது என்ன என்பதை நான் ஆராய்ந்து விட்டேன்."

அருண்மொழிமுன் வந்தான்.

"அது விபத்து. ஆனாலும் சிற்பிகள் ஏன் போனார்கள் என்று சரியான காரணம் சொல்லப்படவில்லை. சிற்பிகளை அங்கு போகக்கூடாது என்று எவரும் தடுக்கவும் இல்லை."

"அந்த அந்தணரின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு யார் குதிரையில் ஏறி நின்றானோ, அவனை முன்னிறுத்து. அந்தக் குழுவினர் அத்தனை பேரிடமும் காசு வசூலித்து இடையறாத நந்தாவிளக்கு ஏற்றுவதற்கு ஏற்பாடு செய். அந்தக் கிராமத்தில் கரணத்தாரின் பொறுப்பில் கிராமச் சேமிப்புக்காக வைத்துக் கொண்டிருந்த் நிலத்தின் ஒரு பகுதியை இறந்து போன அந்த பிராமணனின் குடும்பத்திற்கு எழுதிவை. என்னுடைய கணக்கிலிருந்து பத்து கழஞ்சு பொன் கொடு. சிற்பிகளுக்கு உரிய மரியாதையை எவராயினும் தரவேண்டும் என்று சொல். இது மிக முக்கியம். இதையும் மூவேந்த வேளாரே செய்யட்டும். அருண்மொழி இதற்கு மட்டும் நீ போய் உடனிருந்து அதிகம் பேசாமல் என்ன நடக்கிறது என்று கவனித்து விட்டுவா.."

"சரி.. சக்ரவர்த்தி அவர்களே.."

அவர் கைகூப்பினார்.

"இன்னும் நூற்றுக்கணக்கில் அந்தணர்கள் தஞ்சையிலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை. அதை யார் பிரிப்பது."

'கிருஷ்ணன்ராமன் பிரிக்கட்டும். அவரால்தான் இதைத் தெளிவாகச் செய்ய முடியும். அருண்மொழி உதவி செய்தால் போதும். என்னென்ன வேலைக்கு அந்தணர்கள் தேவை என்பதை நாம் யோசித்து வைத்துக் கொள்வோம்."

"கோயில் கட்டும் இடத்தில் அடிமை வீரர்கள் இப்போது தங்களையே நிர்வகித்துக் கொள்கிறார்கள். அந்த இடத்தில் இரண்டு அந்தணர்களை அனுப்பலாமா. கூடாதா."

"தாராளமாக அனுப்பலாம். ஐந்தாவது வர்ணத்தினருடைய இடங்களுக்குப் போய் அங்கு என்ன விதமான உதவிகள் அவர்களுக்குச் செய்ய வேண்டும். என்று சொல்வதைக்கூட இந்த அந்தணர்கள் செய்யலாம். அதற்கு மிகக் கவனமாக ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மிக்க கருணையோடு இருக்கின்ற ஆள்வேண்டும். ஏனெனில் பௌத்தர்கள் ஐந்தாம் வர்ணத்தினர் மீது மிகுந்த கருணைகொண்டு அவர்களோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றிய ஒரு தெளிவும் நாம் அனுப்புகின்ற அந்தணர்களுக்கு வேண்டும். இது சூட்சுமமான வேலை."

"அரண்மனைக் கணக்குகளை நிர்வகிக்க அந்தணர்கள் வேண்டாமா."

"தாராளமாக எடுத்துக் கொள் பஞ்சவன்மாதேவி."

அரசர் திரும்பிப் பார்த்துச் சொன்னார்.

"நான்கு அந்தணர்கள் போதும், அதிகம் ஆள்சேர்க்காதே. அரண்மனை என்பது ரகசியமானது. அந்தணர்கள் அடிதாங்க மாட்டார்கள். மேற்கே சேரதேசத்து ஆபத்துதவிகள் ஒரு அந்தணரைத் தூக்கிக் கொண்டுபோய் அடித்தார்கள் என்றால், இண்டு இடுக்கு விடாமல் நம் விஷயங்கள் அனைத்தும் எதிரிக்குத் தெரிய நேரும். எனவே யாரைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதுதான் முக்கியம். தஞ்சைக்கும், குடந்தைக்கும் இடையே உள்ள பல கிராமங்களுக்கு இந்த அந்தணர்களுக்கு அதிகாரம் கொடுத்து இருக்க வையுங்கள்."

"பிரம்மதேயத்திற்கும் இந்த அந்தணர்கள்தான் அதிகாரமா."





"ஏன்... இருந்தால் என்ன."

"இவர்கள் குழந்தைகள். பிரம்மதேயத்து அந்தணர்களை இவர்கள் தாங்குவார்களா. அந்தணரை முன் வைத்து மறைமுகமாக நாம்தான் ஆணைகளை நடத்தப் போகிறோம். எல்லா இடத்திலும் நம்மை நம் குரலைச் சொல்லத்தான் இந்த அந்தணர்கள் இருக்கிறார்கள்."

"கோயில் வேலைக்கு இன்னும் ஆட்கள் தேவைப்படுமே."

"எடுத்துக் கொள்ளுங்கள். அத்தனை அந்தணர்களையும் வெவ்வேறு பகுதிக்கு அனுப்புங்கள். கிருஷ்ணன்ராமன் உடனடியாக இதைச் செய்யட்டும்."

"சக்ரவர்த்தி அவர்களே.. மறுபடியும் கேட்கிறேன். பிரம்மதேயத்தை வேளாண்வகை நிலமாக மாற்றி விடட்டுமா. சாஸனம் எழுதி விடட்டுமா."

"ஏன், பயந்துபோய் கேட்கிறீரா அல்லது அப்படிச் செய்ய வேண்டாம் என்று தீர்மானித்துக் கேட்கிறீரா."

"இதுவரையில் இப்படிச் செய்ததில்லை. அதனால் கேட்கிறேன்."

"செய்யுங்கள். உடனடியாக.. உறுதியாகச் செய்யுங்கள்."

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மெல்லிய சிற்றத்தோடு பேசினார். வேகமாகப் பேசிவிட்டுச் சிரித்தார்.

"என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும். செய்யுங்கள்."

"அந்தணர்களிடம் நீங்கள் அதிகம் கடுமையாக இருக்கிறீர்கள்."

பஞ்சவன்மாதேவி குறையாகச் சொன்னாள்.

"ஆமாம். இதுவரை இல்லை. இப்பொழுது ஆரம்பித்திருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் இதைவிடக் கடுமையான சட்டதிட்டங்கள் அந்தணர்கள் மீது பாயப்போகின்றன."

சொல்லிவிட்டுத் திரும்பி இராஜேந்திரரைப் பார்த்தார்.

இராஜேந்திரர் சக்ரவர்த்தியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"சோழ தேசத்திற்கு எதிராக எவர் குரல் கொடுத்தாலும் அந்தக்குரலை நான் சகித்துக் கொள்ள மாட்டேன். என் மகன் இராஜேந்திரனும் சகித்துக் கொள்ளமாட்டான். உள்ளுக்குள்

ளேயே இருந்து அரசுக்கு எதிராகப் பேசுபவர்களை ஒரு அளவில் அடக்கி வைக்க வேண்டியது நம் பொறுப்பு. இப்போது அவர்கள் புரிந்து கொண்டால் பிழைத்துக் கொண்டார்கள். புரிந்து கொள்ளவில்லையெனில் மேலும் சில சட்டதிட்டங்கள் நகர்ந்து அவர்களுக்கு அவருடைய இடத்தைப் புரிய வைக்கும்."

அடுத்த மூன்று நாழிகையில் மூவேந்த வேளார் அந்த கிராமத்திற்குப்போய் அந்த பிரம்மதேயம் முழுவதும் வேளாண் வகை நிலமாக மாற்றப்பட்டது. என்றும், அந்த நிலங்கள் எதுவும் அங்குள்ள அந்தணர்களுக்குச் சொந்தமில்லை என்றும், அவர்கள் அங்கு இருப்பதும், இல்லாததும் அவர்கள் விருப்பம் என்றும் அங்குள்ள வேளாளர்கள் அந்த நிலங்களைப் பங்கு போட்டு அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும் என்றும், கோயிலுக்கு நெல் அளக்க வேண்டுமென்றும் அளவுகள் குறித்துக் கொடுத்தார்.

சபையில் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த அந்தணர்கள் மூவேந்த வேளார் போனதும் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்கள்.

தன்னுடைய வீட்டைப் பற்ற வைப்பதற்கு ஒரு அந்தணர் முயற்சி செய்ய மற்றவர்கள் தடுத்தார்கள்.

இது அரச நிந்தனையாகப் போகும்.

அன்று இரவு தஞ்சையின் வேறு ஒரு கிராமத்தில் தங்கியிருந்த ஈசான சிவபண்டிதரிடம்போய்ச் சொன்னார்கள்.

"பக்குவமில்லாதவர்களால் ஏற்பட்ட வினை."

ஈசான சிவபண்டிதர் முதல் வார்த்தை சொன்னார்.

எல்லோரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

"உங்களில் சிலருக்குப் பக்குவமில்லை. ஒரு அரசரிடம் ஒரு விஷயத்தை மறுப்பது எப்படி என்று தெரியவில்லை. வேறு ஏதேனும் விழாக்களில் கலந்து கொள்ள மாட்டேன் என்று சொல்லலாம். கோயில் கட்டும் பணியில் கலந்து கொள்ள மாட்டேன் என்று சொல்லலாமா. உன் வீடு தீப்பிடித்து எரிகிறது. நான் அந்தணன். தீயை அணைக்க மாட்டேன். மேலும் நெய்யைத்தான் ஊற்றுவேன் என்று சொல்வாயா. அக்னியே ஸ்வாஹா.. என்று மந்திரம் சொல்வாயா."

"இதுவரை எந்த அரசரும் செய்ததில்லை. இவர் செய்து விட்டார்." என்று யாரோ உரத்த குரலில் பேசினார்கள்.



"தவறு. அந்தணனுக்கு நிலம் சொந்தமாக இருப்பதும், வீடு சொந்தமாக இருப்பதும் பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்றன்றைக்கு வேண்டும் என்ற உணவு அன்றன்றைக்குக் காலையில் உங்களுக்குத் தரப்பட வேண்டும். இல்லையெனில் நீங்கள் அமைதியாக இருத்தல் வேண்டும். இப்படித்தான் நம்முடைய முன்னோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்கும் இப்படி வாழ்கிறவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் மட்டும் ஏனோ நிலத்தின் மீதும், பொற்காசுகள் மீதும் ஆசை வைத்து விட்டீர்கள். வைரக் கடுக்கன்களைத் துடைத்துக் கொண்டும், தங்கச் சங்கிலிக்கு மெருகேற்றிக் கொண்டும் அலைகிறீர்கள்."

"வேதம் படிப்பது மட்டுமே என்னுடைய வேலை என்று சொல்வது தவறா."

"தவறில்லை. அரசர் உங்களை வேறு வேலைக்குக் கூப்பிட்டிருக்கிறார். அதை நீங்கள் மறுத்ததுதான் தவறு. இந்தக் கோயில் கட்டுகிற வேலை அதிகமாகப் போனால் ஐந்தாறு வருடங்களில் முடிந்துவிடும். பிறகு அரசர் கொண்டாட்டமாக உங்களை உங்கள் வேலைக்கு அனுப்பி வைப்பார். அப்படியில்லாது நான் உன்னுடைய வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்வது கோபத்தைத்தான் கொடுக்கும். எனக்கு உதவி செய்யவில்லை அல்லவா. அப்போது நானும் உங்களுக்கு உதவி செய்ய முடியாது என்று மறுத்திருக்கிறார். அவர் உதவியில்தான் உயிர் வாழ்கிறேன் என்று நீ நினைத்தால் உன்னுடைய வேதம் உனக்குச் சோறு போடும். உன்னைக் கொண்டாடும். உன்னை உயிர்விக்கும் என்பது பொய்யாகிறது. அரசரால்தான் வேதம் என்பது வழக்கமாகிறது. அரசரா வேதம் கற்றுக் கொடுத்தவர்? அரசராலா வேதம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இல்லை வேதம் அனாதியானது. அது வெகுகாலம் தொடர்ந்து வாழும் அதற்கு இறப்பே இல்லை. எனவே, வேதம் சொல்லுவதுதான் என்வேலை என்று எப்போது நெஞ்சு நிமிர்த்திச் சொன்னீர்களோ அந்த வேதம் சொல்லலை மிக உண்மையாகச் செய்யத் துவங்குங்கள். உங்களுக்கு ஒரு சோதனைக்காலம். நீங்கள் வேதத்தை உயர்வாக நினைக்கவில்லை என்று வேதமாதா உங்களைச் சோதிக்கிறாள். நீங்கள் வேறு எதைஎதையோ உயர்வாக நினைக்கிறீர்கள். வேதத்தைப் புறக்கணித்து விட்டீர்கள். என்பதால் வேதமாதா உங்களை வேதனையில் ஆழ்த்தியிருக்கிறாள்.

வேதத்தை இறுக்கப்பற்றிக் கொள்ளுங்கள். இடையறாது வேதம் சொல்லுங்கள். வேதம் உங்களை உயிர்விக்கும். உங்கள் அமைதி உங்களை கௌரவிக்கும்."

"இங்கிருந்தபடியே சொல்வதா அல்லது வேறு எங்கேனும் போய் விடுவதா."

ஒரு அந்தணர் ஈசான சிவபண்டிதரைக் கேட்டார்.

"எங்கு ஓடுவீர்கள். ஏன் ஓடவேண்டும். அரசர் உங்களை நாடு கடத்தவில்லையே. நீங்கள் இங்கு இருக்கக்கூடாது என்று சொல்லவில்லையே. நீங்கள் எதைச் சொத்து என்று நினைத்தீர்களோ அதைப் பறிமுதல் செய்தார். உங்கள் சொத்து நிலமல்ல வேதம். எனவே நீங்கள் உங்கள் சொத்துக்களோடு சௌக்கியமாக இருக்கிறீர்கள் என்பதாக வாழ்ந்திருங்கள்."

"எப்படி சௌக்கியமாக இருப்பது. அடுத்த வருடத்திற்கு அரிசிக்கு என்ன செய்வது."

"வேதமாதா வழங்குவாள்."

"எனக்கு நம்பிக்கையில்லை."

"அதனால்தான் இந்த வினை வந்தது."

ஈசானசிவபண்டிதர் மெல்லிய கோபத்தோடு பேசினார்.

எல்லா அந்தணர்களும் தலை குனிந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு அந்தணன் நிமிர்ந்தான்.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. நான் சத்தியமெனில், வேதம் சத்தியமெனில் எனக்கு, வேதம் சொல்கிற எனக்கு உயர்வு மறுபடியும் கிடைக்க வேண்டும். நான் வேதமே உயிர்மூச்சாக இனி வாழ்வேன். நான் எங்கும் போகமாட்டேன். எனக்குப் போக்கிடம் எதுவும் இல்லை. இந்த உலகத்தில் இந்தப் பகுதியில் நான் அமைதியாக இருந்து அரசர் என்ன கொடுக்கிறாரோ அதை வைத்து வாழ்வேன். வெறும் கீரைகளும், மூங்கில் அரிசியும் நான் உயிர்வாழப் போதுமானவை. நீங்கள் சொல்வதுபோல நமது குலத்திற்கு இது ஒரு சோதனை. நாம் ஜெயிப்பதும் தோற்பதும் நமது கையில் இருக்கிறது. எனக்குப் புரிந்தது. இந்தச் சோதனையை நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன். நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்."

விழுந்து வணங்கினான்.

அவர் ஆசிர்வதித்தார்.

"நிலத்தைப் பிடுங்கியது என்னை அவமதித்து போல இங்கே இருக்க மாட்டேன்."



அன்று இரவு அந்த அக்ரஹாரத்தில் அந்தணர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்தார்கள்.

"வேதத்தை மனனம் செய்யவில்லை என்று ஒரு ஆசிரியர் ஒரு மாணவனைத் தண்டிக்கிறார். உடனே மாணவன் ஆசிரியரைத் தண்டிப்பேன் என்று ஆரம்பிப்பதா. இந்த ஆசிரியர் சரியில்லை என்று புறக்கணிப்பதா. இரண்டும் தவறு. உன் வேதத்தை அவன் மதிக்கவில்லை என்றுதான் பொருள். நீ வேதம் முற்றிலும் கற்றவன்தானே. நீ வேதபண்டிதன்தானே. உனக்கு நிலமில்லை என்று சொன்னால் அது உன்னைக் குறித்து சொல்லப்பட்டதன்று. உன் படிப்பைக் குறித்து ஏன் யோக்கியதையைக் குறித்துச் சொல்லப்பட்டது. நீயாயிற்று உன் வேதமாயிற்று என்று வேதத்தைத்தான் இராஜராஜர் இளக்காரம் செய்கிறார். எனவே... அவரோடும், அவர் தேசத்தோடும் எனக்கு எந்த சங்காத்தமும் இல்லை."

"வேறு எங்கு செல்வதாக உத்தேசம்."

"என்னை எவர் ஏற்று மதிப்பாரோ.. அங்கே செல்வதாக உத்தேசம்."

"யார் ஏற்று மதிப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்."

"நான் சேரதேசம் போகப்போகிறேன்."

"இது அரசருக்குத் தெரிந்தால் நம் எல்லோருக்கும் ஆபத்து."

"அதுபற்றி எனக்குக் கவலையில்லை. என்னை மதிக்கிற இடம் சேரதேசம். சேரதேசத்து அந்தணர்கள் எங்களை மதித்தார்கள். கௌரவித்தார்கள். கொண்டாடினார்கள். இந்த சோழ தேசத்தில் என்னை மதிக்கவில்லை. அவமதிக்கிறார்கள். எனவே நான் சேர தேசம் போகிறேன். அரசர் கேட்டால் சொல்லிவிடு. ஒற்றர்கள் பின் தொடர்ந்தாலும் கவலையில்லை. இன்று இரவே நான் கிளம்புகின்றேன்."

அவர் இரவு முழுவதும் தனக்கு வேண்டிய துணிமணிகளையும், பெட்டிகளையும் அடுக்கி மாடுகள் பூட்டிய பெரிய வண்டியில் பெண்களை ஏற்றி அக்ரஹாரத்தை விட்டு வெளியேறினார். ஊர் எல்லையைத் தாண்டினார். மறுபடியும் ஊர் எல்லைக்குள் காலடி வைத்தார். நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்.

"எப்போது இந்த இராஜராஜன் சாவானோ.. அப்போதுதான் நான் மறுபடியும் வருவேன். இது சத்தியம். இந்த இராஜ

ராஜன் வெகு சீக்கிரம் சாவான். இதுவும் சத்தியம்." என்ற உரத்த குரலில் கத்தினார்.

கத்திய அந்தணனை அவர் மகன் இழுத்துக் கொண்டு வண்டியில் ஏற்றினான். வண்டி புறப்பட்டது.

காரிக்குளிப்பாகை என்கிற ஒற்றன் அவர்கள் போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வெற்றிலையைத் துடைத்துத் துடைத்து காம்பு கிழித்து உண்ணத் துவங்கினான்.

"யார்தான் சபதம் செய்வது என்று ஒரு வரை முறையே இல்லாது போயிருக்கிறது." என்று உரத்த குரலில் சொன்னான்.

பறவைகள் சலசலத்துப் பறந்து அவன் பேச்சை ஆமோதித்தன.

"அடுத்த வீடு காலியாகத்தானே இருக்கிறது. அவர்களெல்லாம் குடிபெயர்ந்து விட்டார்களே. நான் அந்த வீட்டிற்குப் போய்ப் படுத்துக் கொள்ளட்டுமா."

பிள்ளை கேட்டான்.

"இல்லையடா. இந்த வீடேகூட நம்முடைய சொந்தம் இல்லை. நம்முடைய நிலமே நமக்கு உரிமையில்லை என்கிற போது நமக்குச் சொந்தமில்லாத இடங்களில் நாம் ஏனடா உரிமை கொண்டாட வேண்டும். நமக்குச் சொந்தமான ஒரே விஷயம் வேதம். வேதத்தை எங்கிருந்து வேண்டுமானாலும் சொல்லலாம்."

"வேதபாடங்களை உரத்துச் சொல்வதற்கு ஒரு சரியான இடம் எது."

"நல்ல அதிர்வுள்ள கோவில்களில் வேதபாடங்கள் சொல்வது நல்லது."

"நல்ல அதிர்வுள்ள கோவில் நம் ஊரில் எது."

மகனைப் பார்த்தபடியே அந்த அந்தணர் யோசித்தார்.

சட்டென்று அவர் முகம் பிரகாசமாயிற்று.

"சுற்றியுள்ள எல்லா கிராமங்களுக்கும் காவல் தேவதை மருவூர் மாயா. சாலையோரத்தில் இருக்கின்ற அந்தக் கோவிலை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா. விடியற்காலை எழுந்து நடந்தால் அரைநாழிகையில் அந்தக் கோவிலுக்குப் போய் விடலாம். அங்கிருந்து தெற்கே திரும்பி, ஆற்றில் இறங்கி நன்றாகக் குளித்து



விட்டு, இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்டபிறகு மாயாவின் சன்னதியில் உட்கார்ந்து கொண்டு வேதபாடங்களைச் சொல்லத் துவங்கு. என்னைச் சுற்றி காவல் செய் என்று மாயாவிடம் வேண்டிக்கொள். உனக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் மிக அற்புதமாய் வேதபாடங்கள் மனனமாகும்."

"அப்பா.. இது நம்முடைய குலத்திற்குச் சோதனையான காலமா."

"ஒரு வகையில் ஆமாம். அரசரால் நாம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறோம். அதனால் என்ன யார் புறக்கணித்தாலும் நமது கடமைகளை ஒருக்காலும் பிறழாமல் நாம் செய்வோம். நாம் எல்லாச் சோதனைகளுக்கும் நடுவில் அமைதியாக நமது தொழிலைச் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து அரசர் மனம் இரங்கி மறுபடியும் நமக்கு எல்லாவித சௌகரியங்களையும் கொடுக்கலாம்."

"அப்பா... நாம் ஊர்விட்டுப் போனால் என்ன."

"தவறு. அப்படி ஊர் விட்டுப் போனால் இந்த ஊரின் ஞாபகம் இருந்து கொண்டேயிருக்கும். இந்த ஊரைவிட்டு வந்து விட்டோமே என்ற வேதனை அதிகரிக்கும். இந்த வேதனைக்குக் காரணமானவர்கள் யார் என்று மனம் தேடிக் கோபமடையும். அந்தக் கோபத்திற்குப் பிறகு வேதபாடம் எப்படி வரும். அப்படி வந்தாலும் என்ன லாபம். எனவே, இங்கு நமக்கு ஏற்பட்ட சோதனையை நாம் நேரடியாகச் சந்தித்து அதை முழுவதும் உள்வாங்கி அதிலிருந்து மீள்வது தான் உன்னதமே தவிர, இந்தச் சோதனைக்குப் பயந்து நகரக்கூடாது."

"இந்தச் சோதனையை அவமானம் என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறார்களே. இது, அவமானம் தானா. நாம் அவமானத்தோடுதான் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோமா."

"இல்லை குழந்தாய்.. அப்படி ஏதுமில்லை. தவறு, சரி என்ற கருத்து வரும்போதுதான் மானம் அவமானம் என்ற பிரச்சனைகள். என்ன நடந்தாலும் சரி என்றால் அங்கே எந்த உணர்வுப் பிரச்சனையும் வருவதே இல்லை."

"அப்பா.. கேள்விகள் கேட்டுத் தொந்தரவு செய்ததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். இன்னும் ஒரேயொரு கேள்வி பாக்கியிருக்கிறது."

"கேள் குழந்தாய்."

ராஜன் வெகு சீக்கிரம் சாவான். இதுவும் சத்தியம்." என்ற உரத்த குரலில் கத்தினார்.

கத்திய அந்தணனை அவர் மகன் இழுத்துக் கொண்டு வண்டியில் ஏற்றினான். வண்டி புறப்பட்டது.

காரிக்குளிப்பாகை என்கிற ஒற்றன் அவர்கள் போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வெற்றிலையைத் துடைத்துத் துடைத்து காம்பு கிழித்து உண்ணத் துவங்கினான்.

"யார்தான் சபதம் செய்வது என்று ஒரு வரை முறையே இல்லாது போயிருக்கிறது." என்று உரத்த குரலில் சொன்னான்.

பறவைகள் சலசலத்துப் பறந்து அவன் பேச்சை ஆமோதித்தன.

"அடுத்த வீடு காலியாகத்தானே இருக்கிறது. அவர்களெல் லாம் குடிபெயர்ந்து விட்டார்களே. நான் அந்த வீட்டிற்குப் போய்ப் படுத்துக் கொள்ளட்டுமா."

பிள்ளை கேட்டான்.

"இல்லையடா. இந்த வீடேகூட நம்முடைய சொந்தம் இல்லை. நம்முடைய நிலமே நமக்கு உரிமையில்லை என்கிற போது நமக்குச் சொந்தமில்லாத இடங்களில் நாம் ஏனடா உரிமை கொண்டாட வேண்டும். நமக்குச் சொந்தமான ஒரே விஷயம் வேதம். வேதத்தை எங்கிருந்து வேண்டுமானாலும் சொல்லலாம்."

"வேதபாடங்களை உரத்துச் சொல்வதற்கு ஒரு சரியான இடம் எது."

"நல்ல அதிர்வுள்ள கோவில்களில் வேதபாடங்கள் சொல்வது நல்லது."

"நல்ல அதிர்வுள்ள கோவில் நம் ஊரில் எது."

மகனைப் பார்த்தபடியே அந்த அந்தணர் யோசித்தார்.

சட்டென்று அவர் முகம் பிரகாசமாயிற்று.

"சுற்றியுள்ள எல்லா கிராமங்களுக்கும் காவல் தேவதை மருவூர் மாயா. சாலையோரத்தில் இருக்கின்ற அந்தக் கோவிலை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா. விடியற்காலை எழுந்து நடந்தால் அரைநாழிகையில் அந்தக் கோவிலுக்குப் போய் விடலாம். அங்கிருந்து தெற்கே திரும்பி, ஆற்றில் இறங்கி நன்றாகக் குளித்து விட்டு, இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்ட பிறகு மாயாவின் சன்னதியில் உட்கார்ந்து கொண்டு வேதபாடங்களைச் சொல்லத் துவங்கு. என்னைச் சுற்றி காவல் செய் என்று மாயாவிடம் வேண்டிக்கொள். உனக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் மிக அற்புதமாய் வேதபாடங்கள் மனனமாகும்."



"அப்பா.. இது நம்முடைய குலத்திற்குச் சோதனையான காலமா."

"ஒரு வகையில் ஆமாம். அரசரால் நாம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறோம். அதனால் என்ன யார் புறக்கணித்தாலும் நமது கடமைகளை ஒருக்காலும் பிறழாமல் நாம் செய்வோம். நாம் எல்லாச் சோதனைகளுக்கும் நடுவில் அமைதியாக நமது தொழிலைச் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து அரசர் மனம் இரங்கி மறுபடியும் நமக்கு எல்லாவித சௌகரியங்களையும் கொடுக்கலாம்."

"அப்பா... நாம் ஊர்விட்டுப் போனால் என்ன."

"தவறு. அப்படி ஊர் விட்டுப் போனால் இந்த ஊரின் ஞாபகம் இருந்து கொண்டேயிருக்கும். இந்த ஊரைவிட்டு வந்து விட்டோமே என்ற வேதனை அதிகரிக்கும். இந்த வேதனைக்குக் காரணமானவர்கள் யார் என்று மனம் தேடிக் கோபமடையும். அந்தக் கோபத்திற்குப் பிறகு வேதபாடம் எப்படி வரும். அப்படி வந்தாலும் என்ன லாபம். எனவே, இங்கு நமக்கு ஏற்பட்ட சோதனையை நாம் நேரடியாகச் சந்தித்து அதை முழுவதும் உள்வாங்கி அதிலிருந்து மீள்வது தான் உன்னதமே தவிர, இந்தச் சோதனைக்குப் பயந்து நகரக்கூடாது."

"இந்தச் சோதனையை அவமானம் என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறார்களே. இது, அவமானம் தானா. நாம் அவமானத்தோடுதான் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோமா."

"இல்லை குழந்தாய்.. அப்படி ஏதுமில்லை. தவறு, சரி என்ற கருத்து வரும்போதுதான் மானம் அவமானம் என்ற பிரச்ச னைகள். என்ன நடந்தாலும் சரி என்றால் அங்கே எந்த உணர்வுப் பிரச்சனையும் வருவதே இல்லை."

"அப்பா.. கேள்விகள் கேட்டுத் தொந்தரவு செய்ததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். இன்னும் ஒரேயொரு கேள்வி பாக்கியிருக்கிறது."

"கேள் குழந்தாய்."

அப்பா, மகனை அணைத்துக்கொண்டார்.

"நம்முடைய குலத்திற்கு இந்த ஹானி ஏன் வந்தது. இந்த அவமானத்திற்கு என்ன காரணம். நம்மைக் கீழிறக்க ஏன் முயற்சி செய்கிறார்கள்."

"எது ஆளுமை செய்கிறதோ.. அதை அடுத்து நிற்பவர் அகற்ற முயல்வார். அடுத்து நிற்பவரை அதற்கு அடுத்து இருக்கும் வகுப்பினர் எதிர்க்க முயல்வார்கள். மூன்றாவது வகுப்பினரை நான்காவது வகுப்பினர் எள்ளி நகையாடுவார்கள். நான்காவது வகுப்பினரை ஐந்தாவது வகுப்பினர் அலட்சியம் செய்வார்கள். இது இயல்பு. இது எல்லா இடத்திலும் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை. மனிதருக்கு நட்பு தேவைப்படுவதுபோல எதிரிகளும் தேவைப்படு வார்கள். நாம் எதிரியாக யாரை நினைத்துக் கொள்ள முடியும். நமக்குத் தலைக்கு மேல் இருப்பவரைத்தானே. அதனால்தான் நாம் முதலாவதாக ஆளுமை செய்பவராக இருந்ததை நிறுத்த க்ஷத்திரியர்கள் ஏற்பாடு செய்துவிட்டார்கள். அந்த க்ஷத்திரி யர்களை வைசியர்கள் வேரறுப்பார்கள். இந்த வைசியர்களை நான்காவது வகுப்பினரான சூத்திரம் அறிந்த சூத்திரர்கள் கேலி செய்வார்கள். பஞ்சமர்கள் ஒரு காலத்தில் அரசராய் ஆட்சி செய்யவும் வாய்ப்பு இருக்கிறது. அது ஒரு சக்கரம். ஒன்று மறைய மற்றொன்று வரும்.

கருமார்கள் பூணூல் போட்டுக் கொள்ள வேண்டும் என்று சொன்னது நம்மை எதிர்ப்பதற்கு அல்ல. மறவர்களை க்ஷத்திரியர்களை எதிர்ப்பதற்கு. அவர்களுக்கு மேல் இருக்கின்ற வைசியருடைய அலங்காரமும், ஆடம்பரமும் க்ஷத்திரியர்களு டைய அதிகாரமும், கர்வமும் அவர்கள் நிம்மதியைக் குலைத்துப் போட்டிருக்கின்றன. தாங்கள் அழுக்கு வேட்டியும், கலைந்த தலையும், கோரமாய் இருப்பதாக அவர்கள் நினைத்துக் கொள் கிறார்கள். சிருங்காரமாய் விரல்களெல்லாம் மோதிரம் மின்ன பட்டுத் தலைப்பாகை அணிந்தபடி முத்துமாலை போட்டபடி பவனி வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது நகைப்புக் குரிய விஷயம்."

"அப்பா.. அப்படியானால் மறவர்களுக்கும், கருமார்களுக் கும் சண்டை நடக்குமா."

"வேடிக்கை பார். கருமார்கள் நேரே முட்டாமல் மறவர் களுக்கும், சிற்பிகளுக்கும் சண்டை நடக்கத்தான் போகிறது."



"நடந்துவிட்டது அப்பா. இப்போது சிற்பிகள் காலம். அவர்கள் மறவர்களை ஏவுவார்கள் அல்லவா."

"ஆமாம்."

"அப்பொழுது நாம் என்ன செய்வது."

"வேடிக்கை பார். சிரிக்காமல் வேடிக்கை பார்."

"அப்பா.. திருமுனைப்பாடி நாட்டு அந்தணர்களும், தொண்டை நாட்டு அந்தணர்களும் இப்போது அரசாங்கத்தில் அதிகாரிகளாகப் பதவியேற்கிறார்களாமே. என்னைவிட வயது குறைந்த இளைஞரெல்லாம் கரணத்தார்கள் என்று எழுத்தாணி யும், கையுமாக அலைகிறார்களாமே. அந்த அந்தணர்களுக்கு நான் என்ன மரியாதை செய்வது."

"இது மிகப்பெரிய தப்பிதம். வறுமையை எதிர்க்கத் துணிவில்லாமல், ஏற்க மனமில்லாமல் தஞ்சையில் பொற் காசுகள் தரையில் சிதறிக் கிடக்கின்றன என்று எவரோ சொன்ன கதையைக் கேட்டு இங்கு வந்து ஆறு வேளை உணவும், மூன்று வேளை தூக்கமும் செய்வதற்காக வந்திருக்கிறார்கள். அதற்கான வாய்ப்பில்லை என்று தெரிந்ததும் மறுபடியும் திரும்பி ஊருக்குப் போக முடியாமல் அரசாங்க வேலையில் சேர்ந்து விட்டார்கள். இப்போது வேதம் படித்தலும், வேதம் சொல்லுதலும் இரண்டாம் பட்சம் ஆகிவிட்டன. அவர்களுடைய நான்காம் தலைமுறை வேதம் தெரியாமல் முழிக்கும். ஆறாம் தலைமுறை வெறும் தற்குறியாய் விளங்கும். பூணூல் அணிந்த பார்ப்பனன் என்ற பெயர் மட்டுமே தங்கும். ஆறாம் தலைமுறையின் போது எல்லா வகுப்பினரும் பூணூல் அணிந்திருப்பார்கள். இவர்கள் அணிந்த பூணூலுக்கு எந்த மதிப்பும் இருக்காது."

"அரசாங்கம் வேலை இழிவா தந்தையே."

"அந்தணர்க்கு எந்தக் கூலிவேலையும் இழிவு. கூலி வேலை செய்து அந்தணர் பிழைக்கக்கூடாது. அந்தணர்கள் கொண் டாடப் படவேண்டும். அவர்கள் அவசியம் தேவையானவர்கள் என்று உணரப்பட வேண்டும்."

"உணராத அரசு என்ன ஆகும்."

"பலவீனமாகும். நல்லதும், கெட்டதும் சொல்லித்தர ஒரு அரசுக்கு நல்லது எது, கெட்டது எது என்று யோசிக்க மனிதர்கள் அற்றுப் போவார்கள். தான்தோன்றித்தனங்கள் அதிகமாகும். அதனால் தேவையில்லாத போர்களும், உள்நாட்டுக் குழப்பங்

களும் ஏற்படும். எதற்குக் கோபித்துக் கொள்வது. எங்கே அதிகாரம் செலுத்துவது என்பது புரியாமல் போகும். நிதானம் இழக்க நேரிடும். நிதானம் இழந்த அரசு அன்னியர் வசம் சிக்கும். பௌத்தர்களும், சமணர்களும் இந்த தேசத்தில் வந்து மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதுபோல, மிலேச்சர்களும், யவனர்களும் இந்த தேசத்தில் புகுந்து மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்து வார்கள்."

"தந்தையே.. கடைசிக் கேள்வி."

"கேள்.. கேள்.. கேட்பதற்காகப் பிறந்துவிட்டாய் கேள்.."

தந்தை சற்று அலுப்போடு கண் மூடினார்.

"நீங்கள் பேசிய அதனை பேச்சுக்களுக்கும் எதிராக நான் சிந்திக்கலாகாதா? சேரதேசம் போவதே சரி என்றும், கருமார் களுக்குப் பூணூல் அணிய உத்தரவு கொடுப்பது நல்லது என்றும், அரசாங்க உத்தியோகத்தில் அந்தணர்கள் ஈடுபட்டு அதிகாரி களாய் வாழ்வது உயர்வு என்றும், வேதம் படித்தல் அவ்வளவு முக்கியமில்லை. வேதத்தை வேதமே காப்பாற்றிக் கொள்ளும் என்றும், நான் யோசிக்கலாகாதா."

கடவுளே.. கடவுளே.. இத்தனை கேள்விகள் கேட்டு கடைசி யில் கத்தியை நெஞ்சில் பாய்ச்சி விட்டாய். ஆனாலும், உன் கேள்வி உண்மையானது. உக்கிரமானது. இந்தக் கேள்விக்கு நீயே விடைதேடு. எதிர்ப்பதமாய் யோசித்துக் கொண்டு போ. இது எங்கே கொண்டு போய் முடிகிறது என்று பார். எது சரியான வழி என்பதை நீயே தேர்ந்தெடு குழந்தாய். கடவுள் உனக்குத் தேர்ந்தெடுக்கும் யோக்கியதையைக் கொடுக்கட்டும்."

"அப்பா.. என் மீது கோபமில்லையே."

"இல்லவே இல்லை. ஒரு மனிதனுக்கு எழக்கூடிய சந்தே கங்கள் தான் உனக்கும் வந்தன. இப்படிக் கேள்வி கேட்பவன் தான் ஞானியாகிறான். உன் கேள்விகள் உயர்வானவை. உன் புத்தி சிறக்க எல்லாம் வல்ல சர்வேஸ்வரனை வணங்குகின்றேன்."

"அப்பா நான் இப்போதே மருவூர் மாயாவிடம் போகிறேன்."

"போய் வா குழந்தாய்.."

அந்த இளைஞன் தோளில் துண்டு போர்த்தி நடந்தான். அவன் தகப்பனார் திண்ணையில் சாய்ந்தார். கண்மூடிக் கொண் டார். தெருவிலுள்ள புழுதி காற்றால் கலைக்கப்பட்டு உயரே எழும்பி அவர் முகத்தில் அடித்தது. அவர் துடைக்கவும், மறுபடி



யும் தோளில் போர்த்தியிருந்த துணியை எடுக்க கை மடக்கினார். நிதானித்தார்.

மறுபடி மறுபடி புழுதிதான் வீசும். வீசட்டும் என்று சும்மாயிருந்தார்.

அப்போது தெருப்புழுதி வேறு பக்கம் வீசிற்று.

# 146

வெள்ளியம்பலம் மீசையை முறுக்கிக் கொண்டு வெகு தூரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனை இந்தப் புல் வெளிக்குக் காவலாகச் சேனாபதி அனுப்பியிருந்தார்.

மழையோ, வெயிலோ நிற்கக் கூட இடமில்லையே.. சிறிதளவு நிழல்கூட இல்லையே என்று யோசித்தான். ஆனால், வந்த பிறகுதான் விதம்விதமாக நிழல் இருப்பதைப் புரிந்து கொண் டான். மூங்கில் தட்டிகளை, ஒரு கட்டையில் கொடுத்து சரி வாகச் சார்த்தி அதற்கு அடியில் உட்கார்ந்து சிற்பிகள் கருங்கல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். கருங்கல் மாறும்போது அந்தத் தட்டிகளை அப்படியே தூக்கிக் கொண்டு போய் இன்னொரு கருங்கல்லில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். அந்தத் தட்டிகளையே உயரத்தூக்கி கீழே கயிற்றுக் கட்டில் போட்டு பகல் நேரம் நன்கு தூங்கினார்கள்.

சிற்பிகளுக்கு நீரும், மோரும், பாலும், பானகமும், பழங் களும், திண்பண்டங்களும் வந்து கொண்டேயிருந்தன.

சிற்பிகள் குடித்தபிறகு திரும்பி வெள்ளியம்பலத்தைப் பார்ப்பார்கள்.

"வெள்ளி நீயும் எடுத்துக் கொள்." என்பார்கள்.

வெள்ளி தயங்குவதைப் போல் தயங்கி ஆவல் காட்டுவான். கிர்ணிப் பழத்தை வெட்டிப் போட்டு வெல்லச் சர்க்கரைப் போட்டுக் கலந்த சாறோ, திப்பிலியும், சுக்கும் நசுக்கிப்போட்டு, கொதிக்க வைத்து ஆறவைத்த நீரோ, வெள்ளரிப்பழமோ உடன் வரும் மிளகுக் குழம்போ தட்டில் போட்டு உட்கார்ந்து சாப்பிடு வான். சிலசமயம் மந்தாரை இலைகளில் இறைச்சித் துண்டுகளை யும் கொண்டு வந்து கொடுப்பார்கள். கோழிக்கறியும், இளம் ஆடுகளையும் நறுக்கி, சுட்டுப் பொசுக்கி கொண்டு வந்து கொடுப் பார்கள். உப்பு நீரைத் தொட்டு அதன் மீது தடவி சிறிது நேரம் பொறுத்து உறிஞ்சிக் குடிக்கலாம். பிறகு கம்பங்கூழ் வரும். கீரைத்

துவையல் வரும். பிற்பகல் சோற்றுக்கென்று அவனை ஆள் மாற்றுவார்கள்.

அப்பொழுதும் அவன் வேகமாக நடந்து சோறு பொங்கு கின்ற கூடத்திற்குப் போய் பெரிய மண் வட்டிலில் இலை வைத்து அதில் சோறும், குழம்பும் ஊற்றிக் கொடுக்க மீனோ, கறித்துண்டங்களோ, மரக்கறி உணவோ, அள்ளிப்போட ஓரமாய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு தண்ணீர் குடித்து விட்டு வெற்றிலையை வாங்கிக் கொண்டு வருவான். லேசாய்த் தூக்கம் கண்ணை இழுக்கும். ஆனாலும், வேலை ஊன்றிக் கொண்டு, வேல்மீது சாய்ந்தபடி அரைக்கண் மூடியிருப்பான். உடம்புதான் சற்று தளர்ந்திருக்கும். மனம் விழித்தபடி இருக்கும்.

ஒரு நாழிகை அப்படி மௌனமாக இருந்தால் மறுபடியும் சுறுசுறுப்பாகி விடுவான். தலைப்பாகையை உதறி. துணியை ஈரம் செய்து, முகத்தில் துணியைத் துடைத்துக் கொண்டு, கழுத்து நெஞ்சு எல்லாவற்றையும் ஈரப்படுத்திக் கொண்டு சற்று நேரம் வெயிலில் நிற்பான். பிறகு காலையில் கறந்த பாலைக் காய்ச்சிக் கொண்டு வருவார்கள். தேன் கலந்திருப்பார்கள்.

பால் வாசனையாகவும், தித்திப்பாகவும் இருக்கும். பார்த்த வுடன் உற்சாகம் வரும். தொண்டை நாளமெல்லாம் ஒரு பரபரப்பு ஏற்பட்டு பாட்டுப்பாட வைக்கும். பொரி உருண்டை, அப்பம் என்று ஏதாவது அந்தி சாயும்போது சிறு பெண்கள் விற்பார்கள். நிலக்கடலை வறுத்துத் தருவார்கள். அவித்தும் கொடுப்பார்கள். அதைக் கை நிறைய வாங்கிக் கொண்டால் இரவு நேரம் திரும்பி விடலாம்.

முதல் மூன்று நாட்கள் இரவு நேரக் காவலும் அங்கு இருந் தது. பிறகு சுற்றிலும் வேலி போட்டு அந்தக் காவலை நீக்கி விட்டார்கள். ஆனால் வேலிப்படலைத் திறந்து கொண்டு சிற்பிகள் நுழைவார்கள். நிலவு வெளிச்சம் இருந்தால் அல்லது தீப்பந்த வெளிச்சம் ஏற்படுத்தினால் பாறையில் உட்கார்ந்து இரண்டு நாழிகை சமன் செய்துவிட்டுப் போவார்கள்.

பகல்பொழுது கொஞ்சம் தூங்கிவிட்டேன். வேலை சுணக்க மாகிவிட்டது. அதனால் இரவு நேரம் வந்தேன் என்று சொல் வார்கள்.

அந்தச் சிற்பிகளுக்கும் ஆரம்பத்தில் கொஞ்சம் காவல் இருந்தது. பிறகு அவர்களும் எதற்கப்பா நீயும் விழித்துக் கொண்



டிருக்கிறாய். எள்ளுதான் காய்கிறது என்றால் எலிப்புழுக்கையும் காயவேண்டுமா என்று கேலிபேசி விலக்கிவிட்டார்கள்.

நல்லதாயிற்று என்று மறவர்களும் வேகமாக விலகிக் கொண்டார்கள்.

அந்திசாயும் நேரத்தில் உபசேனாதிபதியிடம் சொல்லி விட்டு வெள்ளியம்பலம் வீட்டிற்குத் திரும்பி விடுவான். வெள்ளியம்பலம் பெரிய குடும்பி. அவனுக்கு மூன்று பையன்கள். இரண்டு பெண்கள். இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு ஒரு பையனும், ஒரு பெண்ணும். அவன் ஈழதேசம் போயிருந்த போது அந்தப் போரில் இறந்து போய்விட்டார் என்ற செய்திவர அவனுடைய மனைவி தீப்பாய்ந்து இறந்து போனாள். அந்தத் தகவலை வந்து அவளிடம் சொன்னவரை அபராதம் விதித்துத் தண்டித்தார்கள். அவரும் தான் செய்த தவறுக்கு மிகவும் வருந்தினார். அவரும் தற்கொலைக்கு முயல வெள்ளியம்பலம் தடுத்துவிட்டான். என்ன செய்வது விதி என்று சொல்லி, அந்தப் பெண்ணின் தங்கையை அவனைவிடப் பதினாறு வயது சிறியவளைத் திருமணம் செய்து கொண்டான்.

அவளுக்கு ஒரு பெண்ணும், இரண்டு பையன்களும் பிறந்தார்கள். இரண்டு மகன்களுக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டான். பையன்களும் நல்ல வாள் பயிற்சி பெற்று படையில் சேர்ந்திருக்கிறார்கள். மூத்த பையன் மெய்க்காவல் படையில் சேர்ந்திருக்கிறான். அவனும் வெள்ளியம்பலம் போலவே நல்ல உயரம். தி. ாத்திரம். கூர்த்த அறிவு. கறுப்பு உடையில் அவன் குதிரையில் வந்து இறங்குவதைத் தெரு வேடிக்கை பார்க்கும்.

அவன் இறங்கியதும் குதிரையைப் பின்பக்கம் அனுப்பி விட்டு, வாசல் பக்கம் தோட்டத்திற்கு நடுவே இருக்கின்ற அவனுடைய தாயாரின் நினைவாக எழுப்பப்பட்ட கோவிலை வலம் வருவான். சற்று நேரம் அங்கு அமர்ந்திருப்பான். பிறகுதான் வீட்டிற்குள் நுழைவான். ஒரு மேடைகட்டி அதில் பாம்பு போன்ற நடு கல்லை நிறுத்தி அதைச் சுற்றி சுவர் எழுப்பி ஓடுகளால் கூரை வேய்ந்து அந்தக் கோயில் எழுப்பப்பட்டிருந்தது.

அவள்தான் அந்த வீட்டைப் போற்றிப் பாதுகாத்து வரு கிறாள் என்பது அந்த வீட்டிலுள்ள எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்தது. அவள் நடமாடுவதும் கூட அவர்கள் அறிந்திருந் தார்கள். அவன் வீட்டுப்படியேறி இரண்டு திண்ணைகளையும் கடந்து இடைக்கழியில் ஏறி நடக்கும்போது யாரோ இடித்து

விட்டுப் போவது போல அவனுக்குத் தோன்றும் அல்லது யார் மீதோ உரசிக் கொண்டு போவதுபோல பலருக்குத் தோன்றி யிருக்கிறது.

அந்த வீட்டில் பால், தயிர் போன்றவை அந்த இடத்தில்தான் உருட்டி விடப்படும். வீட்டிற்குள் நுழையும்போது வேகமாக, பரபரப்பாக நுழைந்தால் வெகுநிச்சயமாய் அந்த இடத்தில் ஏதேனும் ஒரு குளறுபடியாகும். மாறாய் வாசலில் தயங்கி நின்று நிதானமாகப் படியேறி, இரண்டு திண்ணைகளுக்கு நடுவே சற்றுநேரம் நின்றுவிட்டு பிறகு அடிமேல் அடி வைத்து அந்த இடைக்கழியைத் தாண்டினால் அமைதியாகத் தாண்டலாம். வாசலிலிருந்து பார்த்தால் யாரோ முற்றத்தில் உட்கார்ந்து தலைவாரிக் கொண்டிருப்பதுபோலத் தோன்றும். அருகே வந்து பார்த்தால் யாரும் இருக்க மாட்டார்கள். சில சமயம் முற்றத்தி லிருந்து பார்த்தால் கொல்லைப்புறத்தில் யாரோ நிற்பதுபோலத் தோன்றும். ஆனால், அருகே போய் பார்த்தால் இருக்க மாட்டார்கள். இரவு தூங்கும் போது வெள்ளியம்பலம் மேலோ, அந்தக் குழந்தைகளின் மேலோ யாரோ கை வைத்து அடித்து எழுப்புவது போலத் தோன்றும். அந்த உலுக்கல் மிக உண்மை யாக இருக்கும். எழுந்திருந்து யாரும் இல்லையென்று மறுபடியும் தூங்கினால் மீண்டும் தட்டப்படும். எதற்காகவோ தட்டுகிறார்கள். தட்டுவது வெள்ளியம் பலத்தின் முதல் மனைவி தான் என்று புரிந்துகொண்டு, வெள்ளியம்பலத்தின் இரண்டாவது மனைவி யும் அவர் குழந்தைகளும் அக்கம் பக்கம் இருப்பவர்களும் மிக மரியாதையாக அந்த இடத்தில் நடந்து கொண்டார்கள். அக்கம் பக்கம் இருக்கின்ற பெண்கள் வெள்ளியம்பலத்தின் வீட்டு வாசலில் செவ்வாய்க் கிழமை மாலை நேரங்களில் ஒன்றுகூடி அந்தக் கோவிலைச்சுற்றி விளக்குகள் ஏற்றி வைத்து உள்ளுக்குள் இருந்த நாகத்தினுடைய உருவச் சிலைக்கு மஞ்சள் பூசி குங்குமம் இட்டு அந்தச் சுவர்களில் சந்தனம் தெளித்து ஏலமும், செண்பக மொட்டும், பச்சைக் கற்பூரமும் கலந்த நீரை அபிஷேகம் செய்து அந்த அபிஷேக நீரை எல்லோருக்கும் குடிக்கக் கொடுத்து எல்லோர் தலையிலும் தெளித்து அந்த இடத்தையே வாசனை யாக்குவார்கள்.

வெள்ளியம்பலம் வீடு கோயில் போலவும் இருந்தது. வீடு போலவும் இருந்தது.

இந்த மறவர் பகுதியில் வெள்ளியம்பலத்தின் கதைகள் மிகப் பிரசித்தமானவை. கதைகள் என்றால் கற்பனைகள் அல்ல. அனுபவங்கள். தாம் பெற்ற அனுபவங்களை அங்குலம் அங்குல



மாக வெள்ளியம் பலத்திற்கு விவரிக்கத் தெரியும். சுற்றி உட்கார்ந் திருக்கிற நாற்பது ஐம்பது பேருக்கும் பசி, தூக்கம் பிற வேலைகள் எல்லாம் மறந்து போய் உறைய வைக்கத் தெரியும்.

பதின்மூன்று வயதில் ஈட்டிபிடித்து யானையின் பின்பக்கம் ஏறி அம்பாரியை இழுத்துக் கட்டியிருந்த கயிறுகளுக்கு இடையே கால் நுழைத்துக் கொண்டு இடுப்பு வேட்டியை அவிழ்த்துச் சுருட்டி பிருஷ்டத் திற்குக் கீழே ஆசனமாய் போட்டுக் கொண்டு கங்கதேசம் நோக்கி ஊருக்குப் போனவன். வயல்கள் மிகுந்த நுளம்பபாடியில் முதல் கன்னிப்போரில் ஈடுபட்டவன். குதிரைப் படை முன்னே போவதா. யானைப்படை முன்னே போவதா என்று ஒரு ஊசலாட்டம் இருந்தது. யானைப்படை தான் முன் னால் போக வேண்டும். அப்படிப் போனால் தான் வெகுநாள் உயிரோடு இருப்போம் என்று அவன் வேண்டிக் கொண்டான்.

குதிரைப்படை ஒன்றின் கொடி உயர்த்தப்பட்டது. இளவரசர் இராஜேந்திரர் முதல் குதிரை செலுத்திக் கொண்டு போவதை அவன் கண்களால் பார்த்தான். சோர்வடைந்தான். ஆனால், திடீரென்று எக்காளம் ஊதப்பட்டு யானைப்படை போக வேண்டும் என்று கொடி உயர்த்தப்பட்டது. சோழதேசத் தின் குதிரைப் படைதான் முன்னால் வருகிறது என்று நினைத்து பெரும் கோபாவேசத்தோடு நுளம்ப பாடியிலுள்ள அரசன் தன் குதிரைப்படையை வேகமாக ஆற்றுப் படுகையில் இறக்கினான். பாதி ஆறு கடந்ததும் மன்னர் இராஜேந்திரர் குதிரைப்படைகள் இரண்டாகப் பிரிந்து விலகிக் கொள்ள பின்னே நின்றிருந்த யானைப்படை வெகு வேகமாக ஆற்றில் இறங்கியது. யானைகள் இறங்குவதைப் பார்த்ததும் குதிரைகள் பயந்து போய் பின்னே திரும்பத் துவங்கின. அங்குள்ள யானைகளைக் கரைச்சரிவில் இறக்கிவிட்டார்கள். அப்போது குதிரைப்படை திரும்பும்போது அந்த யானைப்படை கரைமீது ஏறமுடியாமல் மண்ணில் சரிந்து அவஸ்தைப் பட்டது.

சொந்த தேசத்தின் யானைப் படைக்கும், அன்னிய தேசத்தின் யானைப் படைக்கும் இடையே எதிரியின் குதிரைப் படை சிக்கிக் கொண்டது யானைப்படை எதிரியை நோக்கி இறங்கும்போது சோழ குதிரை வீரர்கள் யானை வீரர்களுக்கு உரக்கக்கத்தி உற்சாக மூட்டினார்கள்.

“கொல்லு. ஒரு நாயையும் விடாதே. கொல்லு. நுளம்பம் பாடியைத் தரைமட்டமாக்கு. வீடுகளைச் சூறையாட நாங்கள் வருகிறோம். போ..” என்று உரக்கக் கத்தினான்.

அம்பாரி முழுவதும் ஈட்டிகளும், கூர்மையான சக்கரங்களும், பெரும் கத்திகளும் இருந்தன. யானைப்பாகன் ஓட்டிவர நான்கு வீரர்கள் முன்னே கயிறுகளில் கால் கொடுத்து யானையின் மீது நின்று கொண்டுவந்தார்கள். அவர்களுக்கு ஈட்டியும், அம்பும் எடுத்துக் கொடுப்பதுதான் அவன் பணி. ஈட்டி நிறைய இருந்ததால் அவன் வெளியே நிற்க வேண்டியதாயிற்று. ஆயுதங்கள் குறைய அவன் உள்ளே குதித்துவிடலாம். அங்கிருந்தபடி அவனும் ஆயுதம் எறியலாம். முன்னே வந்து எவனாவது தாக்கினால் அவன் மண்டையைப் பிளக்கலாம். யானைப்படை இறங்கியதும் மூன்றாகப் பிரிந்தது.

யார் சொல்லிப் பிரிந்தார்கள். அதெப்படி இவ்வளவு சரியாகப் பிரிகிறார்கள் என்ற ஆச்சரியம் அவனைத் தொற்றிக் கொண்டது.

அவன் வெறிபிடித்ததைப் போல் அலறினான். அவன் ஏறிய யானைதான் நடுநாயகமாக எதிரிகளை யொட்டி முதலில் சென்றது. ஒரு ஆள் ஆழத்தில் அவன் ஏறி வந்த யானை நிதானமாய் எதிரியை நோக்கி நடந்து போக எதிரியின் குதிரைப் படைகள் கரையேறும் அவசரத்தில் இருந்தன. இரண்டு, மூன்று யானைகள் கரையில் ஏறி உருண்டு விழுந்து குதிரைப் படைகளை நாசம் செய்தன. குதிரைகள் மிரண்டு ஓடின.

முன் பக்கம் சங்கு முழக்கமும், முரசு அதிர்வும் கேட்டது. இடப்பக்கமும், வலப்பக்கமும் பிரிந்த யானைப்படைகள் மிக நிதானமாய் ஆறு கடப்பது பார்த்து சற்று திகைப்படைந்தான். அவைகளை வேகமாகப் போக சொல்லும்படியாய் ஓவென்று கத்தி கைகளை அசைத்தான். திரும்ப தான் இறங்கி வந்த கரையைப் பார்த்தான்.

மிக உயரமான இடத்தில் வெள்ளை உடை அணிந்து, முத்து கோர்த்த தலைப்பாகையுடையுடன், இடுப்பில் கை வைத்து, ஒரு கரும் புரவியில் அமர்ந்த படி இராஜராஜர் படைகளை உற்று கவனித்து வருவது தெரிந்தது. அவர் பக்கத்திலிருந்த கொடிகள் மறுபடியும் அசைந்தன. ஆற்றில் சற்று தொலைவேயிருந்த மதகுகளைச் சோழவீர்கள் மடமடவென்று உயர்த்துவதும் அங்கே புலிக்கொடி பறப்பதும் பார்த்து ஆச்சாரியமானான். வேகமாய் மதகுகளிலிருந்து தண்ணீர் ஆற்றில் இறங்கியது.

இப்போது பயத்தில் அலறினான். தண்ணீர் வரும். வேகத்தைப் பார்த்தால் யானையைப் புரட்டிப் போட்டு விடும்போல்



தோன்றியது. அடேய்... முட்டாள்களே விடுங்களடா என்று உரக்கக் கத்தினான்.

"வெள்ளம் வருகிறது.. வெள்ளம் வருகிறது. கவனம்.. கவனம்.. யானைப்பாகா கவனம்." என்று உரக்கக் கத்தினான்.

அந்த வீரர்கள் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். பிறகு உறுதியாய் நின்றபடி கையில் வேலோடு காத்திருந்தார்கள். வெள்ளம் சுழன்று அடித்துக் கொண்டு நொப்பும் நுரையுமாக ஓடி வந்தது. அங்குள்ள யானைகள் மீது சடேரென்று அடித்து மறுபக்கம் விழுந்தது. ஆனால், யானைகள் உறுதியாகநின்றன. இவன் பக்கம் வெள்ளம் வரும்போது இவன் யானையும் நிறுத்தி வைக்கப்பட்டது. வெள்ளம் அம்பாரியின் மீது தாக்கியது. யானை மிக அழகாக மிதந்து நகர்ந்தது. வெள்ளம் இவனைத்தாண்டி அடுத்த வரிசையான யானை வரிசைக்குப் போயிற்று. அங்குள்ள யானைகளும் வெள்ளத்தை எதிர்த்து நிறுத்தி வைக்கப்பட்டன. பிறகு அவைகளும் மிதந்தன. கரைநோக்கி நகர்ந்தன.

இவன் யானையின் மீது கால் வைத்து நிற்க முடியாமல் தள்ளாடினான். யானைக்கு மேலே வைத்திருந்த வேட்டி வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போக அவன் எடுக்கக் கைநீட்டி வழுக்கி விழுந்து மறுபடியும் கயிறு பிடித்து யானை மீது ஏறினான். யானை முன்னேறிற்று. அதேநேரம் அந்த வெள்ளத்தில் எதிரியின் குதிரைப்படைகள் தாக்குப் பிடிக்காமல் அலைக்கழித்தன. பல குதிரைகள் ஆற்றோடு அடித்துப் போகப் பட்டன. பல வீரர்கள் குதிரையோடு கட்டிப்புரண்டபடி போனார்கள். சில வீரர்கள் குதிரையிலிருந்து பிரிந்து கரைநோக்கி நீந்தினார்கள். அந்த வெள்ளம் கரையை வேகமாகத் தாக்க அங்கு நின்றிருந்த யானைகள் முன்னும் பின்னும் அலைந்து அவர்கள் படைக்கு அதிகம் சேதத்தை உண்டாக்கின. சோழதேசத்து யானைகள் மிக நிதானமாக ஆறு கடந்து குதிரைப் படையை நெருங்க கையில் வேலெடுத்து முன்நின்ற மறவர்களிடம் கொடுக்கத் தயாராக இருந்தான். ஆனால் அவனுள் வெறி பொங்கிக் கிளம்பியது.

அந்த வேலை நாம் வீசினால் என்ன என்று தோன்றியது.

வேலைச் சட்டென்று புரட்டிப்பிடித்தான். கைக்கு வாகாக எடுத்துக் கொண்டான். வலப்பக்க யானையிலிருந்து ஒரு கொடி அசைக்கப்பட ஆயுதங்களைச் செலுத்தலாம் என்ற சைகை வர உறுதியாக நின்று ஒரு வேலை மிக வேகமாக எதிரிப் படையை நோக்கி வீசினான். அந்த வேல் உயரக் கிளம்பி கரை தாண்டி

கரையிலிருந்த யானைப் படைதாண்டி, அங்கு நின்ற ஒரு குதிரை வீரனைத் தாக்கியது. ஓ.. என்று எதிர்ப் பக்கமிருந்து கூச்சல் எழுந்தது. இடப்பக்கத்திலிருந்தும், வலப்பக்கத்திலிருந்தும் அம்புகள் பறந்து குதிரைப்படையைக் கலைத்தன.

இவன் யானை நிதானமாக முன்னேறிற்று.

வெள்ளத்தில், அலைமோதிக் கொண்டிருக்கின்ற குதிரைகளை நெருங்கிற்று.

கட்டாரிகளை வீசுங்கள். கட்டாரிகளை வீசுங்கள் என்று கத்தினான். ஆனால், பின்னால் இருப்பவனோ வேல் கொடய்யா என்று சொல்ல, அவன் வேல் எடுத்துக் கொடுத்தான். ஆனால் அவன் பக்கமிருந்த கட்டாரிகளை எடுத்துக் கொண்டு வேல்கள் கொடுப்பதற்கு நடுவே அவன் சட்டென்று கட்டாரி ஒன்றை எடுத்துக் கொண்டான். இடப்புறமும், வலப்புறமும் பார்த்தான். ஒருவன் குதிரையில் சுதாரித்து நீந்தியபடி அவன் யானையை நோக்கி வர சிவோஹம்.. என்று நெற்றிக்கு நேரே கட்டாரியை வைத்து அவன் ஊர்ச் சிவனை நினைத்துக் கொண்டான். கண் திறந்தான். மிக வேகமாக அந்த குதிரையில் வந்த வீரனை நோக்கி கட்டாரியை வீசினான். கட்டாரி சரக்கென்று அவன் தொண்டைக் குழியில் பாய அவன் சுருண்டு நீரில் விழுந்தான். அவன் குதிரை விடுபட்டு கரைக்கு நீந்திற்று.

அவன் வெறிபிடித்தது போல் கத்தினான். அம்பாரியைப் பிடித்துக் கொண்டு எகிறி எகிறி குதித்தான். இன்னொரு கட்டாரியை உருவினான். குறிபார்த்தான். வேறு ஒரு முதியவனை நோக்கிக் கட்டாரியை வீசினான். இந்த முறை கட்டாரி நெஞ்சில் பாய்ந்தது. மீண்டும் கட்டாரியை வீச வேல் கொடடா நாயே என்று சத்தம் வந்தது. முன்னால் இருந்தவருக்கு வேல் கொடுத்துவிட்டு சட்டென்று கட்டாரியை மறுபடியும் வீசினான். இடக்கையிலும், வலக்கையிலும் நடுநடுவே வேல்கம்பும் எடுத்துக் கொடுத்தான்.

அவன் யானை துரிதமாக முன்னேறிற்று. நுளம்பபாடி கரை மீது ஏறியது. இடப்பக்கமுள்ள யானை வரிசையிலிருந்து கொடிகள் மாறி மாறி அசைக்கப்பட்டு உத்தரவுகள் வந்தன. யானைப்பாகன் அதைப்புரிந்து கொண்டு யானையைச் செலுத்தினான். இடப்பக்கமுள்ள யானை வரிசையில்தான் பிரம்மராயர் அமர்ந்திருக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால், எங்கிருக்கிறார். யார் பிரம்மராயர் என்று



தெரியவில்லை. யானைப் படைகளுக்கு நடுவே இப்போது குதிரைப்படைகள் சீறிப்பாய்ந்தன.

மாமன்னர் இராஜராஜர் கடந்து போனாரா என்று இடப்புறமும், வலப்புறமும் பார்த்தபடி அவன் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தான். ஆனால் மாமன்னர் இராஜராஜர் போகவில்லை. பல சேனாதிபதிகள் போனார்கள்.

ஒரு சேனாதிபதி அவனைப் பார்த்து உரக்க வேலை உயர்த்தி கூவி விட்டுப் போனார். அவனும் பதிலுக்குக் கூவினான்.

யானையிலிருந்து இறங்கி அந்தக் குதிரைப்படையில் சேர்ந்து கொள்ளலாமா என்று நினைத்தான். நுளம்பபாடிப் படையின் குதிரை ஒன்று ஆள் இல்லாமல் அலைந்து கொண்டிருக்க சட்டென்று யானையிலிருந்து ஒரு நீண்ட வாளோடு கீழே குதித்தான். அந்தக் குதிரையின் மீது தாவி ஏறிக்கொண்டான்.

நான்முன்னே போகிறேன் என்று மறவர்களிடமும், மற்றவர்களிடமும் சொன்னான்.

டேய்... டேய்... என்று கூவினார்கள். ஆனால், அவன்காதில் வாங்கிக் கொள்ளாமல் கோமணத்தோடும், தலைப்பாகையோடும் நீண்ட வாளெடுத்து ஊருக்குள் புகுந்தான். அவன் போவதற்குள் பல கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. பல பேரைச் சோழ வீரர்கள் துரத்தித் துரத்தி அடித்துக் கொண்டிருந்ததார்கள். பெண்களும், குழந்தைகளும் வட்டமாக நின்று கதறிக் கொண்டிருக்க அவர்களைச்சுற்றி இரண்டு மூன்று வீரர்கள் காவலில் நிற்க வைக்கப்பட்டார்கள். யாரோ கசையால் அடிப்பதும் தெரிந்தது. அடுத்த கிராமத்தை நோக்கிக் குதிரைப் படை வேகமாக ஓடிற்று அப்படியானால் கரையில் வந்த குதிரைப்படை எங்கே காணோம் என்று சோழதேசத்து வீரர்கள் நாலாபுறமும் தேடினார்கள். மறுபடியும் சேனாதிபதிகள் ஒன்று கூடி குதிரையிலிருந்தபடியே அவசர அவசரமாகப் பேசினார்கள். யாருக்கோ தகவல் சொன்னார்கள்.

இப்போது குதிரைப்படை நாலாபுறமும் அன்னியரின் குதிரைப்படையைத் தேடிப்புறப்பட யானைப்படைகள் வேகமாகக் கோட்டையை நோக்கி நகரத்துவங்கின. அவன் குதிரையில் போவதா யானையில் போவதா என்று தடுமாறினான்.

ஏறாதே... யானையில் ஏறாதே. ஏறினால் உதைப்பேன் என்று அவன் யானையைப் பார்த்தபோது அதிலுள்ள மறவர்கள் கத்தினார்கள்.

அவர்களை மீறி மறுபடியும் பின்னால் போய் யானையின் மீது ஏறிக் கொள்ளலாமா என்று ஒரு எண்ணம் தோன்றியது. ஆனால், அந்த யானையை விட இந்த குதிரை மீது ஏறிக் கொண்டு கோட்டையை நோக்கிப் போனால் என்ன என்ற எண்ணம் ஏற்பட்டது.

அவன் யானைப் படைக்கு முன்னால் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான்.

கண்ணுக்கு எதிரே நீண்டதூரம் வரை பொட்டல் காடு. எவரின் நடமாட்டமும் தெரியவில்லை. அவன் குதிரையை வேகமாகச் செலுத்திக் கொண்டு போனான். பின்னால் இருந்து கூச்சலிட்டார்கள். ஆனால், அதைக் கேட்காமல் வாளைச் சுழற்றிக் கொண்டு ஓடினான். அந்த இடத்தையொட்டி நகரம் போல் ஒரு இடம் இருந்தது. ஆனால், அது வெறிச்சோடி இருந்தது. எல்லோரும் காலி செய்து கொண்டு கோட்டைக்குப் போய்விட்டார்கள் போலும், கோட்டையைச்சுற்றி அகழி இருந்தது. அகழி மேலேயுள்ள பாலத்தைத் தூக்கி கோட்டைக் கதவுகளை அடைத்துவிட்டார்கள். ஆனால் அகழியின் பாலத்தை முற்றிலும் தூக்க முடியவில்லை. பாதி தூக்கிய நிலையிலிருந்தது. உள்ளிருந்து எட்டிப் பார்த்து இன்னும் இன்னும் என்று கத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், பாலம் நகர மறுத்தது. எங்கேயோ சிக்கல் ஏற்பட்டு பாலம் பாதியில் நின்று கொண்டிருந்தது. அவன் குதிரையைச் சுற்றிச் சுற்றி வந்தான். யானைப் படைகள் நெருங்கின. யானைப் படை வருவதற்குள் ஏதேனும் செய்தாக வேண்டும். என்ன செய்வது என்று பரபரத்தான். குதிரையை விரட்டி ஓட்டிக் கொண்டு போனான். யானைப்படைக்கு அருகே நின்றான். மறுபடியும் யானைப்படைக்கு முதுகு காட்டினான். குதிரையை வேகமாகச் செலுத்தி அகழிக்கு வந்ததும் குதிரையிலிருந்து எகிறி குதித்து பாலத்தைத் தொங்கிப் பிடித்துக் கொண்டான். யானையில் உள்ளவர்கள் மறுபடியும் அலறலாய் கத்தினார்கள். குதிரை சரக்கென்று நின்று வலதுபக்கம் திரும்பி ஓடிவிட்டது.

இப்பொழுது அவன் பாலத்தைப் பிடித்துக் கொண்டிருந் தான். காலைத்தூக்கி பாலத்தில் போட்டான். வேகமாக நகர்ந்தான். கம்பிகளில் கால் வைத்து குரங்கு போல பிடித்துத்



தாவி வாளை வாயில் கவ்விக் கொண்டு எதிர்பக்கச் சுவரில் நீட்டிக் கொண்டிருந்த கல்லில் போய் நின்று கொண்டான்.

யானைப்படை வந்து நின்றது.

“என்னடா.. என்ன செய்து கொண்டிருக்கிறாய்.”

யானைமீதுள்ள வீரன் உரக்கக் கத்தினான். இவன் கையில் வாளோடு அங்கு நடனமாடினான். இடவலமாக யானைப் படைகள் வந்து நிற்க, எல்லா யானைகளில் இருப்பவர்களும் அவனை உற்றுப் பார்த்தார்கள். அவனைச் சுட்டிக்காட்டி பேசினார்கள்.

அவன் மறுபடியும் போர் வெறியிலும், ஆனந்தத்திலும் குதித்தான். வெறும் கோவணமும், தலைப்பாகையுமாய் அவன் இருப்பதைப் பார்த்து பலபேர் சிரித்தார்கள். நிறைய பேர் கவலைப் பட்டார்கள்.

சங்கிலியைப் பிடித்துக் கொண்டு அதன் வழியாக உள்ளே உற்று நோக்கினான். யாரோ பார்ப்பது தெரிந்ததும் தன்னுடைய வாளை இறுக்கப் பிடித்துக் கொண்டு மறுபடியும் காத்திருந்தான். எலி வேட்டை ஆடுபவன்போல மௌனமாக அமர்ந்திருந்தான். மறுபடியும் யாரோ குனிந்து பார்த்ததும் தன் வாளுடன் வேகமாக உள்ளே குதித்தான். உள்ளே பெரும் அலறல் சத்தம் கேட்டது.

சங்கிலியை யாரோ அறுத்துவிட்டார்கள் அல்லது சங்கிலி யைத் தூக்கி விடுகின்ற சக்கரத்தின் பிடியை நழுவ விட்டார்கள் போலும். பாலம் சரசரவென்று நழுவி தடேரென்று விழுந்தது. சங்கிலியை இறுகப் பிடித்துக் கொண்டான். குலுக்கினான். பாலம் தடேரென்று விழுந்தது. அதன்மீது உடனடியாய் ஒரு யானை நிறுத்தப்பட்டது. மறுபடியும் பாலத்தைத் தூக்க முயலும் போது முடியவில்லை. சங்கிலியைப் பிடித்துக் கொண்டு தாவி ஏறி மறுபடியும் அந்தச் சுவரில் துருத்திக் கொண்டிருந்த கல்மீது ஏறி நின்று கொண்டான். மறுபடியும் வெறிக்கூத்தாடினான்.

அந்த யானையைத் தவிர நல்ல மது அருந்திய முரட்டு யானைகள் கதவைத் தாண்டி உள்ளே நுழைந்தன. கதவில் கூரிய முனைகள் செதுக்கப்பட்டிருந்தன. யானை முட்டினால் யானையின் தலை பெயர்ந்து விடும்படி அந்தக் கூரிய முனைகள் இருந்தன. அந்தக் கூரிய முனைகளின் மீது எங்கிருந்தோ மரக்கட் டைகள் கொண்டு வந்து அடித்து சார்த்தினார்கள். இப்பொழுது யானை அந்த மரக்கட்டைகளை வேகமாக முட்ட கதவு ஆடிற்று.

பின்னால் நகர்ந்து மறுபடியும் மறுபடியும் தடியாலும் மத்தகத்தாலும் அடிக்க கோட்டைக்கதவு பெயர்ந்து விழுந்தது. கோட்டையின் உச்சியிலிருந்து வீரர்கள் அம்பு தொடுத்தார்கள். வேல்களை வீசினார்கள். ஆனால், இவன் மீது ஒரு அம்பும் படவில்லை. இவன் மீது அம்படிக்கின்ற வாட்டத்தில் அவர்கள் இல்லை.

அந்த யானைகள் வரிசையாகி யானையின் மேல் உள்ளவர்கள் வேகமாக வேல்களையும், அம்புகளையும் கூர்மையான சக்கரங்களையும் உள்ளுக்குள்ளே வீச பெரிய கோட்டைக்கதவு வழியே இரண்டு யானைகள் புகுந்தன. மறுபடியும் குதிரைப் படை திரண்டு வருவது தெரிந்தது. யானைகளுக்கிடையே புகுந்தது. பாலத்தில் ஏறியது. உள்ளே நுழைந்தது. உள்ளே மிகப் பெரிய சண்டை நடக்க ஆரம்பிப்பது தெரிந்தது.

அவன் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு கீழே குதித்தான். சோழதேசத்து வீரர்களில் ஒருவன் தோளில் அம்பு பட்டு அகழியில் விழ அந்தக் குதிரை மீது இவன் ஏறிக் கொண்டான். குதிரையைச் செலுத்திக் கொண்டு உள்ளே போனான். பெரும் வழியினூடே வேகமாகப் போக அவனைப் பக்கச் சந்துகளிலிருந்து பத்துப் பன்னிரெண்டு வீரர்கள் மடக்கிக் கொண்டார்கள்.

அவன் குதிரையைப் பக்கவாட்டில் செலுத்தி எல்லோருடைய வாட்களையும் எதிர்த்து அடித்தான். சுழன்று சுழன்று போரிட்டான். வாளைத் தட்டிவிட்டு நெற்றியில் அடித்தான். இன்னொருவனின் வாளைத் தட்டிவிட்டு தொண்டையில் கத்தியைச் சொருகினான். இன்னொரு குதிரை வீரன் அருகே வந்து அவனை வேகமாக அடிக்க அவன் அடித்த அடிகளையெல்லாம் வாளால் தடுத்தான். தன் குதிரையால் அவன் குதிரையை முட்டி நிலை குலையச் செய்தான். அவன் நிலை குலைந்து சரியும்போது தன் குதிரையில் ஏறி நின்று கழுத்தில் முழு பலத்தோடு வெட்டினான்.

அந்த வெட்டு அவன் தலையைத் துண்டாக்கியது. அவன் மீது ரத்தம் பீய்ச்சியடித்தது.

உள்ளே ஏதோவொரு பெரும் நிம்மதி முழு திருப்தி ஏற்பட்டது. அவன் தொடர்ந்து அந்தப் பாதையில் பிசாசு மாதிரி குதிரையை ஓட்டிக்கொண்டு போய் தடுத்தவர் அத்தனை பேரையும் வெட்டி வீழ்த்தினான்.



அன்று மாலை அந்தி சாய்வதற்குள் அறுபது அறுபத்தைந்து பேரை அவன் குத்திக் கொன்று போட்டிருந்தான்.

நுளம்பபாடி தேசத்தின் ஆரம்பத்திலுள்ள அந்தக் கோட்டை சோழர் வசமாயிற்று. அந்தக் கோட்டையின் மீது புலிக்கொடி பறந்தது.

இரவு ஒரே உற்சாகம் வீரர்கள் குடித்துவிட்டுக் கூச்சலிட்டார்கள். கைதிகளாக இருந்த நுளம்பபாடி வீரர்களை எட்டி உதைத்தார்கள். இழித்துப் பேசினார்கள். காயம் பட்டவர்களுக்கு மருந்து வைத்துக் கட்டு போடப்பட்டன. இறந்து போனது யார் என்று உரக்கப் படிக்கப்பட்டது. மிகக் குறைந்த அளவே வீரர்கள் இறந்து போனதால் தனித்தனியாகத் தகனம் செய்தார்கள். அப்படித் தகனம் செய்யும்போது ஒரு போரில் நாங்கள் நானூற்று இருபத்தைந்து பேரை ஒரே அடுக்காக அடுக்கி தகனம் செய்தோம் என்ற விஷயமும் சொன்னார்கள். அவன் சற்று நேரம் இறந்தவர்களைச் சுற்றி வந்தான். யார் யார் என்று விசாரித்துக் கொண்டான். துணியை விலக்கி எப்படி வெட்டுப் பட்டிருக்கிறது என்று பார்த்தான்.

குடி... குடி என்று ஒரு குடிகார மறவர் வற்புறுத்திய போது வேண்டாம் என்று சொல்லி விலக்கிவிட்டு வந்தான்.

அங்கங்கே ஆடு வெட்டி சமைத்திருந்தார்கள். மிளகுப்பொடி தூவிய மிகப்பெரிய கறித்துண்டத்தை எடுத்துக் கொண்டு கடித்துச் சுவைத்து உண்டான். எத்தனை நேரம் கோமணத்தோடு இருப்பது என்று வெட்கப்பட்டான். குளிர் அதிகம் எடுக்குமென்று தோன்றியது. அவனுடைய உபசேனாதிப் பதியைத் தேடினான். அவர் இருக்கும் கூடாரத்தைக் கை காட்டினார்கள். அவன் நேரே போய் அந்தத் கூடாரத்தைச் சுற்றி வந்தான். உள்ளே ஒட்டு மொத்தமாய்ப் பத்துப் பதினைந்து பேர் சிரிப்பது கேட்டது. அவனுடைய உபசேனாதிபதியினுடைய தடிமனான குரல் கேட்டது.

அவன் குனிந்து பார்த்தான். உபசேனாதிபதியின் கழல் அணிந்த கால்கள் தெரிந்தன. அந்தக் கழல் அவனுக்கு ஞாபகம் இருந்தது. அவன் சட்டென்று கூடாரத்தின் வாசலைத் திறந்து கொண்டு உள்ளே போனான்..

"சேனாபதி எனக்கொரு வேட்டி வேண்டும். யாரிடம் கேட்பது. அந்த வேட்டி வெள்ளையாக இல்லாமல் சாய

வேட்டியாக இருப்பதுதான் நல்லது. எங்கே போய்க் கேட்பது." என்று சேனாபதியிடம் மண்டி போட்டுக் கேட்டான்.

சிரித்துக் கொண்டிருந்தவர்கள். சட்டென்று அடங்கினார்கள்.

யாரோ ஒருவர் இடம் மாறி முன் நகர்ந்து அமர்ந்து கொண்டார். மூன்று விளக்குகள் தொங்குகின்ற அந்தக் கூடாரம் இருட்டாக இருந்தது. விளக்குகளின் வெளிச்சம் கால்களிலும், மார்பிலும் பட்டதே தவிர முகங்கள் தெரியவில்லை. கையிலுள்ள தீப்பந்த வெளிச்சத்தால் உபசேனாதிபதியைக் கண்டு பிடிக்க முடிந்தது.

"அடேய்.. எழுந்திரு இங்கு ஏன் வந்து கேட்கிறாய். நாளை காலையில் கேள்."

"குளிருகிறதய்யா.. போர்த்திக் கொள்ள வேட்டி வேண்டும்."

அவன் மெல்லிய குரலில் பேசினான்.

அவன் மீது துணி வந்து விழுந்தது. கூட்டத்தில் உள்ளவர்கள் 'ஆஹா..' என்று சொன்னார்கள்.

அவன் துணியை வாங்கி விளக்கு வெளிச்சத்தில் பார்த்தான்.

"இது ஏதோ பட்டுபோல் இருக்கிறது. இது எனக்கு வேண்டாம். சாய வேட்டியாக இருந்தால் போதும்." என்று வீசிய பக்கத்தை நோக்கிப் பேசினான்.

"அமைதியாகப் பேசு. யாரிடம் பேசுகிறாய் என்று தெரியவில்லையா."

உபசேனாதிபதி கடிந்து கொண்டார்.

அவன் திகைத்து உபசேனாதிபதியைப் பார்த்தான்.

"அது சக்ரவர்த்தி."

மறுபடியும் ஒற்றை வார்த்தையாக உபசேனாதிபதி பேச, 'யார் சக்ரவர்த்தி' என்று அந்த இருட்டில் துழாவிப் பார்த்தான். விழுந்து வணங்கினான். மறுபடியும் எழுந்து நின்று கைகூப்பினான்.

'மன்னிக்க வேண்டும்.. மன்னிக்க வேண்டும்..' என்று சொல்லி துணியை அங்கேயே வைத்துவிட்டுப் பின்னடைந்தான்.

'நில்' என்று குரல் கேட்டது.



நின்றான்.

கருந்தாடியோடும், மீசையோடும், குடுமியோடும் சக்ரவர்த்தி ஒரு படுக்கையில் சாய்ந்திருந்தார். அவர் பக்கத்தில் வட்டமான திண்டு இருந்தது. அவருடைய காலை ஒரு இளைஞன் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான்.

"முதன்முதலில் வேல் எறிந்தவன் இவன்தானே. கொடி ஏறுவதற்கு முன்பு வேல் எறிந்துவிட்டானல்லவா."

"ஆமாம். இவன்தான். இவன்முகம் நன்றாக ஞாபகம் இருக்கிறது."

இன்னொரு குரல் கேட்டது.

அவன் திரும்பிப் பார்த்தான்.

பிரம்மாண்டமான வடிவத்தோடும், வெறும் மார்போடும், நீண்ட வேட்டியோடும், மேலே சரிகை கலந்த சால்வையுடன் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

அவர் மார்பில் பூணூல் இருந்தது.

"இவர்தான் பிரம்மராயரா."

"ஆமாமடா."

அந்த உபசேனாதிபதி முகம் சுருக்கி பதில் சொன்னான். மறுபடியும் அவன் எழுந்து நின்று பிரம்மராயருக்கு நீண்ட நெடுஞ்சாண் கிடையாய் ஒரு நமஸ்காரம் செய்தான்.

சக்ரவர்த்தி சிரிப்பது தெரிந்தது. சக்ரவர்த்தி சிரித்ததும் மற்றவர்களும் சிரித்தார்கள்.

"அவன் வேல் எறியும் போதும், கோமணத்தோடு தான் இருந்தான் அல்லவா."

"ஆமாம்.." என்று உபசேனாதிபதி தலையாட்டினார்.

"ஏன், வேட்டி உடுத்திய ஒரு போர்வீரனை அனுப்ப மாட்டீர்களா. முதல் யானையில் போருக்குப் போகிறவன் வெறும் கோமணத்தோடு போனால் சோழ தேசத்தின் மரியாதை என்ன ஆவது." என்று சொல்ல, மறுபடியும் அந்தக் கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

"ஏதோ கோமணத்தோடாவது போனானே. அவன் ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்தால் அம்மணமாக ஓடுவான் என்றல்லவா

நான் நினைத்தேன்." என்று பிரம்மராயர் சொல்ல, சக்ரவர்த்தி உரத்து தொடை தட்டிச் சிரித்தார்.

"அவன்தான் குதிரையில் ஏறி பாலத்தின் மீது தொங்கி சங்கிலி பிடித்து ஏறி உள்ளே கத்தியால் குத்தியது."

"அப்படியா.."

உபசேனாதிபதி சொல்ல அரசர் வியந்தார்.

இன்னொரு உபசேனாதிபதியும், "ஆமாம். இவன்தான் சங்கிலியில் ஏறி உள்ளே கத்தியால் குத்த பாலம் அறுந்து கீழே விழுந்தது. உள்ளே குத்துப் பட்டவன் அலறியதும், யாரோ பயந்து போய் பல் சக்கரத்தை விட்டுவிட்டார்கள். பல் சக்கரம் சுழன்று பாலத்தை நழுவவிட்டு விட்டது. அது சுழன்று நழுவிய வேகத்தில் சங்கிலியின் கடைசி பகுதியும் வந்துவிட்டது. இப்பொழுது பாலத்தை மறுபடியும் தூக்கக் கூட முடியவில்லை. அந்த லட்சணத்தில் கோட்டை வைத்திருக்கிறார்கள்."

"ஆமாம். பாலத்தை மூடுவதோ, திறப்பதோ இல்லையாம். அதனால் சிக்கிக் கொண்டு விட்டதாம்."

ஒரு உபசேனாதிபதி அரசரின் பேச்சுக்குப் பதில் சொன்னார்.

"அப்படியானால் இன்றைய வெற்றிக்கு இவனே மூல காரணம் என்று சொல்." என்று சக்ரவர்த்தி சொல்ல அங்குள் ளோர் அமைதியாக இருந்தார்கள்.

ஒரு உபசேனாதிபதி மட்டும் தொண்டையைச் செருமி ஏதோ பேச ஆரம்பித்தபோது பிரம்மராயர் குறுக்கிட்டார்.

"ஒரு வகையில் ஆமாம். இவனுடைய வேகம் ஆச்சரியமாக இருந்தது. உயிருக்குப் பயப்படாமல் அவன் தரையிலிருந்து எழும்பி பாலத்தில் போய்த் தாவி உட்கார்ந்ததும் கம்பியில் நடந்து வாயில் கத்தியோடு உச்சிக்குப் போனதும் ஆச்சரியமான விஷயங்கள். அதுமட்டுமில்லை." பிரம்மராயர் தொடர்ந்தார்.

"யானையிலிருந்து இறங்கி குதிரையில் ஏறி, குதிரையிலிருந்து உள்ளே போய், மிக வேகமாகச் சண்டை போட்டான். சில நிமி டங்களில் நாலைந்து பெரிய வீரர்களை வெட்டி வீழ்த்தியதையும் நான் பார்த்தேன்."

"அப்படியா.."



"எப்படியாவது அரண்மனையை அடைந்துவிட வேண்டு மென்று இவன்தான் ஒவ்வொரு இடத்திலும் முதன்மையாகப் போய்க் கொண்டிருந்தான்."

"நான் அவைகளைப் பார்க்கவில்லை. அந்த மதில் சுவரின் ஓட்டுக்கல்லில் நின்றபடி நடனமாடிக் கொண்டிருந்தானே அதைப் பார்த்தேன். இது யார், நம்மவனா. நுளம்பபாடி ஆளா என்று புரியாமல் திகைத்தேன். நல்ல பேச்சு நாம் இதுபற்றியும் பேச வேண்டியிருக்கிறது. ஞாபகப்படுத்தி விட்டீர்கள். இவனுக்கு ஒரு நல்ல சாயவேட்டியும் இந்தச் சால்வையும் கொடுத்தனுப்பு. இவனுக்கு ஒரு உயர்ந்த ஜாதி ஆண் குதிரை கொடுக்கச் சொல்."

"என்ன கொள்ளையடித்தாய்." என்று ஒரு சேனாதிபதி கேட்க, "அதெல்லாம் செய்யவில்லை. வெறும் ஆட்களை மட்டும் வெட்டிப் போட்டேன்." என்று சாதாரணமாகச் சொன்னான்.

"அவன் முகத்தைப் பாருங்கள். அவனுக்கு எடுக்கத் தெரியாது. உனக்குத் திருமணமாகி விட்டதா."

சக்ரவர்த்தி அன்பொழுகக் கேட்டார்.

"இல்லை ஐயா" அவன் கைகூப்பி பதில் சொன்னான்.

"இந்தா போய் திருமணம் செய்து கொள்."

ஒரு சிறிய பித்தளைச் சொம்பில் தங்கக்காசுகள் அள்ளி போடச் சொன்னார். யாரோ போட்டுக் கொடுக்க அதை அவனிடம் நீட்டினார். அவன் கையேந்தி வாங்கிக் கொண்டான்.

"நன்றி ஐயா."

அவன் சொம்பை வைத்துவிட்டு விழுந்து வணங்கினான்.

"இவனுக்கு இதைப்பாதுகாக்கக்கூடத் தெரியாது."

"ஆமாம். புரிகிறது."

"பாத்திரத்தின் மேலே இரும்புத்தகடு வைத்து மூடச்சொல்லி விடு. கருமார்கள் செய்து விடுவார்கள்." என்று சொல்ல உப சேனாபதி எழுந்து நின்றார்.

அவன் மறுபடியும் எல்லோரையும் வணங்கிவிட்டு சொம்போடு வெளியே வர உபசேனாதிபதி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். குடுமியைப் பிடித்து உலுக்கினார்.

"அதிர்ஷ்டக்காரப் பயலடா நீ." என்று சொன்னார்.

"ஐயா.. நான் போரிட்டதைப் பாராட்டினாரா சக்ரவர்த்தி" என்று வியப்போடு கேட்டான்.

"ஆமாம். மிகப்பெரிய பாராட்டு உனக்குக் கிடைத்திருக்கிறது. தொடர்ந்து நல்லபடியாக யுத்தம் செய்து சேனாபதியாக நீ வளர வேண்டும்." என்று உபசேனாதிபதி அவன் தலையில் கை வைத்தார்.

உபசேனாதிபதி கால்களைத் தொட்டு வெள்ளியம்பலம் வணங்கினான். அன்று இரவு அவனால் தூங்கவே முடியவில்லை. அவன் வெட்டிப்போட்ட பல முகங்கள் ஞாபகத்திற்கு வந்தன. சக்ரவர்த்தி நீட்டிய பொற்காசுகள் நிரம்பிய சொம்பு முன்னே வந்தது. பிரம்மராயர் அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது.

மறுநாள் ஒரு வீட்டுக் கேணியில் குளித்துவிட்டு வெளியே வரும்போது அந்தச் சொம்பை மூடி கயிறு கட்டி அவனிடம் கொடுத்தார். அதை அவன் தோளில் அணிந்து கொண்டான். அவனுக்கு சாயவேட்டியும், மேல், வஸ்திரமும் கொடுத்தார்கள். அந்த மேல் வஸ்திரம் பட்டால் செய்யப்பட்டிருந்தது. சக்ரவர்த்தியின் வஸ்திரம் அது என்று எல்லோருக்கும் தெரிந்து அவனை வியப்போடு பார்த்தார்கள்.

"இதை உடுத்திக் கொண்டு அவமானப் படுத்தி விடாதே. நன்றாக மடித்து ஏதேனும் ஓலைப்பெட்டி வாங்கி அதற்குள் பொதித்து வை. அந்தச் சொம்பையும், ஓலைப்பெட்டியையும் பின்னால் வருகின்ற கரணத்தாரிடம் கொடு. அவர்கள் பத்திரமாய் வைத்திருந்து திரும்ப உனக்குக் கொடுப்பார்கள்."

ஓடிப்போய் கரணத்தாரிடம் கொடுக்க அவன் அதை வாங்கிக் கொண்டு சீட்டு எழுதிக் கொடுத்தான்.

"நுளம்பபாடி முழுவதும் போர் நடக்கும் என்று சொன்னார்கள். ஆனால், அதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. நுளம்பபாடி அரசு, சோழ அரசிடம் சரணடைந்தது. அங்கிருந்து அதிகாரிகள் வந்து பேசினார்கள். அந்த அதிகாரிகளைச் சோழ அதிகாரிகள் மரியாதையாக வரவேற்றார்கள்.

முதலில் பறந்து வந்த ஈட்டி அவர்கள் நாட்டு இளவரசரைத் தாக்கிவிட்டதாம். அதனால்தான் தோல்வி ஏற்பட்டதாம்."

அந்த அதிகாரிகள் விளக்கம் சொல்ல சக்ரவர்த்தி அந்த உபசேனாதிபதியை வியப்போடு பார்த்தார்.



வெள்ளியம்பலத்திற்குப் பதவி உயர்வு கொடு என்று சொன்னார்.

போகும்போது யானையின் அம்பாரியில் தொங்கிக் கொண்டு போன வெள்ளியம்பலம், கோமணத்தோடு சண்டையிட்ட வெள்ளியம்பலம், திரும்பும் போது பஞ்ச கச்சம் வைத்துக் கட்டிய சாய வேட்டியோடும். பட்டுச் சால்வையோடும், தலைப்பாகையோடும் குதிரைப் படை முதன்மை வீரன் என்கிற கேயூரத்தோடும் ஊருக்குத் திரும்பி வந்தான். பொற்காசுகளைத் தந்தையிடம் கொடுத்து நமஸ்கரித்தான்.

அவன் தெரு மறவர் கூட்டம் அவனை முதுகு தட்டியும், நெஞ்சு தடவியும் வாழ்த்தியது.

"ஒடித்து வீசிய ஆவாரங்குச்சிபோல் இருக்கிறாயே. நன்றாகச் சாப்பிடுடா." என்று பாராட்டிய பலபேரும் புத்திமதி சொன்னார்கள்.

நன்கு பசித்தால் நன்கு சாப்பிடலாம். நன்கு பசிக்க நாலு கல் ஓட வேண்டும்.

அவன் முறையான போர்ப்பயிற்சி பெற்றான். பயிற்சிக்கு முன்னால் இரவு நாலுகல் தினமும் ஓடினான். உயரமாய் ஓநாயைப் போல குழைந்த வயிறாய் இருந்தான். ஆனால் நிறைய சாப்பிட்டான். அவனுடைய அம்மா அவனுக்கு நாள் தவறாது மாமிசம் சமைத்துக் கொடுத்தாள். உடும்புக்கறி, மான்கறி, காட்டுக்கோழி, கௌதாரி, சில சமயம் பன்றி மாமிசம் என்று விதம்விதமாக உண்டான்.

உபசேனாபதி அவனுக்கு வேல்வீசக் கற்றுக் கொடுத்தார். ஓடிவந்து அவன் வேல் வீசுகிறபோது அந்த வேல் வெகுதூரம் போயிற்று.

மறுபடியும் போர் என்று வந்தபோது அவன் குதிரைப் படையின் முதல் வரிசையில் பளபளக்கிற ஈட்டியோடு இருந்தான். அவன் வீட்டுப் பெண்கள் ஓடிவந்து அவனைப் பார்த்துவிட்டுக் கண்ணீர் விட்டு அழுதார்கள். அவன் தாயும் தங்கையும் திலகமிட்டார்கள். கையில் காப்பு கட்டினார்கள். விபூதிப் பச்சை என்கிற செடியை வேரொடு பிடுங்கி அவன் குதிரையின் சேணத்திற்கு அருகே கட்டிவிட்டார்கள். சாப்பிடுவதற்காகப் பச்சை அவலும், பொட்டுக் கடலையும், வெல்ல உதிரியும் கலந்து பையில் போட்டுக் கொடுத்தார்கள்.

"மகனே.. எது வேண்டுமானாலும் செய். ஆனால் குடிக்கக் கற்றுக் கொள்ளாதே." என்று அம்மா இறைஞ்சினாள்.

அவன் அம்மாவை உற்றுப் பார்த்தான்.

பெண்களுக்கு இது மிகப்பெரிய வேதனையடா. பெண்களுக் குக் குடிக்கிற ஆணைப் பிடிப்பதில்லை. பெண்களுக்குப் பிடிக்காதவனாக இருப்பது ஒரு ஆணுக்குக் கேவலம். எந்தப் பெண்ணையும் மானபங்கப்படுத்தாதே. கனிந்தால்தான் ருசி. காய் துவர்ப்பு. கசப்பு, எரிச்சல்.

அம்மா குதிரையின் சேணத்தைப் பிடித்துக் கொண்டு கெஞ்சலாய்ப் பேசினாள்.

அவனுக்குப் புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது.

வெள்ளியம்பலத்தினால் எதனாலோ குடிக்க முடிவதில்லை.

இந்த முறை நுளம்பபாடி தாண்டி கங்கபாடிக்குப் போய் ஒரு மாதம் காத்திருந்து மிக மோசமான ஒரு யுத்தத்தை அவன் சந்திக்க நேர்ந்தது. புஜத்திலும், மார்பிலும் வெட்டுக்கள் விழுந்தன. அடிபட்ட சிறுத்தைபோல உள்ளுக்குள் பாய்ந்து போய் எதிரிகளைத் துவம்சம் செய்தான்.

காயம் ஆறவேண்டுமென்பதற்காகக் கொடுக்கப் பட்ட மருந்து அவனுக்குப் பசியை அதிகரித்தது. அதிகம் சாப்பிட்டான். அதிகம் சுற்றினான். அந்த மருந்திற்கு மது அருந்தியிருந்தால் வயிற்று எரிச்சல் அதிகமாகிக் கோபமுள்ளவனாய், ஆத்திரமுள்ள வனாய் ஆகியிருப்பான். ஆனால் வெள்ளியம்பலம் ஆரோக்கிய மான மனமுடையவனாய்த் திகழ்ந்தான். பல ஊர்களுக்குப் பயணப்பட்டு அந்த ஊர் மக்களை உற்றுப்பார்த்து அவர்கள் சோகத்தையும், சந்தோஷத்தையும் புரிந்து கொள்ள முயன்றான்.

ஒரு வருடம் கழித்து ஊருக்குத் திரும்பி வர அவனைவிட நான்கு வயது அதிகமான அவனது அத்தைப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார்கள். அதில் அவன் அத்தைதான் மும்முரமாக இருந்தாள்.

"வயதென்ன வயது. என் பெண்ணுக்கு சகலமும் கற்றுக் கொடுப்பேன். அவன் காலடியில் விழுந்து கிடப்பாய். தமைய னோடு உண்டான என் உறவை நான் எதற்காக அறுக்க வேண்டும். பெண்ணுக்கு முறையான மாப்பிள்ளை வரும்போது அவனை இன்னொருத்திக்கு நாங்கள் ஏன் தாரை வார்த்துத்



தரவேண்டும். அவன் எங்கள் சொத்து." என்று சொல்லி அழுது புலம்பி ஊர்கூட்டி திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டாள்.

அம்மாவுக்கு விருப்பமில்லை. அப்பாவுக்குத் தடை செய்ய முடியவில்லை. அவன் அபிப்ராயத்தை யாரும் கேட்கவும் இல்லை.

ஆனால், திருமணம் முடித்த மூன்றாவது நாளே மிகக் கெட்டிக்காரப் பெண்ணைத் திருமணம் செய்துள்ளோம் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது.

எல்லா விதத்திலும் அவள் மிக ருசியாக இருந்தாள். மிகுந்த அக்கறையோடும், கனிவோடும் அவளைக் கவனித்துக் கொண்டாள். ஒவ்வொரு விஷயத்தையும் அவனைக் கேட்டுத் தான் செய்தாள். அதேசமயம் அவள் விருப்பங்களையும் நிறை வேற்றிக் கொண்டாள்.

மறவர்களில் பலபேர் குடிப்பவராக இருக்க தன் புருஷன் குடிக்காமலும் பிற பெண்களை நாடாமலும், அதேசமயம் முதன்மை வீரனாகவும் இருப்பது அவளுக்கு மிகப்பெரிய பெருமையைக் கொடுத்தது. அவனை மெய்க்காவல் படையில் சேர்த்தார்கள். அப்போது அவனுக்கு வயது இருபத்தொன்று. அவ்வளவு இளம் வயதில் மெய்க்காவல் படையில் யாரையும் சேர்ப்பதேயில்லை. அதிலும் அவனை இளவரசர் இராஜேந்திர ருக்குத் துணையாகப் போட்டார்கள். இராஜேந்திரரைவிட மிகச்சில வருடங்களே அவன் பெரியவனாக இருந்தான். ஆனாலும் நாற்பது வயதில் குடகுமலைப் போரில் அவனை ஒற்றனாகத் தனியே அனுப்பினார்கள். காடுகளில் பதுங்கிப் பதுங்கிப் போய் குடகுமலை தேசத்துப் படைகள் எங்கிருக் கின்றன. எப்படி இருக்கின்றன என்றெல்லாம் தெரிந்து கொண்டு வந்து விவரம் தெரிவித்தான். அவனைப்போலவே அவர்கள் படை ஏவிய ஒற்றறிய வந்தவனைச் சோழதேசத்துப் படை வளைத்துப் பிடித்துக் கொண்டது.

"வெள்ளியம்பலம் சொன்ன தகவலை வைத்து விதம்விதமாக ஆராய்ந்தது. கிழக்கிலும், தெற்கிலும் பாதைகளில் மூங்கில் வேலி அமைத்து எதிர்க்கத்தயாராக இருக்கிறார்களா. மலைகளிலும், மரங்களிலும் பதுங்கியிருக்கிறார்களா. நல்லது இருக்கட்டும். நாம் பின்வாங்குவோம்."

இராஜராஜர் சொன்னார்.

சேனாதிபதிகள் திகைத்தார்கள். உபசேனாதிபதிகள் வாய் பொத்தினார்கள். ஆனால், வெள்ளியம்பலம் இராஜராஜரை உற்றுப் பார்த்தான்.

"அவர்கள் எதிர்பாராத பக்கத்திலிருந்து தாக்கலாம் என்று சக்ரவர்த்தியார் நினைக்கிறார்." என்று உரக்கச் சொன்னான்.

சக்ரவர்த்தி அவனை உற்றுப்பார்த்தார்.

"ஆனால், குடமலைநாடு மிக விஸ்தீரணமுள்ளது. செங்குத்தான மலைகள் உடையது. அடர்ந்த காடுகளையுடையது. அந்த இடங்களை மனிதர்களால் கடக்கவே முடியாது. மேலும் அப்படி மனிதர் ஊடுருவினால் பறவைகள் சப்தத்தாலும், நரிகளின் ஊளையிடுவதாலும், மிருகங்களின் இடம் பெயர்தலாலும் அவர்களுக்குத் தெரிந்துவிடும்."

பிரம்மராயர் உரக்கச் சொன்னார்.

"எனவே என்ன சொல்ல வருகிறீர்கள்."

"வெள்ளியம்பலம் சொல்வதுபோல அவர்கள் போருக்குத் தயாராக இருக்கிறார்கள். தற்காப்பைத் திடப்படுத்தியிருக்கிறார்கள் என்றால் நாம் பின்வாங்குவது உத்தமம்."

"பின்வாங்கி என்ன செய்ய.."

"சோழதேசம் போவோம்."

"என்ன விளையாடுகிறீர்கள்."

எல்லா சேனாதிபதிகளும் கோபமாக அவரைப் பார்த்தார்கள்.

"மழைக்காலத்தில் இந்த குடமலைநாடு சுருண்டு கொண்டு கிடக்கிறது. அந்த மழைக்காலத்தில் வந்து தாக்குவோம்."

"நம்மால் தாக்கு பிடிக்க முடியுமா."

"சோழவீரர்கள் தாக்கு பிடிப்பார்கள்."

"அவர்கள் தளர்ந்திருப்பார்கள் என்று எந்த நம்பிகையில் சொல்கிறீர்கள்."

"அதற்கு ஆட்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். வெள்ளியம்பலம் போல பல பேரை அங்கு உட்கார வைத்துவிட்டு காடுகளில் வசிக்க வைத்துவிட்டு நல்ல மழை பொழியும் காலத்தில் அவர்களைத் திரும்ப வரச் சொல்ல வேண்டும்."



"எவ்வளவு தூரம்."

"நுளம்பபாடி தூரம். நாம் அங்கு சிதறிக் கிடப்போம். பல்வேறு பாடி வீடுகள் அமைத்திருப்போம். ஒரு குறிப்பிட்ட நாளில் வேகமாக ஒன்று சேர்ந்து குடமலை தேசம் நோக்கி முன்னேறுவோம். முழுக்க முழுக்க குதிரைப்படைகள் அடிவாரம் வரை வேகமாக வந்து அடிவாரத்திலிருந்து உச்சிக்குக் காலாட்படையாக மாறிப் போக வேண்டும்."

"எத்தனை பேர் குடமலை தேசத்தைத் தாக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்."

"மூன்று லட்சம் வீரர்கள் வேண்டும். அந்த மூன்று லட்சம் வீரர்களுக்கும் மலையேறும் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்."

"எங்கே கொடுப்பது."

"மேற்குத் தொடர்ச்சி மலை நீண்டிருக்கிறது. சில மலைகளைத் தேர்ந்தெடுத்து வேகமாக ஏறும் பயிற்சியைத் தரவேண்டும்."

"மலையின் உச்சியில் குளிரில் வெறுமே நிற்பது எப்படி."

"பழக்கப்படுத்த வேண்டும். அந்தக் குளிரைத் தாங்கும்படியான மதுவகைகள் உணவுகள் மருந்துகள் தயார் நிலையில் இருக்க வேண்டும்."

"வெள்ளியம்பலம் சொன்னதாலா நாம் பின்வாங்குகின்றோம்."

"ஆமாம். வெள்ளியம்பலம் சொன்னது சரியாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்ராயம். இல்லையெனில் உயிர்ச்சேதம் அதிகமாகும். சோழதேசத்து வீரர்களை இழக்க நான் விரும்பவில்லை.

சக்ரவர்த்தி கட்டளையிட்டார்.

படைகள் பின்வாங்கினார்கள்.

"இந்த ஒற்றனை என்ன செய்வது."

பிரம்மராயர் அவன் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துக் கொண்டு கேட்டார்.

"விட்டு விடுங்கள். நாம் பின்னடைவதை மட்டும் அவனிடம் சொல்லி விடுங்கள். மற்ற விஷயங்கள் அவனுக்குத் தெரிய வேண்டாம். இவன் கண்ணெதிரே நாம் பின் வாங்குவோம்."

சோழ தேசத்தின் பெரும்படை பெரும் ஆரவாரத்தோடு பின் வாங்கியது.

வெள்ளியம்பலம் முன்னேறினான். தனி ஆளாக காட்டுக்குள் போனான். அவனைப் போல நூற்று நாற்பது வீரர்கள் பல்வேறு திக்கில் காட்டுக்குள் நுழைந்தார்கள். அவர்களுக்கு ஒற்றர் படைக்கான சங்கேதம் சைகையாகவும், ஒலியாகவும் சொல்லித்தரப் பட்டது.

தஞ்சை காவேரிக்கரையின் அக்கா குருவி போல அவர்கள் சத்தமிட்டார்கள். அக்கோவ்.. கூவினார்கள். காட்டுக்குள் நுழைந்தார்கள். தடிகை பாடியில், நுளம்பபாடியில் கங்கதேசத்தின் எல்லைகளில் சிதறிக்கிடந்த சோழப்படை சட்டென்று ஒருநாள் செய்தி கிடைத்ததும் ஒன்றாயிற்று. குதிரைகள் மிகத் துரிதமாகக் குடமலை நாட்டை நோக்கி மூன்று நாள் பயணத்தில் அடைந்தன. அவர்கள் அடிவாரத்தில் காத்துக் கிடக்க மறுநாளே எல்லா ஒற்றர்களும் ஒன்று திரண்டார்கள். மூன்று ஒற்றர்கள் காணாமல் போயிருந்தார்கள். ஒருவனைப் புலி அடித்துவிட்டது என்று செய்தி மட்டும் கிடைத்தது. மற்ற இருவர் என்ன ஆனார் என்று தெரியவில்லை.

மழை அடித்துப் பெய்தது. குடமலை நாட்டில் இடி இறங்குவதைப் பார்த்துவிட்டு சோழதேசத்து வீரர்கள் பயந்தார்கள். தலையில் விழுந்து விடுமோ, கீழே மண்ணில் பட்டுத் தெரித்துக் கங்குகள் எகிறுகின்றனவோ என்று ஆச்சரியப்பட்டார்கள். இடி சத்தத்திற்குப் பயந்தார்கள். காதுகளை மூடிக் கொண்டார்கள். தலைப்பாகையைக் காதுகளை மறைத்துக் கட்டிக் கொண்டார்கள். தலையில் குளிராமல் இருக்க மது அருந்தினார்கள். கஷாயம் குடித்தார்கள். ஓலைத் தடுக்கால் மூடி மாமிசம் சமைத்தார்கள்.

குடமலைநாடு தூங்குகிறது என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்ததும் சக்ரவர்த்தி இராஜராஜர் மலை ஏறக் கட்டளையிட்டார். ஏழு ஏழு குழுக்களாக மூன்று லட்சம் படை வீரர்கள் மலை ஏறினார்கள். உறிகளில் எண்ணெய் கொண்டு போகப் பட்டது. கோவேறு கழுதைகளில், சின்ன குதிரைகளில், எருதுகளில் தண்ணீரில் நனையாமல் பெரிய தோற்பைகள் தைத்து அதற்குள் கந்தைகள் வைத்து அனுப்பியிருந்தார்கள். வைக்கோல் பிரிகள் அழுத்தமாகச் சுற்றப்பட்டு வந்திருந்தது. குடமலை நாட்டின் மரவீடுகளில் அந்தத் தோல்பையைத் திறந்து கந்தையையும், வைக்கோல் சுருளையும் உள்ளே வைத்து எண்ணையை ஊற்றி தீயிட்டார்கள். எண்ணெய் கொழுந்துவிட்டு எரிந்தது.



குடமலை வீரர்கள் சுதாரித்துக் கொண்டு வெளியே வந்தாலும் லட்சக்கணக்கில் வீரர்கள் தங்கள் தேசத்தைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள் என்று தெரிந்து வாய்விட்டு அலறினார்கள். காடுகளுக்குள் பலபேர் தப்பித்து ஓடினார்கள். ஏழு நாள் யுத்தத்தில் குடமலைநாடு முழுவதும் வசப்பட்டது. அரண்மனைகள் சூறையாடப்பட்டன. தாமிரத்தால் செய்யப்பட்ட நகைகள், பாத்திரங்கள் என்று பலவும் இருந்தன. தங்கம் குறைவாக இருந்தது. பதப்படுத்தப்பட்ட மிருகங்களின் தோல்கள் அதிகமிருந்தன. குளிருக்கு அவை மிக இதமாக இருந்தன.

நுளம்பபாடி சேனாதிபதி ஒருவனைச் சோழ தேசத்தின் பிரதிநிதியாக அங்கே வைத்துவிட்டு சோழப்படைகள் திரும்பின.

மலை இறங்கியதும் சக்ரவர்த்தி ஞாபகம் வந்தவராக வெள்ளியம்பலம் எங்கே என்று கேட்டார். வெள்ளியம்பலத்திற்குக் கடும் ஜுரம் என்று சொல்லப்பட்டது.

சக்ரவர்த்தி அவனை வரவழைக்கச் சொன்னார்.

அவன் தோளைச்சுற்றி சிறுத்தைத் தோல் போர்த்தி வந்தான். அவனை உற்றுப் பார்த்தார்.

"இந்தத் தோலாடை வேண்டாம். தூக்கிப்போடு. யானையில் ஏறி சுருண்டு படுத்துக் கொள். அவனுக்கு நல்ல மருந்தாகக் கொடுங்கள். அவனுக்கருகிலேயே ஒரு வைத்தியர் வரட்டும்." என்று சொன்னார்.

மலையில் தங்கியிருந்த பல ஒற்றர்களுக்குத் தரை தொட்டதும் காய்ச்சல் தொற்றிக் கொண்டது சீதோஷ்ணம் மாறியதும் உடம்பு ஒத்துழைக்க மறுத்தது. வீரர்களுக்காகவே நான்கைந்து நாட்கள் சக்ரவர்த்தி நுளம்பபாடியில் இறங்கினார். ஆட்டமும், பாட்டமும் என்று ஓடிற்று.

"நீ மது குடித்துத்தான் ஆகவேண்டும்." என்று அவன் வாயில் மது புகட்டினார்கள்.

மூன்று நாள் அடித்துப் போட்டது போல் வெள்ளியம்பலம் தூங்கினான். பிறகு சுதாரித்துக் கொண்டான். யானையின் மீது சாய்ந்தபடியே ஊர் திரும்பினான்.

அவனுடைய கேயூரங்கள் மாற்றப்பட்டன. வெள்ளிக் கேயூரங்கள் தரப்பட்டன. சிறுபடைக்குத் தலைவன் என்று அவனை அறிவித்தார்கள். ஒற்றர் படையிலிருந்து விலக்கி ஓய்வெடுத்துக் கொள்ள வசதியாக கோட்டைக்காவல் என்று மாற்றினார்கள். கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வீட்டிலேயே அமர்ந்தபடி அரசாங்கத்தில் காசு வாங்கிக் கொண்டிருந்தான். உண்டு உறங்கி பருமனானான். மனைவியோடு இடையறாது சல்லாபித்துக் கொண்டிருந்தான்.

அவனை விட்டுவிட்டுத்தான் ஈழத்திற்குப் பெரும்படை கிளம்பியது. சும்மா அலையாதே என்று உபசேனாதிபதிகள் அவனைக் கண்டித்தார்கள். உன்னைப் போன்றவர்கள் வடக்கேயிருந்து வரும் பகைவரைத் தடுத்து நிறுத்த தஞ்சையில் தேவையல்லவா என்று சொன்னார்கள். கோட்டை வாசலைப் பாதுகாக்க வயதான வீரர்கள் இருந்தார்கள். அவசியம் ஏற்பட்டாலொழிய அவர்கள் முதன்மை வீரரான சிறுபடைத் தலைவனான வெள்ளியம் பலத்தைத் தொந்தரவு செய்வதில்லை. ஆனால், ஈழத்தில் படைகள் திணறுகின்றன. இரண்டு நாவாய்கள் கடற்கொந்தளிப்பில் சிக்கிக் கொண்டு பல வீரர்கள் மடிந்து விட்டார்கள் என்ற செய்தி வந்தபோது, வெள்ளியம்பலத்திற்கும் அழைப்பு வந்தபோது, ஜாக்கிரதை.. ஜாக்கிரதை என்று சொன்னார்கள். கூடவே அவன் மனைவி நாகை வரை வந்தாள். நாகையில் படகேறும்போது கண்ணீர் வழிய விடை கொடுத்தாள்.

அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான். என்னமோ வயிறு கலங்குகிறது என்று கேவினான்.

அவன் அவள் தலையைத்தடவி மெல்ல அணைத்துக் கொண்டு நெற்றியில் முத்தமிட்டு எதுவும் பேசாமல் படகேறி பிறகு நாவாயில் போய் அமர்ந்து தெற்கு நோக்கிப் போனான். எதிரே புலிக்கொடியோடு ஒரு நாவாய் வந்ததும் யார் என்று ஆச்சரியப் பட்டார்கள். அருகே வந்தபிறகுதான் அவர்கள் கடற் கொள்ளைக்காரர் என்று புரிந்தது. அதற்குள் கப்பலுக்குள் அந்த முரடர்கள் குதித்துத் தாக்கத் துவங்கினார்கள்.

வெள்ளியம்பலம் வாயில் கத்தியைக் கவ்விக் கொண்டு தண்ணீரில் குதித்து கரைநோக்கி நீந்தினான். அலை நாலாபக்கமும் வாரிப்போட்டது. காற்று மிகக் கடுமையாக இருந்தது. கைகால்களை உதைக்க முடியாமல் தண்ணீர் சில்லிட்டுக் கிடந்தது. எப்போதோ உடைந்து போன ஒரு மரக்கலத்தின்



கட்டையைப் பிடித்துக் கொண்டு அதன்மீது உறங்கிப் போனான். அவனைக் காற்று ஈழத்தில் கொண்டு போய் சேர்த்தது.

எந்த இடம் என்று புரியவில்லை. அது எதிரிகள் இடமா, நம்மவர் இடமா என்று புரியாமல் தவித்துத் தயங்கித் தயங்கி முன்னேறி சற்று தமிழ்க் குரல் கேட்க, அங்குபோய் விசாரித்து சோழப்படைகளோடு அவன் சேர்ந்து கொள்ள பதினோரு நாட்கள் ஆகிவிட்டன.

இந்த நேரத்தில்தான் அவன் இறந்துவிட்டான் என்று ஊருக்குச் செய்தி அனுப்பினார்கள். அவன் மனைவி அவன் இறந்த செய்தி கேட்டதும் விடியற்காலை நேரத்தில் யாருக்கும் தெரியாமல் சிதையடுக்கிப் பற்ற வைத்து அதனுள் பாய்ந்து விட்டாள்.

'நான் எங்கும் போகமாட்டேனடா.. இங்குதான் இருப்பேன்.' என்று அலறியபடி உயிர் நீத்தாள்.'

வெள்ளியம்பலம் ஊருக்குத் திரும்பியதும் ஊர் அலறிற்று.

'அடப்பாவி..' என்று சொன்னது. வெள்ளியம்பலம் விக்கித்துப் போனான். வாளைத் தரையில் போட்டான். வீடு முழுவதும் அவளைத் தேடினான். அரற்றினான். அலறினான். அவள் தீப்பாய்ந்த இடத்தில் போய்ப் படுத்துக் கொண்டு புரண்டு அழுதான்.

கிருஷ்ணன்ராமனான பிரம்மராயர் வெள்ளியம்பலத்தைத் தேடி வந்தார். தோளில் கை வைத்து 'அமைதி.. அமைதி..' என்று சொன்னார்.

"இவள்தான் அவசரப்பட்டு விட்டாள். நீயும் அவசரப் படாதே. பொறுமையாய் இரு. உன் குழந்தைகள் உன்னை எதிர்பார்க்கின்றார்கள்." என்று அமைதிப் படுத்தினார். இரண்டு வருடங்கள் அவன் எந்த வேலையும் செய்யாமல் வெறுமே திண்ணையில் உட்கார்ந்து வானம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அவன் மனைவியின் தங்கையையே திருமணம் செய்து வைத்தார்கள்.

அவன் முப்பத்தியோரு வயதில் பதினைந்து வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

அவள் மூத்த சகோதரியைக் காட்டிலும் மிகக் கவனமாக அவனைப் பார்த்துக் கொண்டாள். 'மாமா.. மாமா..' என்று சுற்றி வந்தாள். அவளுக்கும், அவள் அக்காவின் மகனுக்கும்,

இடையே இரண்டு வயதுதான் வித்தியாசம் இருந்தது. ஆனால் குழந்தைகள் மீது பாசத்தைப் பொழிந்தாள். குழந்தைகளும் அவளைத் தாயாக ஏற்றுக் கொண்டன. அவளுக்கும் குழந்தைகள் பிறந்தன.

இந்தச் சம்பவத்திற்குப்பிறகு வெள்ளியம்பலத்தைப் போருக்கு அனுப்பவில்லை. அவன் கோட்டைக் காவலனாகவும், ஓலைகள் கொண்டு போகின்ற தூதுவனாகவும், அரசாங்கப் பொக்கிஷங்கள் போகும் போது துணைக்குப் போகின்றவனாக வும், அரசாங்கப் பெண்டிர் கோயிலுக்குப் போகும்போது மெய்க் காப்பாளனாகவும் பணியாற்றினான்.

வீடு தேடி அரசாங்கத்தின் நெல்லும் காசும் வந்தன. அரசிளங்குமரிகள் அவன் மகளுக்குத் திருமணம் என்றதும் வாரி வாரிக் காசு கொடுத்தார்கள். அதில் வீடு பெரிதாகக் கட்டிக் கொண்டான். வீட்டோடு மாப்பிள்ளையை வைத்துக் கொண் டான். ஆயுதப் பயிற்சி அளிக்கின்ற சாலைகளுக்குப் போய் அங்கேயுள்ள மாணவர்களுக்குத் தன் யுத்த அனுபவங்களைச் சொல்லுகின்ற ஆசானாக மாறினான். கத்தி எடுத்து சண்டை போடுவதும், ஈட்டி எறிவதும், குட்டிக்கரணம் அடித்து குத்து வாளால் குத்துவதும் மட்டுமே போதாது. நெடுநேரம் குத்திட்டு உட்காரவும் ஒரு படைவீரனுக்குத் தெரிய வேண்டும். நூல் ஏணியில் ஏறவும், பாம்புகளைப் பிடிக்கவும், புலி வந்தால் தாக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

புலி வந்தால் எப்படித் தாக்குவது. நந்தவனத்திற்குள் எங்கேயோ புலி பதுங்கியிருக்கும். வந்து தேடுங்கள் என்பான். பதின்மூன்று வயது பையன்கள் உடம்பில் நடுக்கத்தோடு, கையில் மூங்கிலோடும் மெல்ல மெல்ல புலியைத்தேடி முன்னேறு வார்கள். ஒரு புதர் மறைவிலிருந்து புலி பாய்ந்து வரும். உண்மை யான புலியைப் போல உடம்பெல்லாம் வர்ண்ம் தடவி, வால் வைத்து, தலைமாட்டி, அதில் புலி நகம் வைத்த உறையை மாட்டி பெரும் கர்ஜனையோடு வரும்போது அந்த மாணவர்களுக்கு உடல் நடுங்கும்.

“எனக்கு நாற்பத்தி ஒன்பது வயதாகிவிட்டதடா. புலி இளமையானது. என்னைப்போல மூன்று மடங்கு வேகமுடையது. பயப்படப் போகிறாயே என்று நிதானமாக வருகிறேன். புலி அப்படி வராது. எனவே தைரியமாகச் சமாளி.” என்று மறுபடி யும் புலியாகப் போய் பதுங்கிக் கொள்வான்.



இந்த முறை மாணவர்கள் திறமையாகச் சமாளிப்பார்கள். அந்த புலியாட்டத்தைப் பார்ப்பதற்கு ஆட்கள் குவிவார்கள். அவர்களும் பயந்து கத்துவார்கள். வெள்ளியம்பலம் தஞ்சையில் பல்வேறு விதங்களில் மிகப்பிரசித்தி பெற்றவனாய் வாழ்ந்து வந்தான். அவனை இப்போது கோவிலில் சிற்பிகளுக்கு நடுவே காவலாகப் போட்டிருக்கிறார்கள். அந்தச் சிற்பிகள் பலருக்கு வெள்ளியம்பலத்தின் வீரக்கதைகள் தெரியும்.

"ஏன் உபசேனாதிபதியாகக்கூட போயிருக்கலாமே. எதனால் யுத்தத்திற்குப் போவதை நிறுத்திக் கொண்டீர்கள்.” என்று வியப்போடு கேட்டார்கள்.

அடுத்த போரில் போயிருந்தால் என்னை உபசேனாதிபதி யாக மாற்றியிருப்பார்கள். மனைவி இறந்த பிறகு உள்ளுக்குள் உடைந்து போயிற்று.

"அவள் ஒரு கனவில் தோன்றி ‘போதும் கொன்றது. நிறுத்திக் கொள்!' என்று கட்டளையிட்டாள். நான் சரி என்று சொல்லி விட்டேன். யுத்தமென்று போனால் கொல்லாமல் முடியுமா. அதனால்தான் வெறும் கோட்டைக்காவலனாய், எடுபிடியாய்த் திரிந்து கொண்டிருக்கிறேன்..” என்று சொல்லிச் சிரித்தான்.

அவன் மனைவி மீது வைத்திருக்கிற அன்பைப் பார்த்து விட்டு அவர்கள் நெகிழ்ந்து போனார்கள்.

"போதுமப்பா.. பலவீனமாகக் காலம் முழுவதும் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசை ஏதுமில்லை.”

"சோழதேசத்திற்கு நீ செய்திருக்கிற சேவை மகத்தானது. உன்னைப் பார்த்ததும் சக்ரவர்த்தியின் முகத்தில் எவ்வளவு சந்தோஷம் வருகிறது. 'அடேய் வெள்ளியம்பலம்!' என்று எப்படி உரக்கக் கூவுகிறார். வேறு ஏதோ யுத்தம் நினைவு கூரும்போது யாரும் அந்த ஊரின் பெயரைச் சரியாகச் சொல்லவில்லை என்று உன்னை அழைத்துப் பேசினாராமே."

"ஆமாம். மற்றவரெல்லாம் அந்த ஊரைக் கடந்தார்கள். நான் அந்த ஊர் எல்லையில் ஒருமாத காலம் உட்கார்ந் திருந்தேன். ஒற்றனாகத் திரிந்திருந்தேன். அதனால் எனக்கு அந்த ஊர் அத்துப்படி."

மத்திம வயதுடைய சிற்பிகளும், மூத்த சிற்பிகளும் மிகுந்த மரியாதையோடு நடத்த இளஞ்சிற்பிகள் அவனைப்பற்றி அதிகம்

அறியாதிருந்தார்கள். அவன் வயதுக்கும், தோற்றத்திற்கும் அதிகம் மதிப்பு கொடுத்தார்கள்.

வெள்ளியம்பலம் வந்தால் உட்காரச் சொல்லுவார்கள். ஏதேனும் உண்ணக் கொடுப்பார்கள். ஆனால் இளம் சிற்பிகளோ நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் வேலையில் மூழ்கிப் போனார்கள். ஆனால், வெள்ளியம்பலம் அதைப் பெரிதுபடுத்த வில்லை.

அந்த இளம் சிற்பிகள் செய்கின்ற வேலையைப் பார்த்து விட்டு வியந்தான். அதிலும் அந்த ஓவியம் வரையும் பையன் செய்கின்ற சித்திரவேலையைப் பார்த்துவிட்டு திகைத்துப் போனான். பஞ்சவன்மாதேவிக்காக சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவரின் படம் வரையப்பட்டு அந்தப்படம் பிரம்மராயருக்கு மட்டும் காண்பிக்கப்பட்டது. அந்தப் படத்தை உறையில் வைத்து அவனிடம்தான் பிரம்மராயர் கொடுத்தார்.

“பஞ்சவன்மாதேவியிடம் சமர்ப்பித்துவிடு. அரண்மனையில் மாட்டிக் கொள்ளட்டும்.” என்று சொன்னார்.

அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு போய் பஞ்சவன் மாதேவி யிடம் கொடுக்க, பஞ்சவன்மாதேவி ஆவலாகப் பிரித்துப் பார்த்தாள். அவனும் பார்த்தான்.

‘ஹா..’ என்று வாய்விட்டுச் சிரித்தான்.

அந்தப்படம் சுவரில் மாட்டப்பட்டது. மண்டியிட்டு அப்படத்தின் முன்னே வணங்கினான்.

‘திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வள ரூழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசு கொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் வாழ்க வாழ்க..’



என்று முழு மெய்க்கீர்த்தியையும் உரக்கச் சொன்னான்.

பஞ்சவன்மாதேவி அவனுக்கு ஒரு பொற்காசு பரிசளித்தார். இம்மாதிரி பல ஓவியங்கள் அந்த ஓவியன் வரைந்திருப்பதாகத் தெரிந்தது. அவன் வீட்டுப் பக்கம் போய் மரியாதையாக அவனை வணங்கினான்.

பதிலுக்கு அந்த ஓவியன் அவனை வணங்கவில்லை. மெல்லியதாய் ஒரு வருத்தம் இருப்பினும் வெள்ளியம்பலம் அதைப் பெரிதுபடுத்தவில்லை.

“எனக்கும் ஓவியம் வரையச் சொல்லித் தருகிறீர்களா.” என்று பணிவோடு அவன் கேட்க, அந்த ஓவியன் கைகொட்டிச் சிரித்த போதுதான் மிகவும் வலித்தது. லேசாய்க் கண்ணில் நீர் துளித்தது.

“எத்தனை யுத்தங்களில் கலந்து கொண்டிருப்பாய்.”

அந்த ஓவியன் கேட்டான்.

“பதினோரு யுத்தங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்.”

“எத்தனை பேரைக் கொன்றிருப்பாய்.”

“இருக்கும்.. முன்னூறு, நானூறு படைவீரர்களைக் கொன்றிப்பேன்.”

“அவர்களுடைய முகங்கள் கனவுகளில் வருவதுண்டா.”

“இல்லை. வருவதில்லை.”

“மறுபடியும் யுத்தத்திற்கு அனுப்பி வெட்டச் சொன்னால் வெட்டுவாயா.”

“நிச்சயம் வெட்டுவேன். எதிரி என்றால் வெட்டாது முடியுமா.”

“எதற்காக எதிரியை வெட்ட வேண்டும்.”

“இல்லையென்றால் அவன் வெட்டிவிடுவானே.”

வெள்ளியம்பலம் குழந்தை போலச் சொன்னான்.

“உனக்கு ஓவியம் வராது.”

“ஏன்.. ஏன்.. ஏன்..”

வெள்ளியம்பலம் திகைத்தான்.

"நீ வெட்டுவதற்காகவே பிறந்திருக்கிறாய். ஓவியம் என்பது உயிர் ஊட்டுவது. உயிர் ஊட்டும் ஒரு கலையை வெட்டுபவன் எப்படிச் செய்யமுடியும். நீ கொலைகாரன். உனக்கும் ஓவியத் திற்கும் நெல்முனையளவும் சம்மந்தமில்லை."

அந்த ஓவியன் சொன்னதும் வெள்ளியம்பலம் ஆடிப் போனான்.

சிற்பிகளோடு பழகத் துவங்கினான். ஆனால், அடிக்கடி அந்த ஓவியன் சொன்ன வார்த்தைகளை நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தான்.

'நான் கொலைகாரனா.. நான் கொலைகாரனா.." என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டிருந்தான்.

அமைதியான காலத்தில் கலைஞர்கள்தான் ஆட்சி செய் வார்கள். அப்போது போர் வீரர்கள் எல்லாம் கலைஞர்களுக்குக் குடை பிடிக்கும்படி நேரிடும். போர்க்காலங்களில் கலைஞர்கள் போர் வீரர்களுக்கு மிகப்பெரிய மரியாதையைச் செலுத்து வார்கள். குறிப்பாய் எல்லைப்புறத்தில் எதிரிகள் வந்து தங்கி, எப்போது வேண்டுமானாலும் ஊருக்குள் படை யெடுப்பு நடத்தப்படலாம் என்ற நேரத்தில் அந்தப் போர் வீரர்களைத் தெய்வங்களாகக் கொண்டாடுவார்கள். போர் வீரர்களும் சிலும்பலாக நடந்து கொள்வார்கள்.

இது அமைதியான காலம். கலைஞர்கள் காலம். கலைஞர்கள் கைகொட்டிச் சிரித்தால் போர் வீரர்கள் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

## 147

**ப**ஞ்சவன்மாதேவி அரண்மனை நந்தவனத்தின் நடுவே கட்டப்பட்டிருந்த ஒரு வட்டமான மண்டபத்தில் தனியே அமர்ந்திருந்தாள். ஐந்து தூண்களுடைய அந்த மண்டபம் மேலே தளமிடப்பட்டு அந்தத் தளத்தில் நீர் வைக்கப்பட்டிருந்தது. தொட்டியிலிருந்து தாமிரக் குழாய்கள் வழியாக நீரைத் தோட்டத்திற்குப் பாய்ச்சுவார்கள் அல்லது குழந்தைகளைக் குளிப்பாட்டுவார்கள். சில சமயம் பெண்டிரும் குளிப்பதுண்டு. மேலே நீர் நிரம்பியிருப்பதால் கீழே அந்த மண்டபம் குளுமை யாக இருக்கும் அது மழமழவென்ற கருங்கல்லால் கட்டப்பட் டிருந்தது. மண்டபத்தைச் சுற்றி ஒரு கை அளவுக்கு குழி ஏற்படுத்தி



அதிலும் நீர் நிரம்பியிருந்தார்கள். எறும்புகளோ, பூச்சிகளோ உள்ளே வரக்கூடாது என்று ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நந்தவனம் அடர்த்தியாக இருந்தது. நல்ல மலர்கள் மலர்ந்து கமகம என்று வாசனை வீசிற்று. பல்வேறு பறவைகளின் ஓசைகள் கேட்டுக் கொண்டேயிருந்தன. அணில்கள் மரமேறி விளையாடிக் கொண்டிருந்தன.

கார்த்திகை மாதத்துக் காற்று சிலுசிலுவென்று வீசிக் கொண் டிருந்தது. வானத்தின் வெகு உயரத்தில் பெரும் மேகக்கூட்டங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவைகளை வியப்போடு பார்த்தாள்.

இது சோழ தேசம் என்று உனக்குத் தெரியுமா. நீ எங்கே போகிறாய். யாரை நோக்கி, எதற்காக என்று தெரியுமா. இல்லை எதுவுமே தெரியாது. இந்த மனிதர்கள் போல்தான் நீயும் இலக்கின்றி நகர்கிறாயா. உலகத்தில் பிறந்த எந்த உயிருக்கும் எந்தத் தெளிவும் இல்லையா. இந்த அணில்களெல்லாம் இறக்கப் போகின்றன. இந்தப் பட்டாம் பூச்சிக்கு மூன்று நாளோ, நான்கு நாளோ. இந்தப் புற்களில் ஏறி இறங்கிப் போகின்ற எறும்புகளுக்கு என்ன வயசு. எத்தனை நாட்கள். அங்கே என்ன உணவு. எங்கே வீடு. யார் மனைவி. எத்தனை குழந்தைகள்.

மதுரை பக்கத்திலிருந்த காட்டிலிருந்து புள்ளி மான்களைப் பிடித்துக் கொண்டு வந்து இந்த நந்த வனத்தில் விட்டிருக் கிறார்கள். ஓயாது தின்றபடியே அந்த மான்கள் அலைகின்றன.

காட்டிலிருப்பது நிம்மதியா அல்லது இந்த நந்தவனத்தில் இருப்பது நிம்மதியா. எது சந்தோஷம் அல்லது எங்கிருந்தாலும் ஒன்றுதானா? தின்ன புல்லும் குடிக்க நீரும் இருந்துவிட்டால் போதுமா.

பறவைகள் ஓயாது பேசுகின்றன. என்ன பேசுகின்றன. பசி பசி என்ற குரலா அல்லது காம வேட்கையா அல்லது ஆபத்து, ஆபத்து என்கிற அலறலா. அல்லது வெறுமே ஒரு உற்சாகம் தானா.

நான் ஏன் இப்படிச் சிந்திக்கிறேன். எல்லோரும் ஏதோ ஒன்று செய்து கொண்டிருக்க நான் மட்டும் ஏன் எந்த விதமான பிடிப்பும் இல்லாமல் அலைகிறேன். அதேசமயம் பிடிப்பு இருப்ப தாக ஏன் நடிக்கிறேன். உள்ளே ஏதோ நழுவி விட்டது. ஏதோ கழன்று விட்டது. ஏதோ மாறிவிட்டது.

அருண்மொழியா, என்னையா, காதலிக்கிறாரா என்று திகைத்துப் போனதெல்லாம் வெறும் நாடகமோ என்று தோன்றுகிறது. வெறுமே கூடுதலான உணர்ச்சிப் பிரவாகத்தில் நான் என்னைப்பற்றி அதிகம் யோசித்து, எங்கே சிக்கி விட்டேனோ என்று தோன்றுகிறது.

எப்போது இந்த மாற்றம் நிகழ்ந்தது.

ஈசான சிவபண்டிதரைப் பார்த்த பிறகுதானே.

இல்லை... இல்லை...

அவள் மனம் வேகமாக மறுத்தது. அதற்கு முன்பே ஒரு தனிமை வந்து விட்டது.

இது உடற்கூறு சம்பந்தப்பட்டதென்று பட்டமகிஷி உலகமாதேவி காதோரம் சொன்னார்.

உன் கருப்பை ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறது. இதனால் உடம்பில் பல மாற்றங்கள் ஏற்படும். அந்த உடம்பு மாற்றங்கள் மனத்தைப் பாதிக்கும். மனிதர்களோடு அன்னியம் ஏற்படும். யாவரும் உண்மையில்லையோ, எல்லோருமே உபயோகப்படுத்திக் கொண்டார்களோ, நான் எதுவும் செய்யவில்லையோ, மரணம் நெருங்கி வந்து விட்டதோ என்று தோன்றும்.

குழந்தையில்லாத பெண்களுக்கு இது அதிகம் தோன்றும். எனவே, உன்னுள் தோன்றும் உணர்ச்சிகளை கவனமாகப் பார்த்து வேறு பக்கம் திசை திருப்பி, உற்சாகமாக இருப்பதற்கு என்ன வழி என்று யோசித்துப் பார். பெண்களோடு பேசு. சிரித்து விளையாடு. அவர்கள் காதல் விவகாரங்களைப் பற்றி கேள்வி கேள்.

விதம்விதமாகப் பட்டமகிஷி உலகமாதேவி யோசனைகள் சொன்னாள். யோசனைகளைக் காது கொடுத்துக் கேட்கும் போதே அவை தேவையற்றவை என்பது புரிந்து போயிற்று.

பிரச்சினையிலிருந்து தப்பித்துப் போகாமல் பிரச்சினையை நேரடியாக எதிர் கொள்வதுதான் நல்லது என்று விளங்கி விட்டது. அரசாங்கத் தொடர்பு அரசியல் தொடர்பு என்று சிறுவயதிலேயே ஏற்பட்டு விட்டது. இதுதான் வாழ்கை. இதுதான் இயல்பு என்று உள்ளுக்குளே பதிந்து விட்டது. ஆனால், வாழ்க்கை அப்படி இல்லை என்பது போகப் போகப் புரியலாயிற்று. எந்தக் கவலையும் இல்லாமல் பல பெண்கள் இருக்கிறார்கள் என்று பார்க்க முடிந்தது. அப்படிக் கவலையில் உள்ள



வர்களுக்கும் ஆறுதலாய்க் கூடவே மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதும் நன்கு புரிந்தது.

தோழியர்களையும், தாய்மார்களையும் நம்பிக் கொண்டிருந்த தேவரடியார் பெண்கள், புருஷனையே அதிகம் நம்பிக் கொண்டிருந்த மறவப் பெண்கள், பொருள் வரவையும், செலவையும் நம்பிக் கொண்டிருந்த வணிகப் பெண்கள், புத்தியை அதிகம் நம்பிக் கொண்டிருந்த அந்தணப் பெண்கள் என்று வாழ்க்கையை உற்றுப் பார்க்கையில், வகை வகையாய் மனிதர்கள் இருப்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தது.

ஆனால், அரச குடும்பத்து மனிதர்களோடு வாழ்கின்ற பெண்கள்தான் எவரோடும் பேச முடியாமல் மனம் திறந்து பழக முடியாமல், வேலைக்காரர்களை வெறுமே விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிறிய குற்றங்களுக்குக் கூட பெரிதாய் சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பட்டமகிஷி உலக மாதேவி இப்படித்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

எங்கோ கொக்கியில் மாட்டி புடைவை கிழிந்து விட்டது. கூப்பிடு அந்தத் துணி நெய்பவனை என்று ஆரம்பித்து, அவனை இழுத்து வந்து வேகமாகப் பேசி, பிறகு தவறு கொக்கியின் மீதுதான் என்று அரண்மனை ஆச்சாரியோடு மோதி, என்னைப் பார்த்து யாரோ கூவினார்கள். அதனால்தான் வேகமாக ஓடி வந்தேன் என்று கூவியவர்களைச் சாடி, ஒரு நாள் முழுவதும் வெறும் கூச்சலாய்ப் பொழுது போயிற்று. இதைக்கூடச் செப்பனிடத் தெரியவில்லையென்றால் ஏன் உயிரோடு இருக்கிறாய் போ, போய் சாவு என்று சொல்கிறார்கள். நான் எந்தத் தவறும் செய்யவில்லையே அம்மா என்று அந்த ஆச்சாரிக் கிழவன் தழுதழுக்கக் கண்ணில் நீர்த் துளிர்க்கப் பேசிய போது பெரிய அயர்ச்சி ஏற்பட்டது.

ஒரு மரவேலை செய்பவன் எப்படிப் புடைவை கிழிசலுக்குப் பொறுப்பாவான் என்று யோசிக்கவே மாட்டார்களா என்ற வேதனை எழுந்தது. ஆனால், பட்டமகிஷியைச் சொல்லியும் குற்றமில்லை.

அவள் வெறும் பட்டமகிஷி. அலங்காரப் பதுமை, அரச சபையில் அரசனது ஆசனத்திற்குப் பக்கத்திலே அமர்ந்து கொண்டிருப்பவள். இரு என்றால் இருக்க வேண்டும். எழுந்து போ என்றால் போக வேண்டும்.

எதற்கு இருக்கச் சொல்கிறார்கள். எதற்கு எழுந்து போகச் சொல்கிறார்கள் என்று அவளுக்குத் தெரியாது. எனவே இருப்பதோ, எழுந்து போவதோ அவளுக்குக் கடினமாகவே இல்லை. சக்ரவர்த்தி உடையாரைச் சுற்றிச்சுற்றியே அவள் வாழ்க்கை அமைந்துவிட்டது.

பதின்மூன்று வயதில் திருமணமாகி பழையாறை அரண்மனைக்கு வந்து இன்றைய தேதிக்கு ஐம்பத்தாறு வயதாகப் போகிறது. அவளுடைய கவலையெல்லாம் முன் நரையும், முகத்தின் சுருக்கமும்தான்.

அரசர் போருக்குப் போகிறார் என்றால் ஒரு நாள் புலம்புவாள். பிறகு தூக்கம், உணவு, தூக்கம், உணவு என்று சிரமம்தான். ஆனால் ரசிகை. நல்ல நடிகை சேரதேசத்துப் பெண்கள் எப்படியிருப்பார்கள். எப்படிப் பேசுவார்கள். திருமுனைப்பாடி பெண்கள் எப்படி நடந்து கொள்வார்கள். பாண்டிய தேசத்துப் பெண்கள் எப்படி நிற்பார்கள். எப்படி நடப்பார்கள் என்று நடித்துக் காண்பிப்பாள்.

வந்தியத்தேவர் சிரிப்பு, சேனாதிபதி பிரம்மராயரின் சிரிப்பு. மூவேந்த வேளாரின் சிரிப்பு என்று விதம் விதமாய் நடித்துக் காண்பித்து, வயிறு வலிக்கச் செய்து விடுவாள். அவளிடம் ஒரு விதூஷகத்தனம் இருந்தது. அது மாமன்னர் இராஜராஜருக்குப் பிடித்தது.

கொடும்பாளூர் இளவரசி வானதி. சுருட்டை முடி, பெரிய கண்கள், செதுக்கி வைத்த சிலை போன்ற மார்பகங்கள். குழந்தை பெற்ற பிறகும் கட்டுக்குலையாத மேனி, பட்டமகிஷியாக தன்னையே வரிப்பார் என்று நினைத்து, பிறகு ஏமாந்து மனம் தேறி இராஜேந்திரரைப் பெற்ற தாய் என்ற கர்வத்தில் சிறிது நாள் நடமாடி, உண்பதில் அளவு பார்த்து, உடுப்பதில் அழகு பார்த்து, மேனி எழில் சிறக்க பல்வேறு பூச்சுக்கள் தானே தயாரித்து, தடவி உலர்ந்து என்னைப்பார், என் அழகைப்பார் என்ற ஏக்கத்தோடு திரிந்து சட்டென்று ஏதோ ஒரு நாள் மனம் மாறி, தோடுடைய செவியன் சிவனோடு என்று உட்கார்ந்து விட்டாள். ஒருவேளை இந்த மாற்றத்திற்கு நம்பியாண்டார் நம்பி காரணமாக இருக்கலாம் அல்லது கருவூர்த்தேவர் உபதேசம் காரணமாக இருக்கலாம். அரண்மனை பூஜைகள் எல்லாம் வானதியின் தலைமையிலேயே நடக்கும். வீட்டிலுள்ள பெண்கள் சரிவர பூஜை செய்தால்தான் வெளியே போகின்ற ஆண்களுக்கு நல்ல



நன்மைகள் ஏற்படும். தீமைகளிலிருந்து காப்பு கிடைக்கும் என்றும் பேசி, பிறகு அந்தப் பேச்சையும் உதறி அமைதியானாள்.

பஞ்சவன்மாதேவியைத் திருமணம் செய்தது அவளுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. பஞ்சவன்மாதேவியைக் கொண்டாடியதும் ஆரம்பத்தில் அவளுக்குச் சிரமமாகத்தான் இருந்தது. தனக்குப் போட்டியாய் அவள் ஒரு ஆண் குழந்தை பெற்று விட்டால்... என்ற பயம் அவளைப் பஞ்சவன் மாதேவியோடு நட்பு கொள்ளாமல் தடுத்தது. ஆனால் பஞ்சவன்மாதேவி கரு உருவாகாது என்ற நிலையோடு திரும்பி வந்ததும் மனம் குழைந்து போனாள்.

எதற்கு இந்தக் கொடுமை, எதற்கு இந்தக் கொடுமை என்று அவள்தான் ஓடிவந்து கட்டிக் கொண்டு அழுதாள். இதற்குப் பிறகு அரசருக்குப் பல திருமணங்கள் அரசியலுக்காக நடந்தன. கடம்பூர் பெண்ணும், பாண்டிய தேசத்துப் பெண்ணும் தனித்தனியே திருமணமாகி அரண்மனைக்கு வரவழைக்கப் பட்டார்கள்.

யார் வந்தாலும் பஞ்சவன்மாதேவியின் முக்கியத்துவம் குறையவில்லை. மாறாய் வேலைப் பளு அதிகரித்தது.

எல்லா விருந்தினர்களையும் வரவேற்பது பஞ்சவன் மாதேவி தலையில் விழுந்தது. போர்க் காலங்களில் அது இன்னும் அதிகரிக்கும். நீ இங்கே இரு. அரண்மனையை யார் கவனித்துக் கொள்வார்கள் என்று சக்ரவர்த்தி சொல்லிவிட்டுப் போகும் போது உயிர் குலைந்து போகும். உடல் துவண்டு போகும். இரவோடு இரவாக குதிரை ஏறி அவரைப் பின் தொடர்ந்து போய் விடுவோமா. என்னால் அங்கு இருக்க முடியாது போ என்று சீறி விழுவாரா என்றெல்லாம் தோன்றும். ஆனால், சக்ரவர்த்தி அகன்றதும் ஒவ்வொரு விஷயத்திற்கும் பஞ்சவன் மாதேவியை நோக்கித்தான் வருவார்கள்.

நல்ல விளைச்சல் கண்டிருக்கிறது. அறுக்கத்தான் ஆளில்லை. அறுத்துக் களத்து மேட்டில் போட்டு நெல்லாகப் பிரிக்கத்தான் ஆளில்லை. ஆடுகள் மேய்ந்து விடுமோ என்ற பயம் இருக்கிறது. எப்போதேனும் மழை வந்துவிட்டால் தலை சாய்ந்த கதிர்கள் அழுகிப் போகும். பனியின் ஈரத்திலே நெல் மறுபடியும் முளைக்கத் துவங்கிவிடுகிறது.

திருமுனைப்பாடி நாட்டிலிருந்து ஆட்கள் வரவழைத்தால் நன்றாக இருக்கும். நமது கோட்டைக் காவல் வீரர்களையும்

மூன்று நாட்கள் நெல் அறுக்க அனுப்பினால் நன்றாக இருக்கும். ஆறேழு நாட்கள் அந்தணர் தவிர மற்ற எல்லாரும் அரிவாளும் கையுமாக களத்து மேட்டிற்குப் போய் கதிர் அறுத்து கூடை கூடையாய் வண்டியில் கொட்டி, தெருத்தெருவாய் நெல் உலர்த்தி விட்டுப் பெண்களுக்கு முதுகெலும்பு உடைந்து போகும். கொத்துகிற கோழியை எழுந்திருந்து விரட்ட முடியாது. கைதட்டி விரட்டினால் கோழி போகாது.

நெல் அவித்து குத்தி அரிசியாக்கி அந்தத் தானியத்தை மாட்டு வண்டிகளில் போட்டு மேல்பாடி வழியாக கங்க நாட்டிற்கோ, நுளம்பபாடிக்கோ சோழ வீரர்கள் இருக்கின்ற திசைக்கோ அனுப்புவார்கள். போனவர்கள் அங்கிருந்து யுத்தச் செய்தி கொண்டு வருவார்கள். மாறன் இறந்து போனான். காளன் இறந்து போனான். தாமன் இறந்து போனான் என்று துக்கச் செய்தி வரும். ஊர் அலறும்.

பஞ்சவன்மாதேவி தேர் ஏறி இறந்தவர் இல்லத்திற்குப் போய் இறுக்கி அணைத்து சமாதானம் சொல்வாள். அழுதவர் கண்ணீர் துடைப்பாள். சக்ரவர்த்தி இருந்தால் என்ன செய்வாரோ அதை அவள் முன் நின்று செய்வாள்.

உடம்பில் பதினாறு அம்புகள் பாய்ந்திருந்தனவாம் அம்மா. சிலவற்றைப் பிடுங்க முடியவில்லையாம். அப்படியே வைத்துத் தகனம் செய்தார்கள்.

நெஞ்சில் அடித்துக் கொண்டு மனைவி அழ. தகப்பன் கதற, தாய் பித்துப் பிடித்தவளாய் கூவ, என் ஐயனே, என் புருஷனே நீ எங்கிருக்கிறாய் என்று கவலையோடு வானம் பார்ப்பாள். உடம்பு பிழிந்து போட்டதுபோல ஆகிவிடும். மறுநாள் ஊர்ச்சபை, மூலபருடைச்சபை, அரண்மனை பொக்கிஷக் கணக்கர்கள், நகரத்தின் கரணத்தர்கள் என்று பேச வேண்டியிருக்கும்.

ஒருமுறை அரசர் வடக்கே போயிருந்தபோது ஈழத்திலிருந்து ஒரு சிறிய படை எல்லையில் இறங்கிக் கலவரம் செய்தது. அடுத்த கால் நாழிகையில் குதிரை ஏறி படை திரட்டி நாகபட்டினம் விரைந்து உள்ளே புகுந்து கலவரத்தில் ஈடுபட்ட மொத்த ஈழத்த வரையும் கைது செய்து விசாரிக்க அது வெறும் கூலிப்படை என்றும் தெரிந்தது.

என்ன செய்வது? அரசர் வந்து பார்த்து விசாரிக்க ஆறு மாதமாகும். அதுவரை இவர்களை என்ன செய்வது கொன்று விடலாம் என்றார்கள். ஆனால், பஞ்சவன் மாதேவி வேறு



விதமாய்ச் சிந்தித்தாள். இரவு முழுவதும் யோசித்து சங்கிலியால் கட்டப்பட்டிருந்த அந்த வீரர்களுக்கு நடுவே போய்ப் பேசினாள்.

"ஏதேனும் உண்ணவும், உடுக்கவும் கிடைக்கும் என்றுதானே சோழ தேசத்தில் எல்லைக்கு வந்தீர்கள். நான் தருகிறேன் உங்களுக்கெல்லாம் குழந்தைகள் இருக்கின்றனவா. குடும்பம் இருக்கின்றனவா என்று கேட்டு அவர்களை அழ வைத்து, காலில் விழ வைத்து, பொற்காசுகளும் கொடுத்து, புதிய படைகள் ஏற்றி போங்கள் போய்ச் சிங்களர்கள் இருக்கும் பகுதியில் கலவரம் செய்யுங்கள். நன்றி என்று ஒன்று இருந்தால் அங்கு போய் உங்கள் திறமையைக் காட்டுங்கள்." என்று தூண்டிவிட மிகப் பெரிய கலவரம் ஒன்று ஏற்பட்டதாகப் பிற்பாடு தெரிய வந்தது.

சக்ரவர்த்தி பாராட்டினார்.

ஆனால், மறுபடி செய்யாதே. சோழதேசத்திற்குப் போனால் பஞ்சவன் மாதேவி ஆடும். பாத்திரமும் உடையும் கொடுப்பார்கள் என்று மறுபடியும் கலவரம் வந்துவிடப்போகிறது என்று சொல்லிக் கண் சிமிட்டினார்.

"இல்லை. அந்த இடம் பலவீனமாக இருந்தது. சோழ தேசத்தில் இறங்க அந்த இடம் சிங்களவர்களுக்கு எதிராக இருந்தது. நான் நூற்று அறுபது பேர் கொண்ட ஒரு தனிப்படையை அங்கே நிறுத்தி வைத்து விட்டேன். பரதவர்களை தினந்தோறும் சோழப்படைத் தளபதியைப் பார்த்துப் பேச வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறேன்."

"அப்படியா... அற்புதம். ஆனால், எங்கிருந்து படைகளை அனுப்பினாய், எந்த இடத்திலிருந்து..."

"எந்த இடமுமில்லை"

"நூற்று அறுபது பேர் கொண்ட படையை எங்கிருந்தாவது எடுத்தால் அந்த இடம் பலவீனம் அடையத்தான் செய்யும்."

"இல்லை. ஒரு நகரத்திற்கு இரண்டு பேராக எண்பது நகரங்களிலிருந்து எடுத்தவர்கள்தான் அந்த நூற்று அறுபது பேர்கள். ஊரை அனுப்பி ஆட்களை வரச்செய்து ஒன்றாக்கி அங்கு அனுப்பினேன்."

அரசர் மெல்ல வியப்போடு அவளைப் பார்த்தார். எழுந்து நின்றார். அருகில் வந்து அணைத்துக் கொண்டார்.

எனக்கு ஒவ்வொரு நாள் இரவின் போதும் இடையறாது சோழதேசம் பற்றியும், தஞ்சை நகரம் பற்றியும் ஒரு கவலை

இருக்கும். இனி அந்தக் கவலை வராது. நீ இருக்கின்றாய். எனக்கு வலக்கரமாக இருக்கிறாய். நான் யோசிப்பதைவிடவும் திறம்பட யோசித்துச் செய்திருக்கிறாய் என்று இறுக்க அணைத்துக் கொண்டார்.

அன்று இரவு அரசருடைய அணைப்பில் உடம்பும், மனசும் கிறங்கித் தவித்தன.

இதுதான் பாராட்டா? இதற்கு ஏங்கித்தான் நான் எல்லா காரியங்களும் செய்கிறேனோ?

திடீரென்று கேள்வி வந்து பிறகு மெல்ல அணைந்தது. பதிலே இல்லாமல் மௌனமாயிற்று.

இப்போது அம்மாதிரி அணைந்து போன பல்வேறு கேள்விகள் விஸ்வரூபம் எடுத்து முன்னே நிற்கின்றன.

எதற்காக வாழ்கிறாய். எப்படி வாழ்கிறாய் என்று கேள்விகள் துளைத்துக் கொண்டிருந்தன. ஏதோ ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். அது தெரியவில்லை. எது அது. எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது என்று கேட்டுக் கொண்டாள். யாரிடமாவது இதைப்பற்றி கேட்டால் என்ன என்ற ஒரு எண்ணம் எழுந்தது வேகமாக எழுந்தாள்.

உண்மையில் வாழ்க்கை என்பது என்ன தெரியுமா என்று ஆரம்பிப்பார்கள். செவிமடுக்கிறபோதே ஒரு அயர்ச்சி வந்துவிடும்.

இது கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை. அனுபவித்து அறிவது. நானாய்க் கண்டுபிடிக்க வேண்டும்.

என்ன அது, என்ன அது. எது பஞ்சவன்மாதேவி. எது நான். உண்மையில் எது நான். அம்மாவின் மடியில் உட்கார்ந்து கொண்டிருக்க, அம்மா தட், தட், தட் என்று கோல் தட்ட எதிரே முப்பது பேர் ஆட அவர்களையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தது பஞ்சவன் மாதேவியா. பழுவூர் கோவிலின் உற்சவத்தில் சுற்றிப் பந்தலிட்டு ஏழு வயதில் அம்மா அரங் கேற்றம் செய்தாளே அது பஞ்சவன் மாதேவியா. சிறிய அத்தி மரத்துக் கிளையில் இரண்டு பக்கமும் கால்போட்டு ஆடிக் கொண்டிருக்க, மெல்லத் தலை சுற்ற அத்திமரம் அடியோடு பெயர்ந்து விழுவது போல் உடம்பெல்லாம் ஏதோ ஒரு வேதனை பரவ, அடிவயிறு வலிக்க நசநசக்க இறங்கி ரத்தம் பார்த்து அலறிய அந்தப் பஞ்சவன் மாதேவியா.



இது ஒன்றுமில்லை என்று காதோரம் உடற்கூறு பற்றி அத்தை சொல்லிக் கொடுத்தாளே அப்பொழுது கேட்டுக் கொண்டிருந்தவள் பஞ்சவன் மாதேவியா கோவிலுக்கு நேர்ந்து கொண்டு பொட்டு கட்டி தத்தோம், ததிகிண தத்தோம் என்று நட்டுவனார் அங்கேயிருந்து உரத்த குரலில் ஜதி சொல்ல, முகம் கை கால் விழிகள் அசைத்து ஊர் மக்களைக் கிறங்க அடித்து பஞ்சவன் மாதேவியா. எந்த ஊருக்குப் போனாலும் பெரிய கூட்டமொன்று அலை மோதி பின்னாலேயே வருமே. எதற்கம்மா, எதற்கு இப்படி வருகிறார்கள் என்று ஆச்சரியப்பட்டது பஞ்சவன் மாதேவியா.

ஒரு இளவரசன் உன்னைப் பட்டமகிஷியாக்குகிறேன் என்று காலுக்கு முன்னே தரையில் அடித்துச் சத்தியம் செய்தானே அதைப் பார்த்து திகைத்தவள் பஞ்சவன் மாதேவியா.

இல்லை தம்பி, திரும்பிப் போ என்று சொல்லும் போது அவன் வெறிபிடித்தது போல் கத்தியை உருவினானே அதைப் பார்த்துச் சிரித்தவள் பஞ்சவன் மாதேவியா. சோழதேசத்தில் சிதம்பரம்தான் இனி எல்லாம். சிதம்பரம் கோயிலுக்குப் பிறகு தான் மற்றதெல்லாம் கோயிலாகக் கருதப்படும் எனவே மிகச் சிறந்த நடனமணிகள், ஓவியர்கள், சிற்பிகள் சிதம்பரம் வரவேண்டும் என்று ஓலைவிடுத்துச் சிதம்பரம் போக இவளை முதலில் தேர்ந்தெடுக்கக் கண்ணீரும், கம்பலையுமாய் பழுவூர் விட்டு சிதம்பரம் வந்தாளே அவள் பஞ்சவன்மாதேவியா.

கொடும்பாளூரைச் சேர்ந்த பூரிவிக்ரமகேசரி என்கிற குறுநில மன்னருக்கு இரண்டு மனைவியராம். அதில் முதல் மனைவியின் பேர் கற்றளியாம். கல்லில் செதுக்கியதுபோல கட்டமைப்பான தேகமாம் அதனால் அவளுக்குக் கற்றளி என்று பெயராம். அந்தப் பெயர் இவளுக்கல்லவா இருக்க வேண்டும் என்று பரமேஸ்வரன் கை விரித்துக் கொண்டு அருகே வந்தானே அந்த நேரம் பயந்து நடுங்கியது பஞ்சவன் மாதேவியா.

நான் அணைக்கக்கூடாது. என்னை வழி நடத்துகின்ற என் அண்ணாருக்கே இது உரியது. வெகு சீக்கிரம் உன்னை என் அண்ணா ராஜராஜனுக்கு உரித்தாக்குவேன் என்று சொல்லி விட்டுப் பின் வாங்கினானே அது கண்டு கலவரமடைந்து பஞ்சவன்மாதேவியா.

அருண்மொழி என்ற பெயரைக் கேட்டதுமே உள்ளுக்குள் பறவைகள் குப்பென்று எழுந்து பறந்தனவே அந்தக் கிறக்கத்தில் இருந்தவள் பஞ்சவன் மாதேவியா. அவர் விரும்புகிறேன் என்று

சொன்னதும் தூணை இறுக்கக் கட்டிக் கொண்டு மெல்லத் தூணில் முகம் பதித்து நன்றி என்று கடவுளை மனசுக்குள் நமஸ்கரித்தவள் பஞ்சவன்மாதேவியா.

உன்னை அருண்மொழி சந்தித்த நாளிலிருந்து அவனுக்குப் பிரச்சனை அதிகமாக இருக்கிறது உன்னை எங்கே ஞாபகம் வைத்துக் கொள்ளப் போகிறார் என்று காதோரம் கவலையோடு அப்பா சொன்னாரே அப்போது கவலைப்பட்டவள் பஞ்சவன் மாதேவியா. மெல்ல, தனியே நின்று அழுதவள் பஞ்சவன் மாதேவியா. தஞ்சைக்கு வா என்று உத்தரவிட்டு விட்டு வெகுதூரம் முன்னே போய் விட்டாரே. அப்போது வயிறு கலங்கப் பின் தொடர்ந்தவள் பஞ்சவன் மாதேவியா.

அன்றைக்கு நான்காம் நாள் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் என்று சிம்மாசனம் ஏறி கைதட்டி மனைவியை அருகே அழைத்து இவள்தான் பட்டமகிஷி உலகமாதேவி என்று ஊருக்கு அறிவித்து, வானவன் மாதேவியை தனியே அழைத்து பஞ்சவன் மாதேவியை அறிமுகப்படுத்தி, இவளும் நம்மில் ஒன்று என்று ஒரே வார்த்தையில் முடித்தாரே அப்பொழுது நன்றியில் கரைந்து போனது பஞ்சவன் மாதேவியா.

வளையல்கள் அணிவித்து, செந்தூரம் அணிவித்து, கழுத்தில் போட்டிருந்த தங்கப் பொட்டைக் கழற்றச் சொல்லி அதற்குப் பதிலாக மணியாரம் அணிவித்து காதைப் பெருக்கிக் கொள்ள தங்க ஓலை கொடுத்து, தேரில் ஏற்றி ஊர்வலம் வந்தாரே அப்போது உறைந்து போய்க் கிடந்தவள் பஞ்சவன் மாதேவி.

அரசரின் அணைப்பில் முழு வேகத்தில் ஈடு கொடுக்க முடியாமல் திணறித்தவித்தவள் பஞ்சவன் மாதேவியா. தனக்குக் குழந்தைகள் பிறந்தால் அவர்களுக்கு முக்கியத்துவம் வரும் என்று மற்ற அரசியர்கள் பயப்பட, தனக்குக் குழந்தைகள் வேண்டாமென்று ஊருக்குப் போய் வைத்தியரிடம் சொல்லி கருப்பையின் தன்மையை மாற்றிக் கொண்டு வந்தாளே அவள் பஞ்சவன்மாதேவியா.

சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி என்று இடையறாது உழைத்துக் கொண்டிருப்பவள் பஞ்சவன் மாதேவியா. இப்பொழுது இடிந்து போய் எது வாழ்க்கை என்று நினைப்பவள் பஞ்சவன் மாதேவியா. எது நான் எங்கிருக்கிறது அந்த நான்.

உள்ளே பார்க்கப் பார்க்க எதுவோ பின் வாங்கிற்று. இதுதான் நான் என்று எதுவும் முன்வரவில்லை. இதுதான் நான்



என்று எதுவெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கின்றதோ அது எதுவும் இப்போது, கேள்வி கேட்கும் போது தன் முகம் காட்டவில்லை. அறிவதற்கான முனைப்பும் காட்டவில்லை. இன்னும் விசாரிக்க விசாரிக்க எதுவும் புலப்படாது. எல்லாமும் பின்னடைந்து போவதும் வெறுமே ஒரு திகைப்பபில் நிற்பதும் தெரிந்தது. காதுகளில் ரீங்காரம் அதிகரித்தது. யாரோ குதிரைகளை விரட்டுவது தெரிந்தது. கிண்ணம் தரையில் விழுந்து உருள்வது புரிந்தது. ரீங்காரம் பலப்பட்டது. கையும், காலும், வயிறும், தொடையும், முதுகும், உச்சியும் தனித்தனியாகத் தெரிந்தன. ஏதோ ஒன்றின் கூட்டாக, ஒரு குவியலாக உடம்பு இருப்பது தெரிந்தது. எப்படிக் குவிந்ததோ அப்படியே இந்த உடம்பு சிதறும் என்றும் புரிந்தது. இன்னும் மௌனமாய் உள்ளுக்குள் அமிழ்ந்தாள். தன்னையே அசராது பார்த்துக் கொண்டிருந்தாள். தூக்கம் போலும் ஒரு அயர்ச்சி வந்தது.

உடம்பு துவண்டு தூணில் சாய்ந்து கொண்டது. எதிரே உள்ள செடிகளும், கொடிகளும் பார்த்தது போலும் இருந்தன. பார்க்கப் படாதது போலும் இருந்தன. பறவை தனியாகக் கூவிக்கொண்டு இடம் விட்டு இடம் மாறிற்று. பறவையின் சப்தத்தையே பிடித்துக்கொண்டு போகையில் பறவை வேறு இடத்திற்குப் போவது தெரிந்தது. மீண்டும் இடம் மாறிற்று. மீண்டும் வெகுதொலைவுக்குப் போயிற்று ஆனால், மனம் பறவையின் குரலிலேயே இருந்தது. மற்ற எல்லா சப்தங்களையும் விட்டு விட்டு அந்தப் பறவையின் குரல் மீதே மனம் லயித்து இருந்தது. பறவை இன்னும் தொலைவே போயிற்று. வெகு தொலைவே மிக மெல்லியதாய் பறவையின் குரல் இருந்தது. இப்பொழுது பறவை ஜிவ்வென்று எழும்புவது தெரிந்தது. உயரே நின்று நாலாபக்கமும் போயிற்று. பறவைச் சத்தம் காற்றில் தேய்ந்து மறைந்தது. மனம் சப்தமற்று பறவையின் பின்னால் போயிற்று. பறவை பறக்கப் பறக்க மனம் அதைப் பின்னே தொடர்ந்தது. மனம் காணாமல் போயிற்று. எதுவுமற்ற ஒரு வெறுமையைப் பஞ்சவன்மாதேவி உணர்ந்தாள்.

ஏதோ ஒன்று உள்ளேயிருந்தது. இல்லாமலும் இருந்தது. இருக்கையைத் தாண்டி அப்பால் வேறொன்றுக்குப் போயிற்று. அங்கும் இருந்தது. இங்கும் இருந்தது. எங்கும் இருந்தது. எல்லா இடத்திலும் தானே நீக்கமற நிறைந்திருப்பதை உணர்ந்தாள். உள்ளிருப்பதே உலகம் முழுவதும் பரவிக் கிடப்பதை அறிந்தாள். வெளியில் இந்த நான் எங்கும் போய் அமரலாம். எதுவாக

வும் மாறலாம் என்பது தெரிந்தது. ஒரு நிம்மதி பரவிற்று. இது தானா என்று புரிந்தது போல் ஆயிற்று.

மரத்தின் வேர், அணிலின் வால், பறவையின் குரல் பட்டாம்பூச்சியின் முதுகு, தும்பியின் சிறகு, பூமியின் உருளல், கிரகத்தின் தரிசனம் நீல வெளியில் எல்லா இடத்திலும் தான் நிரம்பித் தளும்பி இருப்பதை உணர முடிந்தது.

இதுவும் பிரமையோ கேள்வி வந்தது. இன்னும் ஆழ அமிழ விரும்பினாள். பளீரென்ற ஒரு ஒளி உள்ளே போயிற்று. எல்லாம் ஒளியாயிற்று. இதுவே நான். இது அசைய எல்லாம் அசைந்தது. ஒளிக்குள் ஒளியானாள். ஒளியிலிருந்து பிரிந்து ஒளியானாள். பிரிந்த ஒளியை இருள் சூழ்ந்தது. அழுத்தியது. எங்கோ இறங்கியது. மறுபடி இருளாகும் தன்மையே ஜீவனானது. இன்னும் இருளா வதே உடம்பாவது. உடம்பு இன்னும் இருளாவதே நரகம்.

இருள் என்பது அறியாமை. தான் யார் என்று தெரியாத அறியாமை. நான் ஒளி. மிகப் பெரிய ஒளி பெரும் ஜோதி. அதன் அசைவே பிரபஞ்சம். அதன் அசைவே உலகம். அதன் அசைவே உயிர்கள். ஒளியாக மறுபடியும் ஆவதே வாழ்க்கை.

இருளாவது ஒரு சலனம், ஜோதியாவது இன்னொரு சலனம். சலனப்படாத நிலைக்குள் அமிழ்ந்து கிடப்பதே வாழ்க்கை. அதைச்சுற்றி மனம் திகழ்ந்தது. மனம் தான் என்றது. மனம் மறுபடியும் வெறுமே பறவையின் குரலை, பூமியின் அசைவை சருகின் நகர்வை கவனித்தது.

இப்போது மரம் பேசியது. கிளி பேசியது. குயில் பேசியது. புழு பேசியது எல்லாம் தெரிந்தது. பசி பசி என்று புழு நகரு கின்றது. தாகம் தாகம் என்று குயில் கூவுகிறது. பேடை... பேடை என்று கிளி கொஞ்சுகிறது. உயிரினங்கள் எல்லாம் எதை நோக் கியோ நகருகின்றன. அப்படி நகர்வதையே லட்சியமாய் நினைக் கின்றன. தின்கின்றவரை பசி. தின்று முடித்தபிறகு மறுபடியும் பசி. குடிக்கிற வரை தாகம். குடித்து முடித்த பிறகு மறுபடியும் தாகம். கொஞ்சுகிற வரை பேடை, திரும்பத் திரும்ப ஒரே காரியத்தில் ஈடுபட்டு அப்படி ஈடுபடுவதையே லட்சியம் என்று உலகம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

புழுவுக்குப் பசி, குயிலுக்குத் தாகம், கிளிக்குப் பேடை, மரத் துக்கு வெளிச்சம், மனிதர்களுக்கு என்ன ஆக்ரமிப்பு. ஆமாம், ஆக்ரமிப்பு. மனிதரை மனிதர் ஆக்ரமித்துக் கொண்டே இருக்க வேண்டும். கணவரை, மனைவி, மனைவியைக் கணவன், தாயைப் பிள்ளை, பிள்ளையைத் தாய், அண்ணனைத் தங்கை, தங்கையை அண்ணன், இவனை அவன் அவனை இவன் இந்த தேசத்தை அந்தத் தேசம், இந்த மதத்தை அந்த மதம் அந்த மதத்தை இந்த மதம். இந்த மொழியை அந்த மொழி அந்த மொழியை இந்த மொழி. ஒன்றாயிருப்பது பிடிக்காமல் ஒன்றுதான் என்று தெரியாமல் இரண்டாய்ப் பிரிந்து ஒன்றை ஒன்று ஆக்ரமித்துக் கொண்டிருப்பது. அதுவெல்லாம் நானே என்று இதுவும், இது வெல்லாம் நானே என்று அதுவும் முழுமையாக முயற்சிப்பதே ஆக்ரமிப்பு. ஆனால், முழுமையாகத்தான் இருக்கிறது என்பதை அறியாத ஆக்ரமிப்பு. எல்லாவற்றிலும் இருப்பதுவே இது என்று தெரியாமல் இன்னொன்றில் புகுந்து கொள்ள முயற்சிக்கின்ற முட்டாள்தனம்தான் ஆக்ரமிப்பு. இதைத்தான் மாயை என்று சொல்கிறார்கள்.

ஓ... இதுதானா. இதுதான் மாயையா.

அவள் துள்ளி குதித்து எழுந்தாள். தள்ளாடினாள். தூணைப் பிடித்துக் கொண்டாள். மெல்ல உடம்பு சேலை வழிய, செடி கொடிகள் நோக்கி நடந்தாள். அப்படியே செடிகளைத் தடவினாள். நானே நீ, நீயே நான். உன்னுள் இருப்பதே என்னுள் என்று முத்தமிட்டாள். மெல்ல மெல்ல தென்னை மரத்தைத் தடவினாள். புற்களின் மீது நடந்தாள் மான்களை அருகே நின்று கவனித்தாள். அவை வந்து மோந்து அவள் முகம் பார்த்தன.

அவள் மெல்ல முதுகு தடவினாள். இன்னும் நடந்தாள். அணில்கள் அவளைப் பார்த்து நின்றன. அருகே போய் மெல்லப் புரிந்தது என்று தலையசைத்தாள். ஒரு அணில் கீச்சென்று பதில் சொல்லியது. ஒற்றையடிப் பாதையில் ஓரத்தில் இருந்த புற்றுக்குப் போனாள். மெல்ல கை தட்டினாள். உள்ளே சிறிய சலனம் தெரிந்தது. என்ன என்று பார்த்தாள். ஒரு பாம்பு வெளியே வந்து சீறியது. என்னைக் கொத்த வேண்டுமா. கொத்து.

கை நீட்டினாள். பாம்பு பின் வாங்கியது. சிறிது நேரம் நின்றது மெல்ல புற்றுக்குள் நுழைந்தது. நந்தவனத்தின் மூலையி லிருந்த பாதையின் ஓரம் நடந்தாள். கால் நனைத்தாள். குனிந்து நீரினைப் பார்த்தாள். அங்கும் ஓர் உலகம். அதுவும் ஓர் உலகம். அங்கும் ஓர் உலகம் என்று சொல்லி நீரை அள்ளி முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

என்ன நிகழ்ந்தது. உச்சி மண்டையில் ஏதோ காணோமே என்று தலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். திரும்ப

நடந்து நந்தவனத்திற்கு வரும் போது மனம் சுயமாகியிருந்தது. இப்பூமியில் கால் ஊன்றியிருந்தது. எனக்குப் புரிந்து போயிற்று என்பது போல கண்ணில் ஒரு சுடர் அவளுக்குத் தெரிந்தது.

"அம்மா... சக்ரவர்த்தி அழைக்கிறார். அரச சபையில் இருக்கிறார். வணிகர்கள் பார்க்க வந்திருக்கிறார்கள்"

அவள் சட்டென்று பரபரப்பானாள். யோசித்தாள்.

"இல்லை. வருவதற்கில்லை என்று சொல்லிவிடு"

அவள் திரும்பிப் படியேறி தென் திசைப்பக்கம் இருக்கின்ற தன் அறைகளுக்குள் போனாள். சாளரக் கதவுகளைத் திறந்தாள். மஞ்சத்தில் அமர்ந்து கால்களைத் துடைத்துக் கொண்டாள். நீட்டிப் படுத்துக் கொண்டாள். போர்வையால் போர்த்திக் கொண்டாள். படுத்து உறங்கிப் போனாள்.

"என்ன வருவதற்கில்லையா... பஞ்சவன் மாதேவியா அப்படி சொன்னாள். இல்லை நீ சொல்கிறாயா."

சக்ரவர்த்தி வியப்போடு கேட்டார்.

"அப்படித்தான் சொன்னார்கள்."

"சரி. ஏதோ உடல்நிலை வேதனையாக இருக்கும். உலகமா தேவியும் ஏதோ இதுபற்றிச் சொன்னாள். நான் முழுவதும் கேட்டுக் கொள்ளவில்லை வராவிட்டாலும் பரவாயில்லை உடல் நலத்திற்குக் கேடு எனில் வைத்தியருக்குச் சொல்லியனுப்பு. போய் பார்த்துக் கொள்."

வணிகர்கள் வீட்டிலிருந்து பெண்கள் வந்திருக்கிறார்கள். பஞ்சவன் மாதேவி வர முடியவில்லையெனில் வானதியை வரச் சொல். பஞ்சவன் மாதேவி வரவில்லை என்றதும் வணிகர்களிடம் ஒரு மாறுதலும், வணிகர்கள் வீட்டுப் பெண்களிடம் வேகமாக மாறுதல் ஏற்படுவதையும் சக்ரவர்த்தி கவனித்தார்.

"உடல் நலத்திற்கு என்ன. நான் வேண்டுமானால் அரசியைப் போய் பார்த்து விட்டு வரட்டுமா" ஒரு வணிகப் பெண் மெல்ல எழுந்து நின்று மெல்லிய குரலில் பணிவாகக் கேட்டாள்.

"அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அயர்ந்து தூங்குகிறார்கள்."

முத்தான பொன்நகை பதில் சொன்னாள். அந்த வணிகப் பெண் சோர்வோடு உட்கார்ந்தாள்.



அந்தப் பெண்களிடம் தாமே பேச முடிவு செய்தார்.

"ஏன் தொலைவாக நிற்கிறீர்கள். அருகே வாருங்கள். ஐயா. ஆண்கள் இடப்புறமும், பெண்கள் வலப்புறமும் அமர்ந்து கொள்ளுங்களேன்"

மடமடவென்று அந்த வணிகர்கள் கூட்டம் அவ்விதமே தங்களைச் சரி செய்து கொண்டு உட்கார்ந்து கொண்டது.

"யாரங்கே"

சக்ரவர்த்தி நிமிர்ந்தார்.

மெய்க்காவலர்கள் ஓடிவந்தார்கள்.

"வணிகர்களிடம் பேசி முடிக்கும் வரையில் வேறு எந்தத் தொந்தரவும் வேண்டாம். பிரம்மராயரை மட்டும் உள்ளே அனுமதிக்கலாம். மற்றவரை என்னிடம் கேட்டு விட்டு அனுமதி."

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். குறைந்த பட்சம் இன்னும் இரண்டு நாழிகை சக்ரவர்த்தி நம்மோடு சல்லாபிப்பார். அதற்குள் அவரிடம் நிறைய விஷயங்கள் பேசிவிட வேண்டும் என்று ஆர்வம் காட்டினார்கள்.

வணிகர்கள் ஆர்வப்படுவதைச் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் புரிந்து கொண்டார்.

"வந்தவர்கள் அனைவருக்கும் முதலில் நீர் மோர் கொடு. வெறும் நீர் மோர் மட்டும் போதாது. வறுவல்கள் கொடு."

சேடிகளுக்குக் கட்டளையிட்டார். சேடிகள் பறந்தார்கள். ஆட்களை எண்ணிக் கொண்டார்கள் வானவன்மாதேவி உள்ளே நுழைந்தாள்.

சபை எழுந்திருக்க முயற்சிக்க சக்ரவர்த்தி வேண்டாம என்று சொன்னார்.

வணிகப் பெண்மணி வந்து வானவன்மாதேவியின் கழுத்தில் மாலை அணிவித்தாள். கை நிறைய பூக்கள் கொடுத்தாள். முகம் திருத்தி வழித்து நெட்டி முறித்தாள். சற்று இருங்கள் என்று சொல்லி கல்லில் பதித்த ஒரு நெற்றிச் சுட்டியை வானவன்மாதேவிக்கு உச்சியில் வைத்து சந்திரப்பிரபை, சூரியப்பிரபை சொருகி, ஆஹா.. என்ன அழகு என்று வியந்தாள்.

சபை ஆவலாகப் பார்த்தது. வானவன்மாதேவி மரியாதை யாய் எடுத்துக் கொண்டாள். அந்தப் பெண்மணியின் கன்னத் தைத் தடவிக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

“எங்கே வணிகத் தலைவர் பரமநாயகம், வாருங்கள். ஏன் தள்ளி அமர்ந்திருக்கிறீர்கள். அருகே வாருங்கள்”

சக்ரவர்த்தி வணிகத் தலைவரை அருகே வரவழைத்து காலின் கீழ் அமர்த்திக் கொண்டார். இரண்டு ஆசனங்களில் சக்ரவர்த்தியும், வானவன் மாதேவியும் அமர்ந்திருக்க, சுற்றி அந்தச் சபை அமர்ந்திருந்தது.

“என்னை விட வயதில் மூத்தவர். உங்களை நான் தரையில் அமர்த்தி விட்டு நான் ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறேன்.”

சக்ரவர்த்தி குறையாகப் பேசினார்.

“இல்லை இதுதான் மரியாதை. உங்களுக்கு அருகில் உட்கார் என்று சொன்னீர்களே. இதுதான் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய மரியாதை.”

குரல் நடுங்க பரமநாயகம் சொன்னார்.

“எப்படியிருக்கிறது வாழ்க்கை. எப்படியிருக்கிறது வியா பாரம். ஏதேனும் குறைகள் உண்டா? நான் ஏதேனும் உதவி செய்ய வேண்டுமா நமது அரசாங்கத்தில் ஏதேனும் சலுகைகள் வேண்டுமா. எதுவாயிருப்பினும் கேளுங்கள். நாம் சந்தித்து நாள் ஆயிற்று. நீங்கள் சந்திக்க வேண்டும் என்று சொன்ன போது மிகுந்த சந்தோஷம் வந்தது.

உங்களைக் கூப்பிட்டுச் சொல்வதற்கு என்னிடம் ஒரே ஒரு விஷயம் மட்டும் இருக்கிறது. சோழ தேசத்தில் இருந்து எல்லாப் பக்கத்திற்கும் நல்ல உறுதியான சாலைகள் போடுவதற்கு நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். கோயில் கட்டுவதின் பொருட்டு வண்டிகள் முன்னும் பின்னும் நகர இச்சாலைகள் வேண்டும் என்று தீர்மானித்துச் செய்தாலும், உங்களுக்கு இது மிகப்பெரிய உபயோகமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். எந்த பகுதி யில் சாலை சரியில்லை எனினும், அடிக்கடி போய் வருகின்ற அந்த இடத்தைக் குறித்துக் கொண்டு அந்த கிராமத்து அதிகாரி யிடம் சொன்னால் உடனடியாக அந்தச் சாலை செப்பனிடப் படும். நடுநடுவே கருங்கல்லாலான மண்டபங்களும், பெரும் ஓலைக் கொட்டகைகளும் தண்ணீர்த் தொட்டிகளும் நிறுவுவ தற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். சோழ தேசத்தில் கள்வர் பயம்



அறவே இல்லை என்பது என்னுடைய அபிப்ராயம். எங்கேனும் உண்டா.”

சக்ரவர்த்தி கேள்வி கேட்டு விட்டு நிறுத்தினார்.

சபை மௌனமாக அவரைப் பார்த்தது.

“பரமநாயகம் நான் உங்களைத் தான் கேட்கிறேன். எங்கேனும் கள்வர் பயம் உண்டா.”

“சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் ஆட்சியில் ஒரு விதமான குறையும் எங்களுக்கு இல்லை. நாங்கள் குறை சொல்லுவதற்காக இங்கு வரவில்லை. நிறைவோடு இருக்கிறோம் என்று வாய் நிறையச் சொல்ல வேண்டுமென்பதற்காக வந்திருக் கிறோம்.”

“பரமநாயகம் என் கேள்வி எளிமையானது. எங்கேனும் கள்வர் பயம் உண்டா.”

“யார் கள்வர் ஏதோ ஒரு சில குடிகாரர்கள் அல்லது மன நிலை சரியில்லாதவர்கள், வழியில் மடக்கி ஏதேனும் கேட் பார்கள். கொடுத்து விட்டு மேலே நகர்வதுதான் எங்கள் வழக்கமே தவிர, அவர்களையும் நாங்கள் கள்வர் என்று சொல்வதில்லை.”

“எந்த இடத்தில் யார் மடக்கியது. யாரை மடக்கியது. பரமநாயகம், நாம் அடிக்கடி சந்தித்துக் கொண்டிருக்க முடியாது. சந்திக்கும் நேரத்தில் பூசி மெழுகி தயவு செய்து பேசாதீர்கள்.”

சக்ரவர்த்தி குரல் உயர்த்தினார்.

ஒரு வாலிபன் எழுந்திருந்தான்.

“வணிகர் தலைவர் மன்னிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் சக்ரவர்த்தி ஏதேனும் கேள்வி கேட்கும் போது ஒரு குறையும் இல்லை என்று சொல்லி வருவது அழகாக இருந்தாலும் பிரச்சனைகளை அது தீர்ப்பதில்லை.”

“அடேய், உட்காருடா.” பரமநாயகம் கத்தினார்.

“உட்காராதே.” சக்ரவர்த்தி கட்டளையிட்டார்.

“என்ன பிரச்சனைகள், எங்கே பிரச்சனைகள்.”

“ஐயா, திரிபுரம் தாண்டி பாண்டிய தேசம் போகிற வழி ஆபத்தான வழி. ஐம்பது அறுபது மாட்டு வண்டிகள் அல் லாது கூட்டத்தோடு ஒரு நல்ல படை அல்லாது அந்த இடத்தைத் தாண்ட முடியாது. பாண்டிய தேசத்திற்குள் புக முடியாது.

பாண்டிய தேசத்து மறவர்கள் அருகே உள்ள கருவேலங் காடுகளில் மறைந்து கொண்டு இரவு நேரம் திருடுகிறார்கள். எழுந்திருந்து மடக்கினால் கடுமையாகத் தாக்குகிறார்கள். கவண்கல் எறிகிறார்கள் ஒரு சில விநாடிகளுக்குள் ஐம்பது அறுபது கற்கள் வந்து விழுந்து விடுகிறது. அதாவது வெளியே தலையைக் காட்டவே முடியவில்லை. மாடுகள் பலத்த அடிகள் வாங்கு கின்றன. நாங்கள் வண்டிகளுக்குக் கீழே பாதுகாப்பாக இருக் கிறோம். அப்போது கடைசி அல்லது முன்பக்க வண்டிகளின் பாரங்களைப் பிரித்து எடுத்து மூட்டை மூட்டையாக தானியங் களையோ சாமான்களையோ எடுத்துப் போய் விடுகிறார்கள். கால் நாழிகைக்கும் குறைவான நேரத்தில் நல்ல இருட்டில் மறைந்து விடுகிறார்கள். அல்லது எங்கோ குழிகள் வெட்டி பதுங்கிக் கொள்கிறார்கள்."

"அது எப்படித் தெரியும்."

"பகல் பொழுதில் போய்ப் பார்த்தால் பெரிய குழிகளும், உள்ளே மனிதர்கள் அமர்ந்ததற்கான அறிகுறிகளும், குழிகளைச் சுற்றி வெட்டிப் போட்ட கருவேலஞ் செடிகளும் தெரிகின்றன. தானியங்கள் சிதறிக் கிடக்கின்றன. கிழங்குகளும், பழவகைக ளும் இருக்கின்றன. அதாவது ஒரு இரவு முழுவதும் அல்லது ஒரு நாள் முழுவதும் அங்கே தங்கி விடுகிறார்கள் என்பதாக நான் யூகிக்கிறேன்."

"இது யாரிடம் சொல்லப்பட்டது."

"திரிசிரபுரம் தலைமை அதிகாரியிடம் பேசப்பட்டது. அவர் விமலாதித்தரிடம் சொன்னார். விமலாதித்தர் ஒரு படை அனுப்பி வைத்தார். மதுரை வரையிலும் அந்தப் படை துணைக்கு வந்தது. அந்தப் படை துணைக்கு வரும் போது எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. ஆனாலும் புதர்களுக்கு நடுவே நடமாட்டங்கள் தெரிந்தன. பெண்கள் குரல் கேட்டன. கவண்கல் அடிக்கப் பெண்களையும் பயிற்றுவித்திருந்தார்கள்."

"இதை எப்படி சொல்கிறாய்."

"காலையில் வண்டிகள் போனதும் பின்னாலேயே ஆட்கள் வருவது தெரிந்தது. நாங்கள் ஒரு பத்துப் பேர் சட்டென்று புதர் மறைவில் அமர்ந்து கொண்டு காத்திருந்தோம் ஒரு பெண்கள் கூட்டம் தாண்டிப் போயிற்று. எல்லோரிடமும் கவண் கல்லும், மடியில் கருங்கல்லும் இருந்தது."

"என்ன செய்தீர்கள்."



"மூவரைக் கைது செய்து பாண்டிய தேசத்திற்கு அழைத்துப் போனோம்."

"பிறகு."

"அங்கு நமது சோழ அதிகாரி அடித்து விசாரித்தார்."

"யார் அவர்கள்"

"ராமநாதபுரத்து மறவர்கள். பாண்டிய மன்னர்களால் புறக் கணிக்கப்பட்டவர்கள். பாண்டிய தேசத்து வெறும் கை வீரர்கள். மதுரைக்குள் அவர்களை நுழையக் கூடாது என்று அரசாங்கம் சொல்லி இருக்கிறது. ஆனாலும் திருட்டுத் தனமாக மதுரை எல்லையில் பாத்திரங்களையும் நகைகளையும் விற்று தானியங் களை வாங்கிக் கொள்கிறார்கள். அனேகமாக தானியங்கள் போகும் வண்டிகளைத்தான் மடக்கிக் கொள்ளையடிக்கிறார்கள். அந்தப் பெண்களை அடித்த போது பசி, வேறு என்ன செய்ய குழந்தைகள் அலறுகின்றன. வேறு என்ன செய்ய என்று சொன்னார்கள். பலமுறை அறைந்தும் அழவேயில்லை."

சக்ரவர்த்தி மௌனமாக அந்த வாலிபனையே உற்றுப் பார்த்தார்.

"நல்லது. இந்த விஷயத்தை மிக முக்கியமானதாக நான் எடுத்துக் கொள்கிறேன்."

"சக்ரவர்த்தி இந்த விஷயம் சரி செய்யப் பட்டு விட்டது. விமலாதித்தரே இரண்டு முறை எங்களோடு குதிரையில் பயணப்பட்டார்."

"ஆனால், எனக்குச் சொல்லப் படவில்லையே. ஏன்."

"தீர்க்கப்பட்ட பிரச்சனை என்பதால் சொல்லப்படாதிருக் கும்."

"யாரங்கே. அருகே வா."

மெய்க்காவல் படையைக் கூப்பிட்டு, "விமலாதித்தரை உடனே வரச்சொல்."

"சரி ஐயா."

"சக்ரவர்த்தியாரே விமலாதித்தர் மிகச்சரியாக நடவடிக் கைகள் எடுத்தார். அவர் மீதும் எந்தக் குறையும் இல்லை."

"அவரைக் குறை சொல்லவா இங்கு அழைத்தேன். எனக்கு ஏன் செய்தி தெரிவிக்கப்படவில்லை என்பதுதான் என் ஒரே கேள்வி. அடுத்தது வேறு எந்த இடம்."

"நாகைப்பட்டினம்."

"என்ன அங்கே."

"அவ்வப்போது படகில் சிங்களர் வந்து தாக்குகின்ற இடமாக அது இருக்கின்றது."

"ஆமாம். தெரியும். ஆனால், பல வருடங்களாக அங்கு பெரியபாடி இறங்கியிருக்கிறோமே, அங்கு தண்டு இறங்கி கடற்கரையைக் கவனித்துக் கொண்டிருக்கிறோமே."

"போதவில்லை. பெரிய நாவாய்களில் வந்து இறங்கி எந்த இடத்தில் ஆள் நடமாட்டம் இல்லையோ அந்த இடத்தில் படைகள் இறக்கி உள்ளே புகுந்து கொள்ளை அடித்து விட்டு மறுபடியும் போய் விடுகிறார்கள்."

"இரண்டு முறை நடந்ததல்லவா. நீங்கள் சொல்லும் கிராமம். எனக்குத் தெரியும் நான் அங்கு இராஜேந்திரனை அனுப்பி வைக்கிறேன். கடல் பக்கம் காவல் காக்க இராஜேந்திரனுக்கு மிக நன்றாகத் தெரியும். வடக்கே எப்படி இருக்கிறது."

"எந்தப் பிரச்சினையும் இல்லை. திருமுனைப்பாடி, தொண்டை நாட்டிற்கு போகும் வழி மிக அற்புதமாக இருக்கிறது. ஆனாலும் வழியில் சில இடங்களில் ஓலைக் கொட்டகைகளும் நீர்த்தொட்டிகளும் தேவைப்படுகின்றன."

"எந்த இடத்தில் தேவையோ அந்த இடத்தில் அரசு செலவில் நீங்கள் இதை அமைத்துக் கொள்ளலாம்."

"வேறு என்ன பிரச்சினை."

"வண்டிகள் போதா."

"என்ன சொல்கிறீர்கள்."

"மரத்தச்சர்கள் கிராமங்களில் இல்லை. எல்லோரும் தஞ்சைக்கு வந்து விட்டார்கள். வழியில் வண்டிகள் பழுது பட்டால் அதைச் சரி செய்ய எந்தக் கிராமத்திலும் தச்சர் இல்லை."

"இதற்கு என்ன தீர்வு."

"திருமுனைப்பாடி. தொண்டை நாட்டுத் தச்சர்கள் தஞ்சை வந்துவிட்டபடியால் கீழைச் சாளுக்கியத்திலிருந்தோ. நுளம்ப



பாடியிலிருந்தோ, கங்கபாடியிலிருந்தோ தச்சர்களும் மற்ற தொழிற்கலைஞர்களும் திருமுனைப்பாடி, நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும், வந்து விடுவது நல்லது. அதற்கு ஏற்பாடு செய்ய முடியுமானால், இந்தக் குடிபெயர்ப்பு நடக்குமானால் எங்களுக்கு மிக உதவியாக இருக்கும். நாற்பது ஐம்பது வண்டிகள் போகும்போது நாங்கள் சில வண்டித் தச்சர்களைக் கூடவே அழைத்துக் கொண்டும் போய்விடலாம்."

திருமந்திர ஓலை நாயகத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். அவர் ஓலையில் அரசர் சொல்லச் சொல்ல எழுதுபவர். தமிழ் மொழியிலும், வட மொழியிலும் வல்லுநர். மூன்று நான்கு திருமந்திர ஓலை நாயகம் இருந்தார்கள். அதில் வயதானவர் அரசர் சொல்ல, வேகமாக வந்தார். அரசருக்கருகே அமர்ந்து கொண்டார். அரசர் சொன்னதைச் செவிமடுத்துக் கேட்டார். தனியே போய் அமர்ந்து கொண்டார்.

அரசர் சிலரைக் குசலம் விசாரித்து முடித்த போது ஓலையோடு வந்தார்.

கங்கதேசத்தை, ஆளுகின்ற சோழதேச அதிகாரிக்கு. உடனடியாய் தச்சர்களையும், கருமார்களையும் குடும்பத்தோடோ, தனியாகவோ அனுப்பலாம் என்றும், மேலக்கடம்பூர்க் கோட்டைக்கு அவர்கள் வந்து சேர வேண்டும் என்றும், அங்கிருந்து பிரித்து அனுப்புவார்கள் என்றும் அந்த ஓலையில் சொல்லப்பட்டிருந்தது.

மேலக்கடம்பூருக்கு இன்னொரு ஓலை எழுதப்பட்டிருந்தது. அங்குள்ள அதிகாரிக்கு அப்படி வந்த கருமார்களையும், தச்சர்களையும், வியாபாரிகளின் தலைவனான பரமநாயகத்திடம் கலந்து பேசி எந்தெந்த ஊருக்கு அனுப்ப வேண்டும் என்பன செய்ய வேண்டும் என்று எழுதியிருந்தது. தனியாக ஒரு ஓலையில் நல்ல நெசவாளர்களைத் தஞ்சைப் புறம்பாடிக்கு விரைவில் அனுப்புமாறும், தஞ்சையிலுள்ள புறம்பாடியில் எங்கேனும் நல்ல விதமாய் குடில்கள் போட்டு வேலை செய்ய ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. ஓலைகளில் அரசர் தன்னுடைய முத்திரை மோதிரத்தைப் பதித்தார்.

எண்ணெய் தடவிய பனை ஓலையில் கூர்மையான வரிவடிவங்களைக் கொண்ட அந்த மோதிரம் அழுந்தப் பதிக்கப்பட்டது. புள்ளி புள்ளியாக புலியின் தலை அதில் தெளிவாய் விழுந்தது. பிறகு அரசர் இவை என் எழுத்து என்று எழுதிக் கையொப்பமும் இட்டார். அந்த ஓலையில் தீபத்திலிருந்து

கிளம்பிய புகையை மையாகக் குழைத்து எடுத்து மெல்லத் தடவியபோது எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. படிக்கத் தெரிந்த இரண்டு வணிகர்கள் அதைப் படித்துவிட்டு அரசரை நோக்கி நீண்ட நெடுஞ்சாண் கிடையாய் வணங்கினார்கள்.

அரசர் மெல்ல கை உயர்த்தி ஆசீர்வதித்தார். திரும்ப பரம நாயகத்தைப் பார்த்தார்.

"இன்றைக்கு நெல் ஒரு கூடை என்ன விலை."

பரமநாயகம் பதில் சொன்னார்.

"சற்று அதிகமல்லவா. விளைச்சல் குறைவாக இருக்கிறதா."

"இல்லை ஐயா. நல்ல விளைச்சல்தான்."

"நல்ல விளைச்சல் விளைந்தும் அரிசி விலையை அதிகமாகச் சொல்கிறீர்களே ஏன்."

வணிகர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"திருமுனைப்பாடியிலிருந்து நெல் வரவேண்டியிருக்கிறது. வண்டி சத்தம். ஆள் கூலி, படைக்கூலி, சேதாரம் என்று பலதும் பார்க்க விலை சரிதான் ஐயா"

ஒரு முதியவர் பேசினார்.

"ஆனால், தஞ்சையில் அறுவடை செய்கின்ற நெல்லுக்கும் இதே விலையாக விற்கிறீர்கள் போலிருக்கிறதே."

"நெல் வாங்கிவிட்டால் தஞ்சை நெல், திருமுனைப்பாடி நெல் என்று எப்படிப் பிரிப்பது. எல்லாம் கலந்து விடுகிறோம்."

"அப்படியானால் ஒன்று செய்யலாம். தஞ்சையில் விளையும் நெல் அறுவடையாகும் போது விலை நிர்ணயம் செய்து விடுங்கள். ஆனால், புடைவை விலையும் தாறுமாறாக இருக்கிறதே."

"துணிகள் ஆறு முழம், ஒன்பது முழம், பன்னிரெண்டு முழம் என்று மூன்று வகையாக வருகிறது."

"நீ சொல்வது புடைவையா, வேட்டியா"

"எல்லாம் ஒன்றுதானய்யா. வெள்ளையாக இருந்தால் வேட்டி. சாயம் தோய்த்தால் புடைவை வேட்டியை ஆண்கள், மட்டுமே உடுத்துகிறார்கள். வெள்ளை வேட்டி,



சாயவேட்டி இரண்டையுமே ஆண்கள் உடுத்துவதால் சாய வேட்டிக்கு நல்ல விலை இருக்கிறது."

"நல்ல விலை என்றால்."

"வாங்கின விலைக்கும் கால் பங்கு அதிகமாக விற்கிறோம்."

"கால் பங்குதான் லாபமா."

"லாபம் எங்கே கால் பங்கு வந்துவிடும். அரைக்கால் பங்குதான் இருக்கும். கால்பங்கு அதிகம் வைத்தால் தான் அரைக்கால் பங்கு நிகரலாபம் கிடைக்கும்."

"இல்லை என்று நமது அதிகாரிகள் சொல்கிறார்கள். நீங்கள் ஒரு பங்கு அதிகமாக விலை வைத்து விற்கிறீர்கள்."

வணிகர்கள் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

"சக்ரவர்த்தி அவர்களுக்கொரு விண்ணப்பம்."

சட்டென்று சக்ரவர்த்தி அவர் பக்கம் திரும்பி முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, "நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். வணிகர்களுக்கு வேண்டாதவர்கள் அதிகம் உண்டு. யாரோ வேண்டுமென்றே உங்களைப்பற்றி தவறாகச் செய்திகள் பரப்புகிறார்கள் என்று என்னிடம் சொல்லப் போகிறீர்கள் இல்லையா."

"ஓரளவு அது உண்மைதான் சக்ரவர்த்தி அவர்களே."

"நானே நேரில் விசாரித்தேன். உள்ளாலையில் மூன்றாவது கடை இவருடையதுதானே. துணியும் பாத்திரமும் தானே இவருடைய வியாபாரம். பெண்களுக்குப் புடைவையைப் பிரித்துக் காட்டமாட்டேன் என்று உரத்த குரலில் பேசுகிறீர்களே. எங்கே துணியை அறுத்தீர்கள். யாரிடம் வாங்கினீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களிடம் நமது ஒற்றர் வாங்கிய புடைவை இதோ இருக்கிறது. இதன் விலை இதோ எழுதப் பட்டிருக்கிறது. இதில் லாபமென்ன பரமநாயகம்?"

தான் பின் பக்கம் வைத்திருந்த புடைவையை எடுத்து பரமநாயகத்தின் மீது சக்ரவர்த்தி தூக்கிப் போட்டார்.

"அடுத்தது பித்தளைப் பாத்திரங்கள் பற்றிப் பேசுவோமா. ஒரு காசுக்கு வாங்கிய பித்தளைப் பாத்திரத்தை ஆறு காசுக்கு விற்கிறீர்கள். இந்தக் கொள்ளை தஞ்சாவூரில் மட்டுமல்ல. குடந்தையில் திருவாரூரில், நாகப்பட்டினத்திலும் நடக்கிறது. திருவொற்றியூரிலும், திருமயிலையிலும், மேல்பாடியிலும் மட்டுமல்லாது

வேறு எங்கும் பித்தளைப் பாத்திரங்கள் செய்வதில்லையா. இல்லை எனில் ஏன் திருமுனைப்பாடியிலிருந்து வரும் ஏற்றச் சால்களுக்கு அதிக விலை வைத்திருக்கிறீர்கள். நீங்கள் வந்து பார்க்க வேண்டும் என்றதும். நான் சரி என்று ஒப்புக் கொண்டதற்குக் காரணம் இதுவே.

வியாபாரத்திற்காக சேரதேசம் போகின்ற திரிசிரபுரத்து வணிகர்கள் யார் யார். திரிசிரபுரத்திலிருந்து மதுரை. மதுரையிலிருந்து மலை ஏறி சேரதேசம். வழிநெடுக ஏலமும், லவங்கமும், மிளகும் மூலிகைச் செடிகளும் கிடைக்கின்றன. சந்தன மரங்களை வெட்டிக் கொண்டு வருகிறீர்கள். இவைகளெல்லாம் அரிதான பொருட்கள். ஆனாலும் வகை தொகையில்லாத வகையில் இவைகள் விற்கப்படுகின்றன. ஆதுரச் சாலைகளுக்கு விற்கப்படும் தேனும், அற்புதமாக இருக்கின்றது. அகில் கட்டைகள், யானைத் தந்தங்கள் போன்றவற்றை நீங்கள் அதிக விலை விற்பது சரி. ஆனால் அரிசி என்பது எல்லா மக்களும் உபயோகப்படுத்துகின்ற பொருள். தேன் என்பது எல்லோரும் உபயோகப்படுத்துகின்ற பொருள் அதன் விலையும் அதிகம் விற்றால் எப்படி?

நல்ல பணப்புழக்கம் இருக்கிறது. எல்லோரிடமும் காசு இருக்கிறது. என்று நினைக்கிறீர்கள். மறவருக்கு ஒரு விலை மற்றவருக்கு ஒரு விலை என்று விற்கிறீர்கள். ஆள் பார்த்து விலை சொல்கிறீர்கள். எந்த நியாய தர்மத்திற்கும் நீங்கள் கட்டுப்படவில்லை. என்பது என் வருத்தம். உப்பு வணிகர்களும் அவ்விதமே செய்கிறீர்கள். ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு விலை. கேட்டால் வழியில் மழை பெய்தது என்கிறீர்கள். எண்ணெய் வணிகர்கள் கீழைச்சாளுக்கியத்திலிருந்து எள் வாங்கி வருகிறீர்கள் என்றும், திருமுனைப்பாடியிலிருந்து கடலைப்பயிர் கொண்டு வருகிறீர்கள் என்றும் சொல்கிறார்கள். இதற்கெல்லாம் நீங்களாகத் தீர்வு செய்து கொண்டால் நல்லது. இல்லையெனில் நான் நல்ல அதிகாரிகளை வைத்து உங்களுக்கும் பாதிப்பு ஏற்படாவண்ணம் சோழ தேசத்து மக்களுக்கும் கெடுதல் ஏற்படா வண்ணம் ஒரு தீர்ப்பு சொல்வேன். ஒரு வேளை அந்தத் தீர்ப்பு உங்களுக்குப் பிடிக்காமலும் இருக்கலாம். ஆனால், நீங்கள் ஏற்றுக் கொள்ள நிர்பந்திக்கப்படுவீர்கள். இதை மிருதுவாகவே சொல்கிறேன்.

உங்களுடைய சோழதேச விசுவாசமும், அரச விசுவாசமும் எனக்குத் தெரியும். பல்வேறு போர்களில் நீங்கள் எனக்குத் துணை செய்திருக்கிறீர்கள். அதை நான் மறக்கவே மாட்டேன். இந்த அரசும் உங்களுக்கு உண்டான உதவியைத் தேடித் தேடிச்



செய்திருக்கிறது. தானாக முன் வந்து நடந்திருக்கிறது. வணிகர்கள் இல்லையெனில் ஒரு தேசத்தின் வளம் பாழ்படும் என்று எங்களுக்குத் தெரியும். உழவரால் விற்கவும் வாங்கவும் முடியாது.

உற்பத்தி செய்பவருக்கும், மக்களுக்குமிடையே பாலமாக இருப்பவர்கள் வணிகர்கள், இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்லும் பரிசலாய், படகாய் இருப்பவர்கள் வணிகர்கள். எனக்கு உண்டான வரியை நீங்கள் செலுத்தி விடுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். அதற்காக உங்கள் இஷ்டம் போல் விலை நிர்ணயம் செய்வதை நான் விரும்பவில்லை. சோழ ராஜாங்கம் என்பது இராஜராஜன் மட்டுமல்ல அவனுக்குக்கீழ் பல நூற்றுக் கணக்கான அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஒற்றர்கள் இருக்கிறார்கள். எதிரிகளை நோட்டமிடுவது மட்டுமே இந்த ஒற்றருடைய வேலை அல்ல. நமது தேசத்தின் பிரச்சனைகளையும் நமது ஒற்றர்கள் என்னிடம் சொல்வது வழக்கம்.

சோழ அரசாங்கம் அதிகாரிகளின் மூலம் மக்களின் எல்லாப் பிரச்சினைகளையும் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் மக்களோடு மக்களாகக் கலந்து அதிகாரிகள் வருவார்கள். அப்பாவிகளாய் நிற்பார்கள். உங்கள் சுக சௌகரியங்களை அதிகப்படுத்திக் கொள்ள மக்களை ஒறுத்தெடுக்க வேண்டாம்."

"ஐயா, அப்படி எதும் செய்துவிட வில்லையே."

பரமநாயகம் பரிதவிப்போடு சொன்னார்.

"உங்களைச் சொல்லவில்லை. உங்களைச் சார்ந்தோரைச் சொல்கிறேன். உங்களுக்குள்ளேயே நல்ல கட்டுமானம் இல்லை. என்னைப் பார்ப்பதற்குத்தான் ஒன்றாகத் திரண்டிருக்கிறீர்களே தவிர, உங்கள் பிரச்சனையைத் தீர்க்க நீங்கள் திரளவேயில்லை. மூன்று மாதத்திற்கொருமுறை நீங்கள் ஒன்றுகூடி உங்கள் பிரச்சனைகளை விவாதிக்க வேண்டுமென்பது என் விருப்பம். அது தேசத்திற்கு நல்லது பயக்கும். மற்றபடி உங்கள் அன்பும், ஆதரவும் கண்டு நான் மகிழ்கிறேன். எந்தக் குறையாக இருந்தாலும் என்னை நள்ளிரவிலும் கூட எழுப்பிச் சொல்லாம். நீங்கள் இல்லையெனில் சோழதேசம் இல்லை. நீங்கள் சோழதேசத்தின் முதுகெலும்பு. உங்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் உண்டு. அக்கினியாலோ, அட்டகாசங்கள் மிகுந்தாலோ, இயற்கை சீற்றத்தினால் பொருட்சேதமானாலோ அதைத் தடுத்து ஈடு செய்ய என்னால் ஆனதைச் செய்வேன். ஏதேனும் கேள்விகள் உண்டா."

அந்தச் சபை மௌனமாக இருந்தது. பயந்து போயிருந்தது. மிருதுவாக. ஆனால் மிகத் தீர்க்கமாகச் சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் பேசியதும், தங்கள் குறைகளைப் பிட்டு வைத்ததும் அவர்களை அதிரடித்தது. விட்டால் போதும் ஓடிப் போய் விடுவோம் என்ற நிலையில்தான் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் நெளியல்கள் இதைத்தான் காட்டின.

சக்ரவர்த்தி அமைதியாக அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"வேறு எதுவுமில்லையா." என்று விடைபெறுபவர் போல முதுகு நிமிர்த்தி புன்னகை செய்து கேட்டார். கைகளும் கூப்பினார், ஒரு இளைஞன் எழுந்து நின்றான். சபை திரும்பி அவனைப் பார்த்தது, சக்ரவர்த்தியும் அவனைப் பார்த்தார்.

"ஏதேனும் பேச வேண்டுமா."

"ஆமாம். சக்ரவர்த்தி அவர்களே."

"என்ன."

"நான் நான்கு மாதங்கள் முன்பு வண்டி கட்டிக் கொண்டு கீழைச்சாளுக்கியம் போய்விட்டு வந்தேன். கீழைச்சாளுக்கியத்தின் மத்தியப் பகுதிக்கும் பல கானகங்கள் தாண்டி என்னை அழைத்துப் போனார்கள். துந்துப்பி நாடு தாண்டி கோதாவரி நதிக்கரையில் மிகப் பெரும் வயல் வெளிகளூடே நான் குதிரையில் பயணித்தேன். உழவுக்கும், மற்ற தொழில்களுக்கும் விதவிதமான கருவிகள் அங்கு வைத்திருக்கிறார்கள். மிகப்பெரிய பித்தளைப் பாத்திரங்களும் அங்கு இருந்தன. அவை அனைத்தும் வங்க தேசத்திலிருந்து வந்திருக்கின்றன. வங்க தேசத்திற்கும், கீழைச் சாளுக்கியத்திற்குமிடையே நாவாய்கள் போகின்றன. பரதவர்கள் உதவியோடு கடற்கரை ஓரமாகவே பயணப்பட்டு கங்கையின் முகத்துவாரம் போய், அங்கிருந்து உள்ளே திரும்பி வங்க தேசத்தின் பல நகரங்களுக்குப் போய் அங்கே பொருள்கள் வாங்கி, பொருள்கள் கொடுத்து, பெருத்த வியாபாரம் செய்து வருகிறார்கள். மூன்று நாள் பயணத்தில் கீழைச் சாளுக்கியம் போய் விட முடியும். அங்கிருந்து அந்த தேசத்துப் பரதவர்கள் துணையோடு நாமும் வங்க தேசத்திற்குப் போய் வியாபாரம் செய்யலாம். எங்களின் எல்லாக் குற்றங்களையும் மன்னித்து வங்க தேசத்திற்குப் போவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தித் தருமாறு தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்."

சட்டென்று அங்கே அமைதி படர்ந்தது.



"இது குறித்து இளவரசர் இராஜேந்திரனிடம் பேசினீர்களா."

சக்ரவர்த்தி பரமநாயகம் நோக்கிக் கேட்டார்.

"இதை நான் பேசவில்லை. ஒரு வேளை தொண்டை மண்டல வியாபாரிகள் பேசியிருப்பார்களோ என்னவோ. அந்தப் பிள்ளை திருவான்மியூர் இளைஞனுக்குத் திருக்கடல் மல்லையில் படகுகள் இருக்கின்றன. திருக்கடல்மல்லை நாவாய்களுக்கு இவன் படகுகள் அனுப்பி அதில் சாமான்கள் இறக்கி, ஆட்கள் இறக்கி வாடகை வசூலிக்கிறான்."

"படகுகளும், நாவாய்களும் நாம் அதிகப்படுத்தினால் என்ன ?"

"எனக்கு அப்படியொரு எண்ணம் இருந்தது."

சக்ரவர்த்தி தன் பார்வையைத் தொலைதூரம் செலுத்திக் கொண்டு பேசத் துவங்கினார். மெல்ல சலசலத்துக் கொண்டிருந்த கூட்டம் அமைதியாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தது.

"மேலைச்சாளுக்கியத்தை ஒடுக்கிய உடனே வங்க தேசத்தையோ அல்லது கடாரத்தையோ நோக்கிப் போக வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தேன். எனக்குக் கொஞ்சம் வயதாகிவிட்டது."

சக்ரவர்த்தி சொல்லிவிட்டு நிறுத்தினார்.

சபையைப் பார்த்தார். சபை அதெல்லாம் இல்லை என்று மிகப் பணிவாகத் தலை அசைத்தது.

"அது மட்டுமல்ல. நான் கொஞ்சம் இறை பணி பக்கம் மனதைத் திருப்பி விட்டேன்."

ஆமாம் என்று அப்போது சபை தலையசைத்தது.

"அது மட்டுமல்ல. என்னைச் சுற்றியுள்ள என் நண்பர்கள் பல பேருக்கு வயதாகிவிட்டது. பழுவேட்டரையரும், மூவேந்த வேளாரும், சாமிரம் பல்லவனும், கிருஷ்ணன்ராமனான பிரம்மராயரும், என் வில்லவாதித்தனுக்கும்கூட வயதாகிவிட்டது. எங்கள் வீட்டுப் பெண்ணைக் கொண்ட வந்தியத்தேவர் பார்ப்பதற்கு இளமையாக இருந்தாலும் அவரும் முன்போல மிடுக்காக இல்லை. எனவே, கடல்பயணம் என்பதை அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துவிடலாம் என்று நினைத்தேன். அதனால் ஒத்திப் போட்டேன். ஆனால் வணிக நண்பர் இப்போது சொல்லுகிற

போது கடற்பயணத்தை மேற்கொண்டிருக்கலாமோ என்று தோன்றுகிறது.

அந்த வணிக நண்பர் பேசியது மிகத் தெளிவான சூட்சும மான விஷயம். வங்கம் நோக்கி, சரியான நேரத்தில் கிளம்பி, அங்கிருந்து இமயமலைச் சாரலுக்கும் போகலாம் என்று நினைத் திருந்தேன். கோயில் பணியைத் துவக்கியதால் அது செய்ய முடியாது. கோயில் பணியை முடித்து அங்கே போக வேண்டி யிருக்கும். இது குறித்து நான் பேசுவதைவிட இராஜேந்திரன் பேசுவது உபயோகமாக இருக்கும். தஞ்சையிலுள்ள புறம்படி அங்காடித் தெருவில் உங்களுடைய இனத்தாரோடு தங்கி யிருங்கள். இளவரசர் இராஜேந்திரர் நீங்கள் இருக்கும் இடம் வந்து உங்களைச் சந்திப்பார்."

"என்ன அநியாயம். நாங்களல்லவோ இளவரசரைப் பார்க்க வரவேண்டும்."

"இல்லை. அரண்மனையில் நீங்கள் பேசப் பயப்படுவீர்கள் அல்லது தயங்குவீர்கள் உங்கள் இடத்தில் உங்களுடைய குரல் இன்னும் பலமாக ஒலிக்கும். உங்கள் குறைகள் அனைத்தும் வெளிவரும்.

நன்கு யோசித்துப் பார்க்க சோழ தேசத்தின் எதிர் காலம் விவசாயிகள் கையில் மட்டும் இல்லை. உங்கள் கைகளிலும் இருக்கும் என்பது எனக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. நாலா தேசத்திலிருந்தும் பொருள்கள் கொண்டு வந்து கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். எனவே உங்க ளுடைய குறைகளும், நிறைகளும் நன்கு பேசப்பட வேண்டும். ஆராயப்பட வேண்டும். உங்கள் உழைப்பை, அன்பை, விசுவா சத்தை மதிக்கும் வண்ணம் இளவரசர் இராஜேந்திரர் உங்களிடம் பேச வருவார்."

"அப்படியானால் அங்கு விருந்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறோம்."

"அது உங்களுடைய விருப்பம்."

"இப்பொழுது உங்களுக்காக நாங்கள் கொண்டு வந்த பொருட்களை சமர்பிக்க விரும்புகின்றோம்."

"பஞ்சவன்மாதேவியிடம் கொடுத்து விடுங்கள்."

"உங்களுக்கென்று சிலது கொண்டு வந்திருக்கிறோமே அதைப் பார்வையிட மாட்டீர்களா."



பரமநாயகம் மிருதுவாகக் கேட்டார்.

"என்ன."

மரப்பேழையிலிருந்து நீண்ட வெண்பட்டு ஒன்றை எடுத்து அதை அரசர் மீது போர்த்தினார்.

"என்ன இது. இவ்வளவு மெல்லியதாய் துணியா. யார் நெய்தது."

"இது சீனத்துப்பட்டு."

"சீனம் வரை போய் வாங்கி வந்ததா அல்லது சீனர்கள் கொண்டு வந்ததா."

"சீனர்கள் கொண்டு 'வந்தது."

"எங்கே."

"கீழைச்சாளுக்கியத்தில். அங்கே பல துறைமுகங்களில் சீனர்கள் வந்து இறங்குகிறார்கள். ஈழத்திற்கும் வருகிறார்கள்."

"ஏன் நம் பக்கம் வருவதில்லை."

வணிகர் சபை மௌனமாக இருந்தது.

"உங்களைத்தான் கேட்கிறேன். ஏன் நம் பக்கம் வருவதில்லை" சக்ரவர்த்தி அதட்டலாகக் கேட்டார்.

"நமது கடற்கரையோரம் அவ்வளவு பாதுகாப்பாக இல்லை. இலங்கைத்தீவின் தென்பகுதிக்குப் போய் விடுகிறார்கள். சில சமயம் திரிகோணமலைக்கும் போய்த் தங்குகிறார்கள். வியா பாரம் செய்கிறார்கள். வடக்குப் பக்கமோ, கிழக்குப் பக்கமோ வருவதில்லை."

"என்ன காரணம்"

"ஈழத்தின் வடக்குப் பகுதியில் நம்மிடம் தோற்ற பாண்டி யர்கள் பல்வேறு தீவுகளில் சிதறி சிதறி வசிக்கிறார்கள். படகு களில் ஏறி, பாய்மரம் விரித்து இரவோடு இரவாக நாவாய்களைச் சுற்றி கொள்ளையடிக்கிறார்கள். பாய்மரங்களை நோக்கி நெருப்புக் கங்குகளை எறிந்து, பதட்டத்தை ஏற்படுத்தி பிறகு நாவாய்களுக்குள்ளே கும்பலாகப் புகுந்து மாலுமிகளை வெட்டி வீழ்த்தி, அப்படியே நாவாய்களை எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அந்த நாவாய்களைச் செப்பனிட்டு கிட்டத்தட்ட கடற்படை போலும் ஒரு கொள்ளைக் கூட்டத்தை உருவாக்கி விட்டார்கள். நாமும் கன்னியாகுமரி வரை தரை மார்க்கமாகப்

போவதால் கடல்பக்கம் அதிகம் வேலையில்லை. ஆனாலும், கடல் பக்கமுள்ள கிராமங்களுக்குப் போய் இவர்கள் கொள்ளை யடிப்பதும், பெண்களைக் கவருவதும் அங்கொன்றும், இங்கொன்றுமாய் நடந்து கொண்டுதான் இருக்கிறது."

"சோழ தேசத்தில் அவர்கள் கால் வைக்கிறார்களா."

"இல்லை."

"என்ன காரணம்."

"சோழதேசத்து பரதவர்கள் காரணம். அவர்கள் மீன் பிடிக்க நூற்றுக்கணக்கான படகுகளுடன் கடலுக்குள் போகிறார்கள். அப்படிப் போன படகுகளில் நாலைந்து காவலுக்காகவே போகிறது. அந்த கடற்கொள்ளைக் காரர்களிடம் மிகப்பெரிய நாவாய் இருக்கிறது. அது காம்போஜ தேசத்தைச் சேர்ந்தது. மேல் தளத்தில் நாற்பது துடுப்புகள் போடுகின்ற வசதிகள் இருக்கின்றன. நீண்ட துடுப்புகளை இரண்டு இண்டு பேராகப் போடுகிறார்கள். பதினாறு பாய்மரங்கள் இருக்கின்றன. கப்பல் மிக விரைவாக எந்த ஆட்டமுமின்றிப் போகிறது பயணத்தில் பாதுகாப்பு நிச்சயமானதாக இருக்கிறது. அந்த நாவாயை நான் தொலைவிலிருந்து பார்த்தேன். சோழதேசத்துப் பரதவர்கள் சிலர். அதை மிக அருகே போய் பார்த்து இருக்கிறார்கள்.

எங்களுக்கு ஆசை, தேர்கள் செய்வது போல, நல்ல உறுதி யான கட்டிடங்கள் செய்வது போல விதம்விதமான ஓடுகளும், சுவர் ஓட்டும் சாந்து செய்வதுபோல, விதவிதமான ராட்டி னங்கள் செய்வது போல நாம் ஏன் நல்ல நாவாய்கள் செய்யக் கூடாது. காம்போஜம் போவதற்கோ, சீனம் போவதற்கோ கூட நான் சொல்ல வில்லை. கீழைச்சாளுக்கியத்திற்கும் நமக்கும் உள்ள வியாபார பந்தம் மிக நெருங்கியதாகப் பந்தப்படும். கீழைச் சாளுக்கியத்திலிருந்து வங்கத்திற்குப் போய் வருகின்ற நாவாய் களிலிருந்து நாம் வியாபாரம் செய்யலாம். இன்னும் தாண்டி காமரூபம் (அசாம்) என்ற ஒரு ஊர் இருக்கிறது. சிறிய கண்களை யுடைய மனிதர்கள் அங்கு வாழ்கிறார்கள். காமாக்யா என்ற காளிதேவியின் கோவிலும் இருக்கிறது.

தட்ச யக்ஞத்தில் பங்கு கொள்ள பார்வதி போன தாகவும், அங்கு அவமானப்பட்டுத் திரும்பியதாகவும், சிவன் அதனால் கோபமடைந்ததாகவும், "உன்னை இழிவுபடுத்தினால் அது என்னை இழிவு படுத்தியது போல... அதனால்தான் உன்னை அங்கு போக வேண்டாம் என்று சொன்னேன்'' என்று



சினந்ததாகவும், அன்னை மனம் நொந்து போய்த் தன் உடம்பிலே தீ வளர்த்து, தீயில் குதிக்க முற்பட்டதாகவும், பெரிய விஸ்வரூபம் எடுத்ததாகவும், அப்படி பார்வதி விஸ்வரூபம் எடுக்கச் சிவன் அவளைப் பல துண்டங்களாக வெட்டி வீழ்த்தியதாகவும், அந்தத் துண்டங்கள் பரத கண்டத்தின் பல பகுதிகளில் விழுந்ததாகவும், நாபி விழுந்த இடம் காஞ்சிபுரம் எனவும், யோனி விழுந்த இடம் காம ரூபத்திலுள்ள காமாக்யா என்றும் சொல் கிறார்கள்.

காமரூபம் மலைகள் நிறைந்த தேசம். மிக உறுதியான மூங்கில்கள் அங்கு விளைகின்றன. காமரூபம் போவது ஒரு வேளை நமக்கு உதவியாக இருக்கும். கற்றளிகள் கட்ட மூங்கில் களுக்குக் காமரூபம் போகலாம். அதற்கு அந்த நாவாய் மிகவும் பயன்படும். அந்த நாவாயை நீங்களோ, இளவரசரோ இராஜேந்திரரோ ஒரு முறை பார்த்தால் அதன்மீது மிகுந்த ஆசை கொண்டு விடுவீர்கள்."

சக்ரவர்த்தி அசையாது பேசியவரை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க, மறுபடியும் அந்தச் சபையில் மௌனம் நிலவியது.

"இனி பயணம் என்பது என்னால் ஆகாது, இளவரசர் இராஜேந்திரரை நீங்கள் எங்கேயாவது அழைத்துப் போய் அந்த நாவாயைக் காட்டினால் சந்தோஷம், அதற்கு முன்னால் இத்தகைய கடற்கொள்ளைக்காரர்கள் நமக்கு அருகிலேயே இருக்கிறார்கள் என்பது ஆரோக்கியமான விஷயம் அல்ல. நாம் மௌனமாக இருந்தால் அல்லது அவர்கள் வளர்ச்சியைக் கண்டு கொள்ளாமல் இருந்தால், ஒரு வேளை அவர்கள் சோழதேசத் திலும் திட்டமிட்டுக் கால் வைக்கலாம். தலையெடுக்கும் முன்பே கிள்ளுவதுதான் உத்தமம். எனவே, இது குறித்து விமலாதித்தனிட மும், ஈராயிரம் பல்லவன் போசனுடனும் நான் பேசப் போகி றேன். அவர்களும் உங்களோடு தொடர்பு கொள்வார்கள். அந்த நாவாயை இளவரசர் மட்டுமின்றி இவர்களும் பார்க்க வேண்டும். சோழ பாண்டிய கடற்கரைகள் பத்திரமாக இருப்பது தான் எனக்கு மிக முக்கியம். பயணப்படுவது அடுத்த கட்டம். இந்தப் பட்டு மிக அழகாக இருக்கிறது. இது வெள்ளையாக இருப்பதால் பஞ்சவன்மாதேவி விரும்ப மாட்டார் என்று நினைக்கிறேன்."

"அவர்களுக்குச் சாயம் தோய்த்த பட்டுப் புடைவைகள் முன்பே கொடுத்து விட்டோம். நான்கு புடவைகள் அவர்களிடம் முன்பே கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் அன்பாக ஒரு தவலை பொற்காசுகளும் கொடுத்திருக்கிறோம். அந்தப்

பொற்காசுகள் உங்களுக்குக் கோயில் கட்டுவதற்கு உபயோகமாக வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறோம். கோயிலுக்காக வேறு ஏதேனும் செய்ய வேண்டியிருப்பின் பயணப்பட வேண்டியிருப்பின் அதை எங்களுடைய இறை பணியாக நினைத்துச் செய்யத் தயாராக இருக்கிறோம் எங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களுக்குத் தத்தம் செய்திருக்கிறோம். எனவே எந்த நேரத்திலும், எதற்கும் நீங்கள் எங்களை அணுகலாம். சிவபாத சேகரரான உடையார் ஸ்ரீ இராஜராஜதேவரை இந்தச் சபை வணங்குகிறது."

சபையிலுள்ள அத்தனை பேரும் எழுந்தார்கள். கை கூப்பினார்கள். கிழவர் முதல் இளைஞர் வரை பெண்டுகள் உள்பட அந்தப் பெரும் கூட்டத்தில் விழுந்து வணங்கினார்கள்.

சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் மிகுந்த கனிவோடு அந்த வணிகர்களைப் பார்த்தார்.

அவர் நெஞ்சு நிறைந்தது. மெல்ல கை தட்டினார். போதும், போதும் என்றார். எழுந்து அருகே வந்த பரம நாயகம் முன் கைகளைப் பற்றி தனக்கு அருகேயுள்ள ஆசனத்தில் அமர்த்திக் கொண்டார். மிக ஆதரவாக. பரமநாயகத்தின் தோள்களைப் பற்றினார்.

"நான் சிறுவனாக இருந்த போது முதன்முதலில் பயணித்தது உங்களுடைய குதிரையில்தான். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா. என் தந்தை சுந்தர சோழர் கூட அதற்காக உங்களைக் கடிந்து கொண்டார். நான் பார்த்து குதிரையில் ஏற்ற வேண்டாமா. எதற்காக உன் குதிரையில் அவனை ஏற்றி உட்கார வைத்தாய் என்று சீறினார். என் அக்கன் சமாதானப்படுத்தினாள் ஞாபகம் இருக்கிறதா."

"ஆமாம், சக்ரவர்த்தி அவர்களே. நன்றாக ஞாபகம் இருக்கிறது. உங்கள் அக்கன் சமாதானப்படுத்தியதைவிட, நீங்கள் பதிலுக்குச் சக்ரவர்த்தி சுந்தரசோழர் அவர்களைக் கோபித்துக் கொண்டீர்கள். நான் கேட்டதால் தான் குதிரையை அவர் எனக்குக் கொடுத்தார். கொடுத்தால் நீங்கள் கோபித்துக் கொள்கிறீர்கள். கொடுக்காது போனால் நான் கோபித்துக் கொள்வன். அவர் என்ன செய்வார் பாவம் என்றீர்கள். சக்ரவர்த்தி சிரித்து விட்டார். குந்தவைக்கும் பெருமை பிடிபடவில்லை.

இப்பொழுதே என் சகோதரன் எவ்வளவு தெளிவாகச் சிந்திக்கிறான். இவன் அரசருக்கு அரசன் என்றார்கள். அன்று உங்கள் அக்கன் வாழ்த்தியது இன்று ஊர் உலகமெல்லாம் மெச்சும்





உங்கள் பெயராகப் போய் விட்டது. இது உங்கள் தமக்கையின் ஆசீர்வாதம். அந்தப் பத்தினி பெண்ணின் ஆசீர்வாதம்."

சட்டென்று பரம நாயகத்திற்குக் கண்ணில் நீர் கட்டி கன்னம் வழிந்தது.

அரசர் நெருங்கி அவரை அணைத்துக் கொண்டார்.

"பரம நாயகம்! வணிகர்களை மடக்கிக் கையூட்டு பெரும் அதிகாரிகள் எவரேனும் சோழதேசத்தில் இருந்தால் அவர்களைப் பற்றியும் எனக்குத் தனித்த ஓலையில் எழுதி அரசனுக்கு அரசன் என்று சங்கேத வார்த்தை சொல்கின்ற என் ஒற்றனிடம் கொடுத்து அனுப்புங்கள். உங்கள் பெயர் சொல்லாமல் வணிகர் எவரையும் காட்டிக் கொடுக்காமல் அந்த அதிகாரிகளை நான் தண்டிக்க விரும்புகின்றேன்."

"அதிகமில்லை அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கிறது. மற்றபடிக்கு பெரிய வருத்தம் ஏதுமில்லை."

"இல்லை. வருத்தம் உடையவர்கள் இந்தக் குழுவில் இருக்கிறார்கள். மதுரைக்குப் போகும் வழியிலும் தொண்டை நாட்டின் ஆரம்பத்திலும் சில அதிகாரிகள் அத்துமீறுகிறார்கள் என்று நான் கேள்விப் பட்டேன். திருவொற்றியூருக்கு அருகே இருக்கின்ற ஊர்களில் இராஜேந்திரனுடய அதிகாரிகள் அவ்விதம் நடந்து கொள்கிறார்கள். அதிகாரியைப்பற்றி அரசனிடம் சொன்னால் அரசனால் ஆபத்தா. அதிகாரியால் ஆபத்தா என்று வணிகர்கள் அஞ்சுவார்கள். வேறு சில அதிகாரிகள் இதை மறைமுகமாய் பழி தீர்ப்பார்கள். உங்களைக் கள்வர் என்று சந்தேகிப்பதாய்ச் சொல்லி காவலில் வைப்பார்கள். கள்வர் பயம் அதிகமாக இருக்கிறது என்று கிலியூட்டுவார்கள். நான் உங்களை அருகே அழைத்துப் பேசியது, பழைய விஷயங்களை நினைவுபடுத்துவதற்கு மட்டுமல்ல. இதைச் சொல்லவும்தான். எனவே, அதிகம் ஆச்சரியப்படாமல் பதட்டம் காட்டாமல் அமைதியாய் விடைபெறுங்கள். சில சோழ அதிகாரிகளுக்கு உங்களுடைய வணிகர்களே உடந்தையாக இருக்கிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது தான் இப்போதைய பிரச்சினை."

"எனக்குச் சொல்லுங்கள். இப்போதே நான் தண்டிக்கிறேன்" பரமநாயகம் மெல்ல பார்த்தார்.

"இது முட்டாள்தனமானது. அப்படி தண்டித்தால் அது வணிகருக்குள் உற்சாகக் குறைவைத் தரும். சோழ அதிகாரிகளுக்குக் கலவரம் ஏற்படுத்தும். நீங்கள் ஒருவருக்குள் ஒருவர்

பிளவுபட்டால் அது தேசத்திற்கு நல்லதல்ல. புடவையில் குத்திய முள்ளைப் பறித்தால், புடவைதான் கிழிந்து போகும். முள்ளை அப்புறப்படுத்துவது எனக்குத் தெரியும். அப்படி லஞ்சம் வாங்கும் அதிகாரிகளைப் படையெடுத்துப் போகும் போது முதல் வரிசையில் வைத்து விடுவேன்."

"எனக்குப் புரிகிறது சக்ரவர்த்தி அவர்களே... நீங்கள் என்னைத் தனித்து அழைத்துப் பேசினாலும் அவர்களுக்குச் சந்தேகம் வரும் என்பதால் நாம் இருவரும் பழம் விஷயங்களைப் பேசுவதாக ஆரம்பித்து இதைச் சொல்லி விட்டீர்கள்..."

"இன்று மாலையே அந்த ரகசிய ஓலையை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்."

"என் பக்கத்தில் நீங்கள் யாரைச் சந்தேகப்படுகிறீர்கள் என்று சொன்னால்."

பரமநாயகம் மெல்ல இழுத்துப் பேசினார்.

"தேவையில்லை. அதிகாரிகள் ஆடினால் வணிகர்கள் பயப்படத்தானே செய்வார்கள். பயந்து அதிகாரிகளின் அக்ரமத்திற்கு துணை போகத்தானே முயல்வார்கள். என் அமைப்பை நான் சரி செய்து கொள்கிறேன். மற்றபடிக்கு நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை."

சக்ரவர்த்தி எழுந்தார். பரமநாயகமும் எழுந்தார்.

பரமநாயகத்தின் தோளை அணைத்தபடியே சக்ரவர்த்தி வணிகர்களூடே போனார். பலரும் கை கூப்பினார்கள். பரமநாயகத்திடம் விடை பெற்றார்.

சக்ரவர்த்தி கைகூப்பி சரக்கென்று இடப்பக்கமுள்ள வாசல் வழியே நுகர்ந்து படிகள் ஏறி மேல்மாடத்திற்குப் போனார். மேல்மாடத்தின் வாசற்கதவுகள் தடேர் தடேரென்று திறந்து கொண்டன. வணிகர்கள் கும்பலாய் வெளியேறினார்கள். சக்ரவர்த்தியினுடைய புகழை விதம்விதமாய் வணிகர்கள் பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

வணிகர்கள் வந்ததும், பேசியதும் அடுத்த மூன்று நாழிகையில் தஞ்சையில் எல்லோருக்கும் சொல்லப் பட்டது, ரகசியம், ரகசியம் என்று பரிமாறப்பட்டது.

"இளவரசர் இராஜேந்திரர் விரைவில் கடற்பயணம் மேற்காள்ளப் போகிறாராம். உடன் விமலாதித்தனும், ஈராயிரம்



பல்லவனும் துணைக்குப் போகிறார்களாம். இது வணிகர்களுக்காகச் சக்ரவர்த்தி எடுத்த நடவடிக்கையாம்."

"ஹா... அது இல்லை ஐயா. கோவில் கட்டுவதற்கு யாரெல்லாம் இடைஞ்சலாக இருக்கிறார்களோ.. அவர்களையெல்லாம் விதம்விதமாக சக்ரவர்த்தி அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார். கோவில் கட்டுவதில் நாட்டமில்லாதவர்களை அருகே வைத்துக் கொள்ள அவருக்கு விருப்பமில்லை."

"இளவரசருக்கு நாட்டமில்லையா."

"எதிர்ப்பே காட்டினாரே."

தஞ்சை ஊர் மக்கள் கெட்டிக்காரர்கள். விதம்விதமாய் விஷயங்களை யூகிப்பதில் வல்லவர்கள். அப்படி யூகிப்பதில் அவர்களுக்கு ஆர்வமும், குதூகலமும் இருந்தன.

## 148

பெருந்தச்சர் குஞ்சரமல்லன் வீட்டு வாசலில் சிற்பிகள் குழுமியிருந்தார்கள். எல்லோரும் சிற்பிகள் எனினும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வேலையில் தேர்ந்தவர்கள். தூண் வடிப்பவர், பலகை வடிப்பவர், சாந்து வைப்பவர், கோஷ்டச் சிலைகள் செய்பவர், கருவறைச் சிற்பி, கோபுரச் சிற்பி, விமானக் கட்டுமானம் என்று பல்வேறு வித்தைகள் செய்பவராக இருந்தார்கள்.

"எல்லோரும் எல்லா வேலையையும் செய்ய முடியும். ஆனாலும் ஒரு வேலையைத் தேர்ந்தெடுத்து அந்த வேலையினுடைய உச்சத்தைத் தொட முயற்சிப்பதுதான் நல்லதே தவிர, எல்லா வேலைக்கும் போய் நின்றால் கடைசியில் அம்மி குத்தும் வேலையில்தான் முடிய வேண்டியிருக்கும் நிலைப்படி குத்தும் ஆள், கொடிப்பெண் குத்த முடியாது. கொடிப் பெண் குத்தும் ஆள், நிலைப்படி குத்த முடியாது."

"ஆனாலும் இது எல்லாம் தெரிந்தவர் யாரும் இல்லையா."

"ஏன் இல்லை. இருக்கிறாரே. அவருக்குப் பெயர் தான் குஞ்சரமல்லர். அதனால்தான் அவர் பெருந்தச்சர் அவர் எங்கு வேலை செய்தாலும் இங்குள்ளவரை விட மிக அற்புதமாக வேலை செய்வார். கல் வேலை மட்டுமல்ல உலோக வேலையும் அவரால் நன்றாகச் செய்ய முடியும் மரத்தச்சும் நன்றாகச் செய்வார். அவர் பிரம்மாவிடம் வரம் வாங்கி வந்திருக்கிற சிற்பி.

அவருக்கு இணை வேறு எவரும் இல்லை. அந்தத் திறமையினால் தான் அரசரையும் கைநீட்டிக் குறை சொல்கிறார். அதட்டி வேலை வாங்குகிறார். இல்லை நீ சொல்லும்படி கல் வளையாது என்று சொன்னால், உளியும், சுத்தியும் எடுத்து உட்கார்ந்து விடுவார். இரண்டு நாழிகையில் அந்தக் கல்லை எப்படி வளைக்க முடியும் என்பதையும் அவனுக்குக் காட்டுவார். அவரை எதிர்த்த வன் கதறுவான். சுற்றியுள்ள பலபேருக்கு அவரை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணமே எழாது போகும். அப்படி பலமுறை நடந்திருக்கிறது."

சிற்பிகள் தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள்.

"இப்படி எல்லா வேலைகளையும் திறம்பட உங்களால் செய்ய முடிகிறதே, இது எதனால்? எங்களால் ஏன் செய்ய முடியவில்லை? எனக்குத் தெரிந்த கொடுங்கை வேலையிலையே நான் அவ்வப்போது தவறு செய்து விடுகிறேன். முடிக்கும்போது மூளியாக்கி விடுகிறேன். முப்பது நாள் வேலை குப்பையாய்ப் போகிறது. நீங்கள் மட்டும் இப்படி அற்புதமாக எல்லா வேலை களையும் செய்கிறீர்களே எதனால்? என்ன மந்திர சக்தி."

"எந்த மந்திர சக்தியும் இல்லை. மனம் ஒரு நிலைப்படுத்தி அந்த வேலையின் மீது முழுமையாய் ஈடுபட்டால் எந்த வேலையையும் செய்ய முடியும். சிற்ப வேலை மட்டுமல்ல. இந்த இடத்தை பெருக்கி சுத்தம் செய் என்றால் நான் பெருக்கி சுத்தம் செய்வதற்கும், நீ பெருக்கி சுத்தம் செய்வதற்கும் வித்தியாசம் இருக்கும். இந்த வேலை என்னுடைய வேலை என்ற விருப்பத் தோடு, மனம் முழுமையோடும், இந்த வேலையைத் திறம்பட செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் நான் செய்வேன். அந்த எண்ணம் உனக்கு வந்துவிட்டால் உன்னாலும் நன்கு வேலை செய்ய முடியும். மனம் ஒருமைப்படுத்துவது பொருத்துத்தான் உன் திறமையும், உன் வலிமையும் இருக்கிறது."

"நீங்கள் சொல்வது புரிகிறது. அற்புதமாக இருக்கிறது. உங்களைப்போல் மனம் ஒருமைப்படுத்துவோர் எவரையேனும் கண்டிருக்கிறீர்களா."

அந்த இளம் சிற்பி அவரை நோக்கிக் கேட்டான். அவர் அவனைப் பார்த்து மௌனமாக நின்றார்.

அந்த இளம் சிற்பி இன்னொரு சிற்பியைப் பெருந்தச்சர் சொல்லுவார் என்று எதிர்பார்க்க, அவன் எதிர் பார்ப்பைப் புரிந்து கொண்டு வாய்விட்டுச் சிரித்தார்.



"பார்த்திருக்கிறேன். அவருக்குப் பெயர் சக்ரவர்த்தி, உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர்."

கூட்டம் எழுந்து நின்று சோழம், சோழம் என்று கை தட்டியது.

"மன ஒருமைக்கு என்னை மிஞ்சி ஒருவர் உண்டு எனில் அது சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர். அவர் இங்கு மன்னராக இருப்பதால் நான் அவரை வாழ்த்தவில்லை. எனக்கு அதிகாரியாக இருப்பதால் அவரை நான் கொண்டாட வில்லை.

அவரோடு நான் பல இடங்களுக்குப் பயணப் பட்டிருக் கிறேன். கடும் பாலை நிலம், குதிரைகள் கூட வெயில் தாங்க முடியாமல் தாகத்தில் தவிக்கின்றன. அவர் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு கை ஈட்டியால் ஒரு திசையைச் சுட்டிக் காட்டுகிறார். இங்கிருந்து ஆறு கல் தொலைவில் ஒரு குளம் இருக்கிறது. அங்கு நீர் இருக்கிறது. படையை அந்தப் பக்கம் திருப்பு என்று சொன்னார்.

ஆறு கல் தொலைவில் நீர் இருப்பது இவருக்குத் தெரிகிறது. அப்படி அந்த இடத்தில் நீர் இல்லா விட்டால் படைகள் மிகவும் சோர்ந்து விடும். நிச்சயம் இருக்கிறதா என்று இளவரசர் இராஜேந்திரர் கேட்க, வெகுநிச்சயமாய் இருக்கிறது, படைகளைத் திருப்பு என்ற வேகமாகக் கட்டளையிட, நீர் இருக்கும் இடம் நோக்கிப் போகிறோம் என்ற நினைப்பில் படைகள் வேகமாகச் சென்றன.

எனக்கு உள்ளூற பயம். அங்கு நீர்நிலை இருந்து நீர் இல்லையெனில், அந்த நீர் நன்றாக இல்லையெனில் என்ன செய்வது என்ற பயம். ஆனால், படைகள் மொத்தமும் போவதைப் பார்த்து விட்டு, பிறகு கடைசியாக அவர் தன் குதிரைகளைப் படைகளுக்குப் பின்னே திருப்பினார். நான் என் பயத்தை வெளியிட்டேன். அப்படியா, அப்படியானால் தொடர்ந்து வந்து பாரும் என்று சொல்லிவிட்டு நகர்ந்து வந்தார். நான் அவருக்குப் பின்னே போனேன்.

மிகச்சரியாக ஆறு கல் தொலைவில் பெரும் குளம். போகும் போது குதிரைகள் ஒரு பக்கம் யானைகள் ஒரு பக்கம், காலாட் படைகள் ஒரு பக்கம் என்று இறங்கி நீர் குடித்துக் கொண்டிருந் தார்கள். எல்லாம் எறியதும் மாடுகளும், கோவேறு கழுதைகளும் இறங்கி நீர் குடித்தன. மிகச்சுவையான நீர் எப்படித் தெரிந்தது. என்று கேட்டேன். காற்றில் வேறு எந்தப் பக்கத்திலிருந்தும் ஈரப்

பதம் வரவில்லை. ஒரு திசையிலிருந்துதான் ஈரப்பதம் வருகிறது. மனம் ஒருமைப்படுத்தி அந்த திசையையே உற்று நோக்க, எவ்வளவு தொலைவில் அந்த ஈரப்பதம் வருகிறது. என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. மனம் ஒருமைப்படுத்தினால் இவைகளைக் கண்டு பிடிக்கலாம். என்று சொன்னார். மனம் ஒருமைப்படுத்துதலின் உச்ச கட்டம் என்பது இதுதான். ஆனால், அவரோ இதற்கு மேலும் பல விஷயங்கள் தெரியும் என்று சொல்கிறார். எனவே, சிற்பிகளே மனம் ஒருமைப்படுத்துதலை வளர்த்துக் கொள்ளுங்கள்."

சிற்பிகள் வாயடைத்து நிற்பார்கள். பெருந்தச்சரை மிக மரியாதையோடு பார்ப்பார்கள். இப்படிப் பல்வேறு முறை, பல்வேறு விதமாக சிற்பிகளுக்கும், பெருந்தச்சருக்கும் உரையாடல்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால், இது உரையாடும் நேரமல்ல. அடுத்தடுத்து யார் யார் என்ன வேல செய்ய வேண்டுமென்று பிரித்துக் கொடுப்பதற்காகப் பெருந்தச்சர் குஞ்சர மல்லன் வரவழைத்திருக்கின்றார்.

அடித்தளம் போடுகிறவரோடு பேசி முடித்து விட்டார். அடித்தளம் எப்படி அமைக்க வேண்டும் என்பதை விளக்கி விட்டார். இப்போது. உள்ளுக்குள்ளே தூண்கள் நிறுத்துவது பற்றியும், சாந்து சார்த்துவது பற்றியும் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. தூண்களின் பூமியில் பதிய வேண்டிய பகுதி இன்னும் சற்று நீளமாக இருக்கலாம். தூணினுடைய பக்கவாட்டிலும் ஆண் யோனி, பெண் யோனி அமைக்கப்படலாம் என்றும் சொல்லப்பட்டது.

"ஒரு உருளைத் தூணை நான் எப்படி வேண்டுமானாலும் பொறுத்துவேன். யோனி என்று அடித்து விட்டால் ஒரு திசையில் தானே பொருத்த வேண்டும்." என்று சிற்பி சொல்ல, "உருளைத் தூண் அல்ல சதுரத்தூண். நீ ஒரேவிதமாகத்தான் செய்ய வேண்டும்."

"செய்யும்போது அதில் யோனி அமைத்தால் என்ன" என்று சாந்து பூசுபவர்கள் சொல்ல, அங்கு ஒரு காரசாரமான பேச்சு வந்தது.

"உன்னுடைய வேலை சாந்து மட்டுமே. நீ ஏன் தூண் அடிப்பதைப் பற்றிப் பேசுகிறாய்." என்று சிற்பிகள் சீறினார்கள்.

சாந்து அரைப்பவர்கள் "இன்னும் உறுதியாக நிற்கத்தான். நீங்ள் சோம்பல்பட்டு அடி அளவை குறைத்து விடுவீர்கள். பிறகு தூண் ஆடினால் சாந்து சரியாக இல்லை என்று சொல்கிறீர்கள்.



இரண்டரை ஆள் உயரத்திற்கு தூண் இருக்க வேண்டுமென்றால் கீழே அரை ஆள் உயரத்திற்காவது இருக்க வேண்டாமா. இரண்டு முழங்கை ஆழத்திற்கு இருந்தால் எப்படி தூண் ஆடாமல் இருக்கும். "தூண் என்பது கீழ்த் தளத்திற்கும் மேல் தளத்திற்கும் இடையில் இருப்பது. ஒரு தூண் ஆட வேண்டிய அவசியமே இல்லை. கீழே இரண்டு முழம் ஆழத்திற்கு பதிந்து விட்டால் மேலே இருக்கிற தளத்தின் கனத்தால் அழுத்தப்பட்டு தூண் ஆடாதிருக்கும்."

"நாங்கள் களி மண்ணில் தூண் செய்ய வில்லை. கல்லில் செய்கிறோம். மண்டபத்திற்கு மட்டும் நூற்று சொச்சம் தூண்கள் செய்ய வேண்டும். அந்த நீளத்திற்குக் கல் வேண்டும்.

எல்லாவற்றையும் புரிந்து கொண்டு பேசுங்கள். சதாசிவாச் சாரி கல் உடைக்க ஒவ்வொரு நாளும் பேரவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார். நீங்கள் கீழ்ப் பக்கம் கூடுதலாக ஒரு அடி, மேல் பக்கம் கூடுதலாக ஒரு அடி என்று பேசுகிறீர்கள். இரண்டு முழங்கை என்பதே அதிகம். சாந்து உறுதியாக இருந்தால் தூண் ஆடாதிருக்கும். எனவே, சாந்துக் கலவையை கவனமாகச் செய்யுங்கள். வேலை தெரியாதவர்களோடெல்லாம் பேச வேண்டியிருக்கிறது." என்று ஒரு சிற்பி சொல்ல, மிகப்பெரிய எதிர்ப்புச் சத்தம் கிளம்பியது.

எதிரே பெருந்தச்ச குஞ்சரமல்லன் இருக்கிறார் என்று தெரியாமல் கெட்ட வார்த்தைகள் இறைக்கப் பட்டன. முஷ்டிகள் மடக்கப்பட்டன. பின்னால் இருந்த பெண்டுகள் ஓடி வந்து என்ன கூச்சல் இது என்று கடிந்து கொண்டார்கள். அதையும் மீறி சாந்து அரைப்பவர்கள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

குஞ்சரமல்லர் தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்தார்.

"சொல்லுங்கள் ஐயா... நீங்களே சொல்லுங்கள்."

சிற்பிகள் வற்புறுத்தினார்கள்.

குஞ்சரமல்லர் மெல்ல நிமிர்ந்தார்.

"அது கல். மாக்கல் அல்ல. கருங்கல். அந்த நீளத்திற்கு கருங்கல் கிடைத்தால்தான் இவர்கள் தூண் வடிக்க முடியும். இத்தனை நீளம் கருங்கல் கிடைப்பது மிகக் கடினம். பற்பல அளவுகளில் கல் அறுத்து எழுப்பலாம் தூணை அப்படி அனுப்ப முடியாது. இரண்டாகச் செய்ய முடியாது. இன்னும் நடுப் பகுதியில் ஒட்டு வேலையெல்லாம் செய்தால் கட்டிடம் ஒழுங்

காக நிற்காது எனவே, இருக்கிற கல்லில் மிகக் குறைந்த அளவு ஆழத்தில் இறுக்கமாகப் பதிய வைப்பதுதான் கெட்டிக்காரத் தனம். சாந்து என்ற விஷயத்தில் நாம் எந்த விதமான முன்னேற்றமும் அடையவே இல்லை."

"ஐயா, சாந்து அரைப்பதில் நாம் ஒரு உச்ச நிலையை அடைந்து விட்டோம்." சாநது அரைப்பவரில் ஒரு மத்திம வயசுக்காரன் சொன்னான்.

"அப்படியா, நிம்மதி. இனி எந்த முயற்சியும் செய்ய வேண்டாம். நாமே நம்மைப் பார்த்து உச்சநிலைக்கு வந்து விட்டாய். இதற்கு மேல் உன்னால் உயர முடியாது என்று சொல்லிக் கொள்வோம்."

அலுப்போடு பெருந்தச்சர் பேசினார்.

கூட்டம் மௌனமாக இருந்தது.

"நித்த வினோதப் பெருந்தச்சனிடம் போய் சாந்து அரைப்பதில் வேறு ஏதேனும் மாற்றங்கள் செய்ய முடியுமா என்று கேளுங்கள். நம்மில் ஒருவன் கெட்டிக்காரனாய், பல சூட்சுமங்கள் நிறைந்தவனாய், எது பற்றியும் தெளிவாக யோசிப்பவனாய் இருக்கும் போது அவனை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். இதற்கு மேல் தூணின் அடிப்பகுதியை அதிகப்படுத்த முடியாது.

தூணின் அடிப்பகுதியில் ஆண், பெண் யோனிகள் இணைத்து இழைப்பதும் நடக்காது. தூணுக்கு மேலுள்ள பாரத்தில் தூண் அழுத்தமாக நிற்க வேண்டும். அதற்குச் சாந்து துணை செய்ய வேண்டும். எனவே வரை படங்களை எடுத்துக் கொண்டு போங்கள். சாந்து அரைப்பதற்கு எல்லாவிதமான மூலப் பொருட்களும் இருக்கின்றனவா? சாம்பிராணிக் கட்டிகளுக்குச் சொல்லியனுப்பி விட்டீர்களா? புற்று மண் வேண்டுமென்று சொன்னீர்களே போய் பார்த்து வந்தீர்களா? நான் சொன்ன இடத்திற்குப் போனீர்களா. அற்புதமான புற்று மண். கிராமம் முழுவதும் புற்றுகள் நிரம்பியிருக்கின்றன. யாரையேனும் அனுப்பி கவனமாகப் புற்று மண்ணை உபயோகப்படுத்துங்கள். அதிகம் சேர்த்து விடாதீர்கள். கலவை மோசமாகி விடும். புற்று மண்ணின் பெரும் பகுதி உலோகச் சிற்பிகளுக்குப் போக வேண்டும் என்பதையும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இன்னொரு முறை என் எதிரே இப்படி உரத்த குரலில் பேசாதீர்கள். என் கவனங்கள் சிதறுகின்றன. குறைவாகப் பேசுபவனே நிறைவாக வேலை செய்வான். இதைக் கற்றுக் கொள்ளுங்கள், நீங்கள் கலையலாம்."



பெருந்தச்சர் குஞ்சரமல்லர் உத்தரவிட்டார். சுருண்டு படுத்தார்.

அடுத்தவர் வரலாமா என்று கேட்ட பெருந்தச்சர் உதவியாளர், அவர் சுருண்டு படுப்பது பார்த்து மெல்ல நகர்ந்து அவர் மனைவியிடம் விஷயம் சொன்னான்.

"அவருக்கு ஏதேனும் உணவு தேவையோ, குடிப்பதற்கு ஏதேனும் இருக்கிறதா." என்று வினவினான்.

பெருந்தச்சரின் மூத்த மனைவி தொலைவிலிருந்து அவனை உற்றுப் பார்த்தாள்.

"நீ போ. நான் பார்த்துக் கொள்கிறேன்." என்றாள்.

அவன் தயங்கி நிற்க, "வாசலுக்குப் போய் உட்காரடா. நான் பேசிக் கொள்கிறேன்." என்று அதட்டினாள்.

அவன் வெளியே நகர்ந்தான். பெருந்தச்சரின் மனைவி உள்ளே போனாள். இரண்டாம் மனைவியிடம் காதோரம் கிசுகிசுவென்று பேசினாள்.

இரண்டாம் மனைவி சட்டென்று முதல் மனைவியின் கரங்களைப் பிடித்துக் கொண்டாள். இரண்டு பேரும் மெல்ல கூடத்திற்கு வந்தார்கள். பெருந்தச்சர் கட்டிலுக்கு அருகே நின்றார்கள். பெருந்தச்சர் மெல்லிய குறட்டையோடு தூங்கிக் கொண்டிருந்தார். பெருந்தச்சரின் மனைவி காலுக்கு அருகே உட்கார்ந்து அவர் கால்களைப் பிடித்துவிடத் துவங்கினாள்.

பெருந்தச்சருக்குச் சட்டென்று விழிப்பு வந்தது.

"என்ன, எங்கே அவர்கள்" என்று கேட்டார்.

"யார்"

"சாந்து அரைப்பவர்கள்" என்று உளறலாய்ப் பதில் சொன்னார்.

"எல்லோரையும்தான் அனுப்பி விட்டீர்களே. படுத்துத் தூங்கி விட்டீர்கள். அதனால்தான் வந்தோம்."

"சரி, அடுத்த ஆட்களைக் கூப்பிடு. குடிக்கச் சற்று நீர் கொண்டு வா."

"இருக்கட்டும். உடம்பும், புத்தியும் இவ்வளவு அயர்ச்சியாக இருக்கும்பொழுது மறுபடியும் வேலையில் ஈடுபட வேண்டுமா."

"வேறு என்ன வழி. கோவிலைக் கட்டி முடிக்க வேண்டாமா."

"கட்டி முடிக்கலாம். அதற்கு முன்னால் சில கடமைகளும் இருக்கின்றன. அதையும் செய்யலாம் அல்லவா."

"என்ன."

"உங்களுக்குப் பெண் இருக்கிறதே அதை யாருக்குக் கட்டிக் கொடுக்கப் போகிறீர்கள். கோவில் கட்டுவதைப் பற்றி மட்டுமே யோசிக்கிறீர்களே. அந்தப் பெண்ணைப் பற்றி யோசிக்க வேண்டாமா."

"என்ன. திடீரென்று என் மகள் கல்யாணம் பற்றிப் பேசுகிறாய்."

"இதோ பாருங்கள். உங்களுக்கு அழகாக இரண்டு ஆண்களைப் பெற்றுக் கொடுத்தேன். அந்த இரண்டு ஆண்களும் தொழில் கற்றுக் கொண்டு ஒழுங்காக வேலை செய்கிறார்கள். நான் போதவில்லை என்று ஆட்டமாடி இவளைப் பிடித்தீர்கள். இவள் தலையெழுத்து இவளுக்குப் பிறந்த பெண்ணை என் பெண்ணாகவே வளர்த்தேன், இப்பொழுது, அவளுக்குப் பதினாறு வயது. திருமணப் பருவம். எந்த நேரமும் அவள் உட்கார்ந்து விடுவாள் என்று தோன்றுகிறது. அதற்குப் பிறகு திருமணம் நடத்துவது நல்லதா. அழகா மரபா எனவே அவள் பூப்படைவதற்கு முன்பு திருமணம் செய்துவிட வேண்டும். இப்பொழுதே பிடுங்கிக் கொண்டு கற்சிலை போல நிற்கிறாள். இவளுக்குத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யலாமா."

"ஏற்பாடு செய்தால் போயிற்று."

"எப்போது... கோவில் கட்டி முடித்த பிறகா. இதோ பாருங்கள். இதுதான் நல்ல நேரம். கையில் காசு நடமாட்டம் இருக்கிறது. மரியாதை இருக்கிறது. நம்மைத் தேடி பெரிய மனிதர்கள் வருகிறார்கள். அப்படிப் பெரிய மனிதர்கள் வரும்போது திருமணம் நடந்தால் நமக்கு நல்லதல்லவா. பெருமை அல்லவா. நம்முடைய திருமணத்திற்குச் சக்ரவர்த்தியும், இளவரசரும், கிருஷ்ணன்ராமனான பிரம்மராயரும், மற்ற சேனாதிபதிகளும், பட்டமகிஷியும், பஞ்சவன் மாதேவியும் வந்து நின்றால் எப்படியொரு கொண்டாட்டமாக இருக்கும்."



இத்தனை பேருடைய பெயரையும் கேட்ட பெருந்தச்சர் குஞ்சரமல்லன் முகம் மலர்ந்தது. அத்தனை பேரும் தன் வீட்டிற்கு விருந்துக்கு வந்தால் நன்றாகத்தான் இருக்கும் என்ற யோசனை படர்ந்தது.

"போய் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்."

"நாங்கள் எப்படிச் செய்வது. இதை நீரல்லவா செய்ய வேண்டும்."

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய். எங்கு போகச் சொல்கிறாய்."

"எங்கும் போக வேண்டாம். வெண்ணெய்க் குடம் கையிலிருக்க நெய்க்கு அலைவார்களா."

"இந்தப் பழமொழிகள் எனக்குப் புரிவதேயில்லை. வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசு. என்ன செய்ய வேண்டும்."

"உங்களுடைய சீடன் சீராளன் இருக்கிறானல்லவா. அந்த ஓவியனுக்கு நம் பெண்ணைக் கொடுத்தால் என்ன."

"அவனை மகனைப் போலல்லவா வளர்க்கிறோம்."

பெருந்தச்சர் சற்று வியப்பான குரலில் கேட்டார்.

"வாயைக் கழுவும். எல்லா சீடப் பிள்ளைகளும் மகனைப் போல என்றால் நம் பெண்ணை எவர் தலையில் கட்டுவது."

"அவன் யாரோ பெற்ற பிள்ளை. நம் வீட்டிற்கு வந்தான். அவனுக்கு வித்தை கற்றுக் கொடுத்தேன்."

"வித்தை கற்றுக் கொடுத்த பையனுக்கு பெண்ணைக் கொடுக்கப் போகிறீர்கள். அவ்வளவுதானே. மாட்டேன் என்று சொல்லிவிடுவானா அவன்."

"நன்றியுள்ளவன் சொல்லமாட்டான்"

அந்தப் பெண்மணிகள் மாறி மாறிப் பேசினார்கள்

"சீராளன் நன்றியுடையவன்தான்."

பெருந்தச்சர் வாயிலிருந்து அவரை மீறி வார்த்தைகள் வந்தன.

"அப்படியானால் நேரே போய் அவனிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு, பிறகு அவன் தாயிடமும், தந்தையிடமும் நாம் போய்ப் பேசுவோம். பெண்ணுக்காக தனித்த வீடும், மாட்டு

வண்டிகளும், கோவேறு கழுதைகளும் கொடுப்போம். நாம் இருக்கின்ற வரை வருடந் தோறும் மருமகனைத் தேடி அரிசியும், பருப்பும், இதர தானியங்களும், துணிகளும் அவர் கேட்ட எல்லா விஷயங்களும் அனுப்பப்படும் என்று சொல்லிவிடுங்கள்."

மூத்த மனைவி, இளம் மனைவி பேசிய பிறகு தொடர்ந்தாள்.

"சீராளனுடைய ஒரே வேலை நம்முடைய பெண்ணைக் கூடிக்குலவி கொஞ்சி நிறைய குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டியது மட்டுமே. எத்தனைக் குழந்தைகள் வேண்டுமானாலும் அவர்கள் பெற்றுக் கொள்ளட்டும். அதை எடுத்து வைத்துச் சீராட நாங்கள் இருக்கிறோம். எங்களைச் சுற்றி ஒரு பட்டாளமே இருக்கிறது. குறைந்த பட்சம் பத்துக் குழந்தைகளாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எங்கள் ஆசை."

அந்தப் பெண்மணிகள் பேசப் பேச பெருந்தச்சர் எதுவும் சொல்லத் தோன்றாது அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் உள்ளுக்குள் கோவிலைப்பற்றிய அளவுகள் போய்க் கொண்டேயிருந்தன. தந்தையையும், தாயையும், சித்தியையும் தொலைதூரத்திலிருந்து பார்த்த வண்ணம் பெருந்தச்சரின் மகள் பரமி என்கிற பரமேஸ்வரி அமர்ந்து கொண்டிருந்தாள்.

அவள் மனம் சந்தோஷத்தில் குதியலிட்டது.

சீராளன் பற்றி பெண்களிடையே மிகப்பெரிய பரபரப்பு இருந்தது. சீராளன் வரைந்த பல படங்களைத் தூக்கிக் கொண்டு அவர்கள் கடைத்தெருக்களில் முன்னும் பின்னும் அலைந்தார்கள்.

ஊர் ஜனம் அந்தப் படத்தைப் பார்க்க வேண்டுமென்று கெஞ்சியது. இவர்கள் வேண்டாவெறுப்பாக திரைச்சீலைய விலக்கி அந்தப் படத்தைக் காண்பித்தார்கள்.

ஊர் கன்னத்தில் விரல் வைத்து வியந்தது.

'அடா, அடா.' என்றது.

அந்தப் பெண்களைப் பொறாமையோடு பார்த்தது.

"யார் வரைந்தது."

வியப்போடு வினவியது.



எங்கள் சீராளன் என்று அந்தப் பெண்கள் சொல்ல அப் போதும் அதிகம் பொறாமைப்பட்டது. அந்தப் பொறாமையைப் பார்த்து சிற்பிகளுடைய பெண்கள் குதூகலமடைந்தார்கள்.

அந்தச் சிற்பிகளில் கெட்டிக்காரப் பெண்கள் சீராளனிடம் போய், "நான் கடைத் தெருவுக்கு உங்கள் படத்தை எடுத்துக் கொண்டு போயிருந்தேனா, அந்த ஆண்களெல்லாம் எப்படி வியக்கிறார்கள் தெரியுமா. பெண்கள் எப்படிப் பார்க்கிறார்கள் தெரியுமா." என்று கதையளந்தார்கள்.

சீராளனும் ஆவலாகக் கேள்வி கேட்டான். மத்திம வயதுப் பெண்கள் சீராளனை வேறு விதமாய்க் கொண்டாடினார்கள்.

"முன்பெல்லாம் தெருவில் போனால் நம்மை மதிப்பதேயில்லை. இப்பொழுதெல்லாம் உங்களால் எங்களுக்கு பெரிய பெருமை. மரியாதை. என் வீட்டுக்காரர் கொடுங்கை அடிக்கிறார் என்றால் என்ன என்று புரியாமல் விழித்தார்கள். நான் கோவிலுக்குக் கூப்பிட்டுக் கொண்டு போய் எது கொடுங்கை, எது உத்திரம், எது அரை பத்மம், எது கண்டம் என்று அவர்களுக்கு விவரித்தேன். ஆண்களும் பெண்களுமாய் பல பேர் என்னைச் சூழ்ந்து கொண்டு கோவில் கட்டுவதைப் பற்றி விளக்கமாகச் சொல்லு என்று கேட்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரை நானும் சொல்கிறேன்."

"அடி சக்கை. பெரிய கோயிலையே நான்தான் கட்டுகிறேன் என்று சொல்லாமல் இருந்தால் சரி" என்று சீராளன் சொல்ல அந்தப் பெண்கள் வெட்கப் பட்டார்கள்.

"கொழுக்கட்டையும், அப்பமும், தேங்காய் புட்டும் கொண்டு வந்திருக்கிறேன். எடுத்துக் கொள்கிறீர்களா." என்று கேட்க, சீராளன் நெகிழ்ந்து போவான்.

இரண்டு பிடி எடுத்துக் கொண்டு போய் வீட்டில் வைத்து விட்டு, மற்றவற்றை அங்கேயே வினியோகம் செய்வான். மற்ற பெண்கள் உட்கார்ந்து அவன் ஓவியம் வரைகிற அழகைப் பார்த்துவிட்டுப் போவார்கள். போய்க் கடைத்தெருவில் மறுபடியும் கதை பேசுவார்கள். அப்பேர்ப்பட்ட சீராளன் தனக்குக் கணவனாக வரப் போகிறான் என்றதும் பரமிக்குத் தலைகால் புரியவில்லை.

"நான் இரண்டாவதாக வாக்கப்பட்டேன். எனக்குப் போய் பெண் பிறந்திருக்கிறது" என்று தாய் அடிக்கடி புலம்புவதை அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். பெரிய தாயின் அலட்டலை,